T. 1343-45

CHOLA KINGS

PART I

BY

PANDIT N. KANAKARAJIER,

"VIDWAN"

MAHARAJA'S COLLEGE, PUDUKOTAH

Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us
Footprints on the sands of time;—

H. W. Longfellow.

E. M. GOPALAKRISHNA KONE,

BOOKSELLER AND PUBLISHER

MADURA & MADRAS.

இந்நூலாசிரியர் எழுதிய
'தமிழ்ப் புலவர் வரலாறு' 'பாண்டிய மன்னர்'
என்ற நூல்களைப்பற்றிய

அபிப்பிராயங்கள் :

மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள்

அபிப்பிராயம்

தமிழ்ப் பண்டிதர் வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ நா. கனக ராஜையர் இயற்றிய தமிழ்ப் புலவர் வரலாறு மூன்று புத்தகங்களிற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். இவற்றிலுள்ள சரித்திரங்கள் தக்க ஆதாரங்களை யுடையனவாய் முன்னோர் கொள்கையினின்றும் வேறுபடலின்றித் திருத்தமான நடையை யுடையனவாய் அமைந்திருத்தலின், பாடசாலையிற் படிக்கும் மாணவர்களுக்கும் ஏனையோர்க்கும் மிக்க பயனளிக்கு மென்பது எனது கருத்து. இப்புத்தகங்கள் இயற்றியவருடைய ஆராய்ச்சித் திறத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

தியாகராஜ விலாசம்,
திருவேட்டீஸ்வரன்பேட்டை,
சென்னை, 1-8-'30.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

செந்தமிழ்ப் பத்திராசிரியர் அபிப்பிராயம்

தமிழ்ப்புலவர் வரலாறு

(ஒன்று முதல் மூன்று பகுதிகள்)

இவை வித்துவான் பண்டித ஸ்ரீமத் கனகராஜையரவர்களால் எழுதப்பட்டு மதுரைப் புஸ்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக்கோனரவர்களால்

ஸ்ரீ :

சோழ மன்னர்

முதற் பாகம்

சோழன் கரிகாற் பெருவளத்தான்

ஆசிரியர்

பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்

மஹா ராஜா கல்லூரி,

புதுக்கோட்டை.

பிரசுர கர்த்தர் :

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை & சென்னை.

பதிப்புரிமை] 1931 [விலை அணா, 10

உரிமையுரை

வளமிகுபைந் தமிழ்மொழியை யடியேற்கு
வழங்கியருள் வண்மைச் செல்வர்
இளமைமுத லெனையுணர்ந்து மேன்மேலும்
எழுநெறியை இனிது காட்டி
உளநெகிழ்வா லரியபொருள் பலவெளிதி
னுணரவிரித் துரைத்த வள்ளல்
தெளிஞர்களி லுயர்ந்ததிரு நாரணவா
ரியர்பதங்கள் சிந்தை செய்தே

மனமொழிமெய் யுறவணங்கிப் பழந்தமிழின்
பனுவல்களின் வழியிற் சென்று
தினமுயன்று பெறுபொருளிற் சிறிதுசிறார்
பொருட்டுதவிச் சிறப்பா வெண்ணிக்
கனகமழை பொழிவளவன் கரிகாலன்
வரலாற்றைக் காட்டு மிந்நூல்
எனதுசிறு பணியெனவே யேற்கவெனத்
தொழுதுரிமை யிசைத்தேன் மன்னே.

நா. கனகராஜன்

ஸ்ரீ :

முகவுரை

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

தமிழ் மொழியின் நூல் வளர்ச்சி முறையின் பண்டை வரலாற்றை ஆராய்வோர் அவ்வரும்பணியின் பொருட்டுச் சேர சோழ பாண்டிய மன்னர் பெருமக்கள் செய்திருக்கும் பேருதவியை அறியாதிரார். இந்நாளிலே நாம் சங்கச் செய்யுட்கள் என்று காண்பவற்றில் ஒன்றேனும் இம்மன்னர் தொடர்பு பெறுததாயில்லை. சங்கச் செய்யுட்கள் என்று வழங்கும் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகைகளைத் தொகுப்பித்தோர்கள் இம்மன்னர்களே. எட்டுத் தொகையில் உள்ள தொகை நூலாகிய புறநானூற்றிலே மும்மன்னர் வரலாறுகளைக் குறிக்கும் செய்யுட்களே பெரும்பான்மையாம். இச்செய்யுட்கள் இம்மன்னர்களது வள்ளன்மை, அற நிலை, போர்த் திறம் முதலிய பெருமைகளைத் தெரிவிக்கின்றன. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்ற அகப்பொருட் செய்யுட்களும் இம்மன்னர் வரலாறுகளை உவமை முகத்தாலும் வேறு வழியாலும் இடையிடையே தருகின்றன. பதிற்றுப்பத்து என்ற செய்யுள் நூல், சேரர் பரம்பரையினர் எ

லாற்றை விளக்க உதவியாய் அமைந்திருக்கின்றது. இவ் வாறுக, நாம் சங்கச் செய்யுள் என்று பயில்வன வெல் லாம் நம் நாட்டுப் பண்டைத் தமிழ் மன்னர் வரலாற் றைத் தெரிவிப்பனவாகவே யுள்ளன. இவற்றுல் நாம் அறியும் மன்னர் பலர் ஆவர் என்பதை இந்நூல்களை ஆராய்வதே பொழுது போக்காக வுடையோர் அறிவர்.

நம் நாட்டுப் பூர்வ சரித்திரத்தை வருத்து எழுது தற்குரிய ஆதார நூல்களாக இவை அமைந்திருப்பன வென்பதைத் தம் நுண்ணுணர்வால் நன்கு அறிந்து வைத்தும், இந்நாளிலே புராதனமான எழுத்துருக்களை யாராய்ந்து, தென்னிந்திய சரித்திரம், தமிழ் நாட்டு வர லாறு என்பவற்றை ஆங்கில மொழியால் எழுதி உலகிற் குதவும் பெருமக்கள் இவற்றைத் தம் அரும்பணிக்கு வேண்டுமளவு பயன்படுத்திக்கொண்டதாகக் கூறுவதற் கில்லை. சமீப காலத்திலே காலஞ் சென்ற சரித்திராசிரி யர் ஸ்ரீமான். பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் இத்துறையில் துணிந்து இறங்கி நன்கு முயன்று, தாம் கண்ட உண்மை களைத் ' தமிழர் வரலாறு ', ' ஆரியர் காலத்துக்கு முந்திய தமிழர் கல்வி நிலை ' என்ற ஆங்கில நூல்களால் வெளி யிட்டனர். இவர் ஆராய்ச்சி தமிழொன்றே பயின்றறிந்த பண்டிதர் ஆராய்ச்சி முறைக்கு வேறுபட்டிருப்பதை இவர் நூல்களால் உணரலாம். சென்னைச் சர்வ கலா சாலையில் இந்தியசரித்திர ஆசிரியராயிருக்கின்ற ஸ்ரீமான் ராமசந்திர தீக்ஷிதர் பெரும்பாலும் தமிழறிஞர் பின்பற்று முறையையே பின்பற்றித் " தமிழ் நூல் ஆராய்ச்சியும் சரித் திரமும் " என்ற பெயரால் ஓர் ஆங்கில நூல் வெளியிட் டுளர். இதன்கண்ணும் பழம்பொருள்கள் சில புது முறை

யின் விளக்கப்பட்டிருப்பதை அறிஞர் காணலாம். இவை போன்ற இன்னும் பல புத்தகங்கள் வெளி வருவதற்கு வேண்டிய அரும்பொருள்கள் நம் தமிழ் நாட்டுப் பண்டைச் செய்யுள் நூல்களிலே உண்டு என்பது அறிஞர் கருத்தாம். நம் பண்டைப் பெருமையை நாமும் அறிந்து பிற நாட்டவரும் அறியச் செய்தற்பொருட்டே இக் காலத்தில் அயல் மொழிகளில் இத்தகைய நூல்கள் எழுதப்படுகின்றன என்பதை அறிகின்றோம்.

சென்ற வாண்டிலே சங்க காலத்துப் பாண்டியர் ஒரைவர் வரலாற்றை ஆங்கில கலாசாலே மாணவரும் பிறரும் பயின்றின்புறுமாறு யான் பழம்பொருள்களோடு புதுப்பொருள்கள் சிலவற்றைச் சேர்த்து எழுதி வெளியிட்டேன். அவ்வண்ணமே சோழ மன்னருள் ஒரைவர் வரலாற்றை விளக்க இந்நூற்றொகை எழுந்தது. இதன் கண் சோழ மன்னருள் மிக்க கீர்த்தி படைத்தவனுகிய சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு முதற் பாகமாகிய இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுளது. பின்னர்க் கிள்ளிவளவன், நலங்கிள்ளி, கோச்செங்கட் சோழன், கோப்பெருஞ் சோழன் என்ற சோழர் வரலாறுகள் இத் தொகுதியின் இரண்டாம் மூன்றும் பாகங்களில் கூறப் பட்டுள. இம்மன்னர்களின் வரலாறுகளே ஊகித்துணரச் சங்கச் செய்யுட்களே பெரிதும் உதவியாயின.

கரிகாற் பெருவளத்தான் வரலாற்றிலே வரும் சில செய்திகள் இந்நூற்றொகையில் புதுமைப் பொருள் சேர்த்துப் புனைந்துரை வகையால் நன்கு விரித்து எழுதப்பட்டுள. பழமொழியிலுள்ள,

"உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்: குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

"கழுமலத்து யாத்த களிறுங் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனுல்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது."

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேராளைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினுன்: இல்லை
உயிருடையோர் எய்தா வினை."

என்ற செய்யுட்களும் அவற்றின் உரையும் கரிகாலன் வரலாற்றை விரித்தெழுதக் கருவியாயின. கரிகாலன் உண்மை வரலாற்றைப்பற்றி இக்காலத்து வெளி வந் துள்ள புத்தகங்களுக்கும் இந்நூற்றெகைக்கும் சில வகையில் வேறுபாடுகள் உண்டு. பழமொழிச் செய்யுட் களில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் கண்கூடாகக் கண்டோர் கூறுமாறு விளக்கப்பட்டுள. கரிகாலன் தந்தை யின் பெயர் உருவப் பஃறே ரிளஞ்சேட்சென்னி யென் பதைப் பண்டை நூல்களால் அறிவோம். அவன் பெயர் இளஞ்சேட்சென்னி யென்றிருத்தலால், மூத்தவனுகிய சேட்சென்னி யொருவன் இருந்தான் என்று இந்நூற் றெகையிலே கொள்ளப்பட்டுள்ளது. கரிகாலன் தந்தை அழுந்தூர் வேளிடை மகட்கொண்டான் என்று வழங் கும் பழஞ்செய்தியும், இரும்பிடர்த் தலையார் கரிகாலனுக்கு

அம்மானூராவர் என்றும்அவர் உதவியால் அவன் இழந்த அரசு பெற்றான் என்று வழங்கும் பழஞ்செய்தியும் இந் நூற்றொகையிலே தக்கவாறு ஆளப்பட்டுள்ளன. இங்கு இரும்பிடர்த் தலையார் அழுந்தூர் வேளின் மைந்தராவர் என்று கூறப்பட்டிருப்பது புதுமையேயாயினும், ஒரு வாறு பொருந்துவதாக அறிஞர் ஏற்பர் என்று கருதி அமைக்கப்பட்டது. கரிகாலன் புகார் நகர் அமைத்தான் என்று வழங்கும் பழஞ்செய்தி தக்கவாறு பயன்படுத் தப்பட்டது. சிலப்பதிகாரத்தில் வரும் வட நாட்டுப் போரைப் பற்றிய செய்திகள் அங்கு உள்ள வண்ணமே கொள்ளப்பட்டன. இந்நூலைச் சரித்திராசிரியர் ஸ்ரீமான் பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் இச்செய்திகளை உண்மைச் செய்திகளாக நம்பலாகாது என்று தமிழர் வரலாற்றிலே கூறுகின்றாராயினும், பண்டைச் செய்யுட்களின் ஆதரவு இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கரிகாலன் மக்கட் பேற்றைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவராகையால், அக் கொள்கைகளை ஆராய்ந்து முடிவுகட்டும் அரும்பணியில் இறங்காமல், பொதுமையாக அக்கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆதிமந்தியார் கரிகாலன் மகளார் ஆவர் என்று அறிஞர் கருதுதலால், அவர் வரலாறு இங்கு உரிய வீடத்திலே சேர்க்கப்பட்டது. இவ்வாறு புதுமையும் பழமையும் கலந்தே யிருப்பது அறிஞர்க்குப் புலப்படும்.

நலங்கிள்ளியின் வரலாற்றிலே போர்ச் செய்தியே பெரும்பான்மையா மாகையால், கோவூர் கிழாரின் உண் மைப் பெருமைகளை விளக்குஞ் செய்திகள் அதன்கண் விளக்கப்பட்டன. மாவளத்தான் என்ற இளையோன் வர

லாறும் உரிய இடமறிந்து சேர்க்கப்பட்டது. சுவை வேறுபாடு தோன்ற வேண்டிச் சில புதுமைச் செய்திகள் அக்கால நிலைக்குப் பொருந்துமாறு இவ்வரலாற்றிற் சேர்க்கப்பட்டுள.

கோப்பெருஞ் சோழன் வரலாற்றிலே தமிழ்ப் புலவர் அனைவரும் அறிந்தின்புறும் பிசிராந்தையார் நட்பின் பெருமை நன்கு விளக்கப்பட்டது. அந்நட்பின் பெருமையை இந்நாளைச் சிறுவர் அறிதல் வேண்டும் என்றே செய்யுட்களை யெல்லாம் உரை நடையாக்கி உரிய வண்ணம் அறிந்து அமைத்துளேன். கோப்பெருஞ் சோழன் அமைச்சரும் அரும்புலவருமாகிய போத்தியார் மனைவாழ்வு கூற வேண்டுவது அவசியமாதலால், அஃது ஒருவாறு புனைந்துரைக்கப்பட்டது. சேர மன்னன் ஒருவன் அவனை வென்று பூத சதுக்கத்தைக் கொண்டு சென்றான் என்ற பழஞ்செய்தியும், கோப்பெருஞ் சோழன் மக்களோடு மாறுபட்ட செய்தியும் பழைய வரலாறுகளுக்கு மாறுபடாவண்ணம் புதுமுறையால் அமைக்கப்பட்டன. மக்கள் குணம் ஒருவாறு பிறகு சீர்திருத்தம் பெற்றதாகவும் காட்டப்பட்டுளது.

சோழன் செங்கணான் என்றும் கோச்செங்கட் சோழன் என்றும் அறியப்படும் சோழமன்னன், சைவத் திருமுறைகளாலும் திருமங்கையாழ்வார் திருவாக்காலும் புகழப் பெறும் பேறு பெற்ற அரசனே யாவன் என்பது சாஸன ஆராய்ச்சித் துறையிற் றேர்ந்த ஸ்ரீமான் வேங்கையர் என்பார் கொள்கையாம். இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே செங்கணான் வரலாறு இங்கு விளக்கி யெழுதப்பட்டது. இவன் சேரமான்

கணைக்கா லிரும்பொறையோடு போர் புரிந்து வென்ற செய்தி பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்படுவதே. "தமிழ்ப் புலவர் வரலாறு" என்ற பெயரால் இரண்டு ஆண்டுகளின் முன்பு என்னால் எழுதி வெளியிடப்பெற்ற நூற்றொகையில் வரும் பொய்கையார் வரலாற்றிலேயான் இச்செய்தியைச் சரித்திர முறை பற்றி விளக்கினேன். அங்குச் சோழன் செங்கணான் சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு செய்த போர்கள் இரண்டு என்று கூறினேன். அதனை அறிஞர் சிலர் கண்டித்தனர். இவ் வுண்மைச் செய்தியைப்பற்றி மேலும்சிறிதளவுஆராய்ந்து இந்நூலில் ஆண்டிருக்கின்றேன். இங்கும் முன்போலவே இரண்டு போர்கள் நிகழ்ந்ததாகவே குறித்துளேன். புற நானூற்றிலே எழுபத்துநான்காம் செய்யுளாகிய "குழவி யிறப்பினும்" என்று தொடங்கும் செய்யுள், சேரமான் கணைக்காலிரும்பொறை பாடியதாம். அச்செய்யுளின் கீழுள்ள குறிப்பு "சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா வென்று பெறாது பெயர்த்துப் பெற் றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்பதாம். பொய்கையார் பாடிய களவழி நாற் பதிலே கழுமலப் போர் விவரிக்கப்பட்டது. கழுமலம் சோழ நாட்டின்கண் உள்ளது. குடவாயிற் கோட்டம்சேர நாட்டின்கண்ணிருப்பது. இங்குச் சிறை செய்யப்படு தற்குமுன் நிகழ்ந்த போர் திருப்போர்ப்புறம் என்ற ஊரில் உள்ள போர்க் களத்தில் நிகழ்ந்தது. திருப்போர்ப் புறம் எந்நாட்டின்கண்ணுள்ளது என்பது விளங்கவில்லை;

சேர நாட்டின்கண் இருப்பதாகவே ஊகிக்க வேண்டும். 'குழவி யிறப்பினும்' என்ற பாடலைச் சேரமான் பாடிய போது நிகழ்ந்த போர் சேர நாட்டில் திருப்போர்ப் புறத்தில் நிகழ்ந்ததெனவும், பொய்கையார் களவழி நாற்பது பாடக்காரணமாயிருந்த போர் சோழ நாட்டிலே கழுமல நகர்க்கருகே நிகழ்ந்த தெனவும் ஊகிக்கலாம். இப்போர் சோழ நாட்டகத்ததாகிய வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்ததென்று நற்றிணையுரையாசிரியர் ஸ்ரீமான். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவ்வாறு இரண்டு போர்கள் நிகழ்ந்தனவென்று கொள்ளாவிடின், கலிங்கத்துப் பரணி யாசிரியர் சயங்கொண்டார்,

"களவ ழிக்கவிதை போய்கையுரை செய்ய வுதியன்
கால்வ ழித்தலையை வெட்டியர சிட்ட பரிசும்"

என்று பாடியது பொய்யாய் முடியும். இவ்விரண்டு செய்திகளையும் பொருத்தக் கருதிச் "சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்" என்ற தம் உரை நூலிலே மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், 'துஞ்சிய' என்ற சொல்லுக்கு 'மயங்கிக் கிடந்த' என்று பொருள் கொள்ள வேண்டும் என்பார்கள். 'நச்சினார்க் கினிய னெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்பது போல, ஐயரவர்கள் இட்ட பிச்சையாகத் தமிழ் பயின்று வரும் சிறியேன் அவர்கள் கருத்தை மறுத்துப் பேசத் துணிந்து வந்தேனில்லேன்; நன்கு ஆராய்ந்து என் உள்ளத்துக்கு உண்மையென்று புலப்பட்டவற்றைக் கூறத் துணிந்தே இங்ஙனம் எழுதினேன். புறநானூற்றிலே பிற இடங்களிலே இச்சொல் இறந்த என்றே பொருள் தருதலாலும், சாஸன ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் வி.

வேங்கையர் இப்பொருளே பொருத்தமெனக் கூறி யிருப்பதாலும், 'குழவி யிறப்பினும்' என்ற செய்யுள் பாடிய அரசன் பிறகு உயிர் பெற்று வாழ்ந்தான் என் பது 'மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று நீதி வழங்கும் நாட்டிற் பிறந்தார்க்குச் செவி சுடும் சொல்லாமாகையாலும், புனைந்துரை வகையாற் புதுமை கள் புகுந்திருப்பினும் உண்மைச் செய்திகளைப் பண்டை யோர் கொள்கைக்கொப்பவே ஆராய்ந்து கூறுவது இந் நூற்றொகையின் நோக்கமா மாகையாலும், தமிழ்ப் புல வர் வரலாற்றிலே கூறியவாறு இங்கும் இரண்டு போர் கள் என்றே விரித்து எழுதியுளேன். இவ்வாறு யான் கருதுவது பொருத்தமேயாமென என் தமிழாசிரியர் தம் கருத்தை வெளியிட்டருளியது எனக்குப் பேருதவி யாயிற்று.

கிள்ளி வளவன் வரலாற்றிலே பழமைகளும் புதுமை களும் கலந்துள. இங்குக் கிள்ளி வளவன் என்று கொண் டது, புறநானூற்றிற் கேட்கப்படுகின்ற சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பானேயாம். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இவன் பெய ரொடு ஒரு புடையொத்த பெயர்கள் வருகின்றன. சிலப் பதிகார மணிமேகலைகளின் கால நிலையைப்பற்றிக் கொள் கைகள் பலவாம். அவற்றை யெல்லாம் ஆராய்ந்து முடிவு கட்ட இங்கு இடமுமில்லை; சிறியேனுக்கு அதற்கு வேண்டிய ஆராய்ச்சித் திறமையும் இல்லை. சிலப்பதி காரத்திலே சோழன் பெருங்கிள்ளி யென்பான் உறை யூரி லாண்டான் என்று கூறப்படுகிறான். இவன் பெயர் பெருநற் கிள்ளி யென்பார் அடியார்க்கு நல்லார். மணி

மேகலையில் வடிவேற் கிள்ளி, வென்வேற் கிள்ளி, நெடு முடிக்கிள்ளி, கிள்ளி வளவன் என்ற பல பெயர்களோடு ஓர் அரசன் வழங்கப்படுகின்றன். இவன் மைந்தனே உதய குமரன் என்பான். கிள்ளி வளவன் சரித்திரத்தை ஆராய்ச்சி முறையால் தமிழகத்துக்கு எழுதி யுதவியிருக்கும் திருவாரூர் இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகர் மரபினராகிய சோமசுந்தர தேசிகர், "பழந்தமிழ்ப் பெருமக்கள்" என்ற தம் உரை நூலிலே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனே உதய குமரன் தந்தையாகிய மணிமேகலைக்காவிய மன்னன் என்று அறுதியிட்டுளர். காலவாராய்ச்சியிலே துறை போகிய இன்னவர் கருதிய கருத்து ஆதரிக்கத் தக்கதே யென்று கொண்டு இந்நூற்றொகையிலே அவ்வண்ணம் மணிமேகலையில் வரும் செய்திகளையும் புறநானூற்றில் வரும் செய்திகளையும் கலந்து, புனைந்துரை வகையால் வேண்டுவன சேர்த்து எழுதப்பட்டது. சிலப்பதிகாரத்திலே இவன் சேரன் செங்குட்டுவனுக்கு உறவினனாக அறியப்படுகிறான். அகநானூற்றிலே ஒரு கிள்ளி வளவன் கூடல் நகரிலே பழையன் மாறனைப் போரிற் சாய்த்தது கொண்டு கோதை மார்பன் மகிழ்ந்தான் என்ற செய்தி வருகின்றது. பொய்கையாராற் புகழ்ந்து பாடப்பெற்ற சேரமான் கோக்கோதை மார்பன் என்பான் இக்கோதை மார்பனுக்கு என்ன உறவின் முறையானே வென்பது அறியக்கூடவில்லை. கிள்ளி வளவன் செங்கோற் சிறப்பும் அரசியற் பெருமையும் போர்த்திறமும் எங்கும் புகழ்ந்து பேசப்படுவதால், அவை விளங்க வேண்டியே இவ்வரலாறுகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டன.

இளைஞர்க்கென்று கதை யுருவமாக எழுதப்பட்ட உரை நடை நூற்றொகையின் முகவுரையிலே இத்துணையும் கூறுவது, தமிழ் வளர்ச்சியில் நாட்ட முடையார் பலர் நூதன முறையில் ஆராய்ச்சி செய்து தமிழ்த்திருப்பணி புரியும் இந்நாளிலே அத்தகையார் கையில் இவை அகப்படுமாயின், உண்மை விளங்க வேண்டும் என்பது கருதியேயாம்.

தமிழ் நாட்டுப் பண்டை வரலாறுகளையும் நாகரிகச் சிறப்பையும் அறிய முயல்வோர்க்கு அக்காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலையை நூல்களால் அறிந்தவாறே கூறுவது நன்றெனத் தோன்றும். அம்முறை கருதியே புலவர், பாணர், வயிரியர், விறலியர் முதலியோர் செய்திகள் கூறப்பட்டுள. பாணாற்றுப்படையின் கருத்து ஒரு வாறு திரித்துப் பாணன் ஒருவனை இடையிலே சேர்த்து இந்நாளைச் சிறுர்க்கு விளங்குமாறு புதுமையின் அமைக்கப்பட்டுளது. இவ்வாறு வரும் புதுமைப் புனைந்துரைகளெல்லாம் அறிஞர்க்கு வெறுப்பளியாவென்பது எதிர் பார்க்கப்படும்.

இளம்பருவத்திலே தந்தையை யிழந்து கலைப்பயிற்சிக்கு வழியின்றி மயங்கிய சிறியேனை மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்த்துக் கொண்டு உதவி புரிந்த தமிழ் வள்ளல் பொ. பாண்டித்துரைத் தேவர் என்ற நல்லோர் பெயரை நினைந்துருகாதிருக்க இயலாது. அன்னார் உதவியின்றியின், தமிழ் எங்கே? சிறியேன் எங்கே? தமிழ்ச் சங்கக் கலாசாலையில் கல்வி பயிற்றித் தமிழ்ச் செல்வத்தை யான் அடையுமாறு உதவிய தமிழாசிரியர்களாகிய ஸ்ரீ. சு. ஹரிஹரைய

ரவர்களுக்கும் காலஞ்சென்ற தமிழ்ப்புலவர் சு. அரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கும் இந்நூலின் உரிமையை யேற்றுக்கொண்ட ஸ்ரீ. உ. வே. திருநாராயண ஐயங்கார் அவர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள் உரியனவாம். தமிழ்ப் புலவர் வரலாறு, பாண்டிய மன்னர் என்ற என் நூற்றொகைகளே அச்சிட வேற்றுக்கொண்டதுபோல இதனையும் ஏற்றுக்கொண்டு எனக்கு ஊக்கம் உதவிய மதுரைப் புத்தக வணிகர் ஸ்ரீமான். இ. மா. கோபால கிருஷ்ணக் கோனுர்க்கும், அச்சிடும்போது ஒப்பு நோக்குதல் முதலிய பணி புரிந்துதவிய என் அன்பர் தமிழ்ப் புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள் உரியனவாம். தமிழ் வளர்ச்சியில் ஊக்கமுடைய இளஞ்சிறார் பலர் பெருகிய இந்நாளிலே இந்நூற்றொகை அவருள்ளத்தே உண்மையான தமிழபிமானத்தை வளர்க்க உதவுமாயின், அதுவே இவற்றை எழுதியதாற் பெற்ற பெரும்பயனாக மதிக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

21—11—'31
புதுக்கோட்டை

நா. கனகராஜையர்

ஸ்ரீ :

சோழ மன்னர்

முதற் பாகம்

சோழன் கரிகாற் பெருவளத்தான்

I

"மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருந்த
மைமயறு சோழ வளநா டென்ப."

சோழவள நாடு, அருந்தமிழமுதம் பருகிப் பிறர்க்குத வும் புலவர் பலர் பிறந்த சோழ நாடு; பத்தினிப் பெண்டிர் பலர் பிறந்து வாழ்ந்த சோழநாடு; மனுச்சோ ழன் தன்றை யிழந்து கதறிய பசுவின் பொருட்டுத் தன் மகனைத் தேர்க் காலிலிட்டு அரச முறை நிலை நிறுத்திப் புகழ்பூண்ட புண்ணிய நாடு; வளங்கள் பலவும் நிரம்பிய

வளவ நாடு; பிற நாடுகளின் சென்னி மணியாய் இலகும் சென்னிநாடு; இன்றளவும் தன் பண்டைப்புகழ் மாறுது சோற்று வளம் படைத்த சோழ நாடு. இந்நாட்டின் பெருமையை எண்ணி யுள்ள முருகிப் புகழ்ந்த பண்டைப் புலவர் எத்துணையர்? அப்புலவர்கள் பாடிய பாடல்கள் இந்நாளிலே இறைவன் அருட்சிறப்பால் நம்மவர்க்கு எளிதிற் கிடைத்தலாலன்றே நாம் நம் தமிழகத்தின் இதய கமலமாகிய சோழ நாட்டின் பழம் பெருமையை உள்ளவாறு உணரக் கூடியவர்களா யிருக்கிறோம்?

இந்நாடு பண்டைக் காலத்திலே, அறிவும் திறனும் அருளும் ஆற்றலும் பொருளும் புகழும் படைத்த ஒரு தமிழ்ப் பழங்குடியினரால் ஆளப்பட்டது. இக்குடியினர் ஆண்மையும் வீரமும் நல்லிசைப் புலவர் பலராற் பாராட்டப்பட்டுள. சோழ மன்னர் என்று உலகம் புகழ வாழ்ந்த இக்குடியினர் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தைச் சில காலம் அரசிருக்கையாகக் கொண்டிருந்தனர். 'ஊரேனப் படுவ துறையூர்' என்று புகழ்பூண்டு கோழியென்ற வேறு பெயர் படைத்த உறையூர் நகரைச் சில காலம் அரசிருக்கையாகக் கொண்டிருந்தனர்; பின்னாளிலே திருவாரூர், தஞ்சாவூர் என்ற நகரங்கள் இவ்வரசினர்க்குத் தலை நகராயின வென்பர்.

மனுச் சோழன் திருவாரூரிலிருந்து அரசாண்டான் என்று பெரிய புராணத்திற் கூறப்படுமாயினும், அவன் புகார் நகரத்திலிருந்து அரசியற்றினன் என்று சிலப்பதிகாரம் கூறுவதால், இரண்டு நகரங்களும் அவன்

காலத்திற் சிறந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. பிற்காலத்துச் சோழ அரசர்கள் தத்தம் பெயராற் பல நகரங்கள் நிருமித்தனர். அவை யெல்லாம் இப்பொழுது பெயரளவில் நிற்கின்றன.

பண்டைத் தமிழ் மன்னர் என்று தமிழர் கருதும் சேர சோழ பாண்டியருள், இந்நாளிலே திருவாங்கூர் மன்னர் சேர மன்னர் பரம்பரையினர் என்று கருதப் படுவர். அவர் தமிழ் மன்னராக இக்காலத்தில் இல்லாதிருப்பது உலக மறிந்ததே. சோழ மன்னர் குடியும் பாண்டிய மன்னர் குடியும் புகுந்து மறைந்த இடமே தெரியவில்லை. தமிழ் மன்னரது பண்டைப் புகழின் பகுதியில் ஒரு சிறிதேனும் நாம் அறியத் தக்கவாறு இந்நாளிலே அம்மரபினர் எவரும் இல்லாது போனது அறிஞர் அறிந்து விசனித்தற்குரியதே. இம்மன்னர்கள் நிலை இவ்வாறு ஆயதுபோல இவர்கள் ஆண்ட நாடு நகரங்களின் நிலையும் ஆயிருப்பது அறிந்து வருந்தத் தக்கது.

முன்னாளிலே பெரிய நகரங்களாய் மிக்க செல்வ கலம் படைத்திருந்த உறையூரும் புகார் நகரமும் இந்நாளிலே மிகச் சிறிய ஊர்களாக மாறித் தம் பண்டைப் பெருமையை விளக்கும் விருப்பமும் வலிமையும் அற்றனவாய் இருக்கின்றன. அரசர்க்கு வரும் வாழ்வு தாழ்வுகள் அவர்தம் நகரங்களுக்கும் வரும் எனச் சோழ மன்னர் வரலாற்றிலிருந்தே நாம் அறியலாம். இவை இந்நாளில் இருக்கும் நிலைமையைக் காணும் தமிழன் ஒருவன் பண்டைத் தமிழ் நூல்களை நன்கு ஆராய்வானாயின், இவற்றின் பண்டைப் பெருமையை

யும் இந்நாளைச் சிறுமையையும் எண்ணி மனங் கசிந்து கண்ணீர் உதிராமலிரான். பண்டைப் பெருமையை ஒரு சிறிதேனும் இந்நாண் மக்கள் அறிய வேண்டி இம் மன்னர் மரபிலே தோன்றிய பெருமக்களுள் நின்ற புகழ்படைத்த சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு இங்கு ஒருவாறு கூறப்படும் :

உறையூர்ப் பெருநகர் எண்ணிறந்த புலவரும் அறிஞரும் வீரரும் மன்னரும் பிறரும் மகிழ்ந்து வாழ்தற் குரியதாய் இடமகன்றதாயிருந்தது. அந்நகரிலிருந்து, அறிஞர் கூறும் அறவுரை கேட்டு, அதற்கிணங்கச் சேட் சென்னி யென்ற சோழ மன்னன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஆண்மையும் போர்த் திறமும் படைத்த அரசர் பெருமானுகையால், அயலரசரெல் லாரும் அவன் பெயர் கேட்பினும் அஞ்சுவாராயினர்.

மன்னன் சேட்சென்னி, வளம் படைத்த சோழ நாட்டிலே புலவர் பலரும் மகிழ்ந்து வாழ்தற்காவன செய் வித்தான். அவனுக்கு இளையோனுகிய இளஞ்சேட் சென்னி யென்பான், "ஏந்தெழில் மிக்கான்; இயற் றமிழ் வல்லான் ; நயனுடை யின் சொல்லான்; விற்போர் வல்லான் ; வேற்போர் வீரன்; வாட்போர் வல்லவன்," என்று நாடு போற்ற வாழ்ந்திருந்தான். அவ்விளை யோன், மூத்தோனுகிய அரசனுக்கு உதவியாகப் போர் புரிந்து, நாடு காத்தற்கு ஆவன புரிந்து வந்தான். அந் நாளிலே போர்ப்படையிற் றேர்ப்படையே பெரிதாக மதிக்கப்பட்டது. ஆகையால், அவ்விளஞ்சேட்சென்னி அழகிய பல தேர்களைச் செய்வித்து, அவற்றைப் போர்க் களங்களிலே நடத்திப் போர் புரிந்து, வெற்றி பெற்று

வந்தான். அதனால், அவன் உருவப் பஃறேர் இளஞ் சேட்சென்னி யென்று புலவராற் புகழப் பெற்றான்.

சேட்சென்னி அரசரிமை யேற்றுப் பல வாண்டுகள் ஆயின. நாட்டிலும் நகரிலும் எல்லா வகை வளங்களும் நிரம்பியிருந்தன. ஆனால், அரண்மனை யகத்தே ஒரு சிறப்புக் குறைவுற்றிருந்தது. அரசனுய் இருப்போன் தன் மன மகிழ்ச்சிக்கென ஒன்றையும் கொள்ளவும் தள்ளவும் இயலாது; எல்லாம் நாட்டவர் நன்மைக்கென்றே கருதவேண்டியவனுயிருக்கிறான். நல்ல குலத்திலே குண நலமெல்லாம் படைத்த பெண்டிர் இருவரை மணந்து, நல்லோர் விதித்த அறச் செயல்களையெல்லாம் முறை தவறாது புரிந்து வந்தும், மன்னன் மக்கட்பேறு பெறவில்லை. மன்னன் மக்கட்பேறு பெறாதிருந்தது, தேவியர்க்கும் அரச வுறவினர்க்கும் அரண்மனையகத்தார்க்கும் விளைத்த மனக்குறை அதிகமேயாயினும், நாட்டு மக்கள் மனக் குறை அதினும் அதிகம் என்றேகூற வேண்டும். இப்பெருங்குறை யொன்றே மற்றெல்லாப் பேறுகளாலும் பெறும் இன்பத்தைக் கெடுத்தது.

நாட்டு மாந்தர் பலர் தம்முட் கலந்து ஆலோசனை செய்து, 'அரசனை மற்றொரு மணம் முடிப்பித்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்வோம்,' எனத் தீர்மானித்தனர். அதற்கிணங்க ஒரு நாள் அவருள் முன்னிற்போர் பலர் அரண்மனையடைந்தனர். நாட்டு மக்களுட் பெரியார் பலர் தன்னைக் காணவந்த செய்தியறிந்த அரசன், பெரிய மண்டபம் ஒன்றினிலடைந்தான். அங்கு அமைச்சரும் பிறரும் கூடினர்; இளைய வேந்தனும் வந்தடைந்தனன். பெரியார் பலரும் தத்தமக்குரிய

ஆதனங்களில் அமர்ந்தனர். அரசன் சிங்காதனத் தமர்ந்தான். இளைய வேந்தன் அருகிலே அமர்ந்திருந் தான். அமைச்சர் பலரும் புலவருட் சிலரும் அரச னைச் சூழவிருந்த இருக்கைகளில் அமர்ந்தனர்.

புலவர் ஒருவர் எழுந்து, அரச வாழ்த்துக் கூறி னர். பின்னர் அமைச்சர் தலைவர் எழுந்து, "மன்னர் பிரானே, இளையவரசே, அறிஞர்காள், இன்று இறை வன் திருவருளால் நாம் எண்ணிய எண்ணம் நிறை வேறுக. சோழர் குடியின் பழமையும் பெருமையும் புகழும் உலகம் அறிந்த உண்மைகளே. அத்தகைய பழம்பெருங்குடியில் இப்பொழுது அரசு பூண்டிருக்கும் மன்னர் குண நலங்கள் நம் நாட்டு மக்கள் மனத்தை யெல்லாம் கவர்கின்றன என்பது மெய்யே. இத்தகைய நல்லரசர் ஆட்சியின்கீழ் வாழ்ந்த மக்கள் மேலும் மேலும் இன்ப வாழ்வே பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பே. தற்காலம் இறைவன் அருள் குடி மக்களது நோக்கத்துக்கு உதவியாய் இருப்பதாகக் கூறுவதற் கில்லை. எல்லாக் குணங்களும் எல்லா நலங்களும் எல் லாச் செல்வங்களும் நிரம்பிய நம் அரசர் பிரானுக்கு மக் கட்பேறில்லாதிருப்பது நம் மனத்திற்குப் பெருங்கவலை யைத் தருகின்றது. தேவிமார் இருவரும் அரசர் பெரு மானும் தெய்வத் திருவருள் பெறக் கருதிச் செய்த புண் ணியச் செயல்கள் இந்நாள்காறும் பயன் தந்திலை. என்று பயன் தருமோ! என்று நம் மனக்குறை யகலுமோ! அறியோம். இறைவன் திருவருள் விரைவில் எய்துக என்று நாம் எல்லாம் வல்ல அவனையே பணிவோம்," என்று கூறி யமர்ந்தனர்.

மூதியவர் ஒருவர், அமைச்சர் தம் ஆதனத்தில் அமர்ந்த பிறகு எழுந்து, தம் கருத்தை வெளியிட்டார். அவரும் பெரும்பாலும் அமைச்சர் கூறிய கருத்துக் களையே கூறினர். புலவர் ஒருவர் எழுந்தார். அவர், "அரசரே, அவையகத்தீர், கண்ணில்லாத வாழ்வும், மதி யம் ஒளி செய்யாத வானகமும், அமைச்சரில்லாத அர சாட்சியும், அறிஞர் இல்லாத அவைக்களமும், மக்கள் இல்லாத மனை வாழ்வும் ஒப்பாம் என்பர் பெரியோர். பொது மக்களுக்கே மக்களில்லாக் குறை பெருந்துயரம் விளைக்கும். தம் நாட்டின் நலத்தின்பொருட்டே எல்லா வகை நலங்களையும் துய்க்கும் அரசர்க்கு மக்களில்லாக் குறை அவர் மாத்திரமேயன்றி அவரை யடுத்தார் எவ ரும் எண்ணிக் கவலத் தக்க பெருங்குறையாமன்றே? அரசர் பிரானுக்குத் தேவியர் இருவர் இருக்கின்றனர். அத்தேவியர் கற்பின் கொழுந்தனையர்; பொற்பின் செல் வியர்; நாணின் பாவையர்; நீணில விளக்கனார். அத் தகைய நற்பெண்டிர் மகப்பேறு பெறுமை இறைவன் அருட் சிறப்பே போலும்! இளைய வேந்தர், தமக்கொத்த குலத்திலே ஒரு கற்பரசியை மணம் புரிந்திருக்கின்றார். சென்ற பல வாண்டுகளாக அவர்க்கும் மகப்பேறு இல்லை. அவர்க்கேனும் மகப்பேறு உண்டாயிருப்பின், ஒருவாறு நாட்டார் மனக் குறை தணியலாம். ஆகையால், இனி, அரசர் பிரான் இறைவன் திருவருள் பெற்று எவ்வகை யாலேனும் நம் நாட்டை ஆளத் தக்க ஓர் இளவரசனைத் தரல் வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாம்," என்றியம்பி இருந்தனர்.

வேறு பிறர் எழுந்து, "அதுவே எம் கருத்தும்," என்று கூறித் தம் இருக்கையில் அமர்ந்தனர். பின்னர்

அரசர் பிரான் தன் உள்ளத்தடக்கிய துயரம் வெளி வரா வண்ணம் பின் வருமாறு பேசினன்:

"அமைச்சர்காள், அன்புடையீர்காள், நுமக்குள்ள மனக் குறையைப் போக்க முயல்வதன்றே எம் கடமை யாம்? யாம் என் செய்தும்? இறைவன் திருவருள் இங் ஙனம் இருந்தது! நாட்டின் நலங்கருதி எம்மால் இயன் றன வெல்லாம் புரிய யாம் ஒரு சிறிதும் பின்னிடை யோம். நீவிர் இப்பொழுது தெரிவித்துக்கொண்டது இறைவன் அருளாலேயே அமைதற்குரியது. எவ்வெ வர்க்கும் முன் வினைப்பயன் மாற்ற வியலாத தொன்றும், எமக்கு இப்பிறவியில் புத்திரப் பேறு பெறற்குரிய திரு வருள் இல்லாதிருக்குமாயின், யாம் என் செய்யலாம்? இளையோனேனும் புத்திரப் பேறு பெற்றிருப்பின், எம் மனம் அமைதி பெற்றிருக்கும். போர்த் தொழிலிலே பெருவிருப்புப் பூண்டிருக்கும் இளையோன், நாட்டின் நலத்திலேயே நாட்டம் உடையானுயினும், நாட்டுக்கு இளவரசைத் தரும் முயற்சிக்கு இறைவன் அருள் பெற வேண்டியவனே யாமன்றே? நீவிர், 'நாட்டின் நலங் கருதி இளவர சொருவனைத் தரல் வேண்டும்,' என்கின் றீர். எம்மால் இயன்ற அறச் செயல் அனைத்தும் புரிந் தும் பயன் பெற்றிலேம். நும்முள்ளே சிலர் கருதுவது போல, இனி யாம் மறுமணம் முடித்து மகப்பேறு பெற விரும்புகிலோம். நுமக்கு விருப்பமிருக்குமாயின், நம் இளையோற்கு மற்றொரு மணஞ் செய்து வைக்க விரும்பு கின்றேம். இங்கு வந்திருக்கும் பெரியோர்களில் எவ ரேனும் யாம் இன்ன குடியிலே எம் இளையோன்பொருட் டுப் பெண் கொள்ளலாகும் என்று கூறுவராயின்,

அதனை அமைச்சரோடு கலந்து ஆலோசித்துத் தக்க முடிவு கூறுவோம்.''

மன்னர் பிரான் வாய் மொழி கேட்டு அவைக் களத்திருந்த அறிஞரெல்லாம் சிறிது நேரம் தமக்குள் ஆலோசனை செய்தனர். பிறகு புலவர் ஒருவர் எழுந்து, அவ்வாலோசனையின் முடிவை வெளியிட்டனர்:

"அரசரே, உலகிலே இல் வாழ்க்கை யென்னும் தொடர்ச்சி அறு வண்ணம் இல்லறத்தான் ஒவ்வொரு வனும் முயல வேண்டும் என்று வேதங்கள் விதிக்கின்றன. அரச மரபு முறை பிறழ்ச்சியின்றித் தொடர்ச்சியாய் வரவேண்டுமென்பது சான்றோர் கருத்தாம். நுமது மரபின்கண் முன்னே பிறந்த பெருமன்னர் புகழெல்லாம் நீவிர் அறிவீர். எதிர் காலத்திலும் நுமது மரபின் புகழ் வளர்ந்தோங்குகவெனக் குடி மக்கள் கருதுவது இயல்பே. இரு மகளிரை மணம் புரிந்தும் மகப் பேறு பெறுமையால், மூன்று முறையாக ஒரு பெண் கொள்ள விரும்புகிலீர்; இவ்வரசர்க்கு மணம் முடிப்பிப்பதாகக் கூறுகின்றீர். நாட்டின் உரிமையிலே நாட்டம் உடையார் பலர் இப்பொழுதே எழுவதாக அறிகின்றோம். எவர் மண முடித்துக் கொள்வதாயினும், விரைவிலே மணம் புரிந்துகொண்டு, எமக்கு ஓர் இளவரசனை நல்கல் வேண்டுகிறோம். இவ்வரசுக்கு உரிமை யுடையார் இன்னார் என்று உறுதி யுறுத நிலையொன்று உண்டாமாயின், அஃது எமக்கும், இந்நாட்டுக்கும், எம் குடியிலே பின் வருவார்க்கும் பெருந்துயர் விளைக்கக் கூடிய செயலாம். ஆகையால், அரசர் பிரானே, நும் மரபின் உரிமைக்கு உரியான் ஒரு செல்வனை எம்பொருட்டு விரைவிலே தர வேண்டுகிறோம்.''

அரசன்:—பெண்ணைக் கொள்வதில் அரசர் குடியினர் ஆலோசித்தற்குரிய நியாயங்கள் பல உள. நாம் முன்னே கூறியவாறே விரைவிலே இளையோனுக்கு மணம் முடிப்பிப்போம். குணமும் நலமும் அறிவும் உருவும் திருவும் உடைய ஒரு பெண் மணி எளிதிற் பெறலாம் பொருளன்றே? நீவிர் அறிந்த வளவில் எவரேனும் நம் குடியிற் பெண் கொடுத்தற்குரியார் இருப்பின், வெளியிடலாம்.

புலவர்:—அரசரே, தமிழ்ப் பழங்குடியினராகிய தமக்குத் தம் மரபின் பெருமையை வளர்க்கும் கருத்துடையார் எவரும் பெண் கொடுக்க ஒருப்படுவர். முன்னாளிலே நும் மரபினர் வேளிர் குடிகளிலே பெண் கொள்ளும் வழக்கமுடையராய் இருந்தனர். வேளிர் இனத்தினர் சிறந்த வீரர்; தமிழகத்து மும்மன்னர்க்கும் அவ்வக்காலங்களில் தத்தம்மால் இயன்ற உதவி புரிந்து வந்திருக்கின்றனர். அக்குடியினருள் இங்கும் சிலர் வந்திருக்கின்றனர். அவருள் அறிவினலத்தாலும் பொருளின் சிறப்பாலும் மேம்பட்டுத் தலைமை பூண்டிருக்கும் அழுந்தூர் வேளைப்பற்றி இந்நாடனைத்தும் அறியும். அவர் முன்னை நல் வினை வயத்தால் ஒரு பெண்ணருங்கலத்தைப் பெற்றிருக்கின்றார். அவர் மைந்தர் ஒருவர் சிறந்த புலமை படைத்தவராகவும் விளங்குகின்றார். நீவிர் விரும்புவீராயின், அழுந்தூர் வேளின் அருமைக் குமாரியை நம் இளைய மன்னர்க்கு மணம் புரிவிக்கலாம். இம்மண வினை நிகழ்வதில் எவரும் மன மாறுபாடு கொள்ள இடமில்லை.

முதியவர் ஒருவர்: —அரசரேறே, இத்தகைய உயர்ந்த பழங்குடி யொன்றிலே மன்னர் பெண் கொள்வது எமக்கெல்லாம் விருப்பமே. விரைவிலே மணம் முடிந்து இறைவன் திருவருளால் எம் நாடு ஓர் இளவரசைப் பெறவேண்டு மென்பதே எமது வேண்டுகோளாம்.

அரசன்:—இளையோற்கு விரைவிலே மணம்நிகழ்த்துவோம். அழுந்தூர் வேள் என்ன சொல்வாரோ!

அழுந்தூர் வேள்:—மன்னர் பிரானே, யானும் எமது குடியும் எம் கல்வியும் அறிவும் பொருளும் திறமையும் வீரமும் எல்லாம் எம் அரசினர்க்கே உரிமையாயிருக்க, எம் குடியிலே பெண் கொள்வது பற்றி எனது விருப்பம் அறியவேண்டுமோ! இளையவேந்தர் மனமுற விரும்பி எம் குடிச்செல்வமாகிய பெண்ணருங்கலத்தை யேற்றுக் கொள்வராயின், யான் கொடுக்க இசைகின்றேன்.

அரசன்:—இளையோய், நின் கருத்து என்ன?

இளையோன்:—அறிவிலும் அநுபவத்திலும் சிறந்த பெரியோர் பலரும் கூடி நாட்டின் நலம் கருதி முடிவு செய்த வொரு விஷயத்திலே நான் மாறான கொள்கையுடையனாயிருத்தல் இயலுமோ?

அரசன்:—அங்ஙனமாயின், விரைவிலே மண விழா நிகழ்த்துவோம். நும் விருப்பமெல்லாம் நிறைவேறுக. பெரியீர்காள், இனி விடை பெறலாம். யாம் மந்திர சாலைக்குச் செல்கின்றோம்.

II

உறையூர்ப் பெருநகர் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மண விழவினபொருட்டு மங்கல கரமாக அலங்காரம் செய்யப்பட்டது. அரச மாளிகை யில் மங்கள வாத்தியங்கள் முழங்கிய வண்ணம் இருந் தன. சோழ பரம்பரையார் திருமண விழவை நிகழ்த் தும் சிறப்பினைத் தனக்கென்றமையப் பெற்ற திருமண மாளிகை தேவர் உறையுள் போல விளங்கியது. அரு கிலேயுள்ள சிறியவும் பெரியவும் ஆகிய பல மாளிகை களில் வேளிர் பலரும் வேறு பல சிற்றரசரும் வந்து நிரம்பினர். அழுந்தூர் வேளும் அவர்தம் உறவினரும் ஒரு பெரிய மாளிகையில் வந்து தங்கினர். மண விழைக்குரிய மங்கல நாள் குறுகியது. அந்தணரும் அறி ஞரும் புலவரும் பிற பெரியார்களும் திருமண மாளிகை யிற் கூடினர். சேட்சென்னியும் இளஞ்சேட்சென் னியும் இரண்டு அழகிய தேர்களி லமர்ந்து, அரண்மனை யிலிருந்து மண மனை வந்தடைந்தனர். அரச பத்தினி யரும் பிற பரிவாரத்தாரும் சிவிகைகளிலும் பிற வூர்தி களிலும் வந்து அவரவர்க்கமைந்த விடங்களில் அமர்ந் தனர்.

திருமணவோரை நெருங்கியது. விண்ணவர் செவி களும் செவிடு பட மங்கல வாத்தியங்கள் முழங்கின. தேவரும் மக்களுட் பெரியாரும் சான்றாய் நிற்க, மண

விழாக்குரிய சடங்குகள் நிகழ்ந்தன. புலவர் பலர் புகழ்ந்து போற்ற, அழுந்தூர் வேள் தம் மகளை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னிக்கு மனமுவந்து கொடுத்தார். அந்தணர் பலர் ஆசி கூறினர். பேரிளம் பெண்டிர் பல்லாண்டு பாடினர். அங்கு நிறைந்திருந்த புலவர்க்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசில் வழங்கப்பட்டன.

மண விழா நிகழ்ந்த மண்டபத்தே பலர் முன்னிலையில் அழுந்தூர் வேள் புலமை சிறந்த தம் மைந்தராகிய இரும்பிடர்த்தலையாரைச் சோழ நாட்டின் நலத்தின் பொருட்டுப் பணி புரிகவென அரசரிடம் நண்பும் பணியும் பூணுமாறு விட்டார். சேட்சென்னியும் இளஞ் சேட்சென்னியும் இச்செய்தியை யறிந்து, மிகவும் சந்தோஷித்தனர். பிறகு வந்திருந்தார் எல்லாரும் விருந்துண்டனர். மங்கலத் திருவிழாவிலே சில தினங்கள் சென்றன. பிறகு மண விழாக் காண்டற்பொருட்டு வந்திருந்தோரெல்லாம் அரசரிடம் விடை பெற்றுத் தத்தம் ஊர்களுக்குச் சென்றனர். அழுந்தூர் வேளும் தம் மகள் பொருட்டுத் தாம் செய்தற்குரிய சிறப்பையெல்லாம் செய்து, அரசர் அனுமதி பெற்று, மைந்தரிடமும் மகளிடமும் அரசரின் விடை பெற்றுத் தம்மூர் நோக்கிச் சென்றார். உறையூர் நகரிலே முன்போல அரசுரிமைச் சுற்றத்தாரெல்லாம் தத்தம் பணியை மேற்கொண்டு அற நெறி வழாது நடந்து வந்தனர்.

நாடெங்கும் செல்வம் வளர்ந்தது. வியாபாரமும் விவசாயமும் கைத்தொழில்களும் விருத்தியாயின. தமிழகத்தே சோழ நாட்டுக்கிணையான நாடு இல்லை

பென்று கூறத் தக்க நிலை வந்தது. மன்னனும் இளை யோனும் அரசின் நிலை உறுதிப்பட வேண்டுமென அயல் நாடுகளிலே அடிக்கடி போர் புரிந்து, நாட்டின் உருவைப் பெருக்க முயன்றனர். அரசுரிமை, சேட் சென்னி மகனில்லாது விண்ணகம் சேர்ந்தால், தமக்கு வரலாமேயென்று கருதுவோர் சிலர், தம் முயற்சிகளை மறைவாக நடத்தி வந்தனர். இளஞ்சேட் சென்னியின் வீரத்தையும் போர்த் திறத்தையுங் கண்டு அவரெல்லாம் வெளிப்படையாகத் தம் கருத்துக்களைத் தெரிவிக்கவும் வேண்டிய முயற்சிகளைச் செய்யவும் அஞ்சியிருந்தனர். புலவர் பலர் உறையூரை யடைந்து, அரசன் ஆதரவு பெற்று வாழ்ந்தனர்.

உருவப் பஃறே ரிளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேள் மகளை மணந்து இரண்டாண்டுகள் ஆயின. இறை வன் திருவருளால் அவள் வயிறு வாய்த்தனள்; உத்தம விலக்கணம் அமைந்ததொரு நன்னாளிலே நல் வேளை யிலே ஓர் ஆண் மகவை யீன்றனள். இந்நற்செய்தி கணப் பொழுதில் நாடெங்கும் பரவியது. உறையூர் நகரெங்கும் அலங்காரங்கள் செய்யப்பெற்றன. நாட்டி னர் அனைவரும் தத்தம் மனையகங்களிலே மங்கல விழாக்கொண்டாடினர். அரசுரிமையிலே உறவின்முறை பற்றி உரிமை கொண்டாடி மறைவான முயற்சிகள் செய்தோர் மனத்திலே பகை நெருப்பு எழுந்தது. ஒரு செய்தி சிலர்க்குத் தீதாகத் தோன்றுவது, அது பலர் நன்மைக்காக வந்ததேயாயினும், உலகத்தில் இயல்பே யன்றே?

நாடெங்கும் உள்ள திருக்கோயில்களிலே சிறப்புக்கள் செய்யப்பெற்றன. தருதியுடையார் பொருட்டுத் தான தருமங்கள் செய்யப்பெற்றன. சிறையகத்திருந்தாருட் பலர் விடுவிக்கப்பெற்றனர். நாட்டு மக்கள் இரண்டாண்டுகளுக்கு அரசிறை இறுக்க வேண்டாவென முரசறையப் பெற்றது. வறியார் பலர் அரண்மனையிலே வேண்டுமளவு பொன்னும் பொருளும் உடையும் உணவும் பெற்றனர். பாணரும் விறலியரும் பொற்பூவும் பொன்னும் பெற்றனர். புலவர் பலர் வந்து வாழ்த்திப் பரிசில் பெற்றுச் சென்றனர்.

நிமித்திகருட் சிறந்தார் பலர், அரண்மனை யடைந்தனர். அவர்கட்கென வமைத்ததொரு மண்டபத்திலிருந்து அரசிளங் குமரன் ஜாதகம் கணிக்கத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் நெடுநேரம் நன்கு ஆலோசித்துத் தம்முள் முதியார் ஒருவரை அரசர் திருமுன்பு அனுப்பினர். சேட்சென்னியும் இளஞ்சேட் சென்னியும் இரும்பிடர்த் தலையாரும் ஒரு தனியறையில் அமர்ந்திருந்தனர். நிமித்திக முதியார் அங்கு வந்தடைந்தார். அவர் அரசனுல் முகமலர்ச்சியோடு வரவேற்கப் பெற்றுப் பிறகு அங்கு இருந்ததோர் ஆதனத் தமர்ந்தனர். பிறகு அங்குப் பின் வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது :

அரசன்:—பெரியீர், நும் நூற்பயிற்சியினுல் நீவிர் அறிந்தவளவு நம்செல்வன் எதிர் கால வாழ்வின் நிலையை ஒருவாறு கூறலாமே!

இரும்பிடர்த் தலையார்:—நிமித்திகப் பெரியீர், இந் நாட்டின் நலங் கருதி உதித்திருக்கும் இளஞாயிற்றின்

வருங்கால வரலாற்றிலே நீவிர் காண்பவற்றுள் ஒன்றும் ஒளியாது கூற வேண்டுகிறேன்.

நிமித்திகர் :—அரசர் பெருமானே, இளைய வேந்தரே, பிடர்த்தலைப் பெரியீர், என் நூற் பயிற்சியாலும் அநுபவத்தாலும் தெளிவாக அறியும் சில வுண்மைகளை இங்குக் கூறுகின்றேன் : நான் சொல்லும் செய்திகள் எல்லாம் நல்லனவாய் இருக்க வேண்டு மென்பதே என் நோக்கம். இப்பொழுது நம் நாட்டின் நலங் கருதி இறைவன் திருவருளாற் பிறந்த செல்வன் உயர்ந்த வாழ்வு பெறுவன் என்பதில் ஒரு சிறிதும் ஐயுறவில்லை. நீண்ட ஆயுளும் வெற்றித் திருவும் பெருமையும் செல்வமும் பெறுவான் என்பதும் உண்மையே. நம் அரசினர் குடியிலே இவனுக்கு முன்னும் பின்னும் இத்தகைய புகழ் படைத்தாரும் படைப்பாரும் இலர் என்று எவரும் கூறலாம். படி புகழ் பெற்று வாழ்வான் என்பது ஒளி நூலார் கருத்தாம். கல்வி அறிவு ஆண்மை அழகு வீரம் திறமை யெல்லாம் இவனே யடைந்து அழகு பெறும். இந்த அரச மரபே, இச்செல்வன் பிறந்ததால், மிக்க சிறப்படையும். உலக வாழ்வு முழுவதும் இன்ப மயமாகவே இருப்பதில்லை யென்பதை நீவிர் அறிவீர். இளம்பருவத்திலே இவ்வரசிளஞ் சிங்கம் சிறிதளவு துன்பம் அடைவான். சிறைக்களத்தே சில நாள் இவன் வாழவும் நேரிடும் என்று தோன்றுகிறது. பிறகு நெருங்கிய உறவினர் ஒருவர் உதவியாலே மறைந்து வாழ்ந்திருந்து, இறைவன் திருவருளால் அரசுரிமை பெற்றுப் பின்னர்ப் பகைவரை யெல்லாம் அடக்கி வாழ்வன் என்று கூற வேண்டும். உலகிற் பிறந்தார் எவரும் துன்

பம் துய்த்த பிறகு இன்பம் அடைவராயிற் பெரிதும் மகிழ்ச்சி பெறுவரன்றே? அரசர் பிரானே, இனி நான் இதைப்பற்றி அதிகம் கூறுவதற்கில்லை.

அரசன்:—பெரியீர், நானும் என் இளையோனும் இருக்கும்போது எம் குலத்தோன்றலாகிய இச்சிறுவன் சிறையகப்படுவான் என்று நீவிர் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

நிமித்திகர்:—அரசர் பெருமானே, நீவிர் இருவீரும் இருக்கும்போது இளவரசன் சிறையகப்படுவான் என்று நான் கூறவில்லையே! இளம்பருவத்தே சிறை வாழ்வும் பிறகு சில நாளைக்கு மறை வாழ்வும் பெறுவான் என்றன்றே கூறினேன்? இளவள ஞாயிறு தோன்றுங் காலத்தே திங்களும் உடுக்களும் மழுங்குவது காண்போமன்றே?

இரும்பிடர்த் தலையார்:—இறைவன் திருவருளால் எவ்வாழ்வு வரினும் அறிவுடையார் அதைப்பற்றி மனத்திலே ஒருவகை மாறுபாடும் கொள்ளாது அமைதியோடு அனுபவித்தல் வேண்டும். அரசரே, இளைய வேந்தரே, இனி நிமித்திகர்க்கு உரிய சிறப்புச் செய்வோம். அவர் சொல்ல உரியவற்றை யெல்லாம் சொல்லிவிட்டார். சொல்ல மனமின்றி மறைக்கும் செய்திகள் உளவாயின், அவற்றை நாம் கேட்டறிய முயலுதல் முறையாகாது.

அரசன்:—அவ்வண்ணமே யாகுக. நிமித்திகப் பெரியீர், இனி நீர் தும் இனத்தவரோடு நம் அமைச்சர் தரும் சிறப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்த முத்து மாலையை நான் நுமக்குச் சிறப்பாகக் கொடுக்கின்றேன்; பெற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

இளையோன்:—நிமித்திகப் பெரியீர், இந்தப் பொற் பூமாலையையும் பெற்றுக்கொண்டு எம் குலத் தோன்றலை வாழ்த்த வேண்டுகின்றேன்.

நிமித்திகர்:—அரசர்காள், இறைவன் திருவருளால் இச்சோழர் குலத்தோன்றல் வாழ்வதற்குரிய பல்லாண்டு களும் நல் வாழ்வு பெற்று இன்பமும் அன்பின் செல்வ மும் படைத்து வாழ்க. பிடர்த்தலைப் பெரியீர், ஒளி நூலுண்மை நீவிர் அறியாததன்று. இனி வருவன வெல் லாம் நீரும் அறிவீர். எல்லாம் நலமாகுக.

பின்னர் நிமித்திகர் விடை பெற்றுச் சென்றார். அதன் பிறகு பிடர்த்தலையாரும் அரசனும் சிறிது நேரம் பேசியிருந்தனர். இளைய வேந்தனும் தன் கருத்துக் களைத் தெரிவித்தான். பிடர்த்தலையார் நிமித்திகர் கூறிய வுண்மைகளை விளக்கிக் கூறினர். பின்னர் அரசன் சிறிது நேரம் எண்ணமிட்டனன்.

இளையோன்:—அரசரே, இனி என்றோ வரும் ஒரு தீமையைக் குறித்து இன்றே நாம் சிந்தித்து மனங் கலங் குவதேன்? நம் குலத் தோன்றல் மிகவும் இளம்பரு வத்தே நம் ஆதரவை இழப்பான் என்று நாம் அறிந் தோம். அரசராய்ப் பிறந்தோர் போர்க் களங்களிலே விழுப்புண் பட்டுமாயும் பேற்றைப் பெறுதல் பெருமையே யன்றோ? அவனும் சிறுவனாயிருக்கையில் நாம் இரு வரும் இறைவன் அடிநிழல் அடைய நேரிடுமாயின், நாட் டின் நிலை என்னாகும் என்று நாம் ஏன் யோசிக்க வேண் டும்? எத்தனையோ ஆயிர வாண்டுகளாக இந்நாட்டி னையும் நம் மரபினையும் காத்து வந்து நமக்கு வேண்டும் நலங்களெல்லாம் உதவிய இறைவன், இன்று எங்குற்

ருன்? நம் நாட்டிற் போர்க் களத்திலே உயிர் துறத்தற் குப் பின்னிடைவார் இலர். நம் சிறுவனைப் பற்றிய பொறுப்பெல்லாம் நிமித்திகர் குறிப்பித்த வண்ணம் ஒரு நெருங்கிய உறவினர் கையில் அமையவேண்டுவது முறை யேயாம். நான் அறிந்த மட்டில் இங்கு நம்முடனிருந்து இவ்வுண்மையை யெல்லாம் அறிந்திருக்கும் இப்புல வரைக்காட்டிலும் இவ்வரும்பணிக்குத் தகுதியுடை யார் வேறு எவரும் இல்லை. நீது வருக! நலம் வருக! யாவும் இறைவன் செயல்!

அரசன்:—நாம் அறிய வேண்டா என்று நிமித்தி கர் மறைத்த செய்தியை அறிய விரும்பியதால், இத் துணை மனக் கவலையடைய நேரிட்டது. மக்கள் எதிர் கால வினைவை அறியவேண்டாவென மறைத்து வைத்த இறைவன் திருவுள்ளக்கருத்தை யாரே யறிவார்! பிடர்த் தலைப் பெரியீர், இனி நீர் நம் குடித் தோன்றலின் வாழ் வினும் உயர்ச்சியினும் நாட்டமுடையீரா யிருந்து, இந் நாட்டுக்கு நும்மால் இயன்றது புரிவீராக.

பிடர்த்தலையார்:—அரசரே, இளங்குமரன் ஒரு வன் தோன்றியிருக்கும் இந்நாளிலே நாடெங்கும் மகிழ்ச்சி பொங்க, அரசர் மனம் எதிர்கால வுண்மையை யெண்ணிக் கவல்வதேன்? இந்நாட்டின் நலங்கருதி எது செய்ய வுரியதாயினும், என்னால் இயன்றவரை செய்தற் குத் தடையுளதோ? என் தந்தையார் என்னை நும் அர சிற்குதவியாம் பணி பூணுமாறு அமைத்த நாள் முதல், எனக்கென வொன்றுமின்றி, எல்லாம் இந்நாட்டின் பொருட்டும் நும் மரபின் நலத்தின் பொருட்டுமேயென யான் கருதி வாழ்ந்து வருகின்றேன். என் கடமையை

யான் நிறைவேற்றுவதற்கு நும் ஆணையும் பெற்ற பின்னர் யான் பின்னுறலாகுமோ? இனி நாம் இம்மங்களச் செய்தி கருதி நுங்களைக் காண வந்திருக்கும் புலவர் பலர்க்கும் பிறர்க்கும் உரிய சிறப்புக்கள் செய்தற்குரிய இட—த்துக்குச் செல்வோம்.

பின்பு அம்மூவரும் புலவோரவைக்களம் சென்றனர்.

III

சோழர் குடி விளக்கமாகப் பிறந்த இளவரசன் திருமாவளவன் என்ற பெயர் பூண்டு வளர் பிறை போல வளர்ந்து வந்தான்; ஐந்தாம் பருவம் அடைந்தான்; அறிவுடைப் பெரியார் பலர் முன்னிலையில் வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்றான். கல்விச் செல்வம் பொருட் செல்வத்தோடு பொருந்துவது பெருஞ்சிறப்பாமன்றே? இளவரசன் கலை வளர்ச்சியை இரும்பிடர்த் தலையார் நன்கு கவனித்து வந்தார். நாடெங்கும் அமைதி குடி கொண்டிருந்தது.

சேட்சென்னிக்குப் பிறகு அரசுரிமையை நாடுவோம் என்று எண்ணி மறைவில் முயன்ற பலரும் ஒன்று சேர்ந்தனர். அவருள் மிக்க வுரிமை தனக்கிருப்பதாய்க் கருதிய வொருவன் தலைமை பூண்டான். அவன் மற்றெல்லோர்க்கும் தான் அரசுரிமை பெறும்போது தக்க பதவிகள் அளிப்பதாகக் கூறி அவர்களை வசப்படுத்திக்கொண்டான்; சோழ நாட்டுக்கு அருகிலுள்ள காடுகளிலே தன் முயற்சிகளைச் செய்து பெரும்படையைத் திரட்டிப் போர் தொடங்கி வந்தான்.

இச்செய்தியை ஒற்றராலும் பிற வாயில்களாலும் அறிந்த சேட்சென்னியும் இளஞ்சேட் சென்னியும் தம் படையைத் திரட்டி, உறையூர்க்குப் புறத்தேயுள்ள

பறந்தலை யடைந்தனர். சோழர் குடி விளக்கமாகிய திரு மாவளவன், ஏழாண்டு நிரம்பப் பெறுதவனுயிருந்தானு கையால், அரண்மனை யகத்திருந்தான். அரசர் இரு வரும் போர்க்களம் செல்ல நேரிட்டதால், இளவரசன் அதிக ஆடம்பரமின்றி முடி சூட்டப் பெற்றான். இரும் பிடர்த்தலையாரும் காவற் படைஞரும் அவனுக்குதவி யாக நகரகத்தே யிருந்தனர்.

போர்க்களத்தே பகைப் படையும் நாட்டுப் படை யும் எதிர்த்து நின்று போர் தொடங்கின. பகைவன், "இளஞ்சிறுன் ஒருவன் கையில் இச்சோழர் குடிக்குரிய அரசுரிமை இருக்க விடேன்," என்ற உறுதி கொண்டு போர் புரிந்தான். அவனுக்குதவியாய் வந்தோர் பலர் இருந்தாராதலால், சோழர் இருவரும் மிக்க கடும்போர் செய்ய நேரிட்டது. சேட்சென்னி நின்ற பகுதியிலே பகைவரில் எண்ணிறந்தார் மடிந்தனர். மாலைக் காலம் குறுகியது. அவ்வமயத்திலே அற நெறிக்கு மாறுகப் பகைப்படையிலிருந்து வந்த நஞ்சூட்டிய அம்பொன்று அவன் மார்பிற்பாய்ந்தது. உடனே அவன் இறைவன் திருவருளே யெண்ணி நிலத்தே சாய்ந்தான். அருகிலிருந் தார் அவனைப் பாசறைக்கிட்டுச் செல்ல முயன்றனர். அவன் இடை வழியிலேயே விண்ணகம் புகுந்தனன். படைஞர் அவன் உடலைச் சுமந்து சென்றனர். இச் செய்தி யறியாமல், மற்றொரு புறத்தே போர் புரிந்து வெற்றி பெற்றுப் பாசறைக்குத் திரும்பிய இளஞ்சேட் சென்னி, அங்கு வந்ததும் இறைவன் அருட் செயல் இருந்தவாற்றை யறிந்து, மூத்தோனுக்கு அந்நிலையிற் செய்தற்குரிய கடனெல்லாம் செய்து முடித்தான்.

மறு நாளும் போர் நிகழ்ந்தது. இளஞ்சேட்சென்னியின் போர்த் திறத்தாற் பகைவரிற் பெரும்பாலோர் விண் புகுந்தனர். எஞ்சி நின்றோர் காட்டகத்தே புகுந்து மறைந்தனர். பெரும்படையோடு இளையோன் அவரைத் தொடர்ந்து சென்றான். காட்டகத்தே பலர் பல விடங்களிலும் மறைந்து நின்று போர் புரிந்தனர். அநேகர் அழிந்தனர். சிலர் பணிந்தனர். பகைவருட் டலைமை பூண்டோர் எவரும் வெளி வராது காட்டுள் மறைந்தனர். இத்துணை நாள் போர்க்களத்தே யிருந்தது போதும் என்று எண்ணிய இளையோன் நாடு நோக்கித் திரும்பினன்.

உடம்பெல்லாம் அம்பு பாய்ந்து புண் பட்டு வீரச் சிறப்போடு வெற்றித் திருவைப் பெற்ற இளஞ்சேட் சென்னி நாட்டகம் புகாமுன்னரே, விண்ணவர் அவனை எதிர்கொண் டழைக்கலாயினர். அதனால், மிகவும் இளம் பருவத்தே திருமாவளவன் அரசப் பொறையைத் தானே வகிக்க நேரிட்டது. தாயார் அனைவரும் தம் கணவன்மார் சென்றவழிச் செல்லக் கருதி உயிர்துறந்த துயரக் காட்சியையுங் கண்டான். அவன் உள்ளத்திலே எழுந்த உணர்ச்சி இன்னதென்று கூறக் கூடாத நிலை மையன் ஆயின்ன்.

இரும்பிடர்த் தலையார், முன்னே நிமித்திகரால் அறிந்த செய்திகள் உண்மையில் விளைந்தது கண்டு உள்ள முருகி, நாட்டுக்குக் கேடுண்டாகா வண்ணம் காவல் புரியத் தக்க படைஞரை யமைத்தனர். ஆயினும், காட்டுள் மறைந்த பகைவர்கள், அரசர் இருவரும் இறந்த செய்தி யறிந்து, பின்னும் பல உதவிப் படைக

ளைத் திரட்டிக்கொண்டு நாட்டினகத்தே வந்து, உறையூர் அரணை முற்றுகையிட்டனர். இரும்பிடர்த் தலையார் இளங்குமரனுகிய அரசனை முன்னிறுத்திப் படைஞரை யெல்லாம் அற நெறி பிழையாது போர் புரியத் தூண்டினர்.

படைஞர் தம்மால் இயன்றவளவு போர் புரிந்தனர். தக்க தலைவர் இல்லாமையால், அவர்தம் முயற்சியெல்லாம் வீணுயிற்று. ஐந்து நாட்கள் வரையிற் பெரும் போர் நிகழ்ந்தது. இறுதியிற் பகைஞர் வென்றனர். அரசுரிமையை நாடிய கொடியோன் விரைவிலே அரணுக்குட் புகுந்து அரண்மனை யடைந்து, பிடர்த்தலைப் பெரியாரையும் திருமாவளவனையும் சிறை செய்தான். நல்லோ ரெல்லாம் நாடு என்னுகுமோ என அஞ்சினர். எவரும் தராமலே, யாதோர் உரிமையும் இல்லாமலே பெற்ற அரசுரிமையை அக்கொடியோன் ஏற்றுக்கொண்டான்; பிடர்த்தலையாரை அரசாங்கத்துப் பெருஞ்சிறைக் களத்தே அடைத்து வைத்தான்; இளவரசனை அரண்மனை யகத்தே ஒரு தனியிடத்தே தக்க காவலோடு வைத்திருந்தான்.

நாடெங்கும் அரசு நிலை மாறிய செய்தி பரவத் தொடங்கியது. நல்லோர் மனம் புழுங்கினர்; தம்மனத்தி லெழுந்த கருத்துக்களை அடக்கலாற்ருது சொல்லத் தொடங்கினர். தன்னரசின் நிலைமையைப்பற்றி மக்கள் பேசுவதை யறியப் புதிய மன்னன் பல ஒற்றரையமர்த்தியிருந்தான்; அவர் தினந்தோறும் கொணரும் செய்திகளை யறிந்து மனம் புண்ணுனன். போரின் பொருட்டு நேரிட்ட செலவை யெல்லாம் நாட்டு மக்களிடம் கடுந்

தண்டம் விதித்துத் திரட்டத் தொடங்கினன். இது பற்றியும் பலர் தம் உண்மைக் கருத்துக்களை வெளியிட்டுரைத்தனர்.

புதிய அதிகாரிகள் சிலரை அவன் அமர்த்தினன்; விசாரணையும் கேள்வி முறையும் இன்றியே தன் அரசிற்குப் புறமான கருத்தையுடையாரென ஒற்றின் மூலம் அறிந்த நல்லோர் பலரையும் சிறையிட்டான். அதனால், நாட்டகத்தே புறங்கூறிப் பொய்பேசி யுயிர்வாழும் புல்லியோர் பலர் திரிதலாயினர். நல்லோர் எல்லாரும் சிறைக்களம் புகுந்தனர். உண்மை யுரைப்போர்க்கும் அறநெறி புகல்வோர்க்கும் சோழ நாட்டகத்தே இருப்பதற் கிடமில்லையாயிற்று.

அரண்மனையகத்தே சிறைப்படித்தி யிருந்த அரசிளங்கோவைப் புதிய மன்னன், நாட்டு மக்கள் எவரும் அறியா வண்ணம் ஒரு பெருஞ்சிறையிலே மறைவான தொரு கிடங்கிலே அடைத்து வைத்தான்; இரும்பிடர்த் தலையாரையும் சிறையகத்தடங்கிய பிற புலவரையும் சிறைவீடு செய்து சோழ நாட்டின் புறத்தே செல்லுமாறு ஆணை பிறப்பித்து, அனுப்பினன். இரும்பிடர்த் தலையார் பாண்டி நாடு நோக்கிச் சென்றார். அவர் எண்ணமெல்லாம், "அரசனை எவ்வாறு சிறையினின்று மீட்பது? எவ்வண்ணம் முன்போல அரசு புரியச் செய்வது?" என்பன பற்றியே யிருந்தது.

பாண்டிய மன்னர் சேர மன்னர் என்ற இருவருள் எவரேனும் சோழனுக்கு உதவியாய் நிற்க முன் வருவரோவென அறிய முயன்றனர் பிடர்த் தலையார். அவர் முயற்சி அத்திசைகளிற் பலிக்கவில்லை. அவர் பாண்டிய

நாட்டிலே சிறிது பரிசு பெற்றுச் சேர நாட்டிலே சென்று, கருவூலே தங்கியிருந்தார்; கருவூரிலே ஏழைக் குடிகள் வாழும் ஒரு சிறிய தெருவிலே பிறர் அறியா வண்ணம் மறைவாக வாழ்ந்து தம் எண்ணம் நிறைவேற வேண்டிய முயற்சிகளைச் செய்து வந்தார்.

அவர் அங்கு இவ்வாறிருக்கையில், திருமாவளவன் சிறைக்களத்தே யடங்கியிருந்தான்; பெற்றோரை யிழந்து, அரசுரிமையை யிழந்து, பெற்றோரினும் உற்றோராயிருந்த பிடர்த்தலைப் பெரியாரைப் பிரிந்து, இன்னது செய்வது என்று அறியாது மயங்கினான்; சிறைக்களத்தே சில நல்லோர் அடைபட்டிருப்பதையும் அறிந்தான். இரண்டு மூன்றாண்டுகள் சென்றன.

அரசுரிமையை மறப் போரால் தன் கைக்கொண்ட கொடுங்கோலன், நல்லோர் பலரைச் சிறைக் களத்திட்டும், சிலரை நாட்டினின்று அகலச் செய்தும், அரசிளஞ் சிங்கத்தைச் சிறை செய்தும் திருப்தி யடையாது, தன் தலைமை நிலை பெறுதற்காக ஒரு சூழ்ச்சி செய்தான்: தான் செய்திருக்கும் அதிக்கிரமச் செயல்களைக் கண்டு குடி மக்கள் எதிர்த்து நில்லாமையால், மேலும் மேலும் தான் எண்ணிய வண்ணமெல்லாம் நிறைவேற்றலாம் என்ற உறுதி கொண்டான்.

குடி மக்களுள் நல்லோர் பலர் சிறைக் களத்தே அடங்கியிருப்பினும், சிறைப் புறத்தே யிருந்தாருட் பலரும், "எப்பொழுது தக்கதியான காலம் வரும்? இந்தக் கொடியோனை எப்பொழுது எதிர்க்கலாம்?" என்றே எண்ணமிட்டிருந்தனர். இரு திறத்தாரும் ஒருவர்க்

கொருவர் மாறுபாடாகச் செய்து வரும் சூழ்ச்சிகள் மறைவிலே எவரும் அறியா வண்ணம் நடந்தன.

இளவரசன் ஒருவன் உயிரோடு இருப்பது தன் அரசாட்சிக்குப் பெருத்த இடையூறாகும் என்று அக் கொடியோன் எண்ணினான். 'இளவரசன் ஒருவன் இருந்தாலன்றே அரசுரிமையை அவனுக்குத் தரவேண்டி நன்மக்கள் என்னை எதிர்ப்பர்?' என்று தீர்மானம் செய்தான். "குடி மக்கள், தமது அன்புக்கு இடமாகிய இளவரசன் ஒருவன் இல்லாது போவானாயின், நாட்டின் அமைதியைக் குலைத்து வீணை நாட்டினை அரசின்றி யழியச் செய்யார்," என்று அவன் மனப்பால் குடித்தான்; அறத்திற்கும் உண்மைக்கும் நன்மைக்கும் மாறாகிய இத்தன்மையான பல வகை யெண்ணங்களையும் எண்ணி ஒரு முடிவு செய்தான்.

அவனை யெதிர்த்துத் தாக்கக் கருதிய குடி மக்கள் செய்த சூழ்ச்சிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. "இவன் கொடியோனாயினும், நம் இளவரசைச் சிறையகப்படுத்தியுளனாயினும், நமக்கு இப்பொழுது படைஞர் உதவியின்மையால், நாம் என்ன செய்ய இயலும்?" என்றார் ஒரு சிலர். "நல்லோர் பலரைச் சிறையிட்டானாயினும், சிலர்க்குக் கடுந்தண்டம் விதித்தானாயினும், நம்மை முன்னின்று நடத்த வரியார் ஒருவரும் இல்லாத இந்நிலையில் நாம் என் செய்வோம்?" என்றார் வேறு சிலர். "சிறையகத்தே புகுந்தார் எவர்க்கும் இவன் பெருந்துன்பம் விளைத்திருப்பதாக இதுவரை மறைச் செய்தி ஒன்றும் வெளி வராமையாலும், நம் அரசரை இவன் மரியாதையாக நடத்துவதாகவே நாம் அறிந்த சிலர்

உண்மையை யுணர்ந்து கூறுகின்றமையாலும், நாம் இப் பொழுது இவனை யெதிர்க்கத் துணிவது குற்றமே. நம் முயற்சியின் பயன் தீங்காய் முடியினும் முடியலாம்,' என்றார் மற்றும் சிலர். "சிறையகத்தே யிருக்கும் அரசர்க்கும் சான்றோர்க்கும் இவன் எத்தகைய வாழ்வு கொடுத்துள்ளான் என்பதை நாம் அறியோம். என்றேனும் பெருந்தீங்கு இயற்ற இவன் எண்ணி முயல்வதாக அறிவோமாயின், அன்று நாம் அனைவரும் ஒருங்கு சேர்ந்து இவனை எதிர்ப்போம்," என்று கூறினர் பின்னும் சிலர்.

இவ்வாறு குடி மக்களுட் பலர் தன் அரசாட்சியில் வெறுப்புக்கொண்டிருப்பதை அறிந்தும், அக்கொடுங் கோலன் அதனைப் பொருட்படுத்தாது, தன் சூழ்ச்சிகளை நடத்தி வந்தான். அரசிளஞ் சிங்கமான திருமாவளவன் அடைபட்ட சிறைக்களம், பொது மக்கள் அறியா வண்ணம் மறைவாயிருந்தது. சிறை புகுந்த நல்லோர் பலர் உரிமைகளும் உடைமைகளும் அரசினருடையவாயின. புதுமை புதுமையாகப் பல வகையான அரசிறைகள் ஏற்பட்டன. கொடுக்க வியலாதவர் எல்லாம் கடுந்தண்டம் விதிக்கப்பட்டனர்.

அவன் ஒரு நாள் தன் அரண்மனையின் தனியறையில் அமர்ந்து, "திருமாவளவன் சிறியோன்! இச் சிறிய விடலையோ என் உரிமைகளுக்கு எதிராக நிற்பவன்! இவன் வலிமை யென்னே! இவனைச் சார்ந்து நிற்கும் வீரர் வலிமை யென்னே! இவன் தந்தையும் அரசரும் என்னை யெதிர்த்து என்னயினர்? இவன் சிறைக்களத்தே யடங்கியிருப்பினும், என் மனம் அமைதி

பெறவில்லையே! இதற்கு என் செய்யலாம்? கொலையாளி களைக் கொண்டு கொல்விக்கலாம் என்றால், அச்செய்தி விரைவிலே நாடெங்கும் பரவி என் அரசாட்சிக்குத் தீங்காக முடியினும் முடியும். பலரைச் சிறைக்களப்படுத் தியதால், அவரை ஆதரிக்கும் பொறுப்பெல்லாம் அரசி னர்க்காயிற்று. நான் அவரை யாதரிக்கும்பொருட்டு அவர்தம் உடைமையெல்லாம் கைக்கொள்ள நேரிட் டது. இந்நாட்டின் வருவாய் செலவுக்கு மேல் அதிக மாக இல்லையே! எத்துணை நாட்களுக்கு நூற்றுக் கணக் காக ஒற்றரையும் பெரும்படைத் தொகையினரையும் துணையென்று நம்பியிருப்பேன்? என் மனம் என்று நிம்மதியடையும்? இத்துணைப் புகழ் படைத்த அரசுரி மையைத் தேடியும் என் மனம் கலங்கலாகுமோ? கலக்கத் துக்குக் காரணராக இருப்பவரெல்லாம் அழிந்தால், கலக் கம் தானே அழியும். பெருஞ்சிறைக்களத்தே என்னைப் பகைத்தார் பலர் புகுந்திருக்கின்றனர். இளவரசனும் பிறர் அறியாவண்ணம் அங்கேயே மறைந்திருக்கின்றான். இவரனைவரும் ஏக காலத்திலே தென்றிசை நோக்கற்கு யான் என்ன செயலாம்? எதிர்பாராவண்ணம் ஒரு நாள் இரவிலே இச்சிறைக்களத்திலே நெருப்புப் புகுமாயின், என்ன பயன் விளையும்? என் எண்ணமெல்லாம் நிறை வேறும். ஆகையால், நினைத்த வண்ணமே நிறைவேற்ற முயல்வேன். என் கருத்துக்கொப்ப நடக்கும் ஏவல ருள் ஒருவனை இப்பணியை முடிக்க அனுப்புகின்றேன்,'' என்றாலோசனை செய்து, ஒரு முடிவிற்கு வந்தான்.

இவ்வாறு முடிவு செய்த, பிறகு, அவன் தன் மனம் அமைதி பெற்றதாய் எண்ணி, அரண்மனைக்குட் சென்றான்; ஓர் ஒற்றனை யழைத்துத் தன் கருத்தைக் குறிப்பாற் கூறி, வேண்டுவன நிகழ்த்தச் செய்தான்.

IV

பெருங்காற்று வீசியது. அருகில் நிற்பாரை அறியலாகா விருள் சூழ்ந்தது. மக்களும் மாக்களும் அஞ்சி அகத்தே யடங்கும் நள்ளிரவு வந்தது. காவலரும் கள் வரு மன்றிப் பிறர் எவரும் நடமாட அஞ்சுகின்ற நடு நிசிப் பொழுதிற் காற்றின் வேகம் அளவிடற்கரிதாயிருந் தது. எவரும் எதிர் பாராத வண்ணம் அவ்வமயத் திலே அரசாங்கத்துப் பெருஞ்சிறைக்களம் தீப்பற்றி யது. அகத்தும் புறத்தும் இருந்த மரங்களெல்லாம் பற்றி யெரிந்தன. கதவுகள் தூணங்கள் உத்திரங்கள் போதிகைகள் எல்லாம் தீப்பற்றிக்கொண்டன. பெருஞ் சிறைக்களம் ஒரே தீப்பிழம்பாக ஒரு காத தூரத்துக்கு விளக்கமாகத் தெரிந்தது. அந்நெருப்பின் வேகத்தால் உண்டான தாபம் எங்கும் பரவியது.

உறக்க மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த பலரும் பதற் றத்தோ டெழுந்தனர். செய்வதறியாது மருண்டனர் சிலர். ஒருவர்மே லொருவர் மோதி, விழித்ததும் விழி யாததுமாக விழுந்தோடினர் சிலர். கச்சங்களை வரிந்து கட்டிக் குடங்களைத் தூக்கிக்கொண்டு தண்ணீர் இருக்கு மிடங்களுக்கு ஓடித் தங்கள் தங்கள் வீட்டுக் கூரைகளில் நீர் இறைத்தனர் பலர். வெகு பரபரப்பாக அயல் வீட் டுக் கூரைகளைப் பிரித்தெறிந்தார் சிலர். வேறொன்றும் செய்ய வியலாமையால், பெருங்குரலாற் பிறரை யேவிக்

கொண்டிருந்தார் சிலர். இவ்வாறு மக்கள் மயங்கும் அமயத்தே சிறைக் களத்தகத்தே பல நூற்றுக் கணக் கான நல்லோர் அடங்கி யிருந்ததைச் சிலர் அறிந்தனர். அவர் தம் மயக்கத்தை யொழித்து விரைவிலே சமயோ சிதமான முயற்சி செய்யத் தொடங்கினர்.

நெருப்பினுக் கஞ்சாத நெஞ்சுடையோர் சிலர் புறப பட்டனர்; சிறைக் களத்தைக் குறுகினர். எங்கு நோக்கி னும் நெருப்பும் நெருங்க வியலாத புகையும் நிரம்பின. இக்காட்சியைக் கண்டும் அச்சங் கொள்ளாது சிறை யகத்தே புகுந்தனர்; விரைவிலே பலரை விடுவித்தனர்; மறைவாக அமைந்த கிடங்குகளை அறியாமல் தேடிக் கொண்டிருந்தனர். இவர் உதவியின்றித் தாமாகவே பலர் வெளி வந்தனர். சுவர்களின்மேற் பாய்ந்தும், தீயிடை வீழ்ந்தும், இடிந்த கட்டடங்களில் இடறி மறிந்தும், கால்கள் ஒடிந்தும், உடம்பு எங்கும் புண் பட்டு ஓடி வந்தனர் சிலர். சிறையிருப்பாரை விடுவிக்கச் சென்ற பலரும் நெருப்பின் கொடுமையைக் கண்டு விரைவிலே எங்கெங்கும் தேடித் தாம் எதிர் பார்த்த பொருளைக் காணாது ஏமாறியவர் போல வெளியேறினர்.

இதற்குள் சிறைக்கள வாயிலிலே எண்ணிறந்தார் கூடினர். சிறையிருந்து வருவாரும் விடுவிப்பாரும் இன் னார் இன்னார் என்று அறியக் கூடாதவாறு எல்லாரும் நெருப்புப் பற்றிய ஆடைகளோடு வெளிவந்தனர். உடம் பெல்லாம் தீப்பட்டு வெளி வாயில் வரை ஓடி வந்து விழுந்து இறந்தார் பலர். இக்காட்சியைக் கண்டு பொறுத நல்லோர் பலரும், "இத்தீயெழுந்த காரணம் என்னவா யிருக்கும்?" என்று யோசிக்கலாயினர். "அரசு பூண்டு

இருக்குங் கொடியோன், நல்லோர் பலரையும் சிறை செய்ததனை டமையாது, அவர்களை நெருப்பினால் அழிக்கவும் துணிந்தான் போலும்!'' என்று கருதினர்; ''அவ்வாறு அவன் கருதியிருப்பின், அவனுக்கு நேர் பகையாய் இருப்போர் நம் இளவரசரல்லரோ? அவர் இப்பொழுது என்னவாயினரோ! அறியோம்!'' என்று எண்ணமிட்டனர். ''நம் இளவரசரும் இச்சிறைக்களத்திலேயே எங்கேனும் மறைவாக அடைக்கப்பட்டிருப்பார்,'' என்று சிலர் கூறினர். இச்சொல் செவிப்படு முன்பே, அங்கிருந்த சிலர், நெருங்கி வரும் நெருப்பை யஞ்சாது, மறு முறையும் சிறைக்களம் புகுந்தனர்; தம் உயிர் போவதாயிருக்கினும், தம் இளவரசைத் தேடிப் பெறவேண்டும் என்று முயல்வாராயினர். அவருட் பலர், திரும்ப வெளியேறவழியறியாது, இருந்த விடங்களிலே புகை சூழ்ந்துகொண்டதால், இளவரசர் பொருட்டுத் தம்முயிரைக் கொடுத்தனர். உட்புகுந்தாரில் மிகச் சிலரே வெளி வந்தனர்.

இத்துணைப் பெருங்கலக்கத்தினிடையில் திருமாவளவன்எங்கிருந்தனன்? என்னையினன்?சிறைக்களத்தே பகைவர்களை யடைக்கப்படும் ஒரு பாதாளக் கிடங்கில் இருந்தான்; எங்கும் இருளே சூழ்ந்து கிடந்த இடத்தில் திடீரென்று வெப்பமும் வெளிச்சமும் தோன்றக் கண்டான்; காரணம் அறிய வழி தேடி மேலும் கீழும் பார்த்தான்; தீப்பற்றி யெரியுங் காட்சியைக் கண்டான்; தலைக்கு மேலே பெருங்கூக்குரல் உண்டாயதைக் கேட்டான்; கட்டடங்கள் இடிந்து விழும் சத்தமும், திடுதிடு என்று பலர் ஓடும் சத்தமும் கேட்டான்; கையில்

இருந்த விலங்குகளைக் கல்லிலறைந்து தகர்த்தான். "எது வரினும் வருக," என்று மேல் நோக்கிச் சிங்கக் குருளை போல நின்றான்; தலைமேலிருந்த கட்டடம் இடிந்து விழக் கண்டான்; ஒரு புறமாக ஒதுங்கினான்; கல்லும் மண்ணும் மரங்களும் அவன் ஏறி மேற்செல்லத் தக்க படிபோல அமைந்தது உணர்ந்தான்; முன்னே என்ன இருக்கும் என்று அறியாமல் விரைந்து பாய்ந்தான்; ஓர் அடுக்கு மேலே சென்றான்; எங்கும் புகையும் நெருப்பும் சூழ்ந்து, இடை முற்றம் பாழாய்க் கிடக்கக் கண்டான். எவ்வாற்றாலேனும் வெளியேற வேண்டும் என்ற எண்ணமே முன்னின்றதால், நெருப்பையும் புகையையும் பொருட்படுத்தாது, வாயிலிருந்த திசையை நோக்கினன்; வழியோ, தடைபட்டு நெருப்பு மயமாகக் கிடக்கக் கண்டான்; முற்றத்திலே பாதி யெறிந்து கிடந்த பெருங்கட்டை யொன்றை மேன்மாடத்தை நோக்கி நிறுத்தினான்; அதன் உதவியால் மேலே ஏறினான். அவன் கால் வைத்த இடம் மேற் சென்றதும் கீழே சரிந்து விழுந்தது. மாடத்தின்மேல் எங்கும் நெருப்புக் கண்டான்; தாவித் தாவி இடை வெளிகளிற் கால் வைத்துக்கொண்டே வந்தான்; சுவரோரம் அடைந்தான். ஒரு பலகணி பற்றிப்பெரிந்து கீழே விழும் நிலையில் இருப்பது கண்டான். அதைத் தள்ளிவிட வேண்டுமென்றால், நெருங்கிச் செல்ல வேண்டும். நெருங்கிச் செல்வதாயின், நெருப்பை மிதித்தல்வேண்டும். தள்ளினால், கீழே நிற்பார்க்குத் தீங்கு நேரினும் நேரிடலாம். ஒரு கணப் பொழுது யோசித்தான்; பிறகு சிறிது பின் வாங்கி, எரிந்துகொண்டிருந்த அப்பலகணியினூடே

அம்புபோலப் பாய்ந்து, புறத்தே வீழ்ந்தான். விழுந்த இடத்திலும் நெருப்பு மிகுந்திருந்தது. வெகு விரைவிலே இவ்வாறு விழுந்தவனைக் காப்பாற்ற வேண்டுமென்று சிலர் ஓடி வந்தனர். நெருங்கினர் எவரும் அவனை இன்னான் என்று அறிந்திலர். அவன் பாய்ந்து வந்த வேகத்தில் கால்கள் கரிந்து கிடந்ததைக் கண்டனர்; மனமுருகினர். உடனே சிலர் சேர்ந்து அவனைத் தூக்கிச்சென்று அருகிலிருந்த மருத்துவரில்லம் அடைந்தனர். அவர் சுத்தமான தேங்காய் நெய்யையும் சுண்ணும்பு நீரின் தெளிவையும் கலந்து, அப்புண்ணில் தடவினர். பிறகு உடன்வந்தார் அனைவரும் பிரிந்து சென்றனர். அறநெறியில் தலைநின்ற அம்மருத்துவர், அச்சிறுவன் இன்னான் என அறியாராயினும், நன்கு மருத்துவம் செய்தனர். பிறகு எவரும் அங்கு வந்து அவனைப்பற்றி விசாரிக்கவில்லை. முழுவதும் குணமாதற்கு முன்பு இரா வேளையிலேயே, மருத்துவரிடம் விடை பெருமலே, அவன் வெளியேறினன்.

அவன், "சிறைக் களத்தே தீயிட்ட பகைஞர் இன்னும் என்னென்ன செய்வாரோ! இந்த இரண்டாண்டுகளாக நான் சிறையகம் இருந்தது போதும். இனி யெங்கேனும் சென்று மறையகத்து வாழ முயல்வேன். என் அருமை அம்மானர் இரும்பிடர்த் தலையார் எங்குற்றனரோ! அறியேன்!" என்று எண்ணமிட்டுக்கொண்டே விரைந்து நடந்தான். உடம்பிலே தீப்பட்டதால் உண்டான வருத்தத்தை மறந்து, எவரேனும் பின் தொடர்வரோ என்று பார்த்துக்கொண்டே விரைந்து நடந்தான்.

இதற்கிடையில் சிறைக் களத்தே நடந்த செய்தியைச் சிறிது கவனிப்போம்: அறிஞர் பலரும் நல்லோர்

பலரும் அங்கு வந்து கூடினர். அரச குமாரன் சிறைக் களத்தினுள் அகப்பட்டிருப்பான் என்ற உறுதியோடு தேடச் சென்றார் பலர் அடைந்த அல்லலே யறிந்தனர்; மிகவும் மனங் கவன்றனர். சூரியனும் உதித்தான். பல பக்கங்களிலும் தேடுமாறு ஆட்கள் போயினர். 'கால்கள் கரிந்த ஒரு சிறுவனே மருத்துவர் வீட்டில் விட்டோம்,' என்று சிலர் கூறினர். அது கேட்டு, அங்கு ஓடிச் சிலர் தேடினர். அங்கிருந்து அவன் இரவிலேயே வெளியேறிப் போய்விட்டான் என்ற செய்தி வெளியாயது.

'இளவரசனுகிய திருமாவளவன் அவன்றனே, வேறு யாரோ!' என்ற ஐயம் எழுந்தது. ஒவ்வொருவ ரும் தத்தம் மனத்தில் எழுந்த எண்ணங்களைக் கூறலா யினர். சிலர் கொடுங்கோலன் செய்த கொடுமைகளைக் கூறத் தொடங்கினர். சிறைக் காவலரும் பிற அரசாங்க ஏவலரும் இருந்த விடம் தெரியாமல் மறைந்தனர். சிறைக்களத்துக்கு முன்னே எண்ணிறந்த ஆடவர் கூடி னர். அவரனைவரும், "இவ்வாறு நாட்டில் வாழ்ந்த நல்லோர் பலரைச் சிறைசெய்து அரசிளங் கொழுந்தைத் தீக்கிரையாக்கிய இக்கொடியோனே இன்றே, இப்பொ ழுதே, சென்று எதிர்த்து அழிப்போம்!" என்று பேசித் தீர்மானித்தனர்.

உடனே, எவரும் எதிர் பாரா வண்ணமாக அரண் மனையை நோக்கிப் பல்லாயிர ஆண் மக்கள் நிரம்பிய பெருங்கூட்டம் ஒன்று புறப்பட்டது. அவருள் வாய் வன்மைபடைத்தோரெல்லாம், "எங்கே அக்கொடியோன்? எம் அரசைக் கைக்கொண்டு நல்லோரையெல்லாம் சிறை செய்த அந்நரகன் எங்கு ஒளித்தான்? இளவரசைச்

சிறையிட்ட திருவிலி எங்குற்றான்? திருமாவளவனை எரி வாய் மடுப்பித்த தீயோன் எங்குளன்?'' என்று கூக்குர லிட்டுக்கொண்டு சென்றனர்.

அரண்மனைக் காவலர் எல்லாம், இக்கூட்டத்தின் வருகையைக் கண்டு, இருந்தவிடம் தெரியாமல் ஒளித் தனர். படைஞரை முறையே நிறுத்தி எதிர்த்து வரத் தக்க ஆண்மை படைத்தார் எவரும் முன் வந்திலர். அரண்மனையகத்தும் புறத்தும் ஆத்திரம் மிக்க ஆடவர் சூழ்ந்தனர். சிறினர் சிலர்; பாய்ந்தனர் சிலர்; அரசிளஞ் சிங்கத்தின் கதியை நினைந்து கலங்கிக் கண்ணீர் வெள் ளம் பெருக்கினர் சிலர். ''எம் நாட்டின் அரசினையழித்த இப்புல்லியோனை இன்று விண்ணுலகேற்றுது மீளோம்!'' என்று வஞ்சினங் கூறினர் சிலர்.

இக்காட்சியைக் கண்டு உள்ளிருந்த கொடுங் கோலன், சேவகன்போல மாறு வேடம் பூண்டு, வெளி யேறிப் பின் புற மதில்மேற் பாய்ந்து, காட்டக மடைந் தனன். அரண்மனை யெங்கும் தேடிப் பார்த்தும் அக் கொடியோனைக் காணுத நாட்டு மாந்தர், மிகவும் மனம் புண் பட்டு, ''இனி என் செய்வது!'' என்று யோசிக்கத் தொடங்கினர்.

அறிவிலும் ஆண்டிலும் முதியோர் ஒருவர், அவர் களை யெல்லாம் ஒருவாறமைதி பெறச் செய்து, ''அன் புடைய நன் மக்களே, இந்நாள் வரையில் நம் நாட்டுச் சரித்திரத்திலே கேளாத செய்தி இன்று இங்கே நடந் திருக்கிறது. நாம் இதைச் சிறிது பொறுமையோடு கவ னிக்க வேண்டும். இதுவரையில் நம் மனத்தில் எழுந்த ஆத்திரத்தால் நாம் செய்த காரியங்களின் குண குற்றங்

களைப்பற்றி ஆராயவேண்டா. இப்பொழுது நாம் இருக்கும் நிலையென்ன? இனி நமக்கு வரும் நிலையென்ன? இவற்றை ஆராய்வோம். நண்பர்களே, நான் சொல்வதை நம்புவீர்களாயின், இப்பொழுது நம் நாட்டில் உண்மையில் அரசன் ஒருவன் இல்லையென்று கூறுவேன். நம் அரசர், சோழர் குடித்தோன்றல், திருமாவளவர் எங்கிருக்கின்றார்? என்னவாயினர்? அவர் நிலையினை நாம் அறியோம். கொடுங்கோலனே யாயினும், சென்ற இரண்டு வருஷ காலமாக இங்கு இருந்து அரசு செலுத்தியிருந்த கொடுங்கோலன், இன்று நம் கிளர்ச்சியைக் கண்டு அஞ்சியொளித்தான். குடிகள் மனம்கோணவண்ணம் அரசு புரிய அறியாதவர் கதி இதுவேயாகும் என்பதைப் பிரத்தியக்ஷமாக அறிந்தோம். நாம் இனிச் செய்தற்குரியதென்ன? நம் இளவரசர் உயிரோடு இவ்வமயத்தே இன்ன இடத்தே இருக்கின்றார் என்பது நம்மால் அறியக் கூடுமாயின், நாம் என்ன செய்வோம் என்பதில் எவர்க்கும் அபிப்பிராய பேதமில்லை. நாம் ஒரு கணப் பொழுதேனும் அரசின்றியிருந்தோம் என்ற பழி பூணலாகாது. இப்பொழுது நம் நாட்டுக்கு ஒரு தலைவன் ஏற்படல் வேண்டும். மனித முயற்சி நாம் என்னென்ன செய்யலாமோ, அவையெல்லாம் செய்து பார்த்தோம். எனினும், நம் இளவரசரைக் காண்டற் கியலவில்லை. சிறைக் களத்திருந்து எடுத்த பிணக் குவியல்களினிடையே நம் அரசர் பிரான் உடல் போன்ற குறிகளையுடைய தொன்றும் அகப்படவில்லை. அவர் எங்கேனும் அயல் நாடுகளிற் சென்று மறைந்திருப்பினும், இருக்கலாம். நாம் இனி

வேறு எவரையும் இவ்வரசுரிமைக்கு முயற்சி செய்ய விடலாகாது. தெய்வத் திருவருளால் நம்மை யாள்வதற்கு எவர் வருவாரோ, அவரையே அரசராகக் கொள்வோம். தெய்வத் திருவருளை உணர்தற்கு ஒரு வழியுளது: அது நம் முன்னோர் இத்தன்மையான காலங்களிற் கைக் கொண்ட நெறியேயாகும். நம் அரசினர்க்குரிய களிற் றரசை அலங்கரித்து அதன் கையிலே ஒரு பொற்குடத் திற் காவிரி நீரும் பூமாலை யொன்றும் தந்து அனுப்பு வோம். அது யாரைத் தன் பிடர்மீது சுமந்து இங்குக் கொணர்கிறதோ, அவரையே நம் அரசராகக் கொள் வோம். இதுதான் இந்நிலைமையில் நாம் செய்தற்குரிய தாகும்,'' என்றனர்.

இதனை அமைதியோடு கேட்டிருந்தோர் எல்லோ ரும் இறுதியில் ஒரே மனமாய், "அவ்வண்ணமே செய் வோம்,'' என்றனர். பெரியோர் கூறிய வண்ணம் நிறை வேற்ற நல்லோர் பலர் முதல் விழி நாட்டத் திறையோன் வாழும் கழுமல முதுபதி யடைந்தனர்; அரசுவாவை அலங்கரித்தனர். இறைவனுக்குச் சிறப்புக்கள் செய் வித்து, அவன் அருள் பெற்று, அக்களிற்றரசின் கையில் ஒரு பொற்குடம் நிறையக் காவிரி நீரும் மணமலர் மாலை யொன்றும் தந்து, மங்களகரமான வாத்திய முழக்கங் களுக்கிடையே அனுப்பினர்.

அது விரைந்து நடந்து, சோழ நாட்டி லெங்கும் சஞ்சரித்து, இடர்ப்படாமல் குறிப்பிட்டவொரு பொரு ளைப் பெறக் கருதி அஃது இருக்குமிடம் நன்கறிந்து செல்லும் அறிவுடை யொருவன் போல, வேகமாக நடந்து சென்றது; சோழநாட் டெல்லையை விரைவிலே

கடந்து, சேர நாட்டை அடைந்தது ; சேர நாட்டகத்த தாகிய கருவூரை நெருங்கி வந்துகொண்டிருந்தது. இறைவன் திருவருட் செயலை எவரே யறிவார்! சிறிது தூரம் அதனைப் பின்பற்றி வந்த மாந்தரனைவரும், அது வரும் வேகத்தைக் கண்டு உடன் தொடர்ந்து வர வில்லாது, பின்னிடைந்தனர். மிருகமே யாயினும், இறைவன் அருள் வசத்தால் எண்ணிறந்த மக்களுடைய நல் நோக்கம் ஒன்றை நிறைவேற்ற உற்ற துணையாய் அமைந்த அவ்வேழம், கருவூர்ப் புற மதிலை யடைந்தது.

V

" உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா :
குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்."

—நறுந்தொகை

இளமைப் பருவத்தே முடி சூட்டப் பெற்ற திருமாவளவன், இறைவன் அருள் வசத்தாலும் முன்னை வினைப் பயனாலும் அரசுரிமையை யிழந்தது மாத்திரமன்றிச் சிறைக் களத்திலும் புகுந்து இரண்டாண்டுகள் வாழ்ந்து, பின்னர்ச் சிறைக்களம் நெருப்பினுள் மூழ்கிய காலையில் எவரும் அறியாமற் கரிகாலனாகி, வெளியேறினன். அவன் கருவூர் நோக்கி நடந்து வந்தான். இறைவனருள் அவனை அங்கு அழைத்து வந்தது. அவன் அப்பொழுது அரண் வாயிற்கருகிலே மனத் தளர்ச்சியோடு மெல்ல நடந்து வந்த இரும்பிடர்த் தலையாரைக் கண்டான். அவரும் இழந்த பொருளைப் பெறுவார் பெற்ற ஆனந்த மெய்தியவரானார்.

பிடர்த் தலையார், தாம் இருக்குமிடம் புற நாட்டகத்ததென அறிவராகையால், தம்முடைய மனவெழுச்சியாற் பேசும் சொற்கள் மூலம் பிறர் அவ்விளவல் இன்னான் என்று அறிதல் தீதாக முடியும் என்று எண்ணித் தம்மை யடக்கி, அவனை மார்புறத் தழுவி, விரைவாக அழைத்துக்கொண்டு, தாம் வாழ்ந்திருந்த சிறியதொரு

மணையகம் சேர்ந்தார். அங்கு அடைந்ததும், வாயிற் கதவங்களைத் தாழ் கோத்து, அகத்தே புகுந்து, வளவர் குலத்தோன்றலை ஒரு சிறிய மணையில் அமர்த்தித் தாம் அருகில் இருந்து, அவனை நன்கு கவனித்து, ஆபாத சூடம் நோக்கினர்; பின்னர் மனமுருகி, " தூங்கெயில் எறிந்த தொடித்தோட்செம்பியன் குல விளக்காகிய கொற்றக் குமர, சென்னியர் தோன்றல், திருமாவளவ, என் உயிரினும் இனிய இளஞ்சேட் சென்னியின் இளமைந்த, நின்னை யான் இவ்வழியில் இந்நிலையிற் காண்பதற்கோ பிறந்தேன்! நின் தந்தையாரிடம் யான் கொடுத்திருந்த உறுதியுறைகள் வெற்றுரைகளாயினவே! நினக்கு முடி சூட்டி மகிழ்ந்த என் கண்கள் இக்காட்சியைக் காணவும் வலிபடைத்துளவே! என் வாய் மொழியை நிறைவேற்ற யான் என் செய்வேன்! எவரை யடைவேன்! பாண்டியரும் சேரரும் நின் தாழ் நீலை கண்டு மகிழ்கின்றார் என்றே எண்ணுகிறேன். நின் பொருட்டு உதவியாக நின்று அறப் போர் புரிய அவர்க்கு மனமில்லை. இதுவும் இறைவன் செயல்! நாம் இருவரும் ஓர் இடத்திற் சேர்ந்திருப்பதை நம் பகைஞர் காண்பராயின், நமக்கு இன்னும் என்னென்ன தீங்கு இழைப்பரோ? என்னை இக்கோலமே! இஃது யார் செயல்? நின் கால்கள் கரிந்திருக்கின்றனவே! இதற்குக் காரணம் என்னை? சிறைக்கள வாழ்வின் சிறுமை பற்றுதென அக்கொடியோன் நின்னைத் தீவாய்ப் படுக்கவும் துணிந்தனனே? என்னை அவன் துணிவு! என்னை அவன் மனவுறுதி! என்னை அவன் வயிரம்! அந்தோ! என் மனம் பதைக்கின்றதே! நினக்கு இத்தீங்கு செய்த கொடியோன் எவனை யாயி

னும், அவன் நிலத்தில் உயிரோடு வாழும் அளவும் என் மனம் அமைதி பெறுது,'' என வருந்திக் கூறினர்.

இது கேட்ட திருமாவளவன், "என் அருமை அம்மானீரே, நீர் இருக்க எனக்கு இனி என்ன குறையுளது? எனக்கு இதுவரையில் நேர்ந்த தீங்குகள் ஒரு புறம் இருக்க இனி நாம் செய்ய வேண்டுவதைப்பற்றியே இப்பொழுது ஆலோசித்தல் வேண்டும். ஏனெனில், நாம் இருப்பதோ, அயலவர் நாடு. நாமோ, ஏதிலராய் ஆதுலராய் இங்கு மறைவில் வாழ வந்துளோம். எந்த வேளையில் எவன் என்ன செய்வனே! ஆகையால், நாம் இங்கு மறை வாழ்விலும் வெகு ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்,'' என்று கூறிச் சிறிது யோசனையிலிருந்தான்.

அமைச்சப் புலவர், அவன் கரிகாலனுகிய காரணத்தை விசாரித்தறிந்தார்; பிறகு எல்லாம் இறைவன் செயல் என்று அமைந்தார். இனி விரைவிலே வளவன் நல்வாழ்வு பெறுவான் என்று அறிவராகையால், எதிர் கால நிலையைப்பற்றி அவனிடம் ஒன்றும் கூறுமலே, அக்காலம் உள்ள நிலையைப்பற்றிப் பேசியிருந்தார். பிறகு இருவரும் அருகிலிருந்த நீர் நிலை யொன்றிலே நீராடி இறைவனைத் தொழுது போற்றி, உண்டி யருந்தினர். வளவன் நடந்து வந்த சிரமம் பரிகாரமாகும்படி அம்மனையகத்தே ஒரு புறமாகப் படுத்திருந்தான். பிடர்த்தலையார், 'இனி யென் செய்வது?' என்று எண்ணமிட்டிருந்தார்.

அங்ஙனமிருக்கையில், வாயிலிலே பெருத்த முழக்கம் ஒன்று கேட்டார்; அம்முழக்கத்தின் காரணத்தை

யறிய வாயிற்புறம் நோக்கினர்; சோழ நாட்டுக்களிற்றரசு பொற்குடமும் பூமாலையுங் கொண்டு நிற்கக் கண்டார்; உண்மையை ஒருவாறு ஊகித்துணர்ந்து, மனையகம் நோக்கினர். இதற்குள்ளே முழக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்ட வளவன் வாயிற் புறம் வந்தான். வாயிலிலே பெருங்கூட்டமாக நின்ற மாந்தர் பலர் கண்டு அதிசயிக்க, அங்கு அவ்வேழம் வளவன் முடியிலே பொற்குட நீரை அபிஷேகம் செய்து, அவன் கழுத்திலே தான் கொணர்ந்த மாலையைச் சூட்டியது. விண்ணவரும் மண்ணவரும் வியப்பெய்த நிகழ்ந்த இத்தெய்விகச் செயலைக் கண்ட பிடர்த்தலையார், ஆனந்த மேலீட்டால், தம்மை மறந்தவரானர்.

ஒரு கணப் பொழுதிலே வளவர் பிரான் ஆடை மாற்றி நின்றனன். உடனே அவனை அவ்வரசுவா தன் கையால் தூக்கிப் பிடரகத்து வைத்துக்கொண்டு விரைந்து சென்றது. அஃது இன்னது செய்யும் என்பதை எதிர் பார்த்திருந்த பிடர்த் தலையார் உடனே புறப்பட்டார்; உறையூர் நோக்கி விரைந்து சென்றார். வேழ வேந்து வளவர் வேந்தைக் கழுமலத் திருக்கோயிலுக்குச் சுமந்து சென்று, அங்கே ஆவலோடு எதிர் பார்த்திருந்த பலர் முன்னிலையில் இறக்கியது. மங்கள வாத்திய முழக்கம் மிருந்தது. அங்கு நின்ற சான்றோ ரெல்லாம் தம் அரசர் குடியின் தவப்பேறுகப் பிறந்த செல்வனே தெய்வத் திருவருளால் தமக்கு அரசனுக வாய்த்தது கண்டு, பேரின்பம் எய்தினர்; அக்களிற்றை முன்னே நடத்தி அரசனை மனமார வாழ்த்திக்கொண்டு, உறையூர் நோக்கி நடந்தனர். இரண்டு தினங்களில் அனைவரும் உறையூர்

வந்து சேர்ந்தனர். பிடர்த்தலைப் பெரியாரும் இதற்கு முன்பாக அங்கு வந்து சேர்ந்து, அரசனை யெதிர்கொள் வாரில் முதல்வராய் முன் வந்து நின்றார்.

நகரெங்கும் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மாந்தரனைவரும் புதிய ஆடைகள் புனைந்து, தம் மன்னர் பெருமானைக் காண விரைந்து வந்தனர். இளைஞனே யாயினும், பிறந்தகுடிப் பெருமையை வளர்த்தற்குரிய குணங்களெல்லாம் பொருந்தியிருந்த திருமாவளவன், தெய்வச் செயலால் தன்னைத் தேடிக்கொணர்ந்த அரசுவாவின்மீது பொன் மணியிட்டமர்ந்து, நகர் வலஞ் செய்து, அரண்மனைக்குட் புகுந்தான். அன்றே நன்னாளெனக்கொண்டு, பெரியோர் பலர் குழுமியிருந்து, அவனுக்கு மறு முறையும் முடி சூட்டி, நாட்டு மக்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி விளைவித்தனர்.

முடி சூட்டு மங்கலம் நிகழ்ந்த பின்னர், ஆத்தான மண்டபம் அடைந்து, தெய்வங்களைத் தொழுது, பெரியோர் ஆசி பெற்ற வளவர் பிரான், அங்குக் கூடியிருந்தோரைப் பார்த்துப் பின் வருமாறு பேசினன்:

"அன்புடைய நல்லோர்களே, வாழ்வும் தாழ்வும் உலகில் எவர்க்கும் உள்ளனவே. இந்த இரண்டாண்டுகளாக நும் போன்ற நல்லோர் பலர் சிறைக் கள்த்தே அகப்பட்டு அடைந்த இன்னல்களை யான் சிறிதளவு அறிவேன். இந்த அரசவுரிமையிலே ஆசை கொண்ட சிலர் எனக்கிழைத்த தீங்குகள் மிகச் சிலவே; நுமக்கு இழைத்த கொடுமைகள் மிகப் பல. கடுமையான அரசிறைகள் விதித்ததும், கொடுக்க வியலாதவரைத் தண்டித்ததும், யான் அறிந்தேன். உண்மை பேசுவார்க்குப்

புற நாட்டு வாழ்வும் அக நாட்டுச் சிறை வாழ்வும் கிடைத்ததை யான் அறிவேன். இறைவன் அருள் நமக்கு இன்பமும் துன்பமும் தருவதாம். அறிஞர்க ளாகிய நமக்கு நான் அதிகம் கூற வேண்டுவதில்லை. இனிச் செய்தற்குரியவற்றைப் பற்றியே எண்ண வேண் டும். எக்காரணத்தாலேனும் இந்த இரண்டாண்டுகளாக நம் குடி மக்கள் பொருள்களிலும் உடைமைகளிலும் எவையேனும் அரசாங்கத்துக்குப் பறிமுதல் செய்யப் பட்டிருப்பின், இனி அவை முன்னே எவர்க்கு உரி மையோ, அவரிடம் கிரமமாகப் போய்ச் சேருமாறு வேண்டுவன செய்கின்றேன். நமக்கு மனக் குறைகள் எவையேனும் இருப்பின், அவற்றை நம் நாட்டு அமைச் சர் மூலமும் நேராகவும் எப்பொழுது வேண்டுமென் றாலும் என்னிடம் தெரிவித்துக்கொள்ளலாம். நீவிர் அனைவீரும் நும் மன யகங்களை யகன்று சென்ற சில நாட்களாக மிக்க சிரமப்பட்டிருக்கிறீர்கள். ஆகை யால், இனி விரைவில் நும் உரிமைகளைப் பெற்று இன் புற்று வாழுமாறு வேண்டும் முயற்சிகளைச் செய்ய முற் படவேண்டும். நம் நாடு இவ்வளவு துன்பங்களையும் அடையக் காரணமாயிருந்தவன் இன்னும் காட்டகத்தே யொளித்திருக்கின்றான். அவனும் அவனுக்கு உதவி யாய் இருப்போரும் எத்துணையரோ, நாம் அறி யோம். நம் நாட்டினும் அரசினும் உண்மையான அன்பு உடையார் பலர் இனி நாட்டின் வாழ்வு சீர்திருத்தம் பெறும் பொருட்டாக முயற்சி செய்ய முன்வர வேண்டி யிருக்கிறது. படைஞர் பலரைச் சேர்க்க வேண்டும். படைப் பயிற்சி நன்கு செய்விக்கப் பெறுதலும் வேண்

டும். பகைஞர் எவர் வரினும், நாட்டவர் எவரும் தம் மீன வாழ்வைப் போற்றும் பொருட்டும் நாட்டின் பெருமை அழியாது நிலை நாட்டும் பொருட்டும் முன்னின்று போர் புரிதல் வேண்டும். வலிய வந்த பகையை நாம் அடக்கவும் அழிக்கவும் வகை யறியாது அமைதியாய் இருப்போமாயின், இன்னும் பெருங்கேடு வரினும் வரும். ஆகையால், இந்த அரசுரிமையைப் பெறுதற்கு எனக்கு உதவியாய் இருந்த தெய்வத் திருவருள் இதனை நான் உறுதியாய்க் காப்பாற்றிக்கொள்ளவும் உதவியாய் நிற்குமென்றே நம்பி, நல்லோராகிய நும் துணையால் பகைவரை அழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறேன். என் அருமை அம்மானாராகிய இரும்பிடர்த் தலையார் இனி எனக்கு அமைச்சராய் இருந்து வேண்டுவன செய்வார். நும்மால் இயன்ற நலங்களையும் எப்பொழுதும் எதிர் பார்த்தே யிருக்கிறேன்.''

பின்பு இரும்பிடர்த் தலையார் எழுந்து, சிறிது நேரம் பேசினர். இறுதியில் அரசனை எல்லாரும் மனமார வாழ்த்தி, விடை பெற்றுச் சென்றனர்.

சோழ நாடு அமைதி பெற்றது. அரச முறையும், இளைஞன் தோளிற் சார்ந்திருப்பினும், நன்கு நடந்து வந்தது. அரசன் ஆண்டில் இளையனாயினும், 'அறிவினில் முதியவன் என்ற புகழ் நாடெங்கும் பரவியது. முன்பு சோழ நாட்டை வலிந்து கைக்கொண்டு அரசு புரிந்து குடிகள் எழுச்சியாற் காட்டுள் மறைந்த குலப் பகைஞன், மறுமுறையும் அரசுரிமை பெறச் சூழ்ச்சிகள் செய்தனன். அவன் சூழ்ச்சிக்கு உதவியாய் நாட்டகத் திருந்த பலர் அரசவொற்றரால் அறியப்பட்டுத் தகுந்த

வாறு அடக்கப்பட்டனர். ஆயினும், அரசாங்க அதிகாரிகள் ஆராய்ச்சிக்குப் புலப்படாமற் சிலர் மறைந்திருந்து, தம் சூழ்ச்சிகளைச் செய்து வந்தனர்.

திருமாவளவன் காட்டிலே சென்று அப்பகைவனைப் போர் புரிந்து அழிக்கத் துணிந்திலன்; "அவன் தானே வெளியே வரும்போது பார்ப்போம்," என்றிருந்தான். அதுவே பொருத்தம் என்று அமைச்சருங் கூறினர். சிறிது சிறிதாகப் படைகள் திரட்டி இரண்டு மூன்றாண்டுகளிற் பகைவன் எதிர்க்கத் துணிந்தனன். இதற்குள் சோழ நாட்டுப் படை முன்னிருந்ததைப் போலப் பன்மடங்கு பெருகி மிக்க பயிற்சியும் பெற்றிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தும், அதனைப் பொருட்படுத்தாது போர்க்குத் துணிந்து வந்தான். சேரமன்னரும் பாண்டிய வேந்தரும் அவனுக்குத் துணை புரிய விரும்பித் தத்தம் படைஞருட் பெரும்பகுதியாளரை அனுப்பினர்.

தன் வலிமை மிகுந்ததாய் எண்ணிய அப்புல்லியோன், உறையூரை முற்றுகையிட்டான். இதனை எதிர் பார்த்திருந்த அக நாட்டவர், தம் உரிமைகளையும் உடைமைகளையும் காத்துக்கொள்ளும்பொருட்டுப் போர் புரிய முன் வந்தனர். கரிகாலனாகிய திருமாவளவனே முன்னின்று படைஞரை நடத்தினன். எளிதிலே நாட்டைக் கைக்கொள்ளலாம் என்று பெரும்படையோடு வந்த பகைவன், முன்னே என்றும் புரிந்திராத பெரும்போர் செய்ய நேரிட்டது. ஏழு நாட்கள் போர்நிகழ்ந்தது. இறுதியிற் பகைவர் படை பின் வாங்கலாயிற்று. உதவியாய் வந்த படைஞர் தத்தம் நாடு நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இவ்வளவு கொடுமைக்கும்காரணனுயிருந்த சோழர்குலப் பகைஞன், மண் வாழ்வு இழந்து விண் வாழ்வுபெற்றான். அவனுக்கு உதவியாய் நின்றோரிற் பலர் மடிந்தனர். எஞ்சி நின்ற சிலர் சிறைப்பட்டனர்.போர்நிறைவேறியது.

நாட்டு மாந்தர், மகிழ்ச்சி மீதூரப் பெற்று, மனமார வாழ்த்தித் தம் அரசர் பிரானே வரவேற்று, அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். பாணர் கூத்தர் விறலியர் முதலிய பலரும் வந்து, தத்தமக்கேற்ற சிறப்புக்கள் பெற்றுச் சென்றனர். புலவர் பலர் மனமகிழ்ச்சியோடு வந்து வேந்திளஞ் சிங்கத்தைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றனர். இருப்பிடர்த் தலையார் தாம் எண்ணியஎண்ணம் இன்றே நிறைவேறியது என்று எண்ணி, நகரகத்துள்ள திருக்கோயில்களிலெல்லாம் சிறப்பாகப் பூசனைகள் நிகழ்த்தி, விழாக் கொண்டாடினர்; ஏழை மாந்தர்க்கெல்லாம் உண்டியும் உடையும் நல்குவித்தனர். முடி சூட்டித் திருவிழாவன்று நிகழ்ந்த சிறப்புக்களைக் காட்டிலும் நாடெங்கும் இன்று விசேஷமாகவே உற்சவங்கள் நடந்தன. துன்பமுற்றவர்க்கலால் இன்பமில்லையன்றே?

VI

"உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் : குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்." —பழமொழி

இவ்வாறு கரிகாலன் இரண்டாம் முறையாக அரசு தாங்கி ஆட்சி புரிந்து வருகையில், ஒரு நாள் அரண்மனையிலே தனியறையொன்றிலே அறநூல்களை ஆராய்ந்து கொண்டிருந்தான். இரும்பிடர்த் தலையாரை அமைச்சராகவும் ஆசிரியராகவும் அம்மானாராகவும் பெற்ற வளவர் குலத் தோன்றல், நூலாராய்ச்சியின்றி கணப் பொழுதேனும் வறிது போக்குவனே? இன்னும் அரசப் பொறை தாங்கத்தக்க வயதேனும் உலக அனுபவமேனும் பெறுதவனு யிருப்பினும், 'மகனறிவு தந்தை யறிவு' என்ற முதுமொழி பொய்படா வண்ணம், நல்லோர் பலர் சேர்க்கையும் அமைச்சர் ஆலோசனைப் பயனும் சூழ்ச்சித் திறனும் உதவியாகப் பெற்று, நாட்டிற்கு நலம் புரியும் முயற்சியில் முன்னின்றனன்.

புத்தக சாலையை யடுத்ததோர் அறையில் அவன் அமர்ந்திருந்து, அறிஞர் உதவி கொண்டு அறிந்த பொருள்களை ஆராய்ந்து தெளிய முயன்றனன். அவ்வமயத்தில் முதியவர் இருவர் ஒரு வழக்கின்பொருட்டு அரசனைக்

காண எண்ணி அங்கடைந்தனர். அரசாட்சியிற் சமீப காலத்தில் ஏற்பட்ட மாறுபாடுகளை அவர்கள் அறிந்திலா மையால், பண்டு ஒரு கால் தாம் கண்டிருந்த அரசனே அன்றும் இருப்பன் என எண்ணியிருந்தனர். அவ் விருவரும் வாயில் காவலரால் அரசனருகில் அழைத் துச் செல்லப்பட்டனர். காவலர் வெளி வந்தனர். முதி யவர் இருவரும் ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்த இளைஞனாகிய அரசனைக் கண்டனர். கண்டதும் அவனை நெருங்கி ஒன்றும் கூறாது திரும்பப் புறப்பட் டனர்.

கரிகாலன் அவர்களை நோக்கிச் சட்டென்று திரும் பிக் கையமைத்து, "ஐயன்மீர், நீவிர் இங்குவரக் காரணம் என்ன? வந்து ஒன்றும் கூறாது திரும்பத் துணிந்த தேன்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! உங்கள் உள்ளத்தில் உள்ள உண்மையை ஒளியாது கூற வேண்டு கிறேன்," என்று இன் முகத்தோடு கூறினன்.

முதன் முதியவர்:—ஐயா, யாம் ஒரு பெரிய வழக் கின்பொருட்டு அரசரைக் காண வந்தோம். அவ்வழக் கின் நுட்பங்களை நன்கு ஆராய்ந்து முடிவு கூறுதல் அற நூல்களைத் தீரத் தெளிந்த சான்றோர்க்கே இயல்வதாம். இளைஞர் அதன் உண்மையை அறிந்துகொள்ளுதல் எளிதன்று. நம் நாட்டகத்தில் அற நிலைக் களத்தார் ஆங்காங்கு நன்கு ஆராய்ந்து வழக்குத் தீர்ப்பாராயினும் அரிய நுட்பமான வழக்குகளின்பொருட்டு அரசரிடம் வருவது எமது வழக்கமாம். இன்று யாம் அரசரைக் காணவேண்டும் என்ற போது, வாயில் காவலர் எம்மை இங்கு நும்மிடம் அழைத்து வந்தனர். இந்நாட்டை

இப்பொழுது ஆண்டு வரும் அரசர் ஓர் இளைஞர் என் பதை யாம் அறியோம். அறிந்திருந்தால், இவ்வழக்கின் பொருட்டு இங்கே வந்திரோம். வந்த பின்பே உண்மை நிலை யுணர்ந்ததாற் பேசிப் பயனில்லை யென்று பின்னி டைந்தோம்.

இரண்டாம் முதியவர்:—இனி யாம் விடை பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

கரிகாலன்:—ஐயன்மீர், நீவிர் வந்த காரியம் நிறை வேறுமேல் விடை பெற்றுக்கொள்ள எண்ணுவது பொருத்தமாமோ? வாயில் காவலர் தும்மை என்னிடம் நேரில் அழைத்து வந்தது ஒரு வகையிற் குற்றமே. தற் காலம் இந்நாட்டின் அரசுரிமை வகிப்பவர் மிகவும் முதி யவர்; நும் கருத்துக்கிணங்க நூற் பயிற்சியும் அனுபவ மும் படைத்தவர். அவர் தாமே நேரிற் பார்த்தற்குரிய பொறுப்பான காரியங்களைத் தவிர மற்றவற்றை யெல் லாம் கவனித்துக்கொள்ளுமாறு என்னை நியமித்திருக் கிறார். வாயில் காவலர் நீவிர் வந்த காரணத்தை அறியா மையால், தும்மை என்னிடம் அழைத்து வந்தனர். சோழ நாட்டிலே அரண்மனை வாயில் வரை வந்து நியாயம் பெறுது சென்றவரைப்பற்றி இதற்கு முன்பு என்ற வது நீவிர் கேட்டதுண்டா? பசுவின் கன்றிற்பொருட் டுத் தன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்த மனுச் சோழன் தோன்றிய குலத்திலே அக்குறை உண்டாகுமோ? ஆகை யால், பெரியீர்காள், சற்றுப் பொறுங்கள். நானே நேரிற் சென்று அரசரை நியாய சபைக்கு அழைத்து வரு கின்றேன். இங்கிருந்து வலப் புறமாகச் சிறிது தூரம் சென்றால், நியாய சபை இருப்பது தோன்றும். தும்மை

அங்கு அழைத்து வரக் காவலரை அனுப்புகின்றேன். சிறிது நேரம் இங்கேதானே இருங்கள்.

இவ்வாறு கூறிவிட்டுக் கரிகாலன் வெளியே சென்று, நரைத்த தலையும் தாடியும் உடைய ஒரு முதிய அரசன் போல வேடம் பூண்டு, நியாய சபையில் உன்னதமான பீடத்தின்மீது அமர்ந்து, வாயில் காவலரை அனுப்பி, முதியவர் இருவரையும் அங்கு வருவித்தான். அவர்கள் நியாய சபைக்கு வந்தார்கள்; தாங்கள் எதிர்பார்த்த வண்ணம் நரைத்துப் பழுத்த முதியவனுகிய அரசனைக் கண்டார்கள்; அருகில் நின்றிருந்த காவலராலும் குடை கொடி முதலிய சின்னங்களாலும் அவனே அரசன் என்று துணிந்து முக மலர்ச்சி பெற்றார்கள்.

கரிகாலன்:—ஐயன்மீர், நமது பிரதிநிதியாகிய இளவரசர் நீவிர் அறியதொரு வழக்குக் கொணர்ந்திருப்பதாய்க் கூறினர். அவ்வழக்கு இன்னதெனக் கூறின், எம்மால் இயன்ற வளவு முடிவு கூறுகிறேம். அறநூல்கள் உயர்ந்தோர் தாழ்ந்தோர், உறவினர் அயலவர், கற்றவர் கல்லார், வறியவர் எளியவர், முதியவர் இளையவர் முதலிய வேறுபாடுகள் கருதாமலே முடிவுகூறுமாறு அறிதியிட்டிருக்கின்றன. இவ்வுண்மை நீவிர் அறியாததன்று. இனி நீவிர் நும் வழக்கை மனவமைதியோடு கூற்லாம்.

முதன் முதியவர்:—ஐயன்மீர், அரசர்பெருமானே, நான் கொணர்ந்திருக்கும் வழக்கிலே எதிர்வாதம் செய்ய வந்திருப்பவர் என் உடன் பிறந்த இளைய சகோதரர் ஆவார். எங்கள் இருவர்க்கும் முன்னோர் வைத்த பொருள் மிகக் குறைவே. அவை நிலம்புலங்களாகவும் சிறிதளவு பிற பொருளாகவும் உள்ளன. எம் முன்னோர்

எமக்கென வைத்த 'இரத்தின முடிச்சு' என்ற பூர்விக முதல் ஒன்று உண்டு. அஃது இப்பொழுது இவரிடமே உள்ளது. அதனை வைத்துக்கொண்டு இவர் இங்கு அமைதியாய் வாழ்ந்து வருகின்றார். நான் கடார நாட்டிலும் சாவக நாட்டிலும் பிற நாடுகளிலும் நெடுநாளாகக் கடற்றுறை வியாபாரம் செய்து பெரும்பொருள் ஈட்டி வந்துளேன். எனக்கு மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார் எவரும் இலர். இவர்க்கு இரண்டு ஆண் மக்களும் ஒரு பெண் மகளும் உளர். ஆண் மக்களுள் ஒருவரேனும் பெரிய முயற்சிகள் செய்து பெரும்பொருளீட்டும் ஆற்றல் படைத்தவராயில்லை. பெண் மகளோ, ஒரு வறிய உழவனை மணந்துகொண்டாள். அவன் மிகவும் இளம் பருவத்திலே அவனை யகன்று அயல் நாடுகளிற் சென்று மறைந்தான். நான் தேடி வந்த பொருளை யெல்லாம் இவருக்குக் கொடுக்கத் துணிந்தேன். இவர் அதனைப் பெற மறுப்பதோடு தம்மிடம் உள்ள பொருள்களில் ஒரு பாதி யெடுத்துக்கொள்ளச் சொல்லி வற்புறுத்து கிறார். நான் ஐம்பது வருஷ காலம் நாட்டை யகன்று, அயல் நாடுகளிலே வாழ்ந்து, சொந்த நாட்டுக்கு இப்பொழுதேனும் வந்து சிறிது மனவமைதி பெறுவோம் என்று எதிர்பார்த்திருந்தேன். என் எண்ணம் நிறைவேற வொட்டாமற் செய்பவர் என் சகோதரரே. நான் கூற வேண்டுவது இன்னொரு விஷயம் உண்டு: சென்ற பலவாண்டுகளில் யான் தமிழ் நாட்டிலிருந்து வருவார் எவரையும் காணப் பெருமலே காலம் கழித்து வந்தேன். ஒரு பதினைந்து ஆண்டுகளின் முன்பு தமிழ் நாட்டு இளைஞன் ஒருவன் கடார நாட்டிலே வந்து, உண்ணை உறவும்

உடுக்க வுடையும் இன்றி நோய் வாய்ப்பட்டு உயிர் துறக்கும் நிலையிலிருந்தான். அவன் தமிழன் என்பதை அறிந்ததும், எனக்கு அவன்பால் இரக்கம் உண்டாகி, மிக்க பொருட் செலவு செய்து தக்க மருத்துவரைக் கொண்டு அவன் பிணிகளைக் குணப்படுத்தினேன். அவன் என் மகன் போலப் பயின்று வந்தான். அவனிடம் யாதொரு குறையும் கண்டேனிலேன். பதினைந்து வருஷங்களின் முன்பு அவன் தேடுவாரின்றி எமனெடு போராடிய காலத்திலே என்னிடம் சில செய்திகள் கூறினன். அவற்றால் அவன் என் இளையோர் மருமகன் ஆவன் என்பதறிந்தேன். அவன் அறியாமைபால் இளம்பருவத்தே செய்த ஒரு குற்றத்தை என்னிடம் வெளியிட்டான். அக்குற்றத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன்: அவன் பொருள் தேட வேண்டுமென்ற ஆசையால், மிகவும் இளம்பருவத்தினளாகிய மனைவியைத் துறந்து, எங்கள் பூர்விகப் பொருள்களில் ஒன்றாகிய இரத்தின முடிச்சிலிருந்து இரண்டு மாணிக்கங்களை யெடுத்துக்கொண்டு ஒருவரும் அறியா வண்ணம் கடற் பிரயாணம் செய்து, கடாரநாட்டில் வந்தடைந்தான். பொருளைக் கவர்ந்ததும் மனைவியைப் பிரிந்ததும் ஆகிய இரண்டு குற்றங்களும் பெருந்தண்டம் விதித்தற்குரியனவே. இந்நாள் வரை அவன் அம்மாணிக்கங்களை விலைப்படுத்தாமல் என்னிடமே கொடுத்திருக்கிறான். அந்நாட்டிலே தன் உரிய மனைவியைப் பிரிந்து வாழ்ந்தனனாயினும், வேறு எப்பெண்களையும் கண்ணெடுத்தும் பாராமலே நல்லொழுக்க முடையவனாகவே வாழ்ந்து வந்தான். அவன் வரலாற்றை உள்ளவாறு அறிந்திருப்பவன் யானே

அவன் செய்த குற்றம் பெரிதேயாயினும், அக்குற்றத்துக்கு வேண்டிய அளவுக்கு மேலாக அவன் தண்டனை அனுபவித்திருக்கிறான் என்றே கூறுகிறேன். என் இளையோர் யான் கூறியவெல்லாம் கேட்டும், அவனைத் தம் மருமகனாக ஏற்றுக்கொள்ள இசையாமல் இருக்கின்றார்; தம் அருமை மகளை அன்று மணம்புரிந்த கணவன் உயிரோடிருந்தும், அவளைக் கைம்பெண் போலவே வாழவைக்க விரும்புகின்றார். பூர்விகச் சொத்தில் எனக்கு ஒரு சிறிதும் வேண்டா. யான் தேடி வந்த பொருளை அவர் ஏற்றுக்கொள்ளாது மறைப்பாராயின், அஃது உரிமையற்ற பொருளாய் அரசனாலும் பிறராலும் கைக்கொள்ளப்படுவதாய் அழியும். நான் அயல் நாட்டிலே தேடிய பொருளை இவ்வரசனார் தக்க வரிமையின்றியே கவர்ந்து கொள்வது முறையாகாது என்பதே என் எண்ணம். ஆகையால், என் வழக்கைத் தீர விசாரித்து, முடிவு கூற வேண்டுகிறேன்.

இரண்டாம் முதியவர்:— அரசர் பெருந்தகையே, என் முன்னவர் கூறிய வழக்கை நன்கு செவி சாய்த்தருளினீர். என் வழக்கையும் கேட்க வேண்டுகிறேன். என் மூத்தோராகிய இவர், எம் பெற்றோர் உயிரோடிருந்த காலத்திலேயே மிகவும் இளம்பருவத்திலே அயல் நாடு கட்குப் போயினர். அங்குத் தம் முயற்சியாற் பெரும் பொருளாளராய்த் திரும்பி வந்திருக்கின்றார். எம் தந்தையார் இறக்குந் தருணத்தில் எம் முன்னோர் பொருளாகிய எல்லாவற்றையும் என்னிடம் அளித்து, மூத்தவரை நான் திரும்பவும் காணப் பெறாவேனையின், அவர்க்குரிய பாகத்தை முறையே கொடுத்துவிட வேண்டும்

என்று கூறி யுயிர் துறந்தனர். நான் சில தினங்களின் முன்பே இவரைக் கண்டேன். கண்டதும், தந்தையார் ஆணையிட்ட வண்ணம் நடக்கத் துணிந்து, பொரு ளனைத்தையும் இரு பகுதியாகப் பகுத்து, இவர் பகு தியை இவர்க்குக் கொடுக்க வந்தேன். இவர் அதனைப் பெற மறுக்கின்றார்; அதனைடு அமையாமல், எம் முடைய பூர்விகச் சொத்தின் உதவியின்றித் தாமாகவே தேடிய பொருளையும் என் தலையிலேயே கட்டிப் பாவச் சுமையை நானே அதிகம் சுமக்க வழி தேடுகிறார். என் மக்களுள் ஒருவன் சிறந்த புலவரை யடித்துக் கலை பயின்று கல்வி வல்லனாயிருக்கிறான். மற்றொருவன் எம் குலத் தொழிலாகிய உழவை மேற்கொண்டிருக்கிறான். அவ்விருவர்க்கும் 'செல்வம்என்பது சிந்தையின் நிறைவே' என்ற எண்ணம் அமைந்தது. என் மகள் வரலாற்றைச் சொல்லத் தொடங்கும்போது என் நெஞ்சு புகைகின் றது. முதியோராயிருக்கும் தன்பெற்றோர்க்குஆற்றற்குரிய கடமைகளை முயன்று செய்யாமலும் தான் கொண்ட மனைவியை ஒரு காரணமின்றிப் பிரிந்து அவள் பொருட் டுத் தான் செய்தற்குரிய அறநெறிக் கடமையை இயற்று மலும் அயல் நாடு சென்ற ஒரு புல்லியோனைப் பற்றி யான் ஒன்றும் சொல்ல விரும்புகிலேன்.'அவன் மாணிக் கங் கொண்டு சென்ற செய்தியைப்பற்றி என் மூத்தோர் வரும் வரையில் நான் ஒன்றும் அறியேன். எங்கள் மரபிலே அக்கிழியை அவிழ்த்துப் பார்த்துப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் இதுவரையில் எவர்க்கும் வந்ததில்லை. இத்தனை யாண்டுகளாகத் தன் இளம்பரு வத்தையெல்லாம் வறிதே கழித்த என்மகள் இனி இவன்

உறவை நாடி வாழவிரும்பாள் என்றே நான் உறுதியாய்க் கூறுவேன். ஆகையால், அரசரே, எம் முன்னோர் பொருளிலே செம்பாதியை என் தமையனார் பெற்றுக்கொள்ளுமாறு செய்து, நான் என் தந்தையாருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற உதவி புரிய வேண்டுகிறேன். இவர் பொருளிற் சிறிதளவேனும் எமக்கு வேண்டா. மருமகனை வருவோனே என் மனம் புண்படுமாறும் என் மகள் பழந்துயரம் பெரிதாய் விளையுமாறும் நான் காணவே விரும்புகிலேன். அரசர் பிரானே தீர விசாரித்து இருவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க முடிவு கூற வேண்டுகிறேன்.

இருவர் வழக்கையும் கேட்டு அறத் தவிசின்மீது அமர்ந்திருந்த முதிய வேட முடைய கரிகாலன் சிறிது நேரம் சிந்தனையிலிருந்து பிறகு பேசத் தொடங்கினன்:

கரிகாலன்:—ஐயன்மீர், நும் வழக்கு அரிய சிறப்புடையதே. இவ்வழக்கினை நும் ஊரகத்துள்ள அறநிலைக் களத்தே கூறினீர்களோ? அங்குளார் என்ன கூறினர்?

முதன் முதியவர்:—ஐய, இவ்வழக்கிலே அரசருக்குத் தம் கருத்தை விளக்கவுரிய அவசியம் இருப்பதால், அங்கே நேரிற் சென்று தீர்ப்புப் பெறலாம் என்று கூறினர். யாமும் அவ்வாறே கருதினேம்.

கரிகாலன்:—அரசனர் அற நெறி விளக்கலன்றி வேறு எவ்வழியில் இவ்வழக்கிலே பிரவேசிக்க இடம் உளது?

இரண்டாம் முதியவர்:—ஐய, யான் என் மூத்தோர் பொருளைப் பெற மறுத்துவிட்டேனாகையாலும், அவர்க்கு என்னை யொழிய வேறு நெருங்கிய உறவினர்

இல்லாமையானும், உரிமையாளர் இன்னுர் என அறியலா காது நிற்கும் அவரது பெரும்பொருளுக்கு உரிமைஅவர்க் குப் பின் அரசினரதே யாமன்றே! இவ்வாறு பெரும் போரும் வரும் நிலையில் அரசினர் தம் கருத்தைத் தெரி விக்க வேண்டுவது அவசியமாமென நாங்கள் கருதுவது நியாயந்தானே ?

கரிகாலன்:-அரசினர் இப்பொருளைப் பெற உரிமை யுடையர் என்று கூறுவது பொதுவான நியாயமே. ஒரு பொருளைப் பெற வுரிமை யுடையவர் வேண்டாவென மறுத்தற்கும் உரிமையுடையவராவர் என்பது உலகறிந்த உண்மை யன்றே? அந்த நியாயத்தைப் பின்பற்றி அரசி னர் இப்பொருள் தமக்கு வேண்டாவென மறுக்கலாம்.

முதன் முதியவர்:—ஆம்! ஆம்!! அதுவே பொருத் தம். யான் கூறிய காரணங்களைக் கருதிப் பார்த்து அர சினர் இப்பொருளைத் தமதென உரிமைகொண்டு ஏற் றுக் கொள்ள வாதிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

கரிகாலன்:—ஒருவர் விருப்பத்தையும் வெறுப்பை யும் எதிர் பார்த்து நியாயாதிபதிகள் தீர்ப்புக் கூறுவது என்று இருந்தால், உலகில் நியாயம் கிடைப்பதே துர்ல பமாய்விடும். அற நூல்களினுட்பமான கருத்துக்கும் போக் குக்கும் அறிஞர் கொள்கைக்கும் உலகத்தார் அனுபவத் துக்கும் எது பொருத்தமாய்த் தோன்றுமோ, அதையே யாம் முடிவாகக் கூறுவோம். அரசினர் இப்பொருளில் உரிமை கொண்டாடல் பொருத்தமன்று என்பதே எம் எண்ணமா மாயினும், உமது வழக்கின்பொருட்டு நீர்

பேசிய பேச்சிலே ஒரு குறை யிருப்பதை யாம் காட்ட வேண்டுவது அவசியமாம். நீர் இப்பொருளை யெல்லாம் அயல் நாட்டிலேயே தேடினீராயினும், நம் நாட்டுக் குடி மக்களாயிருக்கும் உரிமை யுடையாரில் நீரும் ஒருவரா கையால், நீர் தேடிய செல்வத்தால் உமக்கு வரும் பெரு மை அரசினர்க்கும் உரியதாம். அவ்வாறு இல்லையாயின், கடல் வியாபாரத்தாற் பெரும்பொருளீட்டிய மாநாய்கர் பொன்னுற் செய்விக்கப் பெற்ற எட்டிப் பூவை அரசரி டம் சிறப்பாகப் பெற்று எட்டி என்று பட்டம் பெறு தல் பொருளற்ற செய்கையாம். அன்றியும், உமது பெற் றோர், பிறந்தோர், பெருநாட்டோர், உற்றோர், உகந்தோர் முதலிய எல்லோரும் இந்நாட்டகத்தே யிருத்தலால், அயல் நாட்டிலே தேடிய பொருளேயாயினும், அங்கேயே அதனை எவர்க்கும் கொடுத்துதவ மனம் வராமையும் இங்கே வாழும் உற்றோர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் வருதலும் பொருத்தம் என்பது உமக்கே தோன்றுகிறது. எங்கெங்கு அலைந்தாலும், எத்தனை நாடுகள் கண்டாலும், எவர்க்கும், 'நந்நாடு நன்னறி,' என்ற உணர்ச்சி மனத்தினுள் ஊறி யெழுதலை நீவிர் அறிவீர். உமக்கு உம் நாட்டிலே உண்மை யன்பு இல்லா திருப்பின், இத்தனை யாண்டுகள் கழிந்த பிறகு இங்கு வந்திருக்கமாட்டீர். நீர் தேடிய பொருளால் வரும் சிறப்பு உமக்கு மாத்திரம் அன்றி, நும் நாட்டவர்க்கும் உண்டென்பதை நீரும் அறிவீர். ஒரு நாடு செல்வம் உடையது என்று சொல்லப் பெறுவது இவ்வாறு பல வழிகளாலும் தேடி நாட்டின் நலத்தை வளர்க்கும் மக்கள் முயற்சியாலன்றே? இவ்வாறு இருக்க, நீவிர்

கருதுவது போல நீவிர் தேடிய பொருள் நுமக்கும் நும் சுற்றத்தவர்க்குமே பயன்பட வேண்டும் என்று கருதுவது எவ்வகையில் நியாயமாம்? உமது பொருளால் வரும் பெருமை உம் நாட்டினர்க்கு உண்டாயின், அதனல் வரும பயனும் அவர்கட்குச் சிறிதளவேனும் இருத்தல் முறைதானே? சுற்றி வாழ்பவர் சுற்றத்தார் என்பது மெய்யாயின், உம்மைச் சுற்றி வாழும் எளிய மக்களும் கீழ்க் குலத்தவரும் தாமே பொருள் தேட ஆற்றல் இல்லாதிருக்கும் பிறரும் உம் சுற்றத்தாரே யாவர் என்று கூறுவது குற்றமாமோ? பிறந்த நாடு தாய் நாடு எனப்படுவது, அந்நாட்டிற் பிறந்த அனைவரையும் ஒருவர் தம் உடன் பிறந்தார் என மதிப்பதற்காக வன்றே? ஆகையால், உம் பொருள் சிறிதாயினும், பெரிதாயினும், அஃது உம் நாட்டவர் அனைவர்க்கும் உரியது என்று கருதுவது சிறப்பாகும். அரசினர் நாட்டினர்க்கு நலம் புரிய அமைந்த காவலரே யாகையால், அரசினர் கையில் அளிக்கப்படும் பொருள் நாட்டினர் பொது நலத்துக்கே விநியோகிக்கப்படும். இது நிற்க. இனி வழக்குத் தீர்ப்புக் கூறத் தொடங்குவோம்.

இரண்டாம் முதியவர்:—அரசர் பெருமானே, இப் பொழுது கூறியதே தீர்ப்பாயிற்று. இன்னும் என்ன கூற இருக்கிறது? என் மூத்தோர் பொருளை யெல்லாம் இந்நாட்டவர்க்குப் பொதுவிற் பயன்படுந் துறையில் அவரே செலவழிக்க உத்தரவிட வேண்டுகிறேன்.

கரிகாலன்:—ஐய, யாம் உம் முன்னோரது வாதத்திலே உள்ள ஒரு சிறு குறையை எடுத்துக் காட்டினேமேயன்றி, இன்னும் ஒன்றும் முடிவு கூறவில்லை. உமது

வாதத்திலும் ஒரு குறையுளது : உமக்குப் பொருளிலே ஆசையில்லா திருக்கலாம். உம் மக்களுக்கும் அவ்வண்ணமே நிராசை யிருக்க வேண்டும் என்பது என்ன நியதி? பொருள் மிகுதி வருதலால், நன்மை விளையாது என்று நீர் கருதுகிறீர். புலமை படைத்திருக்கும் உமது மூத்த மைந்தர் இனிச் செய்ய விருப்ப தென்ன? தாம் கற்ற கல்வியைப் பிறர்க்குக் கற்பித்தலன்றே கற்றதனாலாய பயனும்? புலமை படைத்த ஒருவர் நூற்றுக் கணக்கான மாணாக்கர்கட்கு உண்டியும் உடையும் பிற அவசியப் பொருள்களும் உதவிக் கல்வி கற்பிக்கும் நிலைமை பெறுதல் சிறப்பன்றே? முன்னோர் இயற்றியருளிய இலக்கண நூல்களையும் பிற சாஸ்திரங்களையும் பலர்க்கும் பயன்படுமாறு பிரதிகள் பல செய்து, ஏடுகளை முறைப்படுத்தி, நூற்கருவூலம் ஒன்று அமைப்பது கல்வி வல்லார் செய்யத்தக்க செயலே யன்றே? புது நூல்கள் இயற்றினும், பல பிரதிகள் செய்து பலர்க்கு உதவ வேண்டுமே? இவ்வகை அரும்பணிகளை யெல்லாம் இயற்றக் கல்வி வல்லார்க்கும் செல்வப் பொருளின் உதவி அவசியம் வேண்டுவதே என்பது வெளியாகும். வேளாண்மையும் அமைந்த வுள்ளமும் பொருத்தமே யாயினும், விருந்திருக்க உண்ணலாகாத வேளாளன் உண்மையான வேளாண்மை யாற்ற விரும்புவானாயின், பெரும்பொரு ளுடையானு யிருத்தல் வேண்டு மன்றே? பிறர்க்குப் பயன்படும் பொருட்டன்றே வேளாளன் பொருள் பெறுவது? எவ்வளவு பொருளிருந்தால் என்ன? குறைவாய் இருந்தாற் சிலர்க்குப் பயன்படுகிறது; நிறைய இருந்தாற் பலர்க்குப் பயன்படுகிறது.

இவ்வுண்மையை ஊகித்துணராமல்,நீர் கூறியது பொருந் துமா ? உம் மருமகனைப் பற்றி நீர் கூறுவதில் உள்ள குறை யொன்றே. அவர் இளமையில் அறியாமையாற் செய்த இரண்டு குற்றங்களுக்காக வேண்டுமளவு தண் டனை யனுபவித்துவிட்டார். நும் மகளைப் பிரிய வேண்டு மென்றே அவர் எண்ணைமுடையரா யிருந்திருப்பின், அயல் நாட்டகத்தே புது மணம் நிகழ்த்திக்கொண்டிருக்க லாம். நும் மாணிக்கங்களையுந் திரும்பக்கொண்டுவந் திருக்கிறார். அவர் நடத்தையைப் பற்றிய ஆராய்ச்சி ஒரு புறமிருக்க. நும் மகள் இத்துணை யாண்டுகளாக அடைந் திருந்த மனத் துயரை நீர் அறிந்திருந்தால், இவ்வாறு கூறியிருக்க மாட்டீர். நம் நாட்டிலே பெண்டிர்க்குக் கொழுநனே தெய்வம் என்ற அறிஞருரை பரவியுளது. அவன் குரூபியாயினும், குணக் கேடனாயினும், பல வாண்டுகள் பிரிந்து சென்றவனே யாயினும், அவனே அவர்க்கு உவப்பிற்குரியான். எத்துணை யாண்டுகள் கழிந்து வந்தாலும், உடைமை உடையானதாகுமே யன்றிப் பிறரதாய்விடுமோ ? நும் மகள் இத்துணை நாளும் அனுபவித்த துயரத்தை யெல்லாம் தன் கணவன் வரலாற்றை யெல்லாம் உள்ளவாறு கேட்டு உணர்வா ளாயின், மறந்துவிடுவாள். முன்னே யிருந்த் துக்க மெல்லாம் மாறி இப்பொழுது, "அவரை என்று காண் போம்? எப்பொழுது திரும்பவும் நாம் மன வாழ்க்கை மற்றவர்களைப்போல நடத்தப் பெறுவோம்?" என்றஎண் ணமே முற்பட்டு நிற்கும். பெண்டிர்க்கு இயல்பாகவுள்ள மன நிலை இதுவாம். இஃது ஒன்றையும் அறியாதவர் போல நீர் நும் மகளை மருமகனிடமிருந்து இனியும்

பிரித்து வைக்கக் கருதிப் பிடிவாதம் செய்வது பொருத்த மாகாது. நும் வாதங்களிலே குறை கண்டது இவ்வள வில் நிற்க. இனி வழக்கின் தீர்ப்பைக் கூறுகின்றோம்.

இருவரும்:—அரசர் பெருமானே, இனித் தீர்ப்பு எவ்வண்ணம் வரும் என்பதை யாங்களே ஒருவாறு ஊகிக்கலாம்.

கரிகாலன்:— முதியவர்களே, கேளுங்கள்: இவ் யோர்தம் பெற்றோர்க்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுவது அவசியமே. அதற்கிணங்க அவர் தம் மிடமுள்ள எல்லாப் பொருள்களிலும் செம்பாதியை மூத்தவர்க்குக் கொடுத்துவிட வேண்டும். மூத்தவர் தம் உரிமையை மறுக்காது ஏற்றுக்கொள்ளவே வேண்டும். மூத்தவர் தாமாகத் தேடிய பொருள் அனைத்தையும் இப்பொழுது பெறும் முன்னோர் பொருளையும் சேர்த்து ஆண்டு அனுபவிக்க வேண்டும். அவர் மருமகப் பிள்ளை யையே இந்நாள்காறும் புத்திரன்போலப் பாவித்திருந்தா ராயினும், தம் பொருளனைத்தையும் மூவர்க்கும் சமபாக மாகக்கொடுக்கலாம்; தம்உயிருள்ளவரையில் தம்இஷ்டப் படி தர்மங்கள் செய்ததன் பிறகு பாகித்துக் கொடுத்தலே சிறப்பாம். கல்வி வல்ல மகனுக்கு நாம் முன்னே கூறிய வாறு கல்விவளர்ச்சிக்கான உதவியை இன்றிருந்தே அவர் செய்யத் தொடங்கலாம். மற்ற இருவர்க்கும் நிலங் களை வாங்கிக் கொடுத்து, அறம் வளர்க்கலாம். மூன் னோரது பெயரை நிலை நிறுத்த வேண்டுவது மக்கள் கட மையாமாகையால், உங்கள் முன்னோர் பெயரால் உங் கள் ஊரிற் பெரியதொரு வைத்திய சாலையும் தமிழ்க் கலா சாலையும் அன்ன சத்திரமும் ஸ்தாபனம் செய்ய

லாம். அவற்றை நீவிர் இருவீரும் நும் மக்களும் முறையே மேற்பார்த்து வரவேண்டும். அரசினரது ஆதரவோ, மேற் பார்வையோ, அவற்றுக்கு வேண்டும் என நீவிர் எப்பொழுதேனும் எண்ணுவீராயின், அப் பொழுது உரிய முறையால் விண்ணப்பம் செய்து கொண்டால், எம்மால் வேண்டுமளவுக்கு உதவி செய்யப் படும். நும் மருமகன் முன்னே செய்திருந்த இரு குறை களும் பொறுக்கப்பட்டன. அவர் இனி நும்மோடு ஒரே குடும்பமாகவேனும் தனித்தேனும் வாழ்ந்துவர வேண் டிய உதவிகள் செய்ய வேண்டும். அவர் மனைவியை அவ ரிடம் கையளித்து, இனி அவ்விருவரும் நன்கு மன மொத்து இன்புற்று வாழ்ந்து வர ஆவன செய்ய வேண் டும். உயிரோடு கணவன் இருக்கையில் எக்காரணத் தைக் கொண்டும் மனைவி அவனை யகன்று பிறந்த வீட் டில் வாழ்த்த லாகாது என்பது பொதுவற நெறியாம். அதற்கிணங்கவும், இந்நாள்வரைக்கும் தனிமையின் சுவையை யறிந்த இருவரும் இனியேனும் உலக வாழ் வில் ஆடவரும் பெண்டிரும் பிரிந்து வாழ்தலைக்காட்டி லும் சேர்ந்து வாழ்தலே இறைவன் அருளுக்கு இயைந்த தாம் என அறிய வுதவுமாறும், அவர்களை அவர்கட் குரிய பொருளைக் கொடுத்து வாழச் செய்தல் வேண்டும். பெற்றோர்க்கு ஆற்றற்குரிய கடமைகளை இனி முறைதவ றாது அவ்விருவரும் மன மொருமித்து ஆற்றி வரக் கட வர். இதுவே நமக்கு யாம் கூறும் முடிவாம்.

இருவரும்:—இதுவே எம்மிருவர்க்கும் திருப்தி யான முடிபு. இத்தகைய தீர்ப்புப் பெறலாம் என்று எதிர் பார்த்துத்தானே இங்கு வந்தோம்?

கரிகாலன்:—இறுதியில் நாம் கூற வேண்டுவ தொன்றுண்டு: முதற்கண் நீவிர் வரும்போது நும் வழக்கை முதியவர் ஒருவரே தீர்த்து முடிவு கூறற்குரியரென எண்ணினீர். இதுவரையில் நும் விருப்பத்திற் கிணங்க யாம் முதிய அரசராய் இருந்தோம். இனி முன்போல இளமை தாங்கலாம் என்று எண்ணுகிறோம். (முதிய வேடம் களைந்தனன்.)

இருவரும்:—என்ன! நாங்கள் அங்கே கண்ட இளைஞரேயோ இவ்வழக்குத் தீர்த்த அரசர் பிரான்? எம் அரசர் பெருந்தகையை யாம் அறியா திருந்தது பெருங்குறையே.

கரிகாலன்:—இளமையும் முதுமையும் என்ன செய்யும்? அறிவு ஒன்று இருந்தால், எல்லாப் பருவமும் நன்றே. எமக்கு மேன்மேலும் உம்மைப் போன்ற பெரியோர்கள் வாழ்த்துரைகளால் அவ்வறிவு வளர வேண்டு மென்பதே விருப்பமாம்.

இருவரும்:—அரசரே, யாங்கள் அறியாது கூறிய வற்றைப் பொறுத்தருள வேண்டுகிறோம். இனி நாங்கள் விடை பெறுகிறோம்.

கரிகாலன்:—அங்ஙனமே யாகுக.

VII

சோழ நாட்டுப் படைஞர் மேன்மேலும் போர் புரிய வேண்டும் என்ற விருப்பமுடைய ராயினர். இள வள ஞாயிறுபோன்று சோழர் குடியிலே உதித்த கரிகால னும் பிற மன்னரை வென்று புகழ்பெற வேண்டும் என்ற அவா வுடையனாயினன். இவற்றை யறிந்த இரும்பிடர்த் தலையாரும் பிற அமைச்சரும், உள் நாட்டு மறவர் தொகையை வளர்த்தற்கு உரிய முயற்சிகள் எல்லாம் செய்தனர். முதலிலே முன்னைப் போரில் இந்நாட்டு அரசுரிமை நாடிய கொடியோனுக்கு உதவியாய் நின்ற சேர பாண்டியரைப் போரில் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் சோழன் உள்ளத்தே குடி கொண்டது. அதற் கிணங்க, அவ்விரு நாடுகட்கும் தூது போக்கிப் பெரும் படையோடு போரியற்ற வருவதாய்த் தெரிவித்தனன்.

தூதர் கூறிய செய்தி கேட்ட சேரனும் பாண்டிய னும், தத்தம் நாட்டகத்தே இளைஞனாகிய சோழன் போர் புரியத் துணிந்தது கண்டு மனம் பொறாது, அவன் நாட்டிலேயே அவனை யெதிர்க்கத் துணிந்து, பெரும் படையோடு சோழ நாட்டுள் இருக்கின்ற வெண்ணி யென்ற சிற்றூர் வரை வந்தனர்; தூதர் மூலம் தாம் வந்த செய்தியைச் சோழனுக்கு அறிவித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்த அவனும், தன் படை

ஞரை ஒன்று சேர்த்து, வெண்ணியை அடைந்தனன். அவ்வூர்ப் புறத்தே குடி மக்கட்குப் பயன்படாதிருந்த பெரியதொரு பறந்தலையில் இரு திறத்தினரும் நெருங்கி நின்று போர் புரியத் தொடங்கினர்.

சேரர் படைஞரும் பாண்டியன் மறவரும், தமது புகழ் அழியாதிருக்க முயல்வாராய், இயன்றளவு போர் புரிந்தனர். தெய்வச் செயல் அவர்க்கு உதவியாய் முன் னிற்கவில்லை. அதனற் கரிகாலன் படைஞர்முன் நிற்க லாற்றாது உயிர் துறந்து மடிந்த பல்லாயிரவர் களத்திலே கிடக்க, எஞ்சியிருந்தாருள் ஒரு சிலர் புறங்கொடுக்கவும் துணிந்தனர். பாண்டியன் இருந்த இடம் தெரியாது மறைந்தான். உதவியாக வந்த வேளிர் பதினெருவரும் அவர்தம் படையும் சென்ற இடம் தெரியவில்லை. இந் நிலையில் வீரருள் வீரனாகிய பெருஞ்சேரலாதன் என்ற சேர மன்னன், தன்னால் இயன்ற வளவு படைஞரை ஊக்கி முன் செலுத்தி நின்று, போர் புரிந்தான்; படை ஞர் பிறர் கதியைக் கண்டு புறங்கொடுக்க எண்ணுவதை அறிந்து, அவர்க்கு ஊக்கம் வருவிக்கும் பொருட்டுப் பல பக்கங்களிலும் சென்று திரிந்து, ஆங்காங்குச் சித றிக் கிடந்த பல் வகையாரையும் ஒருங்கு சேர்த்தான்; சோழர் படைஞரைக் கண்ட இடங்களி லெல்லாம் கொன்று குவித்தான். அக்காட்சியைக் கண்ட கரிகாலன், பெருந்திரளான படைஞரோடு எதிர் சென்று, அவனைத் தாக்கினன். சோழன் என்ற பெயர் கேட்ட வளவிலே அங்கிருந்த பகைவர் திறத்து மறவரெல்லாம், தம் தலை வர் எவ்வளவோ உற்சாகப்படுத்தியும் எதிர்த்து நிற்க லாற்றாது, புறங்கொடுத்தனர்.

அக்காட்சியைக் கண்டு பொறுத பெருஞ்சேரலாதன், தன் படைஞரைக் கறுத்து விழித்து, "வீரர்களே, 'தோன்றிற் புகழொடு தோன்றுக ; அஃதிலார் தோன்றலிற் றோன்றுமை நன்று,' என்ற அறவுரையை நீவிர் மறந்தீர். வெற்றி பெற்றுப் பெரும்புகழ் பெறுவீர்; போர்க் களத்திலே இறந்தால், வீரசொர்க்கம் புகுவீர். இவ்விரு வகையான உயர் வாழ்வையும் இழக்குமாறு நீவிர் புறங் கொடுக்கத் துணிந்தது புதுமையே! இன்று புறங் கொடுத்து நும் மனையகம் செல்வீராயின், அங்கு நும் அன்பின் செல்வங்கள் நும்மை அன்போடு வரவேற்கும் என்று எண்ணுகின்றீரோ? நும் மனைவிமார் புறப் புண் பட்டு நீவிர் ஓடி வந்த செயலை அறிந்ததும், நும் முகத்தில் விழியாது, தம் மனைக் கதவங்களை அடைப்பர். மறப் பெண்டிர்க்குத் தம் கணவன்மாரை இவ்வாறு காண்பதினும் இழிவு என்னை? அவர் நும்மை நாட்டுள் நுழைய விடார். அவரும் நும் கண் முன்னே தீப்பாய்வர். நும் மக்களுள் மிக விளஞ்சிறார் நும் செயல் கேட்டு நும்மை வெறுப்பர். ஆதலால், இறத்தலே அறத்தின் ஆறு. இறந்து பெறும் பெருமை, இறவாப் புகழேயாம். இறவாது அடையும் இழிவு வெற்றியில்லாத தோல்வியினுல் வளர்ந்து உயிரோடிருந்தும் நடைப் பிணங்களாகச் செய்யும். இன்று மானம் இழந்தால், இனி என்றும் திரும்பப் பெற இயலாது. போரில் முனைந்து முன்னே செல்லுங்கள்," என்று தூண்டினன்.

பெருஞ்சேரலாதன் சிறந்த போர் வீரனேயாயினும், பலவாண்டுகளாகப் பெரும்போர்களிலே பயின்ற பயிற்சியுடையனே யாயினும், கரிகாலன் திருமாவளவனது

போர்த்திறங் கண்டு அதிசயித்தான்; அவனது வில்லி லிருந்து புறப்படும் அம்புகள் பாயும் வேகத்தைப் பார்த் தான்; அவனது வாள் எண்ணற்ற மறவரை இமைப் பொழுதிலே கொன்று குவிக்கும் அதிசயக் காட்சியைக் கண்டான்; விற்போரும் வாட்போரும் மாறி மாறி நடை பெறும் தன்மையை உணர்ந்தான்; தானும் வில்லுங் கையுமாய்ச் சோழனைத் தாக்க முன்னே பாய்ந்தான்; பாயும்பொழுது பின்னுளோர் தொடர்ந்து வருகின்ற னரா·என்று அறியும்பொருட்டு ஒரு கணப் பொழுது திரும்பிப் பார்த்துப் பிறகு முன்னேக்கினன். வீரர் இருவரும் கடும்போர் புரிந்தனர். மாலைக் காலம் குறு கியது. இரவும் நெருங்கியது. வெற்றி சோழனதே என்று கூறும் நிலைமை வந்தது. மன்னர் இருவரும் தத்தம் பாசறை யடைந்தனர்.

சேரன் உடம்பெல்லாம் புண்ணுப் மயங்கினன். புறத்திலும் அம்பு பாய்ந்த புண் ஒன்று இருப்பதை உணர்ந்தான். புறங்கொடுக்காமலே போர் புரிந்த தனக்கு இப்புறப்புண் நேரிட்ட காரணத்தையும் சந்தர்ப்பத்தை யும் நினைத்துப் பார்க்கலாயினன். மறவர்களைத் தூண் டித் தான் முன்னே பாய்ந்த பொழுது கரிகாலன் அம்பு சொரிந்துகொண்டு முன்னின்ற காட்சி நினைவுக்கு வந் தது. அவ்வமயத்தே மறவர் தொடர்ந்து வருகின்ற னரா என்று ஒரு கணப் பொழுது தான் திரும்பிய காலத்தே இந்த அம்பு புறத்தே பாய்ந்திருக்க வேண்டும் என்று அறிந்தான். போரில் புறங் கொடுத்துப் புறப் புண் படுதலும் புறங் கொடுத்தார்மீது அம்பெய்தலும் போரற நெறிக்கு விலக்கு என்பதை அவன் அறிவான்;

மறவர் பலர் உடம்பெல்லாம் புண்ணுகி மயங்கிக் கிடக்கும் காட்சியைக் கண்டான்; மனம் புண்ணானன்; பாசறைப் புறத்தே உலவிக்கொண்டிருந்தான்: அப்பொழுது பாண்டிய மன்னரும் பதினெரு வேளிரும் அன்று நிகழ்ந்த பெரும்போரிலே புறங்கொடாது போர் புரிந்து வீர சொர்க்கம் புகுந்த செய்தி கேட்டான்; அவர்க்குக் கிடைத்த பெருமை தனக்கு இல்லாது போயிற்றே என எண்ணமிட்டுப் பெரிதும் வருந்தினன்; புறப்புண்பட்டுப் பழிபூண்டு வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே சிறப்பாம் என எண்ணினன்.

சான்றோர் பலரால் எப்பொழுதும் சூழப்பட்டிருக்கும் பெருஞ்சேரலாதன் தன் உள்ளக் கிடக்கையை அவர்கட்குக் கூறத் தொடங்கி, "ஐயன்மீர், ஒருவன் தான் பிறந்த குடிக்குப் பெரும்பழி விளைக்குமாறு உயிரோடு வாழ்வதைக்காட்டிலும், இறந்து உயர்ந்த உலகம் புகுவது சிறப்புடையதா மன்றோ? ஆண்டில் இளைஞனும், நன்கு போர்ப் பயிற்சி பெறுதவனும், பிறருடைய உதவி பெறுதவனுமாகிய கரிகாற் சோழன் இன்று இயற்றிய போரிலே யான் அடைந்த பரிபவம் எளிதில் என்னால் மறக்கத் தக்க தன்றும். மனந்தளர்ந்த படைஞரை ஊக்கும்பொருட்டு நான் திரும்பியபோது ஓர் அம்பு என் முதுகின்மீது பாய்ந்தது. 'புறப் புண்படும் போர் வீரன் தான் பிறந்த நாட்டுக்கும் தனக்கும் தன் குடிக்கும் இழிவு வருவிப்பவனே யாவன்,' என்பது நீவிர் அறியாத தன்று. ஆகையால், இனி யான் உணவும் நீரும் துறந்து, வடக்கு நோக்கி யிருந்து, உயிர் விடத் துணிந்தேன்," என்றனன்.

அது கேட்ட சான்றோர், "புரவலரேறே, புறப்புண் படுதல் என்பதன் பொருளை நீ நன்கறிவை. யாங்களும் அறிவோம். ஒருவன் தன்னொடொரு நிகராகிய பகை வீரனொடு போர் செய்கையிற் போருக்காற்றாது போர்க் களத்துப் புறங் கொடுத்து ஓடுதல் பழியேயாம். அவ் வாறு ஓடும் ஒருவன் புறத்தே பகைவன் அம்பு பாய்ந்து புண் நேர்படுமாயின், அது புறப்புண்ணாகும். புறங்கொடுத் தார்மீது அம்பெய்தலாகாது என்ற அற நெறி நீ அறி யாத தொன்றன்று. திருமாவளவன் சிறுவனே யெனி னும், இவ்வற நெறியை அறியானல்லன். அவன் புறங் கொடுத்தார்மீது அம்பெய்யும் கீழ் மக்கள் குலத்திற் பிறந்தானல்லன். நீயும் போர்க்குப் புறங் கொடுப்போர் குலத்திற் பிறந்தாயல்லை. எதிர் பாராமல் நேர்ந்த இச்செயலில் இருவரும் மனம் வருந்தற் கேதுவில்லை. நீவிர் இருவீரும் ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்து அம் பினை எய்யும்போது நீ சற்றே பின் புறம் திரும்பினாய். அது பகைவனது போர்த் திறத்தைக் கண்டு அஞ்சியதா லன்று; நினக்கு அவனை யெதிர்த்து நின்று போர் புரிய ஆற்றல் இல்லாமையாலன்று; விற்போரும் வாட்போரும் முறையே புரிய அறியாமையாலன்று; தளர்ந்த உள்ளத் தோடு நின் பின் வந்த படைஞர் அணி வகுப்புக் குலை யாது முறையே வருகின்றனரா வென்று பார்த்து அறிந்துகொள்வதன் பொருட்டேயாம். ஆகையால், நீ திரும்பியது புறக்கொடையாகாது. நின் முதுகின்கண் கரிகாலன் அம்பு பாய்ந்தது அவன் மனமுற எண்ணிச் செய்த செய்கையுமாகாது. ஆகையாற் குற்றமாகாத வொன்றைக் குற்றமாகக் கருதி மனம் புண்ணாகி நீ வடக்

கிருக்கத் துணிவது பொருத்தமாக எமக்குத் தோன்ற வில்லை," என்று அன்பினுற் கூறினர்.

அந்நல்லுரையைக் கேட்ட சேர வேந்தன், "சான் ரீர்களே, நீவிர் என்னிடம் கொண்ட அன்பு காரண மாக இவ்வாறு பரிந்து கூறுகின்றீராயினும், நும் உள்ளக் கிடக்கை என் மனப்போக்குக்கு மாறுபடாது என்பதை அறிவேன். என் குடிப் புகழ்க்கு மாசு தரும் ஒரு செய் கையை யான் செய்ய வேண்டும் என நீவிர் விரும்புகிலீர். வீரர்க்குரிய போர் முறையை விதித்த அற நூல்களிலே, வீரராயிருப்பார் போர்க் களத்திற் புறப்புண் படுதல் இழிவு என்று கூறும் இடங்களில் எங்கேனும், 'இன்ன விதம் பெற்ற புறப்புண்ணே புறப்புண்ணும்; மற்றவை ஆகா,' என்று விதித்திருக்கின்றதா? அஃது எவ்வாறு அமையினும், புறப்புண் புறப்புண்தானே? அயர்ப்பிலே பட்டதாயின், விழுப்புண் ஆய்விடுமோ? வீரர் எனப் படுவோர் விழுப்புண்பட்டுப் போரில் இறத்தல்வேண்டும். அவ்வாறு இறக்கும் பேறு பெறாராயின், வடக்கிருத்தல் வேண்டும். இவ்விரண்டும் ஒருவர்க்கு அமையாவாயின், அவர் ஆண்மை பீடிழுந்ததே; தேகப்பயிற்சி வீண்முயற் சியேயாம். ஆகையால், என் மனத்தில் தோன்றிய எண் ணத்தை மாற்ற முயன்று யான் பெறக் கருதும் நல்வாழ் வைப் பெறற்கு இடையூறு செய்யாது நுங்களால் இயன்ற உதவி புரிய வேண்டுகின்றன்," என்றான்.

இம்மொழியைக் கேட்ட அந்நல்லோர்கள், "நீ நினக்கு நேர்ந்ததாக எண்ணும் பழிப்பைப்பற்றி அந்நூல் களின் கருத்தை எம் உள்ளத்தில் தோன்றியவாறு கூறி னேமே யன்றி, நினக்கு வரும் நல்வாழ்வைத் தடுக்கும்

எண்ணத்தாலன்று. அன்பும், அரிய அறமும், அருளும், பொருளும், புகழும் எல்லாம் ஒருருவாய் வந்தது போன்றிருக்கும் அரசே, நீ வடக்கிருக்கவே துணிவையாயின், நீ செல்லும் நல்லுலகத்திற்கு உன்னைத் தனித்துச் செல்ல விடோம்; யாங்களும் உடன் வருவோம். இந்நாள்வரை நின்னுடன் பயின்று இவ்வுலகிலேயே இமையவருலக வாழ்வைத் துய்த்திருந்த யாங்கள், நீ இமையவ ருலக வாழ்வை நாடிச் செல்கையில் நின்னை யிழந்து பாழாகும் இவ்வுலகில் வாழ்ந்திருக்க இசையோம்,'' என்று எல்லோரும் ஒரு மனமாய்க் கூறினர்கள்.

சேரன் அது கேட்டு மனம் வருந்தி, அவர்களையெல்லாம் தன்னைத் தொடரும் எண்ணத்தை மாற்றுமாறு வேண்டினன். "இப்பொழுது இக்களத்தே வடக்கிருத்தல் நினக்கு இயைவதாயின், எமக்கும் இயைவதே,'' என்று அவர்கள் உறுதியாய்க் கூற, இறுதியில் வேறு வழியின்றி அவனும் அதற்கிசைந்தான்.

பின்பு அவரனைவரும் நன்னீராடி, நல்லுடையுடுத்து, உலகனைத்தும் படைத்துக் காத்து அழித்து மயக்கி அருளும் அமலனை நெஞ்சில் நிறுத்திப் பாசறைப் புறத்தே வடக்கிருந்தனர். "பெருஞ்சேரலாதன் சிறந்த குணங்கள் பல உடையன்; பழி தாங்கப் பொறுத பழங்குடியிற் பிறந்தவன்; சான்றோர் பலரது உடனுறை வாழ்வை அடையும் பேறு பெற்றவன், "என்ற புகழ் போர்க்களமெங்கும் பரவியது. அவன் அப்பிறப்பிலேயே உடம்பு பெற்ற பயன் பெறக் கருதினன் என்பது அறிஞரால் உணர்ந்து பாராட்டப்பட்டது. வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்த இவ்வருஞ்செய்தி உடனே அங்

கிருந்த வீரர் அனைவர்க்கும் தெரிதரலாயிற்று. அவ் வூரிலே குயவர் குடியிலே பிறந்த ஒரு பெண்பாற் புலவர் இவ்வருஞ்செயலைக் கண்ணுரக் கண்டு மன முருகிக் கரி காலனிடம் வந்தார்.

கரிகாலன் பாசறைப் புறத்தே உலவிக்கொண்டிருந் தான். வேண்ணிக் குயத்தியார் அவனருகில் வந்து நின் ரூர். கரிகாலன் உடனே அவரது புலமைக்கேற்ற மரி யாதைதந்து, வரவேற்ருன். அவனது இளம்பருவத்தை யும் இரு பெரு மன்னரும் பதினெரு வேளிரும் பொரு தழிய வென்ற செயலையும் நினைத்து வெண்ணிக் குயத்தி யார் அதிசயித்தார்; ஆயினும், தாம் கண்டு வந்த காட்சி யைக் கூற விரும்பிப் பின் வரும் கருத்தமைந்த ஒரு செய்யு ளிசைத்தனர்.

"வளவர் குலத் தோன்ருல், நீர் இத்துணை இளம்பரு வத்தில் இத்தன்மையான பெரும்போரில் வென்றது அருஞ் செயலாகாது. எனெனில், நும் முன்னேர், நிலத்தகத்தும் போர் முயற்சியாலே சிறந்தவராயிருந்ததோடமையாமல், கடற்போரிலும் வல்லவராயிருந்தனர். அவர் கடற்போர்க்கு மரக் கலங்களிலே செல்லுங் காலங்களில் தமக்கு வேண்டிய வண்ணம் காற்று வீசாமலிருக்குமாயின், காற்றிற்குரிய தேவ னையேவித் தமக்கு ஆகவேண்டும் முயற்சித் துறையை முடிப் பாராயிருந்தனர். மதக் களிற்றின் பிடரகத்தமர்ந்து போர் புரியும் மன்னர் மன்னரே, இருபேரரசரை எதிர்த்து நின்று வெற்றி கொண்ட நுமது புகழ் சிறப்புடையதே யாயினும், உலகத்திலே மிக்க புகழ் எய்துமாறு இவ்வெண்ணிப் பறந் தலையில் புறப்புண் பட்டதற்கு நாணி வடக்கிருந்த சேரலா தர் நும்மினும் நல்லவராவர் என்றே யான் கூறுவேன்" *

* புறநானூறு—செய், 66.

இவ்வாறு அப்புலமைச் செல்வியார் பேசியதைக் கேட்ட கரிகாலன், மிகவும் அதிசயித்து, "அம்மையீர், பெருஞ்சேரலாதரது பெருமையை யான் இன்று நன்கு அறிந்தேன். புறப்புண் பட்டது அவர் புறங்கொடுத்ததா லன்று. ஆகையால், அஃது அவர்க்குப் பழி தரும் என்று யான் எண்ணுகிலேன். ஆயினும், அதனை அவர் பழியென எண்ணி வடக்கிருந்தது, தம் குலத்திலே தம் மால் அணுவளவேனும் குறை நேர்ந்தது எனப் பிறர் எண்ணுதிருக்கும்பொருட்டே என்று எண்ணுகிறேன். எங்ஙனமாயினும், சான்றோர் பலரும் தம்முடன் விண் புகுமாறு செய்யத் தக்க அரசரைப் படைத்ததால், நம் தமிழ் நாட்டுக்குப் பொதுவிலே விளையும் சிறப்பு அதி கமே. இன்றோடு போர் நிறைவேறியது. பாண்டிய மன் னரும் அவர் படைஞரும் பதினெரு வேளிரும் அவர் துணைப்படைகளும் அவரவர் தத்தம் நிலைக்கும் பயிற் சிக்கும் தக்கவாறு அற நெறிக்கு மாறுபடாது போர் புரிந்து தம் வீரத்திற்குரிய பரிசிலாகிய வீர சுவர்க்கம் எய்தினர். சோழ நாட்டு அரசன் இளைஞன் என்று இவர் அனைவரும் கருதி ஒருங்கு திரண்டு போர் புரிய வந்து எதிர்த்துநின்று இவ்வெண்ணிப் போர்க்களத்தில் இவ்வாறு உயிர் இழக்க நேரிட்டது எனக்கும் வருத்தம் விளைக்கின்றது. அமைதியாய் முன்போல அனைவரும் வாழ்ந்திருப்பின், இவ்வின்னல் நேர்ந்திராது. இதுவே தமிழ் நாட்டகத்தே பிறரை அடக்கிப் பிரதாப சிலைஞ் விளங்கவெண்ணி யான் இயற்றிய பெரும்போராம். இப்போர் யானை வினைத்துக்கொண்டதன்று என் பதை யான் தமக்குக் கூற விரும்புகிறேன். என்னைச்

சிறையகத்திட்டு நாட்டை யகல்வித்துத் துன்புறுத்திய தியோனுக்கு இவரினவரும் உதவியாய் இருந்தனராகையால், யான் என் குலப் பெருமையை நிலை நாட்டற் பொருட்டு இம்முயற்சியில் இறங்க வேண்டுவது அவசியமாயிற்று. என் நாட்டவர் உதவியால் இப்போர் நன்கு நிறைவேறியது. விளைந்த பயன் சிலர்க்குத் துன்பம்தருவதாயினும், தமிழ் நாடு முழுமைக்கும் அரசுரிமை யுடையான் ஒருவன் என உறுதிப்படுத்த உதவுவதாகையால், ஒரு வகையில் நலம் தருவதேயாம். புலமைச் செல்வியீர், நும் மனக் கருத்தை யான் உணர்ந்தேன். மனிதர் புகழ் பெறுதற்கு வழி இரண்டேயுள: ஒன்று தம்மை மறந்து அறஞ் செய்தல்; மற்றொன்று அவ்வண்ணமே அறப்போர் புரிதல். அறப்போர் புரிந்தார் இறந்தாலும், இருந்தாலும், புகழே பெறுவர் என்று நம்போன்ற பெரியார் கூறக் கேட்டிருக்கின்றேன்," என்று கூறினன்.

இச்செய்தி கேட்ட வெண்ணிக் குயத்தியார், மனவமைதி பெற்றுக் கரிகாலனிடமும் இரும்பிடர்த் தலையாரிடமும் விடை பெற்றுச் சென்றார். அப்போர்க்களத்தே இறந்தார் ஒழிய, எஞ்சி யிருந்த பகை வீரர் அனைவரும் கரிகாலனைப் பணிந்து வணங்கினர். வெற்றி முரசு எங்கும் முழங்கியது. சோழர் சூள்ச்சுடர் மணியாகிய திருமாவளவன், புலவரும் பாணரும் கூத்தரும் பொருநரும் விறலியரும் புகழ்ந்து பாடிப் பின்வர, மங்கல வாத்திய கோஷங்களுக்கிடையில் உறையூர் நோக்கித் திரும்பினன்.

அன்புடைய குடி மக்கள் பலர் எதிர்கொண்டழைக்கக் கரிகாலன் உறையூர் வந்து புகுந்தான்; அரண்மனை

புகுந்து, அத்தாணி மண்டபம் அடைந்தான். அங்கு அரசனைக் காணவெண்ணி முன்னரே வந்து குழுமியிருந்த பெரியார் பலரும் எழுந்து நின்று, அவனை மனமார வாழ்த்தினர். புலவர் ஒருவர் எழுந்து நின்று, இரு கரங்களையும் உயர்த்தி,

"தமிழகத் தலைமை தாங்கிய வளவ!
பழியொடு படரா வழுதியர் தமையும்
வீரருள் வீராம் சேரலர் வேந்தையும்
பதினெரு வேளிர் படைஞர் தம்மையும்
வென்று களங்கொளும் வேந்தே! வாழிய
நிலமெலாம் புரந்து நீடுவா ழியவே."

என்று மனமார வாழ்த்திப் புகழ்ந்து பாடினர்.

கரிகாலன் அவ்வாழ்த்துரை கேட்டு மிக மகிழ்ந்து, அவையகத்தாரைப் பார்த்து, "பெரியீர்காள், நுங்கள் ஆசிர் வசனத்தாலும் இறைவன் திருவருளாலும் சில நாட்களின் முன்பு தொடங்கிய தமிழகத்துப் பெரும் போரிலே யாம் வெற்றி பெற்றோம். நம்நாட்டின் வளத்தை வளர்க்கவும் வீரரது வீரத்தை விருத்தி செய்யவும் விரும்புவோமாயின், மேலும் மேலும் போர் புரிந்து பல நாடுகளை வெல்ல வேண்டும். அவ்வாறு வென்று இப் பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் அடக்கி யாண்ட மன்னர்கள் பிறந்த குடியிலே பிறந்து, அவரது புகழை வளர்க்க விரும்பும் மனத்தையுடைய யாமும் எம்மால் இயன்ற முயற்சியைச் செய்வோம். இறைவன் திருவருள் இருப்பின், நன்னாள் ஒன்று நிர்ணயித்து, வட நாடு நோக்கிச் சென்று, போர் புரிந்து வென்று, பிற நாடுகளை நம் ஆட்சிக்குள் அடக்கி, விரைவிலே மீளலாம்

என்று கருதுகிறோம். எம் படைஞரும் அடிக்கடி எழும் பெரும்போர்களிலே தம் ஆற்றலை வெளியிட்டாலன்றிப் பெரும்புகழ் பெறுதற்கில்லையே என்று எண்ணுகின்றனர். ஆகையால், நமது ஆசீர் வசனத்தையும் ஆமோதிப்பையும் எதிர் பார்த்து இன்னும் சில தினங்களிலே வட நாடு நோக்கிச் சென்று, அயலரசரை அடிப்படுத்தக் கருதியுளோம். தனக்கு இருக்கும் நாட்டின் அளவையும் பொருளின் அளவையும் கொண்டு ஓர் அரசன் திருப்தி யடைதலாகாது என்பது நீவிர் அறிந்ததே யன்றோ ?'' என்று கூறினன்.

அவைக்களத்தார் அனைவரும் அதற்கு இணங்கியதைத் தெரிவிக்க, அங்கிருந்தார்களில் ஆண்டினும் அறிவினும் மூத்தாராகிய பெரியார் ஒருவர் எழுந்து, பின் வருமாறு கூறினர்:

" அரசரே, அவ்வாறே செய்க. அதுவே சோழ நாட்டுக் குடிகளாகிய எமக்கு விருப்பமாம். எம் அரசர் எம் நாடு ஒன்றையே ஆளும் அரசராய் இருப்பதைக் காட்டினும பாரத பூமி முழுவதையும் ஆளும் பேரரசராய் இருப்பதே எமக்குப் பெருஞ்சிறப்பாம். ஆகையால், நீர் எண்ணிய எண்ணத்தை இனிது நிறைவேற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெறுக. போர் வேந்தரே, தமிழகத்தாரை யெல்லாம் ஒரு குடைக்கீழ் அடங்குமாறு இவ்விளம்பருவத்திலே செய்த நமது ஆண்மையையும் ஆற்றலையும் வடநாட்டவர் அறியுங் காலம் விரைவிலே வருவதாக. சோழ நாட்டின் அரசியற் பொறுப்பைத் தக்கார் ஒருவர் கையில் அளித்து, இங்கு நாடு காவற்கு வேண்டிய படைஞரை நிறுத்தி, இப்போரிலே

வெற்றி பெற வுதவியாய் நின்ற பல வீரரொடும் சென்று, வட நாட்டிலே போர் புரிந்து, வாகை சூடி வருக. இவ் வளவும் நீர் செய்து வருவதில் எமக்குப் பூரணச் சம்மத மே. ஆனால், நான் இங்கு ஒன்று கூற விரும்புகின் றேன்: இங்குள்ளார் பலரும் என் எண்ணமே யுடை யார் என்பதை யான் அறிவேன். நம் மறவர் மிக்க பயிற்சியுடையரே யாயினும், அயல் நாடுகளிற் சென்று போர் புரிந்து வென்று மீளுவதற்குப் போதிய பயிற்சி யுடையரா வென்பதை ஆராய வேண்டும். நீவிர் நாடு காவல் ஏற்றுக்கொண்டு இந்தப் பத்து ஆண்டுகளில் மூன்று பெரும்போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவை யெல்லாம் நம் நாட்டகத்து நிகழ்ந்தவையே. இவற்றால் நமக்கு உண்டாகிய பொருட் செலவு அதிக மென்றே கூற வேண்டும். இப்பொழுது நாட்டை யகன்று அயல் நாடுகளிலே செய்யும் ஒரு பெரும்போரைத் தொடங்கு தற்கு வேண்டிய பொருளும் பிறவுதவிகளும் நம்மிடம் உள்ளனவா என்பதை யோசிக்க வேண்டும். மேலும், எம் அரசர் போரில் வல்லவர் என்ற புகழ் அயல் நாடு களிலே பரவா முன்னரே அவர் அங்குப் போர்க்குச் செல்வாராயின், அங்குளார் எங்ஙனம் வரவேற்பரோ! முக்கியமாக நான், ஒன்று கூற வேண்டுவதுண்டு: நம் அரசர் பெருமக்கள் முறையே மணம் புரிந்துகொள் ளும் பருவத்தை நீர் அடைந்திருந்தும், மணம் புரிந்து கொள்ளாதிருப்பது நாட்டு மக்கள் மனத்துக்கு ஒரு குறையாகவே தோன்றுகிறது. போரினால் வென்ற இத் தமிழக முழுமையும் சில ஆண்டுகள் அமைதியோடு நன்கு ஆண்டு அறம் நிலை நிறுத்திப் பகைத்தாரை

யெல்லாம் ஒரு மனப்பட்டு வாழுமாறு செய்ததன் பிறகு வடநாடு செல்வது நலமாம். ஏனெனில், அங்குச் சென்றிருக்கையில் இங்குளார் அகப் பகைகளும புறப் பகைகளும் நன்கு அடக்கப் பெறுவிடில், நாட்டுக்கே தீங்கு விளையும் என்பதை நான் கூற வேண்டா. ஆகை யால், அரசரே, விரைவிலே நல்ல குலத்தில் மணம் புரிந்துகொண்டு, சில ஆண்டுகள் இங்கு இருந்து, அமை திபை நிலை நிறுத்திப் பிறகு வடநாட்டுப் போர்க்குச் செல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.''

கரிகாலன்:—நாட்டவர் விருப்பம் அதுவாயின், அங்ஙனமே யாகுக.

VIII

உறையூர் நகரத்து அரச மாளிகைகளுக்குப் பின் புறத்தே ஒரு பெரிய பூஞ்சோலை உண்டு. அச்சோலையில் அரசரும் அரசர்க்கு நெருங்கிய சுற்றத்தாருமே உலவி வரும் உரிமை யுடையார். தகுந்த காவலுடைய அச்சோலையிலே ஒரு நாள் மாலைப் பொழுதில் திருமாவளவன் தான் அங்குக் கண்டு பேச எண்ணிய ஒருவரை எதிர் பார்த்துச் சிறிது மனக் கவலையோடு உலவிக் கொண்டிருந்தான். சிறிய பூஞ்செடிகளும் பெரிய பூமரங்களும் தடாகங்களிலுள்ள பூங்கொடிகளும் அழகு செய்யும் காட்சி அன்று அவன் மனத்தைக் கவரவில்லை. அவன் இப்படி இருக்கையில், அங்கு இரும்பிடர்த்தலையார் வந்தார். பின்னர் அவ்விருவரும் அங்கு அரசாங்க சம்பந்தமான பல விஷயங்களைக் குறித்துச் சிறிது நேரம் பேசிய பிற்பாடு, வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினர்.

வளவன்:—ஐய, அமைச்சர் தலைவரே, இவ்வாறு நாட்டு மக்கள் எனது ஊக்கத்தைக் குறைக்க முயன்றது நன்று என்று நீவிர் எண்ணுகின்றீரா?

அமைச்சர்:—இறைவன் அருளால் எடுத்த முயற்சி நன்கு நிறைவேறுமென்ற உறுதியான நம்பிக்கை தோன்றினலன்றி, ஒன்றைத் தொடங்கலாமா? வடநாட்டுக்குச் சென்று பிற மன்னரை அடக்க வேண்டா என்று

நாட்டு மக்கள் கருதவில்லை; சென்றால், வெற்றி பெற்றே திரும்ப வேண்டும் என்று கருதியே இவ்வாறு கூறினர் கள்.

வளவன்:—அது நிற்க. ஐய, என்னை இவ்விளம் பருவத்திலே மணம் புரிந்து மக்களைப் பெற்று வாழு மாறு கேட்பது நியாயமெனத் தோன்றுகின்றதா? போர்க் களத்திலும் போர்ப் பயிற்சியிலும் ஆசையுடைய ஓர் ஆண் மகனுக்கு மண வாழ்வு இன்ப வாழ்வாகத் தோன்றுமா?

அமைச்சர்:—மக்கள் இனம் நிலவுலகத்திலே இடை யறாது பெருகி வருதற்பொருட்டு இறைவன் அமைத்த வாழ்வின் நிலைக்கு மாறுக நாம் செல்லுதல் இயலுமோ? அரசர்க்குப் போர்த் திறம் சிறப்புடையதே யாயினும், அவர்தம் மரபு அழியாது காத்தலும் அவர்க்குரிய கடமைதானே? ஆகையால், உரிய கடமையை உரிய காலத்திலே செய்யுமாறு நாட்டு மக்கள் வேண்டியது குற்றமாகுமோ?

வளவன்:—நாட்டு மக்கள் விருப்பத்திற்காகவே மணம் புரிவதாக வைத்துக்கொள்ளலாம். பெண் கொடுக்க வரியார்களாகிய சேரரும் பாண்டியரும் இப் பொழுது நம் நாட்டில் தம் பெண்ணை வாழ்விக்கும் நிலைமையில் இல்லையே! இதற்கு என் செய்வது?

அமைச்சர்:—சேரர் குடியிலே இப்பொழுது மணப் பருவம் உடைய பெண்கள் இல்லை; பாண்டியர் குடியில் உளர். விருப்பம் இருப்பின், அவர்கள் நம்பால் மனத் தகத்தே வைத்திருக்கும் பகை நீங்குமாறு பேசி, மண வினை நிறைவேற்றலாம். அதன் பிறகு அவர்கள் நம்

மோடு மனமொத்து வாழ்வார்கள். இதற்கு அங்குப் போய்ப் பேசி எண்ணியதை நிறைவேற்றத் தக்க அறிவு டையாரை அனுப்பல் வேண்டும்.

வளவன்:—வேளிர் குடிகளிலே நம் மரபிலே பெண் கொள்ளும் வழக்கம் உண்டே! இப்பொழுது அப்படிக் கொடுத்தற்குரியார் ஒருவரும் இல்லையா? கொடுத்தற் குரிமையுடைய குடிகளிலே பெண்கள் இல்லையா?

அமைச்சர்:—சோழர் குடிக்குப் பெண் கொடுத்தற் குரிமையுடைய வேளிர் பலர் இருக்கின்றனர். அவருள் இப்பொழுது நாங்கூர்த் தலைவராகிய வேளிர் குடிப் பெரியார்க்கு அருங்குணங்கள் பலவும் அமைந்த ஒரு பெண் உண்டு. அப்பெண் மணப் பருவம் உடையளா யிருப்பாள் என்றே எண்ணுகிறேன்.

வளவன்:—ஐய, பாண்டியர் குலத்துக் குமரியை மணந்துகொள்ளல் நலம் என்று நீவிர் எண்ணுகின் றீரா? அல்லது வேளிர் குலக் குமரியை மணத்தலேசிறப் பென்று எண்ணுகிறீரா?

அமைச்சர்:—இருவரும் மணத்தற்குத் தகுதி யுடையரே. இருமகளிரையும் ஒருங்கராகமத்திக்கும் முறை ஏற்படுமாயின், இருவரையுமே மணந்துகொள்ளலாம். மரபின் வளர்ச்சியைக் கருதும் அரசர் பொதுவாக இரு பெண்டிர்களுக்குக் குறையாமல் மணம் புரிந்துகொள் ளுதல் தொன்று தொட்ட வழக்கமாம்.

வளவன்:—இருவரையும் மணந்தாற் பாண்டியர் குமரி உயர்ந்த மதிப்புக்கும் வேளிர் மகள் அவளிற் சிறிது தாழ்ந்த மதிப்புக்குமே உரியர் என்று உலகினர்

எண்ணுவரே! ஆகையால், யாரேனும் ஒரு பெண்ணை மணந்துகொள்ளலே சாலும் என்று எண்ணுகிறேன்.

அமைச்சர்:—இரு பெண்டிரையும் மணத்தல் நலம். நும் முன்னோர் பலர் அங்ஙனமே செய்திருக்கின்றனர். நும் தந்தையார்க்கும் இருவர் தேவியர் இருந்தனர்.

வளவன்:—அது நுமது விருப்பமாயின், அவ்வண்ணம் ஆகுக. இவ்விரு குடியினரிடமும் வேண்டுவன பேசி முடிவு செய்தல் நும் பொறுப்பேயாகும். இருள் வந்து சூழும் முன்னே நாம் அரண்மனைக்குச் செல்வோம்.

அமைச்சர்:—அவ்வண்ணமே செய்வோம்.

பின்னர் அவ்விருவரும் அரண்மனைக்குட் சென்றனர். பிறகு சில தினங்களில் இரும்பிடர்த் தலையார் பாண்டிய நாட்டுக்குப் போய் அந்நாட்டு மன்னர் மகளைச் சோழ மன்னனுக்கு மணம் புரிந்து கொடுக்குமாறு உரிய முறைகளாற் கேட்டனர்; அதனால், எதிர்காலத்தில் அந்நாட்டுக்கு நிலையும் நன்மைகளை எடுத்து விளக்கிக் கூறினர். வெண்ணிப் போர்க்களத்திலே இறந்த பாண்டியன் மைந்தன், கரிகாலன் ஆட்சிக்கடங்கி இப்பொழுது அரசாண்டுகொண்டிருந்தான். அவன், இச்செய்தியைக் கேட்டுச் சந்தோஷித்தான். சோழர்க்குக் கீழ் அடங்கியிருக்கும் நிலைபைக்காட்டிலும், அவர் குடியிலே பெண் கொடுத்து ஒரு நிகரான வாழ்தல் நலமேயாம் என்று எண்ணினன். ஆகையால், அவன் இரும்பிடர்த் தலையார் வேண்டுகோளுக்கு இசைந்தான்; அவர்க்கு உரிய சிறப்புக்கள் செய்தான்.

பிறகு அப்பெரியூர் பாண்டிய நாடு அகன்று, சோழ நாடு அடைந்து, நாங்கூர் சென்று, நாங்கூர் வேளைக் கண்டு, அவரிடம் தாம் வந்த காரணத்தைத் தெரிவித்தார். அவரும் மிக்க மகிழ்ச்சியடைந்து, "தமிழ கத்தை ஆளும் மன்னர் பிரானுக்கு மகட்கொடை நேரும் பேறு எனக்கு வாய்த்ததே!" என்று கூறி, அதற்கு இசைந்தார். பின்னர் அப்புலவர் பெருமான் நாங்கூரி னின்று புறப்பட்டு, உறையூர் வந்து சேர்ந்து, தம் முயற்சியின் பயனை அரசனிடம் தெரிவித்தார்.

அவனும் புலவர்க்கு உரிய சிறப்புக்களைச் செய்தான். பின்பு அப்புலவர் அவன் அனுமதி பெற்று, மண விணைக்குரிய நாளை விரைவிலேயே நிச்சயித்தனர்.

மண விணைக்குரிய நாள் குறுகியது. பாண்டியரும், சோழரும், தத்தம் பரிவாரங்களோடு வந்தடைந்தனர். வேளிர் பலரும் வந்தனர். எண்ணிறந்த பாணரும் வயி ரியரும் வந்து கூடினர். புலவர் பலர் வந்து அடைந்த னர்; அவரவர்க்கென அமைந்த இடங்களிலே தங்கினர். இரும்பிடர்த் தலையார் பல இடங்களிலும் சேர்ந்சென்று, அவரவர்க்குரிய சிறப்புக்களைச் செய்து, உபசரித்து வந் தனர்.

திருமண மாளிகையிலே, குறித்த தினத்திலே நன் முகூர்த்தத்திலே சான்றோர் பலர் முன்னிலையில் திருமா வளவன் பாண்டியர் குலப் பெண்ணையும் நாங்கூர் வேள் மகளையும் திருமணம் புரிந்தனன். பாணரும் புலவரும் பாடி வாழ்த்தினர். அந்தணர் ஆசி கூறினர். அங்கு அடைந்திருந்தார்க்கெல்லாம் மணப் பொருள்கள் வழங் கப் பெற்றன. புலவர் பலரும் சிறப்பான பரிசில் பெற்ற

னர். பத்துத் தினங்கள், நாடெங்கும் பல வகையான தேவாலயங்களிலும் விசேஷமான உற்சவங்கள் கொண்டாடப் பெற்றன. இரும்பிடர்த் தலையார் அங்கு அடைந்திருந்த மன்னர்களுக்கும் பிற தலைவர்களுக்கும் அவரவர் நிலைமைக்கேற்ற சிறப்புக்கள் செய்தனர்.

பிறகு சில தினங்கள் சென்றன. பாண்டிய மன்னரும் சேர மன்னரும் விடைபெற்றுச் சென்றனர். வேளிர் பலரும் விடைபெற்றகன்றனர். திருமாவளவன் முன் போல அரசுரிமையை மேற்கொண்டு, நாடெங்கும் சஞ்சரித்து, ஆங்காங்குக் குடிகட்குள்ள குறைகளை நேரில் விசாரித்தறிந்து, அவற்றுக்கு வேண்டிய பரிகாரங்களை அவ்வப்போது செய்து வந்தான்.

தேவியர் இருவரும் ஒருமனமுடையராய்த் திருமாவளவன் அன்பின் செல்வத்தில் திளைத்து வந்தனர். ஐந்து ஆண்டுகள் ஆயின. பாண்டியன் குமரி முதற்கண் ஒரு பெண் மகவு ஈன்று பின்பு ஓர் ஆண் மகவும் ஈன்றனள். வேளிர் குலக் குமரி முதலிலே ஓர் ஆண் மகவும் பின்பு ஒரு பெண் மகவும் ஈன்றனள். நான்கு குழவிகளும் அரசன் மனமகிழ மழலை மொழிந்து மடநடையாடி விளையாடி வந்தனர்.

திருமாவளவனுக்கு இக்காட்சிகளைக் கண்டு மனத்துக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்றாயினும், வட நாட்டுக்குப் போகும் போர் முயற்சி தடைபட்டதே யென்ற கவலை மனத்தில் இருந்துகொண்டே யிருந்தது. அதனால், அவன் அமைச்சரோடு ஆராய்ந்து, நாடாட்சிக்கு வேண்டும் முறைகள் செய்து வைத்து, வடநாடு நோக்கிச் செல்லக் கருதினன்.

பாரத பூமியோ, பெரியதொரு கண்டம். அதன் கண் உள்ள நாடுகளும் அரசுகளும் நூற்றுக் கணக்கானவை. அவையனைத்தையும் தென்னாட்டிலே தமிழகத்திலே அரசுபுரிந்த ஓர் அரசன் வெல்லவும் அடக்கியாளவும் கருதுவது எவ்வகையாற் பொருந்தும் என்னலாம்? பாரத கண்டம் உருவத்தாற் பெரிது; பழமையான சரித்திர முடைமையாற் சிறந்தது; இயல்பாகவே அமைந்த மலையரண் கடலரண்களால், பிற நாட்டவர் எவரும் தன்னை யணுகல் எளிதிலியலாத மாண்பு உடையது; எவர் வரினும் இடம் தரும் அறச் செல்வமும் உடையது; தன் உடலைப் பல கூறுகப் பிளந்து ஒரு தாய் தன் மக்களுக்குக் கொடுப்பது போலப் பல வகை மொழிகளும் கொள்கைகளும் ஒழுக்கங்களும் வரன் முறைகளும் ஆட்சி முறைகளும் ஆகிய பிரிவுகள் பலவும் தன்னைத் துண்டு துண்டுகளாய்ப் பிளந்ததால், சிறுமையும் படைத்திருக்கிறது. கதிரவன் குலத்தார் ஒரு குடைக்கீழ் ஆண்ட இப்பெரு நாட்டின் பெருமையும் சிறுமையும் அக்குலத் தோன்றலாகிய திருமாவளவன் உள்ளக் கண்ணில் உதித்தன. அவன் அதன் பெருமையை நினைந்து, மனமுருகிச் சிறுமையைத் தவிர்க்க வழி யுளதோ வெனப் பல முறை ஆராய்ந்தான். பிடர்த் தலைப் பெரியாரை அமைச்சராய்ப் பெற்றவன் சூழ்ச்சித் திறத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?

அரசர் பிரானுகிய கரிகாலன், தன் அம்மானாராகிய அமைச்சப் புலவரை யடுத்து, "நமது புண்ணிய பூமிக்குள்ள பெருங்குறை யொன்றை அகற்ற விரும்புகிறேன்," என்றான். அவர், "குறை யென்னை?" என்றார். அதற்கு

அவன், "இயற்கைச் செல்வமும் செயற்கை நலங்களும் சிறந்த இப்பெரிய நாடு ஒரு பேரரசன் ஆட்சியில் இருப்பின், எவ்வளவு சிறப்பு எய்தும்! பல சிற்றரசர் வலியற்றவராய் ஆண்டு வருதலாலன்றே அடிக்கடி போர்கள் பல நிகழ்ந்து குடிகள் பெருங்கவலைக்காளாகின்றார்கள்? ஓர் அரசும் ஒரு மொழியும் ஒரு கொடியும் இந்நாடெங்கும் ஒரு மனமாய் ஏற்றுக்கொள்ளப்படுமாறு செய்தல் இயலாத காரியமா?" என்றான்.

அவர் முக மலர்ச்சியோடு அவனை நோக்கி, "ஐய, உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மைந்தராகிய நும் சிந்தையிலே இவ்வெண்ணம் எழுந்தது சிறப்பேயாம். குமரியொடு வடவிமயத்தொரு மொழி வைத்துலகாளும் மன்னராக எம் அரசர் ஓங்கியுயர வேண்டும் என்பதே இந்நாட்டவர் விருப்பமாம்," என்றனர்.

வளவன் அப்பெரியாரை நோக்கி, "இறைவன் அருளும் தம்மைப் போன்ற பெரியோர் ஆசீர் வசனமும் இருப்பின், யான் அத்தகைய வேந்தனாக முயலலாம் என்றே எண்ணுகிறேன். முயற்சியால் முற்றுமே வினையுண்டோ?" என்றான். பிடர்த்தலையார், "சென்னியர் குலமணியே, முயற்சியால் முற்றுத வினையில்லை யென்பது மெய்யே. நுமது முயற்சியும் இறைவனருள் துணையும் உள. அன்றியும், நுமது பிறப்புக் காலத்தே கோள்கள் நின்ற நிலையை ஆராய்ந்த காலக்கணக்கர் விரைவிலே பாரத பூமி முழுவதும் ஆளும் பேரரசு ஆதற்குரிய யோகம் நுமக்கு வரும் என உரைத்தனர். அறிஞர் உரை பொய்படுமோ?" என்றனர்.

கரிகாலன், "அங்ஙனமாயின், இன்னும் சில தினங்களில் யான் வட நாடு நோக்கிப் போர்க்குப் புறப்படக் கருதியிருப்பது தமக்கும் சம்மதமென்றே நினைக்கிறேன். சென்று வினை முற்றித் திரும்பி வருங்காறும் இவ்வரசின் பொறுப்பினைத்தும் தம்மிடமே வைத்துச் செல்லவும் கருதியுளேன்," என்று முகமலர்ச்சியொடு கூறினன்.

இரும்பிடர்த் தலையார் அது கேட்டு, "மன்னர் மன்னரே, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மைந்தர் போர் புரிவதிலே விருப்பமுடையரா யிருத்தல் வியப்பன்று. "மகனுரைக்கும் தந்தை நலத்தை" எனவும், 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்" எனவும் அறிஞர் கூறும் உரைகள் பொய்யாமோ? வட நாட்டுப் போர் தொடங்க வேண்டும் என ஐந்தாண்டுகளின் முன்னே எண்ணியது சில காரணங்களாற் றடைபட்டது. அஃது இறைவன் திருவருளால் இப்பொழுது நன்கு நிறைவேறும் என்று எண்ணுகிறேன். அரசின் பொறுப்பைப் பற்றி யான் கூற விருப்பது ஒன்று உண்டு: இந்நாட்டு அரசின் பொறுப்பு யான் எளிதிற் பொறுத்து நடத்தத் தக்க நிலையில் இப்பொழுது இல்லை. ஐம்பெருங் குழுவினரும் எண் பேராயத்தாரும் ஆகிய பல நள்ளும் அறிவிற் சிறந்தார் சிலரைத் தெரிந்தெடுத்து, அவரது பொறுப்பில் அரசினை நிறுத்தி வட நாடு செல்லலாம். யான் பிறந்த நாட்டுக்கு என்னால் இயன்ற பணி புரிய ஒரு பொழுதும் பின் வாங்கேன். வடநாட்டவரைத் தமிழகத்தாராக்குதற்கு நினைந்து செய்யும் போரிலே வெற்றியே விளைக. நாடு செழிக்க நலம் பெருகுக," என்று கூறினர்.

வளவர் கோன் அதன் பின்னர் அவர்க்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, வேறு சில அமைச்சரையும் நாடு காவலரையும் படைத் தலைவரையும் அழைப்பித்துத் தமிழகத்தின் காவலுக்கு வேண்டுவன ஆலோசித்து முடிவு செய்தான்; பிடர்த் தலையார் சொல்லிய வண்ணம் அரசப் பொறுப்பினரை அமைத்தான்; காலக் கணக்கரால் நன்னாள் ஒன்று தீர்மானித்துக்கொண்டான்; அந்நாளிலே தேவாலயங்களிலெல்லாம் விசேஷ பூஜைகள் செய்வித்துப் பிரசாதம் பெற்று, நன் முகூர்த்தத்திலே குடையும் கொடியும் முன்செல்லப் படைஞர் பல்லாயிரர் திரண்டு அணியணியாய்த் தொடர்ந்து செல்ல, முன்னனுப்பிப் பிறகு தானும் புறப்பட்டான்.

தமிழ் நாட்டுள் வாழும் மக்களனைவரும், அன்று தம் அரசன் பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து, அந்நாட்டில் எங்கும் புலிக் கொடியே பறக்கச் செய்வதற்காகப் புண்ணிய திசையாகிய வடதிசை நோக்கிப் புறப்பட்டதை யறிந்து, தாமும் அவனுக்குத் துணை வருவதாய்க் கூறி, அவன் பின்தொடர்ந்தனர். சேர நாட்டுப் படைகளிற் பெரும்பகுதியும் பாண்டியர் படைஞரிற் பெரும்பாலோரும் பின் சென்றனர். நகரனைத்தும் பல வகை மங்கலக் குறிகள் தோன்றின. வழி படைத்த ஆடவர் பலரும் படைஞராய்ச் சென்றதால், நகரம் மக்கள் இல்லாதது போன்று தோன்றியது. சான்றோர் பலர் அரசனைப் பின் பற்றி வந்தனர். புலவர் புகழ்ப் புறப்பட்ட அப்புரவலன், நல்லோர் பலரையும் நாட்டகத்தே அமைதியாய் வாழ்ந்து வருமாறு வேண்டிக்கொண்டு விடை கொடுத்து, வட திசை சென்றான்.

வேளிர் பலர் படைகளும் சேர்ந்துகொண்டன. அந்நாளில் அம்மன்னனோடு சென்ற கரி பரி தேர் காலாட்களின் தொகை பாரதப் போரிலே கௌரவர் பக்கம் திரண்ட படைக்கு நிகராம் என அங்கிருந்தார் கூறினர்.

களிற்றரசின் மீது முரசம் முழங்கப் புறப்பட்ட அப்பெரும்படையைத் தமிழகத்தின் அயலில் உள்ள தென்னாட்டு மன்னர் கண்டனர்; தாம் தனித்தனியே நின்று எதிர்த்தல் அறிவுடைமை யாகாது என்று எண்ணினர். ஒன்பது குடை மன்னர் ஒருங்கு சேர்ந்தனர்; தம் படைகளை ஒன்றுசேர்த்துத் திரட்டித் தமிழகத்தின் வட வெல்லையில் உள்ள வாகைப் பறந்தலை யென்ற பெரும் போர்க்களத்தில் வந்துற்றனர். அன்னவர் வருகையை அறிந்த கரிகாலன் அங்கு விரைந்து சென்றான். பெரும் படைகள் இரண்டும் கை கலந்தன. இரண்டு நாட்கள் போர் நிகழ்ந்தது. இறுதியில் அம்மன்னர் ஒன்பதின் மரும் தம் குடையும் கொடியும் இழந்து புறங்கொடுத்துக் காட்டுள் ஒளித்தனர். அவர்தம் படைஞருள் வாழ்ந்திருந்தோர் சோழனை வணங்கி அவனிடம் பணி செய்வதாகக் கூறி உய்ந்தனர். இவ்வுண்மையை அறிந்த பிற மன்னர் ஒவ்வொருவரும் கரிகாலன் படைக் கடலிலே தத்தம் படைகளாகிய சிற்றாறுகளைக் கலக்குமாறு செய்து, தாமும் வட நாட்டுப் போர்க்கு வருவதாய்ப் புறப்பட்டனர்.

அவ்வாறு வளர்ந்துகொண்டே விந்திய பர்வதத்துக்கருகில் நெருங்கும்போது சோழ நாட்டுப் படை பல திறப் படைஞரையும் உடையதாய்ப் பெரியதொரு காடே நகர்ந்து போவது போலப் போய்க்கொண்டிருந்தது. அப்

பக்கத்திலிருந்த அரசர் பலரும் ஒற்றராலும் தூதராலும் இச்செய்தியை முன்னரே யறிந்து, தென்றிசையிலிருந்து வரும் தமிழ் மன்னன் ஒருவனுக்குத் தாம் தலை வணங்க லாகாது என எண்ணி, ஒருங்கு திரண்டு, போர் எதிர்ந்த னர். சில நாட்கள் நிகழ்ந்த போரிலே எதிர்த்து வந்த அரசரிற் பெரும்பான்மையோர் தம் முடியும் குடியும் அழிந்து ஒழிந்தனர். படைஞர் வேறு வழியின்றி, வணங் கித் தமிழகப் படையொடு கலந்தனர். எஞ்சிய சில அர சர், பொன்னும் மணியும் பிற பொருள்களும் மலைபோலக் குவித்துத் திறையளந்து, தலை வணங்கி, உயிருய்ந்தனர்.

எதிர்ப்பார் எல்லாரும் இவ்வாறு தலையிறைஞ்சித் திறையளக்க அவற்றைப் பெற்றுக்கொண்டு, மேலும் மேலும் வளவன் வடதிசை நோக்கிச் சென்றான். அங்கங் குள்ள பல திற மன்னரும் தமிழ்ப் படைஞர்க்குச் செய்ய வரிய உபசாரங்கள் செய்து, கரிகாற் பெருவளத்தான் முன்பு தலைவணங்கித் தம் முடியொடு சென்றனர். தான் எடுத்த காரியம் இவ்வாறு நன்கு நிறைவேறியதால், மன மகிழ்ந்த சோழர் குலத் தோன்றல் இமயவரையை அணு கினன்; படைஞர் பலரோடு அம்மலையைக் கடந்து அப் பால் உள்ள நாட்டை அடைய எண்ணினன். தன் பெயர்க் குப் பொருந்தப் பனிக்கட்டி நிரம்பியிருந்த அப்பெரு மலை, தென்னாட்டின்மேல் வாழ்ந்து பயின்ற படை வீரர்க்கு எளிதில் வழி விடாதாயிற்று. அது கண்டு, சோழர் பிரான், மேலும் வடக்கு நோக்கிச் செல்ல வொட்டாது தடுத்த அம்மலையைத் தண்டிக்கக் கருதியவன் போலத் தன் கையில் இருந்த செண்டால் அதன் சிகரத்தை அடித்து, உயர்ந்ததொரு நிலையில், அம்மலை தன்னுட்சிக்

கடங்கியதற்கு அறிகுறியாகப் புலிப் பொறி பொறித்தான்.

பிறகு அவன் நினைத்தது முற்றச் செய்த நிமலனைத் தொழுது, தென்னுடு நோக்கித் திரும்பினன். திரும்பு காலில்சோணை யாற்றங்கரையில் உள்ள வச்சிர நாட்டை யடைந்தான். அந்நாட்டு மன்னன் சோழனது பிரதாபத்தை முன்னமே செவியால் அளந்தறிந்தவனுகையால், விரைந்து வந்து, உபசரித்து, முத்துப் பந்தர் ஒன்றும் பிற பொருள்களும் கொடுத்துத் தமிழ் வேந்தன் நட்புப் பெற்றுக்கொண்டான். தமிழ்ப் படை அதன் பின்னர் மகத நாட்டை யடைந்தது. அந்நாட்டு மன்னன் போர்க்கு எதிர்த்து வந்தான். வடவரும் தென்னவரும் கைகலந்து நெடும்போர் புரிந்தனர். தெய்வ பலம் பெற்றிருந்த சென்னியின் பக்கமே வெற்றித்திரு வந்துற்றனள். வட மகத நாட்டு மன்னன் தலை வணங்கித் தன்னகரத்திலே அரும்பணி யியற்ற வல்ல தொழிலாளர்களாற் பொன்னும் மணியும் கொண்டு செய்வித்திருந்த பட்டி மண்டபம் ஒன்றையும் பிற அரும்பொருள்களையும் கொடுத்தான். சோழன் அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, அவந்தி நாடு அடைந்தான். அம்மன்னன் வட நாட்டவர் பாட்ட பாட்டை யெல்லாம் நன்கு கேட்டிருந்ததால், விரைந்து வந்து எதிர் கொண்டு, படை ஞர்க்கும் பிறர்க்கும் வேண்டிய உபசாரம் எல்லாம் செய்து, அரசர் பிரானுகிய கரிகாற் பெருவளத்தானை வணங்கி, முன்னின்று, தன் முன்னோர் காலமுதல் தன் னாட்டுக்கு அழகு தந்து அமைந்திருந்ததும் பொன்னும் மணியும் பொருந்த அமைத்ததும் ஆகிய தோரணை வாயில்

ஒன்றையும் பெரும்பொருள் பிறவற்றையும் கொடுத்துப் பதின் காதம் பின் வந்து வழி விட்டனுப்பினன்.

தமிழ் மறவர் தமிழ் நாடு நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புலவர் பற்பலர் வந்து, கரிகால் வளவனைப் புகழ்ந்து, பரிசில் பெற்றுச் சென்றனர். அரசர் பலரும் அரசர்க்கரசனென அவனைப் பணிந்தனர். பாரத பூமியில் உள்ள நாடுகள் அனைத்தும் அரசு ஒன்றின்கீழ் வந்ததால், அவ்வரசுக்குரிய அருந்தமிழ் மொழி எங்கும் தனியரசு செலுத்துவதாயிற்று. சோழனும் அவன் பின் வந்த படைஞரும் தம் நாட்டினின்றகன்று சென்ற மூன்றாண்டுகளின் பிறகு திரும்பித் தம் நாட்டுள் வந்தனர்.

நாட்டவர் அனைவரும் பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் பாவை விளக்கும் அலங்காரமாக வீதிகளெங்கும் பரப்பி மாவிலைத் தோரணங்கள் கட்டி, வாழை கமுகு மரங்கள் நாட்டித் தம்மரசனை அன்போடு எதிர் கொண்டனர். அங்கு வந்தாருள் ஒரு புலவர்,

" உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
தமதெனக் கொண்ட தமிழ்ப்பழங் குடியில்
முன்னையோர் புகழெலாந் தன்னையே யடையப்
பிறந்தனை போரிற் சிறந்தனை யரசியல்
நெறியினி லுயர்ந்தனை நினைத்தன முற்றுமாஉம்
ஆற்றலு மமைந்தனை யரசெலாம் பணிய
வடநாட் டமரினில் வாகை சூடிய
களிமால் களிற்றிற் கரிகால் வளவ!
மரபிசை வளர்க்குமாஉம் மைந்தரை யடைந்தனை

கோடையும் படையும் நடையும் மலிய
அறந்தலை சிறப்ப வமைந்தபன் னலமுறீஇ
வேள்விகள் பலவும் விருப்புட னியற்றுபு
வாழ்வினிற் பெருகி வாழிய வாண்டுகள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே.''

என்று பாடி வாழ்த்தினர். அது கேட்ட புரவலன் முக மலர்ந்து, அவர்க்குரிய சிறப்புச் செய்து, நகருட் புகுந் தான்; அரசப் பொறுப்பினரிடம் அரசுரிமையை யேற் றுக்கொண்டு முன் போல் அரசாண்டான்.

IX

நாடு நகரங்கள் அவற்றை ஆளும் அரசனது ஆற்றலுக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கும். அரசு வல்லரசாய் இருக்குமாயின், நாடு நகரங்கள் செல்வங் கொழிக்கும். நாடு உருவத்தாற் பெரியதாயினும், அறிவறை போகிய அமைச்சரைத் துணைக்கொண்ட மெல்லியானுகிய கிழவனுல் ஆளப்படுமாயின், உயிரற்ற அழகிய உடம்புபோல இருக்கும். இவற்றை உணர்ந்த கரிகாலன் தன் நாடு பண்டைச் சோழநாட் டெல்லையினுள் அடங்காது பாரத பூமி முழுவதும் ஆகியதால், தன் ஆட்சியின் சிறப்புக்குத் தக்கவாறு, நகரம் ஒன்று அமைக்க வேண்டும் என விரும்பினன்; ஒரு நாள் அரண்மனையில் அறிஞர் பலருடன் அமர்ந்து, அம்முயற்சிக்குத் தக்க ஆராய்ச்சி செய்பலாயினன். அமைச்சர் ஒவ்வரும் புலவர் சிலரும் நாட்டு மக்களுள் முதியார் சிலரும் அங்கடைந்தனர். அவரவர் கொள்கைகளையும் வெளிப்படையாக அறிய விரும்பிய வளவன் பிரான், அவர்களோடு அளவளாவலாயினன்.

கரிகாலன்:—ஐயன்மீர், யாம் இந்த நாட்டோடு அமையாமல், இறைவனருளால் இமய வரையளவுஞ் சென்று புலி பொறித்துப் பாரத நாடு முழுவதையும் ஆளப் பெற்றுக்கொண்டது நீவிர் அனைவரும் அறிந்ததே. இனி இந்நாட்டின் நலத்தின் பொருட்டு என்

னென்ன செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்யவே இவ் வகைக் களத்திலே கூடியுளோம். நாட்டின் நலங் கருதி உங்களால் தெரிவிக்கப்படுவது எதுவாயினும், முற்று விக்கச் சித்தமாயிருக்கிறோம்.

இரும்பிடர்த் தலையார்:—அரசர் பெருந்தகையே,

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

எனப் பெரியார் அருளிச் செய்தது பொய்யா மொழி யன்றே ? அரச பதவி பெற்றவன் தன் ஆட்சிக்குக் கீழ டங்கிய குடி மக்கள் தன்னை எளிதில் அடைந்து தமக்கு வேண்டுவனவற்றைத் தெரிவித்துக்கொள்ள இடந் தர வேண்டுவது அமைவே. அரசன் நாட்டின் பொருட்டு என்ன செய்யக் கருதினும், அறிஞராகிய பெரியாரது ஆதரவைப் பெற வேண்டுவது அவசியமாம். அம்முறை கருதி இங்குள்ள பெரியாரெல்லாம், இன்று அழைக்கப் பெற்றது நலமே. இவருள் கவுணியனர், கவுதமனர், கீரனர், கண்ணனர், கௌசிகனர், சேந்தனர், நாகனர், பூதனர், புலியூர் கிழார் முதலிய பெரியோர் பலர் இங்கு வந்திருத்தல் இவ்வவைக் களத்துக்குச் சிறப்பளிக்கின் றது. இந்நல்லோர் உற்றூர் அயலார், இன்னர் இனி யார், உயர்ந்தார் தாழ்ந்தார் என்ற வேறுபாடுகள் கரு தாது, உற்றதையே யுரைக்கும் உயர் குணம் படைத் தோராவர். இவரெல்லாம் கூற விரும்புவது எதுவாயி னும் அரசர் பெருமான் செவிசாய்த்து ஏற்றுக்கொண்டு ஆவன செய்தல் முறையென்றே கூறுவேன். பெரியீர் காள், இனி நும் முள்ளத்தில் உள்ளதை வெளியிட்டு உரைக்க வேண்டுகிறேன்.

கவுணியனார்:—அரசரேறே, பிடர்த்தலைப் பெரியீர், அன்பர்காள், யான் இப்பேரவைக்கண் தெரிவிக்க விரும்புவது ஒன்றுளது. அஃது அரசர் பிரான் விரைவிலே மேற்கொள்ளற்குரிய வினையாகும். நம்மரசர் வட நாடு சென்று, பல மன்னரையும் வென்று, இமயத்திற் புலி பொறித்த செய்தி நமக்கு மகிழ்ச்சி விளைப்பது மெய்யே. ஆனால், அதன் பயனுய் நம் நாட்டவர்க்கு விளைந்திருக்கும் பெரும்பொறுப்பையும் நாம் மறக்கக் கூடாது என்று கூற விரும்புகிறேன். வென்ற பல நாடுகட்கும் உரிய அரசுகளையும் நம்மிற் சில அதிகாரிகளையும் அமர்த்தல் வேண்டும். வென்ற நாடுகள் அரசும் முறையும் இழந்திருத்தல் நமக்கே இழிவு பயக்கும். இந்நாட்டிலிருந்து அந்நாடுகட்கு அடிக்கடி போய் வரும் பல பொறுப்பாளர்களும் ஏற்படல் வேண்டும். அங்கு அரசு பூண்பார் குடி மக்களுக்கு உரிய நலம் புரியும் முயற்சிகளில் அற நெறிக்கு மாறுக நடப்பாராயின், அவர் செயலால் விளையும் பழி நம் அரசைச் சாரும். ஆகையால், வடநாட்டுப் போரால் நாம் அடைந்த புகழ் குறைபடாதிருக்க வேண்டுமாயின், அந்நாடுகளை நன்கு ஆட்சி செய்ய வேண்டிய முயற்சிகளை நாமே செய்ய வேண்டும். நாம் அதிக தூரத்திலிருந்து எங்ஙனம் இப்பொறுப்பைத் தாங்குவது என்று இவர் எண்ணலாம். இமய முதற் குமரி வரை நம் அரசின் கீழ் அடங்குவதால், இந்நாட்டினுள் எவரும் எளிதிலே விரைவிலே போய் வரத் தக்கவாறு சாலைகளும் இடையிடையே சோலைகளும் அறச்சாலைகளும் அமைத்தல் வேண்டும். அரசரேனும், அரசரது ஆணை பெற்றவரேனும், இரண்டாண்டு

கட் கொருமுறை அந்நாடுகளைப் பார்வையிட்டு வர வேண்டும். நம் நாட்டுப் படைஞரிற் சிறுசிறு தொகுதி யார் அந்நாடுகளில் நம் கொடிக்கு உரிய பெருமை ஓங்கி வளருமாறு காவலாயிருக்கவும் வேண்டும். இவை யனைத்தும் செய்தாலன்றி, நாம் இந்நாடுகளை வென்ற தால் ஆகும் பயனை அடைய இயலாது போம். இங்குள் ளார் அனைவரும் நான் கூறுவது பொருத்தம் எனவே அறிவர். அரசர் பிரான் வேண்டுவன செய்கவென்று வேண்டுகிறேன்.

வளவன்:—ஐய, நீவிர் கூறியவண்ணம் வேண்டுவன செய்ய முதற்கண் பல நெடுஞ்சாலைகள் அமைத்தல் வேண்டியிருத்தலாலும், நம் படைஞரிற் பலர் இப்பொ ழுதே ஆங்காங்கு நிறுத்தப்பெற்றிருத்தலாலும், இயன்ற வளவு விரைவிலேயே தொடங்கி முடிப்போம். நம் நாட் டின் பெருமையைக் காப்பாற்ற இது மிகவும் அவசியம் என நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

பதுமனூர்:—அரசர் பெருமானே, அறிஞர்களே, யான் நம் சோழ நாட்டகத்தே ஆகவேண்டிய சில செயல் களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அமர முனிவன் அகத்தியன்றனது கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை பாடல் சால் சிறப்பிற் பரதத் தோங்கிய கோடாச் செங்கோற் சோழர் தங் குலக்கொடி யாகையாற் புலவர் நாவிற் பொருந்திய அப்பூங்கொடியைப் பிறரெவரும் பொதுமை கொண் டாடா வண்ணம், நம் நாட்டுக்கும் பெரும்பயன் விளைக்கு மாறு பெருங்கரைகளுக்குள் அடங்கி ஒழுகச் செயல் வேண்டும். வெள்ளம் பெருகி வருங் காலங்களிலே காவிரியாறு மிகவும் வலியதாய், எவர்க்கும் அடங்காது,

பலவூர்களிலும் புகுந்து, வயல் வளங்களை அழித்துவிடு கிறது. அவ்வாறு விளையும் நஷ்டம் குறைதல் வேண்டும் என்பது குடி மக்கள் கருத்தாகையால், அதற்கிணங்கவும் நாட்டின் நில வளம் நீர் வளம் பெருகவும், காவிரிக்குப் பேரணை யொன்று அமைக்கவும் வேண்டும். கரைகளுக் குள் அடங்கி ஓடும்படி வேண்டும் முயற்சிகள் செய்யவும் வேண்டும். இவை இந்நாட்டுக்கே பெரும்பயன் விளைக் கும் முயற்சிகளாகுமாயினும், பாரத தேய முழுமையும் ஆளும் அரசர் பிரானுக்கு உரிமையான நாடு செல்வஞ் செழித்து விளங்க ஏதுவாமாகையால், இப்பொழுதே தொடங்கி விரைவிலே முற்றுவித்தற் குரியதாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாவன்:—நாம் அங்ஙனமேவிரைவிற் செய்வோம். காவிரிக்குக் கரை யமைத்தல் வேண்டு மென்பது எமக்கும் நெடுநாளைய எண்ணமாம். கரையோரமுள்ள ஊரவர் எல்லாம் தத்தம்மால் இயன்றவளவு அரசினர் பொருட்டு மெய்ப்பாடு பட வருவர் என்று எதிர் பார்க்கிறோம். பலரும் ஒன்று திரண்டாலன்றி, இவ்வினை முற்றுமா றில்லை. அக நாட்டவரும் தம்மால் இயன்ற முயற்சியும் உதவியும் செய்தல் நலமேயென்று கூறுவோம். அணை யமைத்தல் விரைவிலே தொடங்கப் பெறும். காவிரி தாய்க்குச் சிறு சிறு மக்கள் போல அமைந்த பல வாய்க் கால்களும் உள. அவையும் நன்கமைக்கப் பெறும். இம் முயற்சிக்கெல்லாம் நும் உதவி எதிர் பார்க்கப்படும். குடி மக்கள் உழவு ஒழிந்த காலங்களில் இங்குப் பணி பூண விரைந்து வருவராயின், அரசினர் ஆதரவு பெற்று விரை வில் முடிக்கலாம். இனி இவ்வாறே பிறர் கருத்தை யும் அறிய விரும்புகிறோம்.

கவுதமனர்:—சேர சோழ பாண்டிய மண்டலங் களே யன்றிப் பெரும்புகழ் படைத்த பேரரசுகள் பிற வற்றையும் அடக்கியாளும் அரசர் பெருமானே, நெடு நாளாகப் பாண்டிய நாட்டிலே நடை பெற்று வரும் தமிழ்ச் சங்கம் போன்று, இந்நாட்டிலும் தம் முன் னோர் பெயர் விளங்கச் 'சோழர் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரோடு ஒரு புலவ ரவைக்களம் நிறுவ வேண்டு கிறேன். புலவர் எண்ணிறந்தார் உள்ள இந்நாட்டிலே தமிழ்ச் சங்கம் இல்லாதிருப்பது, பெருங்குறையன்றே? அக்குறையை நிவிர்த்திக்க ஆற்றலுள்ள அரசர் பிரான் நீரே யென்பதை யான் கூறவும் வேண்டுமோ ?

வளவன்:--எமக்கும் அது விருப்பமே. அங்ஙனமே செய்கின்றேம். புலவரை ஆதரியாத நாடு நாடெனப் படுமா? நம் நாட்டகத்தே உள்ள புலவர் பலரும் நம்மை அடிக்கடி காண வதவுமாறு தமிழ்ச் சங்கம் நிறுவுவது எமது முதற் கடமையாம்.

கீரனர்:—மன்னர் மன்னரே, நமது அரசின் எல்லை அதிகமாயதற் கேற்ப, அரசிருக்கை நகரமும் பெரிதா யமைதல் வேண்டும். உறையூர் பெரிய நகரமே யாயினும், இன்னும் வளர்வதற்கு இடமில்லை. வேறு ஏதேனும் பழமையான நகரம் ஒன்றைப் புதுமையுறத் திருத்தி யமைத்து, அரசிருக்கை யாக்கிக்கொள்ள உம்மை யான் வேண்டுகிறேன்.

கௌசிகனர்:—அரசரே, உழவும் வாணிகமும் நாட்டு மக்களுக்கு இரு விழிகளாம். உழவினை வளர்க்கக் காவிரிக்குக் கரையும் அணையும் அமைக்க ஏற்றுக்கொண் டீர். வாணிகம், உள் நாட்டு வாணிகமும் கடற்றுறை

வாணிகமும் என இருவகையாம். உள்நாட்டு வாணிகம் நன்கு நடைபெற வேண்டின், நம் நாட்டு நகரங்கள் பல வற்றுக்கும் போக்கு வரவு சௌகரியங்கள் ஏற்பட வேண்டும். சாலைகளிலே தீயார் மறைந்திருந்து வணிகரைத் துன்புறுத்தா வகை காவற்படை நாடெங்கும் அமைதல் வேண்டும். கடற்றுறை வாணிகத்துக்கு உதவுமாறு துறைமுகப் பட்டினங்கள் சில அமைத்தல் வேண்டும். மரக்கலங்கள் பல அமைத்தலும் வேண்டும். இடையிடையே கலங்கரை விளக்கங்கள் சில அமைக்க வேண்டும். இவை யெல்லாம் அமைத்த பிறகு கடற்றுறையில் உள்ள பெரிய பட்டினம் ஒன்றை அரசர் பிரான் உறையுளாகவும் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்யின், அயல் நாட்டவர் பலர் வரப்போகவும், வியாபாரம் பெருகவும், நம் நாட்டுச் செல்வம் வளரவும் இடம் உண்டாகும்.

சேந்தனர்:—அரசர் பெருமானே, இவ்விருவரும் கூறிய யோசனைக்கு உதவியாகயான் ஒன்று கூற விரும்புகிறேன்: முன்னே நாளிலே சம்பாபதி யென்ற பெயர் பூண்டிருந்ததும் காவிரி யாறு கடலொடு கலக்கும் சங்கமுகத் துறையில் உள்ளதுமாகிய புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் மிகவும் அகன்ற இடத்தை யுடையது; சோழர் குலத்தோடு தோன்றி வளர்ந்த தொன்மைப் புகழ் பூண்டது. அந்நகரை அரசிருக்கை யாக்கிக்கொள்ளின், எல்லா வகை நலமும் அங்குப் பொருத்தமுற அமையும். நம் நாட்டின் தற்கால நிலைக்கேற்ற பெருமை வாய்ந்த நகரம் அமைக்க அதுவே அமைவுடையதாம்.

வளவன்:-எம் எண்ணத்தில் இருப்பதும் அதுவேயாகும்.

நாகனார்:—அரசர்க் கரசரே, அங்நகரம் புதிதாய் அமைக்கப்படும்பொழுது தற்கால நிலைக்கு வேண்டிய பல வகையான சௌகரியங்களும் அதன்கண் அமைக் கப்படல் வேண்டும். அன்றியும், வட நாட்டிலிருந்து நாம் பெற்று வந்துள்ள தோரணவாயிலும், பட்டி மண்ட பமும், முத்துப் பந்தரும், பிற அரும்பொருள்களும் அதன்கண் உரிய இடங்களில் அமைக்கப் பெறல் வேண்டும்.

வளவன்:—அங்ஙனமே செய்வோம்.

கண்ணனார்:—அரசர் பெருந்தகையே, அவ்வாறு அமைக்கப் பெறும் புது நகரத்திலே வான சாஸ்திர ஆராய்ச்சிச்சாலை யொன்று தமிழ்ச் சங்கத்துக்கு அடுத்து அமைக்க வேண்டுகிறேன். நம் நாட்டவர் வான நூலும் கணித நூலும் நன்கு பயில அது பேருதவியாய் இருக் கும்.

பூதனார்:—புண்ணியர் குடியிற் பிறந்த புரவலரே, பல நாடுகளையும் நாம் வென்று அடக்கியிருக்கின்றோ மாகையால், அவ்வந்நாட்டு மக்களும் நம் நாட்டை நாடு வார்கள். அவர்கள், தொழிற்றிறம் அனைத்தும் அந் நகரத்தே அமைதல் வேண்டும்.

புலியூர் கிழார்:—தமிழக மன்னரே, பூம்புகார் எனும் நகரத்தே புது நகரம் அமைக்கும் முயற்சி விரைவிலே தொடங்கப்படும் என்பது கேட்டு மிக்க மகிழ்வெய்து கிறேன். அதுபற்றி யான் கூற விரும்புவன சிலவுள: இப்பொழுது அம்மூதூர் இருக்கும் நிலையை யான் அறி வேன்; இனி அதன்கண் இன்ன அமைவுகள் வேண் டும் எனக் கூற விழைகின்றேன். அந்நகரம் இப்பொழுது

பட்டினப் பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்ற இரு பகுதி களை யுடையதாய் இருக்கிறது. பட்டினப் பாக்கத்திலே பழமையான பல மாளிகைகளும், யவனர் வாழிடங் களும், வியாபாரத்தின் பொருட்டுக் கடல் வழியே அயல் நாடுகளிலிருந்து வந்த பிறர் வாழும் இடங்களும், வண் ணமும் சுண்ணமும் கலவையும் பூவும் புகையும் விரைப் பொருள்களும் விற்போர் வாழும் வீதிகளும், பட்டிலும் எலி மயிரிலும் பருத்தி நூலிலும் நுண்ணிழைகளால் ஆடை நெய்வோர் வாழும் இடங்களும், அகிலும் பவள மும் முத்தும் மணியும் பொன்னும் பிற பொருள்களும் அளவின்றி விற்கப்படும் கடைத் தெருக்களும், கடல் வீதியும், பிட்டும் அப்பமும் கள்ளும் மீனும் உப்பும் வெற்றிலையும் விற்பார் வாழும் தெருக்களும், வெண் கலக்காரரும் செம்பு கொட்டிகளும் மரத் தச்சரும் இரும்புக் கொல்லரும் சித்திரக்காரரும் சிற்பிகளும் பொற் கொல்லரும் இரத்தினப் பணிகாரரும் தையற்காரரும் பிறரும் வாழும் இடங்களும், நெட்டியினலும் துணி யினலும் பூவேலை செய்து தொழிற்றிறங் காட்டுவோரும் பிறரும் வாழும் இடங்களும், குழலினும் யாழினும் இசை பயின்ற பாணர் வாழிடங்களும், ஏவலர் வாழும் இடங்களும், பிறவும் சிறுகச் சிறுகக் கலப்புற்று அமைந் துள்ளன. இவற்றை அளவாலும் உருவத்தாலும் பெருக்கி, இன்னின்ன தொழிலாளர் இன்னின்ன இடங்களிலேதான் வாழ்தல் வேண்டும் என்று நியதி யமைத்து, நகரின் அழகை வளர்க்க வேண்டும். அயல் நாட்டுப் பொருள்களை வியாபாரம் செய்யும் கடைத் தெருக்கள் தனித்து ஓரிடத்திலும், உள் நாட்டுப்

பொருள்களை விற்கும் பெருங்கடைத் தெரு வேறே ரிடத்திலும் ஒன்றோடொன்று கலவாமல் அமைய வேண் டும். பட்டினப் பாக்கத்திலே இராச வீதியும், தேரோடும் வீதியும், கடைத் தெருவும், வணிகர் வாழ் வீதியும், வேதியர் வீதியும், உழவரும் ஆயுள் வேதியரும் காலக் கணக்கரும் வாழும் வீதியும், முத்துக் கோப்போரும் சங்கறுப்போரும் சூதரும் மாகதரும் வேதாளிகரும் நாழிகை யளப்போரும் கூத்தரும் கூத்தியரும் பிறரும் வாழும் உறைவிடங்களும் உள்ள வீதியும், யானைப்பாக ரும் தேர்ப்பாகரும் வாழும் தெருக்களும், பிற அமைப் புக்களும் முன்பிருந்தவற்றைக்காட்டிலும் அகலமும் அழகும் அமைய அமைக்கப்பெற வேண்டும். அந்நகரத் திலே பழமையான பல வனங்கள் உள. அவற்றை நன்கு திருத்தி அமைத்தல் வேண்டும். தெய்வ நிலைகள் பல உள. அவையும் இருக்குமிடங்களில் அழகு மிகப் பெற வேண்டுவன செய்தல் வேண்டும். புதுமையான உவ வனங்களும் சிங்கார வனங்களும் அமைத்தல் நலமாம் என்றும் கூறுவேன். நகரமைத்தற்குரிய நூலாராய்ச்சி மிக்க அறிஞர் பலர் உதவி இம்முயற்சிக்கு வேண்டும் என்பது நான் கூறுமேல் விளங்கும்.

வளவன் :—அங்ஙனமே செய்கின்றோம். அன்றி யும், மருவூர்ப் பாக்கத்துக்கும் பட்டினப் பாக்கத்துக்கும் இடையே பழமையாக அமைந்த நாளங்காடியைப் பெரிதாக்கி அமைத்து, நகரத்தினர்க்குப் பயன்படுத்த வும் கருதியுளோம்.

சேந்தனர்:—முன்னே பல வித அழகுகள் அமைந் திருந்த அந்நகரத்தைப் புதுப்பிக்கும் முயற்சி சாலச்

சிறந்ததே. ஆயினும், பண்டைப் பெருமையை விளக்கத் தக்க அறிகுறிகள் எவையேனும் இருப்பின், அவற்றை நிலை மாற்றி அழகழிக்காதிருக்க வேண்டுகின்றேன். அவற்றுள் யானறிந்த ஒன்றிரண்டை இங்கே கூறுகிறேன்: பண்டு தொட்டே பெருமை வாய்ந்த ஐவகை மன்றங்கள் அங்ஙகரில் உள. பட்டினத்திலே பிறர் பொருளைக் கவர்வோர் உளராயின், அவர் வழி யறியாது மயங்க வைக்கும் வெள்ளிடை மன்றம் ஒன்று உண்டு. கூனரும் குருடரும் ஊமரும் செவிடரும் அழகு மெய் கொண்ட பெரும்பிணியாளரும் மூழ்கி நல்லுடம்பு பெற்றுச் செல்லும் பெருங்குளம் ஒன்றை யுடைய இலஞ்சி மன்றம் என்பது ஒன்று உண்டு. பிறரால் மருந்தூட்டப் பெற்றுப் பித்தேதிலினேரும், நஞ்சுண்டு நடுங்கு துயர் உற்றேரும் நாகங் கடிக்கப்பட்டோரும் பேய் கோட்பட்டோரும் வந்து வலஞ் செய்து தத்தம் துயர் நீங்கி மகிழ்ச்சி பெற்றுச் செல்லும் நெடுங்கல் நின்ற மன்றம் ஒன்று உண்டு. தவ வேடம் பூண்டு தவ நெறிக்குப் பொருந்தா வொழுக்க முடையோர், ஒழுக்கங் கெட்ட பெண்டிர், முறை மறந்த அமைச்சர், பிறர் மனை நயப்போர், பொய்க்கரி கூறுவோர், புறங்கூறும் புல்லியோர் என்ற இன்னவரை அறைந்துண்ணும் பூதம் நிற்கும் சதுக்கம் ஒன்று உளது. அரசனது செங்கோன்மை சிறிது தவறுமாயினும், அறங் கூறும் அவையத்திலே ஓரம் பேசும் கருத்தோடு தருமாசனத்தார் தீர்ப்புக் கூறினும் இக்குற்றங்களைக் கண்டு பொருது கண்ணீர் உகுத்து அழும் இயல்புடைய ஒரு தெய்விகப் பாவை நின்ற மன்றமும் உளது. இவற்றைப் பற்றிப்

புலவர் பலவாறு புகழ்ந்திருக்கின்றனர். இம்மன்றங்க ளெல்லாம் சிறுமை பெருது சிறப்புப் பெறுமாறு வேண்டுவன செய்தல் அரசர் கடமையாம் என்பதை யான் எடுத்துரைக்க வேண்டுமோ?

வளவன்:—அறிஞர்காள், நீவிர் கூறிய எல்லாம் மந்திராலோசனை சபையில் நன்கு ஆராய்ந்து, அற நெறிக்கு மாறு படாத வகையில் உரிய தீர்மானம் செய்யப் பெற்று, விரைவிலேயே முயன்று முடிக்கப்படும் என்று கூறுகிறேம்.

அனைவரும்:—அதுவே எம் விருப்பமும் ஆகும்.

வளவன்:—அறிஞர்காள், முன்பு நாம் சோழ நாட்டளவில் அடங்கிய நாட்டைப்பற்றிய பொறுப்பையே பெற்றிருந்தோம். இப்பொழுதோ, பாரத பூமி முழுவதையும் ஆளும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறேம். ஆகையால், நீவிர் கூறிய எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்பது எமது எண்ணமேயாமாயினும், அரச பொறுப்பின் சிரமத்தால் ஒன்றிரண்டு மறக்க நேரிடுமாயினும், யாம் உள் நாட்டகத்தே பல நாள் இருக்க வியலாமல் அயல் நாடுகளைப் போய்ப் பார்த்து வர நேருங் காலங்களில் இம்முயற்சிகள் நிகழ்வதில் எவையேனும் குறைகள் விளையினும், அவற்றை நீவிர் அனைவரும் அவ்வப் பொழுது எம்மிடமேனும் அமைச்சரிடமேனும் தெரிவித்து வேண்டிய சீர்திருத்தங்கள் செய்ய உதவி புரிவீர்கள் என்று எதிர் பார்க்கிறேம். நம் அம்மானாகிய இரும்பிடர்த்தலையார் முதுமைப்பருவம் அடைந்திருத்தலால், அவருக்கு அதிக சிரமம் கொடுக்க யாம் விரும்பவில்லை. புது நலம் அமைப்பதற்கும் காவிரிக் கரை

யமைத்தற்கும் பிற முயற்சிகளுக்கும் குறைந்தது ஐந்து ஆண்டுகளேனும் வேண்டும். இத்தொழில்கள் நடை பெற்று வருகையில் மேற்பார்க்கும் பொறுப்பு முழுமை யும் அரசினருக்கு என எண்ணி இருக்கமாட்டீர்கள் என நம்புகிறேம். ஆங்காங்கு தும் ஊரருகில் நடக்கும் பணிகளே நீவிர் மேற் பார்க்கவும் வேண்டுகிறேம். இனி இறைவன் திருவருளால் நாம் எண்ணிய எண்ணமெல் லாம் நன்கு நிறைவேறுகவென்று வேண்டிக்கொள் வோம். நீவிர் விடை பெறலாம்.

X

ஐந்தாண்டுகள் சென்றன. பாரத நாட்டிலுள்ள பல சிறு தேயத்தாரும் சோழ நாட்டுக்கு வந்து, ஏகாதி பதியாகிய கரிகாற் பெருவளத்தானுக்குத் திறை யளந்து சென்றனர். காவிரியாறு தன் வெள்ளப் பெருக்கால் நிலங்கட்குக் கேடு விளைக்கா வண்ணம், மலை நிகராக இரு புறமும் கரையமைக்கப் பெற்று, அவற்றுள் அடங்கி ஓடுவதாயிற்று. நதி பாயும் வழியில் உள்ள ஒவ்வொரு கிராமத்தாரும் காவிரிக் கரை யமைக்கும் முயற்சியில் தங்கள் தங்களால் இயன்ற உதவி புரிந்தனர். பணியாளர் தம் பணியை நிறைவேற்றி விடை பெறும் காலம் வரையிற் குடும்பத்தோடு அரசினரால் ஆதரிக்கப் பட்டனர்.

புகார் நகரமும் பெரியார்கள் வேண்டிக்கொண்ட வாறு அமைக்கப் பெற்றது. அங்குப் பழமையும் புதுமையும் ஒன்றோடொன்றிணைந்து அழகொடு விளங்கின. தெய்வச் சிற்பிகளால் இயன்றவையோ என்று உலகத்தார் மதிக்கத் தக்க உன்னதமான கோபுரங்களையுடைய ஆலயங்கள் பல அமைந்தன. மருவூர்ப்பாக்கத்திலே நடு நாயகமாய் அரசர் பிரானுக்கென ஒரு பெரிய அரண்மனை அமைந்தது. அதனைச் சுற்றிச் சூரியனைச் சுற்றிய கிரகங்கள்போன்று பலநாட்டரசரும் தத்தமக்கெனச் சிறு சிறு மாளிகைகள் அமைத்துக்கொண்டனர். கடற்கரை

யோரத்திலே பண்ட சாலியொன் றமைக்கப்பட்டது. மருவூர்ப்பாக்கத்திலே தமிழ்ச் சங்கத்தின் பொருட்டுப் பெரியதொரு கட்டடம்நிருமிக்கப்பெற்றது. அதற்கருகே ஆயுள்வேத வைத்திய வித்தியா சாலைக்கும் வான சாஸ்திர ஆராய்ச்சிச் சாலைக்கும் உதவுமாறு அகன்ற பெரிய கட்டடங்கள் அமைக்கப்பெற்றன. அந்தணர் பலரும் புலவர் பலரும் அரசர் தமக்கு அமைத்துக் கொடுத்த மணியகங்களிற் குடியேறினர். நில வளமும் நீர் வளமும் அமைந்த சோழநாட்டுக்கு வாணிகத்தால் வளம்பெருக்க வாய்ப்புடையதாய் அமைந்த அந்நகரிலே வணிகரும் உழவரும் அருந்தொழிலாளிகள் பலரும் தத்தமக்கென அமைந்த இடங்களில் மணைகள் அமைத்துக்கொண்டு குடியேறினர். தமிழக மக்களுட் சிறந்தார் பலரும் வட நாட்டு மன்னருட் பெரும்பாலோரும் புது நகரத்தே அரசர் பிரான் புகுதரும் வைபவத்தைக் காணும் அவாவோடு வந்து நிறைந்திருந்தனர்.

ஒளி நூலறிஞரால் எடுத்துரைக்கப்பட்ட நன்னாளிலே சோழ குலாதிபனாகிய கரிகாற் பெருவளத்தான் உறையூரை நீங்கிப் புறப்பட்டுப் பரிவாரங்கள் புடை சூழ, அமைச்சர் பலர் அருகிலே வர, அரசுவாவின் மீதமர்ந்து, வழியெல்லாம் குடி மக்கள் நன்கு உபசரித்து வாழ்த்துக் கூறப் பிரயாணம் செய்து, நல்லோர் குறித்த நன்னாளிலே புகார் நகர் வந்தடைந்தான். நகரத்தே குழுமியிருந்த அந்தணரும் அரசரும் வேளாளரும் வணிகரும் புலவரும் பாணரும் பிறரும் திரண்டு வந்து, அரசனை வரவேற்றனர். அவர்திறைவேந்தன் உவந்து கொடுத்த தோரண வாயில் வழியே அரசர்க்கரசனாகிய

கரிகாலன் மங்கள வாழ்த்துக்களினிடையே ஐவகை வாத்தியங்களும் முழங்க, நகர்க்குட் புகுந்தான். சோழர் தமிழ்ச் சங்கத்திலே புலத்துறை முற்றுதற்கு வந்திருந்த புலவர் பலரும் தத்தம் அன்பும் ஆதரமும் தோன்றப் பல வகைச் செய்யுட்களால் அரசனை வாழ்த்தினர். நகர்க்குட் புதுமையாக மனைகள் அமைத்துக் குடி புகுந்தார் பலர்க்கும் நல்வரவு கூறப்பட்டது. அரசர் பிரானும் மன மகிழ்ந்து, அங்கு நிறைந்திருந்தார் பலர்க்கும் உபசார மொழிகள் கூறினன். பின்னர் அரசுவாவின் மீது அமர்ந்த வண்ணமே நகர் வலஞ் செய்து, தேவாலயங்களிலே நைமித்திக பூஜைகள் நிறைவேற்றி, அந்தணாசி பெற்று, அரண்மனை புகுந்தான். இரும்பிடர்த் தலையார் அன்று அமைந்த ஆனந்தப் பெருக்கின் எல்லையற்ற தன்மையை இன்னதென அறிய எவரால் இயலும்?

பின்னர்ச் சில தினங்கள் மங்களமுழக்கத்திடையே கழிந்தன. அப்பால் ஒரு தினம் இரும்பிடர்த் தலையார் புலவர் பலர்க்கும் சிறப்புக்கள் அவரவர்க் கேற்றவாறு செய்வித்தனர். பின்பு அயல் நாட்டவர் அனைவரும் தத்தம் இடங்கட்கு விடைகொண்டேகினர். மக்கள் நால்வரும் கல்வி நிரம்பப் பெற்றவர்களாய்ச் சோழர் தமிழ்ச் சங்கப் புலவர்களோடு அளவளாவி இன்புற்றிருந்தனர். மூத்த குமாரியாகிய ஆதி மந்தியார் என்ற அருந்தமிழ்ப் புலமை நலம்படைத்த செல்வி சேர நாட்டரசகுலத்துப் பிறந்தாளாகிய அத்தி யென்பானை மணம் புரிந்துகொண்டாள். அவ்விருவரும் சேரநாட்டிற் சில காலமும் சோழ நாட்டிற் சில காலமும் வாழ்வாராயினர். கரிகாலன் இவ்வாறு பல வகையிலும் இன்புற்று வாழ்ந்திருக்கையிற்

புலவர் பலர் அவனைக் காண வரலாயினர். ஆண்டுகள் பல சென்றனவாயினும், குடிகளுக்கு அவன் அரசின் கீழ்க் காலப் போக்கே அறியப்படாமல் என்றும் இன்ப மயமாய்க் கழிந்தது.

ஒரு நாள் **முடத்தாமக் கண்ணியார்** என்ற புலவர் பெருமான் கரிகால் வளவனைக் கண்டு, தம் புலமை நலத்தைக் காட்டிப் பரிசில் பெற விரும்பி வந்தார். அவர் **பொருந ராற்றுப்படை** யென்றதொரு பெரிய பாட்டைப் பாடி வந்தார். அவர் வருகையை அறிந்த வளவன் அவரை அன்போடு வரவேற்று, அவர் பாடிய செய்யுள் முழுவதையும் நன்கு கேட்டு, மகிழ்ந்தான். பின்னர் அருகிலிருந்த புலவர் பலரோடு அப்பாட்டைக் குறித்து அளவளாவ லாயினன்.

வளவன்:—ஐய, புலவரே, காவிரிச் சிறப்பை நும் பாட்டிற் கூறிய வண்ணம் அடுக்கிக் கூறி இவ்வவைக் களத்தோரை மகிழ்விக்க வேண்டுகிறேம்.

முடத்தாமக் கண்ணியார்:—ஐய, அரசர் கோவே, பாட்டு முழுதும் இன்புற்றுச் செவிக்கொண்டு மகிழ்ந்த நீவிர் விரும்பியவண்ணம் வேண்டுமிடங்களில் மறுமுறை கூறுகிறேன். காவிரியைப்பற்றி நான் கூறிய கருத்து அத்துணைச் சிறப்புடைய தாகாது. அதனினும் அழகுபெறக் கூற வல்ல புலவரும் உளர். காவிரியும் இன்னும் எவ்வளவு புகழினும் தாங்கவல்லதே. ஆயினும், என் கருத்தைக் கேட்டலாற் கூறுகின்றேன். மற்ற நாடுகளெல்லாம் கதிரோன் கடுமையால் வெதும்பிப் பஞ்சுச்செடிகள் கரிய, பெருமரங்கள் தீப்பற்ற மக்கள் வருந்தத் தக்க வறட்காலத்தினுங்கூடப் பல்வகைப் பசுமரங்களும் துறைகள்

தோறும் ஓங்கி வளரப்பெற்று துரையோடு புனல்பெருகி ஒன்றுக்கு ஆயிரமாக நெல்லை வளர்த்துக் கொடுக்கும் பெருமை படைத்தது காவிரியாறு எனவும், அவ்வாற்றின் வளத்தாற் காக்கப்பெறும் நாட்டின் மன்னராகையால் வருவார்க்கு வரையாது வழங்குதல் தமக்கு எளிதேயாம் எனவும் கூறினேன்.

அவைக்களப் புலவர் ஒருவர்:—ஐய, புலவர் பெருமானே, பொருநர் இருந்த நிலையும் பரிசில் பெற்ற பின் ஆகிய அமைவும் கூற வேண்டுகிறேன்.

முடத்தாமக் கண்ணியார்:—அவர் வரும்போது அணிந்திருந்த வுடை, வேர்வையில் நனைந்து அழுக்கும் பாசியும் பிடித்திருந்தது; பல இடங்களில் தையல் அமைந்ததாய் இருந்தது. அரசர் பெருமான் அவர் வறுமையகற்றப் பரிசில் தரா முன்னரே அவரது ஆடைக்கு வேற்றுடை கொடுத்தான். அது தூய வெள்ளிய பட்டுடையெனவும் அழகிய கரையை உடையதெனவும் ஓரங்களில் முடிச்சுக்களை யுடையதெனவும் கூறினேன். 'அரசர் கொடுக்கும் கொடைச் சிறப்பை யாவையும் கன்றும் விரும்பியவாறு கொள்கவென்று கூறித் தன்னறியளவையிற்றரத்தர, யானும் என்னறியளவையின் வேண்டுவ கொண்டே, இன்னமே தீர வந்தனென்,' என்று கூறினேன்.

வளவன்:—ஐய, புலவர் பெருமானே, நுமது பாட்டில் எம் நாட்டகத்தே ஐவகை நிலங்களும் அவற்றின் பொருள்களும் ஒன்றோடொன்றுகலந்திருக்கும் அழகை நீவிர் இயற்கைநலந் தோன்றக் கூறியிருக்கும் பகுதி நன்றாய் இருக்கிறது. முழுவதும் மதுரமயமான ஒரு பதார்த்தத்திலே இன்ன பகுதி நன்றாய் இருந்தது என்று எடுத்

துக் காட்ட இயலுமோ? நும் தகுதிக்கு இது போதிய தாகாதாயினும், யாம் தரும் இச்சிறு பொருளைப் பரிசிலாக ஏற்றுக்கொண்டு, இங்நாட்டிலேயே சிலகாலம் வாழ்ந்திருந்து பிறகு நும்மூர்க்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாம்போது வந்துகாண வேண்டுகிறோம். சோழர் தமிழ்ச் சங்கத்தை நும்மை அடிக்கடி காணலாம் என்று நம்புகிறோம்.

முடத்தாமக் கண்ணியார் அதன் பிறகு புலவரிடமும் புலவர் தலைவனுகிய கரிகாலனிடமும் விடை பெற்றுச் சென்றார். அவர் சோழ நாட்டின் இயற்கைச் செல்வத்தைப் புகார் நகரத்தே பலவகையான செயற்கை வளங்களோடு கண்டு மகிழ்ந்து, இன்புற்றுக் காலங் கழித்து வந்தார்.

இவ்வாறு இன்ப முறக் காலங் கழிந்து வருகையில் ஒரு நாள் கரிகாலன் காவிரியிற் புதுப் புனலில் ஆடும் விழாக் கொண்டாட விரும்பினன். 'நகரவ ரணைவரும் தத்தமக்கு விருப்பமான இடங்கட்குச் சென்று காவிரிப் புதுப் புனல் ஆடி மகிழலாம்,' என்று முரசறைவித்தான். பிறகு தானும் தன் மக்களும் அத்தியுமாகப் புறப்பட்டுக் கழார் என்ற ஊர்க்கருகில் உள்ள காவிரிப் பெருந்துறை அடைந்தான். ஆதி மந்தியின் தலைவனுகிய அத்தியென்பான் நீராட்டிலே மிக்க உற்சாக முடையான்; நீந்தி மூழ்கி ஆடி விளையாடும் பயிற்சியும் உடையான். அரசனுக்கு நெருங்கிய சுற்றத்தாரைத் தவிரப் பிறரெவரும் அத்துறைக்கு வரலாகாது என்று விளம்பரம் செய்யப் பெற்றிருந்ததால், ஞாயிறு எழு முன்னரே அரசனும் மக்களும் மருமகனும் நீராடப் புகுந்தனர்.

பிறரெல்லாம் தம் மனம் திருப்தியடையும் வரையில் நீராடிக் கரையேறிப் பட்டுடுத்துத் திருநீறணிந்து கடவுளைத் தொழுது நின்றனர். கரையகத்திருந்த சிறிய தொரு மண்டபத்தே தனக்கென அமைத்த இருக்கையிற் கரிகாலன் அமர்ந்திருந்தான். மக்களெல்லாம் அவனைச் சூழ இருந்தனர். ஆதி மந்தியும் அருகிலே நின்றுகொண்டிருந்தனள். அவளது மனமும் கண்ணும் ஆற்றையே நாடி யிருந்தன.

ஆற்றில் அத்தி இன்னும் நீராடி யிருந்தனன். அவன் நீருள் மூழ்கியும் வெளியில் மிதந்தும் நீந்தியும் குதித்தும் குடம் வைத்து ஆடியும் பல வகையில் விளையாடினன். இப்புதுமையான ஆடல்களை யெல்லாம் கரிகாலன் கண்டு மகிழ்ந்தான். மக்களும் கண்டு ஆனந்த மெய்தினர். ஆதி மந்தியோ, தன் கொழுநன் ஆடும் ஆடலிலே ஆபத்துண்டாகுமோ என்ற கவலையுடையளா யிருந்தனள். இவ்வாறு இருக்கையில் அத்தி முன்னே பல முறை மூழ்கியதுபோல நீருள் மூழ்கினன்; ஒரு சுழியிற் சிக்கிக்கொண்டான்; தன் ஆற்றலை யெல்லாங் காட்டி வெளியேற முயன்றனன். அவன் முயற்சி பலிக்கவில்லை. அரசனும் மக்களும் இதுவும் ஒரு விளையாட்டோ என்று அதிசயத்தோடு பார்த்திருந்தனர். ஆதி மந்தியின் உள்ளம் கலங்கியது. சாதாரணமாக மனிதர் தண்ணீர்க்குள் அடங்கியிருக்கத் தக்க காலத்தைக்காட்டிலும் அதிகம் ஆகியதை அவள் கண்டாள்; உடனே ஆற்றை நெருங்கினள். கரிகாலன் செய்வதறியாது திகைத்தான். மக்களும் மயங்கினர். ஆதி மந்தி காவிரியாற்றை நோக்கிப் புலம்பலாயினள்:

"அன்பு சிறந்தான் தமிழகத்தை
யடையப் பிறந்தான் அத்தியேன்பான்
வன்பு சிறந்தான் வஞ்சிமன்னர்
மரபு விளக்க வரும்பெரியான்
இன்பு சிறந்தான் எழில்சிறந்தான்
எனக்கே யுரியான் யாங்கொளித்தான்
துன்பு சிறந்தேன் கலங்குகின்றேன்
சொல்லாய் கோல்லோ காவேரி!

கண்ணுய் அதன்கட் கருமணியாய்க்
கருத்தாய்க் கருத்தி லுறுபொருளாய்
விண்ணுய் உலகாய்க் கடவுளாய்
விளங்கி யிருந்த விழுமியோன்
பெண்ணுய் அவனுக் குரிமையாய்ப்
பிறந்தே னினைய யாங்கொளித்தான்
மண்ணுய் நீராய் வளர்தருவாய்
வழங்காய் கோல்லோ காவேரி!

மிடலாம் பெருமை மிகவுடையான்
வேந்தர் நடுங்கு படையுடையான்
மடலாம் பனையின் ருருடையான்
மனத்தை யெனக்கே வழங்குவள்ளல்
உடலாம் எனக்கிங் குயிராகி
யுலவி ஞனை விழுங்கினையே!
கடலாங் கொழுநன் றனைத்தழுவிக்
களிப்பாய் கோல்லோ காவேரி!"

அவள் இவ்வாறு புலம்பிக் கரைந்துருகிவிட்டுக் காவிரிக் கரை வழியே விரைந்தோடினள்.

கரிகாலனும் புனலாட்டுக்குப் புறப்பட்டபோது இருந்த மனமகிழ்ச்சியை இழந்து, புகார் நகரம் நோக்கித்

திரும்பினன். அத்தி, நீரின் வேகத்தால் அடித்துச் செல்லப்பட்டான். நீரிலும் நிலத்திலும் ஆட்டத்தில் வல்லவனாய் ஆட்டனத்தியென்று பெயர் பூண்டு நாடு புகழ வாழ்ந்த அவனது அழகினையும் ஆடும் திறலையுங் கண்டு காவிரியே அவனைக் கவர்ந்து கொண்டாள் என்று அருகினின்றார் கூறலாயினர். நீந்துந் தொழிலில் மிக்க பயிற்சியுடையனாகையாற் கரை சேருமாறு அவன் பல முறை முயன்று தலை தூக்கியும், அழுந்தியும், மேலே போய்க் கொண்டிருந்தான். அவன் முயற்சிகள் பலியாமல் காவிரியின் வேகத்தால் கடலினை யடைந்தான். அவன் போகும் வழியைத் தொடர்ந்து கரையில் ஓடி வந்த ஆதிமந்தியும் அங்கு வந்துற்றனள்; கடற்கரையில் நின்று அங்கு நின்றாரைப் பார்த்து, "காவிரியால் விழுங்கப் பெற்று இங்கு வந்த என் தலைவரை யாரேனும் கண்டீர்களோ?" என்று விசாரித்தனள். கரையிலே கடற் காட்சி காணும்பொருட்டு வந்து நின்றுகொண்டிருந்த பெண்டிருள் மருதியென்பாள் கடல் நீரிலே உற்று நோக்கி, "அதோ! நின் கணவன் நீந்தமாட்டாது கடல் நீரில் மூழ்குகின்றான்; பார்!" என்று காட்டி., அவள் கூறிய மொழிகள் ஆதி மந்தியின் செவியகம் புகா முன்னரே அவள் விரைந்து கடலிற் குதித்து நீந்திச் சென்று அலைகளால் அடிபட்டு மயங்கும் நிலையிலிருந்த ஆட்டனத்தியைப் பற்றி யிழுத்து வந்து கரையிற் சேர்த்தாள். அது கண்ட ஆதி மந்தி அங்கு விரைந்தோடிச் சென்று, இழந்த மாணிக்கத்தைத் திரும்பப் பெற்ற நாகம் போலவும் இழந்த பழம்பொருளைத் திரும்பப் பெற்ற மனிதர் போலவும் மகிழ்ச்சி மீதூரப் பெற்றுத் தன் தலைவனைத்

தழுவிக்கொண்டு, அவனுக்கு நேரிட்ட ஆபத்திலிருந்து மீட்டுக் கொடுத்துப் பேருதவி புரிந்த மாருதியை மனமார வாயார வாழ்த்தி, இறைவனைத் தொழுதனள். பிறகு அருகில் நின்ற ஏவலாற் புத்தாடைகள் கொணர்வித்து ஆட்டனத்தியை அணியச் செய்து தன்னுடன் தொடர்ந்து வந்த தேரிலே அவனை யேற்றித் தானும் அமர்ந்து, புகார் நகரத்துப் பெரிய அரண்மனையை யடைந்தாள். தெய்வச் செயலால் எல்லாம் நலமாய் முடிந்ததை யறிந்த கரிகாலன் மகளையும் மருமகனையும் மனமார வாழ்த்தி உபசரித்தான். பின்னர்ச் சில தினங்கள் வரையில் இவ்வற்புதச் செயலே நாடெங்கும் பேசப்படுவதாயிற்று.

புலவர் பலர் நூலாராய்ச்சி செய்யும் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கும், வான நூலாராய்ச்சிச் சாலைக்கும், ஆயுள் வேத வைத்திய வித்தியா சாலைக்கும் கரிகாலன் அடிக்கடி போய் வரும் வழக்கமுடையவனாயிருந்தான். தமிழ்ச் சங்கத்திற்குப் போயிருந்த காலத்தில் ஒருநாள், கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற அந்தணப் புலவர் அவனைக் காணக் கருதி, அங்குற்றார். அவர் பட்டினப்பாலை என்னுமொரு பெரிய பாட்டுப் பாடி வந்திருந்தார். புலவர் பலர் சூழ்ந்திருக்கும் அவ்வமயத்தே அவ்விடத்திற்கு அவர் வந்ததுகண்டு மகிழ்ந்த வளவன், அவரை அவரது பாட்டை அரங்கேற்றக் கூறினன். அவர்க்குத் தக்க உயர்ந்த இருக்கை யொன்றில் அவரை இருக்கச் செய்து, தானும் தன் நாட்டுப் புலவரும் அவர்க்கு எதிர் முகமாக அமர்ந்திருந்து, அவர் பாட்டைக் கேட்கலாயினன். உருத்திரங் கண்ணனார் செய்

யுள் முழுவதையும் உரிய முறைப்படி படித்து முடித்தார். புலவர் அனைவோரும் கேட்டு மனமுருகி, மகிழ்ச்சி பூத்தனர். வளவனும் முகமலர்ந்தான். பின்னர் அங்கு அந்நூலைப் பற்றிப் பின் வருமாறு அங்கிருந்தார் அனைவரும் பேசிக்கொண்டனர்.

வளவன்:—ஐய, புலவர் பெருமானே, நுமது பாட்டு மிகவும் சுவையுடையதாய் அமைந்திருக்கிறது. அதன்கண் உள்ள ஒவ்வொரு பொருளும் அனுபவமிக்க ஓவியம் வல்லான் தீட்டிய ஓவியம் போல அமைந்துளது. அவற்றுட் சில கருத்துக்களை நுமது உரை நடையிற் கேட்க விரும்புகிறோம்.

உருத்திரங் கண்ணனார்:—அரசர்க்கரசரே, எதைக் கேட்பினும் எடுத்து உரைக்கவும் பொருள் விரிக்கவும் சித்தமாயிருக்கிறேன்.

வளவன்:—இங்நாட்டுப் புலவர் பலர் இங்கு இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிரியமாய் இருக்கும் பொருள்களை விசாரித்தறியலாம். எம் மனத்துக்கு இன்பம் ஊட்டும் பொருள்கள் பல உள. காவிரியைப்பற்றி நீவிர் கூறியுள்ள கருத்துக்கள் தன்மை நவிற்சியே. அவற்றை ஒரு முறை சுருக்கிக் கூறுமின்.

உருத்திரங் கண்ணனார்:—வானவுலகத்திலேயுள்ள வேள்ளி என்னும் மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்றிசைக்குப் போயினும், மழைத்துளியை உண்டு வாழும் வானம்பாடி மனம் புலரும்படி மேகங்கள் வராது மறைந்த வற்கட காலமாயினும், தான் பொய்படாது குடகமலையிடத்தே பிறந்து காலந்தோறும் பெருகி வந்து கடலிலே கலக்கின்ற வசையற்ற புகழை

யுடைய காவிரியாறு என்று நும் நாட்டின் இயற்கை யழகுகளில் மிகவும் சிறந்த வொன்றைக் கூறினேன்.

வளவன்:--குயில்களைப்பற்றி நீவிர் கூறுவதென்ன?

உருத்திரங் கண்ணனர்:—பரந்த சடையையுடைய முனிவர்கள் தீயிடையில் ஆவுதி செய்து யாகங்கள் இயற்றுமிடத்திருந்து எழுந்த நெய்ம்மணத்தோடு கலந்த புகையைக் கண்டு வெறுப்படைந்து இளமரக்காக்களிலே குயில்கள் ஓடுங்கும் எனப்பட்டது. மேகத்தைக் காணுங் கால் தன் நாவை அடக்கி ஓடுங்கும் இயல்புள்ள குயில், மேகம்போல எழுந்த புகையைக் கண்டு அடங்கி ஓடுங்கி யது என்றும், நறுமணம் கலந்த புகையைக் கண்டு வெறுக்கும் இயல்பு அதற்கு உண்டென்றும் கூறியுளேன்.

வளவன்:—அது மிகவும் பொருத்தமே. காவிரி கடலொடு கலக்கும் இயல்பை நீவிர் நன்கு அமைத்துப் பாடியுளீர். அக்கருத்தை ஒருமுறை சுருககி யுரைக்க வேண்டுகிறேம்.

உருத்திரங் கண்ணனர்:—கரியதாகிய பெரிய மலையைச் சேர்ந்த மேகம் போலவும் தாயின் மார்பைத் தழுவிய குழந்தைபோலவும் தெளிந்த நீரையுடைய கடலிலே காவிரியாறு கலந்தது என்றேன்.

வளவன்:—இரண்டு உவமைகள் என்ன பயன் கருதி அமைந்தன?

உருத்திரங் கண்ணனர்:—அரசர் பெருமானே, ஓர் யாறு கடலொடு கலக்குமிடத்தே கடலலைகள் மலைபோல எழுந்து நிற்கும். ஆகையாலும், காவிரியாற்று நீர் கடல் நீரின் தன்மையடைந்து அதனோடு கலக்குமாகையாலும், மேகம் மலையிற் படிவது போன்றுளது என்று கூறப்பட்

டது. இங்கு மேகம் என்பதைச் செக்கர் மேகம் என்று கொண்டு செந்நிறமாய் இருக்கும் காவிரி நீரின் நிறத்துக்கு ஒப்பக் கூறுவது பொருத்தமாம். மற்றூர் உவமை, யாற்றுக்கும் கடலுக்கும்உள்ள பழமையான தொடர்பை விளக்குவதாம். கடல் தாய் எனவும் யாறு குழவி யென வும் கூறப்பட்டன. தாயைச் சிறிது பொழுது கூடப் பிரிந்திருக்கலாற்றுத குழவி, தாயின் மார்பகத்தே தழு விக் கிடத்தற்கு நிகராகக் காவிரி கடலொடு கலக்கும் இயல்பு எடுத்துரைக்கப்பட்டது. இங்குக் காவிரி வேக மாய் வந்து பாய்தலும் கடல் அலைக் கைகளால்அதனைத் தழுவிக்கொள்ளலும் தாய்க்கும் குழவிக்கும் இடையில் உள்ள அன்பென்னும் தொடர்பை விளக்க வுதவும்.

வளவன்:—புலவரேறே, இவ்வுவமைகள் மிகவும் நயம்பட அமைந்துள. இங்குள்ள புலவர்கள் எவையே னும் கேட்டறிய விரும்பிற் கேட்கலாம்.

உருத்திரங் கண்ணனர்:—புலவர் கேட்டு அவர் மனமகிழும் வண்ணம் மறுமொழி கூறி யமைத்தல் என் போன்றூர்க்கு இன்பம் தருவதே. புலமைப் புரவலரும் அவரால் ஆதரிக்கப்படும் புலவரும் ஒருங்கிருக்கும் ஒரு பேரவையில் அரங்கேற்றம் செய்ய ஒரு பாட்டைக் கொணரப் பெற்ற என் பேறு பெரிதே.

முடத்தாமக் கண்ணியார்:—ஐய, புலவரேறே, நும் பாட்டு முழுவதையுங் கேட்டு உள்ள முருகினேன். எத் துணை முறை கூறினும் அமையப் பெறுத அருங்கருத் துக்கள் பல நும் பாட்டில் உள்ளன. அவற்றுள் ஒன் றிரண்டை இரண்டா முறை கேட்க விரும்புகிறேன். புகார் நகரத்துக் கடற்றுறைக் கருகில் உள்ள பண்ட

சாலையைப்பற்றி நீவிர் கூறிய கருத்துக்களைக் கேட்க விழைகின்றேன்.

உருத்திரங் கண்ணனார்:—மேகமானது கடலில் முகந்த நீரை மலையிலே பொழியவும், மலையிலே வீழ்ந்த நீர் யாறுகப் பெருகிக் கடலையடையவும் அடைந்த மழைக் காலம்போலக் கடற்கரையிலேயுள்ள காவல் மிக்க பண்ட சாலையின்கண் எல்லையில்லாமல் மூட்டைகள் வந்து நிறைந்து கடலிலே கலங்களில் ஏற்றவும் கடலிலே மரக் கலங்களில் வந்து நிற்கும் பண்டங்களைக் கரையில் ஏற்ற வும் வேண்டி அறிவும் அனுபவமும் படைத்த பலர் நின்று இவ்விரு வகைப் பண்டங்களையும் அளந்து சுங் கம் முதலியன விதித்துத் தம் கடமையை ஆற்றுவர். ஏற்றுமதியாகக் கடலில் இறங்கும் பண்டங்கள் அளந்து புலிப்பொறி பொறித்து நிறுத்து அனுப்பப்படும். அவ் வண்ணமே இறக்குமதியாக வரும் பண்டங்கள் கண் ணளவால் அளந்து சுங்கம் விதித்துப் புலி பொறித்துக் கரையில் ஏற்றப்படும். மலையிற் பொழிதல் இறக்கு மதிக்கும், கடலிற் கலத்தல் ஏற்று மதிக்கும் உவமான மாகக் கூறப்பட்டன.

முடத்தாமக் கண்ணியார்:—இக்கருத்து நம் நக ரத்தின் வியாபாரப் பெருக்கத்தை உள்ளவாறு தெரி விக்கிறது.

கருங்குழலாதனார்:—ஐய, நம் மூர்க் கடை வீதி யைப்பற்றி நீவிர் கூறிய கருத்துக்களைக் கேட்க விரும்பு கிறேன்.

உருத்திரங் கண்ணனார்:—கடல் வழியே மரக்கலத் தால் வந்த குதிரைகளும், நில வழியே வண்டிகளால்

வந்த மிளகு மூட்டைகளும், மேரு மலையிற் பிறந்த மாணிக்கமும், சாம்பூநதம் என்னும் பொன்னும், பொதிய மலையிலே பிறந்த சந்தனமும் அகிலும், தென் றிசைக் கடலிற் பிறந்த முத்தும், கிழத்திசைக் கடலிற் பிறந்த பவளமும், கங்கையாற்று வெளிகளில் உண் டாகும் பொருள்களும், காவிரியாலுண்டாகிய பொருள் களும், சிங்கள நாட்டிலிருந்து வந்த பொருள்களும் கடார நாட்டிலிருந்து வந்த பொருள்களும், சீனம் முத லிய நாடுகளிலிருந்து வந்த கருப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும், நிமை கெளிய வந்து நிறைந்து வியாபாரம் ஆகும் கடை வீதி யென்று கூறினேன்.

கருங்குழலாதனர்:—நம் நாட்டு வணிகரது இயல் பைக் கூறும் பகுதி நன்கமைந்துளது. அதனைச் சுருக்கி யுரைக்க வேண்டுகிறேன்.

உருத்திரங் கண்ணனர்:—வணிகராவார், தேவரை வழிபட்டும், யாகங்கள் செய்தும், பசுக்களையும் எருது களையும் பாதுகாத்தும், நான்மறை யோதிய அந்தணர் புகழை வளர்த்தும், புண்ணியம் பண்ணியும், தானங் கள் செய்தும், வருவார்க் கெல்லாம் அன்னமிட்டும், இல் வாழ்க்கையிற் குறைவற வாழ்ந்து வருவர். அவ் வணிகர்கள் உழுவர் நுகத்துப் பகலாணி போன்று நடுவு நிலை தவறாது, தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பொருள்களையும் ஒரு நிகராய் மதித்துக்கொண்டு மிகுதியாகக் கொள்ளாமற் கொடுத்துக் குறைவாகக் கொடாமல் பழிக்கு அஞ்சி மெய் பேசி, இலாபத்தை வெளிப்படையாகச்சொல்லி வியாபாரம்செய்வார் என்று கூறியுள்ளேன்.

முடத்தாமக் கண்ணியார்:—நந்தம் அரசர் பிரதாபத்தைக் கூறும் அடிகள் நயம்பட அமைந்துள. அவற்றைக் கேட்க விரும்புகிறேன்.

உருத்திரங் கண்ணனார்:—

"மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனென"

எனவும், ஒளியர் பணிந்து ஓடுங்கவும் அறிவாளர் பணிகேட்பவும் வடவர் வாடவும் குடவர் கூம்பவும் போரின் சிறப்பாற் செய்வித்துப் பொதுவரை அழித்துப் பாண்டியனை வென்று, இருங்கோவேள் மரபை அழித்துக் காடழித்து நாடாக்கி, அரண்மனையும் நகரங்களும் அமைத்து வாழும் அரசு என்று நம் அரசர் பிரதாபத்தைக் கூறியுளேன்.

வளவன்:—ஐய, புலவர் பெருமானே, நும் பாட்டின் நடையும் அதன் சொற் செறிவும் பொருட் பொலிவும் அணி நயங்களும் எத்துணை முறைதான் கேட்கினும் அமையாத சுவையும் எடுத்துரைத்தல் எவர்க்கும் எளிதன்று. ஓர் அடிக்கு நூறுயிரம் பொன் பரிசில் தருவதாயினும் பற்றாது என்றே கூறுவேம். ஆயினும், எம் மனத்தின்கண் உண்டாகிய மகிழ்ச்சியை ஒருவாறு வெளியிடும் பொருட்டுப் பதினாறு நூறுயிரம் பொன் பரிசிலாய் அளிக்கின்றோம். பெற்றுக்கொண்டு ஆசி கூற வேண்டுவோம்.

உருத்திரங் கண்ணனார்:—அரசர் பெருந்தகையே, நும் முன்னோருள் தமிழருமை யறிந்தார் பலர் இருந்தனர். எதிர் காலத்திலும் பலர் இருக்கலாம். ஆனால், நும்மைப்போன்று தகுதியறிந்து பரிசில் தரத்தக்க சிறப்

பும் பெருமையும் படைத்தோரும் படைப்போரும் பலர் இரார் என்றே கூறுவேன். தெய்வச் செயலாற் பெரிய தோர் அரசுரிமையை அடைந்து, எத்தகையார்க்கும் நலம்புரிந்து அரசாண்டு வருகின்ற நுமக்கு நும் மரபின்ர் எவர்க்கும் இல்லாத ஒரு பெருமை விளையும். இனி எதிர் காலத்திலே தமிழ் மன்னர் வரலாறுகளைக் கூறுவா ரெல் லாம் சோழர் குடியைப் பெரிதாகப் புகழ்ந்து கூறுவ தோடு அம்மரபில் நுமக்கொப்பான அரசர் எவரும் இல்லை என்றே துணிந்துரைப்பர். ஆரிய நாடுனைத்தை யும் வென்று அடிப்படுத்தியிருக்கும் நும் புகழ் தமிழகத் தெல்லையின் அடங்காமற் பாரத பூமி முழுவதும் பரவி வருவதை அறிவேன். வட நாட்டவர் சிலர் நும்மைப் பற்றிப் பாடும் தம்மொழிப் பாடல்களிலே நும் பெயர்ப் பொருளை அறியாது தம் மொழிப் போக்குக்கு ஏற்பப் புதுப்பொருள் கற்பிப்பதையும் அறிவேன். அதுவும் ஒரு வாறு பொருத்தமாகவே யிருக்கிறது. பகைவர்களின் படைகளில் உள்ள கரிகளுக்குக் காலனுய் இருத்தலாற் கரிகாலன் என்றும், கலிப்பகையாய் இருத்தலாற் கலி காலன் என்றும் அமைத்து அவர்கள் புகழ்கின்றனர். அவர் எம்மொழியில் எவ்வண்ணம் புகழினும், ஏற்றற் குரிய இப்பல்பான பெருமையோடு விளங்கும் நுமது பெயர் உண்மையும் உலகமும் உயிர்த் தொகைத் தொடர்ச்சியும் உள்ளவளவும் உலகின்கண் நின்று நிலைப்பதாக. நும் மரபின் பெருமை வளர்க்கப்பிறந்த மக் கள் கல்வியும் கல்விப் பயனும் அறிவினர் சேர்க்கையும் பெற்று உலகம் புகழ வாழ்வாராக. அரசே, இனியான் விடை பெற்றுக்கொள்ளலாம் அன்றே?

வளவன்:—புலவர் பெருமானே, எம் நாட்டை நாடி வந்தார்க்கு இங்கே வாழ்ந்து வழி வழித் தழைக்கு மாறு அனுமதி கொடுக்கும் வழக்கம் எம்மிடம் உண்டே யொழிய, அவர்க்குச் சிறிதளவு பரிசில் கொடுத்து உடனே விடை தந்து அனுப்பும் வழக்கம் எம்மிடம் இல்லை. ஆகையால், நாம் இப்பொழுது நமக்கு விடை தரக்கூடாதிருப்பதுபற்றி வருந்துகிறோம். புலவர் பலர் இருந்து வாழ்தற்காகயாம் அமைத்துள்ள புதுமையான மனையகங்களுள் ஒன்றிலே நீவிர் நும் மனைவி மக்களோடு வாழ்ந்திருந்து, இந்நாட்டுத் தமிழ்ச் செல்வம் வளருமாறு உதவி புரிய வேண்டுகிறோம்.

உருத்திரங் கண்ணனர்:—கற்றலும் தமிழ்க் கல்வி யைக் கற்க வேண்டும்; கற்று, நல்ல புலமை வாய்க்கப் பெற வேண்டும்; இறைவன் அருட்டுணையும் பெற வேண் டும்; இயற்கை நலம் தோற்றப் பாடும் வாக்கு வளம் படைக்க வேண்டும். புலமைத்திறம் படைத்துப் பெறும் பயன் என்ன? உண்மையிற் புலமையை அறிந்து ஆதரிக் கும் புரவலரை அடைதலேயாம். அவ்வாறு உத்தம குணங்கள் பல வாய்ந்த நும்மைப் பாடிப் புகழும் பேறு பெற்றதாலன்றோ, பின்னாளில் வரும் பெருமக்கள் நும் மைப் புகழும்போது என்னையும் நினைக்கும்பேறு பெற் றேன்? இதனினும் சிறந்த வாழ்வு எனக்கு என்னுளது? விருப்பம் போலவே செய்கிறேன்.

XI

பின்னும் பத்தாண்டுகள் சென்றன. ஆண் மக்கள் இரு வரும் தமக்கு உவப்பான அரசர் குடிகளிலே மணம் புரிந்துகொண்டனர். பெண் மகள், ஆதி மந்தி முன்பு வாழ்க்கைப்பட்ட சேரர் மரபிலே மற்றொரு கிளையில் இளையான் ஒருவனை மணந்துகொண்டனள். இவர்கள் தத்தம் நாடுகளில் வாழ்ந்து வந்தனர். ஆண் மக்கள் இருவரும் பாரத பூமி முழுவதும் சுற்றிப் பார்த்து நாடாட்சியில் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து வந்தனர்.

திருமாவளவனும் முதுமைப் பருவம் அடைந் தான்; அற நூல்களையும் அருள் நூல்களையும் ஆராய்ந்து அறிஞரோடு அளவளாவுதலே பொழுது போக்காகக் கொண்டிருந்தான். இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு நாள் அரச புரோகிதரும் அந்தணர் சிலரும் அரண் மனை யடைந்தனர். கரிகாலன் அவர்களை இன்முகத் தோடு வரவேற்று உபசரித்தான். பின்பு அவரனைவரும் தாம் வந்ததன் காரணத்தை வெளியிடத் தொடங்கினர்.

புரோகிதர்:—அரசர் பிரானே, இவ்வந்தணர் அனை வரும் நும் அரசாட்சியின் நலத்தால் இந்நாட்டில் மன மகிழ்ச்சியோடு வாழ்ந்து, அரிய பல நூல்களை ஆராய்ந் தறிந்து, உலகினர்க்குதவும் புண்ணிய சிலம் படைத்தவர் கள்; நும்மிடம் நெடுநாளாகத் தெரிவிக்கக் கருதிய

தொரு செய்தியைக் கூறுமாறு இன்று இங்கு அடைந் திருக்கின்றனர்.

வளவன்:—அந்தணப் பெரியீர்காள், நீவிர் நம்மி டம் தெரிவிக்க விரும்புவது யாதோ? இறைவன் திரு வருள் துணையாகக் கொண்டு எம்மால் இயற்றப்பட வேண்டுவது ஏதேனும் இருப்பின், தெரிவிக்க வேண்டி கிறேம்.

அந்தணருள் முதியவர் ஒருவர் அங்கு வந்த வர் அனைவர்க்கும் பிரதிநிதியாகப் பேசத் தொடங்கி, முதற்கண் அரசனை ஆசீர்வதித்தார். பிறகு, "மஹா மண்டலேசுவரரும் சக்கரவர்த்தியுமாயிருக்கின்ற சூரிய வம்ச திலகமாகிய சோழ மஹாராஜா அவர்களிடம் நாங்கள் தெரிவிக்க விரும்புவது ஒரே விஷயம்: அதுவும் தேசத்தின் க்ஷேமத்தைக் கருதுவதேயாம். 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்பது உலக வாக்கியம். நம்முன்னோர்கள் நம்மீது கொண்டருளிய அபாரகருணை யால் நமக்கென வைத்துச் சென்ற புதையல்கள் வேத சாஸ்திரங்களாம். வேதமோ, அளவற்றது; கால வரம் பற்றது. சாஸ்திரங்கள் பல வகையாம். ஒவ்வொரு சாஸ்திரத்தின் ஓர் அமிசத்தில் ஒருவன் பூர்ண ப்ரவீணதை அடையவேண்டுமென்றால் அவன் ஆயுட் காலம் முழுதும் அப்பியசிக்க வேண்டியிருக்கிறது. தமிழி லும் அப்படியே பல சாஸ்திரங்களும் செய்யுட்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் முன்னோர் சென்ற முறை பற்றிப் பயின்று வருமாறு கலாசாலைகள் எல்லாம் நிறுவியிருக்கிறீர்கள். அநேகர் விசேஷ ஞானம் சம்பாதித்தவர்களா யிருக்கிறீர்கள். வேத சாஸ்திரங்

கள் ஸமஸ்த ஜனங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்வதற்காகச் சில கர்மாக்களை விதித்திருக்கின்றன. அவற்றுள், இன்னின்ன வர்ணத்தார் இன்னின்ன கர்மாக்களை இன்னின்ன காலங்களிலே செய்யவேண்டும் என்ற நியதியும் இருக்கின்றது. வைதிக வித்தை இந்த நாட்டிலே பரவுதற்கு உதவியாயிருந்த தங்கள் வமிசத்தார் சாஸ்திரங்களிலே பூர்ண விசுவாஸம் உடையவர்கள். தாங்களும் அப்படியே இருக்கிறீர்கள். இந்நாள் வரையில் எவ்வளவோ புண்ணிய காரியங்களைச் செய்து பூ மண்டலத்தில் உள்ள பிரஜைகளைத் திருப்தி படுத்தி யிருக்கிறீர்கள். தேவ லோகத்தில் உள்ள தேவர்களுக்கு உரிய யாகாதிகளைச் செய்து அவர்களைத் திருப்திபடுத்த வேண்டுவது அரசர் கடமைகளில் ஒன்றும். தாங்கள் இத்தேசத்திலே அபிவிருத்தி செய்திருக்கும் சாஸ்திரங்கள், தங்கள் முன்னோர்கள் செய்தது போலத் தாங்களும் பல யாகங்கள் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கின்றன. மஹாராஜாவாய் இருக்கிற தாங்கள் இவ்விஷயத்தில் உத்ஸாஹம் காட்டாமல்இருக்கும் பட்சத்தில் பொதுஜனங்கள் சாஸ்திராபிப்பிராயங்களை உல்லங்கனம் செய்ய இடம்உண்டாகும். தங்களுக்கும், விருத்தாப்பியம் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. அசுவ மேத யாகம் தாங்கள் செய்யத் தக்கதாய்த் தங்கள் முன்னோர் பலர் செய்திருக்கின்றனர். பாரத பூமி முழுதும் தங்களை எதிர்க்கச் சக்தியுள்ள மன்னர் ஒருவரும் இரார். ஆகையால், விரைவிலே தொடங்கி அசுவ மேத யாகம் ஒன்று செய்ய வேண்டுகிறோம்.

வளவன்:—அந்தணப் பெரியீர்காள், எமக்கும்நெடு நாளாக இவ்வெண்ணெம் இருந்ததுண்டு. நுங்கள் கருத்தை அறிய வேண்டும்என்றே பொறுத்திருந்தோம்; இனி விரைவிலே தொடங்குவோம். புரோகிதர் வேண்டுவன செய்வார். நீங்களும் உதவியாயிருந்து நிறைவேற்றி வைக்க வேண்டுகிறோம்.

பிறகு அந்தணரனைவரும் விடைபெற்றுச் சென்று புரோகிதர் உதவியால் யாக சாலைக்கு இடம் ஒன்று தீர்மானித்து, யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் சேகரிப்பாராயினர். நன்னாள் ஒன்றிலே உத்தம லக்ஷணங்கள் அமைந்த குதிரை யொன்று நிலமெலாஞ் சுற்றி வருமாறு அனுப்பப் பெற்றது. அதைப் பின் தொடர்ந்து அரசகுமாரரும் வீரர் பல்லாயிரவரும் சென்றனர். அப்பரிமா சென்ற இடங்களிலெல்லாம் சிறப்புச் செய்யப்பெற்று விரைவில் மீண்டு வந்தது. பிறகு அதைக் கொண்டு அந்தணர் பலர் உதவியாற் கரிகாலன் தன் கோப்பெருந்தேவியோடு யாக சாலையில் அமர்ந்திருந்து, அசுவமேத யாகம் இயற்றினன்; காவிரியில் அவப்பிரதஸ்நானம் செய்தான்; அந்தணர் பலர்க்கும் புலவர் பலர்க்கும் செம்பொன் வழங்கினன். பிறகு அரண்மனை புகுந்தான்.

அதன் பின்பு சில வருடங்கள் கரிகாலன் அரசப் பொறை தாங்கியிருந்தான். அயல்நாட்டு அரசர் பலரும் முறைப்படி திறை யளந்துகொண்டிருந்தனர். ஒருமுறை அவரனைவரும் பூம்புகார் நகருக்கு வந்து, அரசர் பெருமானைக் கண்டுகொள்ள வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. குறித்ததினத்திலே அவரனைவரும்வந்து

தம் அரசர்க் கரசைக் கண்டு வணங்கித் தாம் செய்தற் குரிய சிறப்புக்கள் செய்து, சில நாள் வாழ்ந்திருந்தனர். அவரனைவரும் நகரத்தில் இருக்குங்காலத்தே தன்மூத்த மகனுகிய கோக் கிள்ளிக்கு இளவரசுப்பட்டம் சூட்டித் தான் அரசப் பொறையிலிருந்து சிறிது சிறிதாக விலகிக் கொள்ளக் கருதியிருப்பதைக் கரிகாலன் தெரிவித்தான். அமைச்சரும் அந்தணரும் புலவரும் அரசரும் அதனை மனமின்றி யேற்றுக்கொண்டனர். அரசரெல்லாம் உரிய காலத்தில் விடை பெற்றுத் தத்தம் நாடுகட்குச் சென்றனர்.

கரிகாலன் அதன்பிறகு அருள் நூல்களை ஆராய்ந்து, நல்லோர்களோடு அளவளாவிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். ஒருநாள், சில புலவர்களுடன் தெய்வ விஷயமான சம்பாஷணை செய்துகொண்டிருந்தான். அந்தணர் பலரும் பிற அறிஞரும் அங்கிருந்தனர். பின் வரும் பேச்சு நிகழ்ந்தது:

வளவன்:—அறிஞர்களே, இத்துணையாண்டுகளாக நாம் நாட்டின் நலங் கருதியே உழைத்து வந்திருக்கிறோம். உண்மைப் பொருளை யுணர்த்தும் நூல்கள் நம் நாட்டிற் பல திறப்பட்டிருத்தலால், அவற்றையெல்லாம் ஆராய்ந்தோம்; அறிந்தோர்களோடு அளவளாவினோம்; பல புண்ணிய தலங்களுக்குச் சென்றோம்; இறைவனைத் தொழுது வணங்கி வாழ்த்தினோம்; வேத சாஸ்திரங்களிற் சொல்லிய நற்கருமங்களில் எமக்கு விதித்தவற்றையெல்லாம் செய்தோம். இருப்பினும், எம்முள்ளம் அமைதி பெறவில்லையே! இதற்குக் காரணமும் எம்மால் அறிய இயலவில்லை.

அறிஞர் ஒருவர்:—அரசர் பெருமானே, மக்களாய்ப் பிறந்தார் செய்தற்குரியவெல்லாம் செய்தும், நும் மனம் அமைதி பெறுமைக்குக் காரணம் ஒன்றே; யான் எனது என்ற பற்றுக்கள் இரண்டும் நம்மைப்பற்றி விடவில்லை. 'யான் எனது என்னும் பிணக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்,' என்று பெரியார் கூறுவர். எல்லாமாய் அல்லவுமாய் இருந்த இறைவனை ஏதேனும் ஒரு பயன் கருதி வணங்கி வாழ்த்தும் இயல்பே மக்களிடம் பொதுவாய் உளது. ஒரு பயனும் எதிர் பாராமலே வணங்கி வாழ்த்தி அப்பணியே பயனாகக் கொள்ளும் மன நிலை ஒருவர்க்கு வருமாயின், அவரே மன அமைதி பெற வல்லார் ஆவர். காணப்படும் பொருள்களிலுள்ள ஆசை அடியோடு அற்றுலன்றிக் காணற்குரிய அரும்பொருளைக் காண்டல் இயலாது. உள்ளத்தை அவனுக்குக் கோயிலென்றுக்கக் கருதின், முன்னே அங்கடைந்திருந்த அழுக்குக்களை யெல்லாம் ஓட்ட வேண்டும். மனவமைதி பெற்று மனித வாழ்வின் பயனைப் பெறுதற்கு நம் பெரியோர் கண்ட வழி இதுவேயாம்.

வளவன்:—'இன்ன தன்மைத்து; இன்ன உருவமுடைத்து; இன்ன ஆற்றலுடைத்து; இதுதான் பொருள்,' என்று காட்டவல்லார் எவரையும் யாம் இந்நாள் வரையிற் கண்டிலேம். காட்ட வல்லார் உளராயின், அவர் நம் கண்ணிற் படாமற் கடவுட் பயன் தாமே துய்த்து மறைந்திருப்பார் போலும்!

அந்தணர் ஒருவர்:—வேதங்களால் தெளித்துக் கூறப்பட்ட பொருளை ஆராய்ந்தறிந்தார் பலருளர். அறிகின்றாரும் உளர். அறிவாரும் உளராகலாம். இன்னது

கண்டேடம் என்று உண்மையிற் கண்டாராலும் விள்ளப் படாத பெருமையுடைய அப்பொருளைக் காட்ட வல்லார் உளராதல் அருமையே. தாம் தாம் துய்க்கும் இன்பச் சுவையைத் தாமே கண்டு ஆனந்திக்கலாகுமேயன்றிப் பிறர்க்குக் காட்டலும் கூடுமோ? காட்ட வல்லாராயிருப்பார் சாமானியமான மக்கட் பிறப்பினரோடு ஒப்பாகக் கருதத் தக்கவராகார். அவரை மக்களினத்தினும் தேவரினத்தினும் மேம்பட்டார் என்றே கூறல்வேண்டும். அத்தகையார் இறைவன் அருளொளியின் துளியாய் அநேக ஆயிர ஆண்டுகள் இடைப்பட உலகத்திலே தோன்றித் தம் அரும்பணியை நிறைவேற்றுவர். அவரைக் காண்டல் எவர்க்கும் எளிதில் இயலாது. அதற்குரிய நல்வினை செய்தார்க்கே அப்பேறு பெற வுரியதாம்.

வள்ளன்:—நீவிர் கூறுவனவெல்லாம் எமக்கும் உண்மை யென்றே தோன்றுகின்றன. ஆயினும், உள்ளமுற வுய்த்துணர்ந்து கடைப்பிடிக்கத் தக்க மனவூற்றம் இல்லாமை யொன்றே எம்மிடம் உள்ள குறையாம். அவனை யறிதலும் அவனருளாலே அமைவதன்றோ? அவனருள் கொண்டே அவன் தாள் வணங்குவேம்; வரும் பயனைப் பெறுவேம்.

தமிழ்ப் புலவர் ஒருவர்:—அரசர் பிரானை, அவனருளாலே அவன்றாள் வணங்குவது என்பது நம் நாட்டுப் பெரியார் அருளிச்செய்த அருள் நூல்களின் கருத்தாம். ஆணல்லன் பெண்ணல்லன் அலியல்லன் என நூல்களால் வரையறுக்கப்பட்ட கருணை வள்ளல், உருவம் உடையனை இலனெனாம் அறியோம். ஆயினும், அருளை உருவமாயுடையான் எனவும், அன்பினால் உருகியடை

வார்க்கு அணியனுய் எளிதிற் பெற்லாம் பொருளாய் இருக்கின்றுன் எனவும் அறிவோம். பல நூல்களையும் கற்று அவற்றின் பொருளே உற்றுணர்ந்து, மனமுருகிக் கதறி விளிப்பார்க்கே இறைவன் அருள் புரிவான் என்று எண்ண வேண்டா. சிற்றெறும்பின் சிற்றெலியும் செவிக் கொண்டு அதற்கு வேண்டியவாறு அருள் புரியும் அமலன், உண்மையான அன்போடு நினைவார்க்கு மிகவும் நெருங்கிய உறவினனுகவே இருப்பன். அன்னை யென்றும் தந்தை யென்றும் நாம் உலகத்தே அறிந்த நெருங்கிய உறவினர் நம் கண் முன்னே மாண்டு மண்ணுக்குக் கண்டோம். இவ்வுலகிற்கெல்லாம் உயிர்கட்கெல்லாம் அம்மையப்பனுகி என்றும் அழியாதவனுகியிருக்கும் அவனே மனித வருக்கத்தார்க்கு உரிய உறவாய் என்றும் முன்னிற்கக் காண்போம். அறிதல் அரிதாயினும் எளிதே. அவன் அருளின் திறத்தை யாரே அளவிட வல்லார்!

வளவன் :—நீவிர் பேசும் பேச்சுக்களெல்லாம் எம் உள்ளத்தை உருக்குகின்றன.

செறிவிற் செறிந்த செறிவாகித்
தெளிவிற் றெளிந்த தெளிவாகி
அறிவிற் புகுந்த வறிவாகி
யருளிற் கிளரும் அருளாகிப்
பிறிவிற் பிறிந்த பலவாகிப்
பிறியா வொன்றுய்ப் பிறங்குகின்ற
குறியிற் கிடந்து மயங்காதே
குறைகள் பெருகிக் குலைந்தேனே.

பெண்மைப் பொருளா யாண்மை[illegible]
பேச வுரிய பெரும்பொருளா
நுண்மைப் பொருளா நுணங்கறிவின்
நூலோர் உருகி நுனித்துணரும்
உண்மைப் பொருளா யுறுபொருளா
யுணரு மறிவைப் பெருதேயான்
திண்மைப் பொருளா யுலகிலுள்ள
சிறுமைப் பொருளைப் பற்றுவனே.

பற்றப் படுநற் பெருந்திருவைப்
பற்றும் வழியை யறியாதே
குற்றப் படுகர்க் குழியிடையே
குறிக்கும் பொருளா மறந்தயர்ந்து
சுற்றப் படுபல் துயர்த்தோகையைச்
சுற்றி மயங்கி வாழ்ந்திருந்தேன்
மூற்றப் பெறுபே ரின்பநலன்
முதல்வ னருளிற் பெறுவேனே.

அருளே நிறைவாய் அறிவுருவாய்
அமைந்தாய் அமல! அடியேன்பால்
மருளே மிகுமால் உலகமயல்
வழிந்தே பெருகி யோடிவரும்
இருளே மிகுமிப் பிறவியிடை
யினியும் பிறவாப் பேறருளிப்
பொருளே அருள்வாய் பொருளாகிப்
பொருளா யுணர்த்தும் புதுப்பொருளே!

இப்பாடல்களைப் பாடிய பிறகு அவன் மயங்கிக் கீழே வீழ்ந்தான். அனைவரும் நெருங்கினர்; அவன் இறைவன் அடி நிழலடைந்ததை அறிந்தனர்.

[illegible] கருங்குழலாதனர் என்ற புலவர், [illegible]த மடைந்த காட்சியைக் கண்டார்; மன [illegible]னார். "திருமாவளவன் என்ற செஞ்ஞாயிறு [illegible] புலவருலகத்தை இருள் சூழ்ந்தது. வீரருள் [illegible]க் காண்போமா என்று நெடு நாளாக எதிர் பார்த் [illegible]ருந்த விண்ணவர் வென்றனர். மண்ணவர் தோற்ற னர். பாரத தேயத்தில் உள்ள பல நாட்டு மன்னரும் தம் ஏகாதிபதியாகிய தலைவனை யிழந்தனர். அமர் பல கடந்த தும், அரண் பல அடைந்ததும், புலவரைப் புரந்ததும், பாணரை வாழ்வித்ததும், அற நெறி யறிந்த பெண்டிரோ டிருந்து வேத வேள்விகள் முடித்ததும் ஆகிய அம்மன் னன் செயல்களைப் பற்றியாரே புகழ வல்லாராவர்? உல மன்னவன் என்ற பொருளொடு பொருந்திய பட்டப் பெயர் பூண்ட அம்மன்னன் இன்றியாங்கு ஒளித்தான்? இவ்வுலகம் அப்பெருஞ்செல்வத்தை இழந்ததால், இரங்கத் தக்கதே! வேனிற்காலத்தே தம் ஆடுகளுக்குப் பச்சிலையுணவு கொடுக்குமாறு கோவலர்கள் பூவும் இலை யும் உதிரக் கொய்து அழித்த வேங்கை மரம்போல அம் மன்னர் பிரான் அன்புக்குரிய மகளிரும் தம் பொன்னணி களைக் களைந்தனர். இத்தகைய காட்சியைக் காணவும் எனக்கு அமைந்திருந்ததே!" என்று கூறிப் புலம்பினர்; கையறு நிலை பாடினர்.

அறிஞர் பலர் திரண்டு கோக் கிள்ளி என்ற மூத்த மகனுக்கு முடி சூட்டினர்; இளைய மகனைக் கொண்டு, தந்தைக்குரிய கடன்களை யெல்லாம் ஆற்றுவித்தனர். சோழ நாடெங்கும் முதற்கண் இச்செய்தி பரவியது; பின்பு தமிழக முழுவதும் பாரத தேச முழுவதும் பரவி யது. அதனால் பல நாட்டரசரும் புதிய வரசனது மகுடா பிஷேகத் திருவிழாவைக் காணற்பொருட்டு வந்தனர்

இறத்தலும் பிறத்தல்தானும் [illegible] யென்றே அறப்பயன் உணர்ந்தோர் கூறும் [illegible] பயனே அனைவரும் அறிந்தனர்.

[illegible]க் கோட்டுப்
[illegible]பொறித்து மண்ணுண்டான்
[illegible]ன் வளவன்
மதிற்புகார் வாழ்வேந்தன்''

" இருநில மருங்கிற் பொருநரைப் பெறுஅச்
சேருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளோடு பெயர்த்து நண்ணுர்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினேன் வலிகெழு தோளோனப்
புண்ணியத் தினமும் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாரீர் வேலி வச்சிர நன்னுட்டுக்
கோனிறை கொடுத்த கோற்றப் பந்தரும்
மகதநன் னுட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றேரண வாயிலும்

* * * *

மயன்விதித்துக் கொடுத்த மரபின.....''

—இளங்கோவடிகள்

Printed at the B. N. Press, Mount Road, Madras.

நல்ல கடிதத்திற் கலாசாலே மாண
மாகும்படி நன்கு பதிப்பிக்கப் பெற்
இவற்றுள் முதற் பகுதி அகத்தி
யர், ஔவையார், கபிலர், பரணர், நக்கீரர், அ
ஆவூர் மூலங்கிழார் என்னும் இவ்வெண்மர்கள
லாறுக ளடங்கியது.

இரண்டாம் பகுதி கல்லாடனர், மாமூலனர், மா
குடி மருதனர், காக்கை பாடினியார் நச்சேள்ளையார்,
பாலைக் கோதமனர், பாரதம் பாடிய பெருந்தேவனர்,
மதுரை மருதனிள நாகனர், கடியலூ ருருத்திரங்கண்ண
னர், பொய்கையார், முரஞ்சியூர் முடி நாகராயர் என்னும்
இப்பதின்மர் வரலாறுகள் அடங்கியது.

மூன்றும் பகுதி மோசி கீரனர், சீத்தலைச் சாத்
தனர், இளங்கோவடிகள், பெருந்தலைச் சாத்தனர்,
கோவூர் கிழார், மாரோக்கத்து நப்பசலையார், உறையூர்
ஏணிச் சேரி முடமோசியார் என்னும் இவ்வெழுவர் வர
லாறுகள் அடங்கியது.

இம்மூப்பகுதியிலுள்ள வரலாறுகள் பலவும் சங்
கச் செய்யுள்களையும் நூலுரைகளையும் தழுவி இடை
யிடையே தொடர்பு படுத்தற்குப் பொருந்துவன சில
படைத்து, படிப்பவர் இன்புறுமாறு தெளிவான தமிழ்
நடையில் எழுதப்பட்டுள்ளன. ஆங்காங்கு வேண்டும்
மேற்கோட் செய்யுள்களுங் காட்டப்பட்டுள்ளன.

இப்புத்தகங்கள், படிக்கும் மாணவர்களுக்குப் பழந்
தமிழ்ப் புலவர்களின் வரலா றுணர்த்தல் மட்டுமன்றித்
தமிழிலக்கியப் பயிற்சியையும் விளைவிக்கத் தக்கன. இப்
புத்தகங்க ளெழுதிய வித்துவான் பண்டித கனகராஜை

ஊக்கமும் பாராட்டத் தக்கன.
முதற் பகுதியின் விலை அணை 10.
பகுதியின் விலை அணை 8. மூன்றும் பகுதி
அணை 8. வேண்டுவோர் ஸ்ரீமான் இ. மா.
கிருஷ்ணக் கோனரவர்கள், புத்தக வர்த்தகர்,
ரை என்ற விலாசத்திற் பெறலாம்.

பாண்டிய மன்னர்

இந்நூற்றொருதி வித்துவான் பண்டித நா. கனகராஜையரவர்களால் படிப்பவர்க்குப் பலவகையிலும் உணர்வுண்டாமாறு செவ்விய தமிழ் நடையில் இடையிடையே வேண்டுஞ் செய்யுள்களை மேற்கோள் காட்டிச் சில பாண்டியர்களின் சரிதங்கள் விளங்கும்படி இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டு, மதுரைப் புத்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இது தமிழ் நடையும் நவீன கற்பனை சரிதங்களும் எழுதப் பயிலும் மாணவர்களுக்கு வேண்டும் மனோ தர்மத்தை உண்டாக்க வல்லது.

இதன் முதற் பகுதியில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மூவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 10.

இரண்டாம் பகுதியில் உக்கிரப் பெருவழுதி, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் இவ்விருவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 8.

CHOLA KINGS

PART II

BY

PANDIT N. KANAKARAJIER,
"VIDWAN"
MAHARAJA'S COLLEGE, PUDUKOTAH

Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us
Footprints on the sands of time;—

H. W. Longfellow.

E. M. GOPALAKRISHNA KONE,
BOOKSELLER AND PUBLISHER
MADURA & MADRAS.

சோழ மன்னர்

ஸ்ரீ:

சோழ மன்னர்

இரண்டாம் பாகம்

1. கிள்ளி வளவன்
2. சோழன் நலங்கிள்ளி

ஆசிரியர்

பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்,

மஹா ராஜா கல்லூரி,

புதுக்கோட்டை.

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை & சென்னை.

பதிப்புரிமை] 1931 [விலை அணா, 8

உரிமையுரை

வளமிகுபைந் தமிழ்மொழியை யடியேற்கு
வழங்கியருள் வண்மைச் செல்வர்
இளமைமுத லெனையுணர்ந்து மேன்மேலும்
எழுநெறியை இனிது காட்டி
உளநெகிழ்வா லரியபொருள் பலவெளிதி
னுணரவிரித் துரைத்த வள்ளல்
தெளிஞர்களி லுயர்ந்ததிரு நாரணவா
ரியர்பதங்கள் சிந்தை செய்தே

மனமொழிமெய் யுறவணங்கிப் பழந்தமிழின்
பனுவல்களின் வழியிற் சென்று
தினமுயன்று பெறுபொருளிற் சிறிதுசிறூர்
பொருட்டுதவிச் சிறப்பா வெண்ணிக்
கனகமழை பொழிவளவ ரோரிருவர்
வரலாற்றைக் காட்டு மிந்நூல்
எனதுசிறு பணியெனவே யேற்க்வெனத்
தொழுதுரிமை யிசைத்தேன் மன்னே.

நா. கனகராஜன்

ஸ்ரீ :

முகவுரை

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

சென்ற வாண்டிலே சங்க காலத்துப் பாண்டியர் ஒரைவர் வரலாற்றை ஆங்கில கலாசாலே மாணவரும் பிறரும் பயின்றின்புறுமாறு யான் பழம்பொருள்களோடு புதுப்பொருள்கள் சிலவற்றைச் சேர்த்து எழுதி வெளியிட்டேன். அவ்வண்ணமே சோழ மன்னருள் ஒரைவர் வரலாற்றை விளக்க இந்நூற்றொகை எழுந்தது. இதன்கண் சோழ மன்னருள் மிக்க கீர்த்தி படைத்த சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு முதற் பாகத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கிள்ளி வளவன், சோழன் நலங்கிள்ளி என்ற சோழர்களின் வரலாறுகள் இத் தொகுதியின் இரண்டாம் பாகமாகிய இந்நூலில் கூறப் பட்டுள. இம்மன்னர்களின் வரலாறுகளே ஊகித்துணரச் சங்கச் செய்யுட்களே பெரிதும் உதவியாயின.

கிள்ளி வளவன் வரலாற்றிலே பழமைகளும் புதுமை களும் கலந்துள. இங்குக் கிள்ளி வளவன் என்று கொண் டது, புறநானூற்றிற் கேட்கப்படுகின்ற சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பானேயாம்.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இவன் பெய ரொடு ஒரு புடையொத்த பெயர்கள் வருகின்றன. சிலப் பதிகார மணிமேகலைகளின் கால நிலையைப்பற்றிக் கொள் கைகள் பலவாம். அவற்றை யெல்லாம் ஆராய்ந்து முடிவு கட்ட இங்கு இடமுமில்லை; சிறியேனுக்கு அதற்கு வேண்டிய ஆராய்ச்சித் திறமையும் இல்லை. சிலப்பதி காரத்திலே சோழன் பெருங்கிள்ளி யென்பான் உறை யூரி லாண்டான் என்று கூறப்படுகிறான். இவன் பெயர் பெருநற் கிள்ளி யென்பார் அடியார்க்கு நல்லார். மணி மேகலையில் வடிவேற் கிள்ளி, வென்வேற் கிள்ளி, நெடு முடிக்கிள்ளி, கிள்ளி வளவன் என்ற பல பெயர்களோடு ஓர் அரசன் வழங்கப்படுகின்றான். இவன் மைந்தனே உதய குமரன் என்பான். கிள்ளி வளவன் சரித்திரத்தை ஆராய்ச்சி முறையால் தமிழகத்துக்கு எழுதி யுதவியிருக் கும் திருவாரூர் இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசி கர் மரபினராகிய சோமசுந்தர தேசிகர், "பழந்தமிழ்ப் பெரு மக்கள்" என்ற தம் உரை நூலிலே சோழன் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளி வளவனே உதய குமரன் தந்தை யாகிய மணிமேகலைக்காவிய மன்னன் என்று அறுதியிட் டுளர். காலவாராய்ச்சியிலே துறை போகிய இன்னவர் கருதிய கருத்து ஆதரிக்கத் தக்கதே யென்று கொண்டு இந்நூற்றொகையிலே அவ்வண்ணம் மணிமேகலையில் வரும் செய்திகளையும் புறநானூற்றில் வரும் செய்தி களையும் கலந்து, பூனந்துரை வகையால் வேண்டு வன சேர்த்து எழுதப்பட்டது. சிலப்பதிகாரத்திலே இவன் சேரன் செங்குட்டுவனுக்கு உறவினனாக அறியப் படுகிறான். அகநானூற்றிலே ஒரு கிள்ளி வளவன்

கூடல் நகரிலே பழையன் மாறனைப் போரிற் சாய்த்தது கொண்டு கோதை மார்பன் மகிழ்ந்தான் என்ற செய்தி வருகின்றது. பொய்கையாராற் புகழ்ந்து பாடப்பெற்ற சேரமான் கோக்கோதை மார்பன் என்பான் இக்கோதை மார்பனுக்கு என்ன உறவின் முறையாலே வென்பது அறியக்கூடவில்லை. கிள்ளி வளவன் செங்கோற் சிறப்பும் அரசியற் பெருமையும் போர்த்திறமும் எங்கும் புகழ்ந்து பேசப்படுவதால், அவை விளங்க வேண்டியே இவ்வரலாறுகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டன.

நலங்கிள்ளியின் வரலாற்றிலே போர்ச் செய்தியே பெரும்பான்மையாக இருக்கையால், கோவூர் கிழாரின் உண்மைப் பெருமைகளை விளக்குஞ் செய்திகள் இதன்கண் விளக்கப்பட்டன. மாவளத்தான் என்ற இளையோன் வரலாறும் உரிய இடமறிந்து சேர்க்கப்பட்டது. சுவை வேறுபாடு தோன்ற வேண்டிச் சில புதுமைச் செய்திகள் அக்கால நிலைக்குப் பொருந்துமாறு இவ்வரலாற்றிற் சேர்க்கப்பட்டுள.

இளம்பருவத்திலே தந்தையை யிழந்து கலைப்பயிற்சிக்கு வழியின்றி மயங்கிய சிறியேனை மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்த்துக் கொண்டு உதவி புரிந்த தமிழ் வள்ளல் போ. பாண்டித்துரைத் தேவர் என்ற நல்லோர் பெயரை நினைந்துருகாதிருக்க இயலாது. அன்னார் உதவியின்றியின், தமிழ் எங்கே? சிறியே னெங்கே? தமிழ்ச் சங்கக் கலாசாலையில் கல்வி பயிற்றித் தமிழ்ச் செல்வத்தை யான் அடையுமாறு உதவிய தமிழாசிரியர்களாகிய ஸ்ரீ. சு. ஹரிஹரையரவர்களுக்கும், காலஞ் சென்ற தமிழ்ப் புலவர் சு. அரங்கசாமி

ஐயங்கார் அவர்களுக்கும், இந்நூலின் உரிமையை யேற்றுக்கொண்ட ஸ்ரீ. உ. வே. திருநாராயண ஐயங்கார் அவர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள் உரியனவாம். தமிழ்ப் புலவர் வரலாறு, பாண்டிய மன்னர் என்றஎன் நூற்றொகைகளை அச்சிட வேற்றுக்கொண்டதுபோல இதனையும் ஏற்றுக்கொண்டு எனக்கு ஊக்கம் உதவிய மதுரைப் புத்தக வணிகர் ஸ்ரீமான். இ. மா. கோபால கிருஷ்ணக் கோனுர்க்கும், அச்சிடும்போது ஒப்பு நோக்குதல் முதலிய பணி புரிந்துதவிய என் அன்பர் தமிழ்ப் புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள் உரியனவாம். தமிழ் வளர்ச்சியில் ஊக்கமுடைய இளஞ்சிறுர் பலர் பெருகிய இந்நாளிலே இந்நூல் அவருள்ளத்தே உண்மையான தமிழபிமானத்தை வளர்க்க உதவுமாயின், அதுவே இதனை எழுதியதாற் பெற்ற பெரும்பயனாக மதிக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

21—11—'31
புதுக்கோட்டை

நா. கனகராஜையர்

ஸ்ரீ :

சோழ மன்னர்

இரண்டாம் பாகம்

1. கிள்ளி வளவன்

I

பூஞ்சோலை—உறையூர்ப் பெருநகரின் நடு நாயகமாய் விளங்கிய அரண்மனையின் பின்புறம் உள்ள பூஞ் சோலை—அரசரும் அவர்தம் உரிமைச்சுற்றத்தாரும்செல் லற்குரிமையுடைய இலவந்திகைச்சோலை—அழகிய சிறிய கொடி வீடுகளும் பளிக்குப்பீடங்களும் சிறுசிறு தடாகங் களும் இவற்றின் இடை மணியாய் ஓர் இலவந்திகையும் அமைந்த சிங்காரவனம்—மரங்களும் செடிகளும் கொடி களும் தத்தம் இயற்கை யழகைக் கொண்டு வருவார் மனத்தைக் கவர்தற்கு முயலும் பூங்காவனம்! இச்சோ லையின் நடு நாயகமாய் அமைந்த இலவந்திகையின் எழில் எளிதில் இயம்பலாவதன்று. கமல வுருவமாய் அமைந்த சிறியதொரு பொய்கையின் கரைகள் பளிங்குக் கற்க ளால் அமைந்திருக்கின்றன. பொய்கையின் இடை நிலத் தின்கண் ஒரு பாவை சுழன்று சுழன்று நீர் ஊற்றிக் கொண்டிருக்கின்றது. எந்திர முயற்சியால் அப்பாவை தன்னைச்சுற்றியுள்ளவிடத்தில் நீர் இறைக்கின்றது. அது

மேலும் மேலும் நீர் இறைத்துக்கொண்டேயிருப்பினும், அப்பொய்கையின் நீர் மட்டம் வேறுபடுவதாகக் காணப் படவில்லை. அதற்குக் காரணம் நீர் நிறைய நிறைய, வேறோர் எந்திரச் சுழற்சியால் அந்நீர் வெளியேற்றப்படு வதேயாம். இப்பொய்கை இடை நிலத்திலமைந்த காரணத்தால், இதன் அழகைக் கண்டு களிக்க வுதவுமாறு பளிக்குப் பீடங்களும் கொடி வீடுகளும் அருகில் நாற் புறத்திலும் அமைந்திருந்தன.

சோலைக்கண் எப்புறம் நோக்கினும், இனிய மலர் மரங்கள் செடிகள் கொடிகள் காணப்பட்டன. நிலமும் பசும்புல் நிரம்பிப் பச்சென்றிருந்தது. சிறிதளவேனும் வறு நிலம் இல்லை. இனிய மணம் நிறைந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. சூரியனும், தன் கதிமையைக்குறைத்து மேற்றிசையிற் சாய்ந்துகொண்டிருந்தான். இவ்வமயத்தே இருவர் அச்சோலையில் நுழைந்தனர்; மெல்ல உலவிக்கொண்டே சோலையைச் சுற்றி வந்தனர்; கண்ட காட்சிகளைப் பற்றிப் பேசிக்கொண்டு சென்றனர். அவ்விருவரும் சோழ நாட்டுக்கு உயிர் நிலையாய் நிற்பவர்; தமிழகத்தார் பாராட்டும் குணமாண்பு எல்லாம் படைத்தோர். அவருள் ஒருவன் இளமையும் எழிலும் அரசத் திருவும் அமையப்பெற்ற ஆணிளஞ் சிங்கம். அவன்தோளிற் சார்ந்து அவனெடு நடந்து வந்தவள், ஒரு பெண் ணணங்கு. அவள் பொற்பின் செல்வி: நிணில விளக்கு என்று புகழத் தக்க உருவமைப்பு உடையளாயிருந்தாள். அவள் பூரண கருப்பிணியாய் இருந்ததால், தலைவன் சார்பிலே மெல்ல மெல்ல நடந்து வந்தனள். இருவரும் செடிகளையும் கொடிகளையும் பார்த்துக்கொண்டே ஒவ்

வொன்றின் அழகையும் அவற்றில் உள்ள ஒற்றுமை யையும் வேற்றுமையையும் கவனித்துக்கொண்டே வந்தனர். சோழ நாட்டு அரசன் கிள்ளி வளவன் என்பான் தன் தேவியோடு இலவந்திகைச் சோலையில் உலவி வந்தான் என்பதை நாம் இங்கு ஊகிக்கலாம். அரச தம்பதியர் மெல்ல மலர் மணம் துகர்ந்து நடந்து, ஒரு மலர் மரத்தை யடைந்தனர். அஃது அரசற்கும் அரசிக்கும் பூ மழை பொழிந்தது. பூஞ்செடி யொன்று அருகிலே தலை வணங்கி மலர்களாகிய கையுறை கொடுத் தது. சிறிது மேல் நடந்து சென்றனர்; கொடி வீடு ஒன் றில் நுழைந்து சிறிது அமர்ந்தனர்; பின்னர் வெளியேறி இலவந்திகைக் கரையோரமாக நடந்து வந்தனர். மல்லி கைக் கொடி யொன்று, மலர் மரம் ஒன்றோடு பிணைந்து அழகுற விளங்கியது. அருகிலே சில மலர்ச் செடிகளும் மரங்களும் தனித்தனி நின்று, தம் அழகைக் காட்டி மகிழ்வூட்டின. இக்காட்சியைக் கண்டதும், அரச தம் பதியர் தம் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைப் பேசத் தொடங்கினர்:

அரசன்:—என் அன்பே, மரங்களும் செடிகளும் கொடிகளும் அரசியாகிய நின் அடி மலர்க்கு மலர் சொரிந் து வணங்குகின்றன. அழகால் உன்னை வெல்ல இய லாமையால், அவை ஒற்றைக் காலில் நின்று தவஞ் செய் கின்றன. இக்கொடியைப் பார். இது காற்றால் அசைந்து துவண்டு, மலர்களை அழகுறக் காட்டி, அருகில் உள்ள மரத்தைத் தழுவிக்கொண்டு, இன்ப மயமான காட்சி தருகின்றது. இச்செடிகளைப் பார்: பூ நிறைந்து நிமிர்ந்து அழகிய இளம்பெண்போல நிமிர்ந்து நிற்கின்றன. மரங்

களைச் சார்ந்த கொடிகள் மலர் நிரம்பித் தம்மியற் கைச் செல்வத்தை நலங்களால் தம்மை நிகர்த்த தலைவ ரோடு துய்த்து மகிழும் கற்பின் செல்வியரைப் போன் றிருக்கின்றன. தனித்து நிற்கும் செடிகள் மண வினையில் விருப்பமின்றிக் கன்னியராய் நின்று வாழும் இளம் பெண்டிரைப் போல இருக்கின்றன. இவற்றின் இயல் பில் உள்ள வேற்றுமையால் நாம் ஊகிக்கக் கூடிய உண் மைகள் பலவாம்.

அரசி:—தலைவரே, நீவிர் கூறிய விஷயங்களால் என் மனத்தில் ஓர் எண்ணம் உதிக்கின்றது. செடிகளாயிருப் பினும், கொடிகளாயிருப்பினும், மரங்களாயிருப்பினும், ஒவ்வோர் இனமும் தனித்தனியழகு உடையதே. மரங் களும் கொடிகளும் இணைந்து நிற்பது ஒரு வகை அழ கைத் தந்தால், மரங்கள் தனியே நிற்றலும் செடிகள் தனியே நிற்றலும் மற்றொரு வகை அழகைத் தருகின் றன. இறைவன் அருட் செயலில் ஒன்றிலும் அழகில்லை யென்று கூற நம்மால் இயலாது. மகிழ மரம் முதலிய பூமரங்கள், கொடிகள் தம்மைச் சுற்றிவிடினும், மணமும் அழகும் உடையவையாகவே விளங்குகின்றன என்பது பொய்யாகுமோ? அதுபோலவே, மல்லிகை முதலிய செடிகள், தனித்து நிற்பினும், மணமே மழகும் நிறைந் தே விளங்குவனவாம். சில கொடிகள் தம்மை யடித்த மரங்களிற் படர்ந்து அழகு தரும். அவையும் இயற் கைச் செல்வம் உடையனவே. உலகத்திலே மக்கள் கண வன் மனைவியராய் இணைந்து வாழ்ந்து, அன்பின் செல் வத்தை வளர்த்துத் தமது மரபு நிலை நிற்க வேண்டுவன செய்தலைக் காண்கிறோம். மரமும் கொடியும் இணைந்த

வாழ்வை இதற்கு இணையாகக் கூறலாம். சில ஆடவர், தனித்து வாழ்ந்து, உலகத்துக்குத் தம்மால் இயன்ற நலம் புரிந்து செல்கின்றனர். தனித்த பூ மரங்களே இவ் வாழ்வுடையார்க்கு நிகர் எனலாம். சில பெண்டிர் நீவிர் கூறியவாறு தனித்து வாழ்கின்றார். அவ்வாழ்வைப் பூஞ் செடிகளின் வாழ்வுக்கு நிகராக வுரைக்கலாம். இவற் றுள் ஒன்று சிறந்தது ஒன்று தாழ்ந்தது என்று கூறு வதற்கில்லை யென்பது என் எண்ணம். ஏனெனில், நாம் எல்லா வகைப் பூக்களையுமே இன்பமுற ஏற்றுக்கொள் வது போல, இம்மூவகை மக்களாலும் உலகத்துக்கு நலம் உண்டு என்றே கூற வேண்டும்.

அரசன்:—மூன்றும் ஒன்றே யென்று கூறுவது பொருத்தம் என யான் நினைக்கவில்லை. தனக்கென வா ழாப் பிறர்க்குரியாளனுப் இருக்கும் ஆண் மகன், உலகத் துக்குப் பெரும்பயனை விளைப்பவனே. அவனுக்கென ஒரு குடும்பமும் பற்றும் இல்லையாயின், உலகின் மக்க ளெல்லாம் அவன் அன்புக்குரியவராகின்ற ராகையால், அவன் உள்ளத்தில் எழும் அன்பின் ஊற்று வீணாகா மல், நல்வழியில் உதவுகின்றது. பெண் மக்கள் இறை வன் படைப்பில் அமைந்தது, உலகம் வளர்ந்து ஓங்கு தற்பொருட்டே. பெண்டிர் தம் உடற் கூற்றையும் உள் ளக் கிளர்ச்சிகளையும் நன்குணர்வராயின், அன்பின் செல்வத்தை வளர்க்கும்பொருட்டு இறைவன் தமக்கு அமைத்த அருணலம் பாழாகா வண்ணம் மனத்தலைவி யராதற்கே முயல்வர். தனித்திருப்போர் தமக்கும் பிறர்க் கும் பயன்படாதவரே யாகின்றனர். உள்ளத்தில் ஊறி யெழும் அன்பின் ஊற்றை அவர்கள் தம் மக்கள் பிற

நெருங்கிய சுற்றத்தார் என்ற முறைபற்றிப் பயன்படுத்த லாகுமே யன்றி, வேறு வழியாலியலாது. ஆகையால், உல கின் நன்மைக்குப் பயன் படுவதில் மற்றெல்லா வாழ்வு களைக் காட்டிலும் கணவன் மனைவியராய் இணைந்த இல் லற வாழ்வே சிறந்தது என்று கூறுவேன்.

அரசி:—தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுய் ஓர் ஆண் மகன் வாழலாம் என்று கூறுகிறீர்; அவ்வாறு ஒரு பெண் மகள் வாழ வியலாது என்கின்றீர். கல்விச் செல்வமும் அருட்புலமையும் படைத்து உலகத்தினர்க் குப் பெருநலம் புரிவாராய்வாழ்ந்த ஔவையார் போன்ற பெண் மக்களை எவ்வகுப்பிலே சேர்ப்பீர்? ஆண்மக்களா யினும், பெண் மக்களாயினும், ஒரு குறிப்பிட்ட எல்லைக் குள் தம் மறுவற்ற அன்பைப் பயன்படுத்துவது சிறப்பே யாயினும், அவ்வன்பின் செல்வம் நன்கு வளர்வுறுமா யின், கேவலம் தன்னல வுணர்ச்சி யென்பதின்றிப் பயன் படுத்தலாமன்றே?

அரசன்:—அதுவும் ஒருவாறு உண்மைதான். ஆயி னும், அது சாமானியமாய் இயலக் கூடியதொன்று. திருவள்ளுவர் போன்ற பெரியார்களால் இல்லற வாழ்வே சிறந்ததென்று கருதப்படுகின்றது. இதுநிற்க. நாம் வெகு தூரம் நடந்து வந்துவிட்டோம். உன்க்குத் தேக சிரமம் உண்டாகலாம். ஆகையால், இவ்விலவந்திகைக் கரையிற் சிறிது நேரம் அமர்வோம். இதோ! சந்திரோதயம் தொடங்குகிறது. என்ன இன்பக் காட்சி!

அரசி:—அப்படியே செய்வோம். தமது அருமைத் திருவாக்கால் தமிழ்ச் செய்யுட்கள் கேட்க வேண்டும் என்ற விருப்பம் உடையவளா யிருக்கிறேன்.

அரசன்:—எத்தகைய செய்யுட்களைக்கேட்க விரும்பு கிறாய்? அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால் வகைப் பொருள் பற்றித் தமிழ்ச் செய்யுட்கள் வளர்ந் திருக்கின்றன. பொருளை அகப் பொருள், புறப் பொருள் என்று பிரித்துப் பல புலவர் பாடியிருக்கின்றனர். அகப் பொருளில் இன்பம் கூறப்படும்; புறப் பொருளில் மற் றவை கூறப்படும். நீ இப்பொழுது எப்பொருள் பற்றிய செய்யுளைக் கேட்க விரும்புகின்றாய் என அறிய விரும்பு கிறேன்.

அரசி :—புறப் பொருளைப் பற்றிய செய்யுட்களை யான் கேட்க விரும்புகின்றேன். அவற்றுள்ளும் பெண் மக்களது பெருமையைத் தெரிவிக்கும் செய்யுளைக் கேட் கப் பெரிதும் அவாவுகின்றேன்.

அரசன்:—நின் விருப்பம் அதுவாயின், அங்ஙனமே கூறுகின்றேன்; கேள்:

"கெடுக சிந்தை! கடிதிவள் துணிவே!
மூதில் மகளிர் ஆதல் தகுமே!
மேனாள் உற்ற செருவிற் கிவள்தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே;
நேருநர் உற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே;
இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி,
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே." *

* புறநானூறு, செய் - 279.

அரசி:—செய்யுள் மிக்க மறச்சுவை யுடையதாய் இருக்கிறது; பெண் மக்கள் இவ்வாறு இருக்க வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறது; உண்மையாகக் கண்ட செய்தியையும் கூறுகின்றது. பெண் மக்களிடம் இத் தகைய உயர் குணம் இருந்தாலன்றோ, நாட்டில் வீர முடைய ஆண் மக்கள் தோன்றுதல் கூடும்!

அரசன்:—இச்செய்யுளைப் பாடியவர் ஒக்கூரில் வாழ்ந்த மாசாத்தியார் என்ற பெண் புலவர் ஆவர். பெண் மக்கள் பெருமையைக் கூறுவதில் அவர்க்கு அவா இருப்பது நியாயந்தானே! செய்யுளில் அவர் கூறும் பொருள் சிந்தித்து இன்புறற்குரியன. ஒரு வரலாறு கண் கூடாகத் தோன்றுகிறது. ஒரு பெரும்போர்க் களத்திற்கு அவர் இரண்டு மூன்று தினங்கள் சென்றார்; பல ஆண் மக்களும் நன்கு போர் புரிவதைக் கண்டார்; அவர்க்குரிய மக்களெல்லாம் ஏற்ற முறையிலே தூண்டி நிற்பதையும் கண்டார்; களமெங்கும் சுற்றிப் பார்த்து வந்தார்; ஓர் இடத்திலே மற மகள் ஒருத்தி தன் கணவனும் தந்தையும் போர் புரியும் பெருமையைப் பார்த்துக்கொண்டு நின்ற காட்சியைக் கண்டார்; சிறிது நேரம் நின்றார்; முதியவனுகிய தந்தை மார்பிலே வேல் பாய்ந்து விழக் கண்டார்; மகள் கண்ணீர் உதிர்க்காமல் மகிழ்ச்சியோ டிருப்பதையும் கண்டார். ஒரு நாள் கழிந்தது. மறு நாளும் அக்களத்துக்கு வந்தார். அன்று கண்ட காட்சி யென்ன? தந்தையை முதல் நாட் போரி லிழந்த அந்த மற மகள், தன் கொழுநனைப் போர்க்குத் தூண்டி நின்றாள். அன்று மாலையில் அநேக யானைகளை வென்ற அவள் கொழுநன், வீர சுவர்க்கம் புகுந்தான்.

அது கண்டும் மனங் கலங்காது நாட்டின் பொருட்டுத் தன் தந்தையும் கொழுநனும் உயிர் கொடுக்க நேர்ந்த தால், அவள் மகிழ்ச்சியே யடைந்தாள். புலவர்க்கு ஒரு யோசனை யுதித்தது: "இப்பெண் இனி என்ன செய் வாள்?" என்று பார்க்க விரும்பினர். போர்க்களத்துக் குச் சிறிது தூரத்தில் இருந்த மறக்குடி யிருப்பு வழியே வந்தார்; அங்கு ஓர் அருமையான காட்சியைக் கண் டார்: தந்தையையும் கொழுனையும் முதல் இரண்டு நாட் போர்களிலே இழந்த அம்மற மகள், அன்றும் போர்ப்பறை முழக்கங் கேட்டு, விருப்பமும் மயக்கமும் கொண்டு, தன் ஒரே மகனைப் போர்க்கோலம் பூணுவித் தாள். அவன் சிறு விடலை; தன் தலை மயிரையே சரியாக முடிந்துகொள்ளத் தெரியாத மிக்க இளம்பருவத்தான். பரந்து கிடந்த அவன் சுருமி மயிரிலே எண்ணெய் தடவி வாரி, வெண்மையான ஆடையை அவனுக்கு உடுத்தி, வேல் ஒன்றை யெடுத்துக் கையிலே கொடுத்து, "நேற்று நின் தந்தை போர் புரிந்து புகழ் படைத்த களத்துக்குப் போவாய்," என்று தூண்டுதல் செய்து நின்றாள். இதனைக் கண்ட புலவர் அதிசயித்தது வியப்பாமோ? இத்தகைய வீரச் செல்வம் பெண் மக்களிடம் இருந்தாலன்றி, ஒரு நாடு புகழ் பெற்றோங்க வியலாது. மற மகள் துன்பத்தி லெல்லாம் பெருந்துன்பமாகிய கணவனை யிழந்த இடும் பையை மனத்தடக்கித் தன் குடியிற் பிறந்த இளந் தோன்றல் குடிக்கேற்ற குணமுடையானை யிருத்தல் வேண்டும் என்று அவ்வண்ணம் செய்தாள். இதுவே புலவர் உள்ளத்தை உருக்கியது. எல்லை மறக்குடியிற் பிறந்த மகளிரின் மாண்பு!

அரசி:—இச்செய்யுளில் உள்ள பொருளை யெல்லாம் ஒருவாறு இனிது விவரித்துவிட்டீர்கள். இவ்வாறு பெண் மக்கள் பெருமையைக் கூறும் பாடல்கள் ஆண் மக்கள் பாடியவையாய் எவையேனும் உளவோ?

அரசன்:—புலமைப் பெருமக்கள் பாடிய பாடல்கள் உள. ஆனல், அவை இத்துணை நயமுடையன என்று நான் கூறமாட்டேன். பெண் மக்கள் பெருமையைப் பெண் மக்களே நன்கு எடுத்துரைக்க வல்லார் என்பது என் துணிபு. இது நிற்க. நாம் இங்கு வந்து வெகுநேரமாயிற்று. இனி நாம் மெல்ல நடந்து, அரண்மனை செல்வோம். குளிர்ந்த காற்றில் இருப்பது உனக்கும் தற்கால நிலைமையில் நன்மையாகாது; அதிகம் நடமாடுவதும் நலமன்று.

அரசி:—ஆஹா! அரண்மனைக்குச் செல்வோம். இன்னும் சில நாட்களில் ஏற்படலாம் என்று எதிர் பார்த்த செய்தி, இன்றே நாளையோ ஏற்படலாம் என எனக்குத் தோன்றுகிறது. எனக்கு நடப்பதற்குச் சிரமமாகத் தோன்றுகிறது. மெல்ல நடந்து போவோம்.

பின்னர் அவ்விருவரும் அரண்மனை யடைந்தனர். அரசி அன்றிரவெல்லாம் மிக்க சிரமப்பட்டனள்; சூரிய உதய காலத்திலே ஓர் இளங்குமரனை ஈன்றனள். உடனே இச்செய்தி அரசனுக்கும் பிறர்க்கும் அறிவிக்கப்பட்டது. அரசனுக்கு ஆண் மகன் பிறந்த வைபவத்தைக் கொண்டாடும் பொருட்டு, அன்று பகற்பொழுதிற் குள் உறையூர் நகரெங்கும் உற்சவங் கொண்டாடப் பெற்றது. சிறைக்களத்தில் இருந்தார் பலர் விடுதலை செய்யப் பெற்றனர். அந்தணரும் புலவரும் பிறரும்

அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு சிறப்புச் செய்யப் பெற்றனர். காலக் கணக்கர் பலர் வந்தனர். அவரும் அரசகுமரனது எதிர்காலப் பெருமையைக்கூறிப் பொன் பெற்றனர்.

சில தினங்கள் மங்கள வைபவங்களிலே கழிந்தன. அரசன் தன் குமரனுக்கு நாமகரணம் செய்தற்காக அறிஞரோடு ஆலோசித்தான். அவரனைவரும் உதய காலத்திற் பிறந்தாளுகையால், உதய குமரன் என்று பெயர் இடலாம் என்றனர். அவன் அது கேட்டு மகிழ்ந்து, அவ்வாறே பெயரிட்டான்; நெல்லும் பொன்னும் நிறைய வழங்கி அந்தணரை மகிழ்வித்தான். மதலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தான். அரசன் முன்போல அரசாங்க காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தான். அரசியும் தேக சிரமம் எல்லாம் நீங்கப் பெற்றுத் தக்க மருந்துகள் உண்டு, செவிலித்தாயும் கைத்தாயும் தாலாட்டுந் தாயும் தன் குமரனை நன்கு பேணி வரத் தான் அவன் முக விலாசத்தைப் பார்த்து மகிழ்ந்திருந்தாள். இவ்வாறு சில ஆண்டுகள் சென்றன. குமரனும் தன் விளையாட்டுக்களாற் பெற்றோரை மகிழ்வித்தான்.

II

சோழர் தமிழ்ச் சங்கம் பல புலவர்களுக்குத் தாயகமாய் இருந்தது. அது புகார் நகரத்தே சில காலமும் உறையூர் நகரத்தே சில காலமுமாக இருந்து வந்தது. அரசனும், உறையூரிற் சில காலமும் புகார் நகரிற் சில காலமுமாக வாழ்ந்துவந்தான். ஒருநாள் அவன் தமிழ்ச் சங்கத்துப் புலவர்களோடு அளவளாவக் கருதி அங் கடைந்தனன். அன்று அங்கு அருட்புலமை படைத்த பலர் கூடியிருந்தனர். அரசன் அவர்களோடு அளவளாவிச் சிறிது பொழுது போக்கினன். அன்று அத்தமிழ்ச் சங்கத்திலே, ஆலத்தூர் கிழார், மாரோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங் கிழார், கோவூர் கிழார் முதலிய புலவர் பலர் இருந்தனர்.

அரசன் தமிழ்ச் சங்கத்தக்கு வரும் காலத்தே ஒவ்வொரு புலவரும் தம்மால் இயன்றவளவு செய்யுட்களால் அரசனைச் சிறப்பித்தல் வழக்கம். அன்று ஒவ்வொருவரும் தம் மனக் கருத்தை வெளியிட்டுப் பேசவும் பாடவும் தொடங்கினர். அங்கு நிகழ்ந்த சம்பாஷணை வருமாறு:—

அரசன்:—புலவர் பெருமக்காள், நும்மிலே பலரை இன்று இங்கு யாம் ஒருங்கு காணப்பெற்றது எம்முன்னோர்செய்த புண்ணியப்பேறே என்று எண்ணுகின்றேம். புரவலர்க்கும் புலவர்க்கும் இடையில் உள்ள தொடர்பு

பிறதொடர்புகளைப் போன்றதெனக் கூறவியலாது.புலவர் எதிர் காலத்தே தம் புகழும் தம் புரவலர் புகழும் அழியாதிருக்கத் தக்க அரும்பணி இயற்றுகின்றனர். அவ்வாறு அவர் இயற்றுதற்குத் தம்மால் இயன்ற உதவி புரிதலே புரவலர் பணி ஆகின்றது. அறிஞர்களே, நும் முள் முன் பயின்றறியாதவர் சிலர் இருக்கக் காண்கின்றேம்; எல்லாரோடும் இன்று நட்புப் பூண விரும்புகின்றேம்.

கோவூர் கிழார்:—அரசரே, என்னை அறியாதார் தமிழ் மன்னரில் எவரும் இரார். தமிழை வளர்க்கும் பணி பூண்ட நீவிர் அறிவிர் என்று யான் கூறுவது வியப்பாகாது. யான் பல நாடுகட்குஞ் சென்று, அரசர் பலரோடு பயின்று வந்துளேனுயினும், சோழ நாட்டினிடமும் சோழ மன்னரிடமும் எனக்கு உள்ள உண்மை யன்பு வேறு எவரிடமும் இல்லை யென்றே கூறுவேன். இனி இங்குள்ள புலவர் சிலரை உமக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்புகின்றேன். இவர் ஆவூரிற் பிறந்த மூலங் கிழார் என்ற பெரியார். இவர் முன்னோர் அருட்புலமை படைத்தவர். இவர் பெற்ற புலமைச் செல்வம் உலகம் புகழத் தக்கதே. இவர்தம் மைந்தரும் இக்காலத்தே சிறந்த புலவருள் ஒருவராய் விளங்குகின்றார். இவர் நம் நாட்டிற் சேர்ந்தவரேயாயினும், பிற மன்னவராலும் நன்கு மதிக்கப் பெற்றவர்.

அரசன்:—ஐய, ஆவூர் மூலங் கிழாரே, நீர் எம்மவர் அன்றே? எம் நாட்டீர், எம்முள்ளீர். நும்மை இந்நாள் காறும் யாம் அறிந்துகொள்ளாதிருந்தது எமது குறையேயாம்.

ஆவூர் மூலங் கிழார்:—மலைபோல விளங்கும் இளங் களிற்றின்மேல் வானவுலகத்தைத் துடைக்கும்படி பல நிறமும் உருவமுமுடைய கொடிகள் தொடங்கும் பெரும் படைகளையுடைய மன்னர் பிரானே, நீர் எத்திசையிலே சினந்து நோக்குகின்றீரோ, அத்திசையிலே எரி தவழும். நீர் எத்திசையிலே நயந்து நோக்குகின்றீரோ, அத்திசை யிலே பொன் பூக்கும். செஞ்ஞாயிற்றினிடம் குளிர்ந்த நிலா வேண்டினும், வெண்டிங்களில் வெப்பமான வெயில் வேண்டினும் இரண்டும் எண்ணிய வண்ணம் நிறைவேற் றும் ஆற்றலுடையீர். ஆகையால், நும் நாட்டகத்தே பிறந்து நும் ஆட்சியின் கீழ் வளர்ந்த எனது பாக்கி யத்தை எவ்வாறு எடுத்துரைப்பேன்? எல்லாவகை யின் பங்களையும் அனுபவித்தற்குரிய கற்பகப் பூஞ்சோலை சூழ்ந்த தேவருலகத்து வாழ்வோரும், தாம் தாம் முன் செய்த புண்ணியப் பயனை அங்கு அனுபவித்திருக்கலா மேயன்றிச் செல்வ முடையோர் ஈதலும் செல்வமில்லோர் இரத்தலும் என்ற இரண்டு நிலையும் அந்நாட்டில் இன் மையால், என்னைப் போன்ற பரிசில் வாழ்நர் அத்தேவ ருலகத்துப் பெறுதற்குரிய இன்பத்தை இங்கும் பெற லாம் என்று எண்ணியும் நும் பகைவர் நாடுகளும் நும் முடையவே யாதலால், நும் நாட்டையே நாடுவராயினர். நான் இங்கு வருதல் வியப்பாமோ?

அரசன்:—புலவர் பெருந்தகையீர், நும்போன்ற நல் லோர் பிறந்து வாழ்ந்து வருதலாலன்றோ, நம் நாடு நாடு எனத் தக்க புகழ் படைப்பதாயிற்று?

கோவூர் கிழார்:—அரசர் பிரானே, நீவிர் கூறுவது ஒருவாறு உண்மையே. அரசர் ஆதரவின்றிப் புலவர்சிறப்

படைய வழியில்லை. புரவலரும் புலவரும் ஒருவரை யொருவர் சார்ந்தே புகழ் படைக்கின்றனர். ஆகையால், ஒரு நாட்டின் பெருமை அரசர் குணத்தாலும் நன்மை யாலும் வளர்வுறுகின்றது. இது நிற்க. இங்கிருக்கும் பிற புலவர்களையும் அறிமுகம் செய்து வைக்க விரும்பு கிறேன். இவர் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் உள்ள மாரேக்கம் என்ற ஒரு சிறு நாட்டிற் பிறந்தவர். இவர் பெண்டிரேயாயினும், சிறந்த புலமை படைத்தவரே யெனப் பல நல்லோராலும் பாராட்டப்பட்டவர்; அகப் பொருள் பற்றி அழகியதொரு செய்யுள் பாடியுளர். அப்பாடலில் உள்ள பொருள் நயமே இவர்க்கு நப் பசலையார் என்ற பெயர் தந்தது.

அரசன்:—மாரேக்கத்து நப்பசலையாரைப் பற்றி யாம் முன்னே கேள்வியுற்றிருக்கின்றோம். ஆனால், இவரை நேரிற் கண்டதில்லை. இச்சமயம் வாய்த்தது பற்றி மிக்க சந்தோஷமே அடைகின்றோம். அருட் புலமை படைத் தார் ஆண் மக்கள் ஆயின் என்? பெண் மக்கள் ஆயின் என்? நமக்கு வேண்டுவது புலமைதானே? அம்மை யீர், தும்மை இங்கு இன்று காணப் பெறுவது எதிர்ப் பாராப் பெரும்பேறு என்றே எண்ணுகின்றேம்.

மாரேக்கத்து நப்பசலையார்:—அரசர் பெருந்தகை யிர், அரசர் புகழ் படைக்கக் காரணமாய் இருக்குங் குணங்கள் மூன்று: அவை இரந்தோர்க் கீதல், பகை வரை அடுதல், அறநெறி நிறுத்தல் என்பனவாம். நீர் வல் லூறு ஒன்றுல் தொடர்ந்து பிடிக்கப் பெற்ற புறவொன் றின் பெருந்துயரைக் களையும் பொருட்டு யானைக் கொம்பாற் கடைந்தமைத்த கால்களையுடைய துலாக்

கோலில் ஏறி நின்ற சிபி மன்னர் குடியிற் பிறந்தீராகை யால், இரந்தோர்க் கீதல் நும் குடிப் புகழ் ஆகுமேயன்றி நுமக்குச் சிறப்புற அமைந்த தாகாது. பகைவர் நெருங்கு தற்கு அஞ்சுகின்ற வெற்றித் திருவைப் படைத்து விண் ணிலத்தே திரிந்துகொண்டிருந்த மூன்று அரண்களை வென்று அழித்த தூங்கெயி லெறிந்த தோடித்தோட் செம்பியன் போன்ற நும் முன்னோரை நினைக்கும்போது, பகைவரை யடுதலும் நும் புகழ் ஆகாது. வீரம் மிக்க சோழர்க்குரிய உறையூர்ப் பேரவையில் அறம் தொன்று தொட்டு நின்று நிலவிய தாகையால், முறை செய் தலும் நும் புகழ் ஆகாது. ஆகையால், நும்மைப் பற்றிச் சிறப்பாக யான் என்ன கூறுவேன்? பொன்னால் அமைந்த நெடுங்கோட்டினை யுடைய இமய வரையின் மேல் வில்லைப் பொறித்து உலகினை யாண்ட சேரன் தோல்வியுற்றழிய அவனது வஞ்சிமா நகரை வாட்டிய நும் மெய்ப் புகழை எவ்வணம் புகழ்வேன்? நும் புகழ் என் நாவளவில் அடங்குவ தன்றே!

அரசன்:—அம்மையீர், நும்மைப் போன்ற புலமை படைத்த பெண்டிர் இருத்தலா லன்றே, நம் நாட்டுப் பெண்டிர் உள்ளத்தே வீரமும் கற்பும் அற நெறியும் ஓங்கி வளர்கின்றன? மூதில் மகளிரைப்பற்றி நீவிர் பாடியுள்ள பாடல் ஒன்றே யாம் கேட்டிருக்கின்றோம். அதன்கண் நீவிர் அமைத்திருக்கும் பொருட் சிறப்பை எவ்வுலகமும் பாராட்டிப் புகழும் என்று கூறுவது உப சார மாகாது.

கோவூர் கிழார்:—அரசர் பிரானே, இன்னும் சில புலவர் இங்கிருக்கின்றனர். இதோ வருகின்றவர் வேள்

ஊக் குடி என்ற சிற்றூரில் வாழும் நாகனூர் என்பா ராவர். அங்கிருப்பவர் ஆலத்தூர் கிழார் எனப்படுவர். அவர் இங்கே சென்ற பல ஆண்டுகளாகக் கல்வி கற்றுப் பயன் பெற்று, இப்பொழுது இங்கிருந்து வெளியேகும் நிலையில் இருக்கின்றார்.

அரசன்:—ஆலத்தூர் கிழாரே, நீவிர் இத்தமிழ்ச் சங்கத்திலே கல்வி பயின்றீர் என்று கேள்வியுற்றேம். நீர் பெரும்புலவர் குடியிற் பிறந்திருக்கின்றீர்; சிறந்த கல்வியும் பெற்றுக்கொண்டிருக்கின்றீர். இனி அதை வேண்டியவாறு உலகிற்குதவுவீர் என்றே எண்ணுகின் றேம். நீவிர் எங்ஙாடு செல்லினும், இங்ஙாட்டையும் இவ்வரசையும் மறக்க மாட்டீர் என்றே எதிர் பார்க் கின்றேம்.

ஆலத்தூர் கிழார்:—சோழ மன்னர் பெருமானே, பசுவின் மடியை அறுத்த பாவிகட்கும், பெண்டிரது கருப்பத்தைக் கெடுத்தோர்க்கும், பார்ப்பாரைக் கொன்ற கொடியோர்க்கும் பிராயச்சித்த காண்டங்களிலே பரி காரம் விதிக்கப்பட்டுளது. ஆனால், உலகமே தலை கீழாய் மாறுவதாயினும், ஒருவன் செய்த நன்றி கொன்றோர்க்கு உய்யுமாறில்லை யென்று அற நூல்கள் முழங்குகின்றன. ஆயிழையார் கணவனாகிய அரசரே, காலை வேளை யிலும் மாலை வேளையிலும் வரகரிசிச் சோற்றிலே பாலுந் தேனுங் கலந்து முயற் கறியோடு பலர் சூழ விருந்து இலந்தை மன்றத்தடியில் உண்டு மகிழ்ந்து வேண்டிய படியெல்லாம் வஞ்சகமற்ற உள்ளத்தோடு பேசி வாழ்ந்த பாணர்க்கு எல்லா வகைச் செல்வமும் சிறப்பும் செய்த வேந்தர்-பிரான் என்று நும் புகழைப்பாடா திருப்பேனை

யின், வாழ்நாட்களை அளந்துகாட்டும் ஞாயிறு தோன்று தல் ஒழியும். யான் மிகவும் சிறியேன். இவ்வுலகத்தே சான்றோர் செய்த புண்ணியம் இருக்குமாயின், இமய மலையில் தோன்றி மிக்க முழக்கத்தோடு மேகம் பொழி கின்ற பல மழைத் துளிகளைக்காட்டிலும் மிக்க காலம் வாழ்வீராக.

அரசன்:—புலவரே, நீர் பல நாடுகட்கும் சென்று நம் நாட்டின் புகழையே வளர்க்க வேண்டுகிறேம். ஐய, வெள்ளைக்குடி நாகனாரே, நும் முகக் குறியை நோக்கின், ஏதோ எம்மிடம் எதிர் பார்ப்பதாகத் தோன்றுகிறது. ஒன்றையும் ஒளிக்காது கூறலாம். எம்மால் நுமக்கு வேண்டும் உதவி இயலுமளவு புரிகின்றேம்.

வெள்ளைக்குடி நாகனார்:—பெரிய கடலினை முப் புறத்தில் எல்லையாகவுடைய இத்தமிழகத்தே, அரசு பூண்டிருக்கும் மன்னர் மூவர். அவருள் அரசு என் னத் தக்க சிறப்புடைய அரசினைத் தாங்கிய பெருமை நுமக்கே யுரியது. பெருமை, வெள்ளி தென்திசை நோக்கிச் செல்லும் வற்கட காலத்திலும், ஞாயிறு நாற்புறமும் தோன்றும் அருங்கோடையிலும், அழகிய குளிர்ந்த காவிரி யாறு பல காலாய் வந்து நீர் வளம் பெருக்க, நெல்லும் கரும்பும் ஓங்கி வளரும் சிறப்பினையுடையது நும் நாடே. இந்நாட்டினை ஆளும் பெருமை பூண்ட அரசரே, யான் இங்கு ஒன்று கூற விரும்புகிறேன்: அறக்கடவுள் ஆராய்ந்து முறைசெய்வது போலச் செங் கோல் நெறியால் ஆராயும் நீதியை வேண்டும் பொழுது எளிய பதமுடையவராய் இருப்போர்தாம் இவ்வுலகிலே மழைத்துளி வேண்டி மழை பெற்றவராவர். ஞாயிற்றின்

கிழ் வந்த கருமேகமானது வானத்திடத்தே தோன்றிய அஞ்ஞாயிற்றை மறைத்தாற்போல, துமது வெண்கொற்றக் குடை வெயிலை மறைப்பதற்காகக் கொண்டதோ! இல்லை. வருத்தமடைந்து வருகின்ற குடிகளைப் பாதுகாத்து நிழல் செய்தற்காகக் கொள்ளப்பட்டது. வேற்போரில் மிக்க வளவர் பிரானே, இளம்பாணியின் துண்டங்கள் பலவாறு கிடப்பது போலக் களிறுகள் கையும் காலும் தலையும் வெட்டுப்பட்டு வீழ்ந்து கிடக்கப் பகைவர் புறங் கொடுக்கும்படி போர் புரியும் படைச் சிறப்பு உடையீர். அவ்வெற்றி எதனால் விளைந்தது? உழுகின்ற கலப்பை நிலத்தின்கண்ணே ஆழச் செலுத்திய சாலினிடத்து விளைந்த நெல்லின் பயனைத் தோன்றியது என்பது உபசாரமாகுமோ? பெய்தற்குரிய காலத்தே மழை பெய்யா தொழியினும், விளைவு குறைந்தாலும், இயல்பல்லாத தோற்றங்கள் செயற்கையினால் தோன்றினும், இவற்றுக்குக் காரணம் அரசர் கொடுங்கோன்மையே என்று இவ்வுலகமெல்லாம் அரசரையே பழிக்கும். அதனை நன்றாக அறியும் அரசர் பிரானாகிய நீர், கோட் சொல்லுங் குணமுடைய தீயோரது வாய்மொழியைக் கேளாது ஏரின் உதவியால் வாழும் உழவர்களாகிய குடிமக்களைப் பாதுகாத்து வருவீர். அவ்வாறு செய்தால், பகைவர் எல்லாம் நும்மை வணங்குவர்.

அரசன்:—ஐய, நாகனாரே, நும் வாய் மொழியைக் கேட்கும் போது நம் நாட்டு அதிகாரிகளால் நுமக்கு ஏதாயினும் தீங்கு விளைந்திருக்கலாம் என்று எண்ணுகிறேம்; அதை வெளியிட்டுக் கூற வேண்டுகிறேம். எம்மால் இயன்றன செய்தும் என்று முன்னே கூறினும்.

வேள்ளாக்குடிநாகனார்:—அரசேறே, சென்ற ஆண்டில் என் நிலங்களிலே இறைவன் செயலால் யான் எதிர் பார்த்த பலனுக்கு மிகவும் குறைவாகவே பலன் கிடைத்தது; அரசினர்க்கு நான் தருதற்குரிய பகுதிக்குக் கூடப் பற்றுத நிலைக்கு வந்துவிட்டது. காவிரியின் வளத்தால் அடுத்த முறை ஒருவாறு விளைந்தது. இப்பொழுது நான் முன்னே செலுத்தக் கூடாமலிருந்த பகுதியையும் சேர்த்துச் செலுத்துமாறு அரசராணை பிறந்துளது. நான் பலனடையாக் காலத்துக்குப் பகுதி செலுத்துவது என்பது நியாயம் எனத் தோன்றவில்லை. காவிரி வெள்ளத்தாலே முதலிலே எனக்கு நஷ்டம் விளைந்தது. அப்பொழுது விழுந்த வண்டலாற் பிறகு நன்மை ஆயிற்று. 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பர் அறிஞர். உழுதுபயிர் செய்வோர்க்கு விளையும் நஷ்டம் நாட்டுக்கும் அரசுக்குமே விளைவதாம். ஆகையால், பழஞ் செய்க்கடன் யான் கொடுக்க வேண்டும் என்று பிறந்திருக்கும் ஆணையை மாற்றியுதவ வேண்டுகிறேன்.

அரசன்:—அவ்வண்ணமே செய்வோம். இனி நீர் கவலையின்றிச் செல்லலாம்.

கோவூர்கிழார்:—மாற்றார் பணியும் மன்னர்பிரானே, தென்றிசைத் தலைவனுகிய கூற்றுவன் ஓர் உயிரைக் கொள்ளவேண்டுமாயின், அதற்குரிய காலம் பார்த்துக் காத்திருப்பன். அவ்வாறு காலம்பார்த்துப் பகைவர்களை வேண்டியவிடத்தே நினைத்த காலத்தே கொன்று குவிக்கும் விற்போர் வேந்தரே, நும் உள்ளத்தே சினம் எழுமாறு தூண்டிய பகைவர் நாடுகள் எவ்வண்ணம் இருக்கும் என்பதை யான் அறிவேன். எட்டுத்திசையிலும் எரி

கொள்ளி எரிந்து வீழும்; பெரிய மரங்களில் வற்றியகிளை கள் தீப்பற்றி யெரியும்; ஞாயிறு பலவிடங்களிலே தோன் றும்; மற்றும் அஞ்சத் தகும் புட்களின் குரல் கேட் கும். இவை கனவிற் காட்சியாம். கனவிலே, அவர்கட் குப் பல் நிலத்திலே விழுவதாகத் தோன்றும்; தமதுமயி ரில் எண்ணெய் வார்ப்பதாகத் தோன்றும்; அவர்கள் பன்றி யேற்றின்மேல் ஏறி வருவதாகத் தோன்றும்; ஆடைகளைவதாகவும் படைக்கலங்கள்கட்டினுடன்மறிவ தாகவும் காணப்படும். இத்தகைய காட்சிகளைப் பகைவர் கண்டு மருளுமாறு போர் செய்யும் வலிமை தும்மிடம் உளது. பகைவரோவெனில், போர்க்கு வருமுன்பு தம் பின்னைகளின் பூப்போன்ற கண்களில் முத்தம் கொடுத் துத் தம் மனைவியர் தம் உள்ளத்திலிருக்கும் வருத்தத் தைக் காணு வண்ணம் மறைத்து வருவர். இங்ஙனம் யான் கூறுவது பொருள் பொருந்தாப் புகழுரையன்று.

ஆவூர் மூலங்கிழார்:—அரசர் தலைவரே, கோவூர் கிழார் கூறிய அனைத்தும் உண்மையே. எம்மன்னர் பெருமானுகிய நீர் பிறர் பாதுகாக்கும் பெரிய அரண்களை எளிதிலே கைக்கொண்டு அப்பகைவரைக் கொன்று அவர் முடியாக விளங்கிய பொன்னால் வீரக்கழல்செய்து அணிந்துகொள்ளும் வெற்றியுடையீர். நானும் என்னைப் போன்ற புலவர்களும் தும்மைப்பற்றிய இகழ்ச்சியான சொற்களைக் கூறுவோர் தலை வணங்கப் புகழ்ந்து பாடு வோர் பொலிந்து விளங்கி மென்மேலோங்க, இன்று கண்டாற்போல தும்மை என்றும் காணப் பெறுவோம். நீவிர் எந்நாளிலும் இனிய மொழியும் எளிய செவ்வியும் உடையிராய் இருக்கவேண்டு மென்பதே எமது வேண்டு

கோள். நாட்டின் வளத்தை நவில்வது என்போன்றார்க்கு இயல்வதன்று. சுருங்கக் கூறின், நுமது ஆட்சிக்குக் கீழ் அடங்கிய நாட்டிலே ஒரு பிடி கிடக்கும் சிறிய விடத்தின் விளைவு ஏழு களிறுகளைக் காப்பாற்றும் என்று கூறலாம். இத்தகைய செழித்த நாட்டின் மன்னராயிருக்கும் நுமக்கு மேன்மேலும் சீர்த்தியும் பிரதாபமும் ஓங்கி வருதல் இயல்பாகவே அமைந்ததல்லவோ? இன்று இங்கு வெகு நேரம் பேசியிருந்தோம். இவ்வண்ணமே எம் அரசர் என்றும் இருக்கவே விழைகின்றோம்.

அரசன்:—புலவர் பெருமக்காள், தமிழ்ச் சங்கம் என்று ஒன்று நிறுவ வேண்டுமென எம் முன்னோர் கருதியது நும்மைப் போன்ற அறிஞர் பலரை அடிக்கடி கண்டு அளவளாவுதற்பொருட்டே யன்றி வேறு காரணத்தாலன்று. இங்கு அறிஞர்கள் பல நாட்டிலிருந்தும் வருகின்றீர்கள். உள் நாட்டிலிருந்தும் புலமை நலம் படைத்தார் பலர் வந்துளீர். புதுமையிற் பணி புரியவும் பழமையான பணிகளை ஆய்ந்தின்புறவும் போற்றிப் பின்றேன்றல்களுக்கு உதவவும் நும் முயற்சியும் ஊக்கமும் ஒற்றுமை யுணர்ச்சியும் வேண்டுவனவாம். இங்கு வருவோர், தமிழ் வளர்ச்சி யென்ற ஒரே கருத்தோடு வருகின்றனர் என்பதை நும்மைக் கண்டே அறியலாம். நும்மிற் சிலர் அந்தணர்; சிலர், வேளாண் வாழ்க்கையர்; சிலர் வணிகர்; சிலர் சைவர்; சிலர் வைணவர்; சிலர் பௌத்தர்; சிலர் சமணர்; இவ்வேறுபாடுகள் எல்லாம் தமிழ்ப் பயிரை வளர்க்கும் முயற்சிக்கு ஒற்றுமையாய் உதவி செய்ய முன்னிற்றல் அதிசயமன்று. குலப் பிறப்பும் கொள்கையும் நிலையும் மொழிவளர்ச்சிக்கு எவ்வகை

யிலும் இடையூறாக நில்லாவென்பதை நீவிர் விளக்குகின்றீர். இங்ஙனம் தும்போன்ற நல்லோரால் இக்காளிலே இயற்றப்படும் அரும்பணிகள் பிற்காலத்துக்குப் பெரும்பயன் விளைக்கு மென்பதே எம் எண்ணமாம். பிறர்க்குப் பயன்படத் தாங் கற்றவற்றை உதவும் அறிஞரே எதிர் காலத்துப் புகழ் பெறுவர் என்பது நீவிர் அனைவரும் அறிந்ததே.

கோவூர்கிழார்:—தமிழக முழுமையும் தனித்தலைமையில் ஆண்ட தும் முன்தையோர் புகழ் தமது புகழே ஆயிற்று. பாரதபூமி முழுதும் ஒரு குடைக்கீழ் ஆண்ட பார்த்திபரும் தும் குலத்தேயிருந்தனர். புலவரை ஆதரிப்பதென்பது நும்மரபிலே பிறந்தவர்க்கு இயற்கையில் அமைந்த ஒரு குணமாம். புலவர் பாடும் புகழ் பெறுதல் மாத்திரமன்றிப் புலவரைப்போலவே அரும்பொருளமைத்துப் பாடவும் ஆற்றல் படைத்தவராய் தும் குடியினருட் சிலர் இருந்தனர். புலவராயினும், நும்மை எம்மினத்தில் ஒருங்கு சேர்த்துக் கூற எனக்குப் பெருவிருப்பம் உண்டு. அதனை இன்று தெரிவித்துக்கொண்டேன்.

அரசன்:—அறிஞர்களே, இன்று வெகுநேரம் பேசியிருந்தோம். யாம் அரண்மனைக்குச் செல்கின்றோம். அவகாசம் கிடைத்தபோ தெல்லாம் வருவோம். நாம் எல்லோரும் ஒரு மனத்தராய் இருந்து அருந்தமிழமுதத்தைத் துய்த்து இன்புற வேண்டுமென்பதே எமது எண்ணமாம். அது நிறைவேறற்கு இவ்விடமன்றி வேறு எது பொருத்தமாம்? இன்று கண்டதுபோல யாம் என்றும் தும் இன்முகம் காண விரும்புகின்றோம்.

அதன் பிறகு அரசன் அரண்மனைக்குச் செல்லுன்.

III

போர் புரிவதற்கு மனவெழுச்சி அரசர்க்கு இயல்பாகவே அமையும். பிற நாடுகளை வெல்லவும் அடக்கவும் தம் கொடியை அந்நாடுகளில் நாட்டவும் விரும்புவது அரசர் இயல்பே. சோழர் குடியிலே முன்னிருந்த மன்னர் எவ்வண்ணம் போர் புரியும் ஆர்வம் மிக்கிருந்தார் என்பதை அறிந்த கிள்ளி வளவன், அக்குணம் இன்றி இருப்பனோ? அவன் பாண்டிய மன்னன் பழையன் மாறன் தன்னை மதிக்கவில்லை யென்று அறிந்தான்; உடனே அவன் நாட்டின்மீது படை யெடுத்து அவனை அடக்கினன். சேரன் ஒருவன் இச்செய்தி கேட்டுப் பாண்டியன் அடைந்த தாழ் நிலையைக் கண்டு மனம் பூரித்தான். விரைவிலே தனக்கு வரவிருந்த நிலையை அவன் அறிந்திலன். பாண்டியனை வென்ற வளவிலே கிள்ளி வளவன் திரும்பிவிடுவன் என்று அவன் எண்ணியிருந்தான். அந்த எண்ணத்துக்கு மாறுக, மறு நாளை அவன் எதிர்பாரா வண்ணம் சோழர் படை சேர நாட்டை அடைந்தது.

கருவூரைத் தலைநகராகக்கொண்டிருந்த அச்சேரன், படைகளைத் திரட்டுதற்கும் பொருள்களைச் சேகரித்தற்கும் வேண்டிய முயற்சிகள் செய்தற்குக் காலம் பற்றாமையை யறிந்தான். இன்னது செய்வது என்று அறியாது அரண் கதவைத் தாளிட்டு உள்ளே இருந்தான்.

சோழர் படை முற்றுகை யிட்டது. இரண்டு மூன்று நாள்வரையிலே முற்றுகை நிகழ்ந்தது. சேர நாட்டுமக்கள் தமக்கு அவ்வப்பொழுது வருதற்குரிய உணவுப் பொருள்கள் வருதற்கு வழியில்லாமல் இடர்ப்பட்டனர். சோழர் படைஞர் காவற் காட்டைக் கோடரிகளால் அழித்தனர்; அகழியைக் கடத்தற்கும் அரண்மீது ஏறுதற்கும் உரிய முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தனர்.

அவ்வமயத்தே ஆலத்தூர் கிழார் அங்கு வந்துற்றனர்; தம் அரசனது போர்த் திறத்தையும் படைஞரின் ஊக்கத்தையும் அரணுக்குள் அடைத்திருக்கும் பகைவனது நிலையையும் ஊகித்துணர்ந்தார்; சோழ மன்னனை யடைந்தார்; தமது உரிமையால் நெருங்கி நின்று தம் உள்ளக் கருத்தை வெளியிட்டுரைக்கலாயினர்:—

"அருந்தமிழ் அரசரே, நீர் இப்பொழுது தொடுத்திருக்கும் போரிலே வெற்றி பெற்றுப் பகையரசரையழிப்பீராயினும், அங்ஙனமன்றிப் பொறுத்தருளி அவரை விட்டுவிடுவீராயினும், இவ்விரு செயல்களாலும் நுமக்கு வரும் பெருமையை நீர் அறிவீர். நான் கூறல் வேண்டா. இளம்பெண்டிர் கழங்கு கொண்டு மணற்றிட்டைகளிலே விளையாடிப் பொழுது போக்கும் ஆன் டொருநை யாற்றின் வெண்மணல் கெடும்படி கொல்லனல் நன்கு தீட்டப்பட்ட கோடரியால் வெட்டிக் குவிக்கப்படும் கடி மரங்கள் விழும் ஓசையைக் கேட்டும் தன் அரண்மனைக்குள் அடங்கி மறைந்து வெளி வராதிருக்கும் ஓர் அரசனோடு நீவிர் போர் செய்வது நும் அரிய புகழுக்குக் குறைவையே விளைக்கும் என்று கூறுவேன். ஆகையால்,

அரசர் பெருமானே, இப்போரை நிறுத்தி, நம் நாட்டுக் குத் திரும்பக் கேட்டுக்கொள்கிறேன்.''

இவ்வாறு ஆலத்தூர் கிழார் கூறியது கேட்ட கிள்ளி வளவன், அப்போரை நிறுத்தி, நாடு நோக்கித் திரும்பினன்; திரும்புகாலிலே மாரோக்கத்து நப்பசலை யாரைக் கண்டான். அவர் சோழனது போர்ச் செய்தி களை நன்கு கேள்வி யுற்றிருந்தா ராதலின், அவனை நோக்கிப் புகழ்ந்தார். ''தெடுந்தகையே, நஞ்சுமிழும் வெண்பல்லையுடைய ஐந்தலை நாகம் ஒன்று மலைப் பிள வில் ஒளிந்துகொண்டதென்று விண்ணகத்தே தீப்பறக்க முழங்கிப் பேரிடி யொன்று அங்குப் பாய்ந்தாற் போல முதலைகள் நிறைந்த அகழி சூழ்ந்த தன் அரணகத்தே அரச னொருவன் ஒளிந்தான் என்று அறிந்து, அவனை யழித்தற்குரிய சூழ்ச்சியை ஆராய்தல் நும் இயற்கைச் சிறப்பாம். புள்ளின் துயர் தீர்த்த சிபியின் மரபின் விளக் கமாத் தோன்றிய மன்னர் பிரான் சிறப்பை யானே புகழ வல்லேன்!'' என்று இவ்வண்ணம் அவர் கூறிய தைக் கேட்டுக் கிள்ளி வளவன் மலையமானுடு நோக்கித் திரும்பினன்.

மலையமான் சிறந்த வீரனே யாயினும், கொடை யாற் புகழ் படைத்த குடியிற் பிறந்து புண்ணியச் செல் வம் படைத்தவனே யாயினும், கிள்ளி வளவன் தன் மீது படையெடுத்து வரும் செய்தி கேட்டு ஒளித்தான். சோழ மன்னன் தன் நாட்டகத்து இல்லாக் காலங் களிலே இவன் அந்நாட்டிலே சிறிது சிறிதாகக் கைக் கொள்ளும் வழக்கமுடையனு யிருந்தா னுகையால், இவனை எவ்வண்ணமேனும் அடக்கிவிட வேண்டும்

என்று வந்த கிள்ளி வளவன், பகைவனைக் காணுது ஏமாற்ற மடைந்தான். உள்ளத்திலே எழுந்த சினத்தை அடக்க வழி யறியாது, மலையமானுட்டிற் பிரவேசித்தான்; இளஞ்சிறாராகிய அவன் மக்கள் இருவரைக் கண்டான்; தந்தை செய்த குற்றத்துக்காக மக்களைத் தண்டிக்கலாமென உறுதி பூண்டான்.

அவ்விருவரையும் சிறைசெய்து அவன் உறையூர்க்கு அழைத்து வந்தான். நாடெங்கும் கிள்ளி வளவன் போர்க்குச் சென்று திரும்பிய செய்தி பரவியது. அது கேட்டு அவனைக் காண விழைந்து கோவூர் கிழார் அங்கு அடைந்தார்; அவன் பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் பெற்ற வெற்றியைக் கேட்டு மகிழ்ச்சி மிகப் பெற்றார்; மலையமானுடி என்ற சிறு நாட்டின் தலைவனுகிய மலையமானைப் பெரும்பகை பூண்டு அவனை நேரிலே காணுது அவன் மக்களைச் சிறை செய்து வந்திருக்கும் செய்தியை அறிந்தார்; மனம் புண்ணுனார்; அரசனிடம் விரைந்து வந்தார்; தம் உள்ளக் கருத்தை ஒளிக்காது கூறலாயினர்: "ஐய, அரசர்க்கரசரே, நும் புகழைப் பாடுதல் என்னுல் இயலுமோ! புறுவின் பெருந்துயரம் போக்கிய புண்ணியச் சோழர் குடியிற் பிறந்த புரவலரே, இச் சிறுவர் அறிவுடைப் புலவர்க்கு இயல்பா யமைந்த வறுமைத் துன்பத்தை மாற்றித் தம் பொருளைப் பகிர்ந்துண்ணும் நற் குடியிற் பிறந்தார். இவர் இப்பொழுது இருக்கும் நிலையோ, மிகவும் இரங்கத் தக்கதா யிருக்கின்றது. இச்சிறுவர் நுமது சினத்துக்கு ஆட்களாகிக் களிற்றின் காலின் கீழே நீர் கருதியவாறு தெய்க்கப்படுவராயின், நற்குடி யொன்று அழியும்: நுமது குடிக்குப் பரம்பரை

யாய் வந்த பெரும்புகழும் அழியும். இப்பொழுது இவர் நுமது களிற்றரசின் காலின்கீழ் நிற்கின்றார்; ஆயினும், அக்களிறு தம்மை என்ன செய்யவிருக்கின்றது என்று அறியத்தக்க பருவமும் படைத்திலர். நும்சினத்துக்கும் நுங்களிற்றின் வன்மைக்கும் ஏற்றவண்ணம் செய்யத் தக்க செயல்கள் வேறு பல உள. இஃது அறிஞர் பாராட்டத்தக்க செயலாகாது. ஆகையால், இச்சிறுவரை விடுதலை செய்து என்னிடம் தந்தருள வேண்டுகிறேன். நான் இதுகாறும் கூறியவற்றைக் கேட்டிருந்தீர். இன்னும் நுமக்குச் சிந்தனை வேறுயிருக்குமாயின், விருப்பம் போலச் செய்யலாம்.''

இம்மொழிகளைக் கேட்ட கிள்ளி வளவன் அதிசயித்தான்; பிறகு மனத்தை ஒரு நிலைப்படுத்தித் தான் புரியவிருந்த பெரும்பாவத்தை நினைந்து மனம் வருந்தி, அம்மக்களை அவரிடமே ஒப்புவித்து, மனவமைதி பெற்றான்; பின்பு அரண்மனைக்குச் சென்றான். கோவூர் கிழாரும் உடன் சென்றனர்.

அரசனும் புலவரும் பொழுது போக்காகப் பேசியிருக்கும் அழகிய மண்டபத்தை யடைந்தனர். கோவூர் கிழார் சோழன் மன மாறுபாட்டை அறவே ஒழிக்க விரும்பிச் சில தமிழ் நூற்பொருள்களைப் பற்றிப் பேசியிருந்தார். பிறகு வளவன், ''நீர் எங்கெங்குச் சென்றிருந்தீர்? யார் யாரைக் கண்டு வந்தீர்?'' என்று வினவினன். அதற்கு மறுமொழியாகக் கோவூர் கிழார் தாம் சென்ற திசைகளைக் கூறித் தம்வாழ்வின் நிலையை விளக்கியுரைத்தார். அது கேட்டு அரசன் மகிழ்ந்தான். பின்பு அவ்விருவரும் தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டுப் பேசினர்.

அரசன்:—புலவீரே, நீர் பற்பல இடங்களுக்கும் சென்றதாகக் கூறுகின்றீர். எம் நண்பனுகிய சிறு குடி கிழான் பண்ணனைக் கண்டீரோ? அவன் கையால் பரிசில் பெறுதல் உண்மையில் எவர்க்கும் பெருமை தரும் என்றே யாம் கூறுவோம்.

கோவூர் கிழார்:—மன்னர் பிரானே, வள்ளன்மைக் குணமே உருவெடுத்து வந்ததுபோன்றிருக்கும் பண்ணனைப் பாராத பாவலரும் இருப்பரோ? யானும் பார்த்தேன்; ஆலத்தூர் கிழாரும் வந்திருந்தார். இருவர்க்கும் அவ்வள்ளல் நன்கு சிறப்புச் செய்தான். திரும்புகாலில் வழியிலே ஒரு பாணனைக் கண்டேன். அவன் தோற்றம் என் உள்ளத்தை யுருக்கியது. யான் அவனிடம் கூறிய மொழிகளை இங்குக் கூறுகின்றேன். "தேன்போல்இனிய பாடல் பாடும் யாழ்ப்பாண, 'உடுக்கையோசை இனிது; சிறிது பொறுத்து நின்று கேட்க,' என்று என்னைப் பார்த்துக் கூறுகின்றனை. யான் கூறுவது கேள்: தை மாதத்திலே குளிர்ந்து நீர் நிரம்பி யிருக்கும் பொய்கை போலக் கொள்வோர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது சோற்று வளம் படைத்த சோழ நாட்டு மன்னன் நற்புகழை மனத்தால் நினைந்து வாயாற் பாடி வண்மையிற் சிறந்த பண்ணன் வாழ்கின்ற சிறு குடியையடைவாயாயின், நீ மிக்க செல்வம் பெறுவை. விறகு வெட்டப் போனவர்க்குப் புதையல் கிடைத்தது போல, எதிர் பாராது இறைவன் செயலாற் பொருள் பெறுவதாக எண்ண வேண்டா. அவன் உன்னைக் கண்டால், வேண்டு மளவு பொருளை வாரி வீசுவன். அவன் எம் மன்னர் பிரானுக்கு உண்மை நண்பன். அங்குச் சென்று

வருக,'' என்று கூறினேன். ஆலத்தூர் கிழார் அருகில் நின்றிருந்தார். அவரும் அவனுக்கு வேண்டுவன கூறினர். பண்ணன் பெருமையை யாங்கள் அறியாதிருக்க இயலுமோ?

அரசன்:—புலவரே, பண்ணன் இயல்பை நீவிர் நன்கு அறிவீர். ஆயினும், யாம் அறிந்தவாறு அறிந்திருப்பீரோ என்று ஐயமுறுகின்றேம். ஒருகால் அவன் ஊர்க்கருகே யாம் சென்றேம். அங்குக் கண்ட காட்சி இன்னும் எம் உள்ளத்தில் உள்ளது. இவ்வுலகிலே யாம் வாழும் நாளெல்லாம் பண்ணன் வாழ்வானாக. அவனை நெருங்கி வரும் சுற்றத்தார் வறுமைத் துயரைப் பாணர் ஒவ்வொருவரும் நன்கு காண்பாராக. கனிகள் நிறைந்த மரத்திலே புள்ளொலி யெழுவது போல, அவன் மனையகத்தே ஊண் ஒலி அரவம் எப்பொழுதும் கேட்கும். மேகம் பெய்யும் இடத்தை அறிந்து கொண்டு தன் முட்டையைச் சுமந்து காய்ந்த நிலத்துக்குச் செல்லும் எறும்பின் வரிசைபோல, அவன் மனையகத்திருந்து சோறு கொண்டுவரும் சிறுவரை வரிசை வரிசையாய்க் காணலாம். அவனைப் பசிப்பிணி மருத்துவன் என்றே கூறலாம். அவன் மனையக வாழ்வை நன்கு உணரும் பேறு நமக்கு வாய்த்திருப்பின், நமது முன்வினைப் பயன் மிகவும் பாராட்டற்குரியதே.

இவ்வாறு அரசன் கூறிக்கொண்டிருக்கையில் ஆலத்தூர் கிழார் அங்கு வந்துற்றார்; அரசனையும் புலவரையும் வணங்கினர்; தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்.

கோவூர் கிழார்:—ஆலத்தூர் கிழாரே, நீவிர் பாணை ஞெருவீனை நம் மன்னரிடம் ஆற்றுப்படுத்தக் கூறிய பொருளுரைகளை இங்கு ஒரு முறை கூற வேண்டுகிறேன்.

ஆலத்தூர் கிழார்:—அரசர் பிரானே, அருந்தமிழ்ப் புலவரே, யான் பாணனை எங்கு ஆற்றுப்படுத்துவேன்? எனக்கு இளம்பருவம் முதலே மிக்கநலம் புரிந்த வெற்றி வேந்தராகிய நம் மன்னரையன்றி வேறு எவரை என் நாவாரப் புகழ்வேன்? பாணனிடம் யான் கூறிய மொழிகள் இவையே: "மிகவும் கிழிந்து வேற்றிழை நுழைந்து, வேர்வையால் நனைந்த கந்தையுடையை மிகவும் பாதுகாத்து உடுத்திருக்கும் வறுமைத் துயர் மிக்க பாணனே, நின்கையகத்தே நன்கமைந்த யாழ் இருக்கின்றது. உடம்பிலே புரவலரின்மையாற் பசி புகுந்து வாட்டுகின்றது. நீ உறுதியான கொள்கை யில்லாத ஒருவனது உடம்பு போலப் பலதிசையிலும் பற்றியிழுக்கும் பெருங்கூட்டமாகிய சுற்றத்தாரையுடையாய். உலக மெல்லாம் சுற்றி நின் வறுமைப் பிணி களைவோரைத் தேடிப் பயன் பெறுமல் இங்கு வந்தனை. யான் கூறுவது கேள்: உறையூர் நகரத்தே போர்ச் சிறப்பும் கொடைப் புகழும் மிக்க மன்னர் இருக்கின்றார்: அவரிடம் சென்றால், அரண்மனை வாயிலில் நிற்றல் வேண்டா. நீ அவர்முன் சென்ற பிறகு பொன்னால் இயன்ற தாமரைப் பூவைச் சூடி வருதல் உறுதியே."

கோவூர்கிழார்:—அரசர்க்கரசே, உண்மையான பெருமையைக் கண்ட காலத்து ஒளியாது பலர்க்கும் வெளியிட்டுரைக்கும் இயல்புடைய புலவர், தாம் மிகவும்

பாராட்டுகின்ற அரசரிடம் குறை காண்பாராயின், இடித் துரைத்து நல்வழியில் திருத்துதற்கும் உரிமையுடையா ராவர் என்பதை நீவிர் அறிவீர். எந்நாடு செல்லினும், எவரைக் காணினும், எங்கட்கு நும் புகழைப் பரப்புவ தில் வேட்கை மிகுதியே. ஆயினும், யான் இன்று கண் டது போன்ற கொடுஞ்செயல்கள் கண்டவிடத்து அற நெறிக்கு மாறுபடாத உண்மைக் கருத்தை வெளியிட் டுரைக்க வேண்டியிருப்பது பற்றி மன மாறுபடாதிருக்க வேண்டுகிறேன்.

அரசன்:—புலவர்களே, இன்று யாம் செய்ய எண் ணிய செயல் உரிய காலத்தே நும்மால் தடுக்கப்படா திருக்குமாயின், நிறைவேறியே யிருக்கும். அப்பொழுது எம் உள்ளத்தில் பொங்கிப் புகைந்தெழுந்த பகைத் தீயின் குணம் அதுவாம். மலையமான் சிறு நாட்டுத் தலை வனே யாயினும், பெரியோன் போல எண்ணிக்கொண்டு, நம் நாட்டுட் சிறுமைத் தொழில் செய்து வருகின்றான். சேர மன்னனே யாம் அரணகத்தே அழிக்கக் கருதிய போது ஆலத்தூர்கிழார் வந்து நம் எண்ணத்தைமாற்றித் தடுத்தார். மலையமான் மக்களை யாமெக் காலின்கீழ் இடறுவிக்கக் கருதி எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு வரும் பயனை யெதிர்பார்த்திருந்த எம் மனத்தை மாற்ற நீர் வந்தீர். ஆகையால், நாம் என்றும் நும் இருவரை யும் மறத்தல் இயலுமோ? இந்நேரம்வரையில் யாம் பேசி யிருந்த பண்ணன் எம் நண்பனுயிருக்கையில், எம்மிடம் இத்தீக்குணம் இருத்தல் பொருந்தாது. இனி யாம் போர் புரிவதையே ஒழித்து, அமைதியாய்ப் புகார் நக ரத்தே சில காலமும் உறையூரிற் சில காலமும் வாழ

விரும்புகின்றோம். யாம் எங்கிருப்பினும், தும்மிருவரையும் அடிக்கடி காணும் அவாவுடையேமா யிருப்போம்.

ஆலத்தூர் கிழார்:—பழு மரத்துக்குப் பறவை வருதல் இயல்புதானே! யாங்கள் வள்ளன்மை மிக்க தும்மை நாடி வருதல் என்றும் இயற்கையாய் அமைந்ததே யன்றோ?

கோவூர் கிழார்:—அரசர்பிரானே, இந்நேரம்வரையில் அயல் நாடுகளிலே சென்று போர் புரிந்து திரும்பி வந்த தமது தேக சிரமத்தையும் பாராட்டாது எங்களோடு பேசி யிருந்தீர். அமைச்சரும் தண்டத் தலைவரும் குடிமக்களுள் தலைவரும் பிறரும் பார்க்க விழைந்து காத்திருப்பர். யாங்கள் விடை பெறுகின்றோம். வேண்டும் போது இரு நகரங்களுக்கும் வருகின்றோம்.

அரசன்:—அங்ஙனமே செய்க. இனி, யாம் எம்மால் இயன்றவளவு அறநிலை நிறுத்தவேமுயல்வேம். மறநிலைப் பொருள் இனி எமக்கு வேண்டா.

பின்பு புலவர்கள் வெளிச் சென்றார்கள். அரசன் அகத்தே சென்று வேற்றுடை அணிந்து, அமைச்சர் சபை சென்றான்.

IV

கிள்ளி வளவன் சில காலம் உறையூரிலும் சில காலம் புகார் நகரிலும் வாழ்ந்து வந்தான். பத்தாண்டுகள் அமைதியாகக் கழிந்தன. உதய குமரன் பல்வகைக் கல்விச் செல்வமும் நிரம்பப் பெற்று, ஆண்மை அழகு திண்மை வீரம் முதலிய குணங்கள் நிறைந்து விளங்கினான். இராச மாதேவி அவனது வளர்ச்சியைக் கண்டு மனம் பூரித்துத் தக்கதொரு குடியிலே மணம் புரிவிக்க வேண்டும் என்று எண்ணி யிருந்தாள். அரசனும் அச் செய்தியை உள்ளத்தடைத்து வைத்திருந்தான். அரச குடும்பத்தினர் புகார் நகரத்துப் பெரிய அரண்மனையில் வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் உதய குமரன் மாலைப் பொழுதிலே உலாவச் சென்றான். அரசுவாவாகிய கால வேகம், மதங் கொண்டு நகருட் புகுந்து, பல வகை அதிக்கிரமங்கள் செய்தது என்ற செய்தி எங்கும் பரவியது. அதுகேட்ட உதய குமரன், தன் தேரை அது சென்ற திசையிலே செலுத்தி, விரைந்து சென்று, மதமபக்கத்தால் செய்யத் தகாத செய்கைகளைச் செய்து மேற்சென்றுகொண்டு இருந்த அக்களிற்றரசைக் கண்டான்; கண்டதும், தேரினின்று குதித்து அவ்யானையின் கொம்புகளைப் பிடித்து, அதன் மத்தகத்திற் பாய்ந்து, அங்குசத்தாலும் வேய்ங் கோலாலும் அதனை விரைவில் அடக்கினான். பலர்க்

குப் பலவகைத் தீங்கு செய்த அக்களிறு, அரச குமரன் ஆண்மைக்கு அடங்கியது. பின்னர் அவன் அதைப் பாகரிடம் ஒப்புவித்தான்; முன் போலவே தேரேறி அரச வீதி வழியே வந்துகொண்டிருந்தான்.

அக்காலத்திலே காவிரிப்பூம் பட்டினத்திலே மாதவி என்ற ஒரு கணிகை மகள் வாழ்ந்து வந்தாள். அவள் அந்நகரத்தில் வாழ்ந்த கோவலன் என்ற வணிக மகன் வயத்தளா யிருந்தாள். அவன் தன் மனைச் செல்வி யாகிய கண்ணகியோடு மதுரை சென்று, பொற் கொல் லன் சூழ்ச்சியால் இறந்த செய்தி கேட்டு, மாதவி மிகவும் மனம் வருந்தினள். அவள் மகள் மணிமேகலை யென்பா ளும் அச்செய்தி கேட்டு வருந்திக் கண்ணீ ருதிர்த்தாள். அவள் கையில் இருந்த மலர் மாலை கண்ணீரால் நனைந் தது. அது கண்ட மாதவி, "பெண்ணே, இனி இம் மாலிகை இறைவனுக்குச் சமர்ப்பிக்க உதவாது; ஆகை யால், வேறு மலர்கள் கொய்து வருக," என்று கூறி னள். மணிமேகலை தன் தோழியாகிய சுதமதியைத் துணையாகக் கொண்டு, உவவனம் என்ற வனத்துக்குச் சென்றாள்; அவ்வனத்துட் புகுந்து மலர் பறிக்க முயன் றாள்.

உதய குமரன், மணிமேகலையின் அழகையும் குண நலத்தையும் பற்றிப் பிறரால் அறிந்திருந்தான்; தந்தை யிறந்த செய்தி கேட்டும் முன் வினையின் பயனுகவும் அவ ளும் அவள் தாய் மாதவியும் துறவுபூணத் துணிந்ததை யும் அறிவான்; எவ்வாற்றாலேனும் மணிமேகலையைத் தான் அடைதல் வேண்டும் என்ற எண்ணங் கொண் டான். அரச வீதி வழியே வந்துகொண்டிருந்த அவ

னுக்கு மணிமேகலை உவவனத்துக்குச்சென்ற செய்தியை எட்டி குமரன் என்ற வணிகச் செல்வன் ஒருவன் கூறினான். இச்செய்தி கேட்டதும், உதய குமரன் மலர் வனம் நோக்கித் தேர் செலுத்தி விரைந்து வந்தான்.

அவன் தேரோசை மணிமேகலைக்கும் சுதமதிக்கும் செவிப்பட்டது. மணிமேகலை சுதமதியை நோக்கி, "இஃது உதய குமரன் தேரொலி போலும்! அவன் என் மேல் மனம் செலுத்தினன் என்று என் பாட்டியாகிய சித்திராபதி என் தாயின் தோழியான வயந்த மாலையிடம் கூறினளாம். வயந்த மாலை இச்செய்தியை என் தாயினிடம் சில தினங்களின் முன்பு கூறிக்கொண்டிருந்தாள். நானோ, துறவறம் பூணத் துணிந்திருக்கிறேன். அவனது கண்ணெதிர்ப்படுதல் என் எண்ணத்துக்குப் பகையாம். ஆகையால், யான் இப்பொழுது என்ன செய்யலாம்?" என்று வினவினள். சுதமதி, அங்கு அருகிலிருந்த பளிக்கறை மண்டபத்திலே மணிமேகலையைப் புகச் சொல்லித் தாழிட்டு, வெளியில் நின்றாள்.

அவ்வமயத்தில் உதய குமரன் அங்கு வந்துற்றான்; சோலையின் நாற் புறத்திலும் தனது தாமரைச் செங்கண் பரப்பினன்; சுதமதியைப் பளிக்கறையின் அருகே கண்டான். அவளை நோக்கி, "பெண்ணே, உன் வரலாறு அறிவேன். மணிமேகலை மாதவர் உறைவிடம் நீங்கி இங்குத் தனியே வந்த காரணம் என்ன?" என்று விசாரித்தான். சுதமதி, "முதியோர் இருவர் வழக்குத் தீர்க்கும்பொருட்டு இளமைப் பருவத்தை முதிய வேடத்தால் மறைத்து, அவர்கள் பேசிய பேச்சைக் கொண்டே நியாயத் தீர்ப்புக் கூறிய கரிகாற் பெருவளத்தான் குடித்

தோன்றலாகிய நுமக்கு மகளிர் கூறத் தக்க அறிவுரை உண்டோ ? ஆயினும், யான் ஒன்று கூறுவேன்: செவி சாய்த்தருள்க. இவ்வுடம்பு வினைப் பயனுக வந்தது; மேலும், வினை விளைய நிலமாயிருப்பது; புனிகின்ற ஆடை யணிகள் நீங்கினுற் புலால் நாறுவது; ஆசை கோபம் குற்றம் பகை கவலை அழுங்கல் முதலிய தீமை யெல்லாம் புகுந்து வாழும் இடம். இதன் தன்மையை உள்ளுற உற்றுணர்ந்து, இது பெற்றதனால் அடைதற் குரிய பயனை மறந்து, பெண் ஒருத்தியைத் தொடர்ந்து நீர் இங்கு வருவது நுமது குலப் பெருமைக்கு அழகா காது," என்றாள். இதனைக் கேட்ட உதய குமரன், பளிக்கறையினுள் மணிமேகலை யிருத்தலைக் கண்டான். கண்டதும், சுதமதி கூறிய சொற்களை மறந்து, அம் மண்டபத்தைச் சுற்றி வந்தான்; திரும்பவும் சுதமதி யை நோக்கி, " மணிமேகலை இப்பொழுது எத்தன்மை யுள்ளவளா யிருக்கின்றாள் ?" என்று கேட்க, அவள் அதற்கு, முருகப் பிரான் போன்ற நுமது அழகை அவள் தன் கண்ணாற் பருகாதிருப்பாளானால், வினைப் பயனுக வந்த தவநெறி பூண்டவள் என்று அறிக. அவள் சாபம் இடும் சக்தி யுடையாளாவள். காமனை வென்ற வள் என்று அறிந்துகொள்ளும்," என்று குறிப்பாகக் கூறினாள்.

உதய குமரன், "மணிமேகலை தவ வேடமும் பிற வும் யான் அறிவேன். செழும்புனல் பெருகி வரும் போது சிறை செய்ய இயலுமோ? மனத்தை நிறையில் நிறுத்தல் இச்சை எழுந்தபோது இயலுமோ ? இப்பொ ழுது என் எண்ணம் நிறைவேறுதாயின், இருக்க. சித்

திராபதியின் உதவியால் யான் அவளை விரைவிலே பெறு வேன்,'' என்று கூறிப் புறப்பட்டான்.

பின்னர் மணிமேகலை பளிக்கறையினின்று புறம் போந்து, தெய்வச் செயலாற் பல வுண்மைகளை உணர்ந்து கொண்டு, சில தினங்களின் பிறகு தன் மணியகம் வந்து சேர்ந்தாள். சுதமதி அன்றே மணியகம் சேர்ந்தாள். தெய்வத் திருவருள் பெற்ற மணிமேகலை பிச்சைப் பாத் திரம் ஏந்திப் பிச்சை யெடுக்கத் தொடங்கினாள். அவள் கையில் இருந்த பாத்திரம் கொடுக்கக் கொடுக்கக் குறை யாத பெருமையுடைய தெய்விகப் பாத்திரம். ஆதலால், வறியோர் பலர்க்கும் உண்டி யுதவிக் காப்பாற்றி வந்த னள். அவள் பல திறத்து வறியோரும் தன்னைச் சூழ, அவ்வூர்ப் பாழிடம் ஒன்றின் நடுவிலே இருந்த அம் பலத்திலே இருந்து, தன் மனதுக்குவப்பாகிய அறம் புரிந்தாள்.

அச்செய்தியைக் கேட்டு, அவள் பாட்டியாகிய சித்தி ராபதி மிகவும் மனம் வருந்தி, நெடுமூச்சு விட்டு, "இவ் வறத்தை யான் தீர்ப்பேன்,'' என்று புறப்பட்டாள்; கூத்தாடும் தொழிலுடைய நாடக மடந்தையரைப் பார்த் துப் பின் வருமாறு பேசினாள்: "கோவலன் இறந்த பிறகு கொடுந்துயர் எய்தி மாதவி தவப் பள்ளி புகுந்தது நகைப்புக்கிடமாகும். இங்ஙனெங்கும் எம்மைப்பற்றி இகழ்ந்தரைக்கலாயிற்று. கணவன் இறந்தமை யறிந்து பொறுக்க லாற்றாத துயர் கொண்டு நெருப்பில் வீழ்ந்து தம் உயிரை துறக்கும் பத்தினிப் பெண்டிர் குடியில் யாம் பிறந்தே மிலேம்; பலர் பொருளையும் நச்சி வாழும் பிறப்பை யுடையேம். பாண் மகன் இறந்தால், அவன்

கையில் இருந்த யாழும் இசை பிழப்பதுண்டோ? பிற னெருவனுக்குப் பயன் பட்டுத் தானும் பெருமை யடை யுமே! நாம் மலரில் நறுந்தாது உண்டு பலன் பெற்ற பிறகு அவ்வறும் பூவை விட்டு விலகும் வண்டு போல் வோம். புண்ணியப் பயன் ஒழிந்த காலத்தே திருமகள் ஒருவனை விட்டு அகன்றொழிதல் போலப் பொருட் பயன் அற்ற காலத்து நாமும் அகல்வோம். தவக்காலம் பூண்டோம் என்று நம் குடியிற் பேசப்படுவது பழிப் புரையாயாம். அது பிறர் நகைக்க இடந்தரும். மாதவி ஈன்ற மணிமேகலையை உதயகுமரன் அடையுமாறு அவள் கையில் இருக்கும் பிச்சைப் பாத்திரத்தைப் பிறர் கையிற் கொடுத்து அவ்வரச குமரனுல் மணிமேகலையைத் தேரில் அழைத்து வரேனுயின், அரங்கக் கூத்தியர் மனையகம் புகப் பெறுத இழிவை யான் அடைவேனுக.''

இவ்வாறு சபதம் கூறிச் சித்திராபதி இளங்கோ வேந்தன் இருக்கும் அரண்மனையை அடைந்தனள். அவன் மலர்ப்பள்ளியிலே வீற்றிருந்தான்; சித்திராபதி யைக் கண்டதும், ''மாதவியும் மணிமேகலையும் பூண்ட தவக்கோலம் நன்கு நடைபெறுகின்றதா?'' என்று வின வினன். அது கேட்ட சித்திராபதி, மனம் புகைந்து, ''இளங்கோவே, இப்பேரூரின் பாழ்ப்பறந்தலையின் இடை யிலே உள்ள அம்பலத்திலே மணிமேகலை பிச்சைப் பாத் திரத்தோடு இருக்கின்றுள். நீவிர் அவளை அடையவல் லீர். பிறர் எவர் அவளை நெருங்குவர்?'' என்றுள். உத்ய குமரன், ''நேற்றிரவு இடையாமத்தே, பொன் மேனித் தெய்வம் ஒன்று தோன்றி, அரசர் செங்கோல் நெறி யைக் கூறி, 'தவ நெறியிற் புகுந்த மணிமேகலையை மறப்

பாயாக,' என்று கூறியது. அது தெய்வந்தானே, என் மயக்கந்தானே! ஒன்றும் விளங்கவில்லை,'' என்று கூறினன்.

சித்திராபதி அது கேட்டுச் சிறு நகைசெய்து, "அரசிளங்குரிசில், தேவரும் இம்மயக்கத்தில் வீழ்ந்தவர்தாம். எம் குடியிற் பிறந்த பெண்டிர் குல மகளிர் போன்று வாழத் தக்கவரல்லர். கன்னிப் பருவத்தே காவல் செய்தலும் மணப் பருவத்தே காத்தலும் கணவனை யிழந்த பிறகுள்ள நிலையிற் பிறர் காத்தலும் என்ற வழிகளால் தமது கற்பைக்காத்துப் பிறரைக் காணுது கொண்டோன் அல்லது தெய்வம் இல்லை என்ற நல்லொழுக்கம் பூண்டு வாழும் கற்பரசிகள் குடியில் மணிமேகலை பிறக்கவில்லை; பிறர் பொருளுக்குத் தம் நலத்தை விற்கும் குடியிற் பிறந்தவளாவள். அவள் தன் குலவொழுக்கத்துக்கு மாறுக நடந்தால், அதைத் திருத்தவேண்டுவது நமது கடமையாம் அன்றே?'' என்று விரித்துரைத்தாள்.

உதயகுமரன் உள்ளம் மாறினன்; தெய்வ வாக்கை நம்பி மணிமேகலையை மறந்திருந்தவன், சித்திராபதியின் சூழ்ச்சியால் திரும்பவும் முன்போல மயக்கங் கொண்டான். உடனே சித்திராபதிக்கு விடை கொடுத்து அனுப்பி, அம்பலம் நோக்கிப் புறப்பட்டான். மணிமேகலை அங்குத் தனியே நின்றுள். உதய குமரன் அவளை நெருங்கி, "நல்லாய், நீ நோன்பும் தவமும் மேற் கொண்டு பிச்சைப் பாத்திரம் ஏந்தியது எதனால்? இத் தவக் கோலம் எப்பயன் கருதி நின்னுற் பூணப்பெற்றது?'' என்று வினவினன். அவள், "அரச குமரரே, கல்வி கேள்வியிற் சிறந்த பெரியோர் கூறிய கட்டுரைகளைக்

கேட்டு ஆராய்ந்தறிந்து, அந்நெறியிற் பயின்று வரும் நுமக்குப் பெண்பாலாகிய யான் என்ன கூறுவேன்? இம்மக்கள் யாக்கை பிறப்பதும் பிணிவாய்ப் படுவதும் மூப்படைந்து இறப்பதும் உடைய இடும்பைக்கிருப் பிடம் என்று அறிந்து, அறம்புரிய விரும்பினேன். யான் கூறியவை நும் உள்ளத்தில் அடைந்திருப்பின், உமக் குத் தோன்றியவாறு செய்மின்,'' என்று அம்பலத்தி னுட் சென்று, மறைந்தாள்; சிறிது பொழுதில் தெய்வ சக்தியால் மந்திரம் ஓதி வேற்றுருவெய்தி வெளி வந் தாள். உதயகுமரன் அக்காட்சியைக் கண்டு அதிசயித்து, அங்கிருந்த தெய்வத்தை வணங்கி, ''இங்கிருக்கும் உரு வங்களில் மணிமேகலை யார் என உணரேன். பிச்சைப் பாத்திரம் வேறொரு பெண்ணின் கையில் வந்துளது. மணிமேகலை யார் என்று நீ கூறுவாயில், யான் பல நாட்க ளாயினும் பட்டினியோடு இங்குக் காத்திருப்பேன். மணிமேகலையை விட்டு நான் உன் கோயிலிலிருந்து அக லேன். நின் திருவடிமேல் ஆணை கூறினேன்,'' என்றான்.

''அரச குமர, நீ அறியாது வஞ்சினம் கூறினாய்,'' என்று ஓர் அசரீரி எழுந்தது. அதுகேட்டு, அவன் இன் னது செய்வது என அறியாது மயங்கினான்; 'எதற்கும் பொறுத்துப் பார்ப்போம்,' என்று எண்ணி, வெளியேறி னான். மணிமேகலை தான் பூண்ட மாறு வேடத்தோடே நகரெங்கும் திரிந்தனள்; சிறைக்கோட்டத்திற் புகுந்து அதனை அறக்கோட்டம் ஆக்கினள்.

பின்பு சில தினங்களில், உதய குமரன் வேற்றுருவி லிருந்த அவளை மணிமேகலைதான் என்று ஊகித்துணர்ந் தான்; திரும்பவும் தொடர்ந்தான். அவள் பலர்க்குப்

பிச்சையிட்டு நின்றதொரு பறந்தலைக்கு வந்தான். அவள் தன் அருகில் நின்ற ஒரு நரை மூதாட்டியை அவனுக்குக் காட்டி, "கருமணல் போன்றிருந்த இவள் கூந்தல்வெண் மணலாகி யிருப்பதைப் பாரீர்; பிறைபோல இருந்த நுதல் நரைத்துத் திரைத்து விகாரமாய்த் தோன்றுவது பாரீர். விற்போலிருந்த புருவம் இரும்மீன் வற்றல் போல ஆகியிருப்பது பாரீர். கழுநீர் மலர் போன்றிருந்த கண்கள், நாற்ற நீர் சிந்துவ பாரும். குமிழம்பூப் போன்றிருந்த நாசி, உமிழ்ந்ததை யொழுக்குவது பாரும். வரிசையாகி முத்துப் போன்றிருந்த பற்கள், சுரை வித்துப் போல மாறின பாரும். இலவ மலரிதழ் போன்றிருந்த செவ்வாய், புண்போற் புலால் நாறுகின்றது. இன்னும் இவைபோற் பிற அவயவங்களும் முன்னே நும்மைப் போன்ற ஆண்மக்கள் மனத்தைக் கவரத்தக்க அழகும் நயமும் உடையவாயிருந்தன. இப்பொழுது என்ன ஆயின பாரும். அரச குமரரே, பூவினும் சாந்தினும் புலாலே மறைத்து ஆடை யணிகளால் மூடி வைக்கும் வஞ்சத்தை நீர் இதனால் அறிந்துகொள்ளும்," என்று கூறினள்.

மணிமேகலை பூண்டிருந்த வேடம் அயல் நாட்டுப் பெண் ஒருத்தியின் உருவம் போன்றதாம். அப்பெண் கொடியதொரு நோயால் அந்நகர்க்கு வந்து, மணிமேகலையால் நலம் பெற்றனள். அப்பெண்ணின் கணவன் அவளை வருட மொரு முறை வந்து பார்த்து அவள் நோய் குணமாகாமை கண்டு வருந்திச் செல்வது வழக்கம். இப்பொழுதும் அவன் வந்திருந்தான். அவன் அவள் அருகில் நின்றுகொண்டிருந்தான். மணிமே

கலே அவனுக்கு உண்மையில் அவன் மனைவி போலத் தோன்றினாள். அதனால், அவன் நெருங்க வந்தனன். அவளிடம் மணிமேகலே ஒன்றும் பேசாது அகன்றாள். அவன் உள்ளம் புகைந்தது. அவன், "அரச குமரன் ஒருவன் இவள் பேச்சுக்குரியனாயினன்: ஆதலின், இவள் என்னே மறந்தாள்," என்று எண்ணி, இரவிலே அக்கோயிலின் உள்ளே மறைந்து பதுங்கி யிருந்தான்.

உதய குமரனும் அன்றிரவு இடை யாமத்திலே தன்னே மறந்து, ஆசை தூண்ட அறிவிழந்து, இருளையும் பொருட்படுத்தாது, அவ்வம்பலத்து வந்துற்றனன்; கொடுவிடம் உடைய நாகம் ஒன்று மறைந்து கிடந்த புற்றினருகிலே போவது போல அம்பலத் தேறினன்; வினேப்பயன் ஆசையின் உதவியால் இழுத்துச் செல்ல, உட்புகுந்தனன். முன்னே அங்கு வந்து ஒளிந்திருந்த அயல் நாட்டான், "என் மனைவி கற்பிழந்தவளாயினள். அவளிடமே இவன் வருகின்றான்," என்று எண்ணி, நச்சரவு நச்சுப் பற்களைக் காட்டிப் படத்தை விரித்துப் பாய்வது போலத் தன் உடை வாளே வீசி உதய குமரனைக் கொன்றான். உடனே அவன் தான் தன் மனைவி யென்றெண்ணிய மணிமேகலேயை யழைத்துக்கொண்டு செல்லலாம் என்று துணிந்தெழுந்தான். அப்பொழுது தெய்வச் செயலால், "இவள் நின் மனைவியல்லள்; மணிமேகலேயே. நின்மனைவி தெய்வச் செயலால் இறந்தாள். நீ பெரும்பாவத்தை ஆராயாது செய்தாய். இதன் பயனே நீ அனுபவிப்பாய்," என்று ஒரு குரல் எழுந்தது. உடனே அவன் தன் குற்றத்தை எண்ணி மனம் புண்ணாகி, 'எவனும் கண்டால் கொலைக் குற்றத்தைத்

குப் பற்றுவரே!' என்று அஞ்சி, இருளகத்தே மறைந்து தன்னுட்டுக்குச் சென்றான். மணிமேகலை மாற்றுருவத் திலே அங்கு நின்றாள்; உதய குமரன் இறந்தது கண்டு வருந்தினாள்; ஒருவாறு தேறினாள்; அன்று இரவெல் லாம் உறக்க மின்றிக் கழித்தனள்; செய்வதறியாது மயங்கி யிருந்தனள்; தெய்வச் செயலை மாற்ற எவரால் இயலும் என்று எண்ணமிட்டுத் தெய்வத்தைத் தியா னித்திருந்தாள்.

V

ஞாயிறு கீழ்த் திசையில் முளைத்தது. இருள் ஒழிந்தது. அம்பலத்திலிருந்த தெய்வத்தை வணங்கும் பொருட்டுச் சான்றோர் பலர் அங்கடைந்தனர்; மணிமேகலையைக் கண்டனர்; உதய குமரன் இறந்து உதிர வெள்ளத்திற் கிடக்குங் காட்சியையும் கண்டனர். மணிமேகலை இரவின்கண் நிகழ்ந்தவற்றை யெல்லாம் உரைத்தாள். பலர் காணும் இடத்திலே அரச குமரன் பிணம் கிடத்தலாகாது என்று அவர்கள் அதை யெடுத்து, ஒரு மறைவிடத்திற் கிடத்தினர்; மணிமேகலையை அங்கே மறைந்திருக்கச் செய்தனர்; அரண்மனையை நோக்கி விரைந்து சென்றனர். வாயில் காவலனுல் தம் வருகையை அரசனுக்கறிவித்து, அனுமதி பெற்று உட்புகுந்தனர். அரசன் ஒரு தனி யறையில் வீற்றிருந்தான். அவன் சான்றோர்களை வணங்கி வரவேற்றான்.

சான்றோர்:—அரசர் பெருமானே, இடை வானத்துச்சியிலே உயர்ந்தோங்கிய பூரணச் சந்திரன் போன்று நினது குடை உலகெங்கும் நிழல் செய்வதாக. நீ ஏந்திய ஆணைச் சக்கரம் வேலும் கோலும் உதவியாகக் கொண்டு எங்கும் நன்கு செல்வதாக. இறைவன் அருளால் நீ பெற்று வந்த ஆண்டுகள் எல்லாம் மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் நீ வாழ்வாயாக. இந்நகரத்திடத்தே காமத்தால் தம்மை மறந்து பத்தினிப் பெண்டிரிடம் தம்

உள்ளத்தைப் போக்கியும் தவப் பெண்டிரை விரும்பியும் தமது தீவினை தூண்ட இறந்தொழிந்தார் இன்றை யன்றி, முன்னும் பலர் உளர். 'அரசர்கள் மரபை அறுத் தொழித்த பரசுராமன் முன்னே நீ தோன்றுது மறைந்து வாழ்க' என்று துர்க்கா தேவி அருளுதலால் முன்னே இங்காடாண்ட காந்தமன் என்ற மன்னவன் நகரையும் நாட்டையும் காத்தற்குரியார் யார் என்று ஆராய்வாளு யினன். தனது காவற் கணிகையின் மகன் ககந்தன் என்பானைத் தேர்ந்தெடுத்தான். அரசாளும் உரிமை குலப் பிறப்பால் அவனுக்கில்லாமையால், அவன்மீது பரசுராமன் பகை பூண்டு வாரான் என்று கூறித் தான் திரும்பி வரும் வரையில் நாட்டை அரசாண்டிருக்கு மாறு வகுத்தான். ககந்தன் அரசாண்டதால், இங்ஙக ரத்துக்கு அந்நாள் தொட்டுக் காகந்தி என்றதொரு பெயர் வழங்கத் தொடங்கியது. ககந்தன் அற நெறி பிழையாது அரசாண்டுகொண்டிருந்தனன். ஒரு நாள் மருதி யென்ற ஒரு பார்ப்பன மகள், தெளிந்த நீரை யுடைய காவிரியில் நீராடிவிட்டு வந்துகொண்டிருந்தாள். அருகில் யாரும் இல்லாது அவள் தனியே வந்ததோர் இடம் கண்டு, ககந்த மன்னன் குமாரன் ஒருவன், அவள் ஒழுங்கு கெட்டவள் என்று எண்ணிக் காவிரி வாயிலில் முறையற்ற சொற்களைக் கூறினன். அது கேட்ட அப் பெண்மணி, உள்ளங் கலங்கினள். அவள், "உலகத்தி லே தாம் நினைத்த வண்ணம் மழை பெய்யச் செய்விக்கும் தெய்வக் கற்புடைய பெண்டிரா யிருப்பிற் பிறர் உள்ளத் தே புகார். யானோ, பிறன் ஒருவன் உள்ளத்துப் புகுந் தேன். ஆகையால், அந்தணனது முத்தீப் பேணும்

உரிமையை யிழந்தேன்,'' என்று கூறிக்கொண்டாள்; மனையகம் நோக்கிச் செல்லாது, பூத சதுக்கத்துக்கு நடந்து சென்றாள். அவள் சதுக்கப் பூதத்தின் எதிரில் நின்று, "யான் என் கணவனுக்கு உவப்பற்ற நெறியிற் சென்ற குற்ற முடையேனில்லேன்; ஆயினும், கண்டோர் நெஞ்சிற் புகும் குறையைப் பெற்றேன்; மழையைப் பெய்விக்கும் கற்பொழுக்கத்துக்கு மாறுபட்டேன். யான் செய்த குற்றத்தை யான் அறிகிலேன். சதுக்கத்துத் தெய்வமே, நீ பொய்யாய்ப் போயினையோ?'' என்று கூறி அரற்றினாள். அப்பொழுது அப்பெரும்பூதம் தோன்றி, "பெண்ணே, 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை' என்று அருளிய அப்பொய்யில் புலவரது மெய்ம்மொழியை நீ நன்கு தெளிந்திலை. நீ பொய்ம்மொழிகளும் வம்புப்பேச்சுகளும் பிறர் வாயாற் கேட்டுக் கணவனே தெய்வம் என்று இருக்கும் நெறியை மறந்து, பெரு முழக்கம் மிக்க திருவிழாக்களிலே கடவுளை வணங்கி வருகின்றாய். ஆகையால், நீ ஏவினால் மழை பெய்யாது. நீ பத்தினிப் பெண்டிர் போலப் பிறர் உள்ளத்தைச் சுடும் அறக்கற்பை யிழந்தாய். இவ்வழக்கங்களை விட்டொழிப்பாயாயின், மழை உன் ஏவல் கேட்கும். தம் மனம் விரும்பியபடி யெல்லாம் நடக்கும் பெண்டிரை வலித்து ஒறுப்பதுபோல, உன்னை என் பாசம் கட்டாது. அரசர் முறை செய்ய ஏழு நாள் எல்லை உண்டு. அந்த எல்லையில் அவர் தம் கடமையைச் செய்யாராயின், யான் தண்டிப்பேன். ககந்த மன்னன் ஏழு நாட்களினுள் நின்பால் மனம் செலுத்திய அறிவறையை வாளாற் கடிவான்,'' என்று

கூறியது. அப்பூதம் கூறியபடியே ககந்த மன்னவன் அம்மைந்தனை வாளால் வெட்டினன். இன்னும் கேளாய்: மண்ணுள் செல்வம்படைத்தமன்னவரேறே, அந்நாளிலே தரும தத்தன் என்ற ஒரு வணிகன் இந்நகரில் வாழ்ந்து வந்தனன். அவனது மாமன் மகள் விசாகை யென் பாள் ஒருத்தி இருந்தாள். இருவரும் தெய்வ வோவி யத்தைக்காட்டிலும் கண்கவரும் வனப்புடையரா யிருந் தனர். கன்னிப் பருவத்தினளாயிருந்த விசாகை, மணி யகம் அகலாது வாழ்ந்து வந்தனள். ஊரார் எல்லாம் தரும தத்தனும் விசாகையும் கந்தருவ மணம் செய்து கொண்டனர் என்று கூறலாயினர். இது கேட்டுப் பொறுத அப்பெண்மணி, மணியகம் நீங்கி, வெளி வந்து, ஊரம்பலத்தில் உள்ள தெய்வத்தின் முன்னின்று, 'உல கினர் கூறும் பெரும்பழியை ஒழிப்பாய்,' என்று வேண் டினள். அவ்வம்பலத்திலிருந்த தெய்வம், எல்லாரும் கேட்க, "நகரவரே, இவள் பெய்யென்னில் மழை பெய் யும்," என்று கூறியது. விசாகை மன மகிழ்ந்து, மணிய கம் நோக்கித் திரும்பினள். அப்பொழுது அவள் 'தெய் வம் வாய் திறந்து கூறிவிடின், ஊரார் என்னைப் பற்றிக் கொண்ட எண்ணத்தை மாற்றியிரார். ஆகையால், யான் என் உரிமையுடைய தரும தத்தனுக்கு மறு பிறப்பிலே மணையாள் ஆவேன். இப்பிறப்பிலே கன்னிமை கழியா மலே வாழ்வேன்,' என்று வஞ்சினங் கூறினள். பிறகு கன்னி மாடத்துக்குச் சென்று, அடங்கி வாழ்ந்தனள். தரும தத்தனும் அவன் பெற்றோரும் மதுரை யடைந்து வாழ்ந்தனர். அவன், "நான் என் மாமன் மகளா கிய விசாகையை யல்லது வேறு எவரையும் மணம் புரி

யேன். இப்பிறப்பு இவ்வாறே கழியினுங் கழிக," என்று தனக்குள்ளே விரதம் கூறி வாழ்ந்திருந்தான். அறுப தாண்டுகள் வாணிகம் செய்து பெரும்பொருளீட்டி எட்டிப் பட்டம் பெற்று வாழ்ந்த அவனைக் கண்ட ஓர் அந்தணன், "இருநிதிச் செல்வ, நீ என் செய்தாய்? பத் தினி யில்லாதவர் பல வகை அறஞ் செய்யினும் பயன் பெறார்; தேவருலகமும் புகப்பெறார். இதனை நீ அறி வாய். ஆகையால், விரைவில் நின்னகரடைந்து, மணம் புரிந்து வாழ்க," என்று கூறினன். அது கேட்டு நகைத் தத் தருமதத்தன் காவிரிப்பூம் பட்டினம் வந்தடைந்தனன். அவன் இவ்வூர்க்கு வந்தது கேட்டு விசாகையும் மனைப் புறம் வந்தனள்; பலர் முன்னிலையில் அவனைக் கண்டு, "நம்மை நாம் அறிந்துகொள்ளக் கூடவில்லை. நம்மை முன்னளில் மயக்கிய அழகு எங்கு ஒளித்தது! நமக்கு அறுபது ஆண்டாயின. எனது மண நாறு கூந்தலும் நரை நிரம்பியது. இளமையும் காமமும் எங்குப் போய் ஒளித்தன ? என் மனமறிய மறுபிறப்பிற் கணவர் என்று கொண்ட தலைவரே, கூறுமின். இப்பிறப்பில் யான் நும் பணிக்கு உரியளாகேன். மறு பிறப்பில் உம் அடித்தொ ழில் கேட்பேன். இளமையு நில்லா ; யாக்கையு நிலையா ; மிக்க செல்வமும் நிலையில்லை. தேவருலக வாழ்வைப் புதல்வர் தருவார் என்று எண்ணவேண்டா. அறந்தான் சிறந்த துணையாம். பெற்ற பொருளைப் பிறர்க்கு உதவி வாழ்க," என்று கூறினள்.

அவ்வாறே அவன் அறம் புரிந்து வாழ்ந்தனன். விசாகையும் வெளிப்பட உலாவி வருவா ளாயினள். கன்னிப் பருவத்திலிருந்து மண வாழ்க்கை யடையா

மேலே மூத்திருந்த அவள், அரச வீதியில் ஒரு நாள் வந்துகொண்டிருக்கையில் மருதி காரணமாக உயிரிழந் தோனுக்கு முன்னவனுகிய அரச குமரன் மாலே யொன் றை யெடுத்து அவள் கழுத்தில் இடுவதாகக் கையை உயர்த்தினன். உயர்த்தியகை மடங்காது நின்றது. விசா கையின் கற்பின் மாட்சி விளங்கியது. ககந்தன் இச் செய்தியை அறிந்தான். உடனே அம்மகளேயும் வாளாற் கொன்றான். அத்தகைய மன்னர் ஆண்ட குடியிலே பிறந்து அந்நகரை ஆண்டு வரும் அரசர் பிரானே, ஊழிதோ றாழி உலகம் காத்து வாழ்வாயாக.

அரசன்:—மாதவர்களே, சான்றோர்களே, 'இன்றே யல்ல; முன்னும் பலர் இறந்தனர்,' என்று இவ்வரலா றுகளைக் கூறினீர்கள். இக்கொடுவினே இன்றும் நிகழ்ந் ததோ? உரைமின்.

மாதவருள் ஒருவர்:—அரசனே, நின் செங்கோல் தீதின்றுக. உண்மையை யுணர்ந்தோர் கடிந்த பொருள் கள் கள்ளும் பொய்யும் களவும் கோலையும் காமமும் என்ற ஐந்தாம். இக்குற்றங்களைக் கடியாதவர்கள் நரக வாழ்வடைவார்கள். நேற்றிரவு நிகழ்ந்த செய்தி ஒன்று உளது: மாதவி யென்ற கணிகையும் அவள் மகள் மணி மேகலையும் தவம் பூண்டு வாழ்ந்தனர். மணிமேகலை மங் கைப் பருவத்தினள். அவள் பிச்சை யேற்றுப் பிறர்க் குதவி, ஊரம்பலத்தில் வாழ்ந்தனள். அவள் பொருட் டாக அறிவிழந்து இருளிலே அம்பலத்தை யடைந்து, மாற்றவன் ஒருவனல் நின் மகன் உதய குமரன் இறந் தான். இது தீவினைப்பயன் என்றே தெளிய வேண்டும்.

அரசன்:—சோழிகவேளதியே, யாம் செய்யத் தக்க தண்டனையைப் பிறனொருவன் செய்தான். மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்று என் றூல் இல்லையாம். பசுவின் கன்றின் பொருட்டுத் தன் மகனைத் தேர்க்காலி லிட்டு முறை செய்த மனுச்சோழன் மரபிலே இத்தகையான் ஒருவன் தோன்றினன் என்ற செய்தி எங்கும் பரவா முன்னரே, இவனை ஈமத்தி லிட்டுக் கொளுத்திக் கணிகை மகளையும் காவல் செய்க.

சோழிகவேளதி :—அரசர் பிரானே, அவ்வண்ணமே செய்கின்றேன்.

சான்றோரும் மாதவரும்:—அரசே, இனியாம் விடை பெறுகின்றோம்.

பின்னர் மணிமேகலை அரச னேவப்படி சிறை செய்யப்பட்டுச் சிறைக்களம் புகுந்தனள். அரசன் இச்செய்தியை இராச மாதேவியின் மனம் புண்படா வண்ணம் தெரிவிக்க விரும்பி, வாசந்தவை என்ற பெயர் பூண்ட ஒரு மூதாட்டியை அனுப்பினன். அவள் அரசியை யடைந்து, அழுதுகொண்டு, அடியில் விழாமல் கை தொழுது முன்னின்று, வாழ்த்தி, "கோப்பெருந் தேவியே, பகை மன்னரை வென்று, தம் நாட்டைப் பாதுகாத்துப் பகைவர் நாட்டைக் கொண்டு வாழ்ந்து போர்க்களத்தில் விழுப் புண்பட மாய்ந்து வீர சுவர்க்கம் புகுவர் அரசர் குடிப் பிறந்தோர் என்று கூறுவர். அவ்வாறு இறப்பதற்குப் பாக்கியம் பெறுது உறுப்பற்ற பிண்டமாகப் பிறந்தாலும், முதுமை யுற்று இறக்க நேரிட்டாலும், அவ்வுடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளால் வெட்டி, 'மன்னர் பெறும் வீர சொர்க்கம்

பெறுக,' என்று அந்தணர் கூறி அனுப்புவர். மூத்து இறத்தல் இக்குடியிற் பிறந்தார்க்கு நாணத் தக்க செய லேயாம். தன் நாட்டைக் காத்தற் கன்று, பிறர் கைக் கொண்டதனுலன்று, நின் மகன் இறந்தது என்ன வழி யென்று யான் கூறுவேன்! அரசர் முன்னே மகன் இறந்தான் என்று துயரங் காட்டா தொழிக. நின் மகன் நின் துயர்க்குத் தகுதி யுடையனுகான்," என்று கூறி விட்டுச் சென்ருள்.

அரசி மனத் துயரை அடக்கிக்கொண்டு, அரசர் பிரானிடம் சென்று, மணிமேகலையைச் சிறை வீடு செய்து அழைத்து வந்தாள்; தன் அந்தப்புரத்துக்குச் சென்ற தும் மணிமேகலையைத் தண்டிக்கப் பலவாறு நினைந்த னள்; முதலில் அவளுக்குப் பித்தேறுதற்குக் காரணமா கும் மருந்தொன்றை ஊட்டினள். அது மணிமேகலை யை ஒன்றும் செய்யலாற்ரு திருந்தது. கல்லாத இளை ஞன் ஒருவனைக் கூவி, "மணிமேகலையின் புகழ்க்கு மாசுண்டாகத் தக்க செயல் செய்க," என்று தூண்டி னள். அவன் வந்த சமயத்திலே மணிமேகலை தெய்வச் சக்தியால் மந்திர மோதி ஆணுருவம் தரித்திருந்தாள். அவன் ஒன்றும் புகலாது ஓடி யொளித்தான். பல நாள் வரையில் உணவு ஒன்றும் கொடாமல் அறை யொன் றில் அடைத்தாள். அதற்கும் மணிமேகலை மாற்று அறி வாளாகையால், மயங்காதிருந்தாள். இவ்வதிசயத்தைக் கண்ட அரசி, மனம் நடுங்கி, "தவமுடைய பெண்ணே, பொன் போன்ற பெண் மணியே, என் மகனுக்கு நேர்ந்த இடுக்கண் பொறுது யான் இது செய்தேன். பொறுத் தருள்க," என்று வணங்கினள்.

அது கண்ட மணிமேகலை, "முன் பிறப்பிலே அவன் என் தலைவனு யிருந்தான். அவன் நச்சு நாகத்தால் இறந்தான். நான் உடனே தீப் பாய்ந்தேன். அந்நாளில் நீ எங்கிருந்து அழுதாய்? பொருந்தாத செயல் செய் தாய். உடலுக்கழுதனையோ? உயிர்க்காக அழுதனை யோ? உயிருக்கழுவது இயல்பன்று. உடற்கழுவது அறியாமையே. உன் மகனைக் கொல்ல ஒருவன் வந் தான். நான் அதற்கு உதவி என்று எண்ணுதே. எல் லாம் முன்னை வினைப் பயனுக நிகழ்ந்தது. உலகத்தார்க் குத் துன்பம் விளைக்கும் செயல்களை அறிஞர் துறந்த னர். பகையை ஒழித்து, முற்ற வுணர்ந்த அறிஞரே அருளறம் பூண்டு எல்லா வுயிர்க்கும் நல்லன செய்து உலகில் வாழ்வர். மகன் இறந்தான் என்று மனத்துக் கருதாது அறமே பெரிதெனக் கருதி வாழ்க," என்று கூறினள். பின்னர் அவள் அரசி தன்னை வணங்கியது கண்டு, "அம்மே, நீ அரசன் றேவி யாதலால், யான் வணங்கற்குரியை. ஆதலின், நீ என்னை வணங்கல் தகாது," என்று கூறிச் சென்றாள். அரசி மனவமைதி பெற்றாள்.

VI

புகார் நகரத்தில் நிகழ்ந்த துயரச் செய்தியை மனத்துக் கொண்ட கிள்ளி வளவன், அங்கு வாழவிரும்பாமல், மீண்டும் உறையூர் சென்றான். மனத் துயர் மிகுதியால் அரசனும் இராச மாதேவியும் மூப்புப் பருவம் அடைந்தனர். அரசனுக்கு நாடு காவல் அறநிலைக் களப் பணி முதலியவற்றில் மனஞ் செல்லவில்லை. ஆயினும், முன் அமைத்து வைத்த முறை தவறாது சோழிக வேளிதியின் முயற்சியால் அவை நன்கு நடை பெற்று வந்தன. முன்போலவே புலவர் பலர் அடிக்கடி வந்து அரசனைக் கண்டு, அவன் மனத்துக்கு மகிழ்ச்சி விளைத்து வந்தனர்.

ஒரு நாள் அரசன் அரண்மனையின் ஒரு பகுதியாகிய புலவர் வருமண்டபத்தமர்ந்திருந்தான். அங்கு அவனைக்காணக் கருதிக் கோவூர் கிழார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் என்ற புலவர் மூவரும் வந்தடைந்தனர். அரசன் அவர்களை அன்பொடு வரவேற்றான். கோவூர் கிழார், "அரசர் பிரானே, இன்பமும் துன்பமும் இவ்வுலக வியற்கையே. அறிஞர் அவற்றைப் பற்றி மகிழ்தலும் துயர்தலும் செய்யார். புகார் நகரத்தே நிகழ்ந்த செய்திகள் எம் மனத்தை வருத்தின. எல்லாம் இறைவன் செயலென் றமைவது அறிஞர் செயலாம்," என்று கூறினர்.

அரசன் அது கேட்டு, "பழமையான நூல்களிலே கூறப்படும் உண்மைப் பொருள்களை யெல்லாம் உற்றுணர்ந்து புதுமையுற உலகத்தார்க் கமைத்துதவும் புலவர் பெருமக்காள், நும்போடு அடிக்கடி அளவளாவிமகிழும் பேறு பெற்ற எமக்கு உள்ளத் துயரும் உளதாகுமோ?" என்றான்.

கோவூர் கிழார்:—அரசர் பெருமானே, நீர் நிறைந்த குளத்திலே மழைக் காலத்திலே விழும் மழைத் துளி போல, நெய் மிகப்பெய்து ஆக்கப்பெற்ற வறையை வாரி உள்ளவும், சூட்டிறைச்சியைக் கிழித்து வாட்டியுண்ணவும், வெண் மண்டையிலே பாலை நிறைத்துப் பருகவும், சுடச்சுட உட்கொண்டதால் உண்டாகும் வியர்வையன்றி வேலை செய்து வியர்ப்பது என்பதை யாங்கள் அறியா வண்ணம் ஈந்து மகிழ்ந்தீர்; இசையைச் சூடினீர். நும் நாட்டிலே மருத நிலமானது நெல்லும் கரும்பும் பல வகைப் பூக்களும் நிரம்பி விளங்கும். முல்லை நிலம் புல்லருந்தும் பல ஆனினங்கள் மிகுந்து ஆயர் நிறைந்த வளமுடையதாம். நெய்தல் நிலம் காற்றின் உதவியால் வந்த மரக்கலங்களை எண்ணுவோர் புன்னை நீழலில் நிற்கப் பெற்றதாயிருக்கும். கழிகள் சிறு வெள்ளுப்பை எவர்க்கும் உதவும். அத்தகைய நாட்டிற் பிறந்து வாழும் பேறு பெற்ற பொருநர் இனத்தவர் யாம் ஆவோம். யாம் போர் புரியும் பொருநர் அல்லேம்; பாடல் பாடி அரசரை மகிழ்விக்கும் பொருநர் ஆவேம். சுக்கிரன் எத் திசையில் நின்றாலும், யாம் வேண்டியவற்றை உதவும் எம் அரசர் பிரான் முயற்சி ஓங்குவதாக. இவ்வும்பல வாண்டுகள் வாழ்வீராக.

அரசன்:—கோவூர் கிழாரே, நும் போன்றூர் அடிக் கடி வந்து செல்லலாலன்றே, இந்நாடும் அரசும் பெரு மை படைக்கின்றன?

நல்லிறையனூர்:—வேந்தரே, வாழிய. என் உள்ளக் கருத்தை வெளியிட்டுரைக்க அனுமதி அருள வேண்டு கின்றேன்.

அரசன்:—நும் உள்ளத்தே தோன்றுவது எதுவா யிருப்பினும், சிறிதும் ஒளியாது கூறலாம்.

நல்லிறையனூர்:—அரசர்க் கரசரே, நகரங்களிலே எனக்கு அதிகமான பழக்கமில்லை. என் மனைவியும் யானும் வறுமைத் துயரின் எல்லையை உணர்வோம். எம் நாட்டிலே விளைவு குறைந்ததால், எம் குறையை நிரப்பு வோர் யார் என்று அறிய விரும்பிப் புறப்பட்டோம். உலகமெங்கும் நுமது புகழே பேசப்படுவது கேட்டோம். உண்டி மறந்த என் பெருஞ்சுற்றம் என்னைப் பின் பற்றி வந்தது. யான் இங்கு வந்துற்றேன். எனக்குச் செய்த உபகாரங்களை என்னென்பேன்! எனது பழைய கந்தை யைப் போக்கிப் புதிய பட்டாடை கொடுத்தீர்; யான் வெறுப்பச் செல்வமும் நல்கினீர். கோடைக் காலமே யாயினும், நாட்டைக் காக்கும் காவிரி வளம்பெற்ற மன் னர் பிரானே, இன்னும் எம் போன்றூர் பலரை ஆதரித் துப் பன்னெடுங்காலம் வாழ்வீராக.

எருக்காட்டூர்த் தாயங் கண்ணனூர்:—அரசர்க் கர சரே, யானும் சில கூற விரும்புகின்றேன்: செவி சாய்த் தருள்வீராக. வெள்ளி விண்ணகம் ஏறியது. புள்ளினங் களும் மரங்களில் தத்தம் கூடுகளில் இருந்து குரல் செய்

தன. பொய்கைகளிலும் பூக்கள் மலர்ந்தன. மெல்ல மெல்ல ஞாயிற்றின் ஒளியும் சுருங்கியதாயிற்று. முரசமும் வலம்புரியும் முழங்க நீவிர் பிற நாட்டு மன்னரை வெல்லுங் கருத்தாற் பாசறையிலிருந்தீர். அக்காலத்திலே இரவைப் புறங்கண்ட காலை வேளையில் ஒரு நாள் யான் அங்கு வந்தேன். என்னைக் கண்டதும் முன்னே இன்னன் என்று அறியாதிருந்தும், பரிசிலன் என்று அறிந்துகொண்டு நெய்யிட்டுப்பொரித்த குப்புடைய அடிசிலோடு தேனும் தந்து உதவினீர்; பாம்புரிபோல் மெல்லிதாகிய ஆடையும் உதவி, மாரிபோல் வண்மை தோன்றப் பொன்னைப் பொழிந்து, அருங்கலன்கள் அளித்தீர். அறுதொழிலந்தணர் அறம் புரிந்து எடுத்த நெருப்பின் பெருமை பெற்று விளங்கிய நாட்டை யுடையீர், உமது அருள் எனக்கு இருத்தலால், கடலிறுதியிற் சென்றும் யான் அஞ்சுவதில்லை; ஞாயிறு தெற்கே உதிப்பதாயினும், கவலை கொள்வதில்லை. யான் நும் அரசின் நிழலில் இருக்கின்றேன் என்ற மனவுறுதியே இவ்வாறு அமைதியுற்றிருக்கக் காரணமாம்.

அரசன்:—புலவர் பெருமக்காள், யாம் எங்கிருப்பின் என்? நீர் எங்கிருப்பின் என்? உள்ளம் ஒரு பொருள் பற்றியதன்றோ? இன்று இங்கு நம்மைக் கண்டதற்காக இப்பொருளைப் பெற்றுக்கொண்மின். எம்மை இன்னும் அடிக்கடி வந்து காண விழைந்து வருவீர் என்றே எதிர் பார்க்கின்றோம்.

பின்னர் அப்புலவர் மூவரும் விடை பெற்றகன்றனர். அரசன் முன் போலவே தமிழ் நூலாராய்ச்சியிலும் அற நெறித் துறையின் துட்பங்களை ஆராய்வதி

லும் பொழுது போக்கியிருந்தான்; அமைதியாகவே எம்மன்னரோடும் போர் தொடுக்காமல் ஐந்தாண்டுகள் வாழ்ந்து வந்தான். இராச மாதேவியும் தன் துயரத்தை மறந்தாள். சோழர் குடியிலே நெருங்கிய உறவினனொரு வன் அரசு தாங்க வுரிமை யுடையானைப் இருப்பதை யறிந்து, இருவரும் மனவமைதி யுற்றனர்.

அரசன் ஒரு நாள் உறையூர் நகரத்தே உலவச் சென்றான். புலவர் சிலர் உடன் சென்றனர். நகர்ப்புறத் தேயுள்ளதொரு சோலையை யடைந்தனர். அச்சோலையில் இயற்கையில் அமைந்த சில குளங்களும் செயற்கையில் அமைந்த சிறு குளங்கள் இரண்டும் இருந்தன; பல வகைப் பூ மரங்களும் பழ மரங்களும் நிரம்பியிருந்தன. அரசன் மெல்ல நடந்து சென்றான். புலவர்களும் அருகில் நடந்தார்கள். அக்கூட்டத்திலே பெண் புலவராகிய மாறோக்கத்து நப்பசலையாரும் இருந்தனர். எல்லாரும் அச்சோலையின் இடைநிலத்திலிருந்த குளத்தை யடைந்தனர். ஒரு வழியிலே இறங்கு துறை படிகளால் நன்கமையப் பெற்று மற்ற வழிகளிற் சிறுசிறு படிகள் நான்கைந்திடங்களில் வைத்து இவ்வண்ணமே நாற்றிசையிலும் அமைந்திருந்தது. மேற்றிசையிற் சாயும் ஞாயிற்றை நன்கு கண்டு மகிழக் கூடிய கிழக்கரையிலே அகன்றிருந்த முற்றத்திலே எல்லாரும் அமர்ந்தனர். அரசன் அவர்கட்கு நடு நாயகமாய் இருந்தான். பின்பு அங்குப் பின் வருமாறு பேச்சு நிகழ்ந்தது :

அரசன்:—புலவர்களே, நம் நாட்டில் இப்பொழுது எங்கும் புத்த மதம் தலையெடுத்து வருகின்றதென அறிகின்றோம். புத்தமதவர் தம் மதக்கொள்கைகளிலே உலக

மக்கள் நன்னெறி பற்றி வாழ்தற்குரிய நல்லொழுக்கங் களை விரிவாகக் கூறி இறைவனைப்பற்றி ஒன்றும் கூறு தொழித்தார். அவர் உள்ளத் துறவுடையராகையால், எவரும் துறவறம் மேற்கொள்ளலாம் என விதித்தார்; துறவறத்துக்குப் பெண்டிரும் தகுதியுடையரென வகுத் தார். இவ்வாறுகிய பல கொள்கைகளால் நம் நாட்டுப் புராதன மதமாகிய வைதிக மதம் வளர்ச்சியுறுது ஒடுங் குமோ என ஐயுறுகின்றோம். புத்த தேவர் யாகாதிகள் செய்தலைக் கண்டித்து ஜீவகாருணியமே சிறந்த தருமம் என்று போதித்ததால், நம் நாட்டில் முன்னாளில் நிகழ்ந் ததுபோல அத்துணை யாகங்கள் நிறைவேறவில்லை. நம் குடி மக்களுட் பெரும்பான்மையோர் புத்த நெறியைத் தழுவ அவாவுடையரா யிருக்கின்றரெனவே அறிகின் றோம். அதனால் நாத்திகம் தலையெடுக்குமோ என அஞ்ச வேண்டியதாயிருக்கிறது. இந்நாளைப் பௌத்தர் புத்த ரைத் தெய்வமாகக் கொள்கின்றனர்; சிறிய தெய்வங்கள் பல கொள்கின்றனர். தெய்வம் வேண்டும் என்று அவர் கூறுவிடினும், மனிதர்க்கு இயல்பா யமைந்த குணத் துக்குத் தக்கபடி பல தெய்வங்கள் அம்மதத்திலும் தோன்றுமோ என்று எண்ணுகின்றோம். நாட்டு மக்கள் தம் மனத்தாற் பற்றி வாழ்தற்குரிய கொள்கைகளைப் பற்றி நாமொன்றும் விதித்தலாகாதென்பதே கருத்தாம்.

மாணாக்கத்து நப்பசலையார்:—அரசர் பிரானே, நீவிர் கூறுவது மெய்யே. புத்த மதமென்ன? இன்னும் எத்துணைப் புதுக் கொள்கைகள் வரினும், அவற்றிற் கெல்லாம் நம் நாடு இடங் கொடுத்து அவற்றை அழகு படுத்தக் கூடிய ஆற்றல் உடையதே.

ஆடு துறை மாசாத்தனர்:—அருக மதமும் பரவி வருகின்றது. சங்கப் புலவருட் பலர் இங்காளிலே அருக மதத்தினரா யிருக்கின்றனர். அவர்தம் மத வேறு பாட்டால் நம் நாட்டின் அறநெறி நிலைக்கும் கல்வி வளர்ச்சிக்கும் யாதொரு கேடும் விளையவில்லை. ஆகையால், நாம் ஒன்றும் குறை கூறற்கியலாது என்றே கருதுகிறேன்.

ஐயூர் முடவனர்:—அரசரே, ஞான நன்னெறியை நன்கு உணராமல் மயங்கி நின்ற மக்கள் இப்புது நெறிகளை உய்த்துணர்ந்த பிறகாவது நம் பண்டைக் கொள்கைகளில் உள்ள உண்மைகளை உணர்ந்து நல்வழியிற் சென்று பயனடைய முயல்வர் என்பது என் எண்ணமாம்.

அரசன்:—யாமும் அவ்வண்ணமே கருதுகிறோம். இறைவன் ஒருவன் உளன், அவன் எங்கு முளன், எல்லாம் வல்லன் என்ற உணர்ச்சி யொன்றிருந்தால், அவர் எக்கொள்கையைப் பின் பற்றினும் என்! இறுதியில் நலமே பெறுவர். இறைவன் செயல் எவரே அளப்பர்?

உருவமில தெனப்பலரும் ஓதுறுமப் பரம்பொருள்தான்
உருவமுள தெனச்சிலர்தம் முள்ளமுற வுணர்வாரேல்
அருவநிலை யமைபொருளுக் கதுவுரைத்தல்பொருந்தாதென்
றருவநெறி பயின்றவரும் அறைதலெளி தன்றுமே.

எல்லையறு பரம்பொருளா யிவ்வுருவில் இந்நிலையில்
வல்லவணம் அறிதுமென வழங்குபவர் மறைப்பொருளின்
சொல்லரிய நிலைமையினைத் துணிந்துரைக்க வல்லவரென்
றெல்லவரு முருவருவாய் இறையவனை யெண்ணுவரே.

புலவீர்காள், எமக்குச் சிறிது மயக்கமாகத் தோன்று

கின்றது. இவ்வணையிலே சிறிது பொழுது சாய்ந்திருப் போம். பிறகு எல்லோரும் எழுந்து செல்வோம்.

அரசன் சிறிது நேரம் அங்குச் சாய்ந்திருந்தான். புலவர்கள் தங்களுக்குள்ளே பல பொருள்களைப் பற்றிப் பேசியிருந்தார்கள். இரண்டு நாழிகைக்கு மேலாகியும் அர சன் எழுந்திலன். மருத்துவர் ஒருவர் மெல்ல அருகிற் சென்று பார்த்தார். அவர் அரசன் விண்ணகம் புகுந்தான் என்ற செய்தியைப் புலவர் அறியக் கூறினர். அச்செய்தி கேட்டு அவரனைவரும் மனம் புண்ணுகிப் புலம்பினர்.

மாறோக்கத்து நப்பசலையார், "கூற்றுவன் பகை கொண்டு வெகுண்டு போர் புரிய வந்திருப்பின், உயிரோடு திரும்பிச் செல்ல இயலாது. வளவர் பிரானும் பாண ரையும் புலவரையும் போன்று இரந்து நின்றிருப்பன். இல்லாவிடில், இச்செய்தி நிறைவேறி யிராது," என்று கூறினர்.

ஆடு துறை மாசாத்தனார், "கூற்றுவனே, நீ மிகப் பேதையாயினை. நின்னிடம் நற்குணம் இல்லை; அறிவும் இல்லை. அறிவு இல்லாமையாலேதான் நீ வித்தைச் சமைத்துண்டாய். யான் கூறுவது உண்மையாம் என் பதை நீயே காண்பாய். தினந்தோறும் பல போர்க்களங் களிலே நினக்கு வேண்டுமளவு உணவருத்திய கிள்ளி வளவனை உட்கொண்டனை. இனி யாரே உன் பசி தீர்க்க வல்லார் ஆவர்?" என்றார்.

ஐயூர் முடவனார், "மண் கலம் வனையும் வேட்கோ வே, இருள் அடர்ந்து வந்ததுபோலப் புகை யெழும்படி ஊர் நடுவிலே கலங்களை அடுக்கிச் சூளையிலிடும் பணி பூண்ட வேட்கோவே, நினக்கு வந்த அரும்பணியை

நினைத்தால் உன்பால் இரக்கங் கொள்ள வேண்டுமே. உலகமெங்கும் சூழ்ந்த பெரும்படையும் புலவராற் பெற்ற பொய்யாப் புகழும் உடைய ஞாயிறுபோன்ற பிரதாப சீலராகிய கிள்ளி வளவர் என்ற எம் மன்னர் பிரான் தேவருலகம் எய்தினர். அவரைக் கவித்து மூடும் வண்ணம் அகன்ற தாழியை நீ செய்ய வேண்டுமாயின், இவ்வுலகத்தையே சக்கரமாகக் கொண்டு பெரிய மலையமண்ணைக் கொண்டு கலம் வனைதல் வேண்டும். அவ்வாறு செய்ய உன்னால் இயலுமோ?'' என்று புலம்பினர்.

அரச பரிவாரத்தினர் உடனே இத்துயர்ச் செய்தியை நகரத்துக்குத் தெரிவித்தனர். உரியார் பிறரும் வந்தடைந்தனர். மகன் என்ற முறைமையுடையான் இன்மையால், சோழர் குடியிற் பிறந்த உரிமையுடையான் ஒருவன் அரசு பூண்டான். மற்றொருவன் கிள்ளி வளவனுக்குரிய ஈமக் கடன் கழித்தான். கோப்பெருந் தேவி தன் தலைவனோடு ஒருங்கு மாய்ந்தனள். புலவர் பலரும் அவ்வளவனது அழியாப் புகழைப் பாராட்டி மனம் வருந்திச் சென்றனர். புதிய மன்னன் செங்கோல் தாங்கி அரசு புரிந்து வந்தான்.

சொல்லும் பொருளும் சுவையமையப் பாடவலான்
வெல்லும் பெரும்போர் விறல்வளவன்—நெல்லும்
கரும்பு மிகப்போலியக் காவிரிபாய் நாட்டின்
வரும்பெருமை கண்டான் வளர்த்து.
உள்ளி யுளமுருகி யுண்மைப் புலவர்புகழ்
கிள்ளி வளவன் கெடலருஞ்சீர்—விள்ளுவதால்
பண்டைத் தமிழகத்தின் பண்பு விளங்குமெனக்
கொண்டிஃ துரைத்தேன் குறித்து.

2. சோழன் நலங்கிள்ளி

I

உயர்குடி யுட்பிறப்பின் என்னும் பெயர்போற்கும் பேராண்மை யில்லாக் கடை.

சோழ நாடு நீர்வள நிலவளங்களிற் சிறந்தது என்பது முக்காலத்திலும் உண்மையே. காவிரி பாய்ந்தோடும் நாட்டில் வளத்திற்குக் குறை கூறிடுமோ? நாடெங்கும் நன் செய்கள்! யாற்றோரமெங்கும் அடர்ந்த சோலைகள்! நிலமகள் தன் இயற்கை யழகை வட நாட்டின்கண் கங்கைப் பெருக்கால் நன்கு விளக்குமாறு போலத் தென்னாட்டிலே காவிரிச் செல்வத்தால் விளக்கிக் காட்டுகின்றனள். இன்ன இயற்கைச் செல்வம் அனைத்தும் இயைந்திருப்பினும், அரசுரிமை காரணமாக இச்சோழ நாடு நம் வரலாறு தொடங்கும் இக்காலத்தே பெரும்பாடு பட்டது. காவிரிப்பூம் பட்டினத்திலே அரசு நாட்டிச் சோழருள் ஒரு வகுப்பார் தம் தலைமையை நிலைப்பித்தனர். மற்றொரு வகுப்பார் உறையூரில் தம் அரசுரிமையை நிலை நாட்டினர். இவ்விரு திறத்தார்க்குள்ளும் போர் நிகழ்வதும் அமைதி கோரிடுவதும் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகள் ஆயின. குடி மக்கள் எவரை அரசராக மதிப்பது என அறியாது மயங்கலானார்கள்.

நெடுங்கிள்ளி என்ற இளைஞன் ஒருவன் உறையூரிலிருந்து அரசாண்ட சோழர் மரபிலே தோன்றித் தனதுரிமையாப் பெற்ற உறையூர் ஆவூர் என்ற இரண்டு ஊர்களையும் தன் நாடு என்று கொண்டு ஆண்டு வந்தான். புகார் நகரத்திலிருந்த அரசனுக்கு இளையோனும் சிறந்த வீரனுமாகிய நலங்கிள்ளி யென்பான் இவ்வுறையூரைக் கைக்கொண்டு சோழ நாட்டின் பெருமையை வளர்க்கக் கருதினன். எளியான் ஒருவன் கையில் இருக்கும் பொருளை வலியான் ஒருவன் கைக்கொள்ளக் கருதுவனுயின், அதற்குத் தக்க நீதி நியாயங்களைத் தானே வகுத்துக்கொள்வது முறையே யன்றே? நெடுங்கிள்ளியை எவ்வண்ணமேனும் நாட்டை யிழப்பித்துத் தான் அரசு பெற வேண்டு மென்ற உறுதியைக் கொண்ட நலங்கிள்ளி தன் இளவலாகிய மாவளத்தானோடு இவ்விஷயத்தைக் குறித்து ஒரு நாள் ஆலோசனை செய்யலாயினன். புகார் நகரத்துப் பூஞ்சோலை யொன்றில் அவ்விருவரும் தம்முட் பேசிக்கொண்டனர்:

நலங்கிள்ளி:—இளையோய், யாம் இங்கு வந்துற்ற தன் காரணம் நீ அறிவை யன்றே?

மாவளத்தான்:—அண்ணல், அறிவேன். சில நாட்களாக நும் மனத்திலே தோன்றியுள்ளதொரு சிந்தனையே என்னை இங்கு அழைத்தது.

நலங்கிள்ளி:-என் சிந்தனை எதுவாயினும், நீ எனக்கு உதவியாக நிற்பதாய்க் கூறியிருப்பதை மறவாய் என்று எண்ணுகின்றேன். சமயம் வரும்போது நினக்கு எண்ணம் மாறுமோ?

மாவளத்தான்:—அண்ணல், என்னைப்பற்றி நீர் இவ் வண்ணம் எண்ணுதல் முறையன்று. என் உறுதி மொழி இன்றும் உறுதி மொழியே. சோழர் குடியிலே தோன்றினேர் என்றேனும் சொன்ன சொல் தவறினர் என்பதை நீர் கேட்டதுண்டா?

நலங்கிள்ளி:—இளையோய், என் கருத்தை இன்னும் நீ நன்கு அறிந்துகொள்ளவில்லை. எனக்கு நீ உதவியாய் நிற்பதாய்க் கூறியிருப்பது மெய்யேயாயினும், நினக்கே இஷ்டமில்லாததொரு செயலில் யான் நின் உதவியை நாடுவேனையின், நீ மறுத்துரைக்கவும் கூடுமன்றே?

மாவளத்தான்:—அரசரே, நமது குலத்துக்குப் பழி விளையாததாய், நல்லோர் பாராட்டுக்குரியதாய், அறத் தொடுபட்டதாய் நீர் எச்செயல் செயினும், அஃது எனக்கு உடன்பாடிலாததாய் இருப்பதற்கு முறை யில்லையே! யானும் என் கீழ் அடங்கிய படைஞரும் என்றும் எப் பொழுதும் நும் ஏவலின் வழி நிற்போம் என்பதை உறுதியாக நம்பலாம்.

நலங்கிள்ளி:—இளையோய், நம் நாட்டுப் படையிற் பெரும்பகுதியைப் புற நாடுகட்கு அழைத்துச் சென்று பெரும்போர் விளைத்து முறையற்ற அரசுகளை நம் அரசுக்குக் கீழ்ப்படுத்தும் முயற்சியில் நான் இறங்குவேனையின், அம்முயற்சி நின் ஆதரவுக்கும் உதவிக்கும் தக்கதேயாமன்றே?

மாவளத்தான்:—அத்தகைய முயற்சிகள் எனக்கும் ஊக்கம் தருவனவே. சில நாட்களாக என் படைஞர் போர் நிகழ்ச்சி யில்லையேயென வருந்துகின்றனர். அவர் வருத்தத்தை மாற்றவும் போர்ப் பயிற்சியைப் பயன்

படித்தவும் நாம் அயல் நாடுகட்குப் போர் செய்யச் செல்லுதல் நலமே.

நலங்கிள்ளி:— யான் போர் புரிந்து அடக்கச் செல்லும் நாடு அதிக தூரத்தில் இல்லை; அயல் நாடுமன்று. என் முயற்சிக்கு மாறுரையாதிருப்பதொன்றே இப்பொழுது நீ எனக்கு இயற்றத் தக்க உதவியாம்; நின் படைஞரும் பயன்படுத்தப்படுவர்.

மாவளத்தான்:—அரசரே, நீர் கூறுவதைப் பார்த்தாற் பெரும்போர் ஒன்றும் நிகழாதென்றே எனக்குத் தோன்றுகிறது. சமீபத்திலேயுள்ள எவ்வரசர் தும் சினத்துக்காளாயினர்?

நலங்கிள்ளி :—அவ்வரசன் நினக்கு நண்பனாகவே இருப்பினும் இருக்கலாம்; நெருங்கிய உறவினனாகவே யிருப்பினும் இருக்கலாம். நாட்டின் நலங்கருதிப் போர் இயற்ற முயற்சி செய்யுப்பொழுது உறவினர் என்றும் பிறர் என்றும் கருதல் இயலுமோ?

மாவளத்தான்:—இப்பொழுதுதான் உமது கருத்தின் உண்மை விளங்குகின்றது. நம் உறவினனும் உறையூரில் அரசு புரிவானுமாகிய நெடுங்கிள்ளியின்மேல் தமக்கு நெடுநாளாய்ப் பகையுண்டென்பதை யான் அறிவேன். அவன் உறையூர் ஆவூர் என்ற இரண்டு ஊர்களை ஆள்வதால், நம் ஆட்சிக்கு எதேனும் குறை நேரிட்டிடுமோ? அவன் நம்மைப் பகைக்கவும் இல்லையே! நம் நாட்டுரிமைக்கு அவாவுடையனுய் முன் வரவுமில்லையே! இருப்பது போதாதும் என்று அமைந்திருக்கும் அவனிடம் நமக்கு இப்பகை எதற்கோ!

நலங்கிள்ளி:—நீ இவ்வாறு மாற்றுரை பேசக் கூடுமென்றறிந்தே முன்னரே நின்னிடம் உறுதி மொழிபெற்றேன். ஆயினும், பால் கூறும் நியாயங்கட்கும் சிறிது செவி சாய்ப்பாய்: நெடுங்கிள்ளி நம் குடியிலேயே பிறந்தவனாயினும், சோழன் என்ற பட்டப் பெயர் பெறுதற்கும் அரசுரிமை பூணுதற்கும் தகுதியில்லாதவன் என்பதை இந்நாடெல்லாம் அறியும்; நீயும் அறிவை யென்றே எண்ணுகிறேன். 'அவன் இருப்பதைக் கொண்டு அமைந்திருக்கின்றான்; நம் நாட்டின்மேற் படையெடுத்து வரவில்லை,' என்கின்றாய். தனக்குரியதல்லாத பிறருடைமையிற் சிறிதளவு பெற்றாலும் அமைந்திருப்போர் நல்லோர் என்றே நின்னால் மதிக்கப் படுவர் போலும்! அவன் பெற்றிருப்பது சிறிது என்று கூறவும் இயலாதே! அவன் ஆட்சியின் கீழ் நம் முன்னோரது பண்டைப்பெருமையையெல்லாம் விளக்கும் உறையூர் அகப்பட்டிருப்பதை நீ அறியாயா? ஆவூர் என்பது சிற்றூரா? அது பெரும்புலவர்க்கெல்லாம் பிறப்பிடமாயிற்றே! இத்தகைய இரண்டேர்களை ஆளுதற் குரிமையில்லாத அவன் கையில் விட்டுவிட்டால், இங்கிருந்து சோழ நாடு ஆள்வார்க்கு இங்ஙகரையன்றி வேறென்ன சிறந்தவூர் உளது?

மாவளத்தான்:—அரசரே, நீவிர் கூறுவனவெல்லாம் நியாயமாகவே தோன்றினும், நம்மொடு பகை கொள்ளாமல் நண்பனையிருந்து அரசாண்டு வரும் அந்நெடுங்கிள்ளியொடு காரணமொன்று மின்றிப் போர் செய்யச் செல்வது பொருத்தமென்று எனக்குத் தோன்றவில்லை.

நலங்கிள்ளி:—நான் மேற் கூறியவே காரணங்களாம். தனக்குரிமையற்ற பொருளை அடைந்திருக்கும் ஒருவ

ஞெடு அப்பொருளுக் குரிமையுடையான் போர் தொடுப் பதற்கு நியாயமுங் கூற வேண்டுமோ ?

மாவளத்தான்:—அரசரே, இப்போர்க்கு யானும் உதவியாக வரவேண்டும் என்ற எண்ணம் உமக்கு உண்டோ ? முதலில் நீர் கூறியதை நோக்கினால், என் உதவியின்றியேநீர் போர் இயற்றி வென்று வருவீர் என்று நம்புகின்றேன்.

நலங்கிள்ளி:—நாட்டின் உரிமையை நாட்டக் கருதி நான் புரியச் செல்லும் போரிலே நினது உதவியில்லா திருப்பது நினக்கும் நம் குடிக்குங் குறையாமாகையால், நீயும் வர வேண்டும்.

மாவளத்தான் :—அவ்வாறு எண்ண மிருப்பின், யான் மறுத்துக் கூற வியலுமோ ? என்னெடு நெருங்கிப் பயின்ற புலவர் சிலர் உடன் வர விரும்புவரே ! அவரை அழைத்து வரலாமோ ?

நலங்கிள்ளி:—நின்னுடன் நண்பு பூண்ட புலவர்மாத் திரம்அன்றி என்னிடம் அளவளாவி யிருக்கும் புலவரும் உறையூர்க்கு வருவர். புலவரின்றிப் போரியற்றச் செல்லு தல் நம் குடியினர் பரம்பரை வழக்கமன்றே!

மாவளத்தான்:—ஆயின், என்னால் இயன்றன செய் கின்றேன்.

நலங்கிள்ளி :—இஃதோயாய், நான் இங்கே கூற வரி யது ஒன்று உளது: போர் புரிதல் என்பது மன்னராய்ப் பிறந்தார்க்கும் அவர் உரிமைச் சுற்றத்தார்க்கும் இயல்பி லேயே அமைந்திருத்தற்குரிய குணமாம். நெடுங்கிள்ளி நம் மரபின் உரிமைகளுக்குத் தருதியுடையன் என்று நீ எண்ணியிருப்பதை இப்போராலே அறிந்துவிடலாம்.

உறையூரைத் தன்னுட்சிக்கிழ்க் கொண்டிருக்கும் மன்னன் எத்துணைப் படை வலிமை உடையனுய்ப் இருத்தல் வேண்டும்! என் ஒற்றரால் இங்நாள்காறும் யான் அறிந்த வற்றைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தவளவில் நெடுங்கிள்ளியின் படைஞர் போர் என்ற சொல்லின் பொருளே அறியார் எனத் துணிகின்றேன். நெடுங்கிள்ளியோ, இளம்பருவத்தில் இங்கிருந்த காலத்திலே போர்ப் பயிற்சியை எத்துணை அவாவோடு ஏற்றுக்கொண்டான் என்பதை யான் அறிவேன். ஆண்மையும் அரசத் திறமையும் வீரமும் போர்ப் பயிற்சியும் இல்லாத ஒரு தலைவன் கிழ் உள்ள நாடு, நம்மாற் பற்றப்படா திருப்பினும், விரைவில் எளிதிலே பாண்டியர் சேரர் முதலியோராற் பற்றப்படுதல் உண்மையே. நம் நாட்டை நம் உரிமையை அயலார் கவர்ந்துகொள்ள விட்டு, நாம் பார்த்திருக்கலாமோ? பாண்டிய மன்னரும் நம் நாட்டுக்கருகிலே பல இடங்களிற் புதுமையாக அரண்களை யமைத்து ஆங்காங்கே பெரும்படைகளை நிறுத்தியிருக்கின்றனர் என்று ஒற்றரால் அறிகின்றேன். தம் நாட்டை அமைதியோடு ஆள விரும்பும் அரசர்க்கு அயல் நாட்டின் அருகில் உள்ள ஊர்களில் அரண்களும் படைகளும் பெருகுவது எதன் பொருட்டு? சந்தர்ப்பம் வாய்க்கும்போது அவ்வயல் நாட்டைக் கைக்கொண்டு விடும்பொருட்டுத் தானே? இப்பொழுது அவர் நெடுங்கிள்ளியும் நாமும் நண்பராயிருக்கின்றோமென்று நம்பியே நெடுங்கிள்ளி மேற் போர் தொடுக்காமலிருக்கின்றனர்; நம் உண்மை நிலைமையை அறிய ஒற்றர் பலரை அனுப்பியு மிருக்கின்றனர்; அவ்வொற்றரால் நம் உட்பகையை இங்நாளில்

அறிந்திருக்கவும் கூடும். சமீப காலத்திலே அடித்துள்ள அரண்கள் நன்கு பழுது பார்க்கப்பட்டன வென்றும், படைஞர்களும் படைகளும் முன்னிருந்தவற்றைக் காட்டிலும் அதிகமாக ஆங்காங்கமைக்கப்பட்டன என்றும் அறிகின்றேன். மதுரையின் பக்கத்திலுள்ள ஊர்களிற் போர்த் தொழில் பயின்ற மறவரெல்லாம் பாண்டிய மன்னர் பணிக்கு உவந்து முன் வருகின்றனராம். அவர் நெடுங்கிள்ளியின் நாட்டை எளிதிற் பற்றிக்கொண்டு பிறகு நம்மொடும் போர்செய்ய வரலாம் என்று எண்ணியிருக்கின்றனர் என்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது. வரும் வழி அவர்க்கு எளிதாகாதிருக்கும் வண்ணம் வேண்டிய முயற்சியைச் செய்ய வேண்டுவது நம் கடமையன்றோ? நின்னிடம் முதற்கண் இதனைக் கூறாமலிருந்தது நெடுங்கிள்ளியினிடம் நீ கொண்டிருக்கும் நட்பு நம் நாட்டின் நலத்துக்கு மாறாக நிற்குமோ என்று எண்ணியதாலேயாம். நான் போர் தொடங்குவதற்குக் காரணத்தையெல்லாம் அறிந்துகொண்டாயாகையால், இனி நீ மனமாறுபாடு கொள்ளாய் என்றே எண்ணுகிறேன்.

மாவளத்தான்:—அரசரே, இப்பொழுது நீவிர் கூறிய காரணங்கள் பொருத்தமே. பாண்டிய மன்னர் படைப் பெருக்கின் பெருமிதத்தை அடக்குவதற்கேனும் யாம் போர் புரியச் செல்ல வேண்டுவதே. நெடுங்கிள்ளி நம் படையை எதிர்த்து நில்லான் என்பதும் அவன் படைஞரெல்லாம் போர்ப் பயிற்சி தக்கவாறு பெறுதவர் என்பதும் யான் அறிந்த விஷயங்களே. காலக் கணக்கருட் பெரியார் ஒருவரை அழைப்பித்து நல்லதொரு நாள் குறித்து அந்நாளிலே போர் தொடங்கச் செல்லலாம்.

நலங்கிள்ளி:—தாமப்பல் கண்ணனூர் சிறந்த காலக் கணக்கராவ ரல்லரோ? அவர் நினக்கு நண்பரும் ஆவர். இவ்வளவு காலம் நின்னைப் பிரிந்திருக்கப் பொறாரே! எங்கெங்கும் தேடிக்கொண்டு இங்கே வந்தாலும் வந்து விடுவர்.

மாவளத்தான்:—இதோ! அவரே வந்துவிட்டார். தேடப் போன மூலிகை காலில் அகப்பட்டதுபோல ஆயிற்று. பொதுவாகத் தெற்குத் திசை நோக்கியேனும் போர்க்குப் புறப்பட வேண்டுமாயின், அம்முயற்சி பலிக்கத் தக்க நாள் ஒன்று பார்த்துச் சொல்லுக என்று அவரை விசாரிப்போம்.

நலங்கிள்ளி:—ஐயரே, வாரும். புலவர் தலைவரே, நீவிர் மாவளத்தானுக்கு உற்ற நண்பர் என்பதை யாம் பல நாட்களாக அறிவோம். தமக்கு வான நூலிலே சிறந்த பயிற்சியுள்ளதென நாட்டவரெல்லாரும் கூறுகின்றனர். ஒளி நூலும் வான நூலும் ஒன்றற்கொன்றிணைந்தவை யல்லவா? தும் நூற்பயிற்சியால் யாம் இப்பொழுது கருதியிருக்கும் கருத்தைத் தெரிவித்தல் கூடுமோ?

தாமப்பல் கண்ணனூர்:—அரசரே, நீவிர் இருவீரும் நிற்கும் நிலையையும், தும் முகம் காட்டும் குறியையும், தற்காலக் கிரக நிலையையும், இங்குள்ள வேறு சில குறிகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது நீவிர் இருவீரும் பெரும்போர் தொடுக்க நினைந்துளீர் என்பதைத் துணிந்து கூறலாம். முதற்கண் நாட்டிற்குள்ளேயே ஒரு பகுதியிற் போர் நிகழலாம் என்று தோன்றுகிறது. இரண்டாவதாக, அடித்துள்ளதோர் அயல் நாட்டிலே

போர் செய்வீர் என்று தோன்றுகிறது. எல்லாம் தென் றிசையிலேயே இருப்பதாகவுஞ் சொல்ல வேண்டும். இப் போரால் நுமக்குச் சிறந்த வருவாய் உளதாம் என்று கூறத் துணிகின்றேன். நும் உறவினர் ஒருவர் தம் செல் வம் இழப்பர் என்றும் கூறலாம். எடுத்த முயற்சி வெற்றி பெறும் என்றே துணிந்துரைப்பேன். இன்னும் இரண்டு தினங்களில் நீவிர் இருவீரும் போர்க் கோலம் பூண்டு படைகளோடு புறப்படுதல் நும் முயற்சி நிறைவேறுதற்கு ஏற்றதாம் என்று தோன்றுகிறது.

நலங்கிள்ளி:—நீவிர் கூறியவணைத்தும் உண்மையே. நீவிர் கூறிய வண்ணமே போர்க்குப் புறப்படுவோம்; நும் மையும் உடனழைத்துச் செல்வோம்.

தாமப்பல் கண்ணனார்:—அவ்வண்ணமே யாகுக.

நெடுங்கிள்ளி :—இனி நாம் நகர்க்குட் செல்வோம்.

புலவர் குறித்த நாளில் சோழ நாட்டுப் படைஞர் உறையூர் நோக்கிப் புறப்பட்டனர். தாமப்பல் கண்ணனாரும் உறையூர்ப் போர்க்கு வருவதாகக் கூறித் தொடர்ந்தனர். பிற புலவரும், புலமைச் செல்வம் படைத்த நலங்கிள்ளியை அகன்றிருக்க மனமின்றி, உடன் சென்றனர். நலங்கிள்ளி படை முன்னாக, மாவளத்தான் படை பின்னாகச் சென்றது. சென்ற நெறியெல்லாம் செழிப்பு மிக்க நிலமுடைய உழவர் பெருமக்கள், தங்கள் அரசர் படைக்கு வேண்டும் பொருளெல்லாம் கொடுத்து உதவினர்கள். படையின் முன்னணி உறையூரை நெருங்குகையிற் பின்னணி புகார் நகரிலிருந்து புறம் வந்துகொண்டிருந்தது. வழியிலே உள்ள பல மரங்களில், முன் சென்ற படைஞர் தங்கின் இனிய செறிவைப் பருகினர்.

இடையில் வந்த படைஞர் அம்மரங்களிற் பழங்கள் பறித்துண்டனர். இறுதியில் வந்தவர்கள் அப்பழங்களை நிலத்தில் ஊன்றிப் பின்னெழுந்த கிழங்குகளை அவித்துண்டார்கள். இச்செயலை உணர்ந்த ஆலத்தூர் கிழார் என்ற புலவர் உறையூர் வந்து சேர்ந்ததும் பாசறையிலிருந்த நலங்கிள்ளியைப் புகழ்ந்து பாடிப் போர் புரியும் சிறப்பையும் படையின் சிறப்பையும் உலகறிய வுரைத்தனர்.

படைகள் எல்லாம் உறையூர் வந்து சேர்ந்ததும் போர் தொடங்கலாயிற்று. நலங்கிள்ளி அரணை வளைத்து முற்றுகை யிட்டான். நெடுங்கிள்ளி இன்னது செய்வ தென்று அறியானாய், அரண் கதவங்களைத் தாழிட்டு, அகத்தேயிருந்து, தன் படைகளின் வலியை அளக்கத் தொடங்கினன். நகரத்தார்க்கு வேண்டும் பொருள்கள் வருதற்கு வழியில்லாமற் போகும் வண்ணம் நலங்கிள்ளி நாற்றிசைகளிலும் காவல் ஏற்படுத்தினன். முற்றுகை சில தினங்கள் ஒரு வித மாறுபாடும் இன்றியிருந்தது. அரண் தகர்க்கப்படுதல் சோழர் குடியினர்க்கே பழியைத் தரு மாதலால், நலங்கிள்ளி படைஞர் அம்முயற்சியை மேற் கொள்ளாது கதவத்தை யானைக் கோட்டாற் பிளந்து, அகத்தே துழையு முயன்றுகொண்டிருந்தனர். அம் முயற்சி எளிதில் நிறைவேறுவதாயில்லை. பாசறையில் நலங்கிள்ளி போர் முயற்சிகளில் ஊக்கங் காட்டி, இங்கு மங்கும் சென்றுகொண்டிருந்தான். மாவளத்தான் தன் னில் இயன்ற முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தா னெனினும், போர் ஊக்கமாக நிகழாமையால், அருகில் இருந்த புலவராகிய நாமப்பல் கண்ணனாரோடு பொழுது போக்

காக வட்டாடக் கருதினன். அவன் தன் கருத்தை அவர்க்குத் தெரிவிக்க, அவர் தமக்கும் அவ்விளையாட்டில் மிகவும் விருப்பமுண்டாகையாலும் முன்னும் அவனோடு பலமுறை விளையாடிப் பொழுதுபோக்கி யிருக்கின்றமையாலும் மனமிசைந்து முன் வந்தனர். இருவரும் விதிப்படி வட்டாடத் தொடங்கினர்.

புலவர் அவ்வகைச் சூதாட்டத்திலே சிறந்த பயிற்சியுடையர். இளவரசனோ, அவரோடு நெருங்கிப் பயின்றும் பிற அரசரோடு பயின்றும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தான். வெற்றி தோல்வி இன்னார்க்கு என்று அறியவியலா வண்ணம் வெகு நேரம் வரை விளையாட்டு நிகழ்ந்தது. இரண்டு மூன்று காழிகையாகியும் ஒரு முறை வைத்த காய்களைப் பெயர்த்து வைக்கும் முயற்சி சிறிதும் மாறுபடாமல் நிகழ்ந்துகொண்டிருந்தது. மாவளத்தான் நன்கு யோசித்துப் புலவர்க்குத் தோல்வியுண்டாக்கத்தக்க தொரு வழியைத் தேடி முடிவுசெய்து, அதற்கேற்ற வண்ணம் காய்களை நகர்த்தத் தொடங்கினன். விரைவில் இவ்வுண்மையை யுணர்ந்த புலவர், அவன் முயற்சி பலியா வண்ணம் ஒரு சூழ்ச்சி செய்தனர். அதனால், அவன் எவ்வளவோ முயன்றும், ஒரு பக்கத்திலும் காய்களை நகர்த்த இயலாமல் இடர்ப்பட்டான்; தான் எண்ணிய தற்கு மாறுக இவ்வாறு நேர்ந்ததற்குக் காரணம் என்ன வென்று காய்களை யெண்ணிக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினன்; தனக்குரிய காய்களில் இரண்டொன்று மறைந்திருப்பதைக் கண்டான். புலவரே விளையாட்டு முறை தவறி, வெற்றி யொன்றே பெரிதென்றெண்ணி, அவற்றை மறைத்துவிட்டார் என்று தீர்மானித்தான்;

உடனே தன்னை மறந்து பெருங்கோபங் கொண்டான்; புலவர் முகத்தை யேறிட்டு விழித்தான்; அருகிலிருந்த வட்டை யெடுத்து அவர் முகத்தின்மேல் ஓங்கி யெறிந் தான். அவர் முதத்திலிருந்து உதிரம் பெருகி யோடியது. அந்தணரும் புலவரும் நண்பரும் ஆகிய அவர்க்கு இவ் வாறு பெருந்தண்டம் விதித்தது நியாயமோ அன்றோ என்பதை ஆராய்வதற்கும் அப்பொழுது அவன் மன நிலை இடந்தரவில்லை.

புலவர் எதிர்ப்பாராமல் நிகழ்ந்த இவ்வதிக்கிரமச் செயலைக் கண்டு பெருஞ்சினங் கொண்டார். அவ்வரும் தம்மை மறந்தார்; மாவளத்தானைப் பார்த்தார். அவன் சிறிதேனுங் கழிவிரக்கங் காட்டாதிருப்பதாக எண்ணி னர்; உடனே எழுந்து நின்று, "அரசரே, நும் செயலை நோக்கும்போது என் உள்ளத்திற் பெருத்ததொரு ஐயம் எழுகின்றது. சோழர் குடியிலே பிறந்த மன்னர் பெரு மக்கள் இந்நாள்காறும் பார்ப்பார் மனம் நோவத் தக்க செயல் ஒன்றும் செய்ததாக யான் அறியேன். நீவிர் நும் தோல்விக்குக்காரணம் இன்னதென நன்கு ஆராயாமலே என்னிடம் ஒரு சொல்லும் உரையாமலே, திடீரென்று வட்டை யெடுத்து என் முகத்திலெறிந்து என் உதிரம் கீழே சிந்தும்படி செய்தீர். புலவர்க்கு இவ்விதம் மரி யாதை செய்யும் இயல்பு சோழர் குடியிற் பிறந்த சிறுவ ரிடம் இருத்தற்கு நியாயமே இல்லை. ஆகையால், நும் பிறப்பின் உண்மையிலே யான் ஐய முறுகின்றேன். நும் தாயினிடம் இப்பெருங் குற்றத்தை யேற்ற நேர்ந்தது பற்றி யான் மிகவும் மனம் வருந்துகின்றேன்," என்று கூறினர்.

ஆண்மையும் அறிவும் திறகண்மையும் புலமைச் செல்வமும் ஒருங்கமைந்த மாவளத்தான், புலவர் வாய் மொழியைச் செவியிலேற்றுப் பெரிதும் மனம் புண்ணு னன்; இருந்த இடத்தை விட்டு உடனே எழுந்தான்; அந்தணப் புலவரும் தன் நண்பருட் சிறந்தாருமாகிய தாமப்பல்கண்ணனுரை வணங்கினன்; அவர் இரு கரங் களையும் தன் கைகளாற் பற்றிக்கொண்டு, கழிவிரக்கம் முகத்திலே தோன்ற, அவரை நோக்கி, "புலமைச் செல் வரே, இன்றுகாறும், நும் முகத்தில் யான் சினக் குறி யைக் கண்டிலேன். என்றும் இனிய தமிழ்ச் செய்யுட் களை யெடுத்துரைத்து அவற்றின் சுவை துகருமாறு என் போன்ற சிறுவரைத் தூண்டி மகிழ்வுறும் நுமது அமுத வாய் இன்று இத்தீய சொற்களைச் சொல்ல நேரி ட்டதற்குக் காரணம் என் குறையேயன்றிப் பிறர் குறை யாமோ? குணமென்னுங் குன்றேறி நின்ற நுந்தம் வெகுளி, என்னையும் என்னுள்ளத்தையும் சுடுகின்றது. புலவர் பெருந்தகையீர், எம் குடிக்கு இந்நாள்காறும் இல்லாதிருந்த பெரும்பழியொன்று தோன்றுமாறு அடி யேன் அறியாமையாற் செய்த பிழைகளைப் பொறுத்து அருள் புரிய வேண்டும். நும் வாய் மொழி எனக்குச் சிறந்த அறிவு புகட்டியது. எம் குடிப் பெருமை எம் மாற் காக்கப்படுதல் எளிதன்றே!" என்று மனமேங்கிக் கூறினன்.

புலவர் இம்மொழிகளைச் செவியேற்றார். தாம் பயின்ற,

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி யினமென்னும் ஏமப் புணையைச் சுடும்."

என்ற அருண்மொழி தமக்கே பொருந்தியதைக் கண்டு மனம் வருந்தினர்; 'முகத்திலிருந்து விழுந்த இரண்டொரு துளி உதிரங் காரணமாக எத்துணைப் பெரும் பழியை உயர்வொப்பில்லாத அரசர் குடியின்மேல் ஏற்ற நேரிட்டுவிட்டது!' எனக் கருதினர். உடனே தாம் இழைத்த மறு அழியும்படி என்றும் அழியா நடையில் தம் கழிவிரக்கத்தைத் தெரிவிக்கப் பின் வருங் கருத்தமைந்த செய்யுளொன்றைப் பாடினர்:

" இளவரசரே, நும் குடித் தலைவனுகிய செங் கதிரோன் கதிர்கள் நேரிலே உலகிற்கு வருமாயின், உலக வுயிர்கள் அவற்றின் வெப்பத்தைத் தாங்கலாற்றாது மா யும். ஆகையால், அக்கொடிய உஷ்ணத்தைத் தம் தவத் தால் தாமே தாங்கி உலகு பொறுக்குமளவுக்குக் கீழே வெப்பம் வருமாறு செய்யும் தெய்வமுனிவர் சிலர் உளர். அவர்கள் காற்றையே உணவாகக் கொண்டு சூரியனெடு சஞ்சரித்து வரும் இயல்பினர். அத்தகைய பெருந்தவச் செல்வருங்கண்டு அதிசயித்து அருள் புரியும் வண்ணம், நும் குடிக்குச் செம்பியர் குடி யென்ற பெயரை வருவித்த சிபி யென்ற மன்னர் பெருமானுர் ஓர் அருஞ்செயல் செய்தனர். அச்செயல் விண்ணும் மண்ணும் வியக்கத் தக்கதாய் இன்றளவும் உள்ளது. வளைந்த சிறகுகளையும் கூர்மையான நகங்களையும் உடைய பருந்து ஒன்று விண்ணகத்தே தான்கண்ட குறு நடைப் புறவொன்றைத் தன் வயிற்றுளிடக் கருதித் தொடர்ந்தது. அவ்வினம் புறு, சிபியினிடம் ஓடி வந்து, தனக்கு நேர்ந்த தாயரை யுணர்த்திச் சரண் புகுந்தது. பருந்தும் விரைந்து தொடர் வதை அம்மன்னர் கண்டார். புறுவை உயிரோடு காப் பாற்றவும் பருந்துக்கு உணவு உதவவும் வேண்டி, புறு வின் நிறையளவு தம் உடலிலிருந்து ஊன் தருவதாகக்

கூறி, ஊனை அறுத்து வைக்க வைக்க அடையாதிருந்த துலைக்கோலில் தானே ஏறி நின்று அடைக்கலங் காத்தல் வேண்டித் தம் முயிரையுங் கொடுக்கத் துணிந்தார். அத்த கைய வள்ளல் பிறந்த மரபிலே பிறந்த உமது உண்மைப் பெருமை என் சொல்லளவில் அடங்குமோ? பெரும் படையோடு சென்று பகைவரை வெல்லும் அருந்திறல் படைத்த தேர் வண்கிள்ளியாகிய நலங்கிள்ளியின் தம்பி யீர், வில்லே யேந்திய வீரர்க்கெல்லாம் தலைவீர், வண்மை யிற் சிறந்த அரச குமரரே, யான் ஐயமுடையேன்: ஆத்தி மாலை சூடும் சோழர் குடியிற் பிறந்த உம் முன்னே ரெல் லாம் பார்ப்பார் மனம் நோவத் தக்க செயல் செய்யார். இது உமக்குத் தகுமோ என்று வெறுத்துக் கூறி யானே பெருங்குற்றமிழைத்தேனானேன். நீர் என் குற்றத்தைத் தெரிந்தும், அதைப் பெரிதென்று கருதாமலும் மனம் நோவாமலும் இருந்தீர். அதனோடு நில்லாமல் நீரே பெருங்குற்றம் செய்தவர்போல நாணமுற்று வணக்க மொழிகளும் கூறினீர். தமக்குத் தீங்கிழைத்தோரைப் பொறுத்து ஆதரிக்கும் பெருமை இவ்வளவர் குடியிற் பிறந்தோர்க்கு எளிதேயாகும் என்று யானும் உலகும் அறியக்காட்டினீர். ஆகையால், யானே பிழைபூண்டேன். உம் ஆயுள் மேன்மேலும் சிறக்க. நீர்பெருகிவரும் காவிரி யின் மணல் மேடுகளில் உள்ள மணல்களைக்காட்டிலும் எண்ணிறந்த ஆண்டுகள் நீர் இவ்வுலகில் வாழ்ந்து உமது குடிப் புகழை விளக்குவீராக.''*

மாவளத்தான் இப்பொருளமைந்த பாடல் முழு வதும் மனவுருக்கத்தோடு கேட்டான். புலவர்க்குப் பின்

* புறநானூறு, செய்-33.

ளிலே குறையிருந்ததைத் தெரிவிக்க வுதவுமாயினும், தன் குடிப் பெருமைக்கு நேர்ந்த மறுவை அழிக்க வெழுந்த பாடலாகையால், அது நாட்டின்கண் வழங்குக வென அனுமதி கொடுத்தான்.

பின்பு சிறிது நேரம் புலவரும் அவனும் அமைதி பூண்டிருந்து, போரின் நிலைமையைப் பார்க்கக் கருதி, அரணருகில் வந்தனர். அடைத்த கதவு அடைத்த படியே யிருந்தது. நெடுங்கிள்ளி போர் முயற்சி யொன்றும் செய்யாமலே அரண் தாங்குமளவு பொறுத்துப் பார்ப்பதெனத் துணிந்திருந்தான். நலங்கிள்ளி பொறுமை யிழந்து, அரணைத் தகர்க்க ஆணையிடலாமென்று கருதலானன். இந்நிலையில் நெடுங்கிள்ளியிடம் சென்று அற நெறி கூறி அவனை நல்வழிப்படுத்தத் தக்கார் எவரும் அருகில் இலராயினர். இவ்வமயத்திற் கோவூர் கிழார் என்ற புலவர் பெருமானர் அங்கடைந்தனர். அவர் நலங்கிள்ளியை யடைந்து, போரின் நிலைமையினை அறிந்துகொண்டனர்; நெடுங்கிள்ளி அரணை யடைத் திருத்தல் பாண்டிய மன்னர் முதலியோர் தாம் நினைத்ததை நிறைவேற்ற உதவியாயினும் ஆகலாம் என்று எண்ணினர்; ஆகவே, இயல்பாகத் தமக்குள்ள உரிமையினால் அரணுக்குள் நுழைந்தனர்; அங்கே தக்க படையும் பாதுகாவலும் இன்றி அரண்மனையினுள் ஒளித் திருந்த நெடுங்கிள்ளியைக் கண்டனர்; அவனுக்கு அறிவு புகட்ட வெண்ணினர்.

கோவூர் கிழார்:—அரசரே, இவ்வாறு நீர் செய்வது நகருள் வாழும் மக்கட்குப் பெருந்துன்பம் இழைப்பதாம்.

நெடுங்கிள்ளி:—பகைவன் ஒருவன் வந்து அரணை முற்றுகை இடும்போது நான் வேறென்ன செய்வது?

கோவூர் கிழார்:—மன்னரே, உமது அரணை முற்றுகை செய்து நிற்போரைப் பகைவர் என்றே எண்ணுகின்றீர்?

நெடுங்கிள்ளி:—என் நாட்டை என்னிடமிருந்து கவர்ந்துகொள்ள நினைத்து முற்றுகையிட்டுப் பெரும் போர் செய்யத் துணிந்து எண்ணற்ற படைஞரோடு என் நகர்ப்புறத்தே இருப்பவன் எனக்குப் பகைவனுகாமல் வேறு என்னவன்?

கோவூர் கிழார்:—இஃது ஓர் அதிசயமே! அவர் உம் பகைவரேயா யிருப்பினும் இருக்க. அவர் பனம்பூ மாலை புனையும் சேரர் குடியிற் பிறந்தார் அல்லர். வேம்பின் மலர்மாலை சூடும் பாண்டியர் குடியிற் பிறந்தார் அல்லர். உம்முடைய மாலையும் ஆத்திப் பூவாலாகியதே. அவருடைய மாலையும் ஆத்திப் பூவாலாகியதே. நும் இருவருள் எவர் தோற்பினும், தோல்வி நும்மிருவர்க்கும் பொதுவாகிய சோழர் குடிக்கே வருவது. நீவிர் இருவீரும் வெற்றி பெறலாம் என்பது இயற்கையு மன்று. அதனால், நீவிர் செய்யும் செயல் நும் குடிமைக்குத் தக்கதன்றும். உம்மிருவரது பகைமைச் செயல் பிற அரசர் செவிப்படுமாயின், அவர்க்கெல்லாம் பெரு மகிழ்ச்சியை விளைவிக்கும். ஆகையால், இப்பொழுதே போரை நிறுத்தி அவரோடு சமாதானம் செய்துகொள்க.

நெடுங்கிள்ளி:—புலவரே, நீவிர் கூறுவது முறையே யாயினும், எளியான் வலியானிடம் சமாதானத்திற்குச் செல்வது எவ்வளவு ஈனமென்பதையும் அவன் தான்

எண்ணியது பெற வியலாது என்பதையும் நீவிர் அறிவீர். ஆகையால், இங்கிருந்து மறைவாக ஆவூர் அரணுக்குச் சென்றுவிடுகின்றேன். நீவிர் இங்குச் சிறிது நேரம் இருந்து கதவுகளைத் திறப்பித்துக் குடிகளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாவாறு பார்த்துக்கொள்ளும். பிறகு சந்தர்ப்பம் வாய்த்தபோது ஆவூர் வந்து சேரவும் வேண்டுகிறேன்.

கோவூர் கிழார் :—நலங்கிள்ளியார் நல்லிசைப் புலமை வாய்ந்தவர்; என்னிடமும் சிறந்த அன்புடையார். வீணே உமது நாட்டவர்க்கு நஷ்டம் விளையாதவாறு நான் அவரிடம் சொல்லத் தக்க அறவுரைகளைச் சொல்கின்றேன்.

பிறகு நெடுங்கிள்ளி மறைவாக ஆவூர் போய்ச் சேர்ந்தான். நலங்கிள்ளி மறு கணமே அரணுக்குட் புகுந்து, கோவூர் கிழாரால் உண்மையை யுணர்ந்துகொண்டான்; மாவளத்தாணை உறையூரில் நிறுத்திவிட்டுத் தான் பெரும்படையோடு ஆவூர் சென்றான். இவன் இவ்வண்ணம் செய்யத் துணிந்ததை யறிந்த கோவூர் கிழாரும் தொடர்ந்து சென்றார். அங்கும் முற்றுகை பலமாக நடந்தது. அங்கு நடைபெறும் விஷயங்களைக் கோவூர் கிழார் பார்த்துக்கொண்டிருந்தார்; பிறகு மக்கள் படுந் துன்பம் பொறாராய் மறைவழி யொன்றால் அரணுக்குள் நுழைந்து, நெடுங்கிள்ளியைக் கண்டார். அங்கு மக்களும் மாக்களும் படுந் துன்பத்தை மதியாது அவன் அரண்மனைக்குள் இருப்பது பார்த்துப் பொறாயினர்; பின் வருந் கருத்தமைந்த பாடலைப் பாடினர்:

"பகைவர் நெருங்கற்கரிய வலிமை படைத்த வீரர் குடியிலே பிறந்த நெடுங்கிள்ளியே, நின் நாட்டு அரணகத்தே, பெரிய களிறுகள் தத்தம் பிடிகளோடு சென்று குளங்களில்

நீராடாமலும் நெய்யொடு கலந்த சோறுண்ணுமலும் கட்டுத் தறிகளிலே கட்டுண்டு நிலத்திலே கையைப் புரட்டிக் கொண்டு வருந்துகின்றன. அவை தம் துயரைப் பிறர்க்கறி விப்பன போல வெய்துயிர்த்து, முழங்குகின்றன. குழவிகள் தம் தாய்மாரிடம் பால் பெறுமல் அலறுகின்றன. பெண்டிர் மங்களக் குறியாகப் பூவைச் சூடாமல் வறுந்தலையை முடிக் கின்றனர். பெரிய மாளிகைகளில் வாழ்வோர் உண்ணு நீர் பெறுமல் அழுது அரற்றுகின்றனர். இந்நிலையைக் கண் ணுற் கண்டும் காணுதவன் போல நீ அடைத்திருத்தல் மிகக் கொடிதே. நீ அறத்தைக் கருதுவாயாயின், "நலங்கிள்ளி, இங்ஙாடு நினதே;கொள்க," என்று கூறிக் கதவைத் திறந்திடு வாயாக. வீரம் உடையையாய் இருப்பாயாயின், போர் புரியத் துணிந்து கதவைத் திறந்து வெளிப்படுக. இவ்விரு முறை களையும் மறந்து, இப்பேரரணினுள் ஒரு மூலையில் நீ ஒடுங் கிக் கிடப்பது பார்ப்போர் பரிகசிக்கவும் நீ தலை குனிந்து நாணமுறவும் தக்க செயலாம்." *

இதனைக் கேட்ட நெடுங்கிள்ளி சுடுசொற் பொருதும், போர்க்கெழுந் தெரிய மின்றியும், கோவூர் கிழாரையும் தன்னை யண்டியிருந்த பிறபுலவரையும் அங்கே நிறுத்தி, மறைவாக அரணுக்குப் புறம் போந்து, பிற மன்னர் எவ ரிடமேனும் துணைபெற்று வரலாம் என்று ஓடினன். இச் செய்தியை ஒற்றரால் அறிந்த நலங்கிள்ளி அவன் ஓடுந் திசையில் தன் படையைச் செலுத்தி அவனை விரைந்து தொடர்ந்து சென்று, காரியாறு என்ற சிற்றாற்புறத்தே கண்டனன். அங்கு நெடுங்கிள்ளி சில உதவிகள் பெற்றுப் படைகளும் திரட்டிக்கொண்டு போர்க்கு எதிர்த்து நின் றனன். ஏழு நாள் இரவொழியப் பகலெல்லாம் கொடும்

* புறநானூறு - செய், 44.

போர் நிகழ்ந்தது. மாவளத்தான் உறையூரையும் ஆவூரையும் காவல் செய்துகொண்டு அங்கு இருந்தான். கலங்கிள்ளி ஒருவனே தனி நின்று நெடுங்கிள்ளியொடு அறப் போர் புரிந்து, அவனைத் தன் வாட்படையாற் சுவர்க்கம் புகச் செய்தனன்.

நெடுங்கிள்ளியும் இரண்டுமுறை புறங்கொடுத்த பழியும் அரணுள் அடைத்திருந்த குறையும் தீர வீரத்தோடு எதிர்த்து நின்று போர் புரிந்து, தான் பிறந்த குடிக்குத் தன்னால் இழிவு நேரிடா வண்ணம் காத்து, விழுப்புண் பட்ட மார்பினனாகி, விண்ணக வேந்தன் அவைக்களத்து விருந்தினனாகச் சென்றான். கலங்கிள்ளி அப்போர் நிகழ்ச்சியை முடித்துவிட்டு மீண்டு மாவளத்தானிடம் உறையூர் வந்து சேர்ந்தான். பின்னர்ப் பாண்டிய மன்னனது போர்முயற்சிகளை யடக்கத்தக்க செயல்கள் எவ்வண்ணம் செய்வது என ஆலோசித்து, கலங்கிள்ளியே தனித்துப் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து செல்வதெனத் தீர்மானித்தனர்.

III

போர் புரிவதின் மிக்க பயிற்சியும் மேன்மேல் வளரும் விருப்புமுடைய நலங்கிள்ளி, பாண்டிநாடு நோக்கிப் பெருமபடையோடு சென்றான். அந்நாளிலே பாண்டிய மன்னனு யிருந்தவன், தன் முன்னோர் நாளிலிருந்து தனக்குக் கிடைத்த நாடுகளே ஆண்டு அமையாமல், மேலும் நாடுகள் சேர்க்கக் கருதிச் சேர மன்னரைத் துணை சேர்த்துக்கொண்டு சோழ நாட்டைக் கைக்கொண்டு, பின்னர் மற்ற நாடுகளுக்கும் செல்வோம் என எண்ணியிருந்தான். அவன் எண்ணிய எண்ணத்தை ஒற்றரால் அறிந்த நலங்கிள்ளி, தன் படைகளே அணி வகுத்து நடத்திக்கொண்டு உறையூர் நீங்கிப் புறப்பட்ட இரண்டு நாட்களிற் பாண்டியநாட் டெல்லைக்குள் வந்தான். அங்குக் காவலாயிருந்த படைஞர் எதிர்த்து நின்று கடும் போர் தொடுத்தனர்.

நலங்கிள்ளி, போர் வேண்டியே முன் வந்துளானுகையால், பாண்டியநாட்டு மறவரும் அவர்தம் படைத் தலைவரும் தன் ஆண்மையையும் போர்த் திறத்தையும் அறிந்து வியப்புறுமாறு வில், வேல், வாள் முதலிய பல வகைப் படைகளையும் தாங்கிய படைஞரை யணிவகுத்து நிறுத்திப் போர் புரிந்தான். ஒரு பொழுதிலே பாண்டிய மறவர் தோல்வியுற்றனர்; தாம் பரிபவப்பட்ட செய்தியைச் சொல்லச் செல்வார் போன்று அவர் தம்மரசன்

இருந்த மதுரை நகர் நோக்கி யோடினர். இதனை யறிந்த நலங்கிள்ளியின் அங்கிருந்த அரண்களை ஒவ்வொன்றாகக் கைப்பற்றத் தொடங்கினன். அரண் காவலர் தம் தலைவர் இருந்த இடம் தெரியாது மறைந்ததால், ஒன்றும் செய்யத் தோன்றாது போரெதிர்த்து நிற்கலாற்றாது புறங் கொடுத்தனர். இந்நிலைமை நேரிட்டது கண்ட நலங்கிள்ளி, அவ்வாறு தன் கையில் அகப்பட்ட ஏழு அரண்களைப் பற்றிக்கொண்டு, அவற்றின் கொடி நிலைகளிற் புலிக்கொடி பறக்க விட்டான்; மீனக் கொடிகளை அறுத்துக் குவித்தான்.

பாண்டிய மன்னன் இச்செய்தியெல்லாம் கேட்டு, வஞ்சி மன்னன் துணை கொண்டு, விரைவிலே போர் தொடுக்க வந்தான். அவ்விரு பேரரசர் படைகளும், நலங்கிள்ளியின் போர்த்திறத்திற்காற்றாது, மூன்று நாட்களிலே பின்னிடைந்தன. பின்பு அவ்விருவரும் அவனோடு சமாதானம் செய்துகொண்டு, அவன் ஆட்சிக்கு அடங்கியதற் கறிகுறியாகத் தம் நாடு நகரங்களிற் புலிக்கொடி பறக்கச் செய்வதாகக் கூறி, வணங்கி விடை பெற்றுச் சென்றனர். இவ்வளவும் செய்து மனம் பூரித்த அம்மன்னன், சோழன் நலங்கிள்ளி என்று நாட்டார் எவரும் பாராட்ட உறையூர் நோக்கித் திரும்புவான் ஆனான்.

அங்கு நாடு காவல் செய்திருந்த மாவளத்தான், புலவர் பலரொடு நகர்க்குப் புறத்தே வந்து, தன் முன்னோனை யெதிர்கொண்டு, அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். நலங்கிள்ளி அரண்மனை யகத்தே சென்று, தெய்வந் தொழுது, தான் செய்வதற்குரிய தருமங்களைச்

செய்தான். மாலைக் காலத்திலே புல்வரும் அறிஞரும் முதியோரும் இளைஞரும் ஆகிய நன்மக்கள் பலர் அரசர் பெருமானைக் காண வேண்டும் என்னும் அவாவினோடு திருவோலக்க மண்டபத்தை நெருங்கினர். அதனை யறிந்த மாவளத்தான், நலங்கிள்ளியிடம் தெரிவித்தான். அவனும் நெடுநாளாகப் போர்க்களத்திலேயே இருந்து, நாட்டு மக்களோடு அளவளாவி அவர்கட்கு வேண்டு வனவற்றை அறிந்துகொள்ளக் கூடாதிருந்ததால், "இன்று எல்லோரையுங் கண்டு அவரவர் கருத்தையும் அறிந்துகொள்வோம்," என எண்ணினான்; ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தாரும் இன்று தத்தமக்குரிய தானங்களில் வந்திருக்கவெனவும், நாட்டு மக்களெல்லாம் தமக்குள்ள குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு வருகவெனவும் ஆணை பிறப்பித்தான். அதற்கிணங்கப் பலதிறமக்களும் திருவோலக்க மண்டபம் அடைந்தனர்.

அயல் நாடுகளிற் சென்று வெற்றி பெற்று வந்திருக்கும் தம் அரசனைக் காண விழைந்து அங்கு வந்திருந்த பலரும், 'அவன் எப்பொழுது வருவான்?' என்று மிக்க ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர். மண்டபமுழுவதும் இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பெற்றன. அரசனுக்கென உயரிய அரியணைகள் இரண்டு இடப் பெற்றிருந்தன. அமைச்சர்க்கும் புலவர்க்கும் பிற அறிஞர்க்கும் அரசிருக்கைக்கு அருகிலே சில தாழ்ந்த ஆதனங்கள் இடப்பட்டிருந்தன. நாற்புற வாயில்களிலும் காவலர் உருவிய வாளுடன் நின்றனர். அரண்மனையகத்திலிருந்துவரும் வாயிலிலே திரையொன்று இடப் பட்டிருந்தது. துகிற்கொடிகள் பலப்பல வருவுடன் நாற்

நிசைகளிலும் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்தன. வாயில்களில் வாழை கமுகுகள் நாட்டப்பட்டிருந்தன. மாவிலைத் தோரணங்களும் உரிய இடங்களிற் கட்டப்பட்டிருந்தன. பொன்னனியன்ற பூரண கும்பங்களை அந்தணர் இருவர் ஏந்தி நின்றனர். மலர்களை அழகுறத் தொடுத்து இணைத்த செண்டுகளை அறிஞர் சிலர் ஏந்தியிருந்தனர். அமைச்சரும் பிறரும் மலர் மாலிகைகள் கரங்களிற் கொண்டிருந்தனர்.

இங்கிலியில் இவர் அனைவரும் எதிர்பார்த்திருக்கையிற் புரவலர் பெருமகனாகிய நலங்கிள்ளி, தன் இளவலாகிய மாவளத்தான் உடன் வரப் பதினெண் வாத்திய முழக்கத்திடையே பகல் தீவர்த்தி பிடிப்பார் பக்கங்களில் வர, மெல்ல நடந்து, திரையிட்டிருந்த வாயில் வழியே வந்தனன். மறைவிலிருந்த ஏவலரால் திரைகள் நீக்கப் படவே, அரசர் பிரான் அங்கிருந்த நல்லோர் பலர்க்கும் காட்சி கொடுத்தனன். மலர்கள், விண்ணிலிருந்து வீழ் வனபோல, அவன்மீது சொரியப் பெற்றன. மாலைகள் முறையே சூட்டப் பெற்றன. மலர்த் தொடையல்கள் அரசன் கரத்தை அழகு செய்தன. மண்டபத்திலிருந்தோர் அனைவரும் தம் அரசன் வந்ததும் எழுந்து நின்று அவன் அரியணையில் அமர்ந்து, 'எல்லோரும் அமர்க,' எனக் கையமைத்த பின்பு அமரலாயினர். அருகிலிருந்த அரியணையிலே மாவளத்தான் அமர்ந்தான். அமைச்சரும் புலவரும் பிறரும் தத்தமக்கென அமைந்த இருக்கைகளில் இருந்தனர். பிறகு அரசன் சபையினரைப் பார்த்து, முக மலர்ச்சியோடு பேசத் தொடங்கினன்:

"அமைச்சர்காள், புலவர்காள், எமது மரபினிடத்தே அன்பு பூண்ட பெரியீர்காள், இந்நாள்காறும் யாம் போர்க் களமே உறையுளாகக் கொண்டு எம்மைப்

பகைத்த பிற அரசரை அடக்கச் சென்றிருந்தோம். நும் போன்ற நல்லோர்களோடு, விசேஷமாகப் புலமைச் செல் வர்களோடு, அளவளாவி யிருத்தலில் எமக்கு அதிக விருப்ப முளதென்பதை யாம் கூற வேண்டா. போர் முயற்சி இவ்வளவோடு நின்றதாகவும் கூறுதற்கில்லை. நாட்டின் மக்கள் அமைதியோடு வாழ்ந்து நால்வகை உறுதிப் பொருள்களிலும் நாட்ட முடையராய் இருக்க வேண்டுவன செய்தல் எம் பொறுப்பேயாதலால், நுமக் கெம்மால் இயன்றன செய்து, உண்மையில் நல்லோர் அன்புக்குப் பாத்திரமாக வேண்டு மென்பதே எம் நோக் கம். இன்னும் வட நாட்டிலே சில மன்னர் எம் வாழ்விற் பொருமை கொண்டு, இயன்றவளவு முயன்று, எமக் கும் எம் நாட்டுக்கும் தீங்கிழைக்க எண்ணியுளரென ஒற்றரால் அறிவோம். இன்று நம் மரபுக்கும் நாட்டுக்கும் நமக்கும் நன்மை பயக்கத்தக்கனவாய் நீவிர் கூறத்தக்கவை எவையேனும் இருப்பின், இங்கு வெளியிட்டுரைக்க வேண்டுகின்றோம். யாம் போர் கருதி அயல் நாடு செல்ல நேருமாயினும், எம் இளையோர் இங்கேயிருந்து அரசப் பொறை தாங்கியிருப்பார். நுமக்கு நன்மையாகத் தோன்றுவதே எமக்கும் நன்மையாம் என உறுதி கூறு கிறோம்.''

அவைக்களத்தே அறிஞர் பலர் அமர்ந்திருந்தன ராகையால், அவருள எவர் முதற்கண் எழுந்து பேசு வது என்று சிறிது நேரம் ஆலோசனை நிகழ்ந்தது. பிறகு மன்னர் பலராலும் பாராட்டப்பெற்ற கோவூர் கிழார், பலர் வேண்டுகோட் கிணங்கி யெழுந்து நின்று, தம் கருத்தை வெளியிடலாயினர்:

கோவூர் கிழார்:—அரசர் பெருந்தகையே, அருந் தமிழ்ப் புலமை படைத்த அண்ணல், வில் வேல் வாள் தாங்கிப் போரியற்றும் வீரர்தலைமணியே, புலவர் புகழத் தக்க பலவகைக் குணங்களும் பொருந்திய நின் முன்னர் நின்று யாம் யாது கூற வல்லேம்? பாண்டியரும் சேரரும் தலை வணங்க வென்று வந்த செயலைப் பாராட்டுகமோ? உறையூரை முன்னாளிலிருந்தது போலச் சோழ மன்னர் இராஜதானி நகரமாக்கிய பெரு முயற்சியைப் பாராட்டு கமோ? எதைக் கூறுவதாயினும், நின் புகழ் எம் உரை யின் அளவில் அடங்குவதன்று. ஆயினும், சமீபகாலத் தில் இத்தமிழ் நாட்டிலே நின்னால் இயன்றிருக்கும் செயல் களைப் புலவராகிய யாம் பாராட்டாதிருத்தல் இயலாது. இந்நாட்டில் யாற்றோரங்களில் உள்ள பூஞ்சோலைகளில் தம் மன மகிழ்ச்சி மீதூர ஆடவரும் பெண்டிரும் மணல் மேடுகளிலே புதுப் பூம்பள்ளிகளில் நிகழ்த்தச் செய்த திருவிழாக்களின் சிறப்பை என்னென்று புகழ்வோம்! அவற்றினும் சிறப்பு மிகப் போர் விழா இயற்றிப் பாண்டிய மன்னனையும் சேர மன்னனையும் வென்று போர்க்களப் பாசறையிலே பாணர்க்கு ஊன் சோறு அருத்திய திரு விழா இன்று யாம் புகழற்குரியதாம். பாண்டிய நாடு எத் தன்மைத்தென்று இங்குளார்க்குக் கூறுவேம்: காட்டில் வாழும் வேட்டுவன் மான்றசை கொணர்ந்து நாட்டில் வாழ்வோர்க்குக் கொடுப்பான். அவன் தசை கொண்டு வந்த கூடை நிறைய உழவர் பெருமக்கள் மனைத்தலைவியர் நெல்லை அளந்து பெய்து அனுப்புவர். அவ்வண்ணமே ஆயர்மகளிரிடம் தயிர் வாங்கிக்கொண்டு அதற்கு மாறாக அவர்கள் தயிர்ப்பானை நிறைய நெல்லை அளந்திடுவர். இத்

தகைய செழிப்பு மிக்க பாண்டிய நாட்டினை வென்று ஆங்குள்ள ஏழு அரண்களிலே புலிப்பொறி பொறித்துப் புலிக்கொடி நாட்டி வந்திருக்கின்றாய். மன்னர் பெருமை, நின் பெருமையை அளந்துரைத்தல் எம்மால் இயலுமோ? அவைக்களப் பெரியீர்காள், எம்போன்ற புலமைச் சுற்றத்தார் அடிகலங் கொணர்ந்து பொருள் வேண்டுவோமாயின், இம்மன்னர் பிரான் வஞ்சிமா நகரையே எமக்குப் பரிசிலாய்த் தருவன். விறலியர் இம்மன்னன் முன்னே பாடியாடி வருவராயின், அவர்கட்குப் பூவிலையாக மாட மதுரையும் தருவன். பரிசில் பெற்று வாழ்வதே வாழ்வாகவுடைய புலவீர்காள், இவன் புகழைப் பின்வரும் நல்கள் நன்குணருமாறு பாடுவோம்; வாரீர். இம்மன்னனது ஆண்மையின் பயனுகப் பழமையான இத்தமிழ் நாட்டின் உரிமையெல்லாம் குயச்சிரூர் திகிரியில் வைத்த பச்சைமண்போல நீ நினைத்த வண்ணமெல்லாம் ஆகக்கூடிய தாய் உள்ளது. அரசே, இத்துணையும் கூறியும் எம் உள்ளக்கிடக்கை யனைத்தும் கூறியதாய் அமையவில்லை. அறிஞர் சிறப்பித்துக் கூறும் உறுதிப்பொருள்களில் உலகிற் பெறுவன மூன்று: அவை அறம் பொருள் இன்பம் என்பன. பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே அமைத்துக் கூறப்படுவதுபோலப் பாண்டியர் குடையும் சேரர் குடையும் பிற்பட ஓங்கிய ஒரு வெண் குடை சந்திரன்போல விண்ணகத்தே தோன்றித் தமிழகமெல்லாம் நிழல் செய்ய, நீ அரசு புரிவை. நல்லிசை பெற விழைந்து போர் வெல்லுதற்குரிய பாசறையி லல்லது பிற இடங்களில் நீ தங்குவதுமில்லை. பகைவர்களது மதில்களைக் குத்திப் பாயும் நின்

களிறுகள், தம் கொம்புகள் மழுங்கினும் அடங்கில. போர் என்று கேட்ட வளவிலே மிக்க மகிழ்ச்சியோடு முன் வரும் நின் மறவர், "நீ போர் புரியச் செல்லும் நாடுகள் அதிக தூரத்திலுள்ளன. காடுகள் பல இடையேயுள," என்று கூறிப் பின்னிடைவதில்லை. நின் படைஞர் அயல் நாடுகளிலே நீலையாக விருந்து போர் புரிவதிலும் துணிவு மிகவுடையார். குண கடல் குட கடல் என்ற இரண்டு எல்லைக்குட்பட்ட நாட்டில் எல்லாம் நின் பாய்மா விரைந்து செல்கின்றது. அது நிலத்தை வலம் வரத் தொடங்கி வடக்கு நோக்கி வந்துவிடுமோ என்று வட நாட்டு மன்னர்கள் அஞ்சி நடுங்கி, இரவிலும் துயிலாதிருக்கின்றனர் என்று அறிகிறோம். மன்னர் மன்னனாம் எங்கடையினும், அரசரால் மதிக்கப்படுவது உண்டேயாயினும், புலமை சிறப்பப் படைத்த புரவலனாகிய நின்னுடைய ஆதரவையே பெரியதெனக் கருதுகின்றோம்."

இவ்வண்ணம் தம் கருத்தை வெளியிட்ட பிறகு கோவூர் கிழார் அரசனை மனமார வாழ்த்தித் தம் இருக்கையில் அமர்ந்தனர்.

பின்னர் உறையூர்ப் பெரும்புலவராகிய முதுகண்ணன் சாத்தனர் எழுந்து, அரசனை நாவார வாழ்த்தித் தம் உள்ளக் கிடக்கையை வெளியிடத் தொடங்கினர்:

"உலக வேந்தே, கடலகத்தே அயல் நாடுகளிலிருந்து அரும்பொருள்களை வாரி வந்த மரக்கலங்கள் பாய்களை யவிழ்க்காமலே கரையருகு நெருங்கி நிற்கப் பரதவரும் அளவரும் அவற்றிலுள்ள பொருள்களை அக நகரத்தார் கொள்ளுமாறு எடுத்து வரும் சிறப்பு மிக்க புகார் நகரத்

துப் பெருமன்னர் குடியிற் பிறந்த பேர்ரசே, வான வீதி யிலுள்ள செஞ்ஞாயிற்றின் நிலை செலவு இயக்கம் அதனைச் சூழ்ந்த மண்டிலம் முதலிய மறைபொருள்களையும் காற்றின் இயக்கமும் ஆகாயத்தின் தன்மையும் இவ் வண்ணமாம் என்னும் உண்மைகளையும் நேரிலே சென்று அளந்தறிந்தோர் போன்று கூற வல்ல அறிஞர் உளர். அத்தன்மையுள்ள நுட்பவறிவினரும் நின் உள்ளக் கருத்தையும் வலிமைத் திறத்தையும் இன்ன நிலையி லிருக்கும் என அளவிட் வறியார். தனக்குத் தீங்கியற் றிய வொருவனுக்குத் தீங்கு பின்னர் இயற்ற வேண்டு மென்று நெடுநாளாயினும் மறவாது நினைவுற்றிருக்கும் களிறு, அவன் எறிந்த கல்லையே தன் கவுளில் அடக்கி வைத்திருந்து சமயம் எதிர்பார்த்திருக்கும் என்று கூறு வர். அக்களிற்றின் கவுளில் அடங்கிய கற்போன்றனவே நின் உள்ளக் கிடக்கையும் வலிமையின் அளவும். ஆகை யால், நின்னை எம் போன்றூர் எங்ஙனம் வெளிப்படப் புகழ்ந்து பாடவல்லாராவர்? அரசரேறே, நினது நாளோ லக்கத்திலே, பொன்னையன்ற தாமரைப் பூ மாலையை யணிந்த பாணர் சூழ்ந்து வருவாராக. நின் அரண்மனை முற்றத்திலே முரசு முழங்க நீயும் கொடியோரைத் தண் டித்து நல்லோரை ஆதரிப்பதிற் சோம்பலின்றி வாழ்வா யாக. நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் இல்லை யென்று துணிந்துரைக்கும் நாத்திகர்க்கு நீ நண்பனாகா திருப்பாயாக. நின் செயலெல்லாம் நின்னை நாடி வரு வோர்க்கு நன்மை யியற்றுவதாகவே இருப்பதாக. விழா விலே ஆடி வரும் கூத்தர் வேடம் போன்று தோன்றித் தோன்றி மறையும் வாழ்வுடைய இவ்வுலகிலே நின்னைச்

சார்ந்தோர் மகிழ்ச்சி மிக்கு வாழ்வாராக. நீ பாது காத்த பொருட் குவையெல்லாம் நல்வழியிற் செல விடப் பெறுவதாற் புகழ் பெறுக. அரசரேறே, நின் பகைவரெல்லாம் காட்டின்கண்ணே மறைந்தனர். நீயோ வருவோர்க்கெல்லாம் வழங்க வல்ல அறச்செயல் பூண்டு அக நாட்டின்கண் இருக்கின்றாய். ஆகையால், நின் செல்வம் அறம் பொருள் இன்பம் என்ற மூப்பய னையும் தரும். நின் நலத்துக்கு உதவாமையே அப்பொரு ளின் இறையாம். தாமரை மலரில் அமைந்த நாறு இதழ்களும் அழகாலும் மணத்தாலும் ஒன்றற்கொன்று இணையாய் இருத்தல் போல, அறிவு ஆண்மை வீரம் முதலியவற்றால் ஒருவர்க்கொருவர் இளையாத உயர் குடிப் பிறப்படைந்து வீற்றிருந்த மன்னர் வரலாறு களைப்பற்றி ஆராயும்போது, புலவராற் புகழப் பெறும் உரையும் பாடலும் பெற்றோர் மிகச் சிலரே. ஒரு பயனு மின்றித் தோன்றி யழியும் தாமரையிலைபோல மாய்ந் தோரே பலராவர். புலவராற் புகழப் பெறும் பேறு பெற்றார், தம் வினைப் பயனால் இவ்வுலகில் நுகர்தற் குரிய போகங்களை அனுபவித்த பிற்பாடு தேவ விமானங் களில் அமர்ந்து தெய்வலோகம் சேர்ந்து உயர்ந்த இன்ப மடைந்து வாழ்வர் என்று பெரியோர் கூறுவர். எந்தாய், சேட்சென்னி நலங்கிள்ளி, தெய்தலும் வளர்தலும் இறத்தலும் பிறத்தலும் இவ்வண்ணமாமென அறியாத வரும் அறிந்துகொள்ளுமாறு வெளிப்படக் காட்டித் திங்கட் செல்வன் திரியும் உலகத்திலே ஒன்றும் செய்ய இயலாதவரே யாயினும், ஒன்று வல்லவரேயாயினும், வறுமையால் வருந்தி வருவராயின், அவரது மருங்கு

நோக்கி, உள்ள மிரங்கி, அவர் குறையைப் போக்கி அருள வல்லவனு யிருப்பாயாக. நின் பகைவரே அவ் வண்ணம் அருள் புரிந்து புகழ் பெற வியலாதவராய் அழிக. மறைப் பொருளும் அறமும் உள்ள வளவும் நினது மரபு இவ்வுலகில் நிலைக்க, நீ நீடு வாழ்க.''

இவ்வண்ணம் தம் மனமார வாழ்த்திவிட்டு அவ ரும் ஆதனத்தமர்ந்தார்.

பிறகு தாமப்பல் கண்ணனார் என்ற புலவர் எழுந்து, "மன்னர் மன்னரே, நும் குடிப்புகழ் இன்று தோன்றியதன்றே! தொன்று மூத்த குடியிற்றோன்றிய நீர் நும் இளைய சோதரரோடும் மனம் ஒருமித்துச் சோழ நாடனைத்தும் ஒரு குடைக்கீழ்க் கொணரக் கருதி முதற்கண் நெடுங்கிள்ளியோடு போர் புரிந்து, பிறகு எதிர்த்து நின்ற பிற மன்னரையும் வென்று அடக்கி, அவர் நும்மை வணங்கி வாழச் செய்தீர். நும் புகழ் எங்கெங்கும் பரவுக. செங்கோன்மைக்கும் அறச் சிறப்புக்கும் இயல்பிலேயே பெரும்புகழ் படைத்த நும் மரபினர்க்கு யாம் கூறவுரியது என்ன வுளது? புதுமை யாய்க் கைக்கொண்ட நாடுகளிலும் முன்னே உரிமை யாய்க் கொண்டிருக்கும் நாடுகளிலும் வாழும் மக்கள் தம் அரசரிடம் சிறந்த அன்பு பூணுமாறு அவர்க்கு அவ்வக் காலங்களில் வேண்டும் நலங்களே யெல்லாம் இயற்றி வாழ்வீராக. காவிரிக் கரை சில இடங்களிற் செப்பனிட வேண்டியிருக்கிறது. தமிழகத்திலுள்ள நாடுகளினூடே செல்லும் சாலைகள் வருவார் போ வார்க்கு நிழல்தரும் மரமில்லாக் குறையை விளக்குகின் றன. நீர் வருவாயை நிலங்களுக்குப் பயன் படுத்துப்

சில நீர் நிலைகளில் தக்க கரைகளின்மையாற் பெருமழை யுண்டாங் காலங்களிலே உடைத்தோடி நாட்டுக்குத் தீங்கு விளைக்கின்றது. முன்னாளிலே வெட்டுண்ட சில வாய்க்கால்கள் பல இடங்களிலே வேண்டுமளவு ஆழ மின்றித் தூர்ந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் தக்கவாறு கவனிக்கும் வண்ணம் உரிய அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பிக்க வேண்டுகின்றோம்,'' என்று கூறி அமர்ந்தார்.

மூதியவர் ஒருவர் எழுந்து, ''நம் நாட்டுக் கலைச் செல்வம் நாடெங்கும் ஓங்கி வளரக் கலாசாலைகளும் அமைக்க வேண்டும்,'' என்று கூறித் தம் கருத்தை வெளியிட்டார்.

பின்பு மாவளத்தான் தன் ஆதனத்திலிருந்து எழுந்து, பின் வருமாறு பேசினன்: ''அறிஞர்காள், அரசரே, யான் கூறவுரியதும் ஒன்று உண்டு. இந்நாள்காறும் அரசர்பிரான் போரிலே ஊக்கம் மிகுதியும் உடையராய் அயல் நாடுகட்கே சென்றுகொண் டிருந்தாராகையால், என் நண்பர் தாமப்பல் கண்ணனார் தெரிவித்த குறைக ளெல்லாம் இந்நாட்டிலே தோன்றலாயின. இனி அரசர் முன்போல அதிகமாகப் போர் செய்யக் கருதி அயல்நாடு செல்லாராகையாலும், அப்படிச் செல்வராயினும் யான் அவரது ஆணைபெற்று வேண்டுவனவெல்லாம் நிறைவேற் றக் கூடுமாகையாலும், நாட்டின் நலத்தை வளர்க்க என் னென்ன அவசியமோ அவையெல்லாம் இனி ஒவ்வொன் றாகச் செய்யப்படும். உறையூரிலே ஆயிர மாணவர் பயி லத்தக்கதொரு தமிழ்க் கலாசாலை நடைபெற்று வருகின் றது. நம் நாட்டுப் புலவருட் சிறந்தார் பலர் அங்குக்

கணக்காயராய் இருக்கின்றனர். அடுத்துள்ள வூர்களி லும் சிறு சிறு கலாசாலைகள் நாட்டுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. புலவர் கூறிய மற்றக் குறைகள் எல்லாம் நாளடைவிலே மறையும் வண் ணம் வேண்டுவன செய்வேன்.''

சபையோர் கருத்துக்களையும் இளையோன் கூறிய கூற்றுக்களையும் ஆராய்ந்தறிந்த நலங்கிள்ளி, அங்கிருந் தார் அனைவரையும் முக மலர்ச்சியோடு நோக்கி, "அன் பர்காள், அறிஞர்காள், அரசராயிருப்போர் தமக்கு இருப்பதைக் கொண்டு அமைந்திருக்கலாகா தென்பதும், போரியற்றி அயன் மன்னரை வென்று பொருள் ஈட்டு வது அவர்க்கு அறமாம் என்பதும், அவ்வண்ணம் ஈட் டிய பொருளை நல்வழியிற் பயன்படுத்த வேண்டும் என்ப தும் நும் கருத்தென அறிகின்றேம். யாமாகப் போரை இனி வருவியோம்; எவர் நாட்டையும் கைக்கொள்ளக் கருதோம். ஆனல், எவரேனும் எம் வாழ்வில் அழுக் காறு கொண்டு தீமை செய்ய முயல்வராயின், அவரைத் தண்டிக்க வேண்டி யாம் போருக்கு எழாதிருத்தல் இய லாது. இனி எம் முன்னோர் செய்ததுபோல இங்கிருந்தே அரசியற் கருமம் பூண்டிருந்து, தமிழ் மொழியிற் புலமை படைத்த பெரியாரோடு அளவளாவி இன்புற்றிருக்கவே கருதியுளோம். அறமும் மறமும் ஒன்றற்கொன் றுத வியேயாம். யாம் போர்த் தொழிலே மறந்து, அமைதி கொள்வோமாயின், அயல் நாட்டார் நாம் இயற்றும் அறங்களையும் அழிக்க வழி தேடுவர். ஆகையால், நும் கருத்துக் கிணங்க அறநெறி நின்று நாட்டுக்கு நலம் புரிய முயல்வோம். எம்மிடம் அன்பு பூண்டு நெடுந்தூரத்தி

ஆள்ள தம்மூர்களிலிருந்து இங்கு வந்திருக்கும் பலர்க்கும் எம் மனமார்ந்த நன்றியுரைகள் உரியனவாக. அரசியன் முறையிலே எப்பொழுதேனும் தங்கள் மனத்துக்குக் குறை புலப்படுமாயின், எம்மிடம் நேரில்வந்து கூசாமற் கூறிக்கொள்ளலாம். இனி நீவிர் எல்லீரும் விடை பெறலாம்,'' என்று கூறினன்.

பின்னர் முன்போலவே பலவகை வாத்தியகோஷங்களுக்கிடையில் அச்சபை கலைந்தது. வந்திருந்தோர் அனைவரும் தத்தம் இடங்களுக்கேகினர். அரசரும் அமைச்சரும் புலவருட் சிலரும் அரண்மனைக்குட் சென்றனர்.

IV

புலமைச் செல்வம் படைத்த கோவூர் கிழார் சோழன் நலங்கிள்ளியிடம் விடை பெற்றுப் பாண்டி நாடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்; வழியிலே போர் நிகழ்ச்சியால் ஏற்பட்ட மாறுபாடுகளைக் கவனித்துக் கொண்டே சென்றார்; காவிரிப் பெருக்கால் நிலமெல்லாம் வளம்படைத்திருப்பதைக் கண் குளிரக் கண்டார். உழவர்கள் ஒரு வகைக் கவலையுமின்றி நிலத்திற் செய்தற் குரிய பணிகளைப் புரிந்துகொண்டிருந்தனர். நடக்கும் வழியோரங்களில் சிறு சிறு செடிகள் நாட்டிக் காவல் செய்யப்பட்டிருப்பது புலவர் கண்ணிற் பட்டது. சாலைகளில் நடக்கும்போது கல்லும் முள்ளும் காலில் தைப்பதை முன்பு பல முறையும் அனுபவித்திருக்கும் அவர், இப்பொழுது வழி செம்மைப் படுத்தப்பட்டிருப்பதாகவும் மேன்மேலும் ஏவலரும் பணியாளரும் செம்மைப் படுத்த முயன்றுகொண்டிருப்பதாகவும் அறிந்தார்.

எங்கு நோக்கினும் பசுமையே தோன்ற விளங்கிய இயற்கை யழகைக் கண்டு, நில மகள் பசும்போர்வை போர்த்தனளோ என்று எண்ணினர். கிழக்கிலே சூரியன் உதித்தது; ஆயிரங் கிரணங்களையும் வீசி முன்னே இருந்த இருட்படலங்களை யோட்டி எங்கும் ஒளி பரப்பியது. இருளெல்லாம் சில அடர்ந்த சோலைகளிற் புகுந்து ஒளிந்துகொண்டன. செங்கதிரோன் அங்குத்

தன் கதிர்களைப் பரப்பவில்லை. தோல்வியுற்ற குறு நில மன்னர் பிறரிடம் சரண் புகுந்தேனும் தாம் உயிருடன் வாழலாம் என்று எண்ணும்போது அவரை மேன்மேலும் துன்புறுத்தலாகாது என ஒரு பேரரசன் அமைதியுற்றதைப்போலத் தோன்றியது. சிற்றுயிர்கள் தம் இயல்புக்கேற்ப உணவு தேடும் முயற்சியில் இருந்தன. வண்டுகளும் ஈக்களும் எறும்புகளும் அருகில் வருவாரைக் கவனியாமலே தத்தம் முயற்சியில் இறங்கியிருந்தன. காட்டு வாழ்வுடைய மான் முதலிய நன்மிருகங்கள் அருகில் உள்ள நீரோடைகளில் தண்ணீர் குடித்து, இளம்புல்லை மேய்ந்துகொண்டிருந்தன. இக்காட்சிகளைக் கண்ட புலவர் உயிர்களெல்லாம் ஒருவகைக் கவலையுமற்று ஒன்றையொன்று அடக்கி யாளவேண்டும் என்ற எண்ணமில்லாது அமைதியோடு தத்தமக்கு வேண்டும் பொருள்களைத் தேடிப் பெற்று இன்புற்றிருக்கும் இவ்வுலகிலே மனிதன் ஒருவனே கவலைக்கெல்லாம் உறைவிடம் ஆயினன் என்று கருதினர்; இறைவனருளை வாழ்த்தி மேற் சென்றார். நரிகள் இரண்டொன்று அவரைக் கண்டு மறைந்தோடின. நச்சரவுகள், வழியிடையிலே காற்று வாங்கிக்கொண்டு படுத்திருந்தவை, புலவர் வரவைக் கண்டதும் மெல்ல நகர்ந்து, அப்பாற் சென்றன. இறைவன் படைப்பில் எவ்வகை உயிராயினும் ஒரு வகைத் தீங்கும் செய்தறியாத தம்மைக் கண்டு அவை ஒளித்துச் செல்வது அவர் மனத்தை வருத்தியது. அவ்வாறு மனிதரைக் கண்டால் அவர் தம்மை வருத்துவரோ என்று கருதுவது பிற பிராணிகளுக்கு இயல்பாகவே யுள்ள குணமோ, மனிதர் கொடுங்குணத்தால் தோன்றியதோ என்று எண்ணமிடலாயினர்.

இவ்வாறு அவர் எதிரில் வருவது இன்னது என்று அறியாமலே தம்மை மறந்து சென்றுகொண்டிருக்கையில் எதிரிலே ஒருவன் வந்தான். அவன் கையில் ஒரு யாழ் இருந்தது. அவன் ஒரு பாணன் என்பதைப் புலவர் அறிந்தார்; உடனே தனியிடத்திலே அகப்பட்ட துணைவனுடன் சம்பாஷிக்கத் தொடங்கினர்:

புலவர்:—ஐய, பாணரே, தும்மை நோக்கினால் நல்ல புரவலரால் ஆதரவு பெறுதவராகத் தோன்றுகின்றது. நீர் எங்கிருந்து எங்குச் செல்கின்றீர்?

பாணர்:—புலவரே, எமக்கு இருப்பேது? செலவேது? நேற்று ஓர் இடத்தில் இருந்தோம்; இன்று இத் திசை நோக்கிச் செல்கின்றோம். நாளை யாம் எங்கிருப் போமோ!

புலவர்:—தும் இனத்தார் எல்லாம் தும்மோடு வருகின்றனரா? இங்கு ஒருவரையும் காண்கிலோமே!

பாணர்:—அவர்க்கு யான் துணை; எனக்கு அவர் துணை. யான் நெடுநாளாகப் பசித்துயர் பொறுத்துப் பயின்று பயின்று நடக்கப் பழகியுளேன். அவர்கள் சிறிது மெல்ல நடந்து பின்னே வருகின்றார்கள்.

புலவர்:—நீர் இப்பொழுது இன்ன இடத்துக்குச் செல்வது என்ற நோக்கமின்றியா சென்றுகொண்டிருக்கின்றீர்?

பாணர்:—இடத்தை நான் எங்ஙனம் உறுதியிடுவது? எங்கு நடக்கலாற்றாது களைத்து இன்று நிற்க நேரிடுமோ, அங்குத்தான் இன்று எம் பொழுது போக்கு நிகழவேண்டும். எங்கள் இனத்தார் இந்நாளிலே புரவலரைப் பெறுவது மிகவும் அரிதாயிற்று. எம்முள் மிகச்

சிலர் அருட்புலமை வாய்ந்தவரா யிருக்கின்றனர். யான் சென்ற சில ஆண்டுகளாக என் மனத்திலெழுங் கருத்துக் களை எளிய இனிய சிறிய சொற்களால் அழகுறச் செய் யுளா யமைத்து விரைவிலே கூறும் ஆற்றல் படைத்து ளேன். யான் இயற்றிய செய்யுட்கள் மிகவும் நயம்பெற வமைந்துளவென்று பெரும்புலவராகிய நுமக்கு முன் கூறத் துணிகின்றிலேன். என் செய்யுட்கள் பல முறை சொல்லினும் சுவையுடையவையாகவே தோன்றுகின் றன. சொற்செறிவும் பொருட்பொலிவும் பொருந்திய அவற்றைச் செவியிலேற்று எம்மினத்தார்க்கு வேண்டிய சிறப்புக்கள் செய்யவல்ல புரவலரைக் காண்கிலாமையால் என் மனம் பெரிதும் வருந்துகின்றது.

புலவர் :—நும்மினத்தார் வாக்கிற் பிறக்கும் செய் யுட்கள் இயல்பாகவே சொல்லும் பொருளும் சுவைபட அமையும் என்பதை யான் நெடுநாட் பழக்கத்தால் அறி வேன். இதோ நும் இனத்தாரும் வருகின்றனர். இவர் களுள் ஒவ்வொருவரையும் கவனிக்கும்போது இவர்கள் சோறும் நீரும் கண்டு நெடுநாளா யிருக்கும் போலத் தோன்றுகிறது. எல்லாம் இறைவன் செயல்.

பாணர் :—அதோ தோன்றுகிற முதியவர் என் தந் தையார்; மற்ற ஆண்மக்கள் என் உடன் பிறந்தார். நரை முதுகிழவி என் தாய். ஆங்கு வரும் விறலி என் மனைவி யாவள்.

புலவர் :—நும் தந்தையார் மிகவும் இளைத்திருக் கின்றார். அநேகமாக எல்லாரும் ஒரே மாதிரி இளைப்பா கவே இருக்கின்றனர். ஒவ்வொருவர் உடம்பிலும் எலும்புகளை எண்ணலாம்போலிருக்கிறதே!

பாணர் :—எலும்பை எண்ணுவதா? உடும்பு உரித்தது போன்ற தோற்றத்தோடு எலும்பு எழுந்தியங்கும் என் தந்தை தாயரை நோக்குமின். இந்த எனது சுற்றத்தார் எல்லாரும் உணவின் சுவையறிந்து அநேக நாட்களாயின. ஆங்காங்கு வழியிடையிற் கிடைக்கின்ற காய்கனிகளே உண்டு பல்லசைத்து அன்றன்று பசியாற்ற முயன்று வருகின்றோம்.

புலவர்:—ஐய, இங்கு நுமக்கு யான் சொல்லவுரியது ஒன்று உண்டு: நும் சுற்றத்தார் பசிப்பிணியும் நுமது மனத்துயரும் தீர்தற்கு அதுவே வழியாகும். புனிற்றிளங் குழவிகள் உட்கொள்ளும் அளவு அறிந்து தாய்ப்பால் சுரப்பதுபோலத் தன்னை யண்டிய மக்கள் வாழ்வுக்கு வேண்டுமளவு நீர் வளஞ் சுரக்கும் காவிரி பாய்கின்ற சோழ நாட்டின் மன்னன் ஒருவன் உளான். அவன் பகைத்தெதிர்ந்த ஆடவரை வன்மையொடு பிணிக்கும் ஆற்றலுடையான்; பொன்னுலும் மணியாலும் இயன்ற பூண்களைச் சுமந்த தன் மார்பும் தோளும் பயன்பெறப் பெண்டிர்க்கு இனியனாய் விளங்கும் இயல்புடையான். அயல் நாட்டாரோடு போர் செய்யும் வண்ணம் தம்மைத் தூண்டவில்லையே என்று அவன் மறவர் தோள் கொட்டிச் சமயம் எதிர் பார்த்திருப்பர். நகரத்திலேயே வீரரெல்லாம் பொழுது போக்காக வில் வேல் வாட் பயிற்சி செய்திருக்க, அவன் முழவொலி கேட்டு மகிழ்வுற்றிருப்பன். அத்தகைய மன்னன் உறையூரின்கண் வாழ்கின்றான். அவனிடம் சென்று நும் செய்யுட்களைக் கூறுவீராயின், நும் மானப்புண் ஆறும்படி அவன் பரிசில் நல்குவன். அவனிடம் சென்ற பிறகு வேறு எப்புரவலரையும்

எண்ணி நீர் போக நேரிடாது. அவன் சேட்சென்னி நலங்கிள்ளி யென்ற புகழ் பூண்ட பெயருடையான். அவன் போர்ப்பயிற்சி மாத்திரமே யன்றி, நூற்பயிற்சியி லும் புலமைத் திறத்திலும் மிகவும் சிறந்தவனாக விளங்கு கின்றான். இனி நீர் விரைவிலே அங்குச் செல்க.

பாணர் :—புலவரே, யான் இந்நாள்காறும் இம்மன் னனைப் பற்றி அறியாதிருந்தது என் பெருங்குறையே. விரைவிலே என் சுற்றத்தோடு அங்குச் செல்கின்றேன். புல்லை படைத்த புரவலர் எம் வரிசையறிந்து சிறிதளவு கொடுப்பராயினும், எமக்கு அது பெரிதேயாம். இனி யான் தும்மிடம் விடை பெறுகின்றேன்.

பிறகு புலவர், 'பாணர் சோணாடு செல்க,' எனக் கூறித் தாம் முன்போலப் பாண்டியநாடு நோக்கி நடந்து சென்றார். பாணன் தன் சுற்றத்தாரோடு சோணாட் டெல்லையைக் குறுகி உரையூரடைந்து நகர்க்குள் நடந்து அரண்மனையை யடைந்தான்; அப்பொழுது அரசன் புலவர் அவைக்களத்தி லிருந்ததை யறிந்து, அங்குச் சென்றான்.

நலங்கிள்ளியும் மாவளத்தானும் இரண்டு உயர்ந்த ஆதனங்களில் அமர்ந்திருந்தனர்; புலவர் பலர் சுற்றிலு மிருந்த ஆதனங்களில் வீற்றிருந்தனர். நலங்கிள்ளியின் முகத்திற் கோபக் குறி தோன்றியது. புலவர் அனைவரும் அவன் முகத்தையே பார்த்து, 'என்ன கூறுவனோ!' என எதிர் பார்த்திருந்தனர். அப்பொழுது நலங்கிள்ளி புலவர்களையும் அங்கு வந்தடைந்த அமைச்சரையும் நோக்கிப் பின் வருமாறு பேசலாயினன்:

"அமைச்சர்காள், புலவீர்காள், நேற்றிரவு யாம் ஒற்றரால் அறிந்த செய்திகள் சில உள. அவை எம் உள்ளத்தை ஊடுருவுகின்றன; புலவராகிய நும் முன்னிலையில் இத்துணைச் சினத்தோடு பேசும்படி எம்மைத் தூண்டுகின்றன. எம்மைப்பற்றி இகழ்ச்சியாய்ப் பேசத் துணிந்தோர் எம் மறவரது இயல்பை அறியார்போலும்! பாண்டியரும் சேரரும் அடைந்த பரிபவத்தைக் கேட்டும் அறிந்திலர் போலும்! யாம் எப்பொழுது எத்திசைக்குப் போர்க்கெழுதுமென இன்றும் எம் மறவர் நிற்கின்றனர். இங்கிலையில் வடநாட்டில் இருக்கும் மன்னர் சிலர் தென்னாட்டு மன்னர் சிலர்க்குத் துணையாய் நின்று, எம் நாட்டைக் கவர்ந்து பிறரிடம் கொடுக்கவோ, தாமே ஆளவோ கருதியிருக்கின்றனராம்! இவர்தம் சூழ்ச்சித் திறம் என்னே! ஆற்றல்தான் என்னே! எவரேயாயினும், எம்மிடம் நேரில் வந்து வணங்கி, 'எமக்கு ஒரு சிறு நாடு தருக,' என்று இரப்பராயின், இவ்வரசையே கொடுத்துவிடுவோம். இது வொன்றோ? 'ஈ' என்று இரப்போர்க்கு எம் ஆவியையும் கொடுக்கத் துணிவோம். இவ்வுலகில் அமைச்சர் படைத் தலைவர் முதலிய துணைமையோடிருக்கும் எம்வலிமையை மதியாமல் எமது உள்ளத் துணர்வையும் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் வீரத்தையும் அரசுரிமையையும் இகழ்ந்து பேசிய அறிவிலி எவனேயாயினும், அவன் உறங்கியிருந்த புலியை இடறிய குருடன்போல உயிரோடு மீளுதல் அரிதாம். மூங்கிலைப் பேர்த்துத் தின்னும் வலிய பெருங்களிற்றின் காலின் கீழ் அகப்பட்ட மூங்கில் முளைபோல அவன் வருந்தும்படி போர் புரிந்து வெல்லேமாயின், குற்றமற்ற உள்

ளத்தோடு எம்பால அன்பு பூணுத கரிய கூந்தலையுடைய பொதுப் பெண்டிர் சேர்க்கையில் எம் மாலை வாடுவதாக. புலவீர்காள், அரசச் செல்வம் முன்னோர் இறந்ததால் விதிப்படி ஒரு சிறியோன் கைப்படுமாயின், அவனால் தாங்கலாகாத கனமுடையதாயிருக்கும். அத்தகைய மன்னர் தாம் அரசுரிமை பெற்றது தமக்குக் பெருஞ் சிறப்பாம் என்று எண்ணி நாடு காவலின் பொருட்டுக் குடிகளிடம் இறையை யிரந்து பெற்று, ஆண்மையின்றி வாழ்வர். போர்ப் பயிற்சியின் மிகச் சிறந்தோன் ஒருவன், அத்தகைய அரசுரிமையைப் பெறுவனுயின், தாழ்ந்த நீரையுடைய வற்றிய குளத்திலே கோடைக் காலத்திலே உலர்ந்து கிடக்கும் நெட்டிச் சுள்ளிபோல மிகவும் எளிதாய் இருக்கும். இவ்வரசுரிமையில் எமக் குள்ள பொறைமை இத்தன்மைத்தென நீவிர் அறிவீர்.''

இங்கு நடந்த இவற்றையெல்லாம் கண்டு பாணன் ஒரு புறம் ஒதுங்கி நின்றான். விறலியும் அவனருகில் நின்றிருந்தாள். அவரது வரவை அறிந்த அரசன் பாணனை நோக்கி, ''தேன் தீந்தொடைச் சீறியாழ்ப்பாண, நின் வரவு நல்வரவாகுக. நீயும் நின் விறலியும் வறுமையின் உருவமேபோல வந்துளீர். முதற்கண் நீவிர் நம் அரண்மனைக்குட் சென்று, பசியாற உண்டுவாரும். பிறகு நும் பாடலையும் கேட்போம்; ஆடலையும் காண்போம். யாம் எவரையும் வருத்திப் பணிபெறும் வழக்க முடையமல்லேம்,'' என்று கூறினன்.

பாணன் அது கேட்டு மகிழ்ந்து, தன் சுற்றத்தாரோடு சென்று, வயிறார வுண்டு மகிழ்ந்து, பின்னர் உரிய சமயத்தில் தனது பாட்டுத் திறமையையும் விறலியின்

ஆடற்றிறமையையும் அரசன் காணும்படி செய்துகாட்டி, அவன் மகிழ்ந்தளித்த பொன் மலர் மாலையும் பிறவரிசைகளும் பெற்றுப் பல நாள் அங்கு வாழ்ந்திருந்தான். விறலியும் பூவிலையாகச் செம்பொன் மிகவும் பெற்றாள். பாணன் நிலை இவ்வாறாக, அரசன் அன்று கூடிய அவையகத்திருந்து புறம்போந்ததும், படைஞரோடும் படைத்தலைவரோடும் வடநாடு நோக்கிப் போரியற்றச் செல்ல உரிய காலம் எதுவென ஆராய்ந்தான்.

அவ்வாராய்ச்சியின் பயனாக மாவளத்தானை முன்போலவே உறையூரில் அரசுரிமையைப் பொறுத்திருக்கும் வண்ணம் நியமித்துப் பெரும்படையோடும் புலவர் பலரோடும் புறப்பட்டு, வட நாடு சென்றான். முதற்கண் பல மன்னரை எதிர்த்துப் பொருது, அவரையெல்லாம் அடக்கி, வணங்கி வாழச் செய்தான்; பிறகு தன்னை இகழ்ந்த மன்னர் இருந்த நாட்டை அடைந்ததும், அவர்களும் தன் வரவுக்கு எதிர்பார்த்துப் பெரும்படையோடு காத்திருந்தாராகையால், முன் என்றும் இயற்றியிராத பெரும்போர் ஒன்று இயற்றினன். அப்போரிலும் சோழ நாட்டு மறவர் தம் வீரச் சிறப்பை விளக்கிக் காட்டினர். பகைவர் படையில் எண்ணற்ற தேர்களும் களிறுகளும் அழிந்தொழிந்தன. வில் வீரரும் வேல் வீரரும் பிறரும் புற்றிலிருந்து புறப்பட்டு வரும் ஈசல்போல விரைவில் எதிர்த்து வந்து நின்று பொருது, சூரியன் முன் அவை மாய்வது போலச் சூரியவமிச மன்னவனுகிய நலங்கிள்ளியின் ஆற்றலின் முன் நிற்கலாற்றாது, மாய்ந்தனர்.

பகைத்திற மன்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்றாராகையால், நலங்கிள்ளி ஒருவனேயாகத்

தன் மறவர் துணைகொண்டு போர் புரிந்து, வீர நெறியை விளக்கி நின்றனனெனினும், தன் உடலெல்லாம் விழுப்புண் பெற்றனன். பாசறையில் வந்து தங்குங் காலங்களிலெல்லாம் மிக்க சிரமமான நிலைமையில் இருப்பதாக அறியினும், போர் ஒழியாது நடந்தது. இறுதியில் வெற்றி சோழ நாட்டார் பக்கம் ஆயிற்று. இச்செய்தி விரைவிலே சென்று, செய்தி கூறுவோராற் சோணாட்டுக்கு அனுப்பப்பெற்றது. மாவளத்தான் நாடெங்கும் வெற்றிச் செய்தி பரப்பினன்.

V

சோணாட்டுக் குடி மக்கள் அனைவரும் தம் அரசன் வெற்றித் திருவோடு நாடு நோக்கி வருகின்றான் என்ற செய்தி அறிந்து, மகிழ்ச்சி மிகப் பெற்றுத் தம் மனையகங்களை அழகு செய்யத் தொடங்கினர்; உறையூர் நகரத்து வீதிகளிலே பழமணல் மாற்றினர்; புது மணல் பரப்பினர்; அரச வீதியின் மாளிகைகளின் முன்றில் களிலெல்லாம் பெரும்பந்தர்கள் அமைத்தனர்; அப் பந்தர்களிலே வாழை மரங்களையும் கமுக மரங்களையும் நாட்டினர்; பலநிறப்பூக்களை மாலைகளாத் தொடுத்து நால விட்டனர். மனை விளக்கமாகிய பெண்டிர், தத்தம் மனை வாயில்களைப் பல்வகைக் கோலங்களால் அலங்கரித்துப் பூஞ்செடிகள் நிரைத்து வைத்தனர். திண்ணைகளில் பூரண கும்பங்களும் பொலம்பாலிகைகளும் பாவை விளக்குக்களும் அடுக்காக வைத்தனர். இளஞ்சிறார் பலரும், தம் அரசனைக் காண விழைந்து, புதிய நல்லுடைகள் அணிந்து, வீதிகளில் நிறைந்தனர்.

நகர்க்கு வெளியே அரைக்காவத தூரம் வரை நகர மாக்கள் நடந்து சென்று, தம் மன்னனை எதிர்கொள்ள லாயினர். தேர்மீது வந்த நலங்கிள்ளி நகரை நெருங்கு கையிற் பட்டத்து யானையின்மீது அமர்ந்து மங்கல வாத்திய முழக்கங்களினிடையே நகரத்துட் பிரவேசித் தான். அவ்வமயத்தே அவன் அமர்ந்த களிறு, ஐரா

வதமேபோலத் தோன்றுமாறு, எண்ணற்ற மலர் மாலை களும் பூங்கொத்துக்களும் அவன்மேல் இடப்பெற்றன. மக்களனைவரும் நெடுநாட் பிரிந்த தந்தையை வரவேற் கும் மைந்தர் போல அவனை நாட்டுக்குள் வரவேற்றனர்.

புலவரும் அமைச்சரும் பிற அறிஞரும் நகர மாக் களும் தத்தம் மனக் கிளர்ச்சிகள் விளங்க வரவேற்பு உபசார மொழிகள் கூறினர். அரசன் அவ்வவர்க்கேற்ற வண்ணம் சிறு சிறு சொற்களால் மறு மொழிகள் கூறிக் கொண்டே, மெல்ல ஊர் வலம் வந்து அரண்மனை புகுந் தான். அன்று மாலையே நகர மாந்தர் அனைவரும் நேரில் வந்து அரசனைக் கண்டுகொண்டு தமக்கு வேண்டுவனவற் றைக் கூறிக்கொள்ளலாம் என எங்கும் விளம்பரம் செய் யப்பட்டது. அரசனும் இளவலும் அமைச்சரும் அரண் மனையிற் சிறிது நேரம் அரசியற் பொருள்களைப் பற்றிய ஆலோசனைகள் செய்துவிட்டுப் பின்னர்ச் சிரம பரிகாரம் செய்துகொள்ளச் சென்றனர்.

மாலைக்காலம் வந்தது. அரண்மனைத் திருவோலக்க மண்டபத்தில் புலவரும் அமைச்சரும் நகர மாந்தருட் பிரமுகரும் பிறரும் வந்து நெருங்கித் தத்தமக்கேற்ற இடங்களில் அமர்ந்திருந்தனர். அரசனும் இளவலும் உரிய காலத்தே அமைச்சர் இருவருடன் அவைக்களம் புகுந்து, தமக்குரிய ஆசனத்தமர்ந்தனர். நகர மாந்தருள் முதியார் ஒருவர் எழுந்து, அரசனை நோக்கி,

“ மன்ன வாழி மகிதலம் புரந்து
நெடிதுநாள் வாழி நெறிமுறை
நன்கனம் தழுவி நலமெலாம் புரிந்தே. ”

என்று வாழ்த்தினர்.

பின்னர் அப்பெரியார், நகர மக்கள் சார்பாகத் தாம் சொல்லக் கருதிய விஷயங்களை அரசனைப் பார்த்துத் தெரிவிக்கலாயினர்:

"ஐய, மன்னர் பிரானே, இளைய வரசே, அமைச்சர்காள், அறிஞர்காள், புலவர் பெருமக்காள், இந்நாள் நம் நாட்டு வரலாற்றில் ஒரு நன்னாள் என்றே கூறத் தக்கதாம். எங்ஙனமெனில், வட நாட்டிலே ஆரிய மன்னர் முதலாயினரை வென்று பிரதாப சிலராய்த் தம் நாடு நோக்கி வந்திருக்கும் நம் அரசரை வரவேற்று நன் மொழிகள் கூறி உபசரிக்கும் சந்தர்ப்பம் குடிமக்களாகிய நமக்குக் கிடைத்திருக்கின்றது. இன்றுநேர்ந்த மற்றொரு விசேடமு முண்டு. நாம் நம் மனத்திலிருக்கும் குறைகளை நேரிலே அரசரிடம் வெளியிட்டுரைத்துக் கொள்ளலாம் என விளம்பரம் செய்யப்பட்டது. பாரத பூமியில் பல நாடுகள் உண்டெனவும் அவை பல அரசர்களால் ஆளப்படுகின்றன வெனவும் அறிவோம். ஒரு காலத்திலே சோழ மன்னர்கள் இப்பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு, தம் மொழி எங்கும் செல்லும் உரிமை பெற்றிருந்தார்கள் என்று அறிவோம். சமீப காலத்தில் இந்நாட்டை அரசாண்ட கரிகாற் பெருவளத்தார் என்ற நம் மன்னர் பிரானைப்பற்றி இங்குள்ள முதியார் சிலர் அறிந்திருக்கக் கூடும். அவரும் பாரத பூமியிற் பெரும்பகுதியை ஆண்டு வந்தார் என்பது நாம் அறிந்ததே. எக்காரணத்தாலோ, சோழ மன்னர் ஆதிக்கம் குறையத் தலைப்பட்டது. இங்கு வீற்றிருக்கும் நம் மன்னர் பிரான் அக்குறையைப் போக்கும் கருத்துக் கொண்டே வட நாடெல்லாம் சென்று பல மன்னரை

வென்று அவரவர் நாடுகளிலும் நம் நாட்டுக் கொடி யாகிய புலிக்கொடியை நாட்டி வந்திருக்கின்றார் என்று அறிகின்றோம். இனியேனும் இம்மரபினர் தம் பெருமையிற் குன்றாது இந்நிலவுலகிலே நெடுநாள் நம்மையும் நம் வழி வருவோரையும் ஆட்சி புரிந்து வாழ்வாராக வென நாம் இறைவனை வேண்டுவோம். நாட்டார் பொருட்டு யான் இங்குக் கூறத்தக்க குறைகள் சில உள. இளம்பருவத்திலும் அம்மன்னர் பிரான் போரிற் பேரூக்கங் கொண்டு அயல் நாடுகளிலேயே வாழ்ந்துகொண்டு இருந்தார்; இப்பொழுதும் அயல் நாடுகளுக்குச் சென்று வருவதிலேயே உற்சாகம் உடையவராய் இருக்கின்றார். இதனால், நம் நாட்டகத்தே நிகழ்தற்குரிய சில பெரு விழாக்கள் நன்கு நடைபெறற்கியலாது போயின. இப் பெருநகரில் உள்ள சிவாலயங்களில் ஆண்டுதோறும் திங்கள்தோறும் நடை பெறும் சில பெரிய திருவிழாக் களில் அரசர் பெருமான் கோயிலிருந்து செய்தற்குரிய சில சிறப்புக்கள் உள. இளைய வரசர் அவற்றை நன்கு நடாத்தி வைத்தார். ஆயினும், அரசர் கோயிலிருந்து வேண்டும் சிறப்புக்களைச் செய்தற்கியலாது போயிற்றே என்று குடி மக்களுட் பெரும்பாலோர் கருதினர். போரின் பொருட்டு அரசரோடு அயல் நாடு சென்ற படைஞரின் குடிகளில் பலவகை ஏற்றத் தாழ்வுகள் ஏற் பட்டன. அவை யெல்லாம் தக்கவாறு கவனிக்கப்படு தல் அரசினரின் கடமையாம். போரிலே இறந்தார் மனைவி மக்கள் அரசரது பாதுகாப்புக்குரியவ ரென் பதை நான் இங்குக் கூற வேண்டுமோ? இந்நகரத்தில் உள்ள அறங்கூறவையத்தார், சோழர் தமிழ்ச் சங்கத்

தார், தமிழ்ப் பெருங்கலா சாலேயர், மருத்துவ குலத் தார், இசைத் தமிழ்க் கழகத்தார், ஒவிய நூல் வலார், சிற் பம் வல்லுநர் முதலிய அறிஞரெல்லாம் தம்மிடையில் தாம் புரியும் பணிகளிலே ஊக்கம் விளைக்குமாறு இருத்தற் குரிய அரசரில்லாக் குறையைப் பெரிதும் கருதினர். புல வரோ, தாம் புதுமைக் கருத்துக்களை உலகினர்க்கு உதவ வேண்டின், தம் அருஞ்செயல்களைப் பாராட்ட வல்ல அரும்புலமை படைத்த புரவலரில்லாதிருக்குங் குறை அம்முயற்சிக்கு இடையூறாயிற்றே யென்று கருதினர். இந்நாள்காறும் மன்னர் அயல் நாடுகட்குச் சென்று கொண்டிருந்தது எவ்வாறாயினும், இனி எம் நாட்டு மக் கள் விருப்பத்திற்கிணங்க நாட்டகத்திலேயே இருந்து அரசுரிமையை மேற்கொண்டு, அறமும் பொருளும் இன் பமும் நாடெங்கும் ஓங்க வேண்டுவன செய்ய வேண்டு கிறேன்.''

இவ்வாறு அவர் பேசி இருக்கையில் அமர்ந்ததும் புலவர் ஒருவர் எழுந்து, அருந்தமிழ்ப் பனுவல் ஒன்று கூறி, அரசரை வாழ்த்தித் தம் இருக்கையில் அமர்ந்த னர். பின்பு நலங்கிள்ளி அரியணையில் இருந்த வண் ணமே தன் உள்ளக் கருத்தை வெளியிட்டுரைத்தனன்:

"நகர மாந்தர்காள், நாட்டுக் குடி மக்காள், பெரியீர் காள், யாம் நுமக்குக் கூற விருப்புவது ஒன்றேயுளது: உண்மையான வீரர்குடியிலே பிறந்தவன், தன்னைப்பற்றி எண்ணும்போது, எங்ஙனம் தன் வாழ் நாளை மதிக்க வேண்டு மென்பதைத் தெய்வப் புலவர்,

"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.''

என்ற குறளால் விளக்கினர். இத்தகைய வீரர் பலர்க் குத் தலைவனுயிருந்து நடத்துதற்குரிய எம் போன்மூர் எவ்வண்ணம் இருத்தல் வேண்டும் என்று நீவிர் எதிர் பார்க்கின்றீர்? அரசர் குடியிலே பிறந்தார், போர்க்களத் திலே பட்ட விழுப்புண்ணலன்றி வேறெருரு வழியால் இறக்க நேரிடுவது இழிவெனவே நம்மவர் கருதினர். உடம்பும் உயிரும் நன்கனம் பெறுத மணியொன்று தோன்றினும், அதனையும் வாளால் வெட்டி இடுகாட்டி லிடுவது வீரர் இயற்கை. எம்மை நாட்டகத்தே அடங்கி யிராதது பற்றி நீவிர் வெறுக்கக் காரணமில்லை. எம்மைப் போலவே நும்மிடம் அன்புள்ள இனிய வரசர் இங்கு இருந்திருக்கின்றூர். அரசுரிமையில் ஒரு வகைக் குறையு மில்லை யென்பதற்கு எத்தகை அரசரும் முற்பட இய லாது. உள்ள குறைகளைப் போக்க வேண்டுவது எம்மு டைய கடமையே என உணர்கின்றேம். சமீபகாலத்தில் யாம் செய்த போரினிடையிலே பகைவர் முயற்சியால் யாம் உடம்பிலே உரத்திலும் தோளிலும் தாங்கிய அம ராபரணங்கள் அநேகம் உள. அவையே எம் போன்றூர்க் குப் பொன்னினும் மணியினும் இயன்ற பூண்களைக்காட் டிலும் சிறந்தவை யென்பதை யாம் கூற வேண்டுமோ? இறைவன் செயலால் யாம் இன்னும் எத்தனை நாட்கள் இவ்வுலகில் வாழ இருப்பினும் எம்மால் இயன்றவளவு நாட்டு மக்களுக்கு நலம் புரிந்து நம் நாட்டின் இரு விழிக ளாகிய கல்வி செல்வங்களை வளர்ப்பதிலே யாம் நாட்ட முடையவரா யிருப்போம்.''

மற்றெருரு முறை புலவர் ஒருவர் எழுந்து, அரச வாழ்த்தாகப் பின் வரும் பாடலைப் பாடினர் :

வடக்குத் தேற்குக் குடக்குக் குணக்கே
எனுநாற் றிசையினு மிறைமைபூண் டிருந்த
பலப்பல மன்னரைப் பணியப் புரிந்து
வேற்றிச் சிறப்பால் விளங்கும் புகழுடை
நல்லிசைப் புலமைகோள் நலங்கிள்ளி மன்னன்
வாழிய வாழிய வூழிவா ழியவே.

பின்னர் அரசனேவலால் அச்சபை கலைந்தது. வந்தவர் அனைவரும் தத்தம் உறையுள் ஏகினர். சோழநாடெங்கும் நலங்கிள்ளி நாடடைந்த வைபவம் பெரிய தொரு திருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது.

பின்பு பல வாண்டுகள் அம்மன்னன் புகார் நகரத்திலும் உறையூரிலுமாக இருந்து அரசியற்றி வந்தான். அயன் மன்னரெல்லாம் முறையே திறையளந்திருந்தனர். நாடு நகரங்கள் கல்விசெல்வங்களால்செழித்தன. நாடெங்கும்போக்கு வரவுக் குதவுமாறு அகன்ற சாலைகள் வகுக்கப்பட்டன. அச்சாலைகளில் நிழல் பெரிதும்தரும் மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டன. தமிழகமுழுவதும் புலவரெல்லாம் ஒருவகைஇடையூறுமின்றி நடந்துசென்று, ஆங்காங்கிருந்த சிற்றரசரிடமும் பேரரசரிடமும் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர். மாவளத்தான் பெரும்பாலும் உறையூரிலேயே இருந்தான். காவிரி யாற்றில் நீராடும்விழாவும், தூதல்விழி நாட்டத்திறையோன் கோயிலில் நித்திய நைமித்திகத் திருவிழாக்களும் முறையே நடை பெற்று வந்தன.

ஒரு நாள் நலங்கிள்ளியும் மாவளத்தானும் புலவர் பலரும் உறையூர்ப் பெருங்கோயிலிற் கோயில் கொண்டருளும் சிவபெருமான் திருவுலாப் போதருங் காட்சி

யைக் காணச் சென்றனர். நகர மாந்தர் எண்ணிறந்தார் இறைவன் திருவருள் பெறும் நோக்கமுடையராய் வந் திருந்தனர். பொன்னியன்ற இடப வாகனத்தில் அமர்ந்து சிவபிரான் தம் மக்கள் அருகில் வரத் திருவுலா வந்தனர். உமையொரு பாகம் உடைய பிரானுர் உலகிற் கெல்லாம் தாயுந் தந்தையுமாய் இருக்கும் காட்சியைத் தோற்றுவிக்கும் வண்ணம் எழுந்தருளிய திருக்கோலத் தைக் கண்ட நலங்கிள்ளி, மனமுருகித் தன்னை மறந்து பாடத் தொடங்கினன் : மாவளத்தானும் புலவரும் அரு கில் வணங்கி நின்றனர். நலங்கிள்ளி இரு கரங் கூப்பிக் கண் மூடிச் சிறிது நேரம் இறைவனைத் தியானித்தான்; பிறகு, பல பாடல்களைப் பாடினன். அருட் செல்வமாக அப்பொழுது தோன்றிய பாடல்களைப் புலவரெல்லாங் கேட்டு அதிசயித்திருந்தனர். அரண்மனை நோக்கித் திரும்புதற்குரிய காலங் குறுகியது. அப்பொழுது மன் னன் பரவசத்துடன் இறைவன் திருக்கோலத்தைக் கண் குளிரக் கண்டு,

" உலகினில் நிலவுறும் உயிர்களி லெல்லாம்
உள்ளுயி ரென்ன வொளிசெயும் பொருளே!
மறையறி வரிய விறைவனெம் பெருமான்!
அறிந்தோர் புகழ்ந்த அருளின் செல்வமே!
விண்ணவர் தொழுது விழுப்பயன் எய்துறும்
தோற்றமும் ஒடுக்கமும் மாற்றமும் மயக்கமும்
இல்லாத் தலைவ! எவையும் வல்லாய்!
வரைமிசை யமர்ந்த புரையறு கடவுள்,
கடலினிற் றுயில்கொளும் கடவுள், மணிமிகு
மலரினி லமர்ந்துறை கிலகிய பரம்பொருள்

எனுமு வகையால் இனிதுற விளங்கும்
நின்னைப் பணிந்து நின்னருள் நாடுதும்
அருள்பொழிந் தழகுறு மடிமலர் நிழலினில்
நிலையுறு வாழ்வினில் நிலைக்குமா றருளே.''

என்று புகழ்ந்து பாடினன்; பரவசத்தால் மயங்கித் தன்னை மறந்து நிலத்தில் விழுந்தான். அருகில் இருந்தார் அவனைத் தகுந்த மனையொன்றிற் கிடத்தி அரண்மனைக்கு எடுத்துச் சென்றனர். அங்குச் சென்றும், அரசன் கண் விழித்திலன். அரச மருத்துவர் பலர் வந்தனர்; தம் திறமை யெல்லாம் காட்டி மருந்துகளைச் செலுத்த முயன்றனர்; மயக்கம் தெளிவிக்க முயன்றனர். ஒன்றும் பயன்படவில்லை. இரண்டு நாழிகையான பிறகு அரசன், "இறைவ, யான் உன் அடைக்கலம்," என்று மெல்லக் கூறினன். அருகிருந்தார் அது கேட்டு மிகவும் அதிசயித்தனர்; பிறகு சைத்தியோபசாரம் செய்ய முயன்றனர். அம்முயற்சி பயன்படா வண்ணம் அவன் தான் கண்குளிரக் கண்டு வணங்கிப் போற்றிய இறைவன் திருவடி நிழல் அடைந்தான்.

அருகிலிருந்த புலவரெல்லாம் மிகவும் மனங்கவன்றனர்; தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் கையறு நிலை கூறத் தொடங்கினர். மாவளத்தான் நலங்கிள்ளியின் குமரனாகிய சிறுவனுக்கு முடி சூட்டி, அவன் உரிய பருவமடைந்து அரசுரிமையை யேற்றுக்கொள்ளுங்காலம் வரும் வரையில் அரசப் பொறையை அமைச்சர் வேண்டுகோட்கிணங்க நகர மாந்தர் விரும்பியவாறு தானே தாங்கியிருக்கச் சம்மதித்தனன். உரிய முறைப்படி சடங்குகள் நிறைவேறின.

ஆலத்தூர் கிழார் என்ற பெரும்புலவர், நலங்கிள்ளி யின் பிரிவாற்றாது பெரிதும் வருந்தி, அங்கிருந்த புல வரையும் பிறரையும் பார்த்துப் பின் வருமாறு பேசினார்: "புலவீர்காள், அன்பர்களே, யான் என்ன கூறுவேன்! நாம் அனைவரும் உடலாக இருந்தோம். நமக்கு உயிரா யிருந்த நலங்கிள்ளி வேந்தன் நம்மை வெற்றுடல் ஆக்கி விண்ணகத் தொளித்தான். மண்ணகத்தே தனக்கு நிகரா கிய வீரரைக் காணுமையால், விண்ணகம் சென்றுன் போ லும்! இம்மன்னன் போர்த்திறம் எத்தகைத்து என்பது நீவிர் அனைவரும் அறிந்ததே. இவன் படைஞர் போர்க் குப் புறப்படுகையில் முதற்கண் செல்வோர் இளதுங்கின் சேற்றை நுகர்வர்; இடையில் வருவோர் பனம்பழம் அருந்துவர்; இறுதியில் தொடர்வோர் பழத்தை நட்டு நிலத்திலே தோன்றிய கிழங்கை அவித்துண்பர் என்று போர்க் களங்களுக்குச் சென்று கண்டார் கூறக் கேட்டு ளோம். இத்தகைய பெரும்படையுடன் இம்மன்னர் பிரான் நிலமனைத்தையும் தன் வயப்படுத்தி அயன் மன் னரை யெல்லாம் பெருமை யழித்து வாழ்ந்தான் என்று கேட்டோம். அத்தகைய ஆற்றல் இன்று என்னயிற்று? கள்ளிகள் காய்ந்து கிடக்கும் வெறு நிலத்திலே முட்கள் நிறைந்த பெருங்காட்டிலே மறைந்தது. இந்நாள் வரை யில் மாற்றரசர் மனையகங்களிலே புறத்தே கொணர்ந்து முழக்கப் பெறுமல் ஒரு மூலையிற் போடப்பட்டுச் சேட் சென்னி நலங்கிள்ளி காதில் விழுமோ, அவன் செவிப் படின் என்னுகுமோ என்ற அச்சத்தால் ஒடுங்கி யொளித்திருந்த சங்கங்கள் முழங்கத் தொடங்கி விட் டன. இச்செய்தியை நினைக்க என் மனம் நோகிறது."

பின்னர் அங்கிருந்த பிற பெரியார்கள், இளவரசனுக்கு அரசியலறத்தைச் சிறிது விளக்கமுற எடுத்துக் கூறி, இளைய வேந்தனுகிய மாவளத்தான் முன்போலவே நாட்டைப் பரிபாலித்து வருக என்று கூறிச் சென்றனர். அருளும் அன்பும் அறமும் போர்த் திறமும் புலமைச் செல்வமும் ஒருங்கே படைத்த சேட் சென்னி நலங் கிள்ளி, அப்புலவர் முயற்சியாலும் தன் செயலாலும் இறவாப் புகழை எய்தினன்.

நல்லார் புகழ்ந்த நலங்கிள்ளி சேட்சென்னி
நில்லா வுலக நிலையிகழ்ந்து—சொல்லால்
அளத்தற் கரிய வரன்பதத்திற் சேர்ந்தான்
உளத்திற் பரம்பொருளை யோர்ந்து.

பிறந்தார் வளர்ந்தார் பிறர்புகழ வாழ்ந்தார்
இறந்தார் பலரே யெனினும்—சிறந்தார்
திகைப்பப் புகழுடல்கொள் சென்னிநலங் கிள்ளி
நிகர்ப்ப ருளரோ நிலத்து ?

இந்நூலாசிரியர் எழுதிய 'தமிழ்ப் புலவர் வரலாறு' 'பாண்டிய மன்னர்' என்ற நூல்களைப்பற்றிய

அபிப்பிராயங்கள் :

மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள்

அபிப்பிராயம்

தமிழ்ப் பண்டிதர் வித்துவான் ம-ள-ள-ஸ்ரீ நா. கனக ராஜையர் இயற்றிய தமிழ்ப் புலவர் வரலாறு மூன்று புத்தகங்களிற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். இவற்றிலுள்ள சரித்திரங்கள் தக்க ஆதாரங்களை யுடையனவாய் மூன்னோர் கொள்கையினின்றும் வேறுபடலின்றித் திருத்தமான நடையை யுடையனவாய் அமைந்திருத்தலின், பாடசாலையிற் படிக்கும் மாணவர்களுக்கும் ஏனையோர்க்கும் மிக்க பயனளிக்கு மென்பது எனது கருத்து. இப்புத்தகங்கள் இயற்றியவருடைய ஆராய்ச்சித் திறத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

தியாகராஜ விலாசம்,
திருவேட்டீஸ்வரன்பேட்டை,
சென்னை, 1-8-'30.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

செந்தமிழ்ப் பத்திராசிரியர் அபிப்பிராயம்

தமிழ்ப்புலவர் வரலாறு

(ஒன்று முதல் மூன்று பகுதிகள்)

இவை வித்துவான் பண்டித ஸ்ரீமத் கனகராஜைய ரவர்களால் எழுதப்பட்டு மதுரைப் புஸ்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக்கோன ரவர்களால் நல்ல கடிதத்திற் கலாசாலை மாணவர்களுக்கு உபயோக மாகும்படி நன்கு பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் முதற் பகுதி அகத்தியர், தொல்காப்பி யர், ஔவையார், கபிலர், பரணர், நக்கீரர், அரசில் கிழார், ஆவூர் மூலங்கிழார் என்னும் இவ்வெண்மர்களின் வர லாறுக ளடங்கியது.

இரண்டாம் பகுதி கல்லாடனர், மாமூலனர், மாங் குடி மருதனர், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பாலைக் கோதமனர், பாரதம் பாடிய பெருந்தேவனர், மதுரை மருதனிள நாகனர், கடியலூ ருருத்திரங்கண்ண னர், போய்கையார், முரஞ்சியூர் முடி நாகராயர் என்னும் இப்பதின்மர் வரலாறுகள் அடங்கியது.

மூன்றும் பகுதி மோசி கீரனர், சீத்தலைச் சாத் தனர், இளங்கோவடிகள், பெருந்தலைச் சாத்தனர், கோவூர் கிழார், மாறேக்கத்து நப்பசலையார், உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் என்னும் இவ்வெழுவர் வர லாறுகள் அடங்கியது.

இம்மூப்பகுதியிலுள்ள வரலாறுகள் பலவும் சங்கச் செய்யுள்களையும் நூலுரைகளையும் தழுவி இடையிடையே தொடர்பு படுத்தற்குப் பொருந்துவன சில படைத்து, படிப்பவர் இன்புறுமாறு தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஆங்காங்கு வேண்டும் மேற்கோட் செய்யுள்களுங் காட்டப்பட்டுள்ளன.

இப்புத்தகங்கள், படிக்கும் மாணவர்களுக்குப் பழந் தமிழ்ப் புலவர்களின் வரலா றுணர்த்தல் மட்டுமன்றித் தமிழிலக்கியப் பயிற்சியையும் விளைவிக்கத் தக்கன. இப் புத்தகங்க ளெழுதிய வித்துவான் பண்டித கனகராஜை யரவர்கள் உழைப்பும் ஊக்கமும் பாராட்டத் தக்கன. இப்புத்தகங்களுள் முதற் பகுதியின் விலை அணை 10. இரண்டாம் பகுதியின் விலை அணை 8. மூன்றும் பகுதி யின் விலை அணை 8. வேண்டுவோர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரவர்கள், புத்தக வர்த்தகர், மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்.

பாண்டிய மன்னர்

இந்நூற்றொருகுதி வித்துவான் பண்டித ஈ. கனகரா ஜையரவர்களால் படிப்பவர்க்குப் பலவகையிலும் உணர் வுண்டாமாறு செவ்விய தமிழ் நடையில் இடையிடையே வேண்டுஞ் செய்யுள்களை மிடித்துச் சில பாண்டியர்களின் சரிதங்கள் விளங்கும்படி இரண்டு பகுதிகளாக எழுதப் பட்டு, மதுரைப் புத்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரவர்களால் பதிப்பிக்கப்பட் டது. இது தமிழ் நடையும் நவீன கற்பனை சரிதங்

களும் எழுதப் பயிலும் மாணவர்களுக்கு வேண்டும் மனோ தர்மத்தை உண்டாக்க வல்லது.

இதன் முதற் பகுதியில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மூவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 10.

இரண்டாம் பகுதியில் உக்கிரப் பெருவழுதி, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் இவ்விருவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 8.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

CHOLA KINGS

PART III

BY

PANDIT N. KANAKARAJIER.

"VIDWAN"

MAHARAJA'S COLLEGE, PUDUKOTAH

Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us
Footprints on the sands of time;—

H. W. Longfellow.

E. M. GOPALAKRISHNA KONE,

BOOKSELLER AND PUBLISHER

MADURA & MADRAS.

இந்நூலாசிரியர் எழுதிய 'தமிழ்ப் புலவர் வரலாறு' 'பாண்டிய மன்னர்' என்ற நூல்களைப்பற்றிய

அபிப்பிராயங்கள் :

மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள்

அபிப்பிராயம்

தமிழ்ப் பண்டிதர் வித்துவான் ம-ள-ள-ஸ்ரீ நா. கனகராஜையர் இயற்றிய தமிழ்ப் புலவர் வரலாறு மூன்று புத்தகங்களிற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். இவற்றிலுள்ள சரித்திரங்கள் தக்க ஆதாரங்களை யுடையனவாய் மூன்னோர் கொள்கையினின்றும் வேறுபடலின்றித் திருத்தமான நடையை யுடையனவாய் அமைந்திருத்தலின், பாடசாலையிற் படிக்கும் மாணவர்களுக்கும் ஏனையோர்க்கும் மிக்க பயனளிக்கு மென்பது எனது கருத்து. இப்புத்தகங்கள் இயற்றியவருடைய ஆராய்ச்சித் திறத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

தியாகராஜ விலாசம்,
திருவேட்டீஸ்வரன்பேட்டை,
சென்னை, 1-8-'30.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

செந்தமிழ்ப் பத்திராசிரியர் அபிப்பிராயம்

தமிழ்ப்புலவர் வரலாறு

(ஒன்று முதல் மூன்று பகுதிகள்)

இவை வித்துவான் பண்டித ஸ்ரீமத் கனகராஜைய ரவர்களால் எழுதப்பட்டு மதுரைப் புஸ்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக்கோன ரவர்களால்

சோழ மன்னர்

ஸ்ரீ :

சோழ மன்னர்

மூன்றும் பாகம்

1. கோப்பெருஞ் சோழன்
2. கோச்செங்கட் சோழன்

ஆசிரியர்

பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்,

மஹா ராஜா கல்லூரி,

புதுக்கோட்டை.

பிரசுர கர்த்தர் :

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை & சென்னை.

பதிப்புரிமை] 1931 [விலை அணா. 8

உரிமையுரை

வளமிகுபைந் தமிழ்மொழியை யடியேற்கு
வழங்கியருள் வண்மைச் செல்வர்
இளமைமுத லெனையுணர்ந்து மேன்மேலும்
எழுநெறியை இனிது காட்டி
உளநெகிழ்வா லரியபொருள் பலவெளிதி
னுணரவிரித் துரைத்த வள்ளல்
தெளிஞர்களி லுயர்ந்ததிரு நாரணவா
ரியர்பதங்கள் சிந்தை செய்தே

மனமொழிமெய் யுறவணங்கிப் பழந்தமிழின்
பனுவல்களின் வழியிற் சென்று
தினமுயன்று பெறுபொருளிற் சிறிதுசிறூர்
பொருட்டுதவிச் சிறப்பா வெண்ணிக்
கனகமழை பொழிவளவ ரோரிருவர்
வரலாற்றைக் காட்டு மிந்நூல்
எனதுசிறு பணியெனவே யேற்கவெனத்
தொழுதுரிமை யிசைத்தேன் மன்னே.

நா. கனகராஜன்

ஸ்ரீ :

முகவுரை

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

சென்ற வாண்டிலே சங்க காலத்துப் பாண்டியர் ஒவ்வொருவர் வரலாற்றை ஆங்கில கலாசாலை மாணவரும் பிறரும் பயின்றின்புறுமாறு யான் பழம்பொருள்களோடு புதுப்பொருள்கள் சிலவற்றைச் சேர்த்து எழுதி வெளியிட்டேன். அவ்வண்ணமே சோழ மன்னருள் ஒவ்வொருவர் வரலாற்றை விளக்க இந்நூற்றொகை எழுந்தது. இதன்கண் சோழ மன்னருள் மிக்க கீர்த்தி படைத்த சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு முதற் பாகத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கிள்ளி வளவன், சோழன் நலங்கிள்ளி என்ற சோழர்களின் வரலாறுகள் இத் தொகுதியின் இரண்டாம் பாகமாகிய நூலில் கூறப்பட்டுள. இம்மன்னர்களின் வரலாறுகளை ஊகித்துணரச் சங்கச் செய்யுட்களே பெரிதும் உதவியாயின.

கோப்பெருஞ் சோழன் வரலாற்றிலே தமிழ்ப் புலவர் அனைவரும் அறிந்தின்புறும் பிசிராந்தையார் நட்பின் பெருமை நன்கு விளக்கப்பட்டது. அந்நட்பின் பெரு

மையை இந்நூலைச் சிறுவர் அறிதல் வேண்டும் என்றே செய்யுட்களை யெல்லாம் உரை நடையாக்கி உரிய வண்ணம் அறிந்து அமைத்துளேன். கோப்பெருஞ் சோழன் அமைச்சரும் அரும்புலவருமாகிய பொத்தியார் மனை வாழ்வு கூற வேண்டுவது அவசியமாதலால், அஃது ஒரு வாறு புனைந்துரைக்கப்பட்டது. சேர மன்னன் ஒருவன் அவனை வென்று சதுக்க பூதத்தைக் கொண்டு சென்றான் என்ற பழஞ்செய்தியும், கோப்பெருஞ் சோழன் மக்களோடு மாறுபட்ட செய்தியும் பழைய வரலாறுகளுக்கு மாறுபடா வண்ணம் புது முறையால் அமைக்கப்பட்டன. மக்கள் குணம் ஒருவாறு பிறகு சீர் திருத்தம் பெற்றதாகவும் காட்டப்பட்டுளது.

சோழன் செங்கணான் என்றும் கோச்செங்கட் சோழன் என்றும் அறியப்படும் சோழ மன்னன், சைவத் திருமுறைகளாலும் திருமங்கையாழ்வார் திருவாக்காலும் புகழப்பெறும் பேறு பெற்ற அரசனே யாவன் என்பது சாஸன ஆராய்ச்சித் துறையிற் றேர்ந்த ஸ்ரீமான் வேங்கையர் என்பார் கொள்கையாம். இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட செங்கணான் வரலாறு இங்கு விளக்கி யெழுதப்பட்டது. இவன் சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு போர் புரிந்து வென்ற செய்தி பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்படுவதே. "தமிழ்ப் புலவர் வரலாறு" என்ற பெயரால் இரண்டு ஆண்டுகளின் முன்பு என்னால் எழுதிவெளியிடப் பெற்ற நூற்றொகையில் வரும் பொய்கையார் வரலாற்றிலே யான் இச்செய்தியைச் சரித்திர முறை பற்றி விளக்கினேன். அங்கு, சோழன் செங்கணான் சேரமான்

கணைக்கா லிரும்பொறையோடு செய்த போர்கள் இரண்டு என்று கூறினேன். அதனை அறிஞர் சிலர் கண்டித்தனர். இவ்வுண்மைச் செய்தியைப்பற்றி மேலும் சிறிதளவு ஆராய்ந்து இந்நூலில் ஆண்டிருக்கின்றேன். இங்கும் முன் போலவே இரண்டு போர்கள் நிகழ்ந்ததாகவே குறித்துளேன். புறநானூற்றிலே எழுபத்து நான்காம் செய்யுளாகிய "குழவி யிறப்பினும்" என்று தொடங்கும் செய்யுள், சேரமான் கணைக்கா லிரும்பொறை பாடியதாம். அச்செய்யுளின் கீழுள்ள குறிப்பு, "சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறுது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு," என்பதாம். பொய்கையார் பாடிய களவழி நாற்பதிலே கழுமலப் போர் விவரிக்கப்பட்டது. கழுமலம் சோழ நாட்டின்கண் உள்ளது. குடவாயிற் கோட்டம் சேர நாட்டின்கண் இருப்பது. இங்குச் சிறை செய்யப்படுதற்கு முன் நிகழ்ந்த போர் திருப்போர்ப் புறம் என்ற ஊரில் உள்ள போர்க் களத்தில் நிகழ்ந்தது. திருப்போர்ப் புறம் எந்நாட்டின்கண் ணுள்ளது என்பது விளங்கவில்லை. சேர நாட்டின்கண் இருப்பதாகவே ஊகிக்க வேண்டும். 'குழவி யிறப்பினும்' என்ற பாடலைச் சேரமான் பாடியபோது நிகழ்ந்த போர் சேர நாட்டில் திருப்போர்ப் புறத்தில் நிகழ்ந்ததெனவும் பொய்கையார் களவழி நாற்பது பாடக் காரணமாயிருந்த போர் சோழ நாட்டிலே கழுமல நகர்க்கருகே நிகழ்ந்ததெனவும் ஊகிக்கலாம். இப்போர், சோழ நாட்டகத்ததாகிய

வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்ததென்று நற்றிணை யுரை யாசிரியர் ஸ்ரீமான் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவ்வாறு இரண்டு போர்கள் நிகழ்ந்தன வென்று கொள்ளாவிடின், கலிங்கத்துப் பரணி யாசிரியர் சயங் கொண்டார்,

" களவ ழிக்கவிதை போய்கையுரை செய்யவுதியன்
காலவ ழித்தலையை வெட்டியர சிட்டபரிசும் "

என்று பாடியது பொய்யாய் முடியும். இவ்விரண்டு செய்திகளையும் பொருத்தக் கருதிச் "சங்கத் தமிழும் பிற் காலத் தமிழும்" என்ற தம் உரை நூலிலே மகாமகோ பாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் 'துஞ்சிய' என்ற சொல்லுக்கு மயங்கிக் கிடந்த என்று பொருள் கொள்ள வேண்டும் என்பார்கள். 'நச்சினார்க்கினிய னெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்பது போல ஐய ரவர்கள் இட்ட பிச்சையாகத் தமிழ் பயின்று வரும் சிறியேன் அவர்கள் கருத்தை மறுத்துப் பேசத் துணிந்து வந்தேனிலேன். நன்கு ஆராய்ந்து என் உள்ளத்துக்கு உண்மை யென்று புலப்பட்டவற்றைக் கூறத் துணிந்தே இங்ஙனம் எழுதினேன். புறநானூற்றிலே பிற இடங் களிலே இச்சொல் இறந்த என்றே பொருள் தருதலா லும், சாஸன ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் வி. வேங்கையர் இப்பொருளே பொருத்தமெனக் கூறி யிருப்பதாலும், 'குழவி யிறப்பினும்' என்ற செய்யுள் பாடிய அரசன் பிறகு உயிர் பெற்று வாழ்ந்தான் என்பது 'மான மழிந்த பின் வாழாமை முன்னினிதே' என்று நீதி வழங்கும் நாட்டிற் பிறந்தார்க்குச் செவி சுடும் சொல்லாமையா லும், பூனந்துரை வகையாற் புதுமைகள் புகுந்திருப்

பினும் உண்மைச் செய்திகளைப் பண்டையோர் கொள் கைக்கொப்பவே ஆராய்ந்து கூறுவது இந்நூற்றொகை யின் நோக்கமா மாகையாலும், தமிழ்ப் புலவர் வரலாற் றிலே கூறியவாறு இங்கும் இரண்டு போர்கள் என்றே விரித்து எழுதியுளேன். இவ்வாறு யான் கருதுவது பொருத்தமே யாமென என் தமிழாசிரியர் தம் கருத்தை வெளியிட்டருளியது எனக்குப் பேருதவியாயிற்று.

இளம்பருவத்திலே தந்தையை யிழந்து கலைப்பயிற் சிக்கு வழியின்றி மயங்கிய சிறியேனை மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்த்துக் கொண்டு உதவி புரிந்த தமிழ் வள்ளல் டோ. பாண்டித் துரைத் தேவர் என்ற நல்லோர் பெயரை நினைந்துருகா திருக்க இயலாது. அன்னார் உதவியின்றியின், தமிழ் எங்கே? சிறியே னெங்கே? தமிழ்ச் சங்கக் கலாசாலையில் கல்வி பயிற்றித் தமிழ்ச் செல்வத்தை யான் அடையுமாறு உதவிய தமிழாசிரியர்களாகிய ஸ்ரீ. சு. ஹரிஹரையரவர் களுக்கும், காலஞ் சென்ற தமிழ்ப் புலவர் சு. அரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கும், இந்நூலின் உரிமையை யேற் றுக்கொண்ட ஸ்ரீ. உ. வே. திருநாராயண ஐயங்கார் அவர் களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள் உரியனவாம். தமிழ்ப் புலவர் வரலாறு, பாண்டிய மன்னர் என்ற என் நூற்றொகைகளை அச்சிட வேற்றுக்கொண்டதுபோல இதனையும் ஏற்றுக்கொண்டு எனக்கு ஊக்கம் உதவிய மதுரைப் புத்தக வணிகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனார் அவர்களுக்கும், அச்சிடும்போது ஒப்பு நோக்குதல் முதலிய பணி புரிந்துதவிய என் அன்பர் தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள் உரியன வாம். தமிழ் வளர்ச்சியில் ஊக்கமுடைய இளஞ்சிறார் பலர் பெருகிய இந்நாளிலே இந்நூல் அவருள்ளத்தே உண்மையான தமிழபிமானத்தை வளர்க்க உதவுமா யின், அதுவே இதனை எழுதியதாற் பெற்ற பெரும் பயனாக மதிக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

21—11—'31
புதுக்கோட்டை

நா. கனகராஜையர்

ஸ்ரீ :

சோழ மன்னர்

மூன்றும் பாகம்

1. கோப்பெருஞ்சோழன்

I

நள்ளிரவு—விழுது படத் திணிந்த வீங்கிருள்—கழுதும் வழி தேடும் கங்குற் பொழுது—அள்ளிக் கொளலாய் அடையத் திரண்டொன்றுய்க் கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்—கள்வரும் காவலருமே அச்சமின்றித் திரியும் அர்த்த யாமம்—அரசன் அரசாட்சியின் ஆற்றலே அளந்து பிறர் அறியவுதவும் இடையிரவு! நாடு நகரெங்கும் வாழ்வார் அனைவரும் அரசன் காவல் உள்ளது என்ற உறுதியால் தம்மைமறந்து துயின்றனர். உறையூர்ப் பெருநகரம் கலக்கமற்று உறக்கங் கொள்கின்றது. எவ்வுயிரும் தம்மை மறந்து துயிலும் அப்பொழுது, ஒருவன் விழித்துத் தன் சிந்தையில் எழுந்த துயரை அடக்க வழியறியாது, உலவிக்கொண்டிருந்தான். அவன் உலவிக்கொண்டிருந்த விடமோ, சாமானியமான

தன்று ; அரண்மனையையடுத்த சோலையில் உள்ள பெரிய மாளிகையின் உப்பரிகை யாகும். சோலையில் உள்ள பல வகை மலர் மரங்களின் மணத்தோடு கலந்து வந்த காற்று, அங்கு வீசியது. வேறு சில மணந்தரும் பொருள் களும் அருகே இருந்தன. பூவும் புகையும் பொடியும் நெய்யும் எவ்வெவ்வகையால் மணந்தரக் கூடுமோ, அவ் வவ்வகை யெல்லாம் அங்கு அமைக்கப் பெற்றிருந்தன. எங்கு நோக்கினும் மனத்தை வசீகரிக்கக்கூடிய நல்ல காட் சிகளே அவன் அருகில் இருந்தன. ஐம்புலன்களும் ஆரத் துய்த்தற்குரிய எல்லா வகைப் பொருள்களும் அங்கு இருந்தன. இவ்வளவும் இருந்தும், அவன் மெல் லிய பூப்போன்ற அணை ஒன்றிலும் அமர மனம் இன்றி, உலவிக்கொண்டிருந்தான்; தனக்குள்ளே என்னென்ன யோசனை செய்தானே ! இறுதியிற் பின்வருமாறு மெல் லப் பேசினன்: அவன் பேசிய பேச்சால் அவன் இன் னான் என்பதை அறியலாகும்.

"அறத்தின் ஆற்றல் அடங்கியதா? அருள் என்னும் இறைவன் குணம் எங்கு ஒளித்தது? சோழர் குடியின் பெருமை குன்றுதற்குரிய காலங் குறுகிவிட்டதா? எங் கும் ஒரே இருளாய் இருக்கின்றதே ! நான் எண்ணுவது ஒன்றும் நிறைவேறக் காணேன். இயற்கைக்கு மாறுய செய்கை யெல்லாம் என்னுட்டில் என் கண் முன்னே நிகழ்கின்றனவே! இஃது இறைவன் செயலோ? அவ னன்றி யோரணுவும் அசையாது என்பரே! ஆண்மை யும் வீரமும் போர்ப் பயிற்சியும் சிறந்த என் மைந்தர் இருவரும் இப்பொழுது எனக்கு உதவியாய் இருப்ப ராயின், யான் இவ்வாறு கலங்க நேரிடுமோ? அவ்விருவ

ரும் அறியாமையாற் செய்த குற்றத்தின் பொருட்டு நான் அவரை நாட்டை விட்டு அகலுமாறு ஆணையிட்டேன். பிறகு தக்க பெரியார்களைக் கொண்டு அவர்கள் தங்கள் குறை பொறுக்குமாறு கேட்டிருக்க லாகாதா? நாட்டு மக்களேனும் இவ்விஷயத்தில் வேண்டுவன செய்திருக்கலாகாதா? உரிய காலத்தில் வேண்டுவன செய்யாமையால், இப்பொழுது என்ன நிலை வந்தது? குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை என்னையும் என் குலத்தையும் ஆண்மையையும் திறமையையும் அவமதித்துப் போரியற்றத் துணிந்தான். அவன் மிகவும் நெருங்கி வந்துவிட்டான் என ஒற்றரால் அறிகின்றேன். அறிவுடைப் பெருமக்களெல்லாம் யான் புரிந்த செயல்களில் ஒன்றும் குறை காண்கிலராயினும், இப்பொழுது போர் முயற்சிக்கு யான் படும் சிரமத்துக்குப் பரிகாரம் கூற வறியாதிருக்கின்றனர். காரணம் என்ன? என் நாட்டுப் படைஞர் அனைவரும் என் சார்பில் நிற்பராயின், இச்சேரன் வருகையைப் பற்றி யான் சிறிதும் கவலை கொள்ளேன். என் மனத்துக்கு மாறுபாடாக நடந்த என்றன் மைந்தர் இருவரும் நாடெங்கும் சுற்றிப் படைகள் சேர்த்து, நாட்டுப் படைஞரிற் பெரும்பாலாரைச் சாமதான பேதங்களால் தம் சார்பில் சேர்க்க முயன்று கொண்டிருப்பதாக அறிகின்றேன். தந்தைக்கு மாறாகப் போர் செய்தற்குரிய முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கும் அச்சிறுவர், அறிஞர் உரை கேட்பராயின், நாடு இக்காலத்தில் இருக்கும் நிலை அறிந்து அமைதி தேடிக்கொள்ளலாம். அவருடன் சேர்ந்திருக்கும் தீயர் அதற்கு இடங்கொடார். பகை யரசன் நெருங்கி வந்து

கொண்டிருக்கின்றன். அவன் இன்னும் இரண்டொரு தினங்களில் உறையூரையே முற்றுகை யிடக்கூடும். என் ஆண்மையும் வீரமும் அறிவும் சூழ்ச்சியும் படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்ற ஆறு அங்கங்களும் செம்மையுற அமையப் பெறுமையால், பயனற்றொழியும். நாடு காவற்கென்று அமர்த்தப் பெற்றிருக்கும் படை ஞர், அரசினர்க்கு மாறுகத் திரும்பி வேறொரு திறத் திலே சேர்ந்துகொள்ளும் பொழுது நாடு அடையும் நிலையை யென்னென்று கூறுவது? என் அமைச்சருட் பிறர் எவ்வாறிருப்பினும், பொத்தியார் எப்பொழுதும் யான் புரிவனவற்றிலுள்ள அற நிலையை ஆய்ந்து, என் சார்பாகவேயிருந்து வருகின்றார். அவர் ஒருவர் இருந்து என்ன செய்யக் கூடும்? இயன்றவளவு துணையாய் வரும் படையைக் கொண்டு போர் செய்வேன். வருவது வருக. வெற்றியும் தோல்வியும் ஒருவர் கைப்பொரு ளல்லவே! இறைவன் அருள் இருப்பின், எல்லாம் இனிதே யாம். 'கோப்பெருஞ்சோழன் அக நாட்டிலிருந்த குழப்பத்தாற் புறநாட்டிருந்து வந்த பகைஞரோடுபோர் புரியப் பின்னிடைந்தான்,' என்ற பழிச்சொல் எனக்கு வரலாகாது. 'மானம் அழிந்த பின் வாழாமை முன்னி னிதே.' இனிச் சிறிது நேரம் சயனிப்பேன். காலையில் என்ன செய்ய வேண்டியிருக்குமோ! எதற்கும் சிரமபரி காரம் செய்துகொண்டு, சித்தமாயிருப்பது நல்லது."

இவ்வண்ணம் பேசியபிறகு கோப்பெருஞ்சோழன் அதிக நேரம் விழித்திருந்த களைப்பால் அங்கிருந்த தொரு பஞ்சணையிற் சாய்ந்தான். மெய்காவலர் அருகில் நின்று காத்திருந்தனர். துக்கம் உடையானுக்கும் கவலை

யுடையானுக்கும் தூக்கம் வருமோ ? அவன் பலவகைக் கனவுகள் கண்டு சூரியன் உதய மாதற்கு இரண்டு நாழி கைக்கு முன்பே எழுந்தான் ; காலைக் கடன்களைக் கழித் துக்கொண்டான். ஒற்றர் சிலர் வந்து, சேரர் படை அரணை வளைத்துவிட்டதாகக் கூறினர். பொத்தியாரும் வந்தடைந்தார். படைத் தலைவரும் அவர் பின்னர் வந் தனர்.

பொத்தியார்:—அரசர் பிரானே, யான் சேரர் பெரும் படையோடு வந்திருப்பதாக அறிகின்றேன். போர் நிகழ்ந்தால், நம் நாட்டு மக்களிற் பலர் மடிய நேரிடுமே யன்றி, வெற்றி பெறுதற்கு நம்மால் இயலா தென்றே தோன்றுகின்றது.

சோழன்:—படைத்தலைவரே, போர் விளைந்தால் என்ன ஆகும் என்று நீர் எண்ணுகின்றீர் ?

படைத்தலைவர்:—மன்னர் மன்னரே, நான் சேர வரசின் படையின் அளவு அறியும் பொருட்டு அர ணின் மதிள்மேல் ஏறி மறைவிடங்களில் நின்று பார்த் தேன்; அஃது இப்பொழுது நாம் சேர்க்கக் கூடிய படை யைப் போலப் பதின் மடங்கு இருக்கு மென்று தீர்மா னித்தேன். கோட்டை மதிலும் முன்னே நடந்த பல போர்களால் உறுதி குறைந்திருக்கின்றது. நம் படை எண்ணிற் குறைந்ததற்குக் காரணம் நாம் இங்கே கூறத் தணியவில்லை. வில்லேருழவர், வேல் வல்லார், வாள் வீரர், யானை வீரர், இவுளி மறவர் என்ற பல திறத் தினரும் நம் நாட்டுக்கு உரிய அளவில் இப்பொழுது மிகவும் குறைந்திருக்கின்றனர். இதற்குக் காரணம் அரச குமாரர் மூபற்றியேயென்று கூற வேண்டியிருக்

கிறது. இப்பொழுது நம் கை வசும் இருக்கும் சிறிய படையோடு நாம் போர்க்கு எதிர்த்து நிற்போமாயின், நம் மக்களிற் பலர் மடிவதன்றி, நாமும் பரிபவப்பட நேரும். சமாதானமாக வழி யுண்டு என்று தோன்றுமாயின், வேண்டுவன செய்யலாம். பொத்தியாரும் இருக்கின்றார். பிற பெரியார்களும் இருக்கின்றார்கள். போர் புரிந்தே நம்மாலியன்றவளவு முயன்று பார்க்க வேண்டுமென்று ஆணை பிறக்குமாயின், நான் என் உயிருள்ள வளவும் நாட்டையும் அரசையும் காவல் செய்து நிற்பேன்.

சோழன்:—இங்கிருந்து யாரையேனும் தூதாக அனுப்பி, அவர் கருத்தை அறிவோம். பிறகு போர் என்றலும், அமைதி யென்றலும், எதுவரினும், நலமே. தூதாக யாரை யனுப்புவது என்பதை இங்கு முடிவு செய்தல் நலமன்றே?

படைத்தலைவர்:—தூத லக்ஷணம் அமைந்த சான்றோருள் ஒரு சிலரே இப்பொழுது நாட்டகத்தில் இருக்கின்றனர். அவருள் அமைச்சர் தலைவர் பொத்தியாரிற் சிறந்தார் எவரும் இலர். அரசர் நலத்தில் ஈடுபாடுடைய அவரை யன்றி வேறு எவரேனும் தூதராய்ச் செல்லின் நாம் நினைப்பதற்கு மாறான பயன் விளையினும் விளையலாம். ஆகையால், அவரையே தூது போய் வருமாறு ஆணை யிடுதல் நலம் என்று எண்ணுகிறேன்.

சோழன்:—பொத்தியாரே, இப்பொழுது போரெதிர்ந்து வந்திருக்கும் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையை நீர் இளம் பருவத்திலிருந்தே அறிவீர். நும்மிடம் அவன் சிறந்த அன்பு உடையான் என்பதும்

யான் கேட்டிருக்கின்றேன். புலமையிற் சிறந்த பெரியாராகிய நீர், இங்கிருந்து தூதராய்ச் சென்று, நாட்டின் நலங் கருதி, நமக்கு மானமழியா வழியில் ஏதேனும் முடிவு செய்துகொண்டு வரக்கூடுமாயின், நலமாமன்றே?

போத்தியார்:—அரசரே, நும் நலங் கருதி யான் போர் புரியவும் துணிவேன்; அங்ஙனமாயின், தூது போதற்கு அஞ்சுவேனே? ஆயினும் ஒன்று கூற விரும்புவேன்: இளஞ்சேர லிரும்பொறை எதையேனும் பெறக் கருதி இப்போர்க்கு வந்திருப்பனையின், அதைப் பெற்றுலன்றி அவன் அமைதி நாட இயலாதே! அவன் விரும்பும் பொருளைக் கொடுத்தேனும் அமைதி தேடிக் கொள்ளலாமா? அப்பொருளைக் கொடுப்பதால் நம் நாட்டுக்கு நஷ்டம் விளையாதா வென்பதை நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். அவனோடு பேசிய பிறகு இங்கு வந்து ஆலோசித்து முடிவு கூறுவதே நலம் என்று எண்ணுகிறேன்.

சோழன்:—பொத்தியாரே, நீர் போய்ப் பேசுஞல், திரும்ப இங்கு வந்து கேட்டு முடிவு கூற வேண்டிய அவசியமில்லை. உயிரும் உடலுமாய் என்னொடு பயின்ற உமக்கு நாட்டின் நலங் கருதி ஒரு முடிவு கூற வியலாதோ?

படைத் தலைவர்:—அது மெய்யே.

போத்தியார்:—அவ்வாறுயின், யான் போய் வருகின்றேன். இறைவன் அருளால் எல்லாம் நலமாகவே முடியும் என்று எண்ணுகின்றேன்.

சோழன்:—விரைவில் வருவீர் என்று நம்புகிறேன்.

பிறகு பொத்தியார் இளஞ்சேர லிரும்பொறையின் பாசறைக்குச் சென்றார்; அவனை அங்குக் கண்டார். அவனும் பகைவரின் அமைச்சரேயாயினும், சிறந்த புல வரும் தூதரும் ஆகிய அவரை மரியாதையோடு வர வேற்று, ஆசனத்தில் அமரச் செய்தான்.

பொத்தியார்:—சேர வேந்தரே, எம் மரசர், நீவிர் இப்போர் புரிய வந்த காரணத்தை அறிந்துகொள்ள விரும்புகின்றார். அடுத்தடுத்துள்ள இரண்டு அரசுகள் அடிக்கடி போர் புரிந்து அல்லற்படாமல் அமைதியாய் இருப்பது நன்றன்றே? இத்தமிழகத்திலே அடிக்கடி நிகழ்ந்த போர்களால் உழவும் வாணிகமும் குறைந்து, நிலமக்களுக்கு வறுமை அதிகமாகின்றது. அரசராயிருப் போர் மக்கள் நலத்தையன்றே நாட வேண்டும்? இப் பொழுது நீர் போர் புரியக் கருதி வந்திருக்கும் காரணம் எதுவே யாயினும், இருதிறத்து மக்களுள்ளும் எண்ணி றந்தார் மடிவர் என்பது உண்மையன்றே? ஆண்டு தோறும் திங்கள்தோறும் அரசரது உற்சாகத்தின் பொருட்டு நம் தமிழகத்தே பல வீரர் மடிந்தொழிந்து, நம் நாட்டுக்குப் பெரிய நஷ்டம் விளைப்பதும் சிறப் பாகுமோ? அயல் நாடுகளிலே சென்று ஆங்கிருக்கும் மன்னரை வென்று நாடு பெறுதல் என்பது வேறு; இங்கு ஒருவர்க் கொருவர் நெருங்கிய உறவினராகிய சேர சோழ பாண்டியர் இவ்வண்ணம் அடிக்கடி போர் தொடுப்பது அற நெறியாம் என்று எனக்குத் தோன்ற வில்லை. எம் அரசர் புலவர் பலராற் போற்றப்பட்ட சிறந்த பெருந்தகையாளர் என்பதை நீவிரும் அறிவீர்; நும் நாடும் அறியும். அற நெறிக்கு மாறான செயல்

இன்றுகாறும் அவர் ஒன்றும் செய்ததில்லை. எக்கார ணத்தால் அவர் நும் சினத்துக்குப் பாத்திர ராயினர்? இயன்றவளவு முயன்று நீவிர் இருவீரும் சமாதானம் செய்துகொள்வதே இந்நாட்டில் உள்ள அறிஞர்க்கெல் லாம் உடன்பாடாம்.

சேரன்:—பொத்தியாரே, நீவிர் கூறிய வனைத்தும் பொருத்தமே. யாம் சமீப காலத்திலே எம் படைஞ ரோடு பாண்டிய நாட்டுக்குப் போர் புரியச் சென்றோம்; அங்கு அறிவிற் சிறந்த புலமைப் புரவலனாகிய பழையன் மாறனை வென்று அம்மன்னன் நமக்கு உவந்து கொடுத்த பொருளை யெல்லாம் கொண்டோம். நம் படைஞர் மேன்மேலும் போர் புரியும் அவா வுடையவராயிருக் கின்றனர். ஆகையால், இங்கு இப்பொழுது தந்தையும் மக்களும் ஒற்றுமை யில்லாமல் நாட்டின் வலிமை குறைந் திருப்பதாய் அறிந்து, அற நெறியாற் போர் புரிந்து, நாட்டைக் கைக்கொள்ள வந்தோம். நாம் இந்நாட் டைக் கொள்ள விரும்புவது ஒரு காரணம் பற்றியே: உறையூர்ப் பெருமன்றத்திலே சதுக்கப் பூதம் என்னு மொரு தெய்வம் இருப்பதாக அறிந்தோம். அது தவ மறைந் தொழுகுவோர், அவமறைத் தொழுகும் அல வைப் பெண்டிர், அறைபோகமைச்சர், பிறர் மனை நயப் போர், பொய்க் கரியாளர், புறங் கூற்றாளர் என்ற தீயா ரைப் புடைத்துண்ணுமென்று கேட்டோம். அத்தெய் வம் இந்நாடகன்று எம் நாட்டுக்கு வருமாயின், எமக்கு உறையூர் வேண்டா. அது வராதாயின், உறையூர் எம் ஆட்சிக்குள் வருதல் வேண்டும் என்பது எம்முடைய விருப்பம். இதனை நும்மரசரிடம் தெரிவித்து வேண்டு

வன செய்ம்மின். அமைதியாக இருக்கவே யாமும் விரும்புவோம்.

போத்தியார்:—அரசரே, நீவிர் விரும்புவது இஃ தொன்றுதானே? இன்னும் ஏதேனும் உளதோ?

சேரன்:—வேறொன்றும் எமக்கு வேண்டா. நும் மரசர் எமக்குப் பொன்னும் பொருளும் தரவேண்டா. இப்பூதம் ஒன்று எம் நாட்டுக்கு வருமாயின், யாம் இன்றே போரை நிறுத்திச் செல்வோம்.

போத்தியார்:—சேரவேந்தரே, சதுக்கப் பூதம் இந் நாட்டில் இருப்பது போலவே நும் நாட்டிலும் வந்து நரகரைக் கடிந்து நல்லோரை வாழ்விக்கும்படி நானே செய்கின்றேன். புலவர் வாய்ச்சொற் கேளாத பூதமு முண்டோ? யான் என் வாயால் மெய்ம்மொழி யன்றி வேறொன்று முரையேன் என்பதை நீவிர் அறிவீர். இனி நீவிர் நும் நாட்டுக்குத் திரும்பிச் சென்று, நக நடுவிலே ஒரு சதுக்கம் அமைத்து, அத்தெய்வத்தை எண்ணிப் பூசைகள் செய்விக்க. அவ்வமயத்தில் அஃது அங்கு வந்து வேண்டும் வண்ணம் புரியுமாறு நான் அதனை வேண்டிக் கொள்கிறேன்; போர் நிகழா வண்ணம் படைஞரை யழைத்துக்கொண்டு நும்நாட்டுக்குச் செல்ல வேண்டுகின்றேன்; எம்மரசர் நுமக்குதவும் சிறப்பாக இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன். இஃது இந்நாட்டு மக்கள் கைத்தொழிற்றிறத்தை உலகம் உண ரத்தக்க வண்ணம் அமைந்த மயிராடை; எலி மயிரால் ஆகியது. செந்நெருப்புண்ணும் செவ்வெலி மயிர் ஆடை அரசராலும் போற்றற்குரியது என்பதை நீவிர் அறிவீர். இது நும் திருவிரலாழியினுள் அடங்கும். இப்பொன்

ஞடையையும் பெற்றுக்கொண்மின் இனி யான் விடை பெறலாமோ ?

சேரன்:—புலவரேறே, பொத்தியாரே, நும் முயற்சியினல் எம்மிருவர்க்கும் அமைதியானது எம் நாட்டுக்குச் சென்று யாம் சதுக்கப் பூதத்துக்குப் பூசை செய்த பிறகு நாடெங்கும் பிரசுரிக்கப்படும். நீர் இப்பொருளைப் பெற்று, நும்மரசரிடம் எம் வணக்கத்தை அறிவிக்க. இனி யாமும் விடை பெறுவேம்.

பொத்தியார் உடனே அங்கிருந்து புறப்பட்டுச் சோழமன்னனிடம் வந்தார்; சேரமன்னனுகிய குடக்கோ இளஞ்சேர லிரும்பொறை தம் மொழியை யேற்றுக் கொண்டு நிணைத்த வண்ணம் பெரும்போர் தொடுக்காமற் போக ஒப்புக்கொண்ட செய்தியைச் சோழனிடம் தெரிவித்தார். அருகில் இருந்த படைத் தலைவர், "சேரர் அமைதியோடு திரும்பிச் செல்லுதற்காக நம்மிடம் விரும்பும் பொருள் யாதோ ?" என்றூர். அதற்குப் பொத்தியார் மறு மொழி கூறத் தொடங்கி, அரசனே நோக்கிப் படைத்தலைவர்பாற் கூறற்குரியதை இருவரும் கேட்கக் கூறினர்: "அரசர் பெருமானே, இளஞ்சேர லிரும்பொறை நம்மிடம் வேறென்றும் வேண்டவில்லை. நம் நாட்டில் உள்ள சதுக்கப் பூதம் தன் நாட்டிலும் வந்து வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். நான் அவ்வண்ணமே செய்கின்றேன் என்று கூறி வந்தேன்."

படைத் தலைவர் :—தெய்வத்தை ஓர் இடத்திலே இருந்து மற்றேரிடத்துக்குப் பெயர்த்தல் மக்களா லியலுமோ ? இது செயற்கருஞ் செயலாயிற்றே ! இதைச் செய வல்லார் இங்கு யார் இருக்கின்றூர்?

போத்தியார் :—'செயற்கரிய செய்வார் பெரியர்,' என்பது தாம் அறியாததன்றே? அரசர் பிரான் ஆணை கிடைப்பின், யானே இப்பூதம் சேர நாட்டுக்குச் செல்லும்படி செய்வேன். வேறு பிறரும் இச்செயல் செய வல்லார் இருக்கின்றனர். உண்மைப் புலமை படைத்தாரால் இயலாத செயலும் உளதோ ?

படைத்தலைவர்:—அவ்வாறு தெய்வங்களை இடம் விட்டு இடம் பெயர்ப்பது சாத்தியம் என்றே கொண்டாலும், நம் நாட்டுக்கு அழகாகவும் அற நெறித்துணையாகவும் இருக்கும் அத்தெய்வத்தைப் பிறர்க்குத் தந்து நாம் அதனால் இதுகாறும் பெற்றுவந்த பெரும்பயனை இக்காலை இழத்தலாகுமோ? அவ்வாறு செய்வது நமது அரசுக்குக் குறைவன்றே ?

போத்தியார்:—முன்னே இச்சதுக்கப் பூதம் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தது ; சோழமன்னர் உறையூர்க்கு வரவேண்டும் என்று வேண்டிக்கொள்ள இரண்டிடங்களிலும் கோயில் கொண்டு தன் அறப்பணியை இயற்றி வருவதாய் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது நாம் வேண்டுவோமாயின், மூன்றிடங்களில் இருக்க இசைதலாகாதா ? பூதங்களுக்கும் தெய்வங்களுக்கும் காலம்இடம் என்ற எல்லை வரன்முறையுண்டா? எல்லாம் வல்ல இறைவனே வேண்டுவார் ' வேண்டுவதேயீவானாய் இருக்கும்போது, அவனருள் பெற்று உலகநலம் புரியும் இப்பூதம் நம் வேண்டுகோட்கு இணங்காதா ? நம் நாட்டு அருட்புலவருட் சிறந்த முதியார் ஒருவர் இருக்கின்றார். அவரை நேரிற் கண்டு அவரைக் கொண்டு நம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

சோழன்:—பொத்தியார்க்கு எதுசம்மதமோ, அஃது எனக்கும் சம்மதமே. இவ்விஷயமாக நான் ஒன்றும் மாறுபட்ட கொள்கை கூறுதற்கில்லை. புலமையின் வயப்படாத பொருளும் உண்டோ? அப்புலவரை யழைத்து வாரும். நாம் மூவரும் கோயில் சென்று, அச் சதுக்கப் பூதத்தின் விருப்பத்தை அறிவோம்.

பொத்தியார்:—அவ்வண்ணமே செய்வோம்.

பிறகு பொத்தியார் விரைவிலே அங்கு அப்புலவரை அழைத்து வந்தார். அவரும் வந்து அரசனை வணங்கினர். பின்பு அரசன், படைத் தலைவர், பொத்தியார், நரைமுது புலவர் என்ற நால்வரும் புறப்பட்டுப் போய்ப் பூத சதுக்கத்தை அடைந்தனர். எல்லாம் வல்ல இறைவனை, 'உலகம் நலம் பெறுக,' என்ற பிரார்த்தனையோடு நால்வரும் சிறிது நேரம் தியானித்தனர். பிறகு நரை முது புலவர் எழுந்து நின்று,

"அறத்தின் நிறத்தினை யனைவருங் கண்டு
நெறிபிழை யின்றி நேர்மையிற் சென்மார்
அறநெறி பிழைத்து மறநெறி செல்லுறா உம்
பொறியறை போகிய புல்லியோர் தம்மை
மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்கத்
தொடுத்த பாசமும் பிடித்த சூலமும்
கரமுறக் கோளீ இ விரைவுறப் பற்றுபு
புடைத்துணும் பணிசெயும் பூத மென்னைச்
சதுக்கத் தமர்ந்த விதுப்புறு தெய்வமே!
பூம்புகார் நகரிற் பொருந்தினை முன்னுள்
மன்னரு மக்களும் வணங்கிவேண் டுதலால்
உறையூர் நகர்புகுந் துறைதர லாயினை.

இங்குவாழ் மக்கள் யாவரும் இன்புற
வஞ்சிமா நகரின் மன்னர் விழைந்தவா
றுங்ஙக ரடைந்துநன் கறநெறி நடாத்தி
வாழ்தல் வேண்டுதும் மனமுற வ்ருளி
எம்மிறை வேண்டுகோள் இனிது செவிக்கொளா
மறுமொழி யின்னே வழங்குதி யினிதே."

என்று பாடினர். உடனே சதுக்கப் பூதம் அவர்கள் முன் தோன்றி, அந்நால்வர்க்கும் காட்சி கொடுத்து, "மன்னர் விழைந்தவாறு உரிய காலத்தில் முற்றுவிப் பேன்," என்று கூறியது. பிறகு புலவரும் பிறரும் இறை வனருளை வாழ்த்தி, அங்கிருந்து புறம் போந்து அரண் மனை யடைந்தனர்.

அரசன் சிறிது நேரம் எல்லாரோடும் பேசி யிருந்து, புலவர்க்குத் தக்கவாறு சிறப்புச் செய்து, விடை கொடுத் தனுப்பினன். பொத்தியாரும் படைத் தலைவரும் பிறகு விடை கொண்டு சென்றனர். பல நாட்களாக மனத்தி லிருந்த கவலை ஒருவாறு நீங்கியதால், அரசனும் அன்று நிம்மதியாகத் துயிலச் சென்றனன். கிரமமாக அரசியற் குரிய செயல்களெல்லாம் நிறைவேறி வந்தன.

II

தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரை கோடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு.

மதுரைமா நகரம், திருமால் உந்திக் கமலம் போன்ற சீரூர் என்று புலவர்களாற் புகழப் பெற்ற திரு நகரம். அந்நகரத்தே அமைந்த தெருக்கள் தாமரை மலரில் இதழ்கள் அமைந்தவாறுபோல அமைந்துள்ளன. அத் தாமரைப் பொகுட்டுப்போல உள்ளது நகர் நடுவமைந்த சிவபிரான் கோயில் என்பர். அந்நகரின்கண் வாழும் தண்டமிழ்க் குடிகள், மலரின் தாது போல்வார்கள். தாதுண்ணும் வண்டு போல்வர் பரிசில் வாழ்நராகிய புலவரும் பாணரும் பிறரும். இத்தூணைச் சிறப்பு வாய்ந்த நகரம் கமலமலரிற்பிறந்த நான்முகன் நாவினின்றுதோன்றிய நான்மறை முழக்கத்தால் எத்தகையோர்க்கும் இன்பமே விளைக்கும் துயிலிலிருந்து எழும் வழக்கம் உண்டேயன்றி, வஞ்சிமா நகரும் உறையூரும் போலக் கோழி கூவுதலால் எழாது.

இத்தூணைத் தெய்வச்சிறப்புவாய்ந்த நகரிலே நுதல் விழி நாட்டத்திறையோன் கோயிலிற் காலையியம் எழுக்கது. அன்பர் பல்லாயிரவர் இறைவனைக் கண் குளிரக் கண்டு பேரின்பம் பெறக்கருதி, வையை நீரோடி, அகமும்

புறமும் தூயராய் அடைந்தனர். எம்பெருமாற்குத் திருவனந்தல் நித்தியத் திருவிழா நிறைவேறியது. அறிவுடை நம்பி என்ற பாண்டியர் குலத் தோன்றலும் இறைவனை வணங்கும் பொருட்டு அங்கு வந்திருந்தான். அவன் பாண்டிய நாட்டில் ஒரு பகுதியை ஆண்டுகொண்டிருந்தான்; பல வாண்டுகளாக மக்கட் பேறில்லாக் குறையை மனத்தில் எண்ணி வருந்தியிருந்தான்; இறைவன் அருள் கூட்டி வைப்பினன்றி எதுவும் இயலாது என்ற உறுதியான எண்ணத்தோடு சமயம் வாய்த்த போதெல்லாம் கூடற் பெருமானைக் கண்டு வணங்கி வாழ்த்தி வந்தான்.

திருக்கோயிலிலே வந்து நின்று இறைவனைத் தரிசித்த பலரும் மெல்ல மெல்லத் தம் மனையகம் நோக்கிச் செல்லலாயினர். அரசனும் செல்லவெண்ணி, அக வாயிலைக் கடந்தனன்; ஆங்கு அறிவின் விளக்கத்தைத் தம் கண்ணொளியால் தெளிவுறுத்தி மெல்லச் சென்ற ஒரு முதியாரைக் கண்டான். அவர் வயதால் மூத்தவராய் இருந்தும், மூப்புக்குரிய தளர்ச்சியேனும் நரைதிரைமுதலிய குறிகளேனும் இல்லாதவராய் இருந்தார். அது கண்டு அதிசயித்த மன்னன், அவரை நோக்கி, "பெரியீர், தாம் இருப்பது எவ்வூரோ? தாம் இங்கு இன்றுதான் வந்ததாகத் தோன்றுகின்றது. இதற்கு முன்பு நான் தம்மை இங்குக் கண்டதில்லையே!" என்று வினவினன்.

அதற்கு அம்முதியவர், "ஐயன்மீர், யான் இந்நாட்டகத்து வாழ்பவனே; இறைவனருளாலும் பெரியார் அனுக்கிரகத்தாலும் தமிழ்ச் செல்வம் சிறிதளவு படைத்

துளேன். எவரிடமும் சென்று புகழ்ந்து பேசி இரந்து வாழ வேண்டிய நிலையில் வருந்தா வண்ணம் எம் ஊரில் உள்ள என் மக்கள் குடும்பப்பொறையை ஏற்றுக்கொண் டிருக்கின்றனர். அரசரால் எனக்கும் பிறர்க்கும் எவ் வகை இடையூறும் இல்லை. நிலத்தினுற் பெறத் தக்க இறைகளைப் பெற வருவோர் கிரமமாகவே நடக்கின்ற னர். ஆகையால், நான் இந்நாள்வரை நும்மை நேரிற் கண்டதில்லை. எம்மூர் இந்நாட்டகத்துள்ளதும் முன் னளிற் புலவர் பலர் பிறந்து வாழ்ந்த பெருமை பூண்ட தும் ஆகிய பிசிர் என்பதே ஆகும்," என்றூர்.

அது கேட்ட மன்னன், "இந்நாளிலும் பிசிரின்கண் பெரும்புலவர் பலர் உளர் என்றே கேட்டிருக்கின்றேன்; பிசிராந்தையார் என்ற புலவரைப் பற்றிப் பலர் கூறக் கேட்டிருக்கின்றேன். எனினும், அவரை நேரிற் பார்த்த தில்லை. பெரியீர், இன்னும் நீர் நும் பெயர் கூறவில் லையே!" என்று கேட்டான். முதியவர், முக மலர்ச்சி யோடு அரசனை நோக்கி, "ஐயன்மீர், என்பெயர் என்று யான்விருப்பத்துடன் கூறிக்கொள்வது, 'பெருஞ்சோழன்' என்பதே. என்னை நீர் இன்னன் என இப்பொழுது அறிந்துகொள்ளலாமே!" என்றனர்.

இவ்வாறு புலவர் பேசியதைக் கேட்ட அறிவுடை நம்பி, மிகவும் ஆச்சரிய மடைந்து, அவரை நெருங்கி, மன மகிழ்ச்சியோடு அவர் இரு கரங்களையும் பற்றி, மெல்ல அழைத்துக்கொண்டு கலியாண மண்டபத்தை அடைந்தான். அங்கே இருவரும் அமர்ந்தனர். பிறகு மன்னன் புலவரை நோக்கி, "இந்நாள்வரை என்னருகு வராமலும் என்னைக் காணுமலும் இருந்த பெரும்புலவ

ராகிய நீர், இன்று இறைவனருளால் இத்திருக்கோயில் வந்தடைந்தீர். யானும் நும்மைக் காணப் பெற்றேன். பாண்டிய நாட்டிற் பிறந்து வளர்ந்த புலவராயிருந்தும், கோப்பெருஞ்சோழனிடம் நீர் பெருநட்புப் பூண்டுள்ளீர் என்பதை யான் கேட்டறிந்துள்ளேன்; இன்றுகாறும் நீவிர் இருவீரும் ஒருவரை யொருவர் கண்டதில்லை யென்று கூறக்கேட்டுளேன். தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

என்று பாடியருளியதற்கு நீவிர் இருவீரும் இலக்கியமாயிருக்கின்றீர் என்றும் அறிந்து இன்புற்றேன். நும் அருமைத் திருவாக்கால் ஒரு பாடலேனும் பெறுதிருப்பின், அஃது எனக்குப் பெருங்துறையாம். எனக்கு அறிவு புகட்டு முகத்தால் ஒரு செய்யுள் இசைக்க வேண்டுகிறேன்," என்று கூறினன்.

பிசிராந்தையார் என்ற அப்புலவர் பெருமான், பாண்டியன் அறிவுடை நப்பியை மகிழ்வோடு நோக்கி, "அரசரே, யான் நுமக்குக் கூறவுரியது என்னவுளது? நும் நாட்டிலும் நும்மிடத்தும் டான் யாதொரு குறையையும் காண்கிலேன். ஆயினும், பொதுவாக அரசர் அறியத் தக்க சிலவுரைகள் கூறுகிறேன்; செவிசாய்க்க," என்று கூறிப் பின் வருங் கருத்தமைந்த ஒரு செய்யுளைப் பாடினர்:

"நன்கு விளைந்து முற்றிய நெல்லை யறுத்து மனையகங் கொணர்ந்து சோறுஆக்கிக் கவளம் கவளமாகக் கொடுப்போமாயின், ஒருமா நிலத்திற் குறைந்த சிறு நிலத்தில் உள்ள

பயிரின் வீளவும் ஒரு பெரிய யானைக்குப் பல நாளை உண வாக வுதவும். யானை தானே புகுந்து உண்ணத் தொடங்குமா யின், நூறு செய்யாயிருப்பினும், அதன் வாயிற் புகும் அள வைக்காட்டிலும் கால் மிதித்தலால் மிகுதியாய் அழியும். அவ் வண்ணமாகவே, அறிவுடைய அரசன் குடிமக்களிடம் இறை யிறுத்தற்குரிய நெறியை யறிந்து காலம் இடங்கட் கேற்பக் கைக்கொள்ளும் வழக்கமுடையனு யிருப்பின், அவன் நாடு கோடிக் கணக்கான பொன்னைப் பெற்றுப் பெரிதும் நலம் பெறும். வேந்தன் அறிவு குறைந்தவனுய் நாடோறும் சந் தர்ப்பத்திற்கேற்ற அற நெறியை இடித்துக் கூறுத வீண் ஆரவார முடைய அமைச்சர் முதலிய பரிவாரத்தாற் சூழப் பட்டு அன்பும் அருளுமின்றிக் குடிகளிடம் பலாத்காரத்தாற் பெறும் இறைப் பொருளை விரும்பி யிருப்பனுயின், அந்த யானை புகுந்து அழித்த நிலம் போல, அவன் நாடு அவனுக் கும் பயனற்றதாய் அழிவெய்தும்." *

அச்செய்யுளைக் கேட்ட அறிவுடை நம்பி, "ஐயன் மீர், புலவர் பெருமானே, நும் செய்யுளில் 'வாய் புகு வதனினும் கால் பெரிது கெடுக்கும்' என்ற உபமானத் துக்கு உபமேயம் விளங்கவில்லையே!" என்றுன். புலவர், "அதன் கருத்து வெளிப்படையே. அரசனுக்கு நேரில் வந்து சேரும் இறைப் பணத்தைக்காட்டிலும் அதிக மாகவே அவன் பரிவாரங்களாலும் சிறிய உத்தியோகஸ் தராலும் தண்டலாளராலும் பிறராலும் குடி மக்கள் மனம் புண்ணுகும்படி வலிந்து இறுக்கப்படும் என்பது அங்கே குறிப்பிடப்பட்டுள்ள விஷயம். இனி இது நிற்க. அரசரே, யான் இங்கு நேரிலே நும்மைக் கண்ட போது நீவிர் நும் மனத்திலே ஏதோ ஒரு பெருங்கவலை

* புறநானூறு-செய், 184.

வைத்துக்கொண் டிறைவனிடம் பிரார்த்தித்துக்கொண் டிருந்ததாக அறிந்தேன். நுமக்கு இருக்கும் மனக் குறை இன்னதென யான் அறிய லாகுமோ?" என்று கேட்டார்.

புலவர் இவ்வண்ணம் விசாரிப்பர் என்பதை எதிர் பாராதிருந்த மன்னன், தனக்கிருந்த மனக்குறை பெரி தாகத் தோன்றச் சிறிது தலை குனிந்திருந்து, பின்னர்ப் புலவர் முக நோக்கி, "புலவரேறே,

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தோட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களோ யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே."*

என்று கூறி, "என் மனக்குறைக்குக் காரணம் இப்பொ ழுது இன்னதென நீர் அறிந்துகொண்டீர் அன்றே?" என்று வினவினன்.

பிசிராந்தையார், "இறைவன் அருள் இருப்பின் இயலாத துண்டோ? அரசரே, நீர் மக்களில்லாக் குறை யைப் பற்றிக் கவலையுற வேண்டா. நாட்டு மக்கள் அனைவரும் நும் மக்களே யல்லவா? அன்றியும், இறை வன், அற நெறி பிழையா நுமக்கு இக்குறையை நெடு நாள் வைத்திரான். விரைவிலே நீர் மகப்பேறுற்றுக் களிப்பீர். இனியான் நும்மிடம் விடை பெறலாகுமோ?" என்றார்.

* புறநானூறு - செய், 188.

அறிவுடை நம்பி புலவரைப் பிரிய மனமற்றவனாய், "இன்று என்னோடு அமர்ந்து உண்டு, இன்னும் சிறிது நேரம் தமிழ் நூல்களைப்பற்றி அளவளாவிக்கொண்டிருந்து பிறகு போகலாமே!" என்றான். புலவர், "அரசரே, கஞ்சியுங் கூழும் அமைதியோடுண்டு கலக்கமற்று வாழும் என் போன்றார்க்கு அரசரிடம் விருந்து தகுமோ? ஆயினும், யான் நும் விருப்பத்திற் கிணங்க இன்று ஒரு நாள் நும்முடன் இருந்து அளவளாவிப் பின் விடை பெற்றுக்கொள்வேன்," என்றார்.

பிறகு அரசனும் புலவரும் அரண்மனை யடைந்தனர். அரண்மனையிலே புலவர்க்கு மிகுந்த உபசாரத்தோடு விருந்து நடைபெற்றது. மாலைக்காலத்திலே அவர் வந்திருக்கும் செய்தி யறிந்து, மதுரை நகரத்துப் புலவர் பலரும் புலவரவைக்களம் வந்து புகுந்தனர். அரசனும் அமைச்சரும் பிசிராந்தையாரும் அங்கு வந்துற்றனர். அனைவரும் எழுந்து நின்று, பிறகு அரசன் கையமைத்தலும் தத்தம் இருக்கையில் அமர்ந்தனர். பிசிராந்தையாரும் பிற புலவரும் சிறிது நேரம்வரை நூலாராய்ச்சியைப் பற்றிய பல துறைகளில் அறிவுடை நம்பி கேட்டு மகிழும்படி பேசியிருந்தனர். பின்பு ஒரு புலவர், பிசிராந்தையாரை நோக்கி, "ஐய, நும் அன்பினைக் கொள்ளை கொண்ட அரசர் யார்?" என்று வினவினர். அது கேட்ட பிசிராந்தையார், அருகிலிருந்த அறிவுடைய நம்பியும் அமைச்சரும் கேட்டு அதிசயிக்குமாறு மறுமொழி கூறலானார்:

"அறிஞர்காள், எனது அன்பைக் கொள்ளை கொண்ட அரசர் யாரென அறிய விரும்புவீராயிற் கூறு

வேன்; கேண்மின்: களமர்கள் தங்களுக்கென்றே அரித் தெடுக்கப்பட்ட முதிர்ந்த கள்ளே ஆமையிறைச்சியுடனே வேட்கை தீர உண்டு பருகிக் கொழுப்போடு சுட்ட ஆரல் மீனைத் தம் கன்னங்களில் அடக்கி, மது மயக்கத் தோடும் வாழ்கின்ற இடங்களையுடைய புது நீர் வரு வாய் அறுத சோழ நாட்டின்கண் பாணர் பசிக்குப் பகையாகி உறையூரில் வாழ்கின்ற கோப்பெருஞ்சோழர் என்ற மன்னரே என் அன்புக்குரியார். அவர் அங்கே அமைச்சுப் பூண்டிருக்கும் பொத்தியார் என்ற புலவ ரோடு வாழ்கின்றார்."

இம்மொழியைக் கேட்ட புலவரெல்லாம் அரசன் முகம் நோக்கினர். அவனும் மன மகிழ்ச்சியோடு பிசி ராந்தையாரை நோக்கி, "புலவீர், யான் நும் நட்புரிமை கோப்பெருஞ்சோழருக்கே யுரியது என்பதை அறி வேன். அம்மன்னரைச் சமீபகாலத்திலே காணும் விருப் பம் நுமக்கு உளதோ?" என்று கேட்டான்.

புலவர் அதற்கு மறு மொழி கூறத் துணியவில்லை. பின்னர்ச் சிறிது நேரம் புலவர் பல பொருள்களைப் பற் றிப் பேசியிருந்தனர். அறிவுடை நம்பி மகிழ்ச்சி மீதூ ரப் பெற்றுப் பிசிராந்தையார்க்கு உரிய சிறப்புக்கள் செய்து, விடை கொடுத்தனன். அவரும் அரண்மனை யகன்று, மற்றப் புலவரோடு புறம் போந்து, தம் ஊர் நோக்கிச் செல்ல விடை பெற்றனர்; பிசிர் இருக்கும் திசை நோக்கி நடந்தார்; வழியில் ஆகாயத்திலே அன் னச் சேவல் ஒன்று பறந்து செல்வதைக் கண்டார்; கோப்பெருஞ்சோழனை விரைவிலே காண வேண்டும் என்று தம் உள்ளத்தில் எழுந்த வேட்கையை அவ்வன்

னத்தைத் தூது போக்கி ஒருவாறு தணித்துக்கொள்ள லாம் என்று கருதிப் பின் வரும் கருத்துள்ள பாடலைப் பாடினர்:

"அன்னச் சேவலே, அன்னச் சேவலே, பகைவரைக் கொன்று வெற்றி பெறும் பெருமை பொருந்திய எம் மன்ன னது அளி சிறந்த முகம்போல விளங்கும் பூரண சந்திரன் தோன்றிய இம்மாலைக் காலத்தே யாம் செயலற்று வருந்தும் படி இருக்கும் நிலைமையைக் கண்ட நீ, குமரி யாற்றின் அயிரையை மேய்ந்து, வடதிசைக்கண் உள்ள இமய மலைக் குச் செல்கின்ற யாயின், இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட தாகிய சோழ நாட்டின்கண் சென்று, சிறிது தங்குக. ஆங்கு உறையூரின்கண் உயர் நிலை மாடத்திலே நின் மனைவி மக்க ளோடு சென்று வாயில் காவலரிடம் உணர்த்தாமலே தடை யின்றிக் கோயிற்கண்ணே புகுந்து, எம்முடைய பெருங் கோவாகிய கிள்ளி செவியிற் கொள்ள, "பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரில் வாழும் ஆந்தையின் அடியுறை," என்று சொல்க. அவ்வண்ணம் அரசனிடம் சொல்வாயா யின், நினது பேடை பூணும்படி தனக்கு மிகவும் உவப்பா கிய அணிகலத்தை அம்மன்னன் கொடுப்பன். இதுவே யான் நின்னிடம் வேண்டுவது."*

பின்பு அவர் இவ்வாறு சோழனை நீங்கி தம்மூர் போய்ச் சேர்ந்தார்.

---

* புறநானூறு - செய், 67.

III

"பேறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

மக்கட்பேறு உலகில் வாழும் மாந்தர்க்குப் பெரிதும் மன மகிழ்ச்சியை விளைப்பது என்பதில் ஐயம் சிறி தளவுமில்லை. உலகில் வாழ்வார் துய்த்தற்குரிய சகல சுக போகங்களையும் தரற்குரிய செல்வப் பொருள், சிலர்க் குப் பெருந்தீங்கு விளைக்கக் காண்கின்றோம். அறிவை வளர்த்து உலகத்துக்கு உதவும்படி ஒருவனை ஆக்கி வைக்கும் கல்விப் பொருள், சில தீயார் கைப்பட்டுத் தீங்கு பெரிதும் விளைப்பதைக் கண்கூடாகக் காண்கின் றோம். அவை போலவே மக்கட்பேறு சிலர்க்குப் பெருந் துயர்க்குக் காரணமாவதும் உண்டு.

அறிவறிந்த என்ற அடை மொழியை மக்கள் என் பதன்முன் சேர்த்த வள்ளுவர் கருத்தை வள்ளலே உள் ளவாறறிவான். தந்தையோடு அற்பவிஷயங்களிற் பகை பூண்டு நெறி பிழைத்து நடந்து வீணர்களாய்த் திரிந்து பெரும்பாவத்துக்காளாகும் சில மக்களை இந்நாளிலும் காணலாம். தம் இளம்பருவத்திலே தமக்கு வேண்டு வன வெல்லாம் செய்து தம்மை முன்னேறச் செய்த தந்தையர்க்குத் தாம் அவரது முதுமைப் பருவத்தே செய்தற்குரிய கடமைகளை நன்குணராத மைந்தர் எத் தனையர் இன்றும் இருக்கின்றார் ? மக்கட் பேற்றால்

மிக்க புகழ்படைத்த தசரத மன்னர் போன்றூர் இங்ஙனி லும் உளர். மக்கட் பேற்றூலே பழியும் பாவமும் பெற் றுப் பெருந்துயரோடு மாண்ட திருதராஷ்டிரனைப் போன் றூர் இங்ஙனிலும் உளர்.

பெற்றோர் பெருமுயற்சியால் உயர்ந்த பதவியைப் பெற்ற சில மைந்தர் கண்ணும் காதும் இழந்து முதுமை யால் வருந்தும் அப்பெற்றோர்க்கு உண்ணத் தகாத கல் லும் மண்ணும் கலந்த பொருள்களைக் கொடுத்தும், அவற்றை உண்ணலாகாமல் அவர்கள் திகைக்கும் போது தடிகொண்டு மொத்தியும், பின் உணவே யில்லை யென்று பட்டினி கிடக்கச் செய்தும், வதைப்போரா தலைக் காண்பதும் உண்டே! சில மக்கள் தம் பெற்றோ ரையே பொய்க் குற்றம் சாட்டிப் பிறரைத் தூண்டிச் சிறையிலிட்டு மகிழ்வதும் உண்டே! இவ்வாறான இயற் கைக்கு மாறான குணங்களெல்லாம் எதனால் ஏற்பட் டன ? இன்றிருந்து நாளையழியும் பொருளும் வாழ்வும் இடையிற் புகுந்தன்றே இப்படிச் செய்கின்றன ? உல கில் வாழும் மக்களுக்கு மற்றப் பிராணிகளைப் போன்று அன்று அன்று கவலையற்ற பிழைப்பு நடத்தி முன்னை நாள் நிலைமையையும் மறுநாள் நிலைமையையும் நினைப்ப தற்கே இடமில்லாமற் போமாயின், இப்பெருங்குற்றங் கள் ஒழியினும் ஒழியலாம்.

கோப்பெருஞ்சோழன், அறிஞர் பலர்க்கு உற்ற தோழன்; அறிவினுக்குறையுள்; கல்விக்குக் கொள்கலம்; ஆண்மைக்குப் பிறப்பிடம்; போர்த்தொழிற்குப் புக்க கம்; வீரருள் வீரன்; சூழ்ச்சியும் துணிவும் சான்றகாவ லன்; அறிவினிரம்பிய அமைச்சர் பலராற் சூழப்பெற்ற

வன்; புலவர் பலர்க்கும் தாயகம் போன்று அன்பு புரி வோன்; அற நெறி யமைவை நுனித்துணர்ந்த அர சர் பிரான்; எல்லாக் குண நலங்களும் பொருந்தியி ருந்தும் மக்கட் பேற்றிற் பெருந்துன்பமுற்றான். அவன் மக்கள் சகரரைப்போன்று அறுபதினாயிரவ ரல்லர்; கௌரவரைப் போன்று நூற்றுவரு மல்லர்; பாண் டவரைப் போன்று ஐவரு மல்லர்; அவ்வீரரைப் போன்ற ஆண்மையும் வீரமும் படைத்தாரு மல்லர்; பெரும்படை கொண்டாரும் அல்லர். அவர் இருவ ரே. அவர் எண்ணும் எண்ணமும் செய்யும் செயலும் அறத்திற்கு மாறாய் இருப்பினும், அவர்க்கு உதவியாய் நின்றாரும் சிலர் இருந்தனர்.

அம்மக்கள் இருவரும் தம்மை நாட்டினின்றகற் றிய தம் தந்தையாகிய மன்னனிடம் பழிக்குப் பழி வாங்கக் கருதினர். அவன் தம் தந்தையே யாயினும், தமக்குப் பெருந்தீங்கு விளைத்தவனுக எண்ணின ராகை யாற் பெருமுயற்சி செய்து, பெரும்படையைத் திரட்டி, உறையூராணை வளைத்துப் போர் தொடுக்கத் தொடங் கினர். அவர் படை உறையூர்க்கருகு வந்த செய்தி யைக் கோப்பெருஞ்சோழன் அறிந்தான்; அமைச்ச ரையும் படைத் தலைவரையும் அழைப்பித்து ஆலோசனை செய்தான்:

சோழன்:—படைத் தலைவரே, அமைச்சர்களே, இப்பொழுது தொடங்கி யிருக்கும் போரில் யாம் என்ன செய்யலாம் என்று நுமக்குத் தோன்றுகின்றது? இப் பொழுதே நம்மைப் பகைத்து வந்திருப்போர், போர் தொடுக்கத் தொடங்கிவிட்டனர். நாம் அமைதியாய் இருத்தற் கியலாத நிலையில் இருக்கிறோம்.

படைத் தலைவர்:—அரசர் பிரானே, யான் இங்கு வருமுன்பு படைஞரை நகரக் காவற் கேற்றவாறு அமைத்து நிறுத்தி, மிக்க சேதம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளுமாறு எனக்கு அடுத்த பதவியிலிருப்போரிடம் கூறி வந்திருக்கிறேன். வந்திருப்போர் எவரே யாயினும், நம் நகரை அவர் படைகளால் தாக்கத் தொடங்கிய பிற்பாடு நாம் அமைதியோடு இருப்பது பொருத்தமன்று.

போத்தியார்:—அரசரே, போர் புரியக் கருதி நம் நகர மதிலை வளைத்திருப்போர் நும் மக்கள் இருவரும் அவர்க்குத் துணையாக வந்த படைஞரும் என்பதை அறிந்தேன். அரசர் என்ற முறையிலும் தந்தையார் என்ற முறையிலும் அவர்கட்கு நீர் அறவுரை கூறித் தூதனுப்புதல் நலமாம் என்று எனக்குத் தோன்றுகின்றது.

சோழன்:—பொத்தியாரே, என்னிடம் உள்ளன் புடைய நீவிர் இவ்வுரை கூறியது ஒருவாறு யோசிக்கத் தக்கதே. இன்று என்னைப் பகைத்துப் போர் புரிய வந்திருப்போர், சென்ற பத்துத் திங்களாக நாட்டினின்றகன்று, நமக்கு மாறான கிளர்ச்சி யொன்று செய்துகொண்டு, பெரும்படையோடு வந்திருக்கின்றனர் என்பதை நாம் அறிய வேண்டும். இன்று நாம் தூதனுப்பிச் சமாதானம் செய்துகொள்ள முயன்றாலும், நம் முயற்சி பயன்படாது. இதற்கு முன்பு பல முறை அவர்களை நல்வழிப்படுத்த நான் முயன்றதை நீவிர் அறிவீர். சென்ற திங்களிற் சில சான்றோரை அனுப்பி அறவுரை கூறுவித்தபோது, அவர் கூறிய மறுமொழியை நீர் மறந்திருக்க மாட்டீர்; ஆயினும், அதனை இங்குளார் அறியக்

கூறுகின்றேன்: 'இனி எமக்கும் நும் மரசர்க்கும் இடையில் வில்லும் வேலும் வாளும் தமக்குரிய பணி பூணும். அவரது மரணத்தின் பிறகே யாம் அங்காட்டிற் புகுவோம். அம்மரணமும் அவர்க்கு வீர சொர்க்கம் கிடைக்கத் தக்கதாகவே யிருக்கும். இனிச் சொல்லாற் பயனில்லை,' என்று கூறினரே! அவர் கருத்து இவ்வாறு இருப்பதை அறிந்தும், நாம் தூது போக்கலாமோ? இத் தூணையும் தீநெறியிற் செல்லத் துணிந்த அன்னவர் தூதராய் வருவோர்க்கு உரிய மரியாதையை மறந்து சிறை செய்யவும் வேறு வகையில் துன்புறுத்தவும் துணிவராயின், பின்னர் நம்மால் என்ன ஆகும்? ஆகையால், தூதனுப்பிச் சமாதானம் நாடுவதைக்காட்டிலும், நாம் நேரில் எதிர்த்து நின்று போர் புரிந்து, வீர சொர்க்கம் பெறுதலே சிறப்பென யான் எண்ணுகின்றேன்.

படைத் தலைவர்:—போர் என்று புகுந்த பிறகு வெற்றியும் தோல்வியும் இவர்க்கென உறுதி கூற இயலுமோ? இவ்வளவு தூரம் துணிந்து வந்திருக்கும் அவ்விருவரில் ஒருவரேனும் அல்லது இருவருமேனும் நம்படைஞர் கைப்படைகளால் மாய்ந்துவிட நேரிடினும் நேரிடலா மன்றே? அநேக ஆண்டுகள் அரசியற் றிப் புலவர் பலரானும் புகழப்பெற்று வாழ்ந்திருக்கும் அரசர் பிரானுகிய நுமக்குப் பின்னே இவ்வரசுரிமை பூணவுரியார் எவர் என்று அறியலாகாத மூடிவும் நேரிடலாமே!

பொத்தியார்:—வென்றலும் தோற்றலும் பழிவருவது சோழர் குடிக்கே. எவர் வென்றலென்? எவர் தோற்றலென்? அரசர் வென்றலும் பழிக்கப்படுவர்;

தோற்றாலும் பழி பூண்பர். அவர் மக்களுக்கும் அன்னதே யமையும். ஆகையால், இப்போர் நிகழாதிருக்க வழியுண்டோ என்பதையே நாம் ஆராய வேண்டும்.

அமைச்சர்:—அரசரே, அறிஞர்களே, இங்கு யான் ஒன்று தெரிவித்துக்கொள்கின்றேன்: நாட்டைச் சுற்றிலும் பெருங்குழப்பம் நடந்திருக்கிறது. சிலர் இளவரசர் சார்பிலும் சிலர் அரசர் சார்பிலும் இருக்கின்றனர். இப்பொழுது நாமாகப் போர் தொடங்கவில்லை. அரசர் சார்பாயிருப்போரும், 'குழப்பம் எவ்வாறு ஆகின்றது; பார்ப்போம்,' என்று இருக்கின்றனர். இளவரசர் அரசர்க்கு விரோதமாக நாடெங்கும் பலரைத் தூண்டிவிடத்திருக்கின்றனர். இன்று நாம் உறுதியாகச் சென்று இக்கிளர்ச்சியை அடக்காதிருப்போமாயின், நாடு என்ன நிலை யடையுமோ! நாம் அறியோம். எதிர்த்து வருவோர் எவரேயாயினும், அடக்க வேண்டுவது முதலில் அரசர் பொறுப்பாம். பிறகு அவ்வாறு எதிர்த்து வந்ததற்கு ஏற்பட்ட நியாயங்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யலாம். இந்தப் போர்க்கு இப்பொழுதே நாம் சென்று வேண்டுவன செய்து வெல்ல முயல வேண்டும். அமைதியைப் பற்றி ஆலோசிப்பதற்கும் தூது பேசுவதைப் பற்றிச் சிந்திப்பதற்கும் இது சமயமன்று.

படைத்தலைவர்:—அமைச்சர் கூறுவதே எனக்கும் நியாயமாகத் தோன்றுகிறது. அரசர் கருத்தும் அதற்கேற்பவே அமைந்திருத்தலால், நம்மால் இயன்ற வளவு போர் புரிந்து பார்ப்போம்; பிறகு நடப்பது அறிந்து, அதற்குத் தக்கவாறு செய்துகொள்வோம்.

போத்தியார்:—நீவிர் எல்லீரும் இவ்வாறு அபிப்பிராயம் கூறும்பொழுது நான் கூறுவதற்கு என்ன

இருக்கிறது ; யானும் போர் புரிய எழுகின்றேன். எல்லோர் மனத்திலும் ஒருவாறு அமைதி நிலவிய பிறகு இதன் நியாயாநியாயங்களைப் பற்றிப் பேசுவோம்.

சோழன்:—பொத்தியார்க்கு உவப்பாயில்லா திருக்கும் ஒரு செயலே யான் என்றும் செய்யத் துணியேன். இன்று போர் புரியும் முயற்சியில் எல்லோரும் ஒரே மனமாய் முடிவு கூறியது பற்றி யான் மகிழ்கின்றேன். படைத்தலைவரே, இனி நீர் போர்க்கு வேண்டுவன கவனிக்கலாம். யானும் பொத்தியாரும் பிறரும் நும் பிறகே வருவோம்.

பிறகு அங்நகரத்தாருள் அமர்ப் பயிற்சி பெற்றோர் அனைவரும் தத்தம் படைகளைக் கைக்கொண்டு எழுந்து வந்தனர். அரசரும் அமைச்சரும் பிறரும் பின் வந்தனர். அரணை வளைத்திருந்த பகைப்படை அரண்மேலமைத்திருந்த நூற்றுவரைக் கொல்லி, எழு வீசி முதலிய பல வகையாம் பொறிப்படைகளால் மிக்க சேதமடைந்தது; மெல்ல மெல்லப் பின்னிடைந்து நகர்க்கு வெளியே அரைக் காவத தூரத்திலிருந்த பறந்தலையை யடைந்தது. அச்செய்தியை யறிந்த அக நகரப் படைஞரும் படைத்தலைவரும் மன்னர் பிரானும் அரணுக்கு வெளியே வந்து, பகைப் படையைத் தொடர்ந்து பறந்தலையை யடைந்தனர்.

இருதிறத்துப் படைகளும் அணிவகுத்து நின்றன. இரண்டுக்கும் இடையில் வில்லிலிருந்து அம்பு பாய்ந்து செல்லுதற்குரிய தூரமே யிருந்தது. சூரியன் ஒளி இருதிறத்தார்க்கும் பொதுவிற் பயன் படுமாறு படைஞர் நின்றனர். சோழ மன்னன் படைகள் நின்ற இடம்

சிறிது மேடாகவும், அவன் மக்கள் படைகள் நின்ற இடம் சிறிது பள்ளமாகவும் இருந்தன. நகரத்துப் படைஞர்க்கு இஃது ஒரு வகையில் நலமாயிற்று. வாள் வீரர் நின்ற பக்கம் வாள்வீரர் நின்றனர். வில் வீரரும் வில் வீரரும் எதிர்த்தனர். வேன்மறவரும் வேன்மற வரும் ஒருவர் மீதொருவர் பாய்ந்தனர். யானை வீரரும் இவுளி மறவரும் தேர்த்தலைவரும், தத்தமக்குரிய நிலைக ளில் நின்று, பகைப் படைகளைக் கலக்கினர். இரண்டு நாட்கள் இரவொழியப் பகலெல்லாம் போர் நிகழ்ந்தது. மக்கள் படை, தோற்றுவிடுமோ என்று எண்ணும்படி, சிறிது சிறிதாய்ப் பின்னிடையத் தொடங்கியது.

கோப்பெருஞ்சோழன் இரண்டா நாள் இரவு சிரம பரிகாரத்துக்காகப் பாசறையை யடைந்தான். அங்கு அமைச்சர் பலரும், படைத் தலைவரும், அமைச் சர் தலைவராகிய பொத்தியாரும் வந்துற்றனர். புல்லாற் றூர் என்ற சிற்றூரில் வாழும் புலவர் திலகராகிய எயிற்றி யார் என்பாரும் வந்தனர். அவர் எயினர் குடியிற் பிறந்த பெண்பாற் புலவர். ஆடவர் அதிசயிக்கத் தக்க அருங்கல்வி படைத்தவர். கரிகாற் பெருவளத்தானும் பெருஞ்சேரலாதனும் போர் புரிந்த வெண்ணிப் போர்க் களத்தே வந்து பாடல் பாடிய வெண்ணிக் குயத்தியார் போன்று, தாமும் இங்கு அரசனுக்கு அமைந்த அற நெறி கூறக் கருதி வந்தார்.

பெண்பாலராயினும், பெரும்புலவ ராகையால், அங்கிருந்தார் அனைவரும் அவரை அன்போடு வரவேற் றனர். போர்க்களத்திடையிலே யுள்ள பாசறையேயா யினும், புலவர்க்குப் புகப் பெறுத நிலையுளதாமோ ?

அவர் அரசனைக் கண்டு வணங்கி, வாழ்த்தினர். அரசனும் அருகிலிருந்த பல பெரியார்க்குத் தரும் சிறப்பினை அவர்க்கும் செய்து, அவரை அமரச் செய்தான். அவர் ஓர் இருக்கையில் அமர்ந்ததும், அரசனை முக மலர்ச்சியோடு நோக்கிப் பின் வரும் கருத்துள்ள பாடலைப் பாடினர். புலவர் அனைவரும் அதனை மகிழ்வோடு கேட்டிருந்தனர்.

"பகைஞர் எதிர்த்து நின்ற பெரும்போர்களிலே அவரைக் கொன்று பெருமை பெற்ற வலிமையும் முயற்சியும் உடைய வேந்தரே, நிலமெல்லாம் நிழல் செயும் வெண்குடை விளக்கும் விறல் விளங்கிய மன்னர் பிரானே, கடல் சூழ்ந்த இவ்வகன்ற நிலவுலகத்தே நும்மோடு எதிர்த்துப் போர்புரிய வந்த இருவரும் யாவர்? அமைதியோடு நினைத்துப் பார்ப்போமாயின், அவர்க்கும் நுமக்குமுள்ள உரிமையும் தொடர்பும் மறையாதிருக்கும். அவர் தொகொளாக வழி வழியாகப் பழமையானதொரு பகை கொண்டு எதிர்த்து நின்ற பகைஞர் அல்லர். நீரும் அவர்க்குப் பகையாய் எழத்தக்க உரிமையுடையீரல்லீர். அவர் பாண்டியர் குடியிற் பிறந்தாரும் அல்லர். சேரர் குடியிற் பிறந்தாரு மல்லர். நும் குடியும் அவர் குடியும் ஒன்றே. அவ்விருவரும் அமர்க் காட்சி காண விழைந்து போர்க்கு வந்தனரே யாயினும், நுமக்கு அவரினும் நெருங்கிய உறவினர் வேறு எவரும் இல்லை. பகைஞரை வாட்டும் களிறுகளையுடைய மன்னர் மன்னரே, உலகமெங்கும் பரவிச் செல்லும் சிறந்த கீர்த்தியைப் பெற்று நீர் உயர்ந்தோருலகம் புகப் பெறும் காலத்தே நும்மால் இந்நிலத்து விடப்பெறும் அரசுரிமையும் பிற வுரிமையும் அவர்க்கே உரியவாம் அன்றோ? அவ்வாறு ஆகும் உண்மையை நீர் அறியாதவராயும் இருக்க இயலாது. இன்னும்

யான் சொல்ல விரும்புவதைக் கேட்க வேண்டுகிறேன்: என்றும் அபகீர்த்தி வரவேண்டுமென்று விரும்புவார் உலகில் இரார்.. இசையையே விரும்பி வாழும் இறைவரே, நிலை பெற்ற வலிமையோடு நும்மோடு போர் புரிய எழுந்த சூழ்ச்சித் திறம் இல்லாத அறிவு படைத்த இவ்விளவரசர் தோற்பராயினும், அமர்க்களத்தே இறந்தொழிவராயினும், நுமது பெருஞ்செல்வத்தைப் பிறகு பெறத்குரியார் யார்? இவ்வமர்க்களத்தே நீர் தோற்பீராயின், இகழ்வார் மகிழ்ச்சி பெற, மிக்க பழி பூண்பீர். ஆகையால், நுமது பகைத் திறத்தை யொழிக்க வேண்டுகின்றேன்; விரைவில் எழுந்து அமைதியை நாட வேண்டுகின்றேன். அஞ்சினோர்க்கு அரசராயிருக்கும் நுமது தாணிழலுக்கு ஒரு குறை வரா வண்ணம் நல்லறம் புரியத் தொடங்குக. வானோர் மிக்க விருப்பத்தோடு நும்மை எதிர் கொள்ளத்குரிய காலம் இன்னும் கெடு நாட்சென்று வரும் என்று எண்ணி யிராமல், விரைவிலே அம்முடிவுக்குத் தக்க அற முயற்சிகளைச் செய்யத் தொடங்குவீராயின், நுமக்கும் நும் குடியாளர்க்கும் மிக்க புகழுண்டாம்.” *

புரவலனும் புலவரனைவரும் எயிற்றியார் அறவுரைகளை உள்ள முருகிக் கேட்டிருந்தனர். பிறகு புரவலன் அனைவரையும் நோக்கி, முக மலர்ச்சியோடு பின்வருமாறு பேசினன்: “புலமைச்செல்வியீர், அன்பர்காள், பொத்தியாரே, இந்த இரண்டு மூன்று தினங்களாக என் உள்ளத்தில் இவ்வெண்ணங்கள் எழுந்ததுண்டு. இன்றுதான் ஓர் உறுதி தோன்றிற்று. எயிற்றியார் பாடிய பாடலே அதற்குக் காரணமாய் நின்றது என்று கூறுவது பொருந்தும். எனக்கும் யாண்டு பலவாயின. இனி

* புறநானூறு—செய், 213.

இவ்வுலகில் வாழு நாள் எத்துணையோ! இந்நாள் காறும் சான்றோரோடு பயின்று நன்னெறியில் நிலையாய் நின்ற புகழை இன்று என் மக்கள் பொருட்டால் அழிக்க விரும்புகிலேன். அவர் விரும்புவது என் நாடும் அரசுந் தாமே? அவை அவர்க்கே உரியன. நானே தரற்குரிய வற்றைத் தாமாகக் கொள்ள வந்தார் என்ற குறையன்றி அவர் மேல் வேறொன்றும் கூறற்கில்லை. இனி யான் இங்கிருந்து காட்டுக்குட் செல்ல விரும்புகிலேன்; இங்கே யிருந்த வண்ணமே உண்டியும் நீரும் இன்றித் தவஞ் செய்து, இறைவன் அடி நிழல் அடைய விரும்புகின் றேன். நீவிர் அனைவீரும் விடை பெற்றுக்கொண்டு, துன்றம் இடங்கட்குச் சென்மின். படைத் தலைவரே, இனிப் போரை நிறுத்தி நம் மக்கட்கு நாம் செய்ய வெண்ணிய செயலைத் தெரிவித்துவிடும். எயிற்றியாரே, நும் பாடல் பரிசில் பெறற்குரியதன்று. அதற்குப் பரிசில் தரத் தக்க ஆற்றலும் எனக்கில்லை. அதிற் கூறிய வண்ணம் யான் நடக்க முயல்வதே நுமக்கு யான் தரும் பரிசிலாம். இனி நீவிர் எல்லீரும் விடை பெறலாம். நானும் பாசறைக்குப் புறத்தே வாளை முன்னிறுத்தித் தவஞ் செய்வேன்."

இதனைக் கேட்ட பொத்தியாரும் பிற சான்றோரும் புலவரும், "இந்நாள் காறும் யாம் நும்மோடு பயின்று இருந்தோம்; இன்று நும்மை அகலத் துணியோம். நுமக்குத் தவம் தகுமாயின், அஃது எமக்கும் தகு வதே," என்றனர்.

அரசன் பொத்தியாரை நோக்கி, "ஐயன்மீர், நுமக்கு யான் அதிகம் கூறற்கில்லை. யாண்டிலும் அறிவிலும்

புலமைத் திறத்திலும் சிறந்தார் பலர் என் பொருட்டாக இக்கிலத்திலேயே தவம் பூணத் துணிவது பொருத் தமோ, அன்றே! அஃது அவரவர் மனப் பான்மைக் குத் தக்கவாறு முடிவு செய்யத் தக்கது. நுமக்கு யான் ஒன்று கூற விரும்புகின்றேன்: இந்நாள் வரை என்னோடு பூண்டிருந்த நட்புக் கருதியேனும், யான் இவ்வமயத் திற் கூறும் உரையை யேற்றுக்கொள்ள வேண்டுகின் றேன். நுமக்கு இன்னும் புத்திரப் பேறு உண்டாக வில்லை. 'புத்திரப்பேறு பெறுதார் நரகம் புகுவர்,' என்று நூல்கள் கூறுவதை நீர் அறிவீர். அன்றியும்,

"தம்போரு ளேன்பதம் மக்கள்; அவர்போருள்
தந்தம் வினையான் வரும்."

என்ற வள்ளுவனர் வாய்மொழி நீர் அறியாததன்று. மக்கள் தேடும் பொருள் பெற்றோர்க்குப் பிதிர்க்கடன் கழித்தற்குதவுவது என்பதை இங்கு மட்டுமன்றி,

"தேன்புலத்தார் தெய்வம் விருந்தோக்கல் தானென்றுங்
கைம்புலத்தா றோம்பல் தலை."

என்ற குறளிலும் அப்புலவர் கூறியருளினர். மன்னரா வார், போர் புரியச் செல்லுங் காலங்களிற் போர்க்குத வாதவரென விடை பெறுவார், பார்ப்பாரும், பசுக்க ளும், பெண்டிரும், பிணியுடையாரும், பிதிர்க்கடன் கழிக்கப் புதல்வரைப் பெறுதாரும் என ஐவகையா ரவர் என மன்னற நூல் கூறும். இவற்றை யெல்லாம் உணர்ந்திருக்கும் புலவர் தலைவராகிய நீர், இங்கு எம் மோடு வடக்கிருக்கத் துணிவது முறையாகாது. நீர் விடை பெறவே வேண்டும்," என்று கூறினன்.

இவ்வுரையைக் கேட்ட பெரத்தியார், "இங்குள்ள சான்றோர்க்கெல்லாம், எளிதிற் கிடைத்த பெரும்பேறு எனக்குத் தகாதாயிற்றே! அமைச்சர்காள், படைத்தலை வரே, இனி எனக்கு அரசு முறையில் ஒரு தொடர்பு மில்லை. யான் என் மெய்யன்பரும் நமக்கெல்லாம் உயிர் போன்றவருமாகிய அரசர் பெருமான் வடக்கிருக்குங் காலத்தில் உடனிருக்கும் பேறு பெறுதேன் ஆயினேன். இன்றே யான் என்னூர்க்குச் சென்று, சில ஆண்டுகள் இருந்து, பிறகு இவ்விடத்திற்கே திரும்பி வந்து, எம் நட்பின் உண்மைச் சிறப்பை உலகறியச் செய்வேன். மன்னர் பிரானே, அறிஞர்காள், நீவிர் அனைவீரும் வடக்கிருக்கத் துணிந்தீர். யான் வருங்காலத்தில் உதவு மாறு நும்மிடையில் எனக்கும் ஓரிடம் ஒழித்து வைக்க வேண்டுகிறேன்," என்று கூறிக் கண்ணீருகுத்தார்.

பொத்தியார் உள்ளுருகியதைக் கண்ட கோப்பெ ருஞ்சோழன் திரும்பவும் அவரை நோக்கி, "அன்பரே, மெய்யான நட்பு உலகில் ஒரு சிலர்க்கே கிடைக்கின்றது. அவ்வாறு பெற்றோரில் யானும் ஒருவன். நீர் என் உண்மை நண்பர் இருவருள் ஒருவராவீர்; மற்றொருவர் பாண்டிய நாட்டில் வாழும் பிசிராந்தையார் என்பவர். அவரது நட்பை உலகறியச் செய்யும் காலம் குறுகியது. நீர் இன்று இங்கிருந்து விடை பெற்று அகன்று, மகப் பேறு பெற்றதன் பிறகு எத்துணை ஆண்டுகள் சென்ற பின்பு இங்குத் திரும்பி வருவீராயினும், நும் நண் புரிமைக்குத் தக்க இடம் நுமக்கு ஒழித்துக் கொடுக்கப் படும். யாம் அனைவேமும் நீர் வரும் காளில் இவ்வுரு வோடிரோம் என்பது உண்மையே யாயினும், நடு கல்

லாகவே யிருந்தாலும், நமக்கு இடம் பற்றுத நிலே ஏற் பட்டு இருக்குமானல், நான் அப்பொழுதும் நமக்கு இடந்தருவதாகக் கூறுகின்றேன். இதை உறுதியாக நம் பலாம். இனியாம் பாசறைப்புறத்தே தக்கதோர் இடத் திலே தவம் புரிவோம்," என்று கூறினன்.

ஏவலர் இடம் ஒழித்துக் கொடுக்க, அரசனும் சான்றோரும் அங்கு அடைந்து, தவஞ் செய்யத் தொடங்கினர். பொத்தியாரும் அருகிலே நின்றுகொண் டிருந்தார்.

IV

"சான்றோர் சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே."*

உறையூர் நகர்ப் புறத்தமைந்த பறந்தலையில் தந்தைக்கும் மைந்தர்க்கும் இடையில் நிகழ்ந்த போர் இவ்வாறு நிறைவேறியது. மைந்தர் அரசுரிமையைக் கைக்கொண்டனர்; நகர்க்குட் புக்கனர். அவரை எதிர்த்து நின்ற படைஞரும் படைத் தலைவரும் பிறரும், இனி வேறு வழியின்மையால், அவரை வணங்கி வாழ்வதாகக் கூறி, அகநகர் சென்றனர். இக்காள் வரையில் தாம் புரிந்த செய்கையின் தெறியின்மையை அறிந்த அம் மைந்த ரிருவரும் தம் தாயின் துயர் நீக்கங் கருதித் தந்தையை அகநகர்க் கழைத்து முன் போலவே அரசுரிமை பூண்டிருக்க வேண்டினர். அவர் வேண்டுகோள் பயன் படாதாயிற்று. கோப்பெருந்தேவி, புற நகர்க்கு வந்து, தன் தலைவற்கு வந்த வாழ்வு தனக்கும் பொருந்துமெனத் தவம் புரியத் துணிந்தாள். அரசனிடம் அன்புக் குரியராயிருந்த பலர் இவ்வுண்மை யுணர்ந்து, தாமும் தவம் புரிந்து உயிரிழக்கத் துணிந்து, தம் உறைவிடம் நீங்கி வெளிப் போந்தனர்.

இவ்வாறு பலரும் வந்ததால், மன்னனுகிய கோப் பெருஞ்சோழன் என்ற பெருங்கோக்கிள்ளி வடக்கு

* புறநானூறு-செய், 218.

நோக்கி யமர்ந்து, உண்டியும் நீருமின்றித் தவம் புரிந்து உயிர் துறந்து உயர்ந்த வுலகம் புகத் துணிந்த விடம் புதுமையின் வருவார்க்கு இடம் பற்றுத நிலையடைந் தது. சான்றோர் ஆனைவரும் அரசனுக்கு இரு மருங்கு மமர்ந்தனர். எல்லோரும் காலையில் நீராடித் திருநீறு தரித்து, வேறு சிந்தையின்றி வடக்கு நோக்கி யமர்ந்து, இறைவனைத் தியானித்திருந்தனர். அப்பொழுது மூதற்கண் அவர்கட்குள் இன்னும் எவரெவர் வரற்குரி யார், இடமொழிக்கப் பெறற் குரியார், என்பதைப் பற் றிப் பேச்சு நிகழலாயிற்று.

சோழன்:—குற்றம் நிரம்பிய காட்சி கண்டு அமைந் திருக்கும் உள்ளமும் நன்முயற்சியிற் றுணிவு பிறவாத் தன்மையும் உடைய சிறியோரே, 'நல்வினையைச் செய் வோமா, செய்யோமா?' என்று ஐயமறுதவராய் இருப் பர் பெரியதொரு மதகளிற்றை வேட்டையாடிப் பற் றச் சென்ற வேட்டுவன், அதனைப் பற்றி வருதலு முண்டு. குறும்பூழ் (காடை) வேட்டையாடச் சென்ற ஒருவன் வெறுங்கையோடு திரும்பி வருதலும் உண்டு. ஆகையால், உயர்ந்த பொருள்களில் நாட்டமும் வேட் கையும் உடைய நல்லோர்க்கு முன்வினைப் பயத்தால் அவர் முயற்சிப் பயன் கைகூடுதற்குரிய காலம் வருமா யின், இங்கியற்றிய புண்ணியப் பயனை யனுபவித்தலன்றி வேறொன்றும் செய்ய வியலாத தேவ லோக வாழ்வு கிடைப்பினும் கிடைக்கும். அப்பெரும்பேறு கிடை யாது போமாயின், திரும்ப உலகிற் பிறவா திருக்கும் பெரும்பேறு கைப்படினும் படும். திரும்ப உலகிற் பிற வாதே மாயப் பெறுவராயினும், இமயத்துச் சிகரம்

உயர்ந்தமைந்தது போல இசையை நாட்டிக் குற்றமற்ற யாக்கையோடு மரணம் பெறுதலும் மிக்க சிறப்புடையதே. சான்றோர்காள், உலகிற் பிறத்தலும் வளர்தலும் மூத்தலும் இறத்தலும் எவர்க்கும் பொதுவில் அமைந்தனவே யாயினும், மிகச்சிலரே தாம் இறந்த பிறகு உலகின்கண் அழியாத புகழுடம்பு பெறுவோ ராவர். நாம் உலகில் வாழ்ந்தவளவும் நன்னெறியில் நிலை நின்று வாழ்ந்தோ மென்பது மெய்யாகில், 'இறந்த பிறகு என்ன வருமோ! நம் வாழ்வு என்னுமோ!' என்ற சிந்தையின்றி நினைத்தவுடன் மரணத்தை வரவேற்கத் துணிவுடையராய் இருத்தல் வேண்டும். மக்களாய்ப் பிறந்து, அறிவுடையர் என்று உலகு பாராட்ட விருந்து இறந்தொழிவார்க்கும் பிறர்க்கும் உள்ள வேறுபாடு இஃது ஒன்றேயன்றே ?

சான்றோர் ஒருவர்:—ஐய, மன்னர் பிரானே, உயிரோடு வாழும் பொழுது எந்த அற நெறியைக் கடைப்பிடித்து எத்துணை உயர்வோடு வாழ விரும்பினமோ, அதே அற நெறி துணையாக உயர்வான இறப்பை அடையத் துணிவது அறிவுடை மக்கட்கு உற்ற கடமையாம். ஆயின், யான் இங்கு ஒன்று கூற விரும்புவேன்: நீர் பொத்தியாரை மகப் பேறு பெற்ற பின்பு இங்கு வரலாம் என்று கூறினீர். நும்மிடம் சிறந்த நண்புரிமை பூண்டிருந்த பிசிராந்தையார் இப்பொழுது இங்கு வருவாரோ ? வந்தால், அவர் நீவிர் இப்பொழுது இருக்கும் நிலைமை யறிந்து என்ன கூறுவரோ!

சோழன்:—அன்பரே, நீவிர் கேட்ட வினவுக்கு விடை கூறுதல் மிகவும் எளிதே. என் அன்பர் பிசிராந்

தையார் அன்பு இத்தன்மைத்து என்று யான் எடுத்துக் கூறத் துணிவதும் என் குற்றமாம். ஆயினும்,

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பவன் உயிர்ஓம் புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே."*

என்று துணிந்துரைப்பேன். இந்நாள் வரையிலும் யானும் என் அன்பிற்குரிய பிசிராக்தையாரும் ஒருவரைப்பற்றி யொருவர் பிறர் கூறிய புகழ்ச்சி யுரைகளைக் கேட்டவளவிலே நட்புரிமை பூண்டிருந்தோம். யாம் இருவேமும் ஒருவரை யொருவர் கண்டு பயிலுதற்குரிய சந்தர்ப்பம் நேரிடாமற் பல யாண்டுகள் கழிந்தன. இவ்வாறு பழகிய உரிமையுடையே மாயினும், நட்புரிமை மாறுதொழுகல் அரிது என்று ஐயம் கொள்ளன்மின். பேரறிவாளர்களே, பிறர் இகழப் பெறுத பெருங் குணம் நிறைந்த என் நண்பர் என்னிடம் உறுதியான அன்பு பூண்டவர். அவர் ஒரு நாளும் புகழ்க்குக் கேடாக வரும் பொய்யை விரும்பிப் புகலார்; பொய் யொழுக்கம் பூணவும் செய்யார். அவர் தம் பெயரைப் பிறரிடம் கூற நேரிடுங் காலங்களில், 'என்பெயர் பேதைச் சோழன்,' என்று கூறுவர். அத்தகைய அன்புரிமை என் பாற் பூண்ட அப்பெரியார், மேலும் இதற்கு முன்னே ஒரு நாளும் என்னைக் காணுதவராகவே இருப்பினும், இப்பொழுது வராது நில்லார். என் நிலைமையை அவரது உள்ளமே அவர்க்கு அறிவிக்கும். இப்பொழுதே விரை

* புறநானூறு—செய், 215.

வில் அவர் வருவர். ஆகையால், அவர்க்கு ஓர் இடம் ஒழித்து வையுங்கள்.

இவ்வாறு அவன் கூறிக்கொண்டிருக்கும் போதே பிசிராந்தையார் அங்கு வந்தடைந்தார். அவரைக் கண்ட பொத்தியார் முதலிய நல்லோர் பெரிதும் அதிசயித்தனர். அவரை முன்னே கண்டிராத அவரனைவரும் அவர்க்கமைந்த உருத் தோற்றத்தைக் கண்டு வினவலாயினர் :

"ஐய, புலவர் பெருமானே, நுமக்கும் கோப்பெருஞ் சோழருக்கும் நண்புரிமை யுளதென்றுயாம் பல வாண்டுகளாகக் கேட்டிருக்கின்றேம். யாம் அனைவேமும் முதுமையடைந்து, அதற்குரிய நரை திரை முதலிய குறிகள் பெற்றுள்ளேம். நீரும் ஆண்டுகளால் முதியவராக இருக்கவே வேண்டும். அப்படியிருந்தும், நும் உடம்பில் முதுமைப் பருவத்துக்குரிய குறி ஒன்றும் காண்கிலேம். நும் தலையில் சிறிதளவும் நரை யென்பது தோன்றவில்லை. இதற்கு என்ன காரணம் என்பது எம்மால் அறியக் கூடவில்லை."

பிசிராந்தையார்:—'நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாம்; நீர் எங்ஙனம் நரையில்லா திருப்பீர்?' என்று கேட்பீராயின், அன்பர்களே, கூறுகின்றேன்; கேண்மின்: கற்பொழுக்கத்தாற் சிறந்த என் மனைவியும், மக்களும் என் மனையகத்தே அறிவு நிரம்பியுளார். யான் கருதிய வண்ணமே அவரனைவரும் நடப்பர். அரசனும் அற நெறிக்கு மாறான செயல்களைச் செய்யாது எம்மைக் காப்பாற்றுவன். அதற்கு மேலே யானிருக்கும் ஊரிலே நற்குணமமைந்து, பணிவ வேண்டும் உயர்ந்தோ

ரிடம் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய நல் வாழ்வில் நடக்கும் சான்றோர் பலர் உளர். இவ்வளவும் இருக்கும் போது யான் நரை யெய்தப் பெறுதவனுய் இருத்தல் அதிசயமாமோ?

பொத்தியார்:—இஃது என்ன வியப்பு! நினைக்கப் புகுந்தால், வியப்பின்மேல் வியப்பாம். எவ்வளவு சிறப் புடையராய் இருப்பினும், எம் மன்னர் பெருமான் குணத்தருமையைத் துணிந்து கூறல் அருமையே. எம் மன்னர் இங்கு இவ்வமயத்தே இப்புலவர் வருவர் என்று துணிந்து கூறியது வியப்பே. பிறநாட்டிற் பிறந்த இப்பெரியார் செவியாற் கேட்ட இசை துணையாக நட் புப் பற்றுக் கோடாக இன்ன பொழுதிலே இங்கு வந் தற்றது அதனினும் வியப்பே. இவர் வருவார் என்று கூறிய அரசரது பெருமையும் அவ்வுரை பழுதாகாமல் வந்த புலவரது அறிவும் வியந்து புகழப் புகழ, வியப் பின் விஞ்சியவையாம். ஆகையால், தமது செங்கோல் செல்லாத பாண்டிய நாட்டில் உறையும் சான்றோராகிய பிசிராந்தையாரது உள்ளத் தன்பைக்கொள்ளும் பெரு மைபெற்ற மிக்க புகழ் வாய்ந்த சோழ மன்னரை இழக் கும் இவ்வுலகம் என்னுகுமோ! இரங்கத் தக்கதே!

பின்பு பிசிராந்தையார் சோழன் அருகிற் சென்று, தமக்கென அமைத்த நிலத்தில் அமர்ந்து, தவஞ் செய் யத் தொடங்கினர். அக்காட்சியைக் கண்ட அருகிருந் தோர் புகழத் தொடங்கினர்.

கண்ணகனர்:—பொன்னும் பவளமும் முத்தும் பெரிய மலையிற் பிறந்த பிற மணிகளும் தாம் தோன்று மிடங்களால் ஒன்றற்கொன்று நெருக்க மற்ற தூர

தேசத்தில் உள்ளனவாயினும், அரிய வீலைபெற்ற நல்ல ஆபரணங்கள் அமைக்கும் இடத்து, எல்லாம் ஒன்றுய் இணங்கி அழகு பெறும். அதுபோல எக்காலத்திலும் நல்லோர் நல்லோரோடு சேர்வர். அஞ்வமைதி யில்லார் அவர்க்குத் தக்க குணத்தினரோடே சேர்வர்.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனுர் சிறிது தாமதமாக வந்தார். அவரும் அங்கிருந்தார் அனைவரையும் பார்த்துத் தமக்கும் ஓர் இடம் அமைத்துக் கொண்டு அமர்ந்தார். அவர், "யான் உரிய காலத்தில் வராது சிறிது பொறுத்து வந்தேன் என்று மனம் மாறுபடாமை வேண்டும்," என அரசனை வேண்டிக்கொண்டார்.

பொத்தியார் பின்னும் சிறிதுநேரம் அங்கிருந்தார்; தம் அன்புக்குரிய பலரையும் இறக்கும் நிலையில் தனியே விடுத்துச் செல்ல மனமில்லாது நின்றார். மாலைப்பொழுதுக்குள் ஒரே மனவுறுதியோடு இறக்கத் துணிந்தார் அனைவரும் இறந்தனர். அத்துயர்க் காட்சியைக் கண்ட அப்பெரியார் மனமறுகினர்.

"பெருஞ்சோறு கொடுத்துப் பலயாண்டுகள்பாதுகாத்த பெரியதொரு களிற்றை யிழந்த துயரமிக்க பாகன் அவ்யானை தங்கியிருந்த கூடத்தின்கண் கம்பம் வந்திதே நிற்கக் கண்டு கலங்குந் தன்மைபோல, யான் இறந்து படாமல் பொன்மாலை பூண்ட தேர்களை நல்கும் வள்ளலாகிய கோப் பெருஞ்சோழன் உயிர் நீத்த மன்றத்தைக் கண்டு கலங்கினேன்," *என்ற கருத்துப்பட ஒரு செய்யுள் பாடினர்.

* புறநானூறு - செய், 220.

பிறகு பொத்தியார் மனமின்றியே மெல்ல நடந்து, உறையூர் நகர்க்குட் சென்றனர். அங்கு அரசன்மக்கள் அவர் வருகையையறிந்து, வரவேற்க வந்தனர்; அவர் முகத்தில் இருந்த துயர்க்குறியைக் கண்டனர். அவர் கட்கு உண்மை விளங்கிற்று; உடனே நாட்டு மக்கள் பலர் பின் வர, நகர்க்குப் புறத்தே வந்தனர். பொத்தியாரும் உடன் வந்தனர். மன்றப் பறந்தலையிற் சான்றோர் பலரும் அவர்க்கு இடையில் அரசனும் அரசியும் இருந்த நிலையிலே இறந்திருக்குங் காட்சியை அனைவரும் கண்டனர்.

அரச குமரர்கள் பொத்தியாரை நோக்கி, "ஐயன்மீர், பொத்தியாரே, யாம் எம் அறியாமையாற் குணகலஞ் சிறந்த தந்தையரை யிழந்தேம். நீர் நும் நண்பரை யிழந்தீர். எவ்வண்ணம் இயன்றதாயினும், குற்றம் எமதே என்பதை இப்பொழுது அறிகின்றோம். பெற்றோரை இழத்தல் மக்கட்கு இயல்பாக உள்ள துக்கமேயாம். ஆயினும், எங்களைப்போல அறிவின்மையால் இறுதிக் காலத்திலே பகைமை பூண்டு பெற்றோரை இழக்கும் துயர் பூண்போர் பலராகார். யாம் என் செய்வோம்! இனி எவ்வண்ணம் இவ்வரசு நிலை நிற்பது? நும் போன்ற அமைச்சரையும் இழந்தோமாயின், எம்மால் ஒன்றும் இயலாது. ஆகையால், இப்பொழுது என்ன செய்தற்குரியது என்பதைக் கூற வேண்டுகின்றோம்," என்றனர்.

பொத்தியார், "இனி நீர் செய்தற்குரியது என்ன வுள்ளது? அறநெறிக்கு மாறாக இந்நாள்காறும் சென்று கொண்டிருந்த உள்ளத்தை இன்னேனும் நன்னிலையில்

நிறுத்தி மக்கட்கு நன்மை யுண்டாகும் வண்ணம் நல்ல அமைச்சர் சொற்கேட்டு நாட்டை ஆள வேண்டுவதே நும் கடமையாம். இறந்தார்க்கு ஈமக் கடன் கழித்தல் இயல்பாக அமைந்த கடனேயாம். இளவரசர் கோக் கிள்ளி என்ற பெயருடன் அரசேற்க வேண்டும். இளைய குமரர் தந்தைக்கும் தாய்க்கும் ஈமக் கடன் இயற்றுக. மற்ற நல்லோர்க்கெல்லாம் அவரவர் மக்கள் கடனாற்று தல் வேண்டும். இங்கு இவ்வண்ணம் இறந்தார் உடல் களை அவரவர் இறந்த இடங்களிலே தொடு குழியிற் புதைத்தல் வேண்டும். அக்குழிகளின்மேற் சிறு சிறு கட்டடங்கள் கட்டி, வீரக் கற்களும் நடு கற்களும் அமைக்க வேண்டும். நடு கற்கள் எல்லாம் அமைந்த பிறகு ஒருநாள் எல்லோர்க்கும் பூவும் புகையும் கொண்டு பூசை புரிய வேண்டும். பின்னாளில் இந்நாட்டில் வாழும் மக்கள் இந்நடு கற்களிடம் சிறந்த பக்தி பூண்டு பூசை செய்து வரும் வண்ணம் முதற்கண் சிறப்புக்கள் செய்து இறைவனருள் பெற வேண்டும். இவை யனைத்தும் விரைவிலே நிகழச் செய்தல் அரசர் கடமையாம்.

அரசனுயினேன்:—அமைச்சர் தலைவரே, பொத்தி யாரே, நீவிர் விரும்பிய வண்ணம் எல்லாம் நிறைவேற்று விக்கின்றேன். இளவல் நும் விருப்பிற் கிணங்கச் செய் தற்குரியவை யெல்லாம் செய்வன். நாளையே இங்கு நகர மாக்கள் அனைவரும் வந்து கூடி, இங்கு இறந்தார் பலர்க்கும் ஈமக்கடன் நிறைவேற்ற ஆணை பிறப்பிப்போம். அரசர்க்கும் அரசியார்க்கும் உரிய கடன்களை இளவல் செய்வன். என் உள்ளம் அமைதி பெறவில்லை. நீர் கூறியவாறு நடுகற்களும் விரைவிலே அமைக்கப் பெற்று

வரல் வேண்டும். இன்னும் நீர் நாட்டகத்து வாழும் நாளெல்லாம் அரசுக்கு அமைச்சுப் பூண்டிருக்க மிகவும் மன்றாடி வேண்டுகிறேன்.

பொத்தியார்:—இங்கு நிகழ்தற்குரிய செயல்கள் நிகழுங்காறும் யான் தும்மோடு அரசியற் பொறைக்கு உதவியாய் இருந்து வருகிறேன். பின்னர் யான் என் னூர்க்குச் செல்ல விடை பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சராயிருந்த பொத்தியாரும் அரச குமரரும் சிறிது நேரம் ஆலோசனை செய்த பிறகு, இறந்த அனைவர்க்கும் அவரவர் மக்களைக் கொண்டு பிண்டோதகக் கிரியைகள் செய்தற்குரிய முயற்சிகள் தொடங்கின. உறையூர்க்குட் செல்வதும் வருவதுமாய் மக்கள் தம்மால் ஆவனவற்றை யெல்லாம் செய்தனர். மறு நாள் ஊரவர் அனைவரும் வந்து அங்குக் கூடி, அரசனையும் அரசியையும் பிசிராந்தையார் முதலிய சான்றோர் களையும் இழந்ததைப் பற்றிப் பெரிதும் துயர் பூண்டு, உரிய முறைகளால் வினைகள் செய்தனர். பிறகு சிலநாட் கள் தொடர்ந்து நடத்தற்குரிய வினைகளெல்லாம் நடந் தன. பிறகு ஒரு நன்னாளிலே இந்நல்லோர் பலரையும் அடக்கம் செய்த இடங்களில் அமைத்து வைத்தற்காக நடுகற்கள் வந்தடைந்தன. அரசகுமரரும் பொத்தியாரும் சோழ நாட்டுப் பெரியார் பலரும் அங்கு வந்தடைந்து அந்நடு கற்களில் இறந்தார் உருவமும் பெயரும் செதுக்குவித்து, அவ்வவர் உடம்புகளை அடக்கம் செய்த இடங்களில் நடுவித்தனர்.

பின்னர் அங்கு வந்திருந்த சான்றோர் பலரும் புல வர் கூட்டத்தாரும், ஏககாலத்தில் இறந்து அப்பறந்தலை

யில் நடு கல்லாயிருக்கும் பெரியோர்களை நினைந்து, அவ ரவர் வரலாறுகளிலுள்ள சிறந்த பகுதிகளை மக்கள் அறியக் கூறி, அவரனைவரும் தெய்வச் சிறப்புற்றனர் என்று தெளியக் கூறினர். அது கேட்ட பொது மக்க ளெல்லாம் சோறும் நீரும் படைத்துப் பூவும் புகையும் காட்டி, நடு கற்களில் அமைந்தார்க்குப் பூசைகள் செய் தனர். எண்ணிறந்த குடி மக்கள் கூடி நின்று, தங்கள் அரசனுகிய கோக்கிள்ளியை முன்னிட்டுக்கொண்டு, கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த நிலையில் நின்ற நடு கற்குச் சிறப்புக்கள் செய்தனர்; இவ்வண்ணமே யாண்டு தோறும் உரிய காலத்திற் சிறப்புச் செய்வதாகத் தீர்மா னித்தனர். பின்னர் எல்லாரும் அங்குப் படைத்த பொருள்களை ஏழை மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, மனையகம் நோக்கித் திரும்பலாயினர்.

இக்காட்சியைக் கண்டு அருகில் நின்றுகொண்டி ருந்த பொத்தியார், பின் வருங் கருத்தமைந்த பாடலைப் பாடிப் புலம்பினர் :

"பாடும் புலவருக்குப் பொருள்களை நிறையப் பொ ழிந்து புகழ் பூண்ட மன்னன்! தன்னிடம் ஆடி வந்த விறலி யர்க்கும் பாணர்க்கும் வேண்டுமளவு பொன் பொழிந்த புர வலன்! அற நெறி நன்குணர்ந்தோர் புகழ்ந்த செங்கோல் வேந்தன்! வீரர் புகழ்ந்து பாராட்டும் அன்புடைய அரசன்! பெண்டிர்க்கு மென்மையே உருவாயிருந்த தலைவன்! வலி யோர்க்கு வலியே யெனலாய வள்ளல்! குற்றமற்ற கல்வி கேள்வி யுடையோர்க்குப் புகுமிடம்! அத்தகைய வள்ளற் பெருமான் என்று அறியாது என் அன்புரிமை பூண்ட கோப் பெருஞ்சோழனைக் கூற்றம் உயிர் குடித்ததே! வாய்மொழிப்

புலவீர், துன்ப மிக்க ஞாமனேவரும் ஒன்று திரண்டு, அக் கொடுங்கூற்றத்தை வைவோம்; வாரீர். நம்முடைய நாய கன் இந்நல்லுலக மெங்கும் துயரம் பெருக, உயர்ந்த நல் லிசை சூடி, இன்று நமக்கு முன்னே நடு கல்லாய் நின்ற னன்.” *

இளவரசரும் பிறரும் நாடு நோக்கித் திரும்பினர். பொத்தியார் சிறிது நேரம் அங்கிருந்து, பின்பு கோக் கிள்ளியிடம் விடை பெற்றுத் தம்மூர் நோக்கிச் செல் லத் தொடங்கினர். அவர்க்கு வழியெல்லாம் அதுவே நினைவா யிருந்ததால், தம்மூர் நெருங்கியும், எங்கோ புத் தூரில் நடப்பார் போல நடந்துகொண்டிருந்தார். அவர் மனப் பான்மையை அறிந்தார் போன்று அச்சிற்றூரி லிருந்த இளஞ்சிறார் சிலர் அவரைப் பின் தொடர்ந்து வந்தனர்.

* புறநானூறு-செய், 221.

V

பொத்தியார் மனைவியாராகிய புண்ணியச் செல்வி யார், மனைத் தக்க மாண்புடையராகித் தம்மைக் கொண்டாரது வளத்துக்குத்தக்க வாழ்க்கைத் துணையா யிருந்தார்; தம் தலைவரது உள்ளன்பே தம் பெரு வாழ்வாகக் கருதி வாழ்ந்தார். உறையூரிலிருந்து ஒன் றரைக் காத தூரத்திலிருந்ததொரு சிற்றூரில் அறமே துணையாக வாழ்ந்து வந்த அக்கற்பரசியார், தம் நாயகர் பெரும்பாலும் உறையூரின்கண்ணே நிலைத்துக் கோப் பெருஞ்சோழர்க்கு உற்ற தோழராய் வாழ்ந்ததை அறிந்திருந்தார்; ஆகையால், அவர் பூண்ட அற வினைக் குத் தம்மால் யாதும் இடையூறு நேரிடாமல் நடந்து கொண்டார்; சில சமயங்களில் ஐந்தாறு திங்கள் தம் மனையகமே வராமல் நாயகர் இருந்து விடுவாராயினும், அவர் செய்தற்குரிய அற வினைகட்குப் பழுதாகாமல் நிகழ்த்தி வந்தார். நன்செய்களாலும் புன்செய்களா லும் வரும் பயனை அறவோர்க்களித்தல், அந்தணரோம் பல், துறவோர்க்கிடுதல், விருந்தினர்க்கு உதவுதல் முத லிய பல வகை அற நெறிகளில் தம் கணவனாரது மன முவப்பச் செலவிட்டு வந்தார்; வருங்காலங்களில் அவர் கண்டு மகிழத்தக்க காட்சிகளை யெல்லாம் தம்மனையகத் தில் அமைத்து வைத்தார். ஆயினும், அவர் ஒரு விதத் தில் மனக் குறையுடையராய் இருந்தார்; அதனையும்

தம் தலைவரிடம் தெரிவியாமலே அமைந்திருந்தார். மணம் புரிந்து பல வாண்டுகளாகியும் கற்பு நெறிக்குற்ற பயனுயமைந்த காதற் சிறுவரைப் பெறுமையே அவர் மனக் குறையாம். அதனைப் பொத்தியாரும் அறிவர். இறைவன் அருள் கூட்டி வைப்பின், எப்பொருளும் பெறலாம் என்று எண்ணிய புலவர் திலகராகிய அவர், இக்குறையைப்பற்றிச் சிந்தியாமலே யிருந்தார்.

கோப்பெருஞ்சோழனோடு அவன் மக்கள் எதிர்த்துப் போர் புரிந்த செய்தியையும், பின்னர் அச்சோழ மன்னன் தம்மூர்க் கயலதாகிய புல்லாற்றூரில் வாழும் எயிற்றியார் என்ற பெண் புலவர் அறவுரை கேட்டு அரசுரிமையை மக்கட்களித்து வடக்கிருக்கத் துணிந்ததையும் அவ்வம்மையார் கேட்டார். கற்பின் செல்வியாராகிய அப்புண்ணியச் செல்வியார், "உண்மை நண்பு காரணமாக என் தலைவரும் வடக்கிருந்து உயிர்விட்டிருப்பரோ! அவ்வாறு இன்றுயின், இங்கு வருவரே!" என்று எண்ணமிட்டிருந்தார்; உறையூர் சென்று வந்த சிலராற் பொத்தியார் வடக்கிருத்தற் கனுமதி பெறுமையை அறிந்தார். அதனால், அவர் மனம் இன்பமும் துன்பமும் அடைந்தது. தம் நாயகர் இறவாமையால் தோன்றிய இன்பம், அவர் நட்புக் கடன் கழிக்க வியலாமை கேட்டதால் எழுந்த துன்பத்துள் மறைந்தது. இவ்வண்ணம் அவர் ஊசலாடும் உள்ளத்தோடு மீன வாயிற்கண் வருவதும், அகத்தே புகுவதுமாய் இருந்தார். ஒரு முறை புறத்தே வந்தபோது வழி யறியாதார்போன்று பல சிறுவர் பின் தொடர்ந்துவரத் தலைகுனிந்து நடந்து வரும் தம் நாயகரைக் கண்டார். அவர் நிலையைக்

கண்டு கலங்கிக் கண்ணீருதிர்த்தார்; உடனே மனை வாயிற்கண் சென்று நின்று, சிறுவர்க்குக் குறிப்பறிவித்து, அவரை அங்கழைத்து வரச் செய்து, அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர்.

தம்மை மறந்து அதுவரையில் நடந்து வந்த பாதகியார் தம் முன்னே வணங்கிய தம்மனைத் தலைவியாரைக் கண்டார். அயன் மகளிரைக் கண்ணெடுத்தும் பாராத அற நெறி பூண்ட அப்பெரியார், தம்மை வணங்கிய கற்பிற் கரசியாரைக் கூர்ந்து நோக்கினார்; புண்ணியச் செல்வியார் என்ற பெயர் பூண்ட தம் மனைவியார் என்பதை உணர்ந்தார். உடனே கண்ணைக் கையாற் பிசைந்து, நன்கு நோக்கி, 'யான் இப்பொழுது எங்கிருக்கின்றேன்?' என்றார். அவர் மனைவியார் அவர் மன நிலையை யுணர்ந்து, அவ்வமயத்துக்குரிய உபசாரங்கள் செய்து கொண்டு, அவர் தம் மனையகம் வந்துற்றதைத் தெரிவித்தார். பிறகு பொத்தியார் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்; பின்னர் மனைவியார் செய்த சைத்தியோபசாரங்களால் தம்முணர்வை யடைந்தார். பின்னர்ப் பொத்தியார் தம் மனைவியார்க்கு உறையூரில் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் கூறித் தம் மெய்ந்நண்பிற்குரிய கோப்பெருஞ்சோழன் இறந்து நடுகல்லாயின வரலாற்றை விளங்க வுரைத்துப் பெரிதும் துயருற்றார். புண்ணியச் செல்வியார் அது கேட்டுத் தாமும் பெருந்துயர் கொண்டார்; தம் நாயகர்க்கு நட்புக் கடன் கழிக்கவியலாது போனதால் நேர்ந்த துக்கம் பெரிதா யிருப்பதாக அறிந்தார்; ஒருவாறு அவர் துயரத்தைத் தணிக்கத் தம்மால் இயன்றவளவு முயன்றார். பொத்தியார்

முன்னாளி லிருந்தது போன்ற இன்முகம், அருள் பொழியும் விழி, அமுதமய மொழிகள் இவை எல்லாம் உடையராய் இருந்தும், மனத் துயரம் ஆறப்பெறுதவரா யிருந்தார்.

புண்ணியச் செல்வியார் தம் தலைவர்க்கு உவப்பா கிய தமிழ் நூலாராய்ச்சியில் தாமும் உடனின்று உழைத்து, ஒருவாறு அவர் துயரத்தை மாற்றத் தொடங்கினர். இவ்வாறுகச் சில வாண்டுகள் சென் றன. இறைவனருள் எவ்வண்ணம் இருக்குமோ என்றே இருவரும் எண்ணமிட்டிருந்தனர். ஒரு நாள் இருவரும் திருவள்ளுவப் பயனை ஓதியாராய்ந்து பொருள் கண்டு இன்புற்றிருக்கையில், வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தின் இறுதிச் செய்யுளாகிய,

"மங்கல மென்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு."

என்ற குறள் வந்தது. அச்செய்யுளுக்குப் பொருள் கூறத் தொடங்கிய பொத்தியார், தம்மை மறந்து, தலை குனிந்து, கண்ணீருதிர்த்தார். அது கண்ட புண்ணியச் செல்வியார் மன மைந்துருகி, அவர்க்கு உரிய உபசாரங் கள் செய்து, திருக்குறட் செய்யுள் எவ்வகைத் துய ரத்தை நினைவூட்டிற்று என அறிய விரும்பினர்.

பொத்தியார்:—புண்ணியச் செல்வியே, என் உள் ளத்தில் எழுந்த எண்ணங்களை யான் எங்ஙனம் கூறு வேன்! மனை மாட்சியின் நன்கலம் நன் மக்கட் பேறு என்று வள்ளுவர் கூறிய அருளுரை என் மனத்தைத் துயரிலாழ்த்தியது. நமக்கு மக்கட் பேறில்லாக் குறை யைப்பற்றி யான் சிறிதும் வருந்திலேன். என் நண்பிற்

குரிய கோப்பெருஞ்சோழர் வடக்கிருக்கும்போது யான் அவ்வண்ணம் செய்தலாகாது என்று எனைத் தடுத்துக் கூறி இங்கனுப்பியதற்கு இம்மகப் பேறில்லாக் குறையே காரணமாம் அன்றே? அவர் இறந்து இரண்டு மூன்று ஆண்டுகளாயின. இன்னும் நமக்குமகப்பேறு உண்டாக வில்லை. இறைவனருளால் நமக்குப் புத்திரச் செல்வம் இல்லாமலே போமாயின், நான் சோழ மன்னர்க்கு என் நட்புக் கடன் கழிக்க ஆற்றல் அற்றவனுவேன். எனது உண்மை நண்பு பிசிராந்தையார் நட்புரிமையோடு ஒரு நிகராய் மதிக்கத் தக்க தன்மையினும், அடுத்த நிலையில் வைத்து மதிக்கத் தக்க பேற்றையாவது யான் பெறலா காதா? இறைவன், எம்பெருமான், எல்லாம் வல்லான், எனக்கு இவ்வருள் என்று புரிவனே!" என்று கூறி மூர்ச்சித்தார்.

அவர் மனைவியார் உடனே செய்தற்கு உரிய உப சாரங்கள் செய்து, அவரது கலை தெளிவித்து, மறு மொழி கூறத் தொடங்கினர்:

புண்ணியச் செல்வியார்:—தலைவரே, அடியேன் இங்கு ஒன்று கூற விரும்புகின்றேன்: நமக்கு மகப்பேறு இல்லாதிருப்பதே நலம் என்று எனக்குத் தோன்று கிறது. இப்பொழுதே நீவிர் சோழ மன்னர் பொருட்டு உறையூர்ப் பறந்தலையிடத்து வடக்கிருக்கச் செல்வ தாயின், யானும் உடன் வரக் கூடும். மக்கள் இருப்பின், நம்மிருவரையும் பிரித்து வைக்க அவரே கருவியாகக் கூடும்.

பொத்தியார்:—நீ என்னுடன் உயிர் விடத் துணி வது பொருத்தமே ஆயினும், யான் என் தோழராகிய

மன்னர்க்கு உரைத்த வாக்குறுதி மாறி, மகப் பெறுத நின்னை அழைத்துச் செல்லுதல் முறையாகாது. இன்னும் சில நாள் பொறுத்துப் பார்ப்போம். இறைவனருள் நம்மை எவ்விதம் செலுத்தினும் செலுத்துக.

பின்னர் அவ்விருவரும் ஒருவாறு மனவமைதி பெற்று, முன் போலவே மனை வாழ்க்கை நடத்தி வந்தனர். ஓர் ஆண்டு கழிந்திடு முன்னரே, இறைவனருளாற் புண்ணியச் செல்வியார் வயிறு வாய்க்கப் பெற்று, ஓர் ஆண் மகவை யீன்றனர். அம்மகன் பிறப்பால் தாயின் உள்ளத்திலே துன்பமும் தந்தையின் உள்ளத்திலே இன்பமும் தோன்றின. பொத்தியார் பிறகு சில மாதங்கள் தம் மனையகத்திருந்தனர்; ஒரு நாள் உறையூர் நோக்கிப் புறப்பட எண்ணி, மனைவியாரிடம் தெரிவித்தனர். அது கேட்ட அக்கற்பரசியார் பெருந்துயரமடைந்து, சில நாட் பொறுக்குமாறு வேண்டினர்; தம்மையும் உடன் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். அவற்றுளொன்றும் அவர் செவியிலேறவில்லை; அன்றே தாம் தனிமையாகவே போகத் துணிந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

புண்ணியச் செல்வியார்:—தலைவரே, இனி யான் என்ன கூறுவேன்! உலகத்தில் மக்களை யிழக்குந் துயர் பெரிதென்பர் சிலர். மனையாளை யிழக்கும் துயர் பெரிதென்பர் வேறுசிலர். தந்தையை யிழக்குந் துயர் மிகவும் கொடிதென்பர் ஒரு சாரார். தாயை யிழக்கும் துயர் தாங்கலாகாததே என்பர் மற்றொரு சாரார். இவ்வெல்லாத் துயரங்களைக்காட்டினும் மிகவும் கொடிய துயரம் ஒன்று உண்டு. அஃது ஆண் மக்கள் தம் உள்ள வுணர்ச்

சியால் அறிய வியலாதது. மனைவிமார் தம் கணவன் மாரை இழக்க நேரிடுமாயின், அத்துயரத்தை மாற்ற வழி யுளதோ ? பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு பாடிய பாடல் * நீவிர் அறியாததன்றே? பெண் மக்களுக்குக் கணவரை யிழந்து வாழும் வாழ்வினும் கொடிய துன்ப நிலை வேறென்றுமில்லை. என்னை அவ் வாழ்வுக் காளாக்காமல் உடனழைத்துச் செல்லவேண்டு கிறேன்.

போத்தியார்:—பெண்மணியே, நீ கூறியவை யெல் லாம் அற நெறிக்கு மாறுகாத வண்ணம் உள்ளனவே. ஆனல், பெண்டிர்க்கு உரிய முக்கிய குணம் இன்ன தென அறிஞர் கூறுவதை அறிவா யன்றே? கற்புடைப் பெண்டிர் மூவகையர்; ஒருவரி னொருவர் உண்மைக் கற்பு நிலையறத்தாற் றழ்ந்தவர் அல்லர்; உள்ளக் கிளர்ச்சி யாற் சிறிது வேறுபாடுடையர். தம் நாயகர் இறந்த செய்தி செவி யுற்றதும் துக்கம் பொறுது உடனே உயிரை யிழப்போர் ஒரு வகையர். தீயிற் பாய்ந்து தம் கணவருடன் மறுவுலகிலும் உடலு முயிருமாய் வாழத் துணிவோர் மற்றொரு வகையர். மக்களையும் கணவர்க் குரிய பிற பொருள்களையும் போற்றி யிருந்து, அடுத்த பிறப்பில் அக்கணவரையே பெறவேண்டும் என்ற உறுதி யான எண்ணத்தோடு தவம் பூண்போர் வேறொரு வகை யர். இம்முத்திறத்தினருள் மூன்றுமவரே சிறந்தவரென் பது என் எண்ணம். எங்ஙனமெனின், முதலாவார் துய ரத்தால் தம் வயமிழந்து இறந்தார். இரண்டாந்தரத்தார் துயர் பொறுக்க ஆற்றலின்றித் தீயில் விழுந்து இறந்

* புறநானூறு—செய், 246.

தார். மூன்றாந் தாரத்தினரோ, தம் தலைவரை யிழந்த தால் நேரிட்ட பெருந்துயரைத் தம் முள்ளத்திலடக்கித் தவ வொழுக்கம் பூண்டு இறைவன் அருளிய உயிரைத் தாமாகவே போக்கிக்கொள்ளத் துணியாமல் நன்னெறி யில் நின்று, பெருந்தவம் பூண்டு, தம் கற்பொழுக்கத் தின் பயனாக மறு பிறப்பிலே தம் கணவன்மாரோடு கூடப்பெறுகின்றனர். இவரது உள்ளத்து உறுதியும் அற நெறி யொழுக்கமும் உலகு புகழத் தக்கன. யான் இப்பொழுது முன்னே கொடுத்த உறுதியுரையை மெய்ப்படுத்தும் வண்ணம் உறையூர்க்குச் செல்கின் றேன். நீ இம்மகனைப் போற்றி இங்கிருந்து, முன் போ லவே அறநெறி கடைப்பிடித்து வாழக்கடவாய். இஃது யான் நினக்கு உள்ளமுற இடுகின்ற அன்புரிமை ஆணை யாம்.

புண்ணியச் செல்வியார்:—தலைவரே, கணவர் சொற் றிறம்பாமை எனக்குரிய கற்பொழுக்கம் என்ற அற நெறியைக் கடைப்பிடித்து, என் மனத்துக்குச் சிறிதும் ஒவ்வாத இவ்வுலக வாழ்வில் நான் நிற்கும் வண்ணம் நீவிர் பிறப்பித்த ஆணையை ஏற்றுக்கொள்ளுகின்றேன். மகனை வளர்க்கும் பொறுப்பு எனதாகியது. அம்மகன் நுமக்குரிய கடன் கழிக்கும் பருவம் வருங்காறும் நான் உயிர் வைத்திருப்பேன். பிறகு யான் நும்மைத் தொடர் வேன். நண்புரிமையை யெண்ணி யுயிரைக் கொடுக்கச் செல்லும் நுமக்கு வாழ்க்கைத் துணைவியாய் இருக்கும் பேறு பெற்றும், யான் என் அன்புரிமையை நாட்ட வேறு வழியில்லாது போயிற்றே என்று வருந்துகிறேன்! இம்மகன் பிறந்தபோதே இவன் என்னையும் நும்மையும்

பிரிப்பான் என்பதை யான் அறிந்தேன். இனி என் செயலாவது யாதொன்றும் இல்லை. நும் ஆணைப்படி அற நெறி பற்றி நடக்க முயல்வேன்.

போத்தியார்:—இவன் பிறந்தவுடனே என் உள்ளத்தில் இரண்டு காரணங்களால் மிக்க இன்பம் எழுந்தது: இவனது பிறப்பே சோழ மன்னர்க்கு யான் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்ற உதவுவதாயிற்று. அவர் விரும்பிய வண்ணம் எனக்கும் என் மூதாதையர்க்கும் உரிய காலங்களிற் பிதிர்க்கடன் கழிக்க இவன் உரிமை பெறுவனாகையால், அவ்வகையாலும் என் உள்ளம் மகிழ்ச்சி பெற்றது. இனி யான் விடை பெறுகின்றேன்.

அதன் பின்னர் மானவியார் துயரத்தைக் காணலாற்றாது முகத்தைத் திருப்பிக்கொண்டு, பொத்தியார் விரைவிலே உறையூர் நோக்கி நடந்தார்; அங்கு முன்னாளிலே தந்தையும் மைந்தரும் போர் புரிந்த களத்தருகுள்ள பெருமன்றத்தை அடைந்தார்; கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் பிறசான்றோர்க்கும் அமைத்து வைத்த நடு கற்களைக் கண்டார்; அவற்றையெல்லாம் சுற்றி வந்து வணங்கி வாழ்த்தினார்; தமக்கும் அந்நிலைமை வர வேண்டும் என இறைவனைத் தியானித்தார்.

கோப்பெருஞ்சோழனுக்கு என்றமைத்த நடு கற்கருகே பிசிராந்தையார்க்கமைத்த நடு கல் இருப்பதை அவர் கண்டார்; பிற சான்றோர் அருகிலெல்லாம் நெருங்கி நடு கல்லாயிருப்பதையுங் கண்டார்; அரசன் கூறிய வண்ணம் தமக்கு அவனருகிலே இடமில்லாதிருப்

பதை அறிந்தார்; மனம் புண்ணுனர்; மன்னனது நடு கல்லைத் தழுவிக்கொண்டு புலம்பினர்.

பிறகு அவர், "புகழினை விரும்பிப் பூண்ட புரவலரே, 'நெருப்பின் உதவியால் நன்கு விளக்கமுறும் பொன்னினியன்ற அழகிய அணிகலன்களைப் பூண்டவளும் நிழல்போல நும்மை விட்டகலாதவளுமாகிய நும் மனைவி நுமக்குப் புகழ் சிறந்த ஒரு மைந்தனைப் பெற்றளித்த பிறகு வருவீர்,' என்று கூறி, என்னை இங்கிருந்து அகன்று போகச் செய்த அன்பிலாளரே, இப்பொழுது என் நட்பைக் கருதாது புறக்கணிக்க ஒருப்படீர். நான் இருத்தற்குரிய இடம் எதுவென்று கூறுவீர்," * என்ற பொருள்பட ஒரு பாடலைப் பாடினர்.

அப்பாடலைக் கேட்டுக் கல்லாயிருந்த கோப்பெருஞ் சோழன், சிறிது இடம் பெயர்ந்து, தன்னருகே பொத்தியார்க்கு இடம் உதவினன். அவ்விடத்திலே பொத்தியார் வடக்கு நோக்கி யமர்ந்து, முன்னே அரசனும் சான்றோரும் தம் உயிர் போக்கியவாறு போக்கத் துணிந்தார். அப்பொழுது அவர் உள்ளத்தில் அரசன் பெருந் தகைமையை உலகறியப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அவர் அவ்வெண்ணத்தைப் பயன் படுத்த முயன்றார்:

"பல திறப்பட்ட மக்களுக்கும் நலம் புரிந்து அருள்வதால் நிழலை யொத்து விளங்கி, உலகத்தார் புகழ்ந்து பாராட்ட வாழ்ந்து மறுமையை நினைத்தால் உலகாளும் பணியை முழுவதும் பூண்டு அமைந்திருக்க இயலாமை கண்டு, வடக்கிருத்தற்குரிய சிறியதோர் இடத்திலிருந்து

* புறநானூறு - செய் 222.

உயிர் நீத்து, நிலையாகி நின்ற நடுகல்லாகி மாறின பிற கும், குணநலஞ் சிறந்தோர், உடம்பும் உயிரும் போலத் தம்மிடம் உரிமை பூண்ட பழைய நட்பாளர் தம்மிடம் வருவராயின், நிச்சயமாக இடங் 'கொடுத்தளிப்பர்," என்ற கருத்துப்பட அமைந்த,

"பலர்க்கு நிழலாகி யுலகமீக் கூறத்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தோன்னட் புடையார் தம்முழைச் செலினே" *

என்ற செய்யுள் அவர் வாக்கினின் றெழுந்தது. பின்பு அவர் தம் முன் நடுகல் லாயினரைப் போலத் தாமும் ஆகத் துணிந்து, வடக்கிருந்தார்.

இச்செய்தி உறையூ ரெங்கும் பரவியது. இதணை யறிந்ததும், நகரமாந்தர் பலரும் இளைய வரசரும் அங் கடைந்து, மற்ற நல்லோர்களுக்கு வினை புரிந்து நடு கல் நட்டவாறுபோல, அவர்க்கும் அரசனது நடு கற்கருகே அவரிருந்த விடத்தில் ஒரு கல் நட்டனர்; பிறகு உரிய காலத்திற் சுற்றத்தாரும் பிறரும் சூழ்ந்திருக்கப் பூசை கள் செய்தனர்.

புண்ணியச் செல்வியார், தம் தலைவர் நடுகல்லாயின செய்தியை அறிந்து, தாபத நிலை பூண்டு, மகனைப் பேணி வந்தனர். கணவர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் அவர் ஆணைகளைத் தெய்வ வாக்குப்போல எண்ணி நடந்தது போலவே, அவர் இறந்த பிறகும் முன் அவர் தந்து

* புறநானூறு - செய், 223.

சென்ற ஆண்டுக்கு மாறுபடாமல் நடந்து வந்தார்; மைந்தனை நன்னெறியில் வளர்த்து, அவன் தன் தந்தையார்க்கு உரிய பிதிர்க்கடன்களை அறிவோடு பொருந்தக் கழித்தற்குரியகாலம் வரும்வரை எதிர்பார்த்திருந்தார்; அக்காலம் வந்ததும், அவனுக்குச் சொல்லற்குரிய வற்றை யெல்லாம் சொல்லிக் குடிப்பொறையை ஏற்குமாறு செய்து, தம் தலைவர் அடியில் நிறுத்திய உள்ளத்தோடு உயிரை நீத்தார். நட்பின் இலக்கணமும் பெண்டிர் கற்பின் இலக்கணமும் விளங்கப் பொத்தியாரையும் அவர் மனைவியாரையும் பெற்ற நாடு புண்ணிய நாடு என்பதில் ஐயமு முளதாமோ ?

ஆன்ற புலவர்பிசி ராந்தையார் போத்தியார்
சான்ற வறிஞர்பிறர் தற்சூழத்—தோன்றுநடு
கல்லாகி நின்றபெருங் கோக்கிள்ளி காதையினை
நல்லார் பயில்வர் நயந்து.

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தருமென்ற நன்சொற்
கிலக்கியமாய் நின்ற விருவர்புகழ் ஓங்கி
நிலக்கணியாய் நிற்க நிமிர்ந்து.

2. கோச்செங்கட் சோழன்

I

அரச வாழ்வு, எண்ணிறந்த குடி மக்கள் வாழ்த்தி வணங்கிப் புகழ்ந்து போற்றும் வாழ்வு; நல்லிசைப் புலவர் பலர் நயம்படப் புகழ்ந்து பாடி இசை நாட்டும் வாழ்வு; முடியும் குடையும் செங்கோலும் ஆணைச் சக்கரமும் அரியணையும் சின்னமாகக் கொண்ட வாழ்வு; கண்ணிற் சொலிச் செவியின் நோக்கி ஆராய்ந்து தெளியும் வாழ்வு; திருமால் நிகராம் என்று புலமைப் பெரியார் ஓதிய வாழ்வு: அஃது உலக வாழ்வில் மிக உயர்வுடையதே யாயினும், பொறுப்பும் அதிகம் உடையதேயாகும். அரசனொருவன் உண்பது உடுப்பது உறங்குவது முதலிய வெல்லாம் குடிகளின் நலங் கருதியும் விருப்பிற்கிணங்கியுமே செய்ய வேண்டி யிருக்கின்றன. குடிமக்களுள் அறிஞராயுள்ளார் தேச நலம் என்று எதைக் கூறுகின்றனரோ, அதையே அவன் செய்ய வேண்டி யிருக்கிறது. அவனுக்குப் பதவி பெரிதேயாயினும், சுயேச்சையேனும், சுதந்திர வாழ்வேனும், சாமானிய மனிதர்க்கு இருப்பதுபோல அமைவதில்லை.

பொது மக்கள் தங்கள் மனம் விரும்பியவாறு மணம் புரிந்துகொண்டு, இன்புற்று வாழலாம். அரசனோ, தன் நாட்டு நல்லறிஞர் பொருத்தமெனக் கூறத்

தக்க வழி யறிந்து, மணம் புரிந்துகொள்ள வேண்டும். பொது மக்களுள் எந்நிலையில் இருப்பவரே யாயினும், மக்கட்பேறு பெறுதவராயிருப்பின், அதனால், தேசத்துக்கும் மற்ற ஜனங்கட்கும் பெருநஷ்டம் ஒன்றும் விளைந்துவிடாது. அரசன் மக்கட்பேறு இல்லாதிருப்பது, குடிகள் பொறுத்தற்கரிய பெருங்குறையாம். தம் மூடைய மன மகிழ்ச்சிக்குதவுமென்று பிறர் மக்கட் பேற்றைத் தவ முதலியன புரிந்து நாடுவர். அரசனே, உலக நலத்தின் பொருட்டு மக்கட்பேறு பெறற்குரியனு வன். கற்குங் கல்வி, பழகும் பழக்கம், கேட்கும் கேள்வி முதலியவற்றினும் அரசன் தனக்கென வொரு வழியைக் கொள்ள வேண்டியவனு யிருக்கிறன். வெளி யலங் காரங்களைப் பார்ப்போர்க்கு அரசன் நிலைமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகவே தோன்றும். ஆனால், அந்நிலையில் இருப்பவனுக்கோ, அது பெருங்கவலைக்கிடமாய் இருக்கும். அரசன் எப்பொழுதும் மனம் வாக்குக் காயம் என்ற திரிகரண மொருங்கத் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுய் இருக்க வேண்டும். இதுவே நல்லரசற் கமைந்த இலக்கணமாகும்.

சோழ நாட்டிலே உறையூரிலிருந்து அரசாண்ட மன்னருள் சிதய்வ பக்தியிலும் அரசியற் றிறத்திலும் சிறந்த சுபதேவன் என்ற மன்னர் பெருமான், அரசியற் றத் தொடங்கிப் பல வாண்டுகளாகப் புத்திரப் பேறின்றி யிருந்தான். அவன் உள்ளத்திற் குடி கொண்ட அக் கவலை நாட்டு மக்களுக்குத் தெரிய வந்தது. அவர்களுள் தலைவர் பலர் அரசனைக் கண்டு தம் மனக் குறையைத் தெரிவிக்க வந்தனர்.

அரண்மனைப் பெரிய மண்டபத்திலே பெரியதொரு சபை கூடியது. அங்கு மாசனத் தலைவர், பார்ப்பனப் பெரியார், மருத்துவப் பெரியார், நிமித்திக முதியவர், அமைச்சர் தலைவர் முதலிய பலரும் வந்து கூடினர். அரசனும் காலைக் கடன்களை முடித்துக் காவிரி நீராடிச் சிவாலய தரிசனம் செய்து, சிவப் பிரசாதம் பெற்றுத் திருநீறுங் கண்டிகையும் தரித்து, நல்லோர் சிலர் இரு மருங்கும் வர, அம்மண்டபத்தில் நுழைந்து, அரியணை யில் அமர்ந்தான்.

நரை முதிர் புலவர் ஒருவர் எழுந்து, இறைவனை வாழ்த்தி,

"வாழிய வேம்மிறை மன்னவர் கோமான்
செங்கதிர் மரபின் சிறப்பினை விளக்கும்
மதலையை யடைந்து மகிதலம் புரந்து
நல்லோர்க் கருளலும் அல்லோரை யொறுத்தலும்
நன்கனம் புரிந்து நாட்டவர் மகிழ
வாழிய காவிரி மணலினும் பலவாம்
ஆண்டுகள் கண்ணுதல் அருண்மழை போழியவே."

என்று பாடினர்.

பிறகு அரசன் அங்கு வந்திருந்த பெரியோரைக் கைகுவித்து வணங்கி, அவரவர் மனத்தின் கருத்துக்களை வெளியிட வேண்டினன். அவர்கள் தேச நலங் கருதித் தம் கருத்திலே தோன்றியவைகளை வெளியிடலானார்கள்.

மாசனத் தலைவர்:—அரசர் பெருமானே, எமக்கும் நுமக்கும் இந்நாட்டுக்கும் பொதுவிலே உள்ளதொரு குறையைப்பற்றியே இங்குத் தெரிவிக்க வந்தோம். இந்

நாள்வரை செங்கதிர் மரபு மக்கட்பேறின்மை யென்ற குறைக்கு இடம் பெறுதிருந்தது. இப்பொழுது நமது அருமைத் திருமரபிலே இக்குறை நேர்ந்துவிடுமோ வென்று பெரிதும் கவல்கின்றேம். இறைவனே வேண்டியோ, தவம் புரிந்தோ, தல யாத்திரை செய்தோ, புத்திர காமேஷ்டி முதலியன இயற்றியோ, எவ்வாற்றாலேனும் நாட்டு மக்கள் அனைவரும் மன நிம்மதி பெறுமாறு நீவிர் புத்திரப் பேறு பெற முயல வேண்டுகின்றேம்.

பார்ப்பன முதியவர்:—நான் கூறக்கருதுவதும் இவ் விஷயமே. நரபதி மண்டலம் நடுங்கப் போர் புரியவல்ல நரேந்திர சிகாமணியே, எவ்வகைப் பொருளும் இறைவனருளால் எய்தல் எளிதாம். புத்திர காமேஷ்டி யாகம் செய்து மக்களையும் தேவரையும் திருப்திப்படுத்திப் புத்திரப் பேறு பெற்று இந்நாட்டுக்கு ஓர் இளவரசனை உதவ வேண்டுகின்றேன்.

மருத்துவப் பெரியார்:—எம் மினத்தார் எல்லாம் நும்மிடம் தெரிவிக்க விரும்புவது ஒன்று உண்டு: வேந்தர் பிரானே, புத்திரப் பேறின்மைக்குக் காரணம் எதுவாமாயினும், பல தலங்களிலுஞ் சென்று ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் ஆடி உடம்பை வாட்டிவருதலும், காற்றும் வெயிலும் உடலிலே படிய அரசியாரும் நீவிரும் சில காலமேனும் அயல் நாடுகளில் சஞ்சாரம் செய்தலும் நலமாம். இன்று யான் அதிகம் கூறுதற்கில்லை பெரியார் முறைகளைப் பின் பற்றி ஒழுங்கான வாழ்வில் அற நெறி பிழையாது வாழ்வோர்க்குப் புத்திரப்பேறில்லாது போதல் இயற்கைக்கு மாறுபாடாம். ஆகையால், இளவரசன் விரைவிலே தோன்றுவன்.

நிமித்திகர் தலைவர்:—அரசர் பெருமானே, விரைவிலே இந்நாட்டுக்கு இளவரசு ஒன்று தோன்றும். அதற்கு உரிய குறியெல்லாம் இன்று யான் இங்கு வரும்போது கண்டேன். நீவிர் சிதம்பரம் முதலாகிய சிவஸ்தலங்களிற் சென்று தவம் புரிவீராயின், சிறந்தபலன் பெறலாம்; நாட்டவர்க்கும் திருப்தியை வருவிக்கலாம்.

அமைச்சர் தலைவர்:—அரசர் பிரானே, அறிஞர்களே, இன்று இங்கு நல்லோர் பலர் கூறிய கருத்துக்களும் என் கருத்தில் நெடு நாளாக உள்ளன. ஆயினும், எதற்கும் உரிய காலம் என்பது வேண்டுமன்றே? நம் மரசர் இந்நாள்காறும் செய்துகொண்டிருந்த போர்களால், அயல் நாடுகட்குச் சென்று சிவ தரிசனம் செய்து கொண்டு வாழ்ந்திருத்தல் அரிதாயிருந்தது. இப்பொழுது சிதம்பரத்துக்கு விரைவிலே செல்ல முயலலாம். பிறகு எல்லாம் இறைவன் அருளிய வண்ணம் ஆகும்.

புலவர் ஒருவர்:—மன்னரே, மக்கட் பேறில்லாத வாழ்வு கண்ணில்லாத முகமும், மதியில்லாத இரவும், அமைச்சு இல்லாத அரசியலும், நூற் பயிற்சி யில்லாத அறிவும் போலும். எம்போலியர்க்கே புத்திர னில்லாக் குறை பெருங்குறையாம். அரசராகிய நமக்கு நாட்டின் நலத்தின் பொருட்டுப் புத்திரன் இன்றியமையாதவனே. எம் தலைவர் இன்று நம்மை வாழ்த்திய வாழ்த்துப் பொருளுற்றதாக வேண்டுமென்பதே எம் கோரிக்கையாம்.

இவ்வாறு நல்லோர் பலரும் பேசியதைக் கேட்ட அரசன், தன் மனத்திலே எழுந்த கவலையை ஒருவாறு அடக்கிக்கொண்டு, பின் வருமாறு கூறினன்:

"ஐயன்மீர், யான் சென்ற பல்லாண்டுகளாக இந் நாட்டுக்குள்ள பல பகைகளையும் ஒடுக்கி ஆண்டு வந் தேன். எனக்குப் புத் என்னும் நரக வாழ்வு வருமே யென்பதைப்பற்றி யான் சிறிதும் கவலையுறவில்லை. எனக் குப் பின் நீவிர் கூறிய வண்ணம் இந்நாட்டு மன்னனுக்கும் உரிமை பெறக் கூடிய ஒரு மைந்தனில்லையே யென்ற மனத்துயர் சென்ற சில வாண்டுகளாகத் தோன்றியுளது. அருந்தமிழ்ப் புலவர்களும் அந்தணர்களும் தத்தம் பணிகளை இயற்றி இந்நாட்டில் இன்று நன்கு வாழ்கின் றனர். இன்னவர் எனக்குப் பின் நல்லரசினைப் பெறுது எவ்வண்ணம் கலங்குவரோ என்று என்னுள்ளம் பெரி தும் உளைகின்றது! என் முயற்சியால் யாது இயலும்? எல்லாம் இறைவன் அருளாலும் நாட்டவர் நல்லறத் தாலுமே இயல வேண்டும். நீவிர் இங்குக் கூறிய வண் ணம் விரைவிலே நல்லதொரு நாள் பார்த்துச் சிவ பிரான் திருக்கூத்தாடியருளும் பொன்னம்பலத்தைத் தரிசித்து வருகிறேன். பொன்னம்பலநாதன்வேண்டுவார் வேண்டுவது ஈயாஞகில், வேறு யாவரே ஈய வல்லார்?"

பின்னர்ச் சிறிது நேரம் நாட்டின் பொது நன் மைக்கான பொது விஷயங்களைப் பேசிய பிறகு அம் மண்டபத்து வந்தார் அனைவரும், அரசனை மனமார வாழ்த்தி, விடை பெற்றுச் சென்றனர்.

சில நாட்கள் சென்றன. பின்னர் நிமித்திகர் குறித் ததொரு நன்னாளில் நல்லோரையில் அரசன், அந்தணர் சிலரையும் புலவர் சிலரையும் உடன்கொண்டு, சிதம்பரம் சென்றான். இராச மாதேவியாகிய கமலவதி என்பா ளும், பணிப் பெண்களும் தாதியரும் தோழியரும்

புடைசூழச் சிவிகையிலமர்ந்து, அரசனுடன் சிதம்பரம் சென்றனள். அரசனும் அரசியும் அங்கு அடைந்து, தில்லை மூவாயிரவர் வழி வந்த அந்தணர்களை வணங்கி, வரம் பெற்றுக் கோயிற்குச் சென்று, சிவ கங்கையில் நீர் ஆடிப் பட்டிடை யுடித்து, அந்தணர் பலர் மறையோதிப் பின் தொடர்ந்துவர, மன்றுளாடிய மறை முதலைத் தரிசிக்கச் சென்றனர். உடன் வந்திருந்த புலவர் பலரும் அருந்தமிழ்ப் பனுவல்களால் இறைவனைத் துதித்தனர். அரசனும் அரசியும் மனமுருகி வாழ்த்தி வணங்கி வாமிரந்தனர். அவர்தம் உள்ளக் குறிப்பை யறிந்த வள்ளற் பெருமான், அசரீரியாக, "அரச, நின் அன்பின் செல்வத்தை யாம் ஏற்றுக்கொண்டோம். விரைவிலே நினக்கு ஒரு செல்வப் புதல்வன் தோன்றுவன். அவன் மிக்க கீர்த்தியும் பிரதாபமும் படைத்துப் பேரரசாய் விளங்குவன்," என்று கூறியருளினர். அது கேட்டு, அரசனும் அரசியும் அந்தணரும் புலவரும் மன மகிழ்ந்தனர். பின்னர் அத்திருக்கோயிலிலே சில தினங்கள் இருந்து, உரிய சிறப்புக்கள் செய்துவிட்டு, அவரனைவரும் உறையூர் நோக்கித் திரும்பினர்.

அரசன் நாட்டகத்து வந்து, முன்போல அரசியலைக் கவனித்திருந்தான்; அமைச்சரும் பிற அறிஞரும் கூறியவாறு அறங்கள் பல புரிந்து வந்தான். சிதம்பர தலத்துப் பொன்னம்பல நாதன் திருவருள் பலித்தற்குரிய காலம் குறுகியது. தேவி கருப்பவதியாகி, அருகில் இருந்த பெண்டிர் உற்சாகத்தின் பொருட்டுக் கூறி வந்த பண்டைய சோழ மன்னர் வரலாறுகளையும் இராமாயண பாரதாதிகளில் உள்ள வீரர் பெருமக்கள்

வரலாறுகளையும் கேட்டு, மனம் பூரித்திருந்தாள். பத்து மாதங்களும் நிரம்பின. மருத்துவ நூற் பயிற்சி பெற்ற பெண்டிர் பலரும் அருகில் இருந்தனர். சக்கரவர்த்தி யாதற்குரிய யோகமுடையான் பிறத்தற்குரிய பொழுது அடைந்தது. அரசி இறைவனருளையே பெரிதென நம்பிச் சிதம்பர நாதனைச் சிந்தித்திருந்தாள். நிமித்திகருள் மிக்க அனுபவமும் தேர்ச்சியும் உடையார் சிலர் அங்கிருந்தனர். சிறிது நேரம் தாமதித்துக் குழவி உதய மாதல் நலமென அவர்கள் கருதினார்கள். கிரகங்கள் நின்ற நிலையில் சிறிது பொழுது தாமதித்துப் பிறக்கும் செல்வன் சக்கரவர்த்தி யாவன் என்று அவர்கள் கூறினார்கள். மருத்துவர் சிலர், அரசி வயாவால் வருந்தத் தொடங்கியதைப் பெண்டிரால் அறிந்து,தக்க அனுபவமுடையாரைக் கொண்டு சில சிகிச்சைகள் செய்வித்துக் குழந்தை சிறிது நேரம் வயிற்றகத்திருந்து பிறகு பிறத்தற்கு வேண்டும் முயற்சிகள் செய்தனர். அதனால், அரசியின் உயிர்க்கே கேடு விளையினும் விளையலாம் என அனுபவ முதிர்ந்த மருத்துவர் கருதினர். நிமித்திகர் குறித்த காலம் அடைந்தது. அரசி ஓர் ஆண்மகனை ஈன்றனள். இருத்தற்குரிய காலத்திலும் சிறிது அதிகமாகக் கருப்பையினுள் இருந்ததால், அவன் கண்கள் சிவந்திருந்தன. அக்குழவியின் தோற்றத்தைக் கண்ட தாய் மனம் பூரித்து, "என் கோச்செங்கண்ணனே!" என்று கூறித் தான் அடைந்த சந்தோஷ மிகுதியால் உடனே உயிர் துறந்தனள்.

அரசன், இளவரசு பிறந்த இன்பச் செய்தியையும் தேவி இறந்த துயரச் செய்தியையும் உடனே அறிந்

தான். நாட்டு மக்கட்கெல்லாம் விரைவிலே இச்செய்திகள் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் அரசனுக்கு அருமை மகன் பிறந்த இன்பச் செய்தியைக் கொண்டாடுவது பெரிதெனக் கருதினர்களாயினும், தேவியின் மரணத்தாற் பெருந்துயர மடைந்தார்கள்.

அரசனும் தேவியிறந்த துயரத்தையொருவாறு அடக்கிக்கொண்டு இளவரசு பிறந்ததால் உண்டான ஸந்தோஷத்தை எவர்க்கும் அறிவிக்கத் தக்க சிறப்புக்கள் செய்தான். தேவிக்கும் முறைப்படி உத்தரகிரியைகள் நிகழ்ந்தன. பின்னர்ச் சில தினங்கள் கழித்து, நிமித்திகரும் அமைச்சரும் பிற பெரியார்களும் அரசனிடம் வந்து அடைந்தனர். அரசன் நிமித்திகரை அக்குழவியின் பிறப்பின் நிலையைப்பற்றி விசாரித்தான்.

ஒளி நூலிற் சிறந்த பயிற்சியும் தவ வொழுக்கமும் மூக்காலமும் உணரும் உணர்வும் படைத்த பெரியார் ஒருவர் எழுந்து, அரசனை வாழ்த்திப் பின் வரும் செய்திகளைக் கூறலாயினர் :

"இரு நிலம்புரக்கும் எம் மன்னர்பிரானே, இளவரசாய்த் தோன்றியிருக்கும் இக்குழவி ஜாதகத்திற் சில அபூர்வ சம்பவங்கள் உள. அவைகளை நான் அறிந்த வளவு கூறுகின்றேன்; செவி சாய்க்க வேண்டுகிறேன் : நம் நாட்டிலே காவிரியின் வட கரையிலே சந்திர தீர்த்தம் என்றதொரு புண்ணிய தீர்த்தம் உளது. அதன் கரையில் வெண்ணாவல் மரம் ஒன்று இருக்கிறது. அம்மர நிழலிலே தானே முளைத்தெழுந்த ஒரு சிவலிங்கம் இருக்கின்றது. சில ஆண்டுகளின் முன்னே அங்கே அருகில் உள்ள காடுகளில் வெள்ளானையொன்று சஞ்சரித்துக்

கொண்டிருந்தது. பூர்வ ஜன்மத்திலே சிவபிரானுக்குப் பூசனையியற்றி இடையில் நேரிட்டதொரு குறையால் யானையாயிருந்த அது, பழைய ஞாபகம் விடாமல் அச் சிவலிங்கம் இருக்கும் இடம் அறிந்து, துதிக்கையால் நீர் முகந்து அபிஷேகம் செய்து, பூக்கள் பறித்து அருச் சித்து வந்தது. யானை ஒன்று இவ்வாறு வந்து பூஜை செய்து சென்ற பெருமையால், அச்சோலை திருவானைக் கா வென்ற பெயரை அடைந்தது.

"இயற்கையிலேயே பகுத்தறிவு படைத்த சிலந்தி யொன்று அச்சிவ லிங்கத்தைக் கண்டு, அதன்மேலே இலைச் சருகுகள் உதிரா வண்ணம் தன் வாய் நூலாலே மேற்கட்டி அமைத்து வைத்தது. வழக்கம்போலச் சிவ லிங்கத்தை வணங்க வந்த வெள்ளானை, அச்சிலந்தி வலையைச் சிதைத்தது. சிலந்தி மீளவும் அவ்வாறே யமைத்தது. அதையும் அவ்யானை அழித்தது. அது கண்டு பொறுத சிலந்தி, யானையின் புழைக்கையினுட் புகுந்து கடித்தது. அவ்வுபத்திரவம் பொறுத அக்களிற் றரசு, கையை நிலத்திலே மோதி, விழுந்திறந்தது. அந்த அதிர்ச்சியினால் யானைத் துதிக்கையினுள் இருந்த சிலந் தியும் இறந்தது. அவ்வெள்ளானை தான் பண்ணிய பூசையின் பலனைச் சிவகணத்தலைவர் பேறு அடைந்து, கயிலை சேர்ந்தது. சிலந்திக்கு அது செய்த பூசனைக்குத் தக்க அருள் புரியவேண்டும் என்று திருவுளங்கொண்ட சிவ பெருமான், அதனை இங்கு இளவரசாய் உதித்து உலகாளும் வண்ணம் செய்திருக்கின்றார். இவ்விளங் குமரன் சிவ பக்தி மிகுந்தவனாய் இருப்பன்; திருமால் முதலிய பிற தெய்வங்களைப் பழிக்கும் தீக்குணம் உடை

யனுயிரான். இவன் தவப்பயனுய்த் தெய்வவாள்ஒன்று பெற்றுத் தமிழகத் தரசரை யெல்லாம் வென்று, வடக்கிலுள்ள மன்னர் பலரை அடிப்படுத்தி, 'தென்றமிழன் வடபுலக்கோன் சோழன்' என்று புகழ் பெறுமாறு வாழ்வான்; சிவ தருமங்கள் பல செய்வன்."

இவ்வரலாற்றைக் கேட்ட அரசனும் பிறரும் ஆச்சரியமடைந்து, இறைவனருளே வாழ்த்தினர். பின்னர் அரசன் அங்கு வந்திருந்தார் பலர்க்கும் அவரவர்க்குத் தக்க சிறப்புக்கள் செய்வித்தான். அனைவரும் விடைபெற்றுத் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

II

"தவமுந் தவமுடையார்க் காகும்; அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது."

செங்கணான் என்னும் இளவரசன் வளர்பிறை போல வளர்ந்து வந்தான்; ஆரியம் தமிழ் என்ற இரு மொழிகளிலும் நல்லறிஞரிடம் பயிற்சி பெற்றான்; அரசியற்குரிய நூற்பயிற்சி யெல்லாம் அவற்றிற்சிறந்த பயிற்சியுடையாரிடம் பெற்றான்; யானையேற்றம் குதிரையேற்றம் விற்பயிற்சி வேற்பயிற்சி வாட்போர் முதலியன வெல்லாம் அவ்வவ்வித்தையிற் சிறந்தாரிடம் பயின்றான்; திருமகள் மார்பிலும் தோளிலும் வந்து அமர்ந்திருக்க அழகு பொலிந்து விளங்கினான். அறிஞ ரெல்லாம், "இத்துணைச் சிறப்பு வாய்ந்த இளவரசன் நம் நாட்டுக்கு அமைந்தது இறைவன் திருவருளே," என வெண்ணினர். அவன் அரசப் பொறையைத் தானே யேற்றுக் கொள்ளத் தக்க பருவம் அடைந்ததை முதிய அரசன் உணர்ந்துகொண்டான்; தவச்செல்வர் அமைச்சர் புலவர் முதலியோரை அழைத்து அவரோடு உசாவி, அரசப் பொறையை இளவரசன் தோளில் இறக்குவதற்கு உரிய காலம் அதுவேயாமெனத் துணிந்தான்.

நெடிது நாள் அனுபவித்த அரசச் செல்வத்தில் அவனுக்கு வெறுப்புப் பிறந்தது. மக்கள் மனத்தை வயப்படுத்த வல்லவனுகிய ஏந்தல் ஒருவன் இருக்கும்

போது பொருளிலும் பதவியிலும் ஆசைமேலிட்டு இன்னும் அரசனுய் இருத்தல் தனக்குத் தகாது என அவன் எண்ணினன். அவ்வெண்ணத்தை அமைச்சர்க்கெல்லாம்தெரிவித்து, இளவரசைத் தன்னருகழைத்துத் தான் தவம் புரிய விழைந்திருப்பதைத் தெளிவாகக் கூறினன். அது கேட்ட கோச்சேங்கட் சோழன் மனம் வருந்தித் தந்தையைப் பிரிதலாகாத தன்மையைத் தெரிவித்தான்; பிறந்தவன்றே தாயையிழந்த தனக்குத் தந்தையொருவனே தாயுந் தந்தையுமாய் இருந்தான் என்றும், அத்தகைய தந்தையைப் பிரிந்து வாழ்தல் தன்னுல் இயலாது என்றும் கூறினன்.

அது கேட்ட மூதியவரசன், "குழந்தாய், அன்னை தந்தை என்ற உறவெல்லாம் என்றும் நிலையாய் உள்ள வாழ்வு ஆகுமா? யான் எத்தனை பிறப்புக்கள் இதுகாறும் பிறந்தேனே! இன்னும் எத்துணைப் பிறப்புப் பிறக்க வேண்டுமோ! முன்னைப் பிறப்புக்களி லெல்லாம் நினக்கும் எனக்கும் என்ன தொடர்பு இருந்தது என்பதை நானும் அறியேன்; நீயும் அறியாய். இனி வரும் பிறப்பிலே நமக்குள் தொடர்பு நிகழுமோ, நிகழாதோ என்பதையும் நாம் அறியோம். இப்பிறப்பிலே, இந்த அற்ப காலத்திலே, நீ என்னைத் தந்தையென்று அழைத்தாய்; நான் உன்னை மகன் என்று கொண்டேன். அறிவுடன் கூடிய மனிதப் பிறப்பிலே பிறந்தார் ஒவ்வொருவரும் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உள்ள சங்கிலியை அறுக்க முயல வேண்டும். மனிதர் இம்முயற்சி செய்யாது ஒழிவராயின், வேறு எவ்வுயிர் செய்யும்? நீ டாயின்ற திருக்குறள் நூலிலே வரும் இரண்டொரு வாச

கங்களை இங்கு நினைவூட்டுகின்றேன்; சற்றுக் கவனிக்க வேண்டும்:

"ஆனை னென தென்னும் பிணக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

இச்செய்யுட்களும், இன்னும் இவை போன்ற பிற செய்யுட்களும் நல்லறிஞரிடம் நீ பயின்றிருக்கின்றாய். அறிவும் ஐம்புலனும் தளர்ச்சி பெறும் முதுமைப் பருவ மடைந்தும், உலகப் பொருள்களில் ஆசையை யொழித்து உற்ற பொருளாகிய உண்மைப் பொருளை நாடத் துணியாதவர், மனிதப் பிறப்புப் பெற்றும் அதனாற் பெறத் தக்க பேற்றைப் பெறாதவரே யாவர். ஆகையால், யான் அழியா வாழ்வு பெறுங் கருத்தால் தவம் புரியச் செல்கின்றேன். நீ அரசுரிமையை யேற்று, அமைச்சர் சொற்கேட்டுச் செவ்விதின் நடந்து வாழ் வாயாக. அரசராயிருப்போர் எக்காலத்திலும் மிக்க கவலையோடு தம் பொறுப்பை வகிக்க வேண்டும். பிறர் பழி கூறுவோர் மொழிகளில் நம்பிக்கை வைத்தலா காது; தாமாகவே நேரில் எங்கேனும் குறை காண்பா ராயின், தக்கவாறு ஆராய்ச்சி செய்து, அறநெறிக் கிணங் கக், குற்றமுடையாரை ஒறுத்தல் வேண்டும்; குடிகளை வருத்தி அரசுறை பெறலாகாது. தந்தை தன் மைந்த ரைக் காப்பது போல அரசன் குடிகளை அன்பினாற்

காத்தல் வேண்டும். தண்டனைகளும் அன்பினுற் சீர் திருத்தக் கருதிச் செய்யப்படுபவையாக இருக்க வேண் டும். போர் புரிந்து அயல் மன்னரை வெல்வதாயிருப் பின், அந்நாடுகளில் உள்ள நல்லோர்க்கு யாதொரு மனத் துயரும் நேராது பார்த்துக்கொள்ள வேண்டும். போரிலே தோற்ற மன்னர்களை முறையின்றி அவமதித் தல் அற நெறிக்கு விரோதமாம். அரசன் எத்தனை அறிவுடையனாயிருப்பினும், நாட்டு மக்களுட் பெரியார் கருதுதற்கு மாறுகச் செல்ல லாகாது. 'குழந்தாய்,' என்று நான் உன்னை அழைக்கக் கூடுமாயினும், மக்கட் கெல்லாம் தந்தையாய் இருக்கும் பொறுப்பை உன்னி டம் தந்து செல்கின்றேன் என்பதை மறுபடியும் நினை வூட்டுகின்றேன். இறைவன் அருள் வசத்தால் எல்லாம் நிகழ்வதாம் என்பதை உறுதியா யுணர்ந்து, எவர் எவர் எத்தெய்வத்தை வணங்கி வாழ்வாராயினும், அவர் அவர் பக்தி மார்க்கத்தை நம் நாட்டில் சுதந்திரமாகத் தம்மிஷ்டம்போல நன்மைக்கு மாறுபாடின்றிக் கைக் கொண்டு வரலாம் என்ற ஆணையை நீ இட வேண்டு வது அத்தியாவசியம். நாம் சைவ மதப் பற்றுடை யோமாயினும், நம் நாட்டில் உள்ள வைணவரும் பிறரும் நம் அரசில் அபிமானக் குறைவு கொள்ளாதிருக்க வேண்டுமாயின், அவரவர் கொள்கைகளுக்கு விரோதம் அரசினரால் தோன்றியதாகப் பழி யெழாவண்ணம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். யான் எவ்வளவுதான் சொல்ல விரும்புவதாயினும், நீயும் உவப்போடு ஏற்றுக் கொள்வாய். ஆயினும், அனுபவத்தால் வருதற்குரிய நன்னெறியைப் பிறர் எவ்வளவு உருக்கமாகப் போதித்

தாலும், தம் உள்ளத்திலே அந்நெறி பற்றற்குரிய பான்மை இருந்தாலன்றி, அவ்வுரை பயன்படாது. ஆகையால், நின் மனப்பான்மை நல்லார் பாராட்டத் தக்கதாக இருக்க வேண்டும் என்றவளவில் யான் கூறி அமைகின்றேன். இனி யான் தவம் புரிய வனஞ் செல்கின்றேன். விடை தருக," என்றான்.

அதுகேட்ட கோச்செங்கட் சோழன், "எந்தையீர், எம் மன்னர் பிரானே, என்னை இவ்விளம்பருவத்திலே இப்பெரும்பொறை வகிக்கச் செய்து, நீவிர் இவ்வுலகத்திலிருந்தே, இவ்வாழ்விலிருந்தே, வீடு பெற முயல்கின்றீர். என் மனத்துக்கு இது மிகவும் துயர்தருமாயினும், நும் எண்ணத்துக்கு மாறாக இவ்வொரு விஷயத்தில் நடந்துகொண்டேன் என்ற குறை எனக்கு நேராவண்ணம் யான் நுமது ஆணையை ஏற்றுக்கொள்கின்றேன்," என்று மறு மொழி கூறினன். முதிய மன்னன் இம்மறு மொழி கேட்டுத் திருப்தி அடைந்தனன்.

பின்னர் முதிய அரசன் நன்னாள் ஒன்று தீர்மானித்துக் குடி மக்கள் பலரும் கண்டு களிக்க, இளவரசனுக்குத் தானே முடி சூட்டி, அவன் கையிற் செங்கோலும் அரசப் பொறையும் தந்தான். அதன் பிறகு சில தினங்களிலே முதிய மன்னன் தன் கருத்தைக் குடி மக்கள் அறிந்து அனுமதிக்கப் பெற்று, எல்லாரும் இன்பமும் துன்பமுங் கலந்த வுள்ளத்தோடு விடை கொடுக்க, வனத்துக்குச் சென்றான்; அங்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றுவிடாமாறு பற்றி, வாக்குமனங்கட் கெட்டாத பரம்பொருளே உண்மையுற வுணர்ந்து, இன்புற்று, மற்றீண்டு வாரா நெறியை அடைந்தான்.

அரசினை யேற்றுக்கொண்டு கோச்செங்கட் சோழன், அமைச்சரும் புலவரும் அந்தணரும் பிறரும் அடைந்து அவ்வப்பொழுது கூறும் பொருள்களைச் செவியிலேற்று, நாட்டவர் அனைவரும் மகிழ்வுற நல்லரசு நடத்தி வந்தான். அரசற்குரிய எல்லாக் குணங்களும் அவனிடம் நன்கு அமைந்திருந்ததைக் கண்ட குடிமக்கள், அவனுக்கு அவ்வக் காலங்களில் தாம் தெரிவித்தற்குரியவற்றைத் தெரிவித்துத் தமக்கு வேண்டும் நலங்களை யெல்லாம் பெற்று வந்தனர். நல்லார் பலரும் அவனைச் சூழ்ந்து, நன்கு மதிக்கப் பெற்று, வாழ்ந்தனர். அவன் ஆண்மையும் வீரமும் போர்த் திறமும் சூழ்ச்சியும் அனுபவம் மிக்க போர்த்தலைவராற் பாராட்டத் தக்கனவாய் இருந்தன. இவற்றை அறிந்த மறவர் பலர், அவனது நாட்டுப் படையிலே படைஞராய்ச் சேர்ந்தனர். தமிழ் நாட்டினுள்ள மற்றெல்லா மன்னரும், சிற்றரசரும், பிறரும் அவனது படைப் பெருக்கத்தைக் கண்டு, அச்சங் கொள்ளலாயினர்.

சோழன் செங்கணான் தன் நாட்டளவிலே தன் ஆட்சி நிற்பது அமையாது என்ற எண்ண மூடையவனாயினன். பயிற்சியின் மிக்க அவன் படைஞரும் போர் புரிதற்கு எப்பொழுது எங்குச் சமயம் வாய்க்குமென எதிர் பார்த்திருந்தனர். அவன் முதன்முதலில் தமிழக முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொணர வெண்ணிப் பாண்டிய சேர நாடுகளை நோக்கிப் புறப்பட்டான். பாண்டிய மன்னன் இச்செய்தியை ஒற்றரால் அறிந்து, சோணாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடைப்பட்ட நிலத்தில் ஓடுகின்ற வெள்ளாற்றின் கரையடைந்தான்.

சோழனும் தன் படைஞருடன் அவ்வாற்றின் சோணாட்டுக் கரையை யடைந்தான். சோழனது படை விரைவிலே யாற்றைக் கடந்து, தென்கரை யடைந்து, அங்கு அணிவகுத்து நின்ற பாண்டியர் படையோடு கடும்போர் தொடுத்தது. வாளும் வாளும் தீப்பொறி பறக்க ஒன்றி னோடொன்று மோதின. வேலும் வேலும் மோதின. அம்பும் அம்பும் அதிர்ந்து மேற் சென்றன. வீரர் மார் பகமெல்லாம் அம்புகள் துளைத்துச் செங்குருதி பாய்ந் தது. பாண்டிய மன்னன் தன் போர்த்திறமை யெல்லாம் காட்டினன். இறைவனருள் சோழன் சார்பில் இருந்த தால், அவனே வெற்றி கொண்டனன். மீனக் கொடி சோழர் படைஞராற் கைப்பற்றப்பட்டது. பாண்டியர் படை, ஒழுங்கு குலைந்து ஓடத் தொடங்கியது. அது கண்ட செங்கட்சோழன், தன் படைஞருடன் பாண் டிய நாட்டினுட் புகுந்து, தலை நகராகிய மதுரை நகரை யடைந்து, பாண்டியன் வணங்கியளந்த திறையை யேற் றுக்கொண்டான். பிறகு அவனை அவன் நாட்டில் தனக் குக் கீழ் அடங்கி அரசியற்றி வரும்படி அமைத்தான்; பிறகு சேர நாடு நோக்கிப் பெரும்படையோடு சென் றான்.

சேர நாட்டிலே அக்காலத்திலே இருவேறு பரம்பரை யினர் அரசியற்றி யிருந்தனர். ஒரு திறத்தினர் வஞ்சி நகரிலிருந்தனர். மற்றொரு திறத்தினர் கொடுங்கோளூரி லிருந்து அரசாண்டனர். வஞ்சி நகரிலிருந்து அரசாண் டோர் கோதை, ஆதன் முதலிய பட்டங்கள் பூண்டனர். கொடுங்கோளூரிலிருந் தரசாண்டோர், இரும்பொறை யென்ற பட்டம் பூண்டிருந்தனர். இவர் இரு திறத்தின

ரும் ஒருவர்க் கொருவர் நெருங்கிய உறவினர்களே யாயினும், சில காலங்களில் நேசப் பான்மையும் சில காலங்களில் பகைத்தன்மையும் கொண்டிருந்தனர். கழுமலம் என்றதொரு பெரிய நகரமும் அந்நாளில் மிக்க அரண் காவல் உடையதாய் இருந்தது. அஃது இரும் பொறை மரபினர் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் இருந்தது. திருமால் கிடந்த திருக்கோலக் காட்சியளிக்கும் திருவனந்தன் காடு என்ற திருநகரம் கோதையர் மரபினர் ஆட்சியில் இருந்தது. இவ்வாறு ஒரு குலத்தரசரே இரு திறப்பட்டு நாட்டில் ஒற்றுமை யற்றிருப்பதை அறிந்த சோழன் செங்கணான், முதற்கண்சேர நாட்டில் நுழைந்ததும் வஞ்சி நகரிலிருந்து அரசாண்ட வஞ்சி பாலன் என்ற பட்டம் பெற்ற சேரமான் கோக்கோதை மார்பனோடு போர் தொடுத்தான். அவன் பொய்கையார் என்ற புலவர் பிரானுற் புகழப் பெற்ற பெருங்கீர்த்தி படைத்தவன். பாண்டிய மன்னரை வென்று பெரும் படையோடு வரும் சோழனோடு போர் செய்தால் வரும் பயன் தன் நாட்டு மக்களிற் பலர் மடிந்த பின் உளதாகும் தோல்வியும் பரிபவமுமே யென்றுணர்ந்தான்.

"படல்வேல்லுங் கூகையைக் காக்கை யிகல்வேல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

என்ற அருமைத் திருவாக்குக்களை அவன் ஆராய்ந்து, சோழனோடு அமைதி தேடக் கருதித் தன்னில் இயன்ற வளவு அரும்பொருள்களைத் திறை யளந்து பணிந்

தான். பிறகு சோழன், இரும்பொறை மரபினன் அரசாண்டு வரும் சேர நாட்டுப் பகுதியை நோக்கிப் போர்க்குச் சென்றான். அவன் கழுமல நகர்க்கு வந்து, தன் படைகளை அணி வகுத்துப் பெரும்போர் தொடுக்கச் சித்தமாயிருந்தான். சேரமான் கணைக்காலிரும் பொறை யென்ற அவ்வரசனும், பொய்கையார் என்ற புலவர் பெருமானது அரிய நட்புக்கிடமாய பெருமை பூண்டிருந்தான். பொய்கையார் கோக்கோதை மார் பனிடமும் கணைக்காலிரும்பொறையிடமும் மாறி மாறி வாழ்ந்துகொண்டிருந்தார். இந்தப் போர் தொடங்கும் செய்தி அவர் செவிக்கெட்டவில்லை.

சேரமான் கணைக்காலிரும்பொறை போர்த் திறம் நன்கமையப் பெற்ற வீரர் பலரைத் தன் படைஞராகச் சேர்த்திருந்தான். மறவர் எண்ணிறந்தார் வில்லும் வேலும் தாங்கித் தம் நாட்டின் பொருட்டும் அரசின் பொருட்டும் உயிர் கொடுக்கச் சித்தமாயிருந்தனர். அவ் வீரரது வீரம், திருவள்ளுவர் வாக்குக் கூறுமாறு,

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.
"உறினுயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்."

என்ற புகழ்க்குரியதா யிருந்தது. எல்லாம் அமைந்திருப்பினும், இறைவனருள் என்பது ஒன்று வேண்டுமன்றே? அது சோழன் சார்பிலன்றே இருந்தது? ஏழு நாட்கள் இரவொழியப் பகலெல்லாம் போர் நிகழ்ந்தது.

சோழ மறவரும் சேர மறவரும் தாம் தம் செஞ் சோற்றுக் கடன் கழிப்பாராய், உயிரைப் பொருட்படுத்

தாது, எதிர்த்து நின்று போர் பொருதனர். சேரமான் கணைக்காலிரும்பொறை தன் ஆற்றலெல்லாம் தோன்று மாறு பின்னின்று ஊக்கியும், முன்சென்று நடத்தியும், வீரர் பலர் நெருங்கிப் போர் புரியும் இடங்களில் நின்று உதவி புரிந்தும், தளர்ச்சியுற்றுச் சாய்வார்க்கு உற்சாகம் கொடுத்தும், களமெங்கும் திரிந்து போர் புரிந்தான். இவ்வாறு போர் புரிந்துகொண்டிருக்கையில், ஒரு சார் பிலே சேரர் படை வலி குறைந்து பின்னிடையலாயது. இது கண்ட சேரன், பரிபவம் பொறாது அங்குச் சென்று, புறம் புண்படுமாறு ஓடுவாரை யெல்லாம் தடுத்து நிறுத்திப் பெரும்போர் புரிந்தான். மிகவும் வலி குறைந்ததோர் இடத்தில் அவன் இருப்பதை அறிந்த சோழன், விரைந்து அங்கு வந்து, அவனோடு நெடுநேரம்போராடி அவனைக் களைப்படையச்செய்தான். அவன் களைத்து மயங்கிய சந்தர்ப்பத்தில் அவன் படைஞர் அரசனுக்குத் துணையாய் நிற்க மறந்து, பின்னிடைந்தனர். இந்நிலையில் விற்கொடியும் வில்லவர் குலத் தோன்றலாகிய சேரமான் கணைக்காலிரும்பொறையும் சோழன் கையிற் சிக்கிக்கொள்ள நேரிட்டது. இதனையே எதிர்பார்த்திருந்த சோழன், உடனே அச்சேரனுக்குப் பொற்றளை பெய்வித்துக் கழுமல நகரத்துப் பெருஞ் சிறைக் கோட்டத்திலே அவனைக் காவல் செய்வித்தான். அரசன் இவ்வாறு சிறைப்பட்டதை யறிந்த படைஞர் எல்லாம், தலையிழந்த உடலாகி, நிலை கொள்ளாது சிதறினர். வெற்றி சோழன் செங்கண்ணனுக்குக் கிடைத்தது. புலிக் கொடி சேர நாட்டிற் புகுந்து தலையெடுத்தோங்கி நின்றது.

III

சோழன் செங்கணான் இறைவன் திருவருளை வியந்து, கழுமல நகரத்திலிருந்ததொரு பெரிய மாளிகையில் புலவரும் அமைச்சரும் புகழ்ந்து போற்ற அமர்ந்திருந்தான். அனந்தன் காட்டினும் பிற தலங்களினும் வீற்றிருந்து கோயில் கொண்டருளும் பரம்பொருளைத் தரிசித்து வணங்க வேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத் தெழுந்தது. மன்னரை வென்று பெற்ற திறைப் பொருளைக் கொண்டு சிவாலயங்கள் பல புதுமையாய் அமைக்க வேண்டும் என்ற எண்ணமுங் கொண்டான்; இக்கருத்துக்களை யெல்லாம் அருகிலிருந்த அறிஞர்க்குத் தெரிவித்திருந்தான். அவர்களும் அவ்வண்ணம் செய்தல் சோழர் குடியினர்க்கு என்றும் அழியாப் புகழைக் கொடுக்கும் என்று கூறினர்கள். அரசருள் தோல்வியற்ற சொழிய, எஞ்சி நிற்பாராகிய சிற்றரசரெல்லாம் நேரில் வந்து வணங்கித் தத்தம் நிலைமைக்குத் தக்க திறை யளந்து சென்றனர்.

இங்கு இவர்கள் இவ்வாறிருக்கையிற் சேர மன்னருள் இரு வகுப்பாரிடமும் சிறந்த மதிப்புப் பெற்று அவர்களால் ஆதரிக்கப் பெற்றிருந்த பொய்கையார் என்ற பெரும்புலவர், நாட்டகத்தே வேறு சில வள்ளியரோடு அளவளாவி இன்புற்றிருந்தார். அவர் சேர நாட்டகத்தில் நிகழ்ந்த போர்களைப் பற்றியும் அப்போர்

களின் பிறகு இருவர் சேர மரபினரும் அடைந்த நிலையைப் பற்றியும் கேள்வியுற்றனர். உடனே அவர் மனம் கரைந்தது. தம்மை நன்கு உபசரித்து ஆதரிக்கும் இயல்புடைய சேரமான் கணைக்காலிரும்பொறை சிறையகத்துக் கால் யாப்புற்றிருக்கவும் தாம் பிறரோடு இன்புற்றிருத்தல் தகாதென எண்ணினர்; சேரமான் கோக்கோதை மார்பனும் வணங்கி வாழ்கின்றான் என்ற செய்தியைக் கேட்டார்; மனம் புண்ணுனர். 'அருமந்த சேரர் குடி இந்நிலைக்கு வந்ததே!' என்று தம்முட் கூறிக் கொண்டார்; கழுமல நகர் நோக்கி விரைந்து வந்தார்; அங்கு வெற்றித் திருவால் விளக்கம் பெற்றச் சோழன் செங்கண்ணன் அமர்ந்திருந்த திருமாளிகையை யடைந்தார்.

சோழ மன்னன் படைஞர்கள் அத்திருமாளிகை வாயிலிற் காவல்செய்திருந்தார்கள். அவர்கள் ஏவலரால் அப்பெரியார் வருகையை அரசனுக்கு அறிவித்தனர். சோழன் பொய்கையார் வருகையை அறிந்ததும், 'விரைவிலேஅகத்தே வருக,' என்று சொல்லியனுப்பினன். புலவர்பெருமானும் தவப்பெருஞ் செல்வரும் மெய்ப் பொருள் நிலையை உய்த்துணர்ந்தாரும் ஆகிய பொய்கையார், மாளிகை யகத்தே புகுந்தார்; செங்கணன் வீற்றிருந்த மணி மண்டபத்தை அடைந்தார்; அறிஞர் புலவர் அமைச்சர் முதலியோர் சூழ அவன் வீற்றிருந்த அழகைக் கண்டு அவனே மனமார வாழ்த்தினர். அவனும், "புலமைச் செல்வரே, பொய்கையாரே, வருக வருக!! இவ்விருக்கையில் அமர்க," என்று கூறினன். புலவரும் தமக்கெனக் காட்டிய ஆசனத்தி லமர்ந்தார்.

பிறகு அவர் தாம் நினைத்து வந்த அரும்பணியை நிறைவேற்ற அவனைப் புகழ்ந்து அவன் செயலைச் சிறப் பித்துக் கூறுவதே உற்ற வழியாம் என்று தீர்மானித்துத் தாம் வரும் வழிகளிற் கண்ட காட்சிகளைப் பற்றியும் தம் மனத்தில் எழுந்த எண்ணங்களைப் பற்றியும் பேச லானார் :

"சோழர் குலத் தோன்றல், தெய்வத் திருவருளைப் பிறப்பகத்திருந்தே சிறப்ப வடைந்த செங்கண்மாலே, யான் நெடுந்தூரத்திலிருந்து நடந்து வருகின்றேன்; இங்கு நெருங்கி வந்த பிறகே இங்கு நிகழ்ந்திருக்கும் செய்திகளை நன்கு உணர்ந்தேன். வரும் வழியில் நான் கண்ட காட்சிகளை என்னென்பேன்! எவ்வாறு விவரிப் பேன்! நினைப்பினும் என் நெஞ்சம் நடுங்கும்! உள்ளம் உருகும்! யான் வரும் வழியில் ஒரு பெரும்பறந்தலை யுண்டு. அதனை யான் இதற்கு முன் பல முறை பார்த் திருக்கிறேன். இன்று அங்கு நான் கண்ட காட்சிகளை என்றும் கண்டதில்லை. அப்பறந்தலையைப் போர்க்கள மாகக் கொண்டு இருபெரு மன்னர் போர் செய்தார் என அறிந்தேன். நிலமெல்லாம் நிகழ்ந்த போரின் செய் தியை விளக்கிக்கொண்டிருப்பது கண்டேன். புழுதி யும் செந்நீரும் கலந்து சில இடங்களிற் செங்குழம்பா யிருந்தது; சில விடங்களிற் சூரிய வெப்பத்தாற் காய்ந்து பொடியாகிப் பவளப் பொடிபோலிருந்தது. யானைகள் பல இறந்து கிடந்தன. முரசங்கள் கிழிந்து கிடந்தன. யானைகளின் உடற்கீழே கிழிந்த முரசங்களின் வாய் வழியே உதிர வெள்ளம் பாய்ந்தோடிய சுவடு இருந் தது. குளக் கரைகளின் அடியில் உள்ள தூம்புகளின்

வழியே செம்மண் கலந்த தண்ணீர் ஓடியது போல அக் காட்சி காண்போர்க்குத் தோன்றும். சில இடங்களிலே உதிர வெள்ளத்திலே தளர்ந்து வழுக்கி விழாமல் களிற் றுக் கோட்டை ஊன்றிப் படைவீரர் நடந்திருந்தகாட்சி யும் கண்டேன். சில யானைகள் தேர்களை மோதி அவற் றின் சக்கரத்தைச் சுமந்து எழுந்து உதயகிரியில் ஞாயிறு தோன்றுமாறு தோன்றி விழுந்திருப்பது கண்டேன். அங்கு உதிர வெள்ளத்தில் ஆடிச் சில காக்கைகள் குக் கிற் புறமும் சிறல்வாயும் செங்கண்ணும் கொண்டு புதுக் காட்சி கொடுத்துக்கொண்டிருந்தன. எல்லாத் திசைக ளிலும் பிணங்கள் காணப்பட்டன. இறந்த களிறுகள் வரிசை வரிசையாய்க் கிடந்தன. அவற்றைக் காணும் போது விண்ணகத்தே மேகம் முழங்கி இடி விழுந்து மலைகளை வேரோடு பிய்த்து எறிந்து வைத்தாற் போலி ருந்தது. அஞ்சன மலைபோன்ற யானைகளெல்லாம் அப் போர்க்களத்திலே இரத்த வெள்ளம் தோய்ந்து ஜாதி லிங்க மலை போலத் தோன்றின. யானைகள் ஒன்றை டொன்று மோதி விழும்படி அவற்றின்மேற் பாய்ந் திருந்த அம்புகள் குன்றுகளிற் குருவிக் கூட்டம் மொய்த்திருப்பது போலத் தோன்றின. குதிரை முத லியவற்றின்மேல் அமர்ந்த வீரர்களின் கால்களைக் கீழ் நின்ற காலாள் மறவர் அறுத்தெறிய அவை இரத்த வெள்ளத்திலே ஓடியிருக்கின்றன. அவை உணவின்றி இளைத்த சுறா மீன்கள் கடலகத்து ஓடினபோல விருந் தன. களிறுகளின் துதிக்கைகள் அறுபட்டுப் பவளம் சொரியும் பைபோல இரத்தம் சிந்திக்கொண்டிருந்தன. சிலயானைகள் இரண்டு கொம்புகளின் நடுவே தைத்த வே

லோடு மூக்கொம்புடையன போலத் தோன்றின. மன்னரது குடை உடைந்து கீழே வீழ்ந்து கிடக்கின்றது. அதன் கீழே யானைத் துதிக்கைகள் அறுபட்டுக் கிடக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போது சந்திரன் அரவத்தாற் பிடிக்கப்படும் காட்சி தோன்றுகிறது. திண்டோள் மறவர்கள் வாளால் தடிந்து நிலத்திற் புரளும் தலைகள் பெருங்காற்றால் மோதுண்ட பனங்காட்டிலே கீழே வீழ்ந்து கிடக்கும் பனம்பழங்களைப் போலத் தோன்றின. பின்னிடைந்தோடாத பெருமையுடைய மறவர் பலரது கேடகம் பற்றிய கைகளை ஓரிகள் வாயிற் கவ்வி அயலார்க்குக் கண்ணுடி காட்டுவது போலக் காட்டி நின்றன. மணமிக்க சோலையிலே பெருங்காற்றடித்தலால் மயில்கள் பலபக்கங்களிலும் நின்று கூவுவது போலத் தம் நாயகரை யிழந்த பெண்டிர் பலர் அக்களத்தின்கண் நின்று அழுதுகொண்டிருக்கக் கண்டேன். குற்றமற்ற அழகிய திருமேனியை யுடைய நில மகள் செம்போர்வை போர்த்தாற் போல மிகவும் சிவந்த தோற்றத்தோடு அக்களத்திலே காட்சி கொடுக்கின்றாள். சில விடங்களில் குதிரைகள் உதைத்ததால், மாற்றூர் குடைகள் கீழ் மேலாய் விழுந்தும், பசுக்கள் உதைத்துத் தலை கீழாய் விழுந்தும் காளான் போலத் தோன்றின. வெள்ளியாற் செய்த வெண்கலப்பையால் நிலத்தை உழுவன போல எல்லாக் களிறுகளும் நிலத்திலே விழுந்து புரண்டு கிடந்தன. இன்னும் நான் அங்குக் கண்ட காட்சிகள் பல. அவற்றை யெல்லாம் கூறுவ தென்றால், இங்குள்ளோர் நற்பொருள் கேட்ட செவி கட்கு நஞ்சூட்டினாற்போலிருக்கும். இவ்வாறு பெரும்

போர்செய்துவென்ற மன்னர் பிராஞ்சிடத்து யான்கண்ட குறையொன்றே: தன்னோடு ஒப்பப் போர் புரிந்த வீரனாகிய மன்னனொருவனை அவன் நிலைமைக்கு ஏற்றவாறு மதியாமல், கால்யாப்பிட்டுச் சிறைக்களத்தே அடைத்த தாயறிந்தேன். அது போர் முறையிற் பொருந்தும் எனினும், நல்லிசைப் புலவர் பலரைப் புரந்த ஒரு மன்னனை நடத்தும் நெறியாகாது என்றே நான் கூறுவேன். போர் என்று தொடங்கினால், வெற்றியோ தோல்வியோ இறைவன் செயலால் அமைவது. அஃது இவர்க்குத்தான் வரும் என்று எவரும் துணிந்து கூற வியலாது. வென்றதன் பிறகு தோல்வியுற்ற மன்னனைச் சிறை செய்வது வென்றோர்க்கு விளக்கும் பெருமை சிறிதே. அவ் வென்ற மன்னன் தன்னிடம் தோல்வியுற்ற மன்னரை நன்கு மதித்து அரசும் நல்குவனாயின், அச்செயல் அறிஞர் புகழ்ந்து பாராட்டத் தக்க பெருமையுடையதாம். பொன்னை மார்பிற் புனைகலனாற் செம்பியனே, யான் இவ்விஷயமாக அதிகம் பேசுதற்கில்லை. இதுகாறும் யான் கூறியவற்றைச் செவிக்கொண்டாயாயின், சேரமான் கணைக்காலிரும்பொறை நின்மாட்டு எத்துணைப் பகைபூண்டு எதிர்த்து நின்றவனாயிருப்பினும், அவனுக்கு உரிய சிறப்பை அளித்து, அரசினை நல்கப் பின்னிடாய் என்று நம்புகின்றேன்."

அங்கிருந்த புலவரும் அமைச்சரும் பொய்கையார் சொல் வன்மை கண்டு அதிசயித்தனர். அரசன் முகமலர்ந்து அவரை நோக்கி, "ஐயன்மீர், புலவர் பெருமானே, வெல்வதும் தோற்பதும் உலகவியல்பே. அங்ஙனமே தோற்றாரைச் சிறைசெய்வதும் அரசரியல்பே யென்

பதை.நீர் அறிவீர். இங்கு யான் போர் புரிந்த செயலைப் பற்றி இதுகாறும் விவரித்துக் கூறிய புலமைச் செல்வ ராகிய நீவிர் தும் அருமைத் திருவாக்கால் எம் நாட்டுப் புலவர் அதிசயிக்கும் வண்ணம் இப்போர்க்களச் சிறப் பைப் பற்றிப் புகழ்ந்து சில செய்யுட்களேனும் பாடுவீ ரேல், நான் நும் அரசருக்கு அரசு நல்குவதாகிய பரிசிலை நுமக்குத் தருகின்றேன். பிறகு அவர் எம் நாட்டோடு பகை கொள்ளாது அமைதியாயிருக்கும் வண்ணம் அவ ருக்கு அறிவு புகட்டுதல் தும் பொறுப்பேயாம்," என்று கூறினன்.

அதுகேட்டு அருகிலிருந்த புலவருள் முதியார் ஒரு வர், "பொய்கையார் இதுகாறும் பேசிய பேச்சுக்களைக் கேட்டிருந்த எனக்கு அக்கருத்துக்கள் செய்யுட்கண் சிறப்புற அமையுமே என்ற எண்ணம் தோன்றியது. இப்போரின் சிறப்பு விளங்க வெண்பா யாப்பிலே ஒரு நாற்பது பாடல் பாடுவாராயின், அஃது அமையும் என்று நான் எண்ணுகின்றேன்" என்றார்.

சோழன், "அவ்வண்ணமே அமைக," என்று கூறி னன். பொய்கையார் உடனே அச்செய்யுட்களைப் பாடத் தொடங்கி, அங்கிருந்தார் அனைவரும் அதிச யிக்கத் தாம் முன்னே கூறிய கருத்துக்களும் அவற்றி னும் சிறந்த சில கருத்துக்களும் அமையும்படி நாற்பது வெண்பாக்கள் பாடிக் களவழி நாற்பது என்ற பெயரும் வைத்து, அங்கு அரசன் செவிக்கொளக் கூறினர். சோ ழன் பொய்கையார் புலமையைக் கண்டு பெரிதும் வியந் தான். அருகிலிருந்த புலவரெல்லாம் இறும்பூதெய்தி னர். அமைச்சரும், 'இத்தகைய புலவரை நம் நாட்டுப்

புலவராய்ப் பெறுது போயினேமே' என்று தம் உள் ளத்தில் எழுந்த எண்ணத்தை மெல்ல வெளியிட்டுரைத் தனர். இவ்வளவு மனக்கிளர்ச்சிகளை உண்டாக்கிய செய் யுட்களைச் சோழன் ஏற்றுக்கொண்டான்.

சோழ வேந்தன் அதன் பிறகு பொய்கையாரைப் பார்த்து, முக மலர்ச்சியோடு, "புலவர் பெருமானே, நீவிர் பாடிய பாடல்கள் நாற்பது நாடுகளைப் பரிசிலாகப் பெற வுரியன. இங்கு நுமக்குப் பரிசில் தரத்தக்க வண் ணம் நாற்பது நாடுகள் என்னிடம் இல்லையே யென்று மனக் குறை கொள்கின்றேன். நும் விருப்பிற்கிணங்கு வதே பெரும்பரிசிலா மென்றெண்ணிப் போரில் தோல் வியுற்றுச் சிறைப்பட்ட சேரமான் கணைக்காலிரும் பொறை முன் போல அரசுரிமை பெற்று எம் நாட் டோடு நண்பு பூண்டு வாழ்ந்திருக்க வேண்டிக்கொள் வேன். அவரிடம் யான் நிறை யொன்றும் எதிர் பார்க் கிலேன். இதுவே யான் நுமக்கு உதவும் பரிசிலாகும்," என்று கூறினன்.

பின்னர் அவன் தன் அமைச்சரை நோக்கி, "ஐயன்மீர், நீர் நேரிற் சென்று இரும்பொறை மன்ன ரைச் சிறை வீடு செய்து, இங்கு அழைத்து வாரும்," என்று கூறினன். அவ்வண்ணமே அமைச்சர் சிறைக் களத்துக்குச் சென்று, அரசனுணையை ஆங்குளார்க்குத் தெரிவித்துச் சேரன் காற்றளையை வெட்டுவித்து, மரியா தையோடு அழைத்து வந்தார்.

தன் நிலையை யெண்ணி மனம் புண்ணுகி மயங்கிக் கிடந்த சேரன், அமைச்சரைப் பின்பற்றிச் சோழனும் பொய்கையாரும் பிற புலவரும் இருந்த மாளிகையில்

வந்து அடைந்தானீ. சேரமான் வருகை கண்ட சோழன், தன் இருக்கை விட்டு எழுந்து, அவனுக்கு உபசார மொழிகள் கூறித் தன்னருகிலிருந்ததோர் அரியணை யிலே அவனை அமரச் செய்தான். பிறகு அனைவரையும் நோக்கித் தன் மனக் கருத்தை வெளியிட லாயினன் :

"சேர மன்னரே, பொய்கையாரே, அறிஞர்களே, அமைச்சர்களே, யாம் இங்கு இக்நாள்காறும் நின்று இருந்தது எந்நோக்கங் கொண்டு என்பதை நும்மூட் பலர் அறியீர். எந்தையாரிடம் எம்மரசை யாம் ஏற்றுக் கொள்ளும்போது கொடுத்த வாக்குறுதி யொன்றுண்டு. அதற்கிணங்க யாம் எந்நாட்டிற் சென்று எம்மன்னரை வெல்வதாயினும், பின்னர் அவரோடு நட்புப் பூண வேண்டுவது எம் கடமையாம். சேர மன்னர் இருவரா யிருத்தலால், இங்கு அதிக போர் நிகழாமல் இரு வரும் எம்மொடு நட்புப் பூண விரும்புவர் என்று எண் ணியே யாம் இங்கு வந்தோம்; சமீப காலத்திலே பாண் டிய மன்னரோடு பெரும்போர் புரிந்தோம். அவர் இப்பொழுது எம் நண்பராகி முன்னிருந்த நிலைமைக்கு ஒரு சிறிதும் குறைவு படாத நிலைமையில் வாழ்ந்து வருகின்றார். சேரமான் கோக்கோதை மார்பர் எம் மொடு மூதற்கண் அமைதி தேடினர். அவரும் முன் போல வாழ்ந்து வருகின்றார்.—இரும்பொறையாரே, எமக்கும் நுமக்கும் பெரும்பகை விளையும் என்று யாம் எதிர் பார்க்கவில்லை. எம்நாட்டுப் புலவர் நும் நாட்டுக்கு வருவர். நும் நாட்டுப் புலவர் எம் நாட்டுக்கு வருவர். நாம் இருவேமும் நட்பாளராய் இருக்க வேண்டும் என் பதே எம் எண்ணமாம். எமது படை வருகை கண்ட

தும், நீவிர் போர்க் கெழுந்து வந்தீர். ஆண்மையும் வீரமும் தோன்ற நீவிர் போர் புரிந்தீர் என்பதை எவரும் மறுக்க வியலாது. இறைவன் செயலால் வலியற்றதொரு புறத்தில் இருந்து போர் புரிந்தீராகையாலும், நும் படைஞர் நும்மைப் பின்னிருந்து காக்கத் தவறினராகையாலும், நீர் சிறைப்பட்டீர். சிறைப்பட்டது நுமக்கு எவ்வளவு மன வருத்தம் தந்ததோ, அதினும் அதிகமாகவே எம் மனத்துக்கு வருத்தம் விளைத்தது. எவ்வழியால் நும்மை விடுதலை செய்து நும் நட்பைப் பெறுவது என்றே எண்ணமிட்டுக்கொண்டிருந்தோம். உரிய வமயத்திலே பொய்கையார் வந்துற்றார். அவர் விருப்பத்திற்கிணங்கி விடுதலை செய்வதாக உலகத்தார் அறியும் வண்ணம் இன்று நும்மைச் சிறைவீடுசெய்வித்து, இங்கு வருவித்தோம். நாமாக நேரில் நுமக்கு எவ்விதத்தில் நன்மை புரிதல் கூடும்? எதற்கும் வழி வேண்டுமன்றே? இத்தகைய புலவர் நம் நாட்டகங்களிலே வாழ்ந்து வருவது இன்ன மாதிரியான சந்தர்ப்பங்கள் நேரிடும்போது தம்மால் இயன்ற அறப்பணி பூணுதற்கன்றே? பொய்கையாரே, இச்செயலால் வரும் புகழெல்லாம் நுமக்கே ஆகுக. இனி வருங்காலத்தே இச்செயலைப் பற்றிப் பாடும் புலவரெல்லாம் இச்செயலை நும் புகழோடு பொருத்திப் புகழ்வாராக. சேர வேந்தரே, இனி நீர் நுமது முடியும் குடையும் பெற்று, எம்மோடு நண்பு பூண்டு வாழ்ந்து வருவீர் என்று நம்புகின்றோம்."

சேரமான் கணைக்காலிரும்பொறை பிறகு தன் இருக்கையினின் றெழுந்து, பின் வருமாறு மறுமொழி கூறினன் :

• "சோழவேந்தரே, புலவீர்காள், அறிஞர்களே, யான் இன்னிலையில் என்ன கூறுதற் கிருக்கின்றது ? சிறைக் களத்தே கால் யாப்புற்றுக் கிடந்தேன் என்றதொரு குறை என் மனத்தை வருத்துமாயினும், இதன் மூலம் பேரரசர் நட்புப் பெற்றுக்கொண்டதைப் பற்றி மனம் மகிழ்கின்றேன். பொய்கையார்க்கு என் மனமார்ந்த நன்றி உரியதாம்."

சோழன்:—சேர வேந்தரே, சிறைக்களத் திருந்தது பற்றி நும் சித்தம் கலங்குதல் வேண்டா. உலகம்புகழும் வண்ணம் இந்நாடெல்லாம் ஆண்டிருந்த கரிகாற் பெருவளத்தார் என்ற எம்முன்னோர் ஒருவர், இளம்பருவத்திலே சிறைக் களத்திலே கால் யாப்பும் கை யாப்பும் பெற்று அடங்கி யிருந்தார் என்பதும், அதனால் அவர் புகழ்க்கு மாசு நேரிடவில்லை யென்பதும் நீவிர் எல்லீரும் அறிவீர். ஆகையால், எதிர்ப்பாராமல் நேர்ந்த இக்குறை கருதிச் சேரர் மனங்கலங்காதிருக்க வேண்டுகின்றோம்.

பொய்கையார்:—வாழ்வும் தாழ்வும் உலகஇயல்பே. இன்று மாளிகையாய் இருப்பது, நாளைப் பாழ்நிலமாகக் கிடப்பதைக் காண்போம். இன்று பாழ்ப்பறந்தலையாய் இருக்கின்றதோர் இடத்தில் நாளை ஒரு பெரிய நகரம் எழுந்து விளங்கக் காண்போம். அரசர், வாழ்வில் வரும் ஏற்றத்தாழ்வில் மனம் வருந்துதல் முறையில்லை. ஆயினும், இனி இருபெரு மன்னரும் ஒருவரிடமொருவர் அன்புடையராய் இருந்து, தம் நாடுகட்கு நலம் விளைக்க முயல வேண்டும். தமிழகத்தே மூன்று பெருமன்னரும் பல குறுநிலவுரிமையாளரும் இருப்பது ஒரு வகையில் நலமேயாயினும், தமிழ் மக்கள் பொது நலத்தைக்

கவனிக்கும்போது இவ்வனைவரும் ஒரு மனப்பட்டு நண்பு பூண்டிருந்தாலன்றி, நலம் விளையாது என்பது வெளிப்படை. ஆகையால், சேரருள் இரு மரபினரும் பாண்டியரும் சோழரும் ஆகிய முடிமன்னர் அனைவரும் மனம் ஒருமித்து வாழவேண்டு மென்பதே என் விருப்ப மாகும். தமிழக முழுவதும் சஞ்சரித்துப் பரிசில் பெற்று வாழும் இயல்புடைய புலவர் அனைவரும் நான் கூறிய தையே கருதுகின்றனர். சேர மன்னர் இருவரும் எனது அன்பிற்குரியராவது போலப் பாண்டியரும் சோழரும் என் பாராட்டுக் குரியராவர். எங்கும் நலம் பொங்குக. இனிச் சேரர் தம் அரசு தாங்குக. சோழ மன்னர் எம் உபசாரம் பெற்று விடை பெறுவார் என நம்புகிறேன்.

IV

பிறகு சோழன் செங்கணான் தன் அமைச்சரும் படைத் தலைவரும் பிறரும் உடன் வரச் சோழ நாடு நோக்கித் திரும்பினான். வழியிலிருந்த சிற்றரசரெல்லாம் வந்து வணங்கினர். அவன் வடநாடு நோக்கிப் போர் செய்ய வேண்டும் என்ற எண்ணங் கொண்டான். வழியிடையிலே பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் உள்ள தெய்வத் திருப்பதிகட்குச் சென்று, ஆங்காங்குக் கோயில் கொண்டிருக்கும் தெய்வங்களைத் தரிசித்தான்.

மதுரை நகரிலே கோயில் கொண்ட திருவாலவாயுடையாரை அவன் வணங்கி வாழ்த்தினான்; அவர் அருளித் தந்த தெய்வ வாளைப் பெற்றுக்கொண்டான்; வட நாட்டிலே புரியக் கருதிய போர்க்கு அது பயன் படுமென வைத்துக்கொண்டான்; உறையூர் நோக்கிப் படையோடு நடந்தான்; இடையிலுள்ள சிவ தலங்களிலும் அரி திருப்புதிகளிலும் கடவுளரை வணங்கினான். படைஞரும் இடை வழியிலிருந்த ஊரவர் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அநேகம் திருப்பதிகளில் கோயில்கள் நன்கமையாமை கண்டான்; சில தலங்களிலே அமைந்திருந்த பழைய கோயில்கள் சிரணமாயிருப்பது கண்டான். அவ்வாறு கண்ட பல தலங்களிலும் புதுமையுறத்

திருக்கோயில்கள் செவ்வையுற அமைக்கத் தீர்மானித்து ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு ஆணை தந்தனன்; திரி சிரபுர நகரருகில் வந்தான்; தாயுமானவரைத் தரிசித் தான்; அவரை மனமுறத் தியானித்து வாயாரப் புகழ்ந்து வணங்கினன்; பின்னர்த் திருவானைக்கா சென் றான்.

அச்சோலையை யடைந்ததும், அவனுக்குத் தன்னை யறியாது ஒரு புது உணர்ச்சி யெழுந்தது. காவகத்தே கோயில் கொண்ட சிவ லிங்கப் பெருமானைத் தரிசித் தான். உள்ளம் உருகி வுற்றுப் பெருகியது. அன்பு ததும்பியது. முன்பு பயின்ற இடம் போன்ற உணர்ச்சி யொன்று தோன்றியது. அங்கு ஆயிரமாயிரமாக நன் மலர்களைக் கொணர்வித்து அர்ச்சனை செய்வித்தான். காவிரி நன்னீரை நல்லாறாற் கொணர்வித்து, அபிஷே கம் செய்வித்தான். சில தினங்கள் அங்குத் தங்கியிருந்து தினந்தோறும் முப்போதும் திருவானைக்காவுடைய சிவபெருமானைத் தரிசித்து, மகிழ்ச்சி பூத்தான். அத் திருத்தலத்திலே வெண்ணாவலடியில் வீற்றிருக்கும் பெருமாற்குத் திருக்கோயில் சமைக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டான். அவ்வெண்ணம் நிறைவேறு மாறு நல்லோர் சிலரை நியமித்து, இயன்றவளவு விரை விலேயே திருப்பணி யியற்றத் தொடங்கினன். பின்னர் உறையூர்க்குச் செல்வதும் வருவதுமாய் அடிக்கடி அங்கு வந்திருந்து அப்பெருமானைத் தரிசித்து, உண் மகிழ்ந்து இயல்பாகவே தன்னுள்ளத்திற் பொங்கி யெழும் அன்பை அத்திருக்கோயிற் சிவனுக்கு அர்ப் பணம் செய்தான்.

இரண்டு மூன்றுண்டுகள் இத்திருப்பணி நடை பெற்ற அந்நாளெல்லாம் உறையூரகத்திலேயே யிருந்து அவன் நாடு நலம்பெற அரசாட்சி புரிந்து வந்தான். புல வர் பலர் வந்து அவனைப் புகழ்ந்தனர். பாணர் பலர் அவனைப் பாடிப் பரிசில் பெற்றனர். விறலியர் எண்ணி றந்தார் வந்து ஆடிப் பாடிப் பொன் பரிசில் பெற்றனர். அற வினைகள் எண்ணிறந்தனவாய் வளர்வுற்றன. நாடெங்கும் உள்ள ஆலயங்களெல்லாம் நன்கு திருத்த முற அமைக்கப் பெற்றன. மக்கள் தங்கள் அரசனிடம் கண்ட தெய்வபக்தியின் சிறப்பால் தாங்களும் மிக்க தெய்வ பக்தியுடையவர்களாய் வாழ்ந்து வருவாராஞர் கள். நாடெங்கும் தெய்வ மணங் கமழ்ந்தது; பொங்கு மங்களம் எங்கும் நிரம்பி யிருந்தது.

பாண்டியன், அமைதி பெற்றதற்கு அறிகுறியாக மேலும் இரு நாடுகளும் நட்பு நிலை பெற்று வாழும் வண்ணம், தன் மகளைக் கோச்செங்கட் சோழனுக்கு மணம் புரிவித்திருந்தான். அவ்வண்ணமே, சேரமான் கோக்கோதை மார்பனும் தன் ஒரே குமாரியைச் சோழ னுக்குக் கொடுத்தான். இவ்விரு மகளிரிடமாகவும் இருவர் மைந்தர் பிறந்தனர். அவ்விரு குழவியரும், ஐவகைத் தாயரும் அன்பொடு வளர்க்க, வளர்ந்து வந்த னர்; தமிழ்க் கலை பயில்வதற்குரிய பருவம் அடைந்த னர். நாட்டகத்துள்ள பெருங்கணக்காயர் பலருள் ளும் சிறந்தாராகிய உறையூர்க் கணக்காயர் ஒருவர் அச் சிறுவர்க்குக் கல்வி பயிற்றுமாறு அமர்த்தப்பட்டனர். கல்வி நாளுலும் முறையுற வளர்வுற்றுச் சிறுவரும் சிறப்புறலாயினர்.

திருவானைக் காவிலே தொடங்கிய திருப்பணி நிறைவேறியது. அஃதறிந்த சோழன், அந்தணர் அறிஞர் புலவர் பலர் பின்பற்றி வரச் சென்று, விசேஷமான திருவிழாக்கள் நடைபெறச் செய்து, பல புண்ணிய தீர்த்தங்களின் நீரும் யாற்று நீரும் மந்திரம் உச்சரித்த நீரும் பாலும் நெய்யும் ஆனைந்தும் முதலியன கொண்டு அபிஷேகம் செய்வித்து, எண்ணிறந்த மலர்களால் அருச்சித்துப் பூசனை புரிவித்துப் பெருமான் திருவுலாப் போதரத் தக்க சிறப்புக்களும் செய்வித்து மகிழ்ந்தான். அங்கு வந்து அடைந்த புலவருள் முதியார் ஒருவர் சோழனது முற்பிறப்பின் வரலாறென நிமித்திகர் கூறிய செய்தியை அறிந்திருந்தாராகையால், அச்செய்தியை அமைத்து வாழ்த்துக் கூறினர்:

"வாழிய மன்னவ! வளவ! செம்பிய!
பல்வகை மலரும் ஒல்வகை கோணர்ந்து
காவிரி நீருங் கையுறக் கோணருபு
நாவலி னிழலமர் நாயகற் கமைய
ஆட்டியும் தூவியும் அரிய பூசனை
புரிந்தவேண் களிற்றின் அருஞ்செயல் கண்டும்
தன்னு லியன்றது தான்செய வேண்ணியும்
தன்வாய் நூலால் தம்பிராற் காக
வலியமைத் தவர்முடி மரத்தி னிருந்து
சருகுதி ராவணம் புரிவோடு முன்னுட்
சிலந்தியா யிருந்து திருப்பணி புரிந்த
சிறப்பினை யுளங்கூர் சிவபரஞ் சுடரின்
திருவரு ளாலுயர் நரபதி யாய்வரும்

செங்கண் மாலே! தேவரு மனிதரும்
போற்றிப் பயன்பெறும் புண்ணியப் போருட்குக்
கோயி லமைத்துக் குடிப்புகழ் பூண்டோய்!
மன்னி வாழிய மகிமிசை
இன்னும் பலதளி யெடுத்தருள் பெறவே.''

இவ்வாழ்த்துரையைக் கேட்டார் அனைவரும் சோழனது பூர்வ ஜன்ம வரலாறு என நிமித்திகரால் கூறப்பட்ட உண்மையை உணர்ந்துகொண்டனர். பின்னர்ச் சோழன் மனமகிழ்ச்சி மீதூர, அப்புலவர்க்கும் அங்கு வந்திருந்த பிறர்க்கும் அவரவர் வரிசைக்குத் தக்கவாறு பரிசிலீந்தனன்; பிறகு சென்று, சில நாள் உறையூரில் வாழ்ந்திருந்தான்.

வட நாட்டு மன்னரை வெல்ல வேண்டும் என்ற அவா அவன் மனத்தை விட்டு அகலாதிருந்ததாலும், இன்னும் தமிழ் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள சிவ தலங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததாலும், நன்னாள் ஒன்றிலே புறப்பட்டுப் பெரும் படையோடு வடக்கு நோக்கிச் சென்றான்; வழியிடையிலே கண்ட தலங்களி லெல்லாம் திருக்கோயில்கள் நன்கு அமைப்பித்தற்கு உரிய அதிகாரிகளை அமர்த்திக் கொண்டு சென்றான்.

திரும்பு காலிலே அரசன் எல்லாத் தலங்களிலும் இறைவனைத் தரிசிக்கத் தக்கவாறு ஆங்காங்குள்ள கோயில் அதிகாரிகளுக்கும் நாட்டுத் தலைவர்க்கும் பிறர்க்கும் வேண்டுமளவு சீர்திருத்தங்கள் செய்து வைக்கும் படி ஆணைப்பத்திரங்கள் அனுப்பப் பெற்றன. மிகவும்

ஜீரணமாகியிருக்கும் கோயில்களை ஜீரணோத்தாரணம் செய்யவும் ஆணை பிறந்தது. அரசன் சிதம்பர நகரிலே இரண்டொரு தினங்கள் தங்கினான்; தில்லைவாழந்தணர்க்குத் திருக்கோயிலைச் சுற்றிலுமுள்ள பெருவீதிகளில் அழகிய பெரிய மனைகள் அமைத்துக் கொடுக்க ஆணைகள் பிறப்பித்தான்; இவற்றை வடநாட்டிலிருந்து போர் முயற்சி நிறைவேறித் திரும்பி வரும்போது காணவெண்ணியிருந்தான்.

ஒவ்வோர் ஊரிலும் அதிகாரிகள் தாம் தாம் செய்தற்கு அமைந்த திருப்பணிகளை மிகவும் ஊக்கத்தோடு கவனித்திருந்தனர். இவ்வாறு தன் மனம் விரும்பிய வாறெல்லாம் அமைத்துவிட்டு, அவன் வடநாடு சென்றான். கோச்செங்கட் சோழன் போர் புரியப் பெரும் படையோடு வருகின்றான் என்பதைத் தம் நாட்டு ஒற்றரால் அறிந்த வடநாட்டு மன்னர் பலர் ஒருங்குசேர்ந்து வந்து, அவனை எதிர்த்தனர். ஒரு திங்கள் இரு திறத்தாரும் பின்னிடையாது போர் புரிந்தனர். பின்னர்ச் சோழனது தெய்வ வாட்கிரையாகிப் பல மன்னரும் மடிந்தனர். படைஞர் பலர் சிதறியோடினர். வடவர் வெற்றித் திரு, தென்னாட்டு மன்னனாகிய சோழனை வந்தடைந்தது.

பின்னர் அம்மன்னர்களின் நாடுகளிலெல்லாம் படைஞரும் பரிவாரத்தாரும் புகுந்து, தம் மனங் கொண்ட மட்டும் அரும்பொருள்களைக் கவர்ந்தனர். அந்நாட்டகங்களில் அரசியலை ஒருவாறு நெறிப்படுத்தி, அறிஞர் பாராட்டும் குணம்படைத்த நல்லோர்கையிலே அரசியலைக் கையளித்துச் சோழன் செங்கணான் தென்

ஞடு நோக்கித் திரும்பினன். வரும் வழியில் இருந்த சில தலங்களிலெல்லாம் திருப்பணி நடைபெற்றிருந்ததை அவன் கண்டு மகிழ்ந்தான்; சில மாதங்களில் திருத்தில்லை யடைந்தான்; தில்லைவாழந்தணர் பலர் ஆசி கூறத் திருக்கோயிலினுள் நுழைந்தான்; ஆடிய பாதத்தைக் கண்டு ஆனந்தங்கொண்டான்;பொன்னும் மணியாலும் பல பணிகள் புரிவித்து இறைவனுக்குச் சமர்ப்பித்தான்; பின்பு அந்தணர் வீதிகளைப் பார்வையிட்டான்; அங்குத் தான் முன்னே தெரிவித்தவாறு மாளிகைகள் பல அமைந்திருப்பது கண்டு, அவற்றையெல்லாம் அந்தணர்க்கு வழங்கினன்.

சில தினங்கள் அத்திருத்தலத்திலே தங்கி,நடராச மூர்த்திக்கு உவப்பாகிய பூசை நைவேத்தியங்கள் முறைப்படி நிறைவேறுதற்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் அமைத்தான். பின்பற்றி வந்திருந்த அமைச்சரும் புலவரும்பிற அறிஞரும் இனி நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டார்கள். அது கேட்டுச் சோழ நாட்டிலுள்ள பிற தலங்களில் உள்ள திருக்கோயில்கள் நன்கமைந்தவாற்றைக் கண்காணித்துக்கொண்டே உறையூர் வந்து சேர்ந்தான்.

V

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா னன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழனிடம் தோல்வி யுற்றுச் சிறைக்களப்பட்டுப் பரிபவ மடைந்ததை மறந்திலன். அவன் எவ்வாற்றலாயினும் சோழனை வென்று தான் இழந்த புகழைத் திரும்பப் பெறவேண்டு மென்று கருதினான். பல நாடுகளிலும் சென்று வெற்றி பெற்று வந்திருக்கும் செங்கணான் புகழ் சேர நாட்டிலும் பரவியது. அது கேட்டு இரும்பொறை, பெரும்பொறுமை கொண்டான். இறைவனருள் எப் பொழுதும் ஒருவன் சார்பிலே இருக்கும் என்பது உறு தியில்லை யாகையால், தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்து செங்கணானை வெல்லக் கருதினான்; தன் எண் ணத்திற்கிணங்கத் தன்னாட்டகத்தே ஆண்மையும் வீர மும் சிறந்த மறவர்க்கெல்லாம் படைப் பயிற்சி நன்கு பயிற்றுவித்தான்; படைத் தலைவர் என்று அவருள் மிக்க பயிற்சியும் அனுபவமு முடையார் சிலரைத் தெரிந்தெடுத்தான்; அவரைக் கொண்டு மேன்மேலும் படைஞர் தொகையை வளர்த்தான்.

பொய்கையார் முதுமைப் பருவம் அடைந்ததால், அரசரிடம் நெருங்கிப் பயில்வதில் அவாவின்றி, மன நிம்மதியோடு தம்மூரகத்தி லிருந்து காலங் கழித்தார்

அதனுற் சேரமான் கணைக்காலிரும்பொறை செய்து வந்த போர் முயற்சியைத் தடுத்து அறிவு புகட்ட வல்லார் யாரும் அவனருகில் இலராயினர். மனத்தில் எழுந்த செற்றம் குறைவு படாமையாலும் அதனை யடக்க வழியறியாமையாலும் சேரன் மேன்மேலும் போர் முயற்சி செய்து வந்தான். சோழ நாட்டு ஒற்றர் சேர நாட்டிலே சஞ்சரித்து இவ்வுண்மையை நன்கு ணர்ந்து, சோழன் செங்கணனிடம் தெரிவித்தனர். அவன் இச்செய்தி கேட்டு, மிக்க கோபங்கொண்டான்; ஒரு முறை நன்மை செய்திருந்தும் அதை மறந்து இவ் வாறு போர் முயற்சி செய்துகொண்டிருக்கும் சேரமன் னற்கு நல்லறிவு புகட்ட வேண்டும் என்று எண்ணினான்.

போர் என்ற சொல்லைக் கேட்டதும் மிக்க உற்சா கத்தோடு எழும் இயல்புள்ள சோழிய மறவர், நாடெங் கும் போர் செய்து பெற்ற பிரதாபத்தை நினைந்து, ஊக் கங் கொண்டவராய்த் தம்மரசன் ஆணைக்கிணங்கி விரைந்து நடந்து, சேர நாடு நோக்கிச் செல்லலாயினர். சேரனும் இச்செய்தியை அறிந்தான். அவன் வெகு நாளாக இத்தகைய சந்தர்ப்பம் ஏற்படவேண்டுமென்றே யெதிர்பார்த் திருந்தானுகையால், தன்னாட்டுக்குப் புறத் தே வந்து சோழன் படையைத் தாக்க முயன்றான். சோழன் படைத்தலைவர், பின்னே வரும் தம் அரசன் அங்கு வந்து சேரும் வரையில் தம்மால் இயன்றவளவு போர் புரிந்திருந்தனர். பிறகு சோழனும் வந்துற்றான்.

இரு திறத்துப் படைகளும் திருப்போர்ப் புறம் என்ற சிற்றூரை அடைந்தன. அவ்வூர்ப் பறந்தலை மிக வும் இடமகன்றதாய் இருந்தது. சேரன் தனது ஆற்ற

லெல்லாங் காட்டிப் படைஞரை ஊக்கிப் போர் புரிந்தான். சோழனும் அவன் ஆற்றலைக் கண்டு அதிசயித்துத் தன்னுட்டு மறவர் பெருமைக்குக் குறைவுவராவண்ணம் போர் புரியுமாறு தூண்டினன். யானைகள், தேர்கள், குதிரைகள் அணி வகுத்து நின்ற இடங்களிலே மன்னரிருவரும் அடிக்கடி இங்கு மங்கும் சென்று திரிந்து தூண்டிப் போர் புரிந்தனர். வேல் வில் வாள் முதலிய படைகள் தாங்கிய மறவர் அவரவர் தலைவராற் றூண்டப் பெற்றுத் தம் நாட்டுக்குப் பழி வராவண்ணம் போர் புரிந்தனர்.

போர் முரசங்கள் இயம்பின. மலைபோல உயர்ந்த களிறுகள் இரு திற மன்னர்களின் கொடிகளைச் சுமந்து தக்க காவல் உள்ள இடங்களில் நின்றன. மற்றக் களிறுகளும் தேர்களும் வகுத்த இடங்களில் இருந்தன. சங்கங்கள் முழக்கப் பெற்றன. இரு திறப் படைஞரும் நெருங்கி நின்று தத்தம் நாட்டு மானங் காத்தலே கருத்தாகப் போர் புரிந்தனர். வில்லினர் வேலினர் வாளினராகிய வீரரெல்லாம், தம் ஆற்றல் காட்டி வீர சுவர்க்கத்தை நிறைத்துக்கொண்டிருந்தனர். யானைகள் பல மலை சரிவது போலச் சாய்ந்தன. தேர்கள் சக்கரங்கள் நொறுங்கிச் சாய்ந்தன. படைகளின் நெருக்கத்தால் ஆர்ப்பும் அதிர்ப்பும் மனத்தால் அளவிடலாகா நிலையிலிருந்தன. எறிந்தும் எய்தும் வீசியும் மோதியும் சாடியும் பாய்ந்தும் குத்தியும் வெட்டியும் மறவர் இரு திறத்தாரும் ஒருவரை யொருவர் மாய்த்தனர். பிணக் குன்றுகளே இழுத்துக்கொண்டு உதிர வெள்ளம் ஓடியது. விண்ணகத்தே காகங்களும் கழுகுகளும் பிண

மணம் கண்டு பறந்தன. இவ்வண்ணம் நிகழ்வதறிந்தும், மன்ன ரிருவரும் போர் நிறுத்தாது முனைந்து நின்றனர். மேல்பால் கீழ்பால் வடபால் தென்பால் என்ற நாற் பாலும் அக்களத்திலே வகுத்து நின்ற படைஞர் இடை நிலத்திலிருந்து இரு வரிசையாய் நிற்க இடம் வாய்த் தது. இரத்த வெள்ளத்தில் வழுக்கி வீழ்ந்த களிறு களும் குதிரைகளும் பின் வருவோர் நின்று போர் புரிய உரிய விடங்களாய் உதவின. இப்படிப் போர் நடந்துகொண்டிருக்கையில், சேரர் படை ஒரு பகுதி யிற் சிறிது தளர்ச்சியுற்று ஒழுங்கு குலைந்தது. அதை நெறிப்படுத்தும் பொருட்டுச் சேரன் அங்குச் சென்றான். அப்படையினை முன்பே அங்கிருந்து ஓட வடித்துக் கொண்டிருந்த சோழன் கண்டான். விண்ணவரும் மண்ணவரும் புகழ்ந்து பாராட்டத் தக்கவாறு அவ்விரு பேரரசர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது. வேல்கள் வளைந்தன. வாள்கள் உடைந்தன. விற்கள் முறிந்தன. தேர்கள் நெரிந்தன. விரைவிலே வேண்டும் படைகளை மெய்காவலர் உதவப்பெற்று இருவரும் வெகு நேரம் போராடினர். இறுதியிற் சேரன் சிறிது மயங்கினான். அவ்வமயங் கண்டு முன்போலவே அவனைச் சிறை செய்ய எண்ணியிருந்த செங்கண்ணன், உடனே பொற்றளை பெய்வித்துப் பாசறைக்கு இட்டுச் சென்றான். தன் னுணர்விழந்து மயங்கிச் சேரமான் கணைக்காலிரும்பொறை சிறைக்களப்பட்டதும் அவன் படைஞரெல்லாம் சிதறி யோடினர்.

சிறைக்களத்தே தக்க காவல் வைக்கப் பெற்றது. சோழன் சிரம பரிகாரத்துக்காகப் பாசறையில் இருந்

தான். பின்னர் உரிய காவலரோடு சேரனை இட்டுச் சென்று, குடவாயிற் கோட்டத்தில் உள்ள பெருஞ் சிறைக்களத்திலே காலிலும் கையிலும் தளை பெய்து சிறை செய்தனர். சோணாட்டுப் படைஞர் பலர் அச் சிறைக்களத்தே காவல் செய்திருந்தனர். சிறைக் கோட்டக் காவலர் சிலர் புதியவராய் அமர்த்தப்பட்டனர்.

சேரமான் கணைக்காலிரும்பொறை சிறிது நேரம்சுய வுணர்ச்சியின்றி மயங்கிக் கிடந்தான். பிறகு எழுந்து சுற்றிலும் பார்த்தான்; தன்னைட்டுச் சிறைக்களத்திலேயே தன்னைக் காவல் செய்திருப்பதை அறிந்தான். அடக்க வியலாத நீர் வேட்கை தோன்றியது. தணிக்க வழி தேடினான். அருகிலே சோறும் நீரும் இன்றித் தனிச் சிறையில் மிக்க கடுங்காவலில் தன்னை அடைத்திருப்பதாய் அறிந்தான். காவலர் எவரேனும் இருப்பர் என்று எண்ணி, வெளிப்புறம் பார்த்தான்; இருவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான்; என்றும் பிறரை ஏவியே பயின்ற தன் குரலை மெல்லிதாக்கி, நயமொழியால் அவரொடு பேசத் தொடங்கினான்:

சேரன்:—ஐய, சிறைக்காவல, எனக்கு நீர் வேட்கை அதிகமாய் எழுகின்றது. பொறுக்கக் கூடவில்லை. இங்கு அருகில் ஏதேனும் நன்னீர் இருப்பின், சிறிது கொணர்ந்து தருவாயோ?

முதற் காவலன்:—அரசர் பெருமானே, நீங்கள் ஏவிய வேலையைச் செய்துகொண்டிருக்கும்படி எங்களுக்கு உத்தரவில்லை. இங்கு நாங்கள் இருவர்தான் இருக்கிறோம். ஒருவனை மிகவும் அவசரமாக இப் பொழுது தண்ணீர் கொண்டுவரச் சொல்லி வெளியில்

அனுப்ப முயற்சி செய்கிறீர்; இன்னொருவனை வேறொரு காரியத்துக்கு அனுப்பிவிட்டுத் தந்திரமாய்ச் சிறையி லிருந்து வெளிவந்து விடலாம் என்றஎண்ணமுண்டோ? அப்படி யிருந்தால், உங்கள் எண்ணம் பலியாது என்று நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். முன் ஒரு முறை அகப்பட்டபோது புலவர் ஒருவர் பாடி உம்மை மீட்டு விட்டார் என்று கேள்விப்பட்டோம். இப்பொழுது நீங்கள் பாடினலும், நாங்கள் இந்தக் காவலை விட்டு அசையமாட்டோம்.

இரண்டாங் காவலன்:—ஆம் ஐயா, அது வாஸ்த வந்தான். எங்களை ஏமாற்ற எத்தனை புலவர் வந்தாலும் ஆகாது. ஏன் என்றால், அவர்கள் பாடும் பாட்டுக்கள் அவர்களுக்குத்தான் தெரியும். எங்களுக்கு ஒன்றும் தெரியாது.எங்களுக்கு இங்கே காவல் காப்பது வேலையே யொழிய, உங்கள் ஏவலைச் செய்வது அன்று என்பதை யும் அறிந்துகொள்ளும்.

சேரன்:—காவலர்களே, நான் கூறிய தென்ன? உங்கள் மறு மொழி யென்ன? சிறைச்சாலையிற் காவல் காக்கும்படி உங்களை அமர்த்தியதால் மனிதர்களுக்கு இயல்பாய் இருக்கும் தர்ம குணம் உங்களிடம் இல்லா மற் போக வேண்டுமோ? மாடு ஒன்று நீர் வேண்டினலும் கொடுத்ததவும் வழக்கம் நம்தேசத்தில் உண்டே! நேற்று வரையில் அரசனுயிருந்த ஒருவன், இன்று ஏதோ இறைவன் செயலால் சிறையிலே அகப்பட்டுக்கொண்டு உங்கள் காவற்கீழ் அடங்க நேரிட்டதால், அவன் மிரு கத்தினும் கேவலமாக உங்களால் நடத்தப்படலாமா? 'தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடாத பாவி!' என்ற

பழிச்சொல் உங்களுக்கு வரவேண்டுமா? உணவு இல்லாமலாவது சிறிது பொறுக்கலாம். தண்ணீர் குடிக்கத் தாகம் எழும்போது அடக்க முடியுமா? ஆகையால், கொஞ்சம் இரக்கம் வைத்துச் சிறிதளவு நல்ல நீர் கொண்டு வந்து கொடுங்கள்.

முதற் காவலன்:—நல்ல தண்ணீர்க்கு எங்கே ஐயா போவது? இங்கே காவேரி யோடிவரவில்லை. காவேரி வந்தாலும் நான் போய்த் தண்ணீர் எடுக்கமாட்டேன். இரவெல்லாம் தூக்கம் விழித்து உங்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு வந்து இங்கே அடைத்த சிரமம் யாருக்குத் தெரியும்? எனக்குத் தூக்கம் வருகிறது. நான் தூங்கப் போகிறேன்.

இரண்டாங் காவலன்:— அப்படிச் சொல்லக் கூடாது. பாவம்! இவர் மிகவும் தாகத்தால் வருந்துகிறார்! இந்தச் சிறைச்சாலையில் உள்ள கிணற்று நீராவது கொடுக்கக் கூடாதா?

முதற் காவலன்:—என்னடா? இது பெருத்த உபத்திரவம்! இவர்க்கு நல்ல தண்ணீர் வேண்டுமாம். நம் கிணற்று நீர் சாப்பிடுவாரா? என்னால் ஒன்றும் ஆகாது. நீ இஷ்டப்பட்டால் கொண்டு வந்து கொடு.

இரண்டாங் காவலன்:—ஐயா, இதோ நான் போய் நீர் கொண்டு வருகிறேன்; சற்றுப் பொறுங்கள்.

சேரன்:—அப்பா, இவ்வளவாவது உன் மனம் இரங்கியதே! இது பெரிய காரியம். தாமதம் செய்யாமல் கொண்டுவா. எனக்குப் பொறுக்கக் கூடாத தாகமாயிருக்கிறது.

சிறைக் காவலன் இரண்டாவான் தண்ணீர் கொண்டு வரச் சென்றான். அரசன் சோர்ந்து கிடந்தான். சிறைக் காவலன் முதலாவான் தூங்குவான் போல அபிநயித்துக்கொண்டிருந்தான். தண்ணீர் கொண்டுவரச் சென்றவன், வழி யிடையிலே தன்னெ டொத்த சில காவலரைக் கண்டு, அரசன் நிலைமையைப் பற்றி அவர்களோடு பேசுவதிற் பொழுது போக்கினான். பிறகு மெல்லக் கிணற்றுக்குச் சென்று நீர் முகந்து வருவானானான்.

அவன் வருவதற்குள் தாகம் சகிக்கக் கூடாத நிலைமை யடைந்தான் சிறைக் கோட்டத்திருந்த சேர மன்னன்; நாற்புறமும் பார்த்தான். தண்ணீர்க்குச் சென்றவன் வரும் வழியைக் காணவில்லை. அவன் உள்ளத்திலே பலப்பல எண்ணங்கள் எழுந்தன. அவன் பின் வருவனவற்றைத் தனக்குள்ளே கூறிக்கொண்டான்:

"உலக வாழ்வின் நிலைமை யென்னே! ஒன்றும் உண்மையில்லை. எல்லாம் பொய்யே. நேற்று முடி மன்னனாயிருந்தேன்! இன்று பொடியிற் புரள்கின்றேன்! நான் ஏவிய பணி யெல்லாம் செய்ய என்னருகே கை கட்டி வாய் பொத்தி நின்ற ஏவலரெல்லாம் இன்று எங்குச் சென்றனர்? சோழன் என்னோடு இரு முறை போர் புரிந்தும், ஒரு முறையிலேனும் நான் வெற்றி பெறக்கூடாது போனது ஏனோ! அறிகிலேன். அவனைப்போல ஆண்மையும் அறிவும் அமைச்சர் உதவியும் படைஞர் பயிற்சியும் எனக்கு இல்லையா? சென்ற முறையிலும் இறைவன் செயலால் தோற்றேன். இம்முறையிலும் தோல்வியே என் பங்கில் நின்றது.

அவன் கையில் எடுத்த வாட் படையைக் கண்டேன். கண் சுழன்றேன். பிறகு என்ன ஆனதென் றறியாதவ னாயினேன். மயங்கிக் கிடந்த என்னை இச்சிறைக் களத் தில் அடைத்தான். அவ்வாள் என் ஆவியை உண்டிருப் பின் எனக்கு எவ்வளவு அமைதி யேற்பட்டிருக்கும்! என்னைப்பற்றி உலகத்தார் பின்னாளிலே பழிகூற இடம் இராதே! சிறையிருந்தேன் என்ற வசையை இருமுறை பெற்றவன் என் குடிக்குத் தேடிவைத்தது பெரும்பழி யன்றே? இத்துணை நாட்களாக யான் போரின் பொருட் டுச் செய்த முயற்சி யென்னாயிற்று? 'முயற்சி திருவினை யாக்கும்,' என்பது பொய்யாகி, முயற்சி சிறைப்படுத்தி யதே! 'மானம் இழந்தபின் வாழாமை முன்னினிது,' என்பர். பொறுக்கலாற்றாத நீர் வேட்கையால் சிறிது தண்ணீர் வேண்டும் என்று கேட்டபோது இச்சிறைக் காவலர் என்னிடங் காண்பித்த மரியாதை என் நெஞ்சை வாள்கொண்டு பிளக்கின்றதே! மானம் அழிந்த பிறகும் வாழவேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் இருந் ததால் அன்றே நான் அவர்களைத் தண்ணீர் கேட் டேன்? அவர்கள் கொடுக்கத் தாழ்ப்பது கண்டு மனம் புண்படுகின்றேன். அரச நிலைமையிலிருந்து விழுந்த எனக்கு மக்களுக்குரிய மானமும் இன்றுப் விடவேண் டுமோ? வள்ளுவர்,

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை."

என்று அருளிச் செய்தது என் நிலைமையை விளக்கவே யமைந்ததோ? இறைவன் எம்பெருமான் அருளும்

அறமும் எங்கு ஒளித்தன? "முற்பிறப்பிலே பறவை களைப் பிடித்துக்கூட்டிலடைத்து வைத்தோர் இப்பிறப் பிலே சிறைக்கள்த் திடப்பெறுவர்," என்று நூல்கள் கூறுவதுண்டு. யான் எத்துணை நல்லுயிர்களுக்குத் துன் பம் விளைத்தேனே! எனக்கு இக்கதி வந்ததற்குக் கார ணமாக இப்பிறப்பில் யான் செய்திருக்கும் செயல்களில் ஒன்றையும் கூறுதற்கில்லை. பொய்கையாரும் இச்சம யத்தில் என்னருகில் இல்லாதிருப்பது என் வீண வயத் தாலே போலும்! எங்ஙனமிருப்பினும், சிறைக்கோட்டக் காவலர் என்னை இவ்வண்ணம் அவமதிக்கத் தக்கவாறு நான் என்ன பாவம் செய்தேன்? இன்னும் தண்ணீர் காணப்படவில்லை. இறைவன் அருள் இவ்வளவேயோ!"

இவ்வாறு அவன் எண்ணமிட்டுச் சோர்ந்து மயங்கி யிருந்தான். தண்ணீர்க்குச் சென்றவன் தண்ணீர் கொண்டு வந்தான். சிறைக் கோட்டத்துப் பலகணி வழியே தண்ணீர்ப் பாத்திரத்தை நீட்டினான். சேரன் சோர்ந்திருந்ததாற் கையை நீட்டி அதைப் பெறவில்லை.

காவலன்:—ஐயா, ஐயா, உமக்காக நான் இந்த வெயில் வேளையிலே வெகு தூரம் போய்த் தண்ணீர் கொண்டு வந்தேன். இதோ! வாங்கிக்கொள்ளும்.

சேரன்:—அப்பா, இங்கே கொடு—ஹா! இது வும் இறைவன் செயல்!—ஏன் இவ்வளவு நாழிகையா யிற்றே தெரியவில்லை! எனக்கு மிகவும் களைப்பாயிருக் கிறது. அதனால் மயங்கியிருந்தேன். நீ கூப்பிட்டது கேட்கவில்லை.

காவலன்:—எனக்கு அதெல்லாம் தெரியாது. இந் தாரும் தண்ணீர். குடித்தால் குடியும், குடிக்காவிட்டாற்

கொட்டிக் கவிழ்த்துவிட்டுக் குப்புறப் படுத்துக்கிடவும். உமக்காக நான் இவ்வளவு தூரம் வெயிலிலே போய் அலைந்து வருவது, நீர் ஏனென்றுகூடக் கேளாமல் இருப்பதா? என்ன இருந்தாலும், மகாராசா வல்லவா?

சேரன், "இந்தத் தண்ணீர் எவ்வளவு தீங்குக்குக் காரணமாயிற்று! எனக்குத் தாகமும் வேண்டுமா? இவ் வுலகில் இனி வாழ்வும் வேண்டுமா? என்ன பிறப்பு! என்ன வாழ்வு! இறப்பே இவற்றினும் சிறப்பாகும். எங்கள் குலத்தார், குழந்தைகள் இறந்து பிறந்தாலும் மாமிஸ பிண்டங்கள் பிறந்தாலும், 'இவை உருப்பெற்ற சிசுக்களல்லவே!' என எண்ணுமல், கூடித்திரிய வமிசத் தில் வாள் வெட்டுப் படாமற் சாகலாகாது என அவற் றையும் வெட்டி அடக்குவர். அத்தகைய குலத்திலே பிறந்த யான் அடையும் கதி இதுவோ? சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய்போல மிகவும் துன்புறச் செய்து அன்பற்ற சிறைக்காவலர் மனமுவந்து கொடுக்கும் பொருளே வாங்கியுண்டு வாழும்வாழ்வு பெறுகவென்று உலகத்திலே பெற்றோர் மக்களைப் பெற்றுப் பழிக்கா ளாக விடுவாரோ? இங்கிலையை யான் அடைந்தது இனி வருவார் எவர்க்கும் எடுத்துக் காட்டாய் இருக்கும்வண் ணம் யான் என் செய்வேன்? 'இந்தத் தண்ணீரைக் குடித்தாற் குடியும்; குடியாவிட்டாற் கொட்டிக்கவிழும்' என்றன்றோ கூறினன்! உண்மையே! இந்த நீர் பெறுவ தற்கு யான் இக்கதியடைய நேரிடும்போது அவன் கூறு வதில் என்ன குறை? சேரர் குடியின் புகழும் மான மும் என்னளவில் இக்கதியடைய வேண்டுமா? என் பழியை விளக்குவதேயாயினும், என் வழி வருவோரும்

பிறரும் அறிந்து மானத்தின் பெருமையை யுணர என் உள்ளத்திற் றோன்றிய எண்ணங்களை ஒரு செய்யுளாக்கி ஓலையில் எழுதி இங்கு வைக்கின்றேன். பிறகு நடப்பது இறைவன் செயல்:

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தோடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் தீரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே." *

இச்செய்யுள் பிற்காலத்தார்க்கு என் வரலாற்றைத் தெரிவிக்க வுதவுக. இறுதிக் காலத்திலேனும் நான் என் மானத்தைக் காக்க முயன்றேன் என்பதை உலகம் அறிக. தண்ணீரே! இனி உனக்கும் எனக்கும் தொடர் பில்லை. உன்னலன்றோ, உன்மேலெழுந்த வேட்கையா லன்றோ, யான் இக்கதிக் காளாயினேன்? நீ இங்கே யிருக்க. எனக்கு இனி இவ்வுலக வாழ்வு ஏலாது. இறைவ, எம்பெருமானே, யான் எத்துணைப் பாவங் களை இழைத்தவனு யிருப்பினும், இப்பொழுது என் உயிரை நின் கழல்களில் அர்ப்பணம் செய்கின்றேன். ஏற்றுக் கொள்க," என்று கூறித் தண்ணீரைக் கீழே வைத்துவிட்டு, இறைவனே யெண்ணிய உள்ளத்தோடு உயிர் துறந்தான். காவலர் இருவரும் அரசனே நன்கு கவனியாது ஏதேதோ பேசியிருந்தனர்; சிறிதுபொழுது

* புறநானூறு - செய், 74.

சென்றதும் உள்ளே நோக்கினர். தண்ணீர் குடிக்கப் படாத நிலைமையை உணர்ந்தனர்; சேரமான் மயங்கிச் சோர்ந்து கிடப்பதுபோலத் தோன்றிய தோற்றத்தை யும் கண்டனர்.

அச்சமயத்திலே அவர்கள் எதிர் பாரா வண்ணம் சோழன் செங்கணான் அங்கு வந்து சிறைக் கோட்டத் தைத் திறப்பித்துச் சேரமானைக் காண விழைந்து உட் சென்றான். அவன் அப்பொழுது அங்கு வந்தது முன் போலவே அம்மன்னனுடன் திரும்பவும் சமாதானம் செய்துகொள்ள வழியுளதோ வென்று பார்ப்பதற் காகவேயாம். ஆனால், அவன் இருந்த நிலைமையை ஊகித் துணர்ந்து, காவலர் நிகழ்ந்த செய்தி கூறக் கேட்டான். பின்னர் அருகிலே நெருங்கி, அச்சேரமான் கையிலி ருந்த ஓலையை எடுத்தான். உடன் வந்த மருத்துவர் ஒருவர், "சேரர் இறந்து ஒரு நாழிகைக்கு மேலாகிறது," என்றார். சோழன் ஓலையில் உள்ள செய்யுளை நோக்கி, உள்ள முருகினான்.

உயர்ந்த குணங்கள் பலவுடைய சேரமான் கணைக் காலிரும்பொறை தன்னுடன் கட்பாளனாயிருந்திருப் பின் இங்ஙனே நேரிட்டிராதே என்று எண்ணி மிகவும் வருந்தினான். பிறகு அவ்விடத்தை விட்டகன்று, சேரன் அரண்மனை யடைந்து, அரச குமாரனுக்கு அரசுரிமை தந்து, இறந்த மன்னனுக்கு உரிய வினைகளை நிறை வேற்றுவிக்கச் செய்து, சில நாள் இருந்து, பிறகு சோழ நாடு நோக்கித் திரும்பினான்.

அவன் சோழநாட்டிலே உறையூரிலே தன் மக்கள் அரசியற்குரிய நூற் பயிற்சியாலும் போர்ப் பயிற்சியா

லும் சிறந்தோராயிருப்பது கண்டான். மிக்க மகிழ்ச்சி கொண்டு சில வருடங்கள் அரசாண்டிருந்தான். புலவர் பரிசில் பெற்றுப் புகழ்ந்து பாடிய பாடல்கள் எண்ணில வாய் நாடெங்கும் பரவின. சோழன் செங்கணான் தன் நாட்டகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு அடிக்கடி சென்று, சிவ தரிசனம் செய்து மனமகிழ்ச்சி பெற்று வந்தான். திருமால் திருத்தளிகளிற் சிறந்தவற்றுட் சில அவன் பொருளுதவி பெற்றன. சமயம் நேருங் காலங் களில் அத்திருக்கோயில்களுக்கும் சென்று, தரிசனம் செய்து வந்தான்.

இவ்வாறு பல வருஷங்கள் சோழ நாட்டிற் சிறப் புற ஆண்டுகொண்டிருக்கையில், அவன் தன் மக்கள் இருவரும் மிக்க அறிவுபடைத்து வளர்ந்ததைக் கண்டு, அவர் தோளிலே அரசப் பொறுப்பை யேற்றித் துறவு பூண விரும்பினான். அறிஞர் பலர் அது நல்லதே யென் றனர். நன்னாள் ஒன்றிலே மூத்த குமாரனுக்குப் பட் டாபிஷேகம் செய்து வைத்துப் பெரியோர் பலர் உடன் வரப் பல சிவ தலங்களையும் தரிசித்துத் திருவாரூக் காவை அடைந்து, மனமொருங்கத் தவஞ்செய்திருந்து, உலகுபுகழ்ந்து போற்ற எல்லாம் வல்ல இறைவன் திரு வருட் பேறெய்திப் பேரின்பம் எய்தினான்.

"சேங்கட் பேயர்கோண் டவன்சேம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வேங்கண் விடையா யெம்வெணு வலுளாய் !
அங்கத் தயர்வா யினளா யிழையே."

—திருஞான சம்பந்தர்

"செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்"
"தெம்மீவவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த திருநறையூர்"
"செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர்"
"தென்றமிழன் வடபுலக்கோன் சோழன்"
"தென்னடன் குடகோங்கன் சோழன்"

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கெழில்மாடம் எழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்."

—திருமங்கை மன்னர்

"திரைபொரு பொன்னி நன்னீர்த் துறைவன்றிகழ்
[செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே."
"கோடுயர் வெங்களிற்றுத் திகழ்கோச் செங்கணான் செய்
[கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே"

—சுந்தரர்

பொய்கைப் பெயர்பூண் புலவர் களவழிநூல்
செய்கைக் குவந்து சிறைவிடுத்துப்—பொய்தவிர்ந்த
சேரனுக்கு நன்மைசெயுஞ் செங்கணான் மெய்ப்புகழே
பாரனைத்தும் செல்லும் பரந்து.

சிவனமருங் கோயில்பல செம்மையுற வாக்கிப்
பவனடஞ்செய் தில்லைப் பதியில்—தவமறையோர்
வாழ மனையமைத்த வள்ளியோன் செங்கணான்
சோழ னிசைபரவும் சூழ்ந்து.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

நல்ல கடிதத்திற் கலாசாலே மாணவர்களுக்கு உபயோக மாகும்படி நன்கு பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் முதற் பகுதி அகத்தியர், தொல்காப்பி யர், ஔவையார், கபிலர், பரணர், நக்கீரர், அரிசில் கிழார், ஆவூர் மூலங்கிழார் என்னும் இவ்வெண்மர்களின் வர லாறுக ளடங்கியது.

இரண்டாம் பகுதி கல்லாடனர், மாமூலனர், மாங் குடி மருதனர், காக்கை பாடினியார் நச்செள்ளேயார், பாலேக் கோதமனர், பாரதம் பாடிய பெருந்தேவனர், மதுரை மருதனிள நாகனர், கடியலூ ருருத்திரங்கண்ண னர், போய்கையார், முரஞ்சியூர் முடி நாகராயர் என்னும் இப்பதின்மர் வரலாறுகள் அடங்கியது.

மூன்றும் பகுதி மோசி கீரனர், சீத்தலேச் சாத் தனர், இளங்கோவடிகள், பெருந்தலேச் சாத்தனர், கோவூர் கிழார், மாரேக்கத்து நப்பசலேயார், உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் என்னும் இவ்வெழுவர் வர லாறுகள் அடங்கியது.

இம்மூப்பகுதியிலுள்ள வரலாறுகள் பலவும் சங் கச் செய்யுள்களேயும் நூலுரைகளேயும் தழுவி இடை யிடையே தொடர்பு படித்தற்குப் பொருந்துவன சில படைத்து, படிப்பவர் இன்புறுமாறு தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஆங்காங்கு வேண்டும் மேற்கோட் செய்யுள்களுங் காட்டப்பட்டுள்ளன.

இப்புத்தகங்கள், படிக்கும் மாணவர்களுக்குப் பழந் தமிழ்ப் புலவர்களின் வரலா றுணர்த்தல் மட்டுமன்றித் தமிழிலக்கியப் பயிற்சியையும் விளேவிக்கத் தக்கன. இப் புத்தகங்க ளெழுதிய வித்துவான் பண்டித கனகராஜை

யரவர்கள் உழைப்பும் ஊக்கமும் மாராட்டத் தக்கன. இப்புத்தகங்களுள் முதற் பகுதியின் விலை அணை 10. இரண்டாம் பகுதியின் விலை அணை 8. மூன்றும் பகுதியின் விலை அணை 8. வேண்டுவோர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரவர்கள், புத்தக வர்த்தகர், மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்..

பாண்டிய மன்னர்

இந்நூற்றொருகுதி வித்துவான் பண்டித ஈ. கனகராஜையரவர்களால் படிப்பவர்க்குப் பலவகையிலும் உணர்வுண்டாமாறு செவ்வைய தமிழ் நடையில் இடையிடையே வேண்டுஞ் செய்யுள்களோ மடித்துச் சில பாண்டியர்களின் சரிதங்கள் விளங்கும்படி இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டு, மதுரைப் புத்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோனரவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இது தமிழ் நடையும் நவீன கற்பனை சரிதங்களும் எழுதப் பயிலும் மாணவர்களுக்கு வேண்டும் மனோ தர்மத்தை உண்டாக்க வல்லது.

இதன் முதற் பகுதியில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மூவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 10.

இரண்டாம் பகுதியில் உக்கிரப் பெருவழுதி, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் ஆன்னும் இவ்விருவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணை 8.